V.௭.(உ)
மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு சென்னை-20

பரமபதிதுணை.

அரிச்சந்திர புராணம்.

நெல்லூர்வீரனென்னும்
ஆசுகவிராஜரவர்க ளியற்றிய மூலமும்,

திரிசிரபுரம் - மகாவித்வான்
வி. கோவிந்த பிள்ளை யவர்கள் எழுதிய
பொழிப்புரையும்.

இவை
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும்,
உரையாசிரியரும் சைவப்பிரசாரகருமாகிய,

ஈக்காடு-இரத்தினவேலு முதலியார்

அவர்களால்
முன்னிருந்த வழுஉக்களைக் களைந்து
தளை சீர் முதலியன செவ்வனே பிரிக்க
பரிசோதிக்கலுற்று,

சுத்தப் பதிப்பு.

இதன் விலை ரூபா 1—4—0.

நாகபட்டணம்
சுப்பராயமுதலியார் குமாரன்
தங்கவேலு முதலியார்
அவர்களது
தனியாம்பாள் விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1913.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY
T NAGAR, MADRAS-600 0

பரமபதிதுணை.

அரிச்சந்திர புராணம்.

மூலமும் - உரையும்.

பாயிரம்.

கணேசர் வணக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

பெரும்புகழ் பெறும்படி யருந்துயர் கெடும்படி
பிரியம்பல வரும்ப டியுளம்
விரும்பிய தனம்பெற மிகும்பெறு பதம்பெற
விளங்கிய தவஞ்செ யநெடுங்
கரும்பவல் பெரும்பய றருங்கனி ரசங்கொடு
கவர்ந்த தெனுவந் தருள்புரிந்
திருங்கரி முகன் சிறு சதங்கையொடு கிண்கிணி
யிலங்கிய பதம்பெ றுவனே.

(இதன்பொருள்)

பெரிதான புகழினைப் பெறவேண்டியும், (நீங்கற்கு) அரிதான துக்கங்கள் கெடவேண்டியும், எனக்கிஷ்டமானவைகள் பலவும் சித்தியாக வேண்டியும், மனோ இச்சைப்படி திரவியலாபம் பெறவேண்டியும், நன்மை மிகுவதாகிய பெறுதற்குரியபதவியை அடையவேண்டியும், இவைகளுக்குத் தக்கதவங்களைச் செய்யவேண்டியும் - நீண்ட கரும்பு-அவல்,- பெரும்பயறு - அரியகனிகள் ஆகிய இவைகளின் ரசங்களைக்கொண்டு புசித்து அந்தரசத்தின் இனிமைபோலவேவந்து திருவருள் செய்து (ஆண்டருளும்படி) பெரிய யானைமுகக் கடவுளுடைய சிறிய சதங்கைகளோடு கிண்கிணிகளும் விளங்குகின்ற பாதங்களை வணங்கப்பெறுவேன். என்றவாறு. (க)

கலி விருத்தம்.

பரிதி தன்மர பில்வரு பார்த்திவன்
விரித ரும்புகழ் மேவரிச் சந்திரன்
சரித மன்னுந் தமிழ்க்குத் துணைசெயக்
கரிமு கன்பதங் கைதொழு தேத்துவாம்.

இ-ள். சூரியனுடைய குலத்திலே பிறந்த அரசனை நீண்ட கீர்த்தியைக்கொண்ட அரிச்சந்திரமகாராஜனுடைய சரித்திரமாகப்பாடுகிற தமிழ்ப்

பாடல்களுக்கு இடையூறில்லாமல் உதவிசெய்யும் பொருட்டு யானைமுகக்கடவுளுடைய பாதங்களை இருகரங்களையுங் குவித்துக் கும்பிட்டுத் துதி செய்யக் கடவோம். எ-று. (உ)

பரமசிவன்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட செழுங்கமலத் திசைமுகனு
  நெடுமாலுஞ் சிவனு மென்னப்
பேர்கொண்ட மூவுருவு மீருருவு
  மோருருவாய்ப் பிறங்குந் தொல்லை
நீர்கொண்ட வண்டத்துந் தாவரத்துஞ்
  சங்கமத்து நிறைந்து நின்றோன்
றார்கொண்ட தாளிணைக டமைக்கொண்ட
  வன்பினொடு தலைமேற் கொள்வாம்.

இ-ள். புகழினைப்பெற்ற அழகுபொருந்திய தாமரைமலரிலே வீற்றிருக்கின்ற பிரமனும், உலகளந்தருளின விஷ்ணுவும், பரமசிவனும் என்று சொல்வதாகிய பெயர்களைக்கொண்ட மூன்று திருவுருவங்களும், பார்வதிபரமசிவனென்கிற இரண்டுதிருவுருவங்களும் ஏகரூபமாகி, விளங்குகின்றபழமையான நீரினையுடைய கடலாற்சூழப்பட்ட அண்டங்களிலும் சராசரங்களிலும் பூரணமாகி நிற்கின்ற கடவுளுடைய மலர்போன்ற இரண்டு பாதங்களையும் மிகுதியான பக்தியுடனே எமது சிரத்தின்மேலே சூடிக்கொள்வோம். எ-று.

புகலரிய சதுமறையாய் மறைப்பொருளா
  யுபநிடத்தாய்ப் பூத மைந்தா
யகிலமுமாய் மன்னுயிரா யணுவிலணு
  வாயவற்றி னகமாய் மேலாய்ப்
பகலிரவென் றறிவென் றறியாத பராபரமா
  யறுசமயப் பகுதி யாகிச்
சகலமுமாய் நிஷ்களமாய் நின்றோன்றன்
  செழுங்கமல சரண்புக் கேமால்.

இ-ள். சொல்லுதற்கரிய நான்கு வேதங்களாய், அந்த வேதார்த்தங்களுமாய், நூற்றெட்டு உபநிஷத்துகளுமாய், பஞ்சபூதங்களுமாய், உலகமுமாய், உலகத்திலே நிலைகொண்ட சர்வபிராணிகளுமாய், அணுவுக்கு ளணுவுமாய் அவைகளுக் குள்ளுமாய், புறமுமாய், பகலெனறும் இரவென்றும் அறியக்கூடாத பராபரவஸ்துவாகி, ஆறுவகைச் சமயப்பிரிவுகளுமாய், சகலவஸ்துவுமாய், நிஷ்களவஸ்துவுமாய் நிற்கின்ற கடவுளுடைய அழகிய தாமரைமலர் போலும் பாதங்களையே கதியாக அடைந்தோம். எ-று. ஆல் - அசை. (௩)

ஆதியா யண்டபகி ரண்டத்து
மப்புறத்து மடங்கா தூற்ற
நீதியாம் மணியொளியும் பாற்சுவையு
மெனவனைத்து நிறைந்து நின்றும்
பாதியா யொன்றாகி யருவாகி
யுருவாகிப் பரந்து மல்குஞ்
சோதியான் முடிசூட்டத் தனதுதிரு
வடிசூட்டத் துணிந்த தூயோன்.

இ-ள். சராசரங்களுக் கெல்லாம் முதலாய், இந்த அண்டத்திலும் வெளியண்டத்திலும், இவ்விரண்டுக்கும் அப்புறங்களிலும் அடங்காம லிருக்கின்ற நிறைவாய், மணிகளிலே ஒளியும், பாலிலே சுவையும்போல் எல்லாவற்றிலும் வியாபித்திருந்தும், பார்வதியோடு கூடிய பாதிவடிவுமாய்த் தானேஒரு முதலுமாகி, அருவமுமாகி, உருவமுமாகிப் பரவி, விளங்குவதான பரஞ்சோதி ஸ்வரூபனானவன், நான் என் தலைமேலே சூடிக்கொள்வதாகத் தனதுதிருவடிகளைச் சூட்டுதற்குத் துணிவுகொண்ட பரிசுத்தன். எ-று. (௫)

உமாதேவி.

கனத்தாள்வெங் கயமுகனுங் கந்தனுஞ்சம்
பந்தனும்பா லுண்டாகும்ப
தனத்தாளே யறம்வளர்த்த கரத்தாளே
திரிபுரங்க டழலாய்வேவச்
சினத்தாளே சிறியோர்கள் செய்தபிழை
பொறுத்திரக்கஞ் செய்யுஞ் செய்ய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே
யென்றலைமேல் வைத்தாள் வாயே.

இ-ள். கனமான கால்களை யுடைய வெவ்விய யானைமுகக்கடவுளும், முருகக்கடவுளும், சம்பந்தமூர்த்தியும் பால் குடிப்பனவான குடங்கள் போலும் கொங்கைகளை யுடையவளே! முப்பத்திரண்டு தருமங்களையும் வளரச் செய்தருளின கைகளை யுடையவளே! முப்புரங்களும் நெருப்பாகி வேகும்படி கோபித்தவளே! அறிவீனர்கள் செய்கிற குற்றங்களைப் பொறுத்துத் தயவு செய்வதான செம்மையுள்ள மனத்தையுடையவளே! உனது தாமரை மலர் போலும் பாதங்களையே அடியேனுடைய சிரசின்மேலேவைத்து அடிமை கொள்ளக்கடவாய். எ-று. (௬)

விநாயகக் கடவுள்.

வையாம்பன் முகத்தானை மறலியையோ
டத்துரந்து வாழ்வ தென்றும்
மெய்யாம்பன் முகத்தாலும் வேதத்து
மாகமத்தும் விரித்த தென்றே

மொய்யாம்பன் முகத்தானைப் பொடியாகப்
பொருதுவினை முடித்து நீண்ட
கையாம்பன் முகத்தானைக் காலையினு
மாலையினுங் கருது வோர்க்கே.

இ-ள். கூர்மையான பற்களைக் கொண்ட முகத்தையுடைய யமனை ஓ டும்படி ஜயித்து வாழ்வைப் பெறுவது எக்காலத்தும் சத்தியமே யாகும். இது பல இடங்களிலும், வேதங்களிலும், ஆகமங்களிலும், சொல்லுகின்றதல்ல வாவெனக்கொண்டு, வண்டுகள் மொய்க்கின்ற மதம்பொருந்திய கஜமுகாசுர னைத் தூளாகும்படிச் சண்டை செய்து அவனது கொடுந்தொழிலை முடிவு செய்த நீண்டுள்ள துதிக்கையை யுடைய யானைமுகக் கடவுளைப் பகலிலும் இரவிலும் தியானிப்பவர்களுக்கு. எ-று. (எ)

தியானிப்பவர்களுக்குச் சத்தியமே யாகும் எனமுடிக்க.

முருகக் கடவுள்.

பெருமையினுங் கதிமையினு முதுமையினு
முகிலெனவே பிறங்கு மேனிக்
கருமையினுங் கடந்தறுகட் செம்மையினும்
வெம்மையினுங் கலங்கேன் காலா
எருமையினும் வெள்ளாட்டுப் பால்போது
மெனப்பிறரை யெண்ணே னன்பால்
வரு * மையியினும் பொருமையினும் வரதன்மகன்
குகனுமென்றன் மனத்தி லுண்டே.

இ-ள். யமனே! நீ காலதூதர்களோடு கூடியிருக்கிற பெருமையினாலும், உனது வேகத்தோடு கூடின ஆரவாரத்தாலும், உன்னுடைய வயது மூப்பி னாலும், மேகம்போலவே விளங்குவதான உனது நிறங்கறுத்திருப்பதி னாலும், கடுமையாக அஞ்சாதிருக்கிற உன் கண்கள் சிவந்திருக்கிறதினாலும், உனது உ க்கிரத்தினாலும் உன்னைக்கண்டு அஞ்சேன். எருமைப் பாலைப் பார்க்கிலும் வெள்ளாட்டுப்பால் கொஞ்சமா யிருந்தாலும் போதுமென் றெண்ணி முருக னல்லாதோரை மதியேன். யாதினாலென்றால், அன்புகொண்டு முருகனேறி வருகிறமயிலும், அம்முருகன் போர்செய்தற்குரிய வேலும், எல்லா வரங்களை யுந் தருகிற பரமசிவனுடைய குமாரனை முருகனும் எனது மனதிலே எப் போதும் உண்டாயிருத்தலால். எ-று. (அ)

உண்டாயிருத்தலால் அஞ்சேன் எனமுடிக்க.

காளியம்மன்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அந்தரியா மளையவலை யால காலி
யம்பிகைமா தரிகௌரி யாளியூர்தி
வந்தரி நான் முகன்வணங்கு மலர்த்தாட் சூரி
வைரவிதா ருகவைரி மதங்கிநீல

*மயில்-அயில் என்பன, மையில் ஐயில் எனப்போலியாய் வந்தன.

கந்தரியோ கினிசூலி நீலி நாக
கங்கணிசங் கரிவிமலை காளி வால
சுந்தரி சாமுண்டிதிரி சூலி கோலத்
துணையடியென் முடிமீது சூடி னேனே.

இ-ள். அந்தரி! யாமளை! அமலை! ஆலகாலி! அம்பிகை! மாதரி! கௌரி! யாளியூர்தி! விஷ்ணுவும் பிரமதேவனும் சமீபத்திலே வந்து வணங்குகின்ற தாமரை மலர்போலும் பாதங்களையுடைய சூரி! வைரவி! தாருக வைரி! மதங்கி! நீலகந்தரி! யோகினி! சூலி! நீலி! நாககங்கணி! சங்கரி! விமலை! காளி! வாலசுந்தரி! சாமுண்டி! திரிசூலி! யென்னும் பல திருநாமங்களைக் கொண்டவளுடைய அழகிய இரண்டு பாதங்களையும் அடியேனுடைய சிரசின்மேலே சூடிக்கொண்டேன். எ-று. (௯)

கலைமகள்.

மருப்புவள வாக்குவிந்து திரண்டு முத்து
வடமணிந்து குடமெனவே வயங்கிச் செம்பொற்
பொருப்பவள வாவளர்ந்து ததும்பி விம்மிப்
புடைபரந்து களபநறும் புளகக் கொங்கைத்
திருப்பவள வாயாளைத் தேனை மானைச்
செழும்படிக நிறத்தாளைத் திகழ்வெண் கஞ்சத்
திருப்பவளை யுலகேழு மீன்ற தாயை
யெனதிதய கமலத்தே யிருத்தி னேனே.

இ-ள். யானைக்கொம்பி னவ்வளவாகக் குவிதலாகித் திரட்சியாய் முத்துமாலையுங்கொண்டு குடம்போலவே பிரகாசித்துச் செம்பொன்மலையி னவ்வளவாக வளர்ந்து, அசைந்து விம்முதலாய் மார்பினிடமெல்லாம் பரவின சந்தனச்சேறு பரிமளித்தலாகிய கொங்கைகளையும், அழகிய பவளம் போலும் வாயையுமுடையவளாய்த், தேன்போல் மதுரவசனியாய், மான் போல் நேத்திரங்களையுடையவளாய், தளமான பளிங்குபோலு நிறத்தை யுடையவளாய், விளங்குகின்ற வெண்டாமரைப்பூவிலே வீற்றிருக்கின்றவளாகிய ஏழுலகங்களையும் பெற்ற தாயான சரஸ்வதி தேவியை என்னுடைய இருதயகமலத்திலே யிருக்கச்செய்தேன். எ-று. (௧௦)

அவை யடக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நீர்கொள்வார்பாலோடு நேருற்றால்
பதர்கொள்வார் நெல்லோடுற்றால்
நார்கொள்வார் பூவுற்றால்வேர் கொள்வா
ரதிற்சிறிது நறையுண் டாயின்
சீர்கொள்வார் புன்சொல்லுஞ் செஞ்சொல்லுஞ்
சேர்ந்தொன்றி சேரப் புன்சொல்
யார்கொள்வா ரென்பதுசற் றறியாமற்
சிறியேனு வசைக்கின் றேனே.

இ-ள். நீரையும் விலைக்கு வாங்குவார்கள்; அது பாலோடு கூடியிருந்தால். பதரையும் வாங்குவார்கள்; நெல்லோடு கூடியிருந்தால். நாரையும் வாங்குவார்கள் பூவோடு கூடியிருந்தால். வேரையும் வாங்குவார்கள் அந்த வேரிலே கொஞ்சம் பரிமள முண்டாயிருந்தால். அப்படியே சிறப்பாக அங்கீகாரஞ் செய்வார்கள் புன்சொலலா யிருந்தாலும் செஞ்சொல்லோடு கூடியிருந்தால். அப்படிச் செஞ்சொல்லோடு கூடாத எனது புன்சொல்லை யாவர்தாம் அங்கீகரிப்பார்கள்? ஒருவரும் அங்கீகரியார்க ளென்பதைச் சிறிதும் தெரியாமல் நான் நாவை அசைததுப் பாடலானேன். எ-று. (கக)

(ஆனாலும், பெரியோர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பது கருத்து.)

புருடனுக் கேந்திழையார் பொருளுரைப்ப
 தெனப்பிறர்தம் பொருளே வெளவுந்
திருடனுர் மேலவருக் கறமுரைப்ப
 தெனச்சிறிய தெள்கு துள்ளிக்
கருடனுக் குப்பறவை கற்பிப்ப
 தெனவனந்தங் கண்ணுள் ளார்க்குக்
குருடனுர் வழிகாட்ட லெனப்பெரியோர்
 முன்சிறியேன் கூற லுற்றேன்.

இ-ள். தன் நாயகனுக்கு மனைவியானவள் விவேகம் சொல்வதுபோலவும், அன்னியருடைய பொருள்களையே எப்போதும் திருடுகிற கள்வனானவன் மேலோருக்குத் தருமநீதி சொல்வது போலவும், சிறிய கொசுவானது கிளம்பிப் பறந்து கருடப்பட்சிக்குப் பறக்குஞ் செய்கையைக் கற்றுக்கொடுப்பதுபோலவும், அநேகங் கண்களை யுடையவர்களுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோலவும், பெரியோர் முன்னே மிகச்சிறியேனாகிய நான் பாடத்தொடங்கினேன். எ-று. (கஉ)

ஆக்கியோன்பெயர் முதலியன.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தண்கவிகைக் குரிசிலரிச் சந்திரன்றன்
 சரிதமதைத் தாரணியோர் விருப்ப மெய்த
வண்கவிஞர் வகைவகையே வகுத்து ரைத்த
 வடமொழியுந் தென்மொழியின் வழூவி லாக
வெண்கவியுங் கண்டாங்கின் மாத ராடல்
 விதங்கேட்டு மழையெனவே வெருண்டு சோலைக்
கண்கவிகள் குதிபாயு நெல்லூர் வீர
 கவிராஜ னேவிருத்தக் கவிசெய் தானே.

இ-ள். குளிர்ந்துள்ள வெள்ளைக் குடையை யுடைய அரிச்சந்திர மகாராஜனது சரித்திரத்தை உலகத்தா ரெல்லாம் சந்தோஷத்தை யடைய அழகான வித்துவான்கள் சொல்லுங் கிரமப்படியே சொல்லிப் பாடின வடமொழியிலுள்ள பாடல்களையும், தென்மொழியிலே யாதொரு தோஷங்களு

மில்லாத வெண்பாவாலான பாடல்களையும் பரிசோதித்து. பெண்கள் ஆடுகிற இடத்துண்டான மத்தள ஓசையைக்கேட்டு அவ்வோசையை மேகத்வனியென்று பயந்து சோலைகளிலே குரங்குகள் குதித்து ஓடுவதான நெல்லூரிலேயிருக்கிற வீரகவிராஜனென்பவனே இப்படி விருத்தக் கவியாகப் பாடினன். எ-று. (௧௩)

விதியினா சிழந்தவரிச் சந்திரன்றன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி
அதிவிதமாங் கலியுகத்தில் வருச காயத
மாயிரத்து நானூற்று நாற்பத் தாறில்
சதுமறைதேர் புல்லாணித் திருமான் முன்னே
சக்கரதீர்த் தக்கரைமேன் மண்ட பத்துள்
கதிதருசீர் நெல்லூர்வாழ் வீர னாசு
கவிராசன் கவியரங்க மேற்றி னானே.

இ-ள். ஈசுவரச செயலினாலே தனது அரசாட்சியை விட்டுப்போன அரிச்சந்திரமகாராஜனுடைய பெரியகதையாகிய வெண்பாவாலான பாடல்களை விருத்தப் பாடல்களாகச் செய்து. பலவித யுகங்களும் நடக்கின்ற கலியுகத்திலே வருவதான சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து நானூற்று நாற்பத்தாறும் வருஷத்திலே நன்றாக வேதங்கள் ஆராய்ந்து சொல்லுகின்ற திருப்புல்லாணித் திருமால் சந்நிதியிலே சக்கரதீர்த்தக் கரைமேலிருக்கிற மண்டபத்திலிருந்து நல்லகவியைத் தருவதான சிறப்பையுடைய நெல்லூரிலே வாழ்கின்ற வீரனென்னும் ஆசுகவிராஜன் அந்த விருத்தப்பாடலான அரிச்சந்திர புராணத்தை அரங்கேற்றுதல் செய்தான். எ-று. (௰௪)

பாயிர முற்றிற்று.

—※—

நாட்டுச்சிறப்பு.

கலிநிலைத்துறை

முன்னுறுதியாப் பிறவிப்[illegible]கடலை முடன்
தன்னுற் றெருடு[illegible] நாடு தினி[illegible]முறையாமதுபோல்
என்னுலறிந்த தன்றெனினு மமையா மன்ன
னன்னாட்டணியாஞ் சி[illegible] நடந்[illegible]ரைத்தேன்.

இ-ள். முதலிலே வா[illegible] [illegible]கருடனாய ஒருவனாலே பள்ளமான சமுத்திரத்தினிடத்தை [illegible] சொல்லத் தொடங்கினது போல. என்னாலே தெரிந்து சொல்ல[illegible] தகுந்த அல்லவென்றாலும். ராசாதி ராசனான அரிச்சந்திரனுடைய நல்ல நாட்டுச்சிறப்பை நான் சிலவற்றைக் கூட்டியமாத்திரம் சொல்லத்தொடங்கினேன். (௧)

தட்பாற் கடலா ரமுதங் கெழுமித் ததைந்து
நட்பாற் புகுந்தா லெனவந்து வார்வேலை நண்ணி
உட்பாற் புனலுண் டெழுந்தோங்கிய நாள கூடம்
விட்பாற் பரந்தா லெனமேக மெழுந்த தன்றே.

இ-ள். குளிர்ந்த திருப்பாற்கடலிலே அரிதான அமுதமுண்டாகிச் சிறந்து தனக்கு உறவாகையினாலே லவணசமுத்திரத்துக்கு வந்தாற்போலவந்து அந்தக் கடலில் நீரையுண்டு, முன்னுளிலே எழுந்து கிளம்பின விடமானது ஆகாயத்தி னிடமெல்லாம் பரவினதுபோல, மேகம் மேலே கிளம்பியது.

அடியும் முடியுந் தெரியா திருண் டண்ட மெங்குங்
கொடியுங் குடையு மெனமாமுகிற் கூட்ட மீண்டிப்
படியும் விசும்பும் பகைத்தாலெனப் பார விற்கோத்
திடியுந் துளியுங் கணையாய்ப்பெரி தெய்த தன்றே.

இ-ள். கீழும்மேலும் தெரியாதபடி இருண்டு ஆகாயமெல்லாம் நீலக்கொடிகள் பறந்தாற் போலவும் நீலக்குடைகள் விரித்தாற்போலவும் நீலமேகக் கூட்டங்கள்கூடி பூமியும் ஆகாயமும் பகைத்துச் சண்டைசெய்தாற்போல்கனமான இந்திரவில்லிலே கூட்டி இடிகளும் துளிகளும் அம்புகளாக மிகவும் எய்கிறதுபோற் பெய்தன. எ-று. (௩)

மீனந் திகழ்வே லையிற்றோன் றிய தென்ன விண்ணோர்
தானந் திகழ் * தாத்திரியைப்பெருந் தாழி யாக்கி
வானந் தனைநெய் யரிவட் டகையாக்கி விட்ட
பானந் தனையொத்து விழுந்தது மாரி பம்பல்.

இ-ள். மீன்கள் சஞ்சரிக்கின்ற கடலிலே இம்மது வுண்டாகியதென்று தேவர்களாகிய மதுவடிப்போர்கள் சஞ்சாரங்களுக் கிடமாக விளங்குகின்ற பூமியைப் பெரிய பானைபோலிருக்கிற சுரைக் குடுக்கையாகக்கொண்டு ஆகாயத்தை அந்தக் குடுக்கைமேலே மூடுகிற பன்னுடையான கிண்ணமாகச்செய்து அக்கிண்ணத்திலே ஊற்றுகிற மதுவானது பலசில்லிகளாலும் ஒழுகுகிறதுபோல் ஒழுகின மேகத்திற் சொரிந்த துளிகள். எ-று. (௪)

விண்ணிற் பொழியுங் கணைமாரி விழுந்து தைத்த
புண்ணிற் பொழியுங் குருதித்திரள் போல வெங்கு
மண்ணிற் பொலியிந் திரகோப மலிந்து தோன்றக்
கண்ணிற் கடையாப் புனல்வெள்ளங் கலித்த தன்றே.

இ-ள். மேகத்தாலே பெய்கிற பாணவருஷங்கள் விழுந்து அவைகள் பட்ட புண்ணினின்றும் சொரிகிற ரத்தத்திரளைப்போல் எவ்விடத்தும் பூமியிலே அக்காலத்திலே தோன்றுகிற இந்திரகோபப் பூச்சிகள் மிகுந்து விளங்க, கண்களுக்கடங்காத ஜலப்பிரவாகமாகி ஆரவாரித்தது. எ-று. (௫)

* தாத்திரி - பூமி.

கள்ளங் கொலைகட் புலைகாம மென்றைந்து மற்றூர்க்
குள்ளந் தெளிந்தோர் தருமுத்தம தான மென்னப்
பள்ளந் திடர்மால் வரைகானகப் பக்க மெங்கும்
வெள்ளம் பெருகிப் பரந்தோடி விரைந்த தன்றே.

இ-ள். களவு-கொலை-கட்குடி- பொய் - மிக்ககாமம் என்று சொல்லுகிற பஞ்சமாபாதகங்களையும் ஒழித்த நல்லோர்களுக்கு மனந் தெளிந்தவர்கள் கொடுக்கிற உத்தமதானம்போல் பள்ளம் மேடு உயர்ந்தமலை காடுகளாகிய பக்கங்களெல்லாம் அந்தப் பிரவாகமானது பெருகிப் பரவி ஓடி வேகங்கொண்டது. எ-று. (சு)

கருவிக் கணமா மழை பெய்து கலித்த வெள்ளம்
பரவிப் பலகோடி பருப்பதக் கோடொடித்தாங்
கருவித் திரள்புக் கடங்கா திரைத்தோடி யார்த்துச்
சரயுத் தனிலே தலைவைத்துச் சரித்த தன்றே.

இ-ள். பூலோகத்துக்குத் துணைக்காரணமாய்க் கூட்டங்கொண்ட நீல மேகங்கள் பொழிதலாலே ஆரவாரித்து அந்த ஜலப்பிரவாகம் எங்கும் பரவி அநேகங்கோடி மலைச்சிகரங்களை முறித்து அந்தச்சிகரங்களினின்றும் வருகிற அருவிக்கூட்டமானவை இறங்கிக் கட்டுக்கடங்காமல் ஆரவாரித்து ஓடிப் பின்னும் முழங்கிச் சரயுநதியிலே வந்துகூடி வரலாயிற்று. எ-று. (எ)

ஆரங் குளவஞ்சி யசோகு பலாசந் தேவ
தாரம் வகுளங் கடிச்சண்பகஞ் சாதி கன்னி
காரஞ் சுரபுன்னை கடம்புகச் சூரம் வெய்கர்ப்
பூரம் பணையோடு புரண்டிடப் போய தன்றே.

இ-ள். சந்தனமரம்-முசிவஞ்சிமரம்-அசோகுமரம்-பலாசமரம் - தேவதாரமரம்-மகிழமரம்-கடிமரம்-சண்பகமரம்-சாதிலிங்கமரம் - கோங்கமரம் - சுரபுன்னைமரம்-பேரீந்துமரம்-மூங்கில்மரம்-கற்பூரவல்லி- அரசமரம் ஆகிய இவைகளுடனே அலைகள் புரள அந்தச் சரயுநதி சென்றது. எ-று. (அ)

ஏலந் தகர மிலவங்க மரித்தி ரந்தக்
கோலம் * வசவாசிசெங் குங்கு மங் கோட்ட ம்வாரித்
தாலம் பதினாலு நடுங்கிடச் சார்ந்த வூழிக்
காலந் தனின்மோது கருங்கட லொத்த தம்மா.

இ-ள். ஏலம்-தகரம்-இலவங்கம்-அரித்திரம்- தக்கோலம்-வசம்பு - செங்குங்குமம்-கோட்டம் ஆகிய இவைகளை யெல்லாம் வாரிக்கொண்டு உலகம் பதினாலும் நடுங்கும்படி வந்த ஊழிக்காலத்திலே அலைகளை மோதுகிற கருங்கடலை அந்தச் சரயுநதி ஒத்தது. எ-று. (கூ)

* வசவாசி-வசம்பு.

நீலம் வைரம்வை டூரிய நித்தி லஞ்செங்
கோலந் திகழுந்துகிர் கோமளப் பத்ம ராகந்
தாலந் தனில்வந்ததொ ரிந்திர சாப மென்ன
ஓலந் திகழாற்றி னுழுக்கெறிந் தோடிற் றன்றே.

இ-ள். நீலம்-வைரம்-வைடூரியம்-முத்து - சிவந்த நிறமாக விளங்குகின்ற பவளம்-அழகான பதுமராகம் ஆகிய இந்த ரத்நங்களாலே உலகத்திலே நீண் டுவருவதான ஒரு இந்திர வில்லைப்போல் ஒலிமிகுந்த அந்தச் சரயுநதி செல் லுதலாலே கரைகளை உடைத்துக்கொண்டு ஓடியது. எ-று. (ம)

கலி விருத்தம்

ஆடு நாகமு மத்திக ளும்வரை
யாடு நாகமு மத்திகை யேபுன
லோடு நாகமு முற்றிட லானதி
யோடு நாகமு மேந்தியை யொத்ததே.

இ-ள். ஆடு நாகமும் - படமெடுத் தாடுகின்ற பாம்புகளும், அத்திகளும் எலும்புகளும், வரையாள்-மலைமகள். துன்-பாதியிற்கலந்த, ஆகமும் - திருமே னியும், அத்தி-அப்பாதி வடிவினளது கை-கையிலேபிறந்த, புனலோடு-கங் கையோடு, நாகமும்-புன்னைமலரும். உற்றிடலால்-பொருந்துதலால்; ஆடுநாக மும் - ஆடுகின்றவானரங்களும், அ...களும் - அத்திமரங்களும், வரையாடும் வருடைகளும், நாகமும்-யானைகளும் அத்திசையே - அவைகொண்டு போகப் பட்ட திசையே, புனல்-நீரின்கண்ணே. ஓடு-ஓடுகின்ற. நாகமும்-பாம்புகளும், உற்றிடலால்-பொருந்துதலினாலே, நதி-சரயுநதியானது, ஓடும் கபாலத்தை யும், நாகமும்-மேருவையும், ஏந்தியை-ஏந்திய கடவுளை ஒத்தது.

கடவுண்மேற் செல்லுங்கால் வரையாடு நாகமெனற்பாலது அடிமடக் குஞ் சிலேடையுமாதலின் ஒருஅடிவி னெப்புமைபற்றி வரையாடு நாகமென ப்பட்டது. (மக)

அம்ம டங்கலு மாழி கிளர்ந்தெழு
மம்ம டங்கலு மொப்பதை யன்றதின்
மும்ம டங்கலும் வெல்லு முதிர்கய
மும்ம டங்கலுங் கொண்டு முடுகிற்றே

இ-ள். அம்மடங்கலும் - நீர்முழுவதும், ஆழி கிளர்ந்தெழு மம்மடங்கலும்-கடலின்கண்ணே செழித்தெழாநின்ற அழகிய ஊழித் தீயையும், ஒப்பதை யன்று - நிகர்வதையன்றி, அதின்-அதினும், மும்மடங்கலும் - மூன்றுபங்கும், வெல்லும் - வெல்லாநின்ற முதிர்கயமும் - பருத்தயானையையும், மடங்கலும்-அதனைவெல்லுஞ் சிங்கத்தையும். கொண்டு - தன்கண்ணே சேர்த்துக்கொண்டு, முடுகிற்று-விரைந்து சென்றது எ-று.

அடங்கலு முடுகிற்று எனக் கூட்டுக. (மஉ)

முறியு மாறுந் தருவு முதல்கெட
முறியு மாறுந்தி முற்றிநன் மான்மத
வெறியு மாறடி யுங்கொடு வேகமும்
வெறியு மாறிலா வெங்களி றொத்ததே.

இ-ள். முறியும் - தளிர்களும், மாறும் - வளார்களும், தருவும் - மரங்களும், முதல்கெட - அடியோடுகெட, முறியுமாறு - சிதையும்படி, உந்தி - வீழ்வித்து, முற்றி - சூழ்ந்து, நல் - நல்ல, மான்மதவெறியும் - பெரிய மதசலநாற்றத்தையும், மாறடியும் - மாறிவைக்கப்பட்ட அடிகளையும், கொடு - கொண்டுவருதலால், வேகமும் - விரைவும், வெறியும்-மயக்கமும், மாறிலா-நீங்காத, வெங்களிறொத்ததே-வெவ்விய யானையை யொத்தது. எ-று. (கங)

வார ணத்தடங் கோளும் வளைகளும்
வார ணத்தடங் கோடும் வரன்றிநீ
ஆர ணத்துறை யந்தரி யுண்மகிழ்ந்
தார ணத்துறை யொத்ததவ் வாறரோ.

இ-ள். அவ்வாறு - அந்நச்சாயநதி, வாரணத்து - யானைகளுடைய, அடு - கொலைசெய்கின்ற, அம் - அழகிய, கோடும் - தந்தங்களையும், வளைகளும் - சங்குகளையும், வார் - நீட்சி, அண் - பொருந்திய, அத்தடங்கோடும் - அப்பெரிய ஊதுகொம்புகளையும், வாரணம் - தடையாகிய, தடங்கோடும் - தடாகக்கரைகளையும், வரன்றி - வாரிக்கொண்டு, ஆரணத்து - வேதத்தின் (ஞானபாதையிலே) உறை - தங்கிய, அந்தரி - பத்திரகாளி, உண்மகிழ்ந்து - திருவுளங் களிகூர்ந்து, ஆர் - பொருந்திய, ரணத்துறை - போர்க்களத்தை, ஒத்தது - ஒப்பாயிற்று. எ-று.

ஆரென்பதன் ரகரம் முதலாகா தகரமுதலாதலின் கெட்டது. அகரமுதனகரவிறுவா யென்பதுபோல். (கச)

துடிம ருங்கிற் கொடிச்சியர் தோயவே
துடி மருங்கிற் பரப்பிச் சுழித்துராய்க்
கொடிபு னைந்த குகன்கழ றாழ்ந்துபூங்
கொடிபு னைந்த குறிஞ்சி கடந்ததே.

இ-ள். துடி மருங்கிற் கொடிச்சியர் - உடுக்கைபோ லிடையுள்ள குறமகளிர், தோய - மூழ்க, துடி - ஏலச்செடிகளை, மருங்கிற் பரப்பி - அருகேபரப்பிக்கொண்டு, சுழித்து - சுழிகளையுடையதாய், உராய் - உராய்ந்து, கொடிபுனைந்த குகன்கழறாழ்ந்து - வெற்றிக்கொடி தரித்த முருகக்கடவுளி னடிகளை வணங்கி, பூங்கொடி - மலர்க்கொடிகளும், புல் - புற்களும், னைந்த - தன்னுலே சிதைந்த, குறிஞ்சி - குறிஞ்சிமலைச்சார்பை. கடந்தது - கடந்துசென்றது. எ-று.

புல்-புலியுமாம். அவ்வாறென்னும் எழுவாய்-வருவித்துக்கொள்க. (கரு)

வீயும் வேங்கையு மந்தியு மேதகு
வீயும் வேங்கையும் மந்தியு வீழ்பலாக்
காயும் பாலையில் கைக்கய முங்கொடு
காயும் பாலையில் வந்து கலந்ததே.

இ-ள். வீயும் - பறவைகளும், வேங்கையும் - புலிகளும், மந்தியும்-குரங்குகளும், மேதகுவீயும் - மேம்பாடு பொருந்திய மலர்களும், வேங்கையும்-வேங்கை மரங்களும், மந்தியும் - வண்டுகளும், வீழ்பலாக்காயும் - விரும்பப்பட்ட பலாக்காய்களும், பால்-தன்பக்கங்களில், அயில்-நீருண்கின்ற, கை-துதிக்கையையுடைய, கயமும்-யானைகளும், கொடு - கொண்டு, காயும்-சுடுகின்ற, பாலையில்-பாலைநிலத்தில், வந்துகலந்தது-வந்துகூடிற்று. எ-று.

அயில் ஐயிலெனப் போலியாய் வந்தது. (கசு)

தேரு மாறுணா ராச்சின வேடர்பேய்த்
தேரு மாறுமுட் டேறரும் பாலையில்
ஊரு மாதரி யாரையு முந்திமான்
ஊரு மாதரி தாடொழு துற்றதே.

இ-ள். தேருமாறு - தெளியும்வழியை, உணரா - அறியாத, சினவேடர் - கோபத்தையுடைய மறவர், பேய்த்தேரும்-கானலையும், ஆறும் - வெள்ளத்தையும், உள் - உள்ளே, தேறரும் - பகுத்தறதல் கூடாத, பாலையில் - பாலைநிலத்தில், ஊரும்- அங்குள்ள ஊர்களையும், மாதரியாரையும் - மகளிர் யாவரையும், உந்தி - தள்ளிக்கொண்டு, மான் - கலைமானை, ஊரும் - நடத்துகின்ற, மாதரி - பத்திரகாளியினது, தாடொழுது - தாளை வணங்கி, உற்றது - பொருந்திற்று. எ-று. (கஎ)

இறவங் கோங்க மிருப்பையின் பூந்துணர்
இறவங் கோங்க வெரிமின் மினியெனப்
புறவ மேய்ந்த சுரம்விட்டுப் போய்ச்செழும்
புறவ மேய்ந்தது பூம்புன லாறரோ.

இ-ள். அங்கோங்கம் - அழகிய கோங்கினுடையவும், இருப்பையின் பூந்துணர்-இருப்பையி னுடையவும் ஆய பூங்கொத்துகள், இற-கெடவும், இறவு இருமீன்கள், அங்கு ஓங்க-மேலெழவும், எரி-நெருப்பு, மின்மினியென - மின்மினிபோற் றோன்றவும், புறவு மேய்ந்த-புறாக்கள் மேய்ந்த, சுரம்விட்டுபோய்-பாலைநிலத்தைவிட்டுப்போய்-செழும்-செழித்த, புறவம்-முல்லைநிலத்தில், மேய்ந்தது-பொருந்தியது, பூம்புனலாறு-அழகியநீரையுடைய ஆறானது. எ-று.

ஆடு மாசுரை யாவிடை யாழநீர்
ஆடு மாசுரை யாவிடை யோடவே
கோடு குத்திக் குலைத்தது கொன்றையின்
கோடு குத்திக் குலைத்துணர் வாரியே.

இ-ள். ஆடும் - முழுகுதற்குரிய, மாசுரையா - குற்றஞ் சொல்லப்படாத, இடையாழம் - நடுவொழுக்கை யுடைய, நீர் - நீரானது, ஆடும் - ஆடுகளும், மா-பெரிய, சுரையா-கறவைப்பசுக்களும், விடை - எருதுகளும், ஓட- அஞ்சியோடும்படியாக, கொன்றையின்-கொன்றைமரங்களின், கோடு-கிளைகளை, உகுத்து - முறித்து, இக்குலை - இக்காய்க் கொத்துகளையும், துணர் - பூங்கொத்துகளையும், வாரி - சேர்த்துக்கொண்டு, கோடு - கரைகளை, குத்தி-மோதி, குலைத்தது-அழித்தது. எ-று. (மக)

அண்டர் தோயலை வாரி மராவழீஇ
அண்டர் தோயலை வாரியிற் சார்ந்தணி
கொண்டலைத்தரிக் குங்குருந் திற்கலை
கொண்டலைத்தரிக் கொத்த குடிஞையே.

இ-ள். அண்டர் - ஆயரது, தோயலை - தயிரை, வாரி - கொள்ளையிட்டு, மரா-மராமரத்தை, அழீஇ-அழித்து, அண்டர்-தேவர்கள், தோய் - மூழ்காநின்ற, அலை-அலைகளை யுடைய, வாரியில்-கடலின் கண்ணே, சார்ந்து-கூடி, அணி - அலங்கரிக்கப்பட்ட, கொண்டலை - மேகத்தை, தரிக்கும் - தரிக்கின்ற, குருந்தில்- குருந்தமரத்தில், கலைகொண்டு-(ஆய்ச்சியர்) ஆடைகளைக் கொண்டு, மான்களைக்கொண்டு, அலைத்து-அலைசெய்து, அரிக்கு-திருமாலுக்கு, ஒத்த-ஒத்தது, குடிஞை - அவ்வாறானது. எ-று.

ஒத்தது என்பது ஒத்தவெனக் கடைகுறைந்து நின்றது. (உய)

உறவ ணங்கு மராவு முழக்கிவான்
உறவ ணங்கு மராவு மொசித்தது
மறைவ ணங்கு மரியை வணங்கல்போல்
மறைவ ணங்கு மரியை வணங்கியே.

இ-ள். உற - மிகவும், அணங்கும் - வருந்துகின்ற, அராவும் - பாம்புகளையும், உழக்கி - வருத்தி, வானுற - மேகந்தவழ, வணங்கும் - விளைந்திருக்கின்ற, மராவும்-மராமரங்களையும், ஒசித்தது-ஒடித்தது, மறைவு-மறைதல், அண் பொருந்திய, நம்-நமது, குமரியை- கொற்றவையை, வணங்கல்போல் - முன் பாலையில் வணங்கினமைபோல், மறை - வேதத்தினாலே, வணங்கும் - வணங்கப்பட்ட, அரியை-திருமாலை, வணங்கி-முல்லையில் வணங்கி. எ-று. (உக)

ஆவியன்ன பெடைகளு மன்றிலும்
தூவி யன்னமுந் துன்னிய நாரையும்
மேவி யின்பம் விடாத நெடும்புனல்
வாவி சூழு மருதம் புகுந்ததே.

இ-ள். உயிரை யொப்பான பெட்டையன்றில்களும் ஆண் அன்றில்களும் இறகையுடைய அன்னங்களும் நெருங்கியிருக்கிற நாரைகளுங் கூடிச்சந்தோ

ஷம் விலகாதிருப்பதான அந்தநெடிதான சரயுநதிப் பிரவாகமானது குளங்கள் சூழ்ந்துள்ள மருதநிலத்திலே சென்றது. எ-று. (உஉ)

வாழை பூக மகிழ்மரு தாசினி
தாழை கேசரஞ் சண்பகஞ் சன்மலி
ஞாழன் மாதுளை நாகம விந்ததன்
சூழல் சேரத் தொலைத்தது தோயமே.

இ-ள். வாழைமரங்கள் - கமுகமரங்கள்-மகிழமரங்கள் - மருதமரங்கள்-பலாமரங்கள் - தென்னமரங்கள் - பூந்தாதுக்களையுடைய சண்பகமரங்கள்-இலவமரங்கள் - குங்குமமரங்கள் - மாதுளமரங்கள் - புன்னைமரங்கள் முதலியவற்றை அந்தப்பிரவாகம் அழித்தது. எ-று. (உங)

பால்க டோறுங் கலந்த கடும்புனல்
கால்க டோறுங் கலந்த கடும்புனல்
வால்க டோய்மகி டம்புக வான்படச்
சேல்கள் பாயுஞ் செழுந்தடம் புக்கதே.

இ-ள். அந்தமருதநிலத்தி னிடங்களெல்லாம்பரவி, அங்கங்கேபொருந்தின-அந்த வாய்க்கால்களெல்லாங் கூடின, வேகத்தையுடைய ஜலமானது, வால்கள் தொங்குகின்ற எருமைகள்போய்விழ அந்த அதிர்ச்சியினாலே, ஆகாயத்தளவாகச் சேற்கெண்டைகள் குதித்துக் கிளறுவதான செழியதடாகங்களெல்லாம் பாய்ந்தது. எ-று. (உச)

வாவி சேர நிரப்பி மதகினில்
தாவி நீள்கரை சாடி யுடைத்தலை
நீவி வண்டல் கொழித்து நெடும்புனல்
பாவி நீல வயலிற் பரந்ததே.

இ-ள். அப்படிக் குளங்களெல்லாம் நிரம்பச்செய்து, மதகுகளிலுமோதி நீண்ட கரைகளையுந்தாக்கி யுடைத்து, அலைகளாலே வீசிச் சேறுகளை ஒதுக்கி அப்பெரிய பிரவாகஜலமானது எங்கும்பரவி நெடிதாக வயல்களெல்லாம் பாய்ந்தன. எ-று. (உரு)

வரம்பு டைத்துக் கரைத்து மடுக்களின்
குரம்பு டைத்துக் குமுதமுங் கஞ்சமுங்
கரும்பு மிஞ்சியு மஞ்சளுங் கட்டழித்
தரம்பை யோங்கு படப்பை யழித்ததே.

இ-ள். அந்த வயல்களிலுள்ள வரம்புகளை யடைத்துக் கரையப்பண்ணி மடுக்களுக்குப் பாய்கின்ற வாய்க்கால்களையு முடைத்து, குமுதமலர்களையுந் தாமரைமலர்களையுங் கரும்புகளையும் இஞ்சிகளையும் மஞ்சள்களையுங் கட்டுக் குலையப்பண்ணி, வாழைமரங்கள் உயர்ந்துள்ள மருத நிலத்தூர்களையும் அந்தப்பிரவாகஜலம் அழித்தது. எ-று. (உசு)

ஏரி சேர வுடைத்தமிழ்த் தின்கனி
வாரி யோடி வளம்பயின் மள்ளர்தஞ்
சேரி சேர வழித்துச் செழும்புனல்
பேரி யாறு பரந்து பெருகிற்றே.

இ-ள். பின்னும் பெரிய குளங்களையெல்லாம் முழுதும் உடைத்துக் கெடுத்து, இனிதான பழவர்க்கங்களையும் வாரிக்கொண்டு சென்று, விளைவு செய்கின்ற உழவருடைய ஊர்கள் முழுதும் கெடுத்து, அந்தப்பிரவாக ஜலமானது பெரிய ஆறாகப் பரவிப் பெருகியது. எ-று. (உஎ)

நாடு தோறும விந்த நறும்புனல்
ஓடு மோதயு மோங்கு தடங்கரை
சாடு மோதையுந் தண்டலை வண்டுகள்
பாடு மோதையு மெங்கும் பரந்தவே.

இ-ள். அப்படி அந்தக் கோசலநாடெல்லாம் பாய்ந்த ஜலமானது ஓடுகிற சத்தமும் உயர்ந்த பெரிதான கரைகளை உடைக்கின்ற சத்தமும் சோலைகளிலே வண்டுகள் பாடுகிற சத்தமும் எங்கும் பரவின. எ-று (உஅ)

கள்ள லம்பிய வாயுங் களிமகிழ்
உள்ள லம்பிய வுள்ளமுந் தோன்றவே
புள்ள லம்பிய பொய்கைக் கரையெலா
மள்ளர் வந்து நெருங்கி மலிந்தனர்.

இ-ள். கள் ஒழுகுகிறவாயும், கள் குடித்ததினாலே சந்தோஷம் உள்ளே அடங்காதிருக்கிற மனமும் வெளியாக, பட்சிகள் கத்துகின்றகுளக்கரைகளி லெல்லாம உழவர்கள் வந்து நெருங்கிக் கூடினார்கள். எ-று.

அறிவை மயக்கவல்ல மதுவை உழவர்கள் மேலுமேலுங் குடித்தலால், அது வாயினின் றொழுகுதலை யறியாது புத்திமயங்கின ரென்பார், "கள்ள லம்பியவாய்" எனவும், மதுவுண்போர் அஃதருந்தாதிருக்கையில் மனச்சோர் வுறுதலும், அருந்தின பின்னர்க் களிகோடலும் இயல்பாதல் பற்றி "களிமகிழ் உள்ளலம்பிய உள்ளந்தோன்ற" எனவும் கூறினார். (உகூ)

கொட்டு வாங்கிக் குதித்து நிவப்புமண்
வெட்டு வார்சுமப் பார்மிதிக் குக்கரை
கட்டு வார்வன் கடிப்பெடுத் தக்கிணை
தட்டு வார்துர கங்கொடு தாங்குவார்

இ-ள். சிலர் மண்வெட்டிகளைக் கொண்டு சந்தோஷமாய் மேட்டிலுள்ளமண்ணை வெட்டுவார்கள். சிலர் அந்த மண்ணைச் சுமப்பார்கள். சிலர் காலால் மிதித்துக் கரைகட்டுவார்கள். சிலர் வலிதான தோற்கடிப்பைக் கொண்டு அந்த மருதநிலப் பறையைக் கொட்டுவார்கள். சிலர் குதிரை மரங்களை நிறுத்தி வெள்ளமுடைக்காமல் கரையைக் காப்பார்கள். எ-று. (௩௦)

முழவெ ழும்படி மொய்சிறை யிற்கறங்
கெழவெ ருண்டய லன்ன மிரிந்திடப்
பழவ ரம்பு புதுக்கிப் பகடுசேர்த்
துழவ ரெங்கு முழுமொலி யோங்குமே.

இ-ள். அப்படிச் சந்தோஷத்துடனே மருதநிலப் பறையோசையுண்டாகுந் தன்மையால், நெருங்கின இரண்டு சிறகுகளிலும் சுழல்காற்றுத் தோன்றப் பயந்து பக்கங்களிலுள்ள அன்னங்கள் பறந்தோட, உழவர்கள் வயல்களெங்கும் பழையவரம்புகளைப் புதிய வரம்பாகச்செய்து எருமைக் கடாக்களை ஏரிலே பூட்டி உழுகிற சத்தம் மிகுந்திருக்கும். எ-று. (௩க)

வலம்பு ரித்திரள் வாள்வளை வெண்சலஞ்
சலம்பி ளப்பத் தரளம் பிளப்பவுற்
பலம்பி ளப்பப் பதுமம் பிளப்பமீன்
குலம்பி ளப்பக் கொழுச்செலுஞ் சாலெலாம்.

இ-ள். வலம்புரிச்சங்கினங்களும், வெள்ளைச்சங்கினங்களும், வெண்மையான சலஞ்சலங்களும் உடைபடவும், அவைகளிலுள்ள முத்துக்களுடைபடவும், நீலோற்பலங்கள் சிதையவும். தாமரைமலர்களழியவும், மீன் கூட்டங்கள் நசுங்கவும். அவர்களுழுகிற நிலங்களினிடமெல்லாம் கலப்பையிலுள்ள கொழுவானது செல்லாநிற்கும். எ-று. (௩உ)

இரும்பொ டித்தன வேரடிக் கின்றகோல்
அரும்பொ டிபொடி யாக வுரப்பிநீள்
கரும்பொ டித்துக் கடாவடித் தெங்கணும்
பரம் படிப்பவர் பற்பல கோடியே.

இ-ள். இரும்பாலாகிய ஒருமரத்திலே ஒடித்தாற்போலிருக்கிற ஏரிலேபூட்டின எருமைக்கடாக்களை. அடித்தோட்டுகிற கோலானது அரிதான தூள்தூளாக அதட்டி ஓட்டி, பின்னர் நெடியகரும்பை ஒடித்துக் கோலாகக்கொண்டு அந்த எருமைக்கடாக்களை அடித்தோட்டி எவ்விடத்திலும் பரம் படிப்பவர்கள் கணக்கில்லாத கோடிபேர்கள். எ-று. (௩௩)

கரும்புங் காவியுங் கஞ்சமு மாம்பலும்
அரும்புஞ் சேம்பு மலவனு மாமையும்
சுரும்பு நந்துஞ் சுரிமுக முஞ்செழும்
பரம்பு தோறும் படிந்து நெரிந்தவே.

இ-ள். கரும்புகளும் நீலமலர்களும் தாமரைமலர்களும் செவ்வாம்பல் மலர்களும் அங்கே முளைத்திருக்கிற நீர்ச்சேம்புகளும் நண்டுகளும் ஆமைகளும் வண்டுகளும் நத்தைகளும் சங்குகளும் அந்தச் செழுமையான பரம்பு மரங்களின் கீழெல்லாம் அமிழ்ந்து நசுங்கின. எ-று. (௩௪)

சாலெ லாந்தர ளத்திரள் மள்ளர்தங்
காலெ லாங்கம லக்கடி கார்க்கடா
மேலெ லாம்பொழி வேழத்தின் சாறதன்
வாலெ லாம்பல மாமலர் மன்றலே.

இ-ள். உழுகிற படைச்சா லெல்லாம் முத்துக்கூட்டங்கள் கிடைக்கும் உழுகிறவர்களுடைய கால்களெல்லாம் தாமரைமலர் வாசமாயிருக்கும். கறுத்த எருமைக்கடாக்களின்மேலெல்லாம் அவற்றை அடிக்கிற கரும்பின்சாறொழுகுவதாயிருக்கும். அந்த எருமைக்கடாக்களின் வால்களிலெல்லாம் பலவித மலர்வாசமாயிருக்கும். எ-று.

போரடித்த விதியவன் போன்றுழன்
றாரடித்தவ னூர்தியென் றெண்ணியே
ஏர டிப்ப விருசிறை யுங்கொடு
* மார டித்திரி யும்மட வன்னமே.

இ-ள். பொருதுதல் செய்த பிரமாவானவன். சிவனுக்கு அஞ்சுதல் போல, திரிபுரத்தையெரித்த சிவபெருமானுடைய வாகனமென்றுதெரிந்து உழவர்கள் ஏரிலே பூட்டின எருதுகளை அடித் தோட்டும்போது இள அன்னங்கள் இரண்டு சிறகுகளாலும் தமது மார்பிலேபட அடித்துப் பறந்தோடுவனவாயிருக்கும். எ-று.

அன்னங்கள் பயந்தோடுவனவற்றை. தம்மை யூர்கிற பிரமனை வென்ற சிவபெருமானுடைய வாகனம் எருதாகையால். தங்களையும் வெல்லுமென்று கருதினதாகக் கூறியது [தற்குறிப்பணி.] இங்குப் பொருதல் செய்தவென்பது சிவபெருமானுக்கு நிகராதலே. (கசு)

நன்னு ரைத்தட நாண்மலர்த் தாதுறீஇப்
பன்னு ரைத்த பகட்டின் பதக்குளம்
பென்னு ரைப்ப திடமற வெங்கணும்
பொன்னு ரைத்த நிறத்தகற் போன்றவே.

இ-ள். நல்ல நுரைகளையுடைய தடாகங்களிலே தினந்தோறும் பூத்த தாமரைமலர்களிலுள்ள பொன்னிறமான பராகப்பொடிகள் பொருந்தியிருப்பதனாலே, பற்களிலே நுரைகளையுடைய எருதுகளின் கால்களிலுள்ள குளம்புகளுக்குயாது நிகர்சொல்லத்தக்கது என்னில். அந்தக்குளம்புகள் முழுதும் இடமில்லாமல் எவ்விடத்திலும் பொன்னையுரைத்த நிறத்தோடு கூடியிருக்கிற உரைகல்லை ஒத்திருக்கின்றன. எ-று. (கஎ)

தொக்க வேதியர்க் குந்துற வோர்கட்குந்
தக்க தானந் தருபவர் போலவே
பக்க நோக்கிப் பலிப்பறிந் தெங்கணு
மிக்க செந்நெலும் வெண்ணெலும்வித் தினர்.

* மார்பு-மார் என விகாரமாயிற்று.

இ-ள். ஒருசேரக்கூடின பிராமணர்களுக்கும், சன்னியாசிகளுக்கும் தகுதியான தானத்தை வாரிவாரிக் கொடுக்கிறவர்கள்போல, நாலுபக்கங்களிலும் பார்த்து அவ்விடங்கள் விளைவாகிற காலபக்குவந் தெரிந்து எவ்விடங்களிலும் மிகுதியான செந்நெற்களையும் வெண்ணெற்களையும் விதைத்தார்கள். எ-று. (௩௮)

இறவு பாய விருங்கத லிக்கனி
மறவி பாய்வருந் கைக்கனி மாங்கனி
பிறவும் வாய்விண்டு சிறிப் பொழிந்திடு
நறவு பாய்ந்திட நாறி வளர்ந்தவே.

இ-ள். தேன்கூட்டிலுள்ள தேன்வழிந்து பாய்தலினாலும், பெரிதான வாழைக்கனி - தேனொழுகுகின்ற பலாக்கனி - மாங்கனி முதலான மற்றைக் கனிகளும் வாய்வெடித் துடைந்து சிந்துகின்ற தேன்கள் பாய்தலினாலும் அந்த நாற்றுகள் வளர்ந்தன. எ-று. மறவி-கள். (௩௯)

சேம்பு தோன்றுஞ் செழுநதடத் தின்கரைத்
தூம்பு தோன்றிய சோர்புனற் றோன்றுவ
காம்பு தோன்றுவ ரைப்புழைக் கட்பெரும்
பாம்பு தோன்றுவ போன்றன பாலெலாம்.

இ-ள். நீர்ச்சேம்புகள் முளைத்திருக்கிற செழுமைதங்கிய அகன்ற குளக்கரையிலுள்ள மதகின் துவாரம் நிரம்ப வருகிற நீர்த்தோற்றமானது, மூங்கில்கள் முளைத்திருக்கின்ற மலையின் குகையிலிருந்து பெரும்பாம்பு வருகிறது போல் மதகுகள்தோறும் காணப்படுகின்றன. எ-று. (௪0)

இரவை வென்ற விருண்ட செழுங்குழல்
அரவை வென்ற வகலணி யல்குல்வெங்
கரவை வென்ற கயற்கட் கடைசியர்
குரவை வென்ற குரைகட லார்ப்பையே

இ-ள். இருளைச் செயிப்பதான இருண்டிருக்கின்ற செழுமையாகிய கூந்தலையும். சர்ப்பபடத்தை வென்றதான அகன்ற அரைநூண் மாலையைக் கொண்ட அல்குலையும். வெவ்விய களவைச் செயிப்பதான கயல்போலுங் கண்களையுமுடைய உழத்தியர்கள் கைகோத்தாடுகின்ற சத்தமானது ஒலிக்கின்ற கடலின் முழக்கத்தை வென்றது. எ-று.

இருண்ட செழுங்குழல் இரவைவென்றன. அகலணியல்குல் அரவை வென்றன. கயற்கண்வெங்கரவை வென்றன. கடைசியர் குரவை குரைகடலார்ப்பை வென்றன என்க. (௪௧)

செவ்வ ணாநதிகழ் சீரடி மென்முகங்
கைவ ணஞ்செழுந் தாமரை காவிபி
னவ்வ ணம்விழி வாயரக் காம்பன்மற்
றெவ்வ ணங்களை கொய்குவ ரேழைமார்.

இ-ள். சிவந்த நிறமாக விளங்குகின்ற சிற்றடியையும், மிருதுவான முகத்தையும், கையையும் நிறத்தாலே செழுமையான தாமரைமலர்கள் ஒத்திருக்கின்றன. நீல மலர்களின் நிறமானவை கண்களை ஒத்திருக்கின்றன. வாயைச் செவ்வாம்பல்க ளொத்திருக்கின்றன. இப்படி யிருப்பதினாலே அந்த உழத்தியர்கள் எவ்வாறு களை பறிப்பார்கள்? எ-று. மயங்கி நின்றன ரென்றபடி. (சஉ)

வயலின் மென்களை மாய்க்குங் கடைசியர்
சயநெ டுங்கண் சலிலத்திற் றோன்றலால்
மயல் விளைந்து மயங்கிடு மள்ளர்தாம்
கயல்க ளென்றய லிற்பறி கட்டினார்

இ-ள். அந்த வயல்களிலே மெல்லிதான களைகளைப் பிடுங்குகிற உழத்திகளுடைய வெற்றி பொருந்திய நெடிய கண்கள் நீரிலே தோன்றுகிறதினாலே ஆசையுண்டாகி மயங்கின உழவர்கள் அந்தக்கண்களினிழல்களை மீன்களென்று நினைத்து ஒவ்வோரிடங்களிலும் பறி கட்டினார்கள். எ-று.

தம்மைக்காணும் ஆடவர்களுடைய மனத்தைக் கவருந்தன்மை மாதர் கண்களுக் கியல்பா முணமைபற்றி "சயநெடுங்கண்" என்றார். பறி-மீன்பிடிக்கும் புட்டில். (சங)

சேலி ரும்புனற் கேள்வனைச் சேர்ந்துபின்
சூலிருந்து துவண்டலைந் தீன்றுமெய்ப்
பாலி ருந்து பசந்து பழுத்தசெஞ்
சாலி கற்பினர் போற்றலை சாய்த்தவே

இ-ள். மீன்களை யுடைய பெரிதான சலமாகிய நாயகனைக் கூடிப் பின்பு கர்ப்பங்கொண்டு துவளுதலாய் அசைந்து. நெல்லாகிய சருவைப்பெற்றுப் பாலுங்கொண்டு. பசிய நிறத்தை யுடையனவாய்ப் பழுத்து விளைந்த செந்நெற்கள் பதிவிரதைகளைப்போற் றலை வணங்கின. எ-று. (சச)

தோட்டு வார்நறை சூழ்வயல் சோர்வொரீஇப்
பூட்டு வார்கதிர்ப் புள்ளங்கள் சூற்சங்கில்
தீட்டு வார்மலர்ச் செந்திரு காணமுன்
நீட்டு வாரென நெல்லரி வார்களே

இ-ள். பூவிதழ்களினின்றும் ஒழுகுகின்ற தேன்பாய்வதான வயல்களிலே மள்ளர்களிளைப்பில்லாமற் கைப்பிடியிலே கோத்திருக்கிற நீண்ட ஒளியையுடைய அரிவாள்களைக் கர்ப்பங் கொண்டிருக்கிற சங்குகளிலே தீட்டிக் கொண்டவர்களாய், தாமரைமலரிலுள்ள லட்சுமிதேவி பார்க்க அவளுக்கு முன்னே (வளையலாக அணிந்துகொள்ளச்சங்குகளை அறுத்துக்) கைகளை நீட்டிக் கொடுக்கிறவர்கள்போல் விளைந்த நெற்களை அறுப்பார்கள். எ-று.

சேற்று வார்கதிர் சேரக் கொணர்ந்துவைத்
தாற்று வார்களத் தாற்றி னடைந்துபோர்
ஏற்று வார்பக டேற்றி மிதித்தநெல்
தூற்று வார்குவிப் பார்சுமப் பார்களே.

இ-ள். அவ்வாறு சேற்றில் நீண்டுகிடக்கிற நெற்கதிர்களை யரிந்து ஒரு சேரக் கொண்டுவந்து வைத்துத் தலைமேற் சுமப்பார்கள், பின்பு நெற்களத் துக்கு வழியாகவந்து போராக உயர்த்துவார்கள், பின்பு மாடுகளை மேலேற விட்டு மிதிப்பார்கள். அப்படி மிதித்துதிர்ந்த நெற்களைப் பதர்போகக் காற் றிலே தூற்றுவார்கள். அப்படித் தூற்றின நெல்லைக் குவிப்பார்கள். பின்பு சுமந்துகொண்டு போவார்கள். எ-று. (சசு)

பகடு மட்டறப் பூட்டிப் படுத்தநெல்
சகடு முட்டவிட் டேர்ந்துதத் தங்குல
மகடு மக்களும் வைகுறும் வாழ்மனை
முகடு முட்ட நிறைப்பர்கண் முற்றுமே.

இ-ள். எருதுகளை அளவில்லாமற் பூட்டி மிதிப்பித்த நெல்லைப்பண்டி களில் நிரம்ப ஏற்றி, அவற்றை ஓட்டிக்கொண்டுபோய், தங்கள் தங்கள் குல த்து மனைவிகளு மக்களுமிருக்கிற வாழ்வையுடைய வீடுகளின் முகடுவரை யினும் முட்டும்படி நிரப்புவார்கள். எ-று. (சஎ)

நாடு தோறுமிவ் வாறு நடப்பன
காடு தோறுங் களிமயி லாடுவ
வீடு தோறுந் திருவிளை யாடுவ
கூடு தோறுங் கருங்குயில் கூவவே.

இ-ள். காடுகளிலெல்லாம் களிப்பை யுடைய மயில்க ளாடுகின்றன, அவர்கள் வீடுகளிலெல்லாம் இலட்சுமி சந்தோஷமாய் வாசஞ்செய்வாள். மர த்திலே கட்டியிருக்கிற கூடுகளிலெல்லாம் கரியகுயில்கள் இருந்துகொண்டு கூவுதல்செய்ய, அந்தக் கோசலநாடு முழுதும் இப்படி நடக்கின்றன. எ-று.

பெடைகி டப்பவும் பிள்ளை கிடப்பவும்
இடை கிடப்ப விளவனச் சேவல்கள்
மடைகி டக்கும் வளைமுத்தை யண்டமென்
றடைகி டப்பன வன்னப் பெடைகளே.

இ-ள். பெட்டை யன்னங்க ளொருபுறத்திலே இருக்கவும், குஞ்சுக ளொருபுறத்திலே யிருக்கவும், இளமையான ஆணன்னங்கள் நடுவே கிடக் கின்றன. நீர்பாய்கிறமடையிலேயிருக்கிறசங்கினது முத்துக்களைத் தங்கள்முட் டையென்று நினைத்துப்பெட்டையன்னங்கள் அடைகிடக்கின்றன. எ-று.

சாயெ லாம்பரு வச்செழுஞ் சாலியின்
காயெ லாந்தின்று கன்னற் படப்பையுள்
மேய லாவிள மேதிக ளின்கடை
வாயெ லாமுத்து மாலைக ளானுமே.

இ-ள். கோரைகள்போல் முழுதும் விளைந்து கிடக்கிற செழுமையான நெல்லுப் பழங்களை யெல்லாம் தின்று கருப்புத் தோட்டங்களிலே புகுந்து மேய்வதனாலே இளமையான எருமைமாடுகளின் கடைவா யெல்லாம் முத்துக்கோவைகள் தொங்கும்-எ-று.

முத்தானது, மதி - மேகம் - சங்கு - சிப்பி - மீன்-நந்து-முதலை-உடும்பு - தாமரை-வாழை-கமுகு-கருப்பு-செந்நெல்-மூங்கில்- யானைக்கொம்பு - பன்றிக்கொம்பு - பசுவின்பால் - நாகம்-கொக்கு - நங்கையர் கழுத்து என்னும் இருபதிடங்களிலும் பிறக்குமென்பது பிரமாணம். இங்கு எருமைமாடுகள் கருப்பந்தோட்டத்துட் புகுந்து அதனைத் தின்னலால், கரும்புகளின் கணுக்களில் முளைத்திருக்கிற முத்துக்கள் அவ்வெருமை மாடுகளின் கடைவாய்களில் ஒன்றன்பின்னொன்றாக வொட்டிய கோவைபோலுந் தொங்குகின்றனவென்றார்.

மட்டி லாமட வார்குடை வாவிவிட்
டெட்டி யன்ன மிரிந்து பறக்கவாய்
விட்டி ரங்கிடு பார்ப்பினை மென்மலர்த்
தொட்டி லாட்டித் திரைக டுயிற்றுமால்.

இ-ள். அளவில்லாத பெண்கள் நீராடுகிற குளங்களை விட்டு அன்னங்கள் தூரமாய் ஓடிப் பறந்துபோக, அப்போது வாயைத்திறந்து கத்துகிற அவற்றின் குஞ்சுகளை, அலைகள் மிருதுவான தாமரை மலர்களையே தொட்டிலாகக்கொண்டு அசைத்துத் தூங்கச்செய்யும். எ-று. (௫௧)

பள்ள மேற்பன சக்கனி யூறலவ்
வெள்ள மேற்கம லத்தலர் மேல்விழ
உள்ள மேற்கமு ழுண்ட வவாவினால்
வள்ள மேற்பன போல்வன வாவியே.

இ-ள். மரத்தடியாகிய பள்ளங்களிலே கிடக்கிற பலாப்பழங்களினது தேனூறலானது, அங்குள்ள குளத்துநீர்மேல் மலர்ந்திருக்கிற தாமரைமலரின்மேலே பாயுங் காட்சியானது, முன்னே மனந் திருத்தியாகக் குடித்த குளங்கள், ஆசையினாலே தொன்னைகளை ஏந்துவனபோலிருக்கின்றன. எ-று.

பூகத் தின்செழும் பாளையைப் புன்கவி
நாகத் தின்பட மென்று நடுங்கியே
பாகத் திற்றின்று விட்ட பலாக்கனி
மேகத் திற்புரை வெங்கதி ரொக்குமே.

இ-ள். கமுக மரத்தினது செழுமையான பாளையைப் புத்தியீனமான குரங்குகண்டு பாம்பின்படமென்று பயந்து ரசத்துடனே தின்றுகொண்டிருந்து விட்டுவிட்ட பலாப்பழமானது. மேகத்திலே மறைகிற சூரியனையொத்திருக்கின்றது. எ-று. (௫௩)

சேறு பாய்மலர்த் தேனொடு தீங்கனி
ஊறு பாய்வர மொண்கரும் பட்டதீஞ்
சாறு பாய்வவுந் தத்தமிற் கூடியே
ஆறு பாய்வன வங்கங் கனந்தமே.

இ-ள். நிலத்திலே சேறுண்டாக ஒழுகுகிற பூந்தேனுடனே, இனிப்பான பழங்களிலூறுகிற தேன்பாய்வனவும், அழகிதான கரும்பை யாட்டின இனியசாறுகள் பாய்வனவும் தம்மிலொன்றாகக்கூடி, ஆறாகப்பாய்வன வாகிய அந்தந்த இடங்களெல்லாம் அநேகமுண்டு எ-று. (௫௪)

மன்ற றங்கு மலர்களின் மேய்ந்திளந்
தென்றல் வந்தவன் சிந்திய தாதுகள்
குன்றின் வீழ்பொன் மழைக்குழூ வென்னவே
முன்றி லும்மணி மாடமு மொய்க்குமே.

இ-ள். இளந் தென்றலானது வந்து பரிமளந்தங்கிய மலர்களிலே பரவி, அங்கே உதிர்த்த பராகப் பொடிகள், மலைகளின்மேலே பெய்கிற பொன்மழைக் கூட்டம்போல், வாசல்களிலும் அழகிய வீடுகளின் மேலும் நிரம்பப்படியும். எ-று. (௫௫)

உகல ரும்புனத் திற்கிளி யோச்சுவார்
அகல்க வண்கொண் டெறியு மராமணி
பகல்வி ழுங்கண மொப்பன பாரெலாம்
குகனி ருந்த செழுந்தண் குறிஞ்சியே.

இ-ள். முருகக் கடவுள் விளங்குகின்ற செழுமையான குளிர்ச்சியை யுடைய குறிஞ்சிநிலமெங்கும், கெடுதலில்லாத தினைப்புனத்திலே கிளிகளை ஓட்டுகிறவர்களாகிய குறவர்கள் அகன்ற கவணிலேவைத்து வீசுகிற நாகரத்னங்கள் (மேலெழுந்து விழுகிற தோற்றமானது,) ஒவ்வொரு சூரியன்கீழே விழுகிற திரட்சியை யொத்தன. எ-று. (௫௬)

நெடிய நெய்தலி னித்தில வண்டலில்
கொடிய காதலிற் கூட விழைத்திடுங்
கடிய நீலக் கருங்க ணுளைச்சியர்
மடியி லேறி வளைகண்முத் தீனுமே.

இ-ள். விசாலமாயிருக்கிற நெய்தனிலத்திலே முத்துக்க ளொதுங்கிக் கிடக்கிற சேற்றுநிலத்திலிருந்து, கொடுமையான காமத்தினாலே சுழியிட்டுக் கொண்டிருக்கிற பரிமளத்தைக் கொண்ட நீலமலர்போலுங் கரிய கண்களை யுடைய வலைச்சிகள் மடிமேலேறி, சங்குகள் முத்தைப் பெறும். எ-று.

கலைய ளக்குங் கருங்க ணுளைச்சியர்
புலைய ளக்கு நறைக்கும் பொருந்தியே
விலைய ளப்பன வெண்முத்த மேயற
னிலைய ளக்கும் பரதவர் நெய்தலே.

இ-ள். தரும நிலையை அளவுசெய்திருக்கிற வலையர்களுடைய நெய்த நிலத்திலே. காமநூலை அளவுசெய்து பார்க்கிற் கரிய கண்களையுடையவலைச் சிகள், இழிகுணத்துடனே அளவுசெய்து விற்கிற கள்ளுக்குச் சம்மதமாக, விலைக்கு அளவுசெய்து கொடுப்பவை வெள்ளிய முத்துக்களே. எ-று. நெய் தல் கடற்சார்பு. (௫அ)

நிலம்வி ளக்கிடு நித்தில நீலவுற்
பலம்வி ளக்கிடு பைம்புனல் பண்பினன்
னலம்வி ளக்கிடு நல்லவர் வாய்மொழி
குலம்வி ளக்கிடுங் கோசல நாடரோ

இ-ள். எல்லா நாட்டுக்கும் சிரேஷ்டமாக விளங்குவதான கோசல நாட்டில். முத்துக்கள் நிலங்களெல்லாம் பிரகாசித்துக் கொண்டிருக்கும். பசுமையான ஜலங்களிலே நீலோற்பலமலர்கள் விளங்கிக்கொண்டிருக்கும். நல்லோர்களுடைய வாய்ச்சொற்களிலே பிரயோசனமான நன்மார்க்கங்கள் விளங்குவதா யிருக்கும். எ-று. (௫௯)

நாட்டுச்சிறப்பு முற்றிற்று

ஆக விருத்தம்-௫௯.

நகரச்சிறப்பு.

கலிவிருத்தம்

மகர தோரண வாயிலு நாஞ்சிலுஞ்
சிகர மாமதி லுஞ்செறி போகமுஞ்
சகரர் வான்புகழ் சாற்று மயோத்திமா
நகர மேன்மை சிறிது நடத்துவாம்.

இ-ள். மகரதோரணங்கள் கட்டியிருக்கிற கோட்டைவாசலும். மதி லுறுப்புகளும் அவ்வுறுப்புகளையுடைய பெரிய மதிலுஞ் சூழ. அம் மதிலைச சூழ்ந்தபெரிய அகழானது, இதுவே சகரர் தோண்டிய கடலென்றுசொல்ல அந்தச சகரர்களுடைய பெரிய புகழைப் பிரசித்தப்படுத்துவதான அயோத் திமா நகரத்தினது மேம்பாட்டை (இனி எம்மாலே கூடியவளவு) கொஞ் சம் சொல்லத் தொடங்குகிறோம். எ-று. (௧)

மாட மாளிகை யும்மடைப் பள்ளியுங்
கூட கோபுர மும்பெருங் கோயிலு
மாட ரங்கு மணியறச் சாலையும்
பாட லங்கிரி வைகிய பந்தியும்

இ-ள். வீடுகளும் உப்பரிகைகளும் மடைப்பள்ளிகளும் கூடங்களும் கோபுரங்களும் பெரிய அரண்மனைகளும் நடனம்பண்ணுகிற நாடகசாலை களும் அழகிதான தருமசத்திரங்களும் குதிரைகளும் யானைகளும் நிற்கிற இடங்களும் மிகவுள. எ-று. (௨)

மார னன்னவர் மாமயி லன்னவர்
தார டார்ந்த புயமுந் தனங்களு
நேர டர்ந்து நெருக்கலின் வீழ்ந்தபொன்
ளுர மின்னுவ வாவண வீதியே.

இ-ள். மன்மதனை ஒத்த புருஷர்களும். அழகிய மயிலையொத்த சாயலையுடைய பெண்களும் ஆகிய இவர்களுடைய மாலைகள் நெருங்கியதோள்களும், கொங்கைகளும் நேரேபொருத்தி நெருங்குதலினாலே உதிர்ந்தபொன்னும் முத்தும் கடைவீதிகளிலெல்லாம் விளங்கிக்கிடக்கின்றனவா யிருக்கும்.

அன்பு தங்கு மனத்தரிச் சந்திரன்
றன்பு கழ்கொழுந் தோங்கித் தழைத்தல்போற்
பொன்பு னைர்முலை யார்புலர்த் தும்மகி
லின்பு கைசென் றெழுமுக டெங்குமே.

இ-ள். அன்புதங்கிய மனத்தினையுடைய அரிச்சந்திரமகாராசனுடைய புகழானது கொழுந்துகொண்டு வளர்ந்து தழைப்பதுபோல், பொன்னிறமான தேமலைக்கொண்ட தனங்களையுடைய பெண்கள் கூந்தலைக் காயச் செய்கிறதற்கு மூட்டுகின்ற அகிற்கட்டைகளின் புகையானது ஆகாய முகடெல்லாம் போய்ப்படரும். எ-று. அன்பு - தெய்வபக்தி. (ச)

சோனை யார்ப்பென வூழி தொடர்ந்தெனச்
சேனை யார்ப்பன தேரொலி யார்ப்பன
வானை யார்த்துறும் வாம்பரி யார்ப்பன
வானை யார்ப்பன வாவண வீதியே.

இ-ள் கடைவீதிகளில். மேகங்கள் முழங்குவதுபோலவும் ஊழிக்காலம் வந்தாற்போலவும் சேனைகளும் சப்திக்கின்றன. தேர்களினொலியு முழங்குகின்றன. ஆகாயத்தை யளாவிச்செல்வதாய்த் தாவுகின்ற குதிரைகளும் அனுமானிக்கின்றன. யானைகளும் வீறிடுகின்றன. எ-று. (ரு)

வேத வோதை வியன்கலை யோதையின்
கீத வோதை கிளையோதை யாடுவார்
பாத வோதை பரிபுரத் தோதையாழ்
நாத வோதை நடப்பன நாளுமே.

இ-ள். வீதிகளிலே. வேதகோஷ்டங்களும், பெரிதான கலைஞானவொலியும், இனிய கீதங்களினொலியும். மூங்கிற் குழல்களினொலியும் ஆடுகிறவர்களுடைய காலிலுள்ள சதங்கைகளினொலியும், சிலம்புகளினொலியும். வீணையிலுண்டாகின்ற கானவொலியும் நாள்தோறும் உண்டாகிக் கொண்டேயிருக்கின்றன. எ-று. (சு)

கிள்ளை பாடுவ கீதங்கள் சாரிகைப்
பிள்ளை பாடுவ வேதம் பிராமணர்
கொள்ளை பாடுவ ரின்னிசைக் கோதையர்
வள்ளை பாடுவர் மன்னவன் வண்மையே.

இ-ள். கிளிகள் பாட்டுகளைப் பாடுகின்றன. நாகணவாய்ப் புட்கள் மழலைச் சொற்களைப்போற் பேசுகின்றன. பிராமணக் கூட்டங்கள் வேதங்களைப்பாராயணஞ்செய்வர். இனிதான இசையினையுடைய பெண்கள் அரிச்சந்திர மகாராஜனுடைய உதாரகுணங்களை வள்ளை யென்னும் பிரபந்தத்தில் அமைத்துப் புகழ்வார்கள். எ-று.

வள்ளையென்பது. உலக்கை போசிக்குங் குலைவன் வைாகூறி மகளிர் பாடுவது. (எ)

கூட லோங்குவ கோதையர் யாவர்க்கு
மூட லோங்குவ தவ்வை யொருத்திக்கு
மாட லோங்குவ கண்ணுளர்க் கன்றென்றும்
பாட லோங்குவ நித்தலும் பாணர்க்கே.

இ-ள். (அவ்வயோத்திமா நகரத்திலுள்ள) பெண்களெல்லோருக்கும் எப்போதும் தத்தம்நாயகருடனே கூடுதல் அதிகமாயிருக்கும். மூதேவி ஒருத்திக்குமாத்திரம் (அந்நகரிற் சேர்தற்கியலாமையா லுண்டாகிய) பிணக்கே அதிகமாயிருக்கும். நாடகிகளுக்கு அந்தந்த நாள்கடோறும் ஆடுகிறதொழிலே அதிகமாயிருக்கும். பாணர்களுக்கு நாடோறும் பாடுகிற தொழிலே அதிகமாயிருக்கும். எ-று. பாணர்-புகழ்ந்து பாடுவோர். (அ)

பொற்ப ராககர்ப் பூரப ராகசெம்
பற்ப ராக பயோதர வேசையர்
விற்ப ராக மிராவிடி யன்முதற்
கற்ப ராகம நாடக கானமே

இ-ள். பொன்னிறமான கந்தபொடிகளும், பச்சைக்கர்ப்பூரத் தூள்களும், சிவந்த பதுமராக மணிமாலைகளுங்கொண்ட கொங்கைகளையுடைய வேசையர்கள் தங்கள் தேகத்தை (இச்சித்த புருடர்களுக்கு) இராக்காலமுழுதும் விலைக்குவிற்பார்கள். இராகங்களும், அந்த நடனத்துக் கேற்ற பாடல்களும், விடியற்காலத்துக்கு முன்னே கற்றுக்கொள்வார்கள். எ-று.

எம்பி னண்ணி யிருந்தன யாவையும்
வம்பி னென்ன வழைப்பது மானவே
விம்பி நின்ற வியன்கொடி யெங்கணுந்
தம்பி னின்று நுடங்கித் தயங்குமே.

இ-ள். அவ்வயோத்திமா நகரத்தார்களுடைய வீடுகளின் மேலெல்லாமிருந்து நிற்கின்ற சிறந்த கொடியாடைகளானவை, தமக்குள் ஓங்கிநின்று, எங்களிடத்திலே சேர்ந்திருக்கிற எல்லாப் பொருள்களையும் (ஆசையால்) கொள்ளவாருங்கள் என்று கூப்பிடுவதுபோலத் துவண்டு விளங்கும்.

முன்னை மாதவத் தான்முழு துக்குநல்
லன்னை யாமரிச் சந்திரன் றன்னைமா
லென்ன மேல்வளைந் தீண்டிய பாற்கட
றன்னை யொத்த தவளக் கொடிகளே.

இ-ள். வெள்ளைக் கொடிகளானவை, பூர்வத்திலேசெய்த பெரிய தவத்தினாலே எல்லாப் பொருள்களுக்கும் நல்ல தாய்போன்ற அரிச்சந்திர மகாராசனை விஷ்ணுவென்று நினைத்து, மேலேசூழ்ந்து பரவின பாற்கடலை ஒத்திருக்கின்றன. எ-று. (கக)

திருக நோக்கியற் சித்திரப் பாவையை
யருக நோக்கிய வண்டளை வல்லிய
ருருக நோக்கிய வூடலி னுக்குயிர்
பருக நோக்குஞ் சமனைப் பழிக்குமே.

இ-ள். (அந்தந்த வீடுகளில்) பிணக்கு நோக்குடையதா எழுதியிருக்கிற சித்திரப் பிரதிமைகளை, தயவுகளை யணைக்க நோக்குவதுபோல் அணைக்கப்பார்க்கின்ற நாயகர்களை. கொடிபோலும் இடைகளையுடைய பெண்கள் மனமுருகப் பார்க்கின்ற பிணக்குப் பார்வையானது. உயிரைக் கொள்ளை கொள்ளப்பார்க்கின்ற யமனைப் பழிக்கும். எ-று.

திருக நோக்கியலாவது. முறுக்கிய முகத்தோடு பிணக்குப் பார்வை தோன்ற விருத்தல். (கஉ)

முரனெ டுங்குலி சத்தவன் மூண்டபோர்க்
கரண மக்கரிச் சந்திர னுமெனச்
சரண டைந்த தடவரை யீட்டம்போற்
றிரனெ டும்பரித் தேரணி நிற்குமே

இ-ள். மாறுபாட்டையுடைய நீண்ட வசிராயுதத்தைத் தாங்கிய இந்திரனென்பவன் மூளுவதான சண்டைக்கு. நம்மைத் துன்பநேராவண்ணம் காப்பவன் ரட்சகனான அரிச்சந்திரமகாராஜனேயா மென்று அடைக்கலமென்று வந்திருக்கிற பெரிய மலைக்கூட்டம்போல். திரட்சியாய் நீண்ட குதிரைகள் கட்டுவதான தேரின் வரிசைகள் நிற்கும். எ-று.

பொன்னாட்டுக் கிறைவனாகிய இந்திரன். முன்னொருகால் தன் கைப்படையாகிய வசிராயுதத்தினால் மலைகளின் சிறகுகளைச் சேதித்தனனாதலின், அன்னோன் மீண்டுமச்செய்கை விளைப்பானென்னும் பீதியால் வரைகள் அரிச்சந்திரனைச் சரணமடைந்ததுபோலத் தேரின்வரிசைகள் நிற்கின்றன வென்னும் பொருள் தோன்ற இச்செய்யுளிற் கூறியது. அத்தேர்களினது உயர்ச்சியும் திரட்சியும் வியந்துகூறியபடி என்க. (கங)

ஏம சாலையு மின்னிசைச் சாலையு
மோம சாலை யுடனறச் சாலையுந்
தூம சாலையுந் தோகையர் மாதவக்
காம சாலையு மெண்ணக் கில்லவே

இ-ள். திரவியங்களிருக்கிற சாலைகளும். இனிய இசைநூல்கற்கிற சாலைகளும், ஓமம்பண்ணுகிற சாலைகளுடனே தருமசத்திரச் சாலைகளும் புகைகள் கிளருகின்ற சமையற்சாலைகளும், பெண்களுடைய மிகப் பெரிதான காமானுபவம் பண்ணுகின்ற சாலைகளும் அந்நகரிலே அளவில்லை. எ-று.

அறமி ருக்கு மனத்தி லனைவர்க்குந்
திறமி ருக்கும் புயத்திற் செழுஞ்சுடர்
நிறமி ருக்கும் படையின்க ணீக்கமின்
மறமி ருக்கு மடந்தையர் கண்ணிணை.

இ-ள். அந் நகரமாக்களுடைய மனத்தில் தருமமே குடிகொண்டிருக்கும். தோள்களில் சாமர்த்தியமே நிலைகொண்டிருக்கும். ஆயுதங்களி னிடத்திலே சூரிய காந்தியே நிலைபெற்றிருக்கும். பெண்களுடைய கண்களிலே பிணங்குங் குணமே யிருக்கும். எ-று. (கரு)

தொட்டு மன்னன் சுடர்முடி சூடிய
மட்டு மேக்கமவ் வாணகர்க் கில்லையூ
ணட்டுண் பாரன்றி யாதுல ரின்மையா
லிட்டு ணுக்குறை யென்பதொ ரேக்கமே.

இ-ள். அந்த அரிச்சந்திரமகாராசன் அரசாளுகையைத் தொடங்கி, பிரகாசங்கொண்ட திருமுடி சூடிக்கொண் டிருக்குமளவும் ஏக்கமென்பது அந்த ஒளியால்மிக்க பட்டணத்திற்கு இல்லை. சமைத்துண்கிறவர்களே யல்லது, பிச்சைக்கு வருகிறவர்க ளில்லாமையினலே, பிச்சையிட் டுண்ணுத குறையே யுண்டென்பதான் இவ்வேக்கமொன்றுமே அந்தப் பட்டணத்தி லுண்டு. எ-று. (கசு)

கற்றி டுங்கொலைக் கண்கண்டு காமுகர்
முற்றி டும்மையு மோட்டிளங் கொங்கையா
லிற்றி டும்மருங் கென்னுமி டும்மையு
மற்றி டும்மையம் மண்டலத் தில்லையால்

இ-ள். எப்போதும் கொலைத்தொழிலைக் கற்றுள்ள பெண்களின்கண் களைக்கண்டு காமுகரான புருஷர்கள் நிரம்பக்கொள்ளுகிற துன்பமும், உயர்ந்த இளமைப்பருவத்தை யுடைய கொங்கைகளின் கனத்தாலே இடையானது ஒடிந்துபோகுமென்பதான துன்பமுமே அந்நகரில் உண்டேயன்றி, வேறுதுன்பம் அவ்விடத்தி லில்லை. எ-று. (கஎ)

இபம ருப்பெனக் கொங்கைசு மந்திடை
தபமு ரிந்திடுந் தக்கதன் றீதென
வுபய பாதத்திற் கொண்பொற் சிலம்பிடு
மபய மன்றி யபயமற் றில்லையே

இ-ள். யானைக்கொம்பு போல்வனவான கொங்கைகளைத்தாங்கிஇடையானது கெடுதலாக ஒடிந்துபோகும் தகுதியானதல்ல இதுவென்று இரண்டு

கால்களுக்கும் அழகிதான பொன்னாலாகிய சிலம்புகளிட்டு ஒலிப்பதான அப யக்குரலேயல்லாமல் அங்கு வேறு அபயக்குரலில்லை. எ-று.

அபயக்குரல் - பயமில்லாமையை வேண்டுங் குரல். (கஅ)

நிறையுந் தாமரை நீட்டத்தி னற்புனற்
சிறையு மன்றிச் சிறைபிறி தில்லையால்
பிறையு மென்முலைப் பேதையர் சிற்றிடைக்
குறையு மன்றிக் குறைபிறி தில்லையே.

இ-ள். மாட்சிமைதங்கிய தாமரைமலர்களி னீட்சியினையுடைய நல்ல நீர்க்குளங்கள் முதலானவைகளுக்குச் சிறைசெய்வதே யன்றி. வேறுசிறை செய்ததில்லை. சந்திரப்பிறையும். மெல்லிய தனங்கள்வாய்ந்த பெண்களினு டைய சிறிய இடைகளும் தேயுமேயல்லது வேறு தேய்வில்லை. எ-று.

சிறைசெய்தல் - காவல்செய்தல். (கக)

பொருந்தி மானும் புலியும் புனலுட
னருந்தி வாழு மொருதுறை யன்பினாற்
பருந்தும் பைங்கிளி யும்மொரு பஞ்சரத்
திருந்து வாழு மிரவும் பகலுமே.

இ-ள். ஒருதுறையிலே மானும்புலியுந் தண்ணீரைச் சேர்ந்து குடித் துக் கூடிவாழ்வதாயிருக்கும். பருந்தும் பச்சைக்கிளியும் இரவும்பகலும் அன் புடனே ஒரு கூட்டிலே கூடியிருந்து வாழ்வதாயிருக்கும். எ-று. (உ0)

பொருளும் வேத புராணமும் புந்தியிற்
றெருளுந் தான தியாகமும் யாகமு
மருளின் மாதவ மும்வள மும்முயிர்க்
கருளுந் தோன்றுறு மந்நக ரத்தினே.

இ-ள். அந்த நகரத்திலே. அர்த்தந்தெரிதலும், வேத புராணங்கள் பாராயணஞ்செய்தலும். அதனாலே புத்தியிலேதெளிவுடைத்தா யிருத்தலும், தானங்கொடுத்தலும், தியாகஞ்செய்தலும், யாகங்கள் பண்ணுதலும், மயக்க மில்லாத பெரிய தவங்கள் செய்தலும், சம்பத்துக்கொண்டிருத்தலும், ஜீவகா ருண்ய முண்டாயிருத்தலுமே விளங்கிக்கொண்டிருக்கும். எ-று. (உக)

மேற்படி வேறு.

அத்திருந கர்க்குணிரை யாயிரம ணித்தூண்
பத்திகளு மத்தொகைய பைம்பொனுறு கோயிற்
சித்திரம ணித்தவிசின் முத்தணிசெ ழும்பொற்
சத்திரநி ழற்றவரிச் சந்திரனி ருந்தான்.

இ-ள். அடிப்பட்ட திருநகரத்திலே வரிசையாக ஆயிரம் ரத்நத்தூண் களுள்ள மண்டப வரிசைகளும், அந்த ஆயிரமாற்றுப் பசும்பொன்னாலே செய்திருக்கிற அரண்மனையாக அமைந்திருப்பதி லநேக சித்திர விசித்திரங் களாக இரத்தினங்கள் பதித்திருக்கிற சிங்காசனத்தின்மேலே முத்துக்களாலே

அலங்கரித்திராநின்ற செழுமையுடைய பொன்மயமான பூச்சக்கிரக்குடை நிழல் செய்ய, அதன் கீழே அரிச்சந்திர மகாராஜன் கொலு விருந்தான். எ-று. (உஉ)

என்னதிஃ தென்னதிஃ தென்றிருகை கூப்பி
மன்னவரி டுந்திறைகள் வந்திளித ளப்பத்
துன்னுமறை யோர்கள்பலர் சோதிடமு ரைப்ப
மன்னுகவி வாணர்பலர் மங்கலமி யம்ப.

இ-ள். ஒருபுறத்திலே, என்னது இவ்வளவு. என்னது இவ்வளவென்றுசொல்லி இரண்டுகைகளையுங் குவித்துக்கொண்டு அரசர்கள் கொடுக்கவேண்டிய பொருள்களைக் கொண்டுவந்து சந்தோஷமாக அளவு செய்து கொடுத்துக்கொண் டிருக்கவும், ஒருபக்கத்திலே நெருங்கின வேதப்பிராமணர்கள் பலரும்வந்து பஞ்சாங்கமுதலான பொருத்த நிமித்தங்கள் சொல்லிக்கொண் டிருக்கவும். மற்றொருபுறத்திலே நிலைபெற்ற கவி வல்லவர்கள் பலருங்கூடிச் சுபமான கவிகள் பாடவும். எ-று.

இதுமுத லொன்பது பாடல்கள் * குளகம். (உ௩)

முந்தையிர விக்குல முதற்றலைமை யோடும்
வந்தகுல மந்திரிகண் மண்டலிகர் சூழச்
சந்திரமு கத்தமணி யக்கன த னத்துச்
சுந்தரம டந்தையர்சு ழற்றிபணி மாற.

இ-ள். பழமையான சூரியகுலந் தோன்றிய நாள்முதல் பிரதானமான சிறப்புடனேகூடி வந்திருந்துள்ள சிரேஷ்டகுல மந்திரிகளும், மண்டலிகர்களும், ஒருபுறத்திலே சூழ்ந்திருக்கவும், இருபக்கத்திலும், சந்திரன் போலு முகமும், பொன்மலைபோலும் கனமான தனங்களையுமுடைய சௌந்தரியமுள்ள பெண்கள், வெண்சாமரங்களைச் சுழற்றிச்சுழற்றி வீசுகிற செய்கைகள் மாறிமாறி நடந்து கொண்டிருக்கவும். எ-று. (உ௪)

ஆடகம ணிக்கடக கைத்தலம ழுந்த
மாடகமு றுக்குமம டந்தையர்கள் பாடப்
பாடகப தப்பரிபு ரத்தொலி யெழும்ப
நாட்கம டந்தையர சைந்துநட மாட.

இ-ள். பொன்னினாலே செய்து ரத்தினங்கள் பதித்திருக்கிற கங்கணங்களணிந்த கை பதிய முறுக்காணிகளை முறுக்கி மடந்தைப் பருவப் பெண்கள் பாடிக்கொண்டிருக்கவும், ஒருபுறத்திலே பாடகங்களணிந்த கால்களிலே சிலம்போசைகள்கிளர நடனஞ்செய்கிறபெண்கள் அசைந்தசைந்து நடனஞ் செய்யவும். எ-று. (உ௫)

ஆகமிசை தங்குமணி யாரமும வற்றின்
பாகமிசை சோதிவிரி பன்மணியு மின்னக்

* "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்"—என்பது சூத்திரம்.

கோகனக மங்கையொடு கொற்றவையு மம்பொன்
வாகுவல யங்களுமணிப்புயமி லங்க.

இ-ள். மார்பின்மேலே தங்கியிருக்கிற இரத்தின மாலைகளும். முத்து மாலைகளும், அவைகளின் நடுவே சோதிகளைப் பரப்புகின்ற பலவகை இரத்தினங்களும் பளபளென்னவும். செந்தாமரைமலரிலிருக்கிற லட்சுமியும், வீரலட்சுமியும் அழகிதான பொன்னுலாகிய அழகு கொண்ட கேயூரகங்களும் அழகிய தோள்களிலே விளங்கவும். எ-று. (உசு)

சோமனைமு டித்தருளு மாபதிசு டாத
காமனிவ னென்னவொளிர் கட்டழ கிலங்க
மாமகர குண்டலம ணித்திருவில் வீசச்
சேமவுடை வாளது திருக்கையிலி லங்க.

இ-ள். சந்திரனைச சடைமேற் சூடிக்கொண்டிருக்கிற பார்வதி நாயகனை பரமசிவனாலே எரிக்கப்படாத மன்மதன் இவனென்றெனென்று சொல்லும்படி பிரகாசிக்கிற பேரழகு விளங்கவும். பெரியமகரகுண்டலங்கள் இரத்தினங்களினுடைய சிறந்தகாந்திகளை வீசவும். உயிர்க்காவல்செய்கிற உடைவாளானது திருக்கையிலே விளங்கவும். எ-று. (உஎ)

துடிப்படுக ரத்தனடி யாத்தொழுது நீற்றுப்
பொடிப்படவ டுப்படுக றுப்புநுதல்பொங்க
முடித்தலையு றத்திசைமு கத்தரச ருய்த்த
வடுப்படுக றிப்பிருமலர்க்கழல்வி ளங்க.

இ-ள். உடுக்கை தங்கின கையையுடைய சிவனடியார்களை வணங்கி விபூதி தரித்தந்தோன்ற வடுவாகிய கறுப்பானது நெற்றியிலே விளங்கவும் எட்டுத்திக்குகளிலு முள்ள அரசர்கள் கிரீடமணிந்த தலைகள்பட (அரிச்சந்திர மகாராஜன் பாதங்களில் வீழ்ந்து) வணங்குதலினாலே, (அக்கிரீட) வடுவாகிய கறுப்பு இரண்டுமலர்போலும் பாதங்களில் விளங்கவும். எ-று.

அரிச்சந்திரமகாராஜன் சிவனடியாரிடத்தும், எல்லாப் பாவங்களையும் போக்கவல்ல விபூதியி னிடத்தும், மிகப் பற்றுடையவனென்று இச்செய்யுளால் விளங்குகிறது. சர்வதாகாலமும் விபூதியையள்ளி நெற்றியிலே பூசுதலினாலுண்டாகிய வடுத்தோன்றுமென்பார் "பொடிப்பட வடுப்படு கறுப்பு நுதல் பொங்க" என்றார்.

சிவனடியார்களின் பெருமையினை.

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி, யுவராதே யவரவரைக்கண்ட போது உகந்தடிமைத் திற நினைந்தங் குவந்து நோக்கி, இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லியிரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக். கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே."—என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகத்தா னறிக.

விபூதி யணிதலினு லுண்டாகும் சிறப்பினை

"வேதத்தி லுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்த ருவதுநீறு புன்மைத விர்ப்பதுநீறு
யோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந் திருவாலவாயான்றிருநீறே." —என்னும்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரப்பதிகத்தா னறிக.

காலமது கண்டுகதி ருஞ்சசியு மொத்தெண்
பாலளவு நீள்கதிர்ப ரப்புவன போலக்
கோலமுக நின்றொளிகு லாவவதன்மீதே
சாலமணி மேவுமுடி நின்றொளித யங்க.

இ-ள். சமயந்தெரிந்து சூரியனுஞ் சந்திரனும் ஒருசேரக்கூடி எட்டுத் திக்குகள் முழுதும் நீண்டகிரணங்களை விரிக்கிறதுபோல. அழகிதான திருமுகத்திலே நிலைகொண்டு ஒளிவிளங்கவும். அந்த முகத்துக்குமேலே மிகவும் இரத்தினங்கள் பதித்திருக்கிற கிரீடத்திலே நிலைகொண்டு ஒளிவிளங்கவும்.

கண்ணக நிறைந்திமை கடந்துகடை தாவி
மண்ணகம டங்கலுமடைந்துயிர்கள் வாழ
விண்ணளவு தாவிமிகு வெவ்வகலிக ரபபத்
தண்ணளி நெடுங்கடலி டங்கொடுத மைப்ப.

இ-ள். குளிர்ந்துள்ள கிருபையானது. இரண்டுகண்களுக்குள்ளும் நிறைவாய்இமைகளுக்குமேற்பட்டுக்கடைக்கணகளிலும் தாவுதலாய் இந்த மண்ணுலகமுழுதும் வியாபித்து உயிர்களெல்லாம் சுகத்தையடையவும், ஆகாயத்தளவுஞ்சென்று மிகுதியாகிற வெவ்விய கலிபுருஷன் மறைந்துபோகவும், நெடிய கடலைப்போல் விசாலங்கொண்டு பெருகவும். எ-று. (௩௦)

வந்தெறிப யோததியின் மண்டுதிரை வாணிற்
சிந்துநுரை யூடுதிகழ் செங்கதிரக டுப்பச்
சந்தமுலை மாதரிடு சாமரையி னூடு
சுந்தரம ணிப்பணிது லங்கிடவி ருந்தான்.

இ-ள். கரைமேலே வந்து மோதுகிற கடலிலே நெருங்கின அலைகள் ஆகாயத்திலேவீசுகிற நுரைக்குள்ளே விளங்குகின்ற இளஞ்சூரியனை ஒப்பாக, அழகான தனங்களையுடையபெண்கள் வீசுகிற சாமரங்களுக்குள்ளே அதிகரமணீயமான ரத்நாபரணங்கள் விளங்க அரிச்சந்திரமன்னன் அரசிருந்தான்-

நகரச்சிறப்பு முற்றிற்று.

ஆக விருத்தம் - ௩௪.

—*—

பரமபதிதுணை.

முதலாவது

விவாக காண்டம்.

கலிநிலைத்துறை.

இருந்த காலையி லியாவர்க்கும் விடைகொடுத் தருளித்
திருந்து மாமுடி மன்னவன் சிலருட னிருப்பப்
பொருந்து நன்னெறிப் புண்ணிய தீர்த்தங்க ளாடி
யருந்த வத்தின ரனேகர்வந் தந்நக ரடைந்தார்.

இ-ள். அவ்வாறிருக்கிற சமயத்தில் எல்லோருக்கும் உத்தரவுகொடுத் தனுப்பிவிட்டு, செவ்வையான பெருமைபொருந்திய கிரீடமணிந்த அரிச்சந்திரமகாராசன் சிலபேருடனே அச்சபாமண்டபத்தி லிருக்கும்போது, பொருத்தமுள்ள நன்மார்க்கத்துக்குக் காரணமான புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து அருமையான தவத்தையுடைய அனேக முனிவர்கள் வந்து அந்நகரத்திலே கூடினார்கள். எ-று. (க)

சடையு முண்டமுஞ் சிகையு நுண் டாதுகற் றோய்ந்த
வுடையு மாமர வுரிகளு முடுத்தழ கிருந்த
விடையுந் தாழ்சிறு பண்டியு மெய்த்திளைத் தோய்ந்த
நடையும் வாழ்த்தலுஞ் சபித்தலு முந்துறு நாவும்.

இ-ள். சடைத் தலைகளும், மொட்டைத் தலைகளும், குடுமித்தலைகளும், மெல்லிதான காவிக்கல்லிலே தோய்த்திருக்கிற வஸ்திரங்களும், பெரியமர வுரிகளும்உடுத்தி, அழகு குடிகொண்டிருக்கிற இடைகளும், தொங்குகிற சிறியவயிறுகளும், ஆயாசமாயிளைத்து நடக்கிற நடைகளும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறதும், கோபித்துச் சாபங்கொடுக்கிறதுமாகிய முந்திவருகிற நாக்களும்.
இதுமுதல் மூன்று பாடல்கள் குளகம். (உ)

நூலு மார்பமு நூலிடைத் திகழ்ந்துற நுடங்குந்
தோலு மங்குலித் தருப்பையுந் துளங்குமொண் செவியி
னூலும் யாககுண்ட லங்களு நான்மறை நெறிமுக்
கோலு மேந்திய குடைகளுங் குண்டிகைக் கரமும்.

இ-ள். முப்புரிநூலும், மார்பும், அந்த முப்புரிநூலினிடமாக விளங்கி மிகவும் அசைகின்ற மான்றோலும், விரல்களிலே தர்ப்பைமோதிரமும், அசைகிற அழகிதான காதுகளிலே தொங்குகிற யாகதீட்சிதரென்பதாகிய குண்டலங்களும், நான்கு வேதமார்க்கங்களுக் கொத்த திரிதண்டங்களும் தாங்கிக்கொண்டுவருகிற குடைகளும், கமண்டலங்கள் கொண்டிருக்கிற கைகளும்.

இன்ன கொண்டுள விருடிக ளியாவரு மெய்தி
யன்ன சத்திர மணைந்துபுக் களையர் வுயிர்த்து
முன்னம் வாரிதி யார்ப்பெடுத் தாலென முழங்கி
மன்னர் மன்னவன் மாளிகை வாயிலில் வந்தார்.

இ-ள். இவ்வகைக ளெல்லாங் கொண்டிருக்கிற முனிவர்களெல்லோரும் வந்து அந்த நகரத்திலுள்ள அன்ன சத்திரத்திலே போய்க் கூடினவர்களாய் ஆயாசந்தீர்ந்து, முன்னே கடல்முழங்கக்கொண்டு வந்தாற்போல முழங்கிக்கொண்டு, அந்த ராசாதி ராசனை அரிச்சந்திரனுடைய அரண்மனை வாயிலுக்குள்ளே வந்தார்கள். எ-று. (௪)

வந்த மாதவ ரோதையம் மன்னவன் கேட்டுச்
சிந்தை யிற்பெரு மகிழ்வரச் சென்றெதிர் கொண்டே
யெந்த மாதவ மின்றுவந் தெய்திய தென்று
வந்த மாதவ ரடிமலர் முடியுறத் தொழுதான்.

இ-ள். அப்படி வந்து கூடின மகரிஷிகளுடைய சத்தத்தை அந்த அரிச்சந்திர மகாராசனானவன் கேட்டு மனதிலே பெரிதான சந்தோஷமுண்டாகப்போய் எதிர்கொண்டு நான்செய்த எந்தப் பெரிதான தவப்பலனானது இப்போதுவந்து சித்தித்ததென்று அந்த மகரிஷிகளுடைய பாதங்களைத்தன் சிரசிலே பொருந்தும்படி வணங்கினான். எ-று. (௫)

தொழுத காலையி லாசிக ளருந்தவர் சொல்லி
முழுது மாமறை முழங்கிட மண்டப முற்ற
வெழுது மாமணி யாதன மவ்வவர்க் கீந்து
பழுதிலா மொழி மன்னவ னிருந்திவை பகர்வான்.

இ-ள். அவ்வாறரசன் வணங்கினபோது அவ்வருமையான தவரிஷிகள் ஆசீர்வாதஞ்செய்து வாய்முழுதும் பெரிய வேதங்கள் முழங்குவதாகச் சபா மண்டபத்திலே வந்துகூடவே; ஒளிசெய்கிற பெரிய ரத்நசிங்காசனங்களை அந்தந்த ரிஷிகளுக்குத் தக்கபடி கொடுத்துக் குற்றமில்லாத உபசார வார்த்தைகளையுடைய அரிச்சந்திரமகாராசன் தன்னுடைய சிங்காசனத்தி லிருந்துகொண்டு இந்த வார்த்தைகள் சொல்லுகிறான். எ-று. (௬)

எந்தத் தேயங்கள் கண்டனி ரெத்திசை புகுந்தீ
ரெந்தத் தீர்த்தங்க ளாடினீர் புதுமையென் கண்டீர்
முந்தக் கூறுமி னென்றரிச் சந்திரன் மொழிய
வந்த காலையி லரசனுக் கருந்தவ ருரைப்பார்.

இ-ள். ஓ மகரிஷிகளே! நீங்கள் எந்தெந்தத் தேசங்களைக் கண்டீர்கள்? எவ்வெத்திசைகள் போனீர்கள்? எந்தெந்த தீர்த்தங்களிலே முழுகினீர்கள்? அங்கங்கே என்ன ஆச்சரியங்களைக் கண்டீர்கள்? அவைகளை முன்னே எனக்குத் தெரியச் சொல்லுங்களென்று அரிச்சந்திரமகாராசன் கேட்க, அப்போது அரிய தவத்தினை யுடைய முனிவர்கள் அரசனுக்குச் சொல்லத் தொடங்கினார்கள். எ-று. (௭)

அங்கண் மாநிலத் தரியகன் ஞேசிநாட் டகத்துப்
பொங்கு கண்டகி யென்பதோர் புண்ணிய தீர்த்த
மங்கி யாம்புகுந் தாடிநின் னருண்முகங் காண
விங்கு வந்தன முன்னமுங் கேட்டியென் றிசைப்பார்.

இ-ள். அழகிய இடத்தையுடைய பெரிய உலகத்திலே அருமையானகன்ஞேசி நாட்டிலே அலைகள் பொங்குவதான கண்டகி என்னும் ஒரு புண்ணிய தீர்த்தமுண்டு; அந்தத்தீர்த்தத்திற்கு நாமெல்லாரும்போய் அதில் மூழ்கி, உம்முடைய கிருபாசாரமுள்ள திருமுகத்தைக் காண்பதற்கு இங்கே வந்தோம். (ஓ அரசர்க்கரசனே!) இன்னமும் ஒரு அதிசயமுண்டு; அதையுங்கேளுமென்று முனிவர்கள் சொல்லுகிறார்கள். எ-று. (அ)

அந்த நாட்டினிற் கன்னமா புரிநக ராள்வோன்
சந்தி ரன்வழிச் சந்திர தயன்றவம் புரிந்து
கந்த வார்சடைக் கடவுடவ் வரத்தினாற் பயந்த
தந்த மாமுலைத் தையல்சந் திரவதி யென்பாள்.

இ-ள். அந்தக்கன்ஞேசி நாட்டிலே கன்னமாபுரியென்னும் பட்டணத்தை யாளுகிற சந்திரனுடைய குலத்திலேபிறந்த சந்திரதயனென்னும் அரசனானவன் அனேக தவங்களைச் செய்து (கொன்றைப்பூமணம்) பரிமளிக்கின்ற நீண்டசடைகளையுடைய பரமசிவனுடைய வரத்தினாலே பெற்றயானைத்தந்தங்கள்போலும் பெரியதனங்களையுடைய (அழகால்மிக்க) ஒருபெண் சந்திரவதியென்பவள். எ-று. (௯)

மண் மடந்தையர் தம்முளும் வாசவ னுறையும்
விண்மடந்தையர் தம்முளு நிகரிலா விறல்வேற்
கண்மடந்தைதன் கருங்குழ லருந்ததிக் கற்பிற்
கெண்மடங்குகற் புடையளிந் திரையினு மெழிலாள்.

இ-ள். பூலோகத்திலுள்ள பெண்களிலும், தேவேந்திரன் வாசஞ்செய்கிற தேவலோகத்திலுள்ள பெண்களிலும் ஒப்பாகிறவர்க ளில்லாத வெற்றி வேல்போலுங் கண்களையுடைய பெண்ணானவள். பின்னும் குளிர்ந்த கருமையான கூந்தலையுடைய அருந்ததியினுடைய பதிவிரதா குணத்திற்கு எட்டுப் பங்கு அதிகமான பதிவிரதா சிரோமணியானவள். மகாலட்சுமியைப் பார்க்கிலும் மிகுந்த அழகையுடையவள். எ-று.

இனி, அடியில்வரும் எழு பாடல்களால் அவளழகின் வரலாறுரைக்கப்பட்டது. (௧௦)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முகிலைவென் றறலைக் கடிந்துசை வலத்தை
முனிந்துபொற் கடுக்கையை முடுக்கி
பகினறும் புகையுந் தகரமும் புழுகு
மளைஇப் பனி நீரிலே நனைந்து

பகலவற் குடைந்த வசையினால் வெள்கிப்
பலமலர்த் தாரணிந் தவனோ
டிகல்செயக் கருதி யிருடிரண் டாலித்
தெழுந்தன செழுந்தடங் குழலாள்.

இ-ள். மேகத்தைவென்று, கருமணலையும் ஒதுங்கத்தள்ளி, பாசியையும் வெறுத்து, அழகிய கொன்றைக்காயையும் துரத்தி, அகிலினது நல்ல வாசப் புகையும் மயிர்ச்சாந்தமும் புழுகும் பொருந்துதலாய், பனிநீரிலே நனைதலுமாய், முன்னே சூரியனுக்குத்தோற்ற பழிப்பினாலே நாணமுண்டாகி இப்போது பலமலர்களாலும் புனைந்தமாலையையணிந்து அந்தச் சூரியனுடனே யுத்தம்பண்ணுதற்கு இருளானது திரண்டு சந்தோஷித் தெழுந்தாற்போல்வதான செழுமையான நீண்ட கூந்தலையுடையவள். எ-று.

பயிர்கடிந் தனவும் பட்டமா மரமும்
பண்டைநா ளுக்கவெள் ளென்பு
முயிர்பெறற் பொருட்டுப் பனிதமும் பாலு
மொழுகிய தேனுமா ரமுதுங்
குயிலினிற் குரலுங் கிளியினின் மொழியுங்
குழலும்யா ழுங்குழைத் திழைத்து
மயிலிறற் சாயல் வாணுத றனக்கு
மலரயன் வகுத்ததென் மொழியாள்.

இ-ள். தீய்ந்தபயிர்களும், பட்டுப்போய்கிடக்கிற பெரியமரங்களும், முன்னாளிலே உடம்பினின்றுங் கழிந்துகிடக்கிற வெள்ளை எலும்புகளும் (இவள் பேசுதலாலே) உயிருண்டாகும்படி; கண்டசருக்கரையும் பாலும் ஒழுகுகின்ற தேனும் அரிய அமுதமும் குயிலினிடத்தில் தொனியும் கிளியினிடத்திலே பேச்சும் புல்லாங்குழலி னிசையையும் வீணையினிசையையும் குழப்பிக்கூட்டி, மயில்போலும் அழகிய சாயலையுடைய ஒளிபொருந்திய நெற்றியையுடைய அந்தப் பெண்ணுக்குத் தாமரைமலரிலிருக்கிற பிரமதேவன் செய்துள்ள நல்லிசைபொருந்திய வசனத்தை யுடையவள்.எ-று.

பானிதம் பனிதமென்றாயது குறுகல் விகாரம். (௧௨)

கடலினைக் கயலைக் கணையைமென் பிணையைக்
காவியைக் கருவிள மலரை
வடுவினைக் கொடிய மறலியை வலையை
வாளைவென் றறவுநீண் டகன்று
கொடுவினை குடிகொண் டிருபுறந் தாவிக்
குமிழையுங் குழையையுஞ் சீறி
விடமெனக் கருப்புற் றரிபரந் துன்கை
வேலினுங் கூரிய விழியாள்.

இ-ள். கடலையும் கெண்டைமீனையும் அம்பையும் மிருதுவா யிருக்கிற மானையும் நீலமலரையும் கருவிளம்பூவையும் மாவடுவின் பிளப்பையும் கொடுமையைக்கொண்ட யமனையும் வலையையும் வாளையும் வெல்லுதற்காக நீட்சி

யாம் விசாலமுள்ளதாய், கொடியசெய்கையானது குடிகொண்டிருப்பதாய், இரண்டு காதுகளினிடத்திலும் தாவுதலையுடையதாய், குமிழம்பூவையொத்த மூக்கையும், குண்டலமணிந்த காதுகளையுங் கோபிப்பதாய், விடம்போற் கறுப்புள்ளதாய் செவ்வரிகள் பரவி உன் கையிலுள்ள வேலைப்பார்க்கிலும் கூர்மையைக்கொண்ட கண்களை யுடையவள். எ-று. (௧௫)

இருப்பைவிட் டயனார் நெடிதுநாட் டவஞ்செய்
திருகையும் சிந்தையும் வருந்திச்
செருப்பையின் றிறந்த மதனனைச் சூட்டத்
திருமுடி வேண்டுமென் றியானை
மருப்பையுங் கும்பத் தலத்தையுஞ் சக்ர
வாகத்தை யும்வட கனகப்
பொருப்பையும் படைத்துத் தெளிந்தபின் படைத்த
புளகித பூரண முலையாள்.

இ-ள். பிரமனானவன் தானிருக்குமிடத்தை விட்டுப்போய் நெடுங்காலந் தவத்தைச்செய்து தன் இரண்டு கைகளும் மனமும் வருத்தங்கொண்டு சிவபெருமானோடு சண்டைசெய்து இறந்துபோன மன்மதனுக்குத் திருமுடிசூட்டுதற்காகத் திருமுடி வேண்டுமென்று நினைத்து, யானைக்கொம்பையும் அந்த யானையினது கும்பத்தலத்தையும் வட்டவடிவாகிய சக்கரவாளகிரியையும் மேருமலையையும் சிருஷ்டித்துக் கைதேர்ந்தபின்பு சிருஷ்டித்த புளகாங்கிதம் நிரம்புதலான தனங்களையுடையவள். எ-று.

பயின்றென்பது - பையின்றெனப் போலியாயது. (௧௬)

அறந்திகழ் தவமு மகிலமு மிதனா
லழியுமென் றயன்படைத் திலனோ
சிறந்தவேல் விழியை முன்படைத் தயர்ந்து
செங்கரஞ் சேர்ந்ததோ திகைத்து
மறந்ததோ கரந்து வைத்ததோ களப
வனமுலைப் பொறைசுமந் துருகி
யிறந்ததோ வுளதோ வில்லையோ யினிமே
லெய்துமோ வறியொணா திடையே.

இ-ள். தருமம் விளங்குவதான தவமும் மற்றையாவும் இந்த இடையினாலே அழிந்துபோகுமென்று நினைத்துப் பிரமதேவன் உருவமுண்டாக்காமல்விட்டானோ! அவனுடைய சிவந்தகைகள் சிறப்புள்ள அந்தவேல்போலுங் கண்களை முன்னே சிருஷ்டித்துச் சோர்ந்து இளைத்துப்போயினவோ! அல்லது; மயங்கி அக்கைகள் மறந்துபோயினவோ! அன்றி அவனுருவிலேயே மறைத்துத்தான் வைத்திருக்கின்றதோ! சந்தனச்சேறு பூசலான அழகிய தனங்களினுடைய கனத்தைத்தாங்கி உருகுதலாய் இறந்துபோயிற்றோ! அல்லது, இறவாமலிருக்கின்றதோ! முழுதும் இல்லையேயோ! அல்ல தினிமேலுண்டாகுமோ என்பதாதியவற்றைத் தெரிந்துசொல்ல வியலாது எ-று.

செருக்குமோ கனச்செந் திருமக ளுறையுஞ்
சேயிதழ்த் தாமரை மலரும்
பெருக்குமா மறைநூ லுரைத்தநான் முகத்தோன்
பிறந்தசெங் கமலமும் வெள்க
முருக்குமாம் பலுமென் காவியுங் குமிழு
முல்லையும் வள்ளையு மலர்ந்து
திருக்கிளர் கமல மிதுவெனச் செவ்வி
திகழ்வெயர் செறிதிரு முகத்தாள்.

இ-ள். களிப்பினையுடைய திருமாலையு மயங்கச்செய்வதான வசீகரத்தையுடைய செவ்விய லட்சமிதேவிவாசம்பண்ணுகின்ற சிவந்த இதழ்களையுடைய தாமரைப்பூவும், விரிவான பெருமையையுடைய வேதசாஸ்திரங்களைச் சொன்ன சதுர்முகப்பிரமதேவன் உற்பத்தியான செந்தாமரைப்பூவும்நாண, முருக்கம்பூவும், செவ்வல்லிப்பூவும், மிருதுவானநீலப்பூவும், குமிழம்பூவும், முல்லையரும்பும், வள்ளைக்கொடியும் விகசிதமாய், அழகு விளங்குகின்ற தாமரைப் பூவும் இதுவென்றுசொல்ல, அழகுவிளங்குவதான வியர்வைபொருந்துகின்ற திருமுகத்தையுடையவள். எ-று.

இதழ்-வாய்-கண்-நாசி-பல்-காதுகளையுடைய தாமரைமலர்போலு முகமென்று கொள்க. எனவே, முருக்கம்பூவையொத்த இதழும், செவ்வல்லி மலரையொத்தவாயும், நீலோற்பல மலரையொத்த கண்களும், குமிழம்பூவையொத்த மூக்கும், முல்லைமலரை நிகர்த்த பற்களும் வள்ளைப்புட்பத்தை யொத்த செவிகளுமுடைய ஒரு முகமென்க. (௧௬)

கடிகமழ் மலருங் கலவையு மழகுங்
கதிர்மணிப் பணிகளுஞ் சுமந்து
கொடியென விசைந்து நிறைவுறப் பூத்த
கொம்பென வசைந்தசைந் தொல்கி
யடியிணைப் படியிற் படப்பொறு தஞ்சி
யன்புறு கடகரிப் பின்போம்
பிடியெனக் கன்னி நடைபயி லன்னப்
பெடையென மடநடை பெயர்வாள்.

இ-ள். வாசனை பரிமளிக்கின்ற பூவும், கூட்டுவெருக்கச் சந்தனமும், அழகும், ஒளியையுடைய ரத்நாபரணங்களுந்தாங்கி ஒரு கொடிபோல்வாளென்று சொல்லுதற்கு நிகராய் நிரம்பமலர்ந்த கொம்புபோல் துவண்டுதுவண்டு நுடங்கிக் கால்களிரண்டும் பூமியிலே படுவதற்குச் சகியாமல் வருந்தி, ஆசை கொண்ட மதயானைக்குப் பின்னே செல்லுவதான ஒருபெண் யானைபோலவும் இளமையான நடைநடக்கிற பெட்டை யன்னத்தைப்போலவும் மிருதுவான நடைநடப்பாள். எ-று. (௧௭)

அன்னதன் மையளை யமிர்தினிற் பிறந்த
வணங்கபி டேகத்தை யனந்த
மன்னர்தந் தமக்கு மணஞ்செயக் கருதி
மணமொழிந் தவர்க்கெலாங் கொடாது
முன்னமெம் பெருமான் மொழிந்தவர்க் கன்றி
முடிக்கிலேன் கடிமண மென்னச்
சொன்னதோர் மொழியுங் கேட்டன மவணின்
றோள்களுக் கிசைந்தவ ளென்றார்.

இ-ள். அப்படிப்பட்டவளை, அமுதத்திலே தோன்றின லட்சிமிக்குஞ்சிறந்த திருமுடிபோல்வாளான சந்திரவதியை, அனேகம் அரசர்கள் தங்கள்தங்களுக்குக் கலியாணஞ் செய்துகொள்ள வெண்ணிக் கலியாணத்தைக்குறித்து வந்து பேசினவர்களுக்கெல்லாம் கொடாமல், முன்னே எமதுகடவுள்சொன்னவனுக்கே யல்லாமல் கலியாணஞ்செய்து கொடேனென்று சொன்ன ஒரு உறுதி வார்த்தையுங் கேட்டிருக்கிறோம், அந்தப்பெண்ணானவள் உன்னுடைய தோள்களைக் கூடத்தகுந்தவளென்று கூறினார்கள். எ-று.

சந்திரதயவரசன் புத்திரப்பேற்றை விரும்பிப் பெரிதுந் தவங்கிடந்த போது, சிவபெருமான் அவன்முன் றோன்றி, "அரச! நீயாற்றிய தவத்துக் குளமகிழ்ந்தோம். நினக்கு, பிறக்கையிலேயே மாங்கல்ய சூத்திரத்தோடுங் கூடிய ஒரு பெண்மகவு தோன்றும் ஆயி னம்மாங்கல்யம் பிறர் கண்ணுக்குத் தோற்றுவதன்று. அதனைத் தெரிந்துகூறு முத்தமனெவனோ அவனே அவட் குரியகொழுநனாவன். அவ்வொருபெண்ணால் நீபெரிதுங்கீர்த்தியடைவை" என்று வரமளித்துச் சென்றனராதலின், அப்பெருமானது கட்டளைப்படி நடப்பேனென்பார், "முன்னமெம்பெருமான் மொழிந்தவர்க்கன்றி முடிக்கிலேன் கடிமணம்" என்றாரென்று கூறினர். (கஅ)

பாதக மென்னக் கடிந்தகா மத்தீப்
பங்கமுற் றுறைவிடம் பெறாது
மாதவ ருரைத்த மொழிவழி
மன்னவன் செவிவழி புகுந்தாங்
கூதைவந் தலைக்கும் வெளிவிளக் கதனி
னுளமலை வுறவலைத் தோங்கிக்
காதலங் கொழுந்து வளர்ந்திட வுருகிக்
கனலினி விடுமெழு கானான்.

இ-ள். முன்னே பாவமென்று நீக்கியிருந்த காமாக்கினியானது பங்கப்பட்டுத்தனக்கிருக்கஇடங்கிடையாமல் மகரிஷிகள் கூறியசொல்லே வழியாக நடந்துவந்து, அரிச்சந்திரனுடைய காதாகிய நிலைவாயிலிலே நுழைந்து அங்கே காற்றுவந்துமோதி யசக்குவதான வெறுவெளியிலே வைத்த விளக்கைப் போல் அவன் மனமலைய அலைச்சற்பட்டு அயர்ந்து ஆசையாகிய (மரத்துக்குக்) கொழுந்துதளிர்த்துவளர அரிச்சந்திரன் நெருப்பிலிட்டமெழுகுபோல் மனமுருகினான். எ-று. (கக)

சந்திர கலையா னெக்குநீர் பொழிவ
சந்திர காந்தமே யல்லா
லந்தர சாதிச் சிலையினுண் டாகா
தவளிவன் மனைவியென் றயனார்
முந்தவே விதித்த விதியினா லடங்கா
மோகமுந் தாகமு மிகுந்து
புந்திகெட் டறிவு நிறைபொறை தோற்றம்
போக்கினான் யாக்கையுந் தளர்ந்தான்

இ-ள். சந்திரகிரணத்தாலே கரைந்து நீரைச் சிந்துவது சந்திரகாந்தக்கல்லே யல்லாமல் வேறுசாதிக்கல்லாலே நீரைச் சிந்தமுடியாது. அப்படி அந்தச் சந்திரவதியே யிந்த அரிச்சந்திரனுக்குப் பாரியாகிறவளென்று பிரமதேவன் முன்னேதானே அமைத்திருக்கின்ற அமைவினாலே அடக்கக்கூடாத காமமயக்கமும் அதனாலே மனவருத்தமும் அதிகரித்துப் புத்திமயங்கிக் கல்வியறிவு அடக்கம் பொறுமை பிரகாச முதலானவைகளை யெல்லாம் தன்னினின்றும் பிரிந்துபோகச் செய்தவனாய் உடம்பெல்லாந் தளர்தலுமாயினான். எ-று. (௨௰)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கரையழி காத லாற்றை யறிவெனுங் கரைசெய் தாற்றி
வரையன புயத்து மன்னன் முனிவரை நோக்கி மாதர்க்
கரசியை யடிய னேனுக் கணிமணம் புணர்க்க நும்வா
யுரையுள தாயி னென்மாட் டுயிருள தாகு மென்றான்

இ-ள். அப்படிக் கரைகடந்து செல்வதான ஆசை என்னும் ஓராற்றைத் தனது கல்வியறிவென்னுங் கரையையிட்டு அடக்கி, மலைபோலுந் தோள்களையுடைய அரிச்சந்திரமன்னன் அந்த மகரிஷிகளைப் பார்த்து அப்பெண்களுக்கு அரசியானவளை அடியேனுக்கு அழகான கலியாணஞ்செய்துகொடுக்கும்படி உங்களுடைய வாயாலே சொல்லுவதுண்டானால், என்னுடைய உடலிலே உயிரிருக்கிறதாயிருக்கும் என்று கூறினான். எ-று. (௨௧)

அங்கண்மா ஞாலங் காக்கு மரசனை யரச ரேறே
திங்கண்மா முகத்து வாமத் திருவைநீ வதுவை சூட்ட
வெங்களாற் செய்யு மாறே தியம்பென முனிவர் கூறச் [ப்பும்.
செங்கண்மா லனையான் செவ்வாய் செங்கையாற் புதைத்துச்செ

இ-ள். அழகிய இடத்தையுடைய இந்தப் பெரிதான உலகத்தையாளுகிற அரசனே! இராசாக்களுக்குச் சிங்கமானவனே! பூரணச்சந்திரன்போலும் ஒளிபொருந்திய முகத்தையுடைய அழகாலே லட்சுமிக்கொப்பான சந்திரவதியை நீர் கலியாணஞ் செய்துகொள்ளுதற்கு எங்களாலே செய்யும் வகையென்ன? சொல்லுமென்று அந்த முனிவர்கள் கேட்க சிவந்த கண்களையுடைய திருமாலுக்கொப்பான அரிச்சந்திரன் தனது சிவந்த வாயைச் செவ்விதான கைகளாலே மூடிக்கொண்டு சொல்லுகிறான். எ-று. (௨௨)

* அந்தரசாதிச் சிலை - வேறுசாதிக் கல்

அல்லியங் குழலா டன்னை யருமணை மடிப்பன் சூட்டக்
கல்லியற் சுரமுங் காடுங் கடந்துகால் வருந்த நீர்போய்
வல்லியைப் பயந்தோற் கண்டு மணமொழிந் தந்த வேந்தன்
சொல்லிய நெறிகேட் டென்பால் வருகவென் றினிதுசொன்னான்.

இ-ள். அகவிதழ்களாலலங்கிருதமான கூந்தலையுடைய சந்திரவதியை நான் அரிதான விவாகஞ் செய்துகொள்ளுதற்காக, கற்கள் கிடக்கிற பாலைவனமும் காடுகளும் கடந்து, உங்கள் கால்கள் வருந்த நீங்களே போய், அந்தப் பெண்ணைப்பெற்ற அரசனைக்கண்டு கலியாண வார்த்தைகளைப்பேசி, அவ்வரசன் சொல்லியவைகளைக் கேட்டுக்கொண்டு திரும்பவும் இங்கென்னிடம் வரவேண்டுமென்று மிகவு முபசரித்துச் சொன்னான். எ-று. (உங)

காதலான் மன்னன் கூற மாதவர் கருணை வெள்ள
மீதெலா மெழுந்து பொங்க வேந்தகே ளீண்டி யாங்கள்
போதலுஞ் செய்வே முங்கள் புதுமணங் காண்பே மாயி
னீதலா லுறுதி வேறொன் றில்லை யென் றெழுந்திருந்தார்.

இ-ள். அவ்வாறு விருப்பத்தோடு அரிச்சந்திரன்சொல்ல, அந்த மகரிஷிகள் அரசனிடத்திலே கிருபைப்பெருக்கம் மேன்மேலாகக் கிளர்ந்து பெருக, அரசனே! கேளும், நீர் சொன்னபடியே மீண்டும் நாங்கள் போகிறோம். உங்களுடைய விசேஷமான திருக்கலியாணத்தைப் பார்ப்போமானால் இதைப் பார்க்கிலும் வேறொரு நன்மையில்லை யென்று எல்லோரும் எழுந்திருந்தார்கள். எ-று. (உச)

சந்திர வதிதன் பார தனங்களுன் வரைசெய் தாம
சுந்தர மார்பின் மூழ்கச் சூட்டுவே மென்ன வாழ்த்தி
மந்திர முனிவ ரெல்லா மண்டப மகன்று நீங்கி
யிந்திர புரியே யன்ன வெழினகர் கடந்து போனார்.

இ-ள். (எப்படியாயினும்) அந்தச் சந்திரவதியினுடைய கனத்ததனங்கள் உன்னுடைய மலைபோல்வதான மாலையணிந்த அழகிய மார்பிலே படியும்படி செய்கிறோமென்று ஆசீர்வதித்து வேத மந்திரங்களெல்லாந் தெரிந்த முனிவர்களெல்லோரும் அந்தச் சபாமண்டபத்தை விட்டுச்சென்று தேவேந்திரலோகம் போல்வதான அந்த அயோத்தியா புரியைக் கடந்துசென்றார்கள். எ-று. (உரு)

மாதவர் போன பின்னர் மண்டப நீங்கி மன்னன்
ஞாதுலர் போலப் பள்ளி யறைபுகுங் காமினி நண்ணி
மீதெலா மனங்க னாளி குனித்திட வெளியிற் புக்குக்
காதலங் கடலுட் டாழ்ந்தான் கரைநிலை கண்டி லாதான்.

இ-ள். அந்த மகரிஷிகள் போனபின்பு, அரிச்சந்திரமகாராசன் சபாமண்டபத்தை விட்டுப்போய் யாதுமில்லாத வறியவரைப்போற் சயனமாளிகையுட் புகுந்து படுக்கு மெத்தையிற் சயனித்து உடம்பெல்லா மன்மத

பாணந்தைக்கப் பின்பு வெளியிலே வந்து இப்படி மாறிமாறி ஆசையாகிய கடலிலே முழுகினவனாய் அந்த ஆசைக்கடற்குக் கரையும் நிலையும் காணாதவனானான். எ-று. (௨௬)

மயங்கினான் வருந்தி னான்மெய் வாடினான் மதன வம்பாற்
றியங்கினான் வளர்ந்த காமத் தீயினாற் செயலிற் றாவி
தயங்கினான் றீரா மோக தாகத்தாற் றளர்ந்தான் மேன்மே
லுயங்கினா னுருகி மெய்சோர்ந் துளத்தொடு முரைப்பா னானான்.

இ-ள். மயக்கங் கொண்டான்; அதனாலே வருத்தப்பட்டான்; அதனாலே உடம்பு மிகவுமிளைத்தான்; பின்னும் மன்மதபாணத்தினாலே நொந்தான்; அப்படியாக மூண்ட காமாக்கினியினாலே எந்த செய்கையு மில்லாமல் உயிர் கலங்கினான்; அப்படி மனங்கலங்கி நீங்காத மோகதாகத்தினாலே சோர்ந்து மேலுமேலும் வருந்தினான்; மனமுருகி உடம்பிளைத்துத் தன் மனத்துடனே சொல்லத் தொடங்கினான். எ-று. (௨௭)

தந்தமால் களிற்றி யானை சந்திர தயன்றன் பாவை
வந்தமா முனிவ ரோடும் வந்திவண் மாய மாகி
யெந்தமா ருயிரை வெளவி யெம்முளம் புகுந்து கைகொண்
டந்தமா முனிவ ரோடு மகன்றதோ வறிகி லேமால்.

இ-ள். கொம்புகளையுடைய உயர்ந்த யானைமேலேறுகின்ற சந்திரதய வரசனுடைய மகளானவள், இங்கேவந்த மகரிஷிகளுடனே மாயாரூபமாகவந்து, என் மனத்துள்ளே நுழைந்து என்னுடைய அரிய உயிரையும் பற்றித் தன் கைவசமாக்கிக் கொண்டு அந்த மகரிஷிகளோடு கூடவே போயினளோ நமக்கு ஒன்றுந் தெரியவில்லை. எ-று. (௨௮)

ஒற்றையா ழியந்தேர் சூழிவ் வுலகம்பா னாவல் பூண்ட
வற்றைநான் முதலாக் கள்ள மின்றியே யமர்ந்த தந்தோ
பிற்றைநாள் வலியி னாலோ பெண்கொடி யொருத்தி யாவி
யிற்றைநாள் கரந்து கொண்ட பேதமை யொக்கு மன்றே.

இ-ள். சூரியனுடைய ஒற்றைத்தேர்ச்சக்கரம் சூழ்வதான இவ்வுலக முழுதும் நான் பாதுகாத்துக்கொண்டிருக்கிற அந்நாள் முதலாக இதுவரையிலும் [இந்தவூர்] திருட்டில்லாமலே யிருந்தது. ஐயோ! பின்பு இந்த நாளிலே பலாத்காரத்தினாலே ஒருபெண்கொடியானவள் என்னுயிரை இன்றைய தினத்திலே மறைந்துவந்து கொண்டுபோனதைப்பார்த்தால் அறியாமையே யாயிற்று. எ-று. (௨௯)

தனக்குறாந் தமக்கு றாதான் றனைக்கரந் தரிதிற் கொள்ளும்
வனக்குறும் பருக்கு மாமைக் குறாவெனு மயிலே மாவே
யெனக்குறா தென்றா னாத்த னெவ்வினை யிட்டுன் பால் வந்தா
லுனக்குறா தென்றா நீயோ னுள்ளத்தைக் கொண்டா யென்றான்.

இ-ள். தனக்கு அனுகூலனாய்த் தன் உறவினர்க்கு அனுகூலனாகாதவனை ஒருவனை மறைந்து அவன் பொருளைத் தங்கள் கொடுஞ்செய்கை

யினாலே திருடிக்கொண்டுபோகிற காட்டிலே சஞ்சரிப்பாரான வேடர்களுக்கு, அவர்கள் வெற்றி கொள்ளும்படியாய்த் தனக்கே யனுகூலனான நான் சம்மதிப்பேனோ? மயிற்சாயலை யுடையவளே! மான்போலுங் கண்களையுடையவளே! எனக்கே தகுமென்று நான் அடக்கிவைத்திருந்த என்னைத் தவிர்ந்து உன்னிடத்தே வருமாகில் அது உனக்குத்தகுமென்று நீ எனது பொருளான என்மனத்தை உன்வசமாக்கிக் கொண்டாய் என்று கூறினான். எ-று. (௩௦)

மைதிகழ் வாரி சூழு மாநிலத் தோர்கட் கெல்லாம்
பெய்தவம் பழிபி றங்காப் பிள்ளையைப் பெறுத லென்பார்
செய்தவ மன்றுன் றாதை செனனங்க டோறுஞ் செய்த
கைதவ மாவி கொள்ளுங் களவினிற் பயந்த தெல்லாம்.

இ-ள். கருமையாய் விளங்குகின்ற கடல்சூழ்வதான இந்தப் பெரிய வுலகத்தி லுள்ளவர்களுக்கெல்லாம் நன்மையைக் கொடுக்கிற தவமானது குற்றஞ் செய்யாத பிள்ளையைப் பெறவேண்டியதென்று சொல்வார்கள். அப்படியிருக்க, உன் தகப்பன் செய்தது நன்மையைச் செய்வதான தவமென்று தான்கொண்ட பிறப்புகளெல்லாம் அவன் செய்திருக்கிற வஞ்சனையினாலே உயிரைத்திருடுகிற களவினையுடைய வுன்னைப்பெற்றது முழுதும்.

மாறுகொண் டனைய வல்லி வாட்டிய வாட்டஞ் சொல்லி
யாறுதற் கென்பா னண்ணி யணையுமோ வணைகி லாமல்
வேறுமிப் படியே வாதை விளைக்குமோ விளைக்கும் வாதை
யேறுமோ குறையு மோவென் றிருந்தன னிறைவ னிப்பால்.

இ-ள். இப்படி மாறுபாடாக என்னை அந்தக் கொடி போல்பவள் வாட்டின வாட்டத்தையெல்லாம் நானசொல்லி மனமாறுதற்கு என்னிடத் தேகிட்டி வருவாளோ? அப்படி வாராமல் வேறேயுமிப்படிக்கே துன்பத்தைச் செய்வாளோ? இப்படி உண்டாக்குகிற துன்பம் அதிகப்படுமோ? அல்லது குறைவுபடுமோ? என்றிவ்வாறு அரிசசந்திரமகாராசன் எண்ணிக்கொண்டிருந்தான். பின்பு. எ-று. (௩௨)

மானவன் வதுவை சூட்ட மனமொழி வதற்கு நண்ணிப்
போனமா முனிவர் பூகப் பொழிலுடன் பொய்கை நீங்கிக்
கானமு மலையும் யாறுங் கடந்துகன் னோசி யென்னு
மானக ரணுகி கொற்ற மதிதயன் சபையிற் புக்கார்

இ-ள். இந்த மகானுபாவனை அரிச்சந்திரன் கலியாணஞ் செய்துகொள்ளுகிறதற்கு விவாகவார்த்தை பேசுவதற்காக இங்கேவந்துபோன மகரிஷிகள் கமுகந் தோட்டத்துடனே வழியிலேயுள்ள குளங்களையுங் கடந்து சென்று காடுகளும் மலைகளும் ஆறுகளுங் கடந்து கன்னோசி யென்கிறபெரிய நகரத்தை நணுகி அந்த வெற்றிபொருந்திய சந்திரதயராசனுடைய சபைக்குள்ளே போனார்கள். எ-று (௩௩)

மேருவை வெளிசெய் தன்ன மேனிலை மணிமா டத்து
வாரிதி யெழுந்த தென்ன வந்தவன் றாளைப் போற்றத்
தேரும்யா னையுமி ழிந்து திறையிடு மரசர் நிற்கக்
காருநீள் கடலும் போலக் கதிர்மணி முரச மார்ப்ப.

இ-ள். மகா மேருவைத் துவாரஞ் செய்து வைத்திருக்கிறதுபோ லிருக்கிற மேலுப்பரிகையை யுடைய அழகிதான கொலுமண்டபத்திலே. கடல் பொங்கி வந்தாற்போல்வந்து அந்தச் சந்திரதயனுடைய பாதங்களைத் துதி செய்யத் தேர்களையும் யானைகளையும் விட்டிறங்கிக் கப்பங்கள் கொடுக்க வேண்டிய அரசர்கள் ஒருபால் நிற்க, மேகங்களையும் நெடிய கடலையும் போற் பிரகாசமான அழகிய பேரிகைகள் முழங்கவும். எ-று.

இதுமுதல் மூன்று பாடல்கள் குளகம். (௩௪)

வெயில்விரி மகுடம் பொங்க விடுசுடர்க் கழல்வி ளங்கக்
கயில்விரி கடக மின்னக் கதிர்மணிக் குழைக டாழப்
பயின்மணி மரக தத்தாற் பசுங்கதிர் பரப்பு மாடச்
சயிலசா ளரங்க டோறும் வலயத்தின் கிரணந் தாக்க.

இ-ள். சூரியப்பிரகாசத்தைக் காட்டுகின்ற கிரீடங்கள் பொலியவும், வீசுகிற ஒளியையுடைய வீரக்கழல்கள் விளங்கவும், கைகளிலே ஒளி விரிகின்ற கங்கணங்கள் மின்னவும், பிரகாசமான ரத்நகுண்டலங்கள் தொங்கவும், அவனிருக்கிற அழகிதான மரகதத்தினாலே பசிய ஒளியை விரிப்பதான சபாமண்டபமான பொன் மலையிலேயுள்ள கன்னல்களெல்லாம் அவனுடைய தோளிலே யணிந்த கேயூரத்தின் சோதிகள் வீசவும். எ-று. (௩௫)

சிகரமா முலையார் செம்பொற் செழுமணிக் கவரி வீசப்
புகரன வமைச்சர் போற்றப் புரிதல முனிவர் வாழ்த்தப்
பகர்தரு மறையோர் சூழப் பாவலர் கவிகள் பாட
மகரதோ ரணக்கீழ் மன்னன் மடங்கலா தனத்தி ருந்தான்.

இ-ள். மலைச் சிகரம்போலும் பெரிய தனங்களையுடைய பெண்கள் செம்பொன்னாலும் செழுமையான மணிகளாலும் சாமரங்கள் வீசவும். சுக்கிரபகவானுக் கொப்பான மந்திரிகள் துதிக்கவும், தவங்களைச்செய்த முனிவர்கள் வாழ்த்தவும், வேதபாராயணஞ் செய்கிற பிராமணர்கள் சூழவும், வித்துவான்கள் பல்வகைக் கவிகள் பாடவும் இப்படியாக மகாதோரணத்தின்கீழே அசசந்திரதயன் சிங்காசனத்திலே யிருந்தான். எ-று. (௩௬)

அந்தவே லக்கந் தன்னி லருந்தவ முனிவ ரெல்லாம்
வந்தனர் வந்த போது மன்னவ னெழுந்தி ருந்து
சுந்தர மகுடந் தாழத் தொழுதன னவரை வாழ்த்திச்
சிந்தையின் மகிழ்ச்சி பொங்க விருந்தபின் செப்ப லுற்றான்.

இ-ள். அப்படிக் கொலுவிருக்கிற சபையிலே, இங்கிருந்துபோன அருமையான தவமுனிவர்களெல்லாரும் வந்தார்கள். அப்படி அவர்கள் வந்தவு

டனே அந்தச் சந்திரதயனெழுந்திருந்துவந்து அழகிதான கிரீடம் படிய வணங்கினன். அங்ஙனம் வணங்கின அரசனை [முனிவர்கள்] ஆசீர்வதித்து மனத்திலே சந்தோஷம்பெருக இருந்தபின்பு [அரசன்] சொல்லத் தொடங்கினன். எ-று. (௩எ)

வானநீர் பொழிந்து முத்த மணிகொழித் தருவி பாய்ந்த
கானநீர் பெருகுந் தெய்வ கண்டகி யென்னுந் தீர்த்தத்
தானநீ ராடி யென்றன் றலைக்கடி முடிகள் சூட்டிப்
போனநீ ருடனே மீண்ட வருத்தியென் புகலு மென்றான்.

இ-ள். மேகங்கள் நீரைப்பொழிதலாலே முத்துக்களையும் ரத்நங்களையும் கொழித்துக்கொண்டு அருவிபாய்தலான காடுகளெல்லாம் நீர் பெருகுவதான தெய்வத்தன்மையுள்ள கண்டகி யென்னும் தீர்த்தத் தடத்திலே நீராடி முன்னே என்னுடைய சிரசுக்கு உங்களுடைய பாதங்களைக் கிரீடமாகச் சூட்டிவிட்டுப் போன நீங்கள் உடனே திரும்பிவந்த இச்சை யென்ன சொல்லுங்களென்றான். எ-று. (௩அ)

மன்னுகேள் சென்ற யோத்தி மாநகர் புகுந்து யாங்க
ளந்நகர்க் கரச னீதி யருளரிச் சந்த்ர னென்பா
னின்னகர் வளமு நின்ற நெறியுநின் மகட னேருஞ்
சொன்னபி னின்பா லெய்து முவகையே துனிந்து நின்றான்.

இ-ள். அரசனே! கேட்பாயாக: நாங்கள் உடனே போய் அயோத்திமாநகரிலே புகுந்து அந்நகருக்கரசனை நீதியுந் தயவுமுள்ள அரிச்சந்திர னென்பவனிடத்தில் உனது நகரின் வளமையும் உன்னுடைய சன்மார்க்கமும் உன் புத்திரியினுடைய அழகும் சொன்னபின்பு உன்னிடத்திலே வந்துகண்டு பேசுவதான சந்தோஷவார்த்தைக்கே துணிந்தவனாயினன். எ-று. (௩௯)

அறநெறி மிக்கோர் தம்பா லருந்ததிக் கற்பி னுளைப்
புறநெறி போகா வண்ணம் வருந்தியும் பொருந்தச் செய்தன்
மறநெறி யன்று மாயா மாதவந் தன்னின் மிக்க
திறநெறி யதனு னின்பாற் சேர்ந்தனஞ் செல்வ வென்றார்.

இ-ள். செல்வத்தின் மிக்க அரசனே! தருமமார்க்கத்திலே மிகுந்துள்ளவர்களிடத்திலே அருந்ததிபோலுங் கற்புடைய புத்திரியைத் தருமத்துக்கு வேறானவழியிலே போகாதபடி வருந்தப்பட்டாவது பொருந்தப்பண்ணுகிறது தீயசெய்கையன்று. எக்காலத்தும் அழியாத பெரிய தவத்தினாலே மிகுந்த உறுதியான நல்வழியே யாதலால் உன்னிடத்திற்குத் திரும்பவும் வந்தோமென்றார்கள். (௪0)

புவனமுன் னளவும் யாங்கள் புந்தறிந நனைத கோடி
நவநர பதிக டம்மைக் கண்டன நறுந்தார் வேந்தே
சிவனல்க நீபயந்த திருமக டனக்குக் கேள்வ
னவனல தில்லை யென்ன வருந்தவ ரெடுத்து ரைத்தார்.

இ-ள். நல்ல பரிமளத்தையுடைய மாலையணிந்த சந்திரதய வரசனே! இந்த லோகமுள்ள அளவும் நாங்கள் போய்ப் பார்த்து அனேககோடி புதுமையை யுடைய அரசர்களையெல்லாங் கண்டுவந்தோம். பரமசிவன் கடாட்சிக்க நீபெற்ற திருக்குமாரிக்கு நாயகன் அந்த அரிச்சந்திரனை யல்லது வேறொருவரு மில்லையென்று அரிய தவத்தையுடைய முனிவர்கள் விசேஷித்துச் சொன்னார்கள். எ-று. (௩க)

மையலாற் றியகு ணத்து மாதவ ருரைப்பக் கேட்டுப்
பொய்யிலா மொழியா னுள்ளம் பொருந்தியும் பொருந்தா னாகித்
தையலாள் பங்கன் முன்னாள் சாற்றிய தன்மைதன்னைக் கேது
செய்யலா நம்மா லென்னத் திகைத்திருந் துரைக்க லுற்றான்.

இ-ள். மயக்கத்தைப் போக்கின நற்குணங்களையுடைய மகரிஷிகள் அப்படிச் சொல்லக்கேட்டுப் பொய்யில்லாத வார்த்தைகளையுடைய சந்திரதய ராசன் மனது சம்மதித்தும்சம்மதியாதவனாய், பார்வதி சமேதனான பரமசிவன் முன்னாளிலே சொன்ன தகுதிக்கு நம்மாலென்ன செய்யக்கூடுமென்று திகைத்திருந்தவனாய்ப் பின்பு சொல்லத்தொடங்கினான். எ-று. (௩௨)

மூவரா யவரின் முன்னு மூர்த்தியா ரருளிச் செய்த
தேவரா சியமொன் றுண்டா மன்னது தெரிய வல்லார்
யாவரா யினும்யான் பெற்ற விளங்கொடி தனக்குக் கேள்வ
ராவரா லவணிங் கெய்தி னறியலா மழையு மென்றான்.

இ-ள். அரியரப் பிரமாதிகளாய், அவர்களில் முதலான பரமசிவனவரருளிச்செய்த தெய்வரகசிய மொன்றுண்டு; அப்படி யுண்டாகிய அந்த ரகசியத்தைத் தெரிந்துகொள்ள வல்லவர்கள் யாராயிருந்தாலும் நான் பெற்ற இளமையான கொடிபோல் வாளுக்கு நாயகராவார். ஆகையால், அந்த அரிச்சந்திரன் இங்கேவந்தால் தெரிந்துகொள்ளலாகும். அவ்வரசனை இங்கே வரசசெய்யுங்களென்று சொன்னான். எ-று. (௩௩)

அரசையிங் கழையு மென்ன வகமகிழ்ந் தவைகை கூர்ந்து
விரைவுட னெழுந்தி ருந்து வேதியர் முனிவர் போனா
ரிருநிலத் தரசர்க் கெல்லாஞ் * சுயம்வர மெழு நாமென்
றுரைசெயு மென்று தூது மோலையும் போக விட்டான்

இ-ள். அந்த அரிசசந்திர மகாராஜனை இங்கே வரசசெய்யுங்களென்று அரசன் சொல்லவே, வேதப்பிராமணர்களான மகரிஷிகள் மனஞ்சந்தோஷித்து ஆனந்தமடைந்து சீக்கிரமாக எழுந்திருந்து சென்றார்கள். அவர்கள் போனபின்பு சந்திரதயராஜன் பெரியவுலகத்துள்ள அரசர்களுக் கெல்லாம் அரசர்களே! என் கன்னிகையானவள் உங்களிலே யாரேனும் தனக்குச் சம்மதியான ஒருவரைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பி யிருக்கிறாள்; அதற்கு எழுநாளளவுள்ள தென்று சொல்லுங்களென்று தூதரையும் ஓலையையும் போக அனுப்பினான். (௩௪)

* சுயம் வரம் என்பது—கன்னிகையானவள் ஒருவனைக் கணவனாகத் தானே வரித்தல்.

தொழுங்கழன் மன்னர் மன்னன் றூதர்சென் றுரைத்த போதே
யழுங்கிய வாசை யோடு மளவிலா வுவகை யோடுஞ்
செழுங்குடை மன்ன ரெல்லாந் தேசமு நகரு நீங்கி
யெழுங்கடல் வளர்ந்த தென்ன வீண்டிவந் தடைந்தா ரன்றே.

இ-ள். எல்லோரும் வணங்கத்தக்க பாதங்களையுடைய ராசாதி ராசனான சந்திரதயன் அனுப்பின தூதர்கள்போய்ச் சொன்னவுடனே, மிகவும் வருத்தஞ்செய்கிற ஆசையோடு அளவில்லாத சந்தோஷத்தை யுடையவர்களாய்ச் செழுமையான வெள்ளைக் குடையையுடைய அரசர்களெல்லோரும் தங்களுடைய நாட்டையும் நகரையும் விட்டுவந்து பொங்குகிற கடல் சூழ்ந்தாற்போல் அக்கன்னிகைநாட்டிலே வந்து நெருங்கிக் கூடினார்கள். எ-று.

சோலைக டோறு நன்னீர்ச் சூனிகை தோறுந் தேவ
ராலயந் தோறு மாத ரரங்குக டோறு மாட
மூலைக டோறுஞ் சீர்சான் முன்றில்க டோறு மேம
சாலைக டோறு மன்னர் தானைவந் திறுத்த தன்றே.

இ-ள். அந்தநாட்டிலேயுள்ள சோலைகளிலும், நல்ல சலத்தையுடைய குளக்கரைகளிலும், தேவர்கோயில்களிலும், பெண்களாடுகிற நாடகசாலைகளிலும், ஒதுக்கமான மூலைகளிலும், சிறப்பமைந்த வெளிமுற்றங்களிலும், பொன் மயமான சத்திர சாலைகளிலும் அரசர்களுடைய சேனைகள்வந்திறங்கின. எ-று. (சசு)

மானைவென் றடருங் கண்ணாண் மணமகன் வருமுன் வந்த
வேனைய வேந்தர்க் கெல்லா மிமையவர்க் கறிய வொண்ணா
யானையந் தேரு மாவு மாதரு மமைச்சர் தாமுஞ்
சேனையு மளவிட்டார்க்குஞ் செப்பலாந் தகைமைத் தன்றே.

இ-ள். மானை மருட்சியாலே ஜயித்து நெருக்குகின்ற கண்களை யுடையவளான சந்திரவதிக்கு மாப்பிள்ளை யாகிறவன் வருவதற்கு முன்னே, மற்ற அரசர்களுக்கெல்லா [முன்னதாய் வந்திறங்கின] தேவர்களுக்கு மறிந்து சொல்லக்கூடாத யானைக்கூட்டங்களையும், தேர்க்கூட்டங்களையும், குதிரைக்கூட்டங்களையும், மங்கையர் கூட்டங்களையும், மந்திரிகள் முதலாயினோர் கூட்டங்களையும், காலாள்களான கூட்டங்களையும் இவ்வளவென்றளவுசெய்து எப்படிப்பட்ட புலவர்களாலுஞ் சொல்லலாகிய தகுதியுடையதன்று. எ-று. (சஎ)

இந்நகர் முழுது மன்ன ரீண்டிய பின்ன யோத்தி
நன்னகர் தன்னிற் புக்கா நற்றவ முனிவ ரெல்லா
மன்னவ னெழுந்தி ருந்து வணங்கிவாய் புதைத்து நீங்கள்
சொன்னதுங் கேட்ட வாறுஞ் சொல்லுமென் றெடுத்துரைத்தான்.

இ-ள். இந்தப் பட்டணமெல்லாம் அரசர்கள் வந்து கூடின பின்பு, நல்ல தவத்தையுடைய முனிவர்கள் எல்லோரும் அயோத்தி என்கிற அந்

நன்மைபொருந்திய பட்டணத்துக்குள்ளே போனார்கள். அதுகண்டு அரிச் சந்திரமகாராசன் எழுந்திருந்து வந்து வணங்கி, தன் கரத்தால் வாயைப் பொத்திக்கொண்டு முனிவர்களே! நீங்கள் போய்ச் சொன்னதும், அதைக் கேட்டு அந்தவரசன் சொன்னவகையும் சொலலுங்களென்று துதிசெய்து கேட்டான். எ-று. (௪அ)

அருந்தவ முனிவ ரெல்லா மரசனை நோக்கி யைய
பெருந்தவ முடையார் மண்ணி னீயலாற் பிறரு முண்டோ
திருந்திழை தனையு னக்கே திருமண முடிக்கத் தாதை
பொருந்தினன் வல்ல நீயு மெம்முடன்போது மென்றார்.

இ-ள். அதற்கு அரிதான தவங்கள் செய்யவல்ல முனிவர்களெல் லோரும் அரிச்சந்திரமகாராஜனைப் பார்த்து, ஓ அரசனே! உலகத்திலே பெரியதவத்தையுடையவர்கள் நீயேயல்லாமல் வேறே சிலருமுண்டோ? அந்தச் செவ்விதான ஆபரணங்களை யணிந்துள்ள சந்திரவதியை உன்றனுக் கே திருக்கலியாணஞ் செய்துமுடிக்க அவள் தகப்பன் சம்மதியாயினன். விரைவிலே நீயும் எங்களுடன்கூடவே வரக்கடவாயென்று சொன்னார்கள்.

என்றினி துரைத்த லோடு மெழுந்தபே ருவகை வெள்ள
நின்றினி தோங்க வாகு வலயங்க ணிமிர்ந்து நீங்கக்
குன்றினு முயர்ந்த செம்பொற் கோயில்விட் டெழுந்து போந்து
முன்றிலின் வந்து மன்ன னினைய மொழிய லுற்றான்.

இ-ள். என்றிப்படி முனிவர்கள் சந்தோஷமாகச்சொன்ன அளவிலே, அரிச்சந்திரமன்னன் மனத்திலுண்டான பேரின்பக்கடலானது நிலைகொண்டு நன்றாகவளரவும், தோள்வலயங்கள்தோளுக்குப்போதாமற்கழன்றுபோகவும், உடனே மலையிலு முயர்ந்துள்ளதனதுசெம்பொன்மயமான அரண்மனையை விட்டெழுந்திருந்துபோய் ஆசாரவாசலிலே வந்துநின்று, இவ்விதமான சில வார்த்தைகள் சொல்லத்தொடங்கினன். எ-று. (௫௦)

கன்னலங் கழனி வேலிக் கன்னேசி நோக்கி யிவ்வூர்
மன்னரு மமைச்சர் தாமுஞ் சேனையு மாத ராரு
முன்னரோ செல்க வென்று மொழிந்தருந் தனைக்கண் சாத்தி
வன்னமா மணித்தேர் கொண்டு வருகென வருளிச் செய்தான்.

இ-ள். கரும்புகள் விளைகிற அழகிய வயல்களே வேலியாகச் சூழ்ந் துள்ள கன்னேசி நாட்டைக்குறித்து, இவ்வூரிலுள்ள அரசர்களும், மந்திரி களும், சேனைகளும், இவ்வகையோர் பெண்களும் முன்னே நடக்கக்கடவ தென்று உத்தரவுசெய்து, தனது சாரதியைக் கண்களால்நோக்கி என் னுடைய அலங்கிருதமான பெரிய ரத்நகசிதமாகிய தேரைக் கொண்டுவரக் கடவா யென்று உத்தரவு பண்ணினன். எ-று. (௫௧)

கலிவிருத்தம்

மாதங்க கடங் கலவயப பரிமா
பூதம் பலதே ரொடுபூ ணநிறீஇச
சூதன் கொடுவந் துசுடர்க கழலோன்
பாதங் களின்மீ துபணிந் தனனே.

இ-ள். சாரதியானவன். அநேகம யானைகளையும், அநேகம் சிஙகங களையும், அநேகம் வெற்றிபொருந்திய குதிரைகளையும் அந்தந்தத்தேரிலே சேரக்கட்டி நிறுத்திக்கொண்டுவந்து காட்டி, பிரகாசமுள்ள வீரகண்டா மணி கட்டின அரிச்சந்திரனுடைய பாதங்களின்மீது விழுந்து வணங்கினான். எ-று. (௫௨)

வாரோ றுசெழுந் தடமா முரசும
நீரோ ரியசங் கமுநின் றதிரத
தாரோ றுபுயங் கடதும பநெடுந
தேரோ றிவிரைந் துசெலுத தினனே

இ-ள் தோலா லிறுககக்கட்டியிருககிற அழகிய அகலமான பெரிய பேரிகைகளும். முன்னே நீரிலே சஞ்சரிப்பதான சஙகுகளும் நிலைகொண்டு முழஙக. மாலைகள்தஙகின தோள்கள் பூரிகக, அந்த நெடிய தேரின்மேலேறி அதிசீக்கிரமாகச செலுததிச சென்றான். எ-று (௫௩)

நற்றே ரிணைமன் னனடத் திடவே
சுற்றே றநிறைந் தயறுன் னினவால
குற்றே வலசெய்யும பலகொற் றவாதம்
பொற்றே ரசதகோ டிபொருப் பெனவே

இ-ள். அந்த அழகிய தேரை அரிசசந்திரன் செலுத்திக் கொண்டு போம்போது. இவனுக்குச சிறியபணிவிடைகள் செய்கிற அனேக வரசர்களுடைய பொன்மயமான நூறகோடி தேர்கள் மலைகள்போலச சுற்றிலும் அதிகமாக நிறைந்து. பக்கஙகளிலும் நிறைந்தன. எ-று. (௫௪)

கவிகைப படுநீ ழலகவிப பமணிச
சிவிகைத் திரளின் மிசைசென் றனரார்
புவிகைக கொளவைச் சர்புகழ்ந் தரசைக்
குவிகைத தலமிட் டொருகோ டியரோ.

இ-ள். அரசர்கள், குடைகளினுண்டாகுகிற நிழல்சூழ ரத்நப்பல்லக குகளின்மேலே போனார்கள். உலகஙகளைத் தஙகள் கைவசப்படுத்திக்கொண் டிருக்கிற ஒருகோடி மந்திரிமார்கள் அரசனைப் புகழ்ந்துகொண்டு குவித்த கைகளுடனே. எ-று. (௫௫)

வன்னக குவிமா முலைவல லியருந
கன்னற் சிலைவே ளனகா ளையரு
மன்னத திரளோ டரியின் றிரள்வந
தென்னக் கடிதெய் தினரெங் கணுமே.

இ-ள். பொன்னிறமான குவிந்த பெரிய தனங்களையுடைய கொடி போன்ற பெண்களும், கருப்புவில்லையுடைய மன்மதனை யொப்பான யௌவன புருஷர்களும், அன்னக் கூட்டத்துடனே சிங்கக்கூட்டங்கள் வந்தாற்போல் எவ்விடத்தும் விரைந்து வரலானார்கள். எ-று. (ருசு)

சிறையோ திமமேல் வருதே வனெனப்
பொறையோ டொளிர்வெண் சிவிகைப் பொலிவுற்
றிறையோ னுடைமைச் சரிறைஞ் சிடமா
மறையோ திவசிட் டனும்வந் தனனே.

இ-ள். இறகையுடைய அன்ன வாகனத்தின்மேல் வருகிற பிரமதேவன்போல், தாங்குகிறவர்கள் சுமததலுடனே பிரகாசிக்கின்ற வெள்ளைமுத்துப்பல்லக்கிலே விளங்குகிறவராய், அரசருடனே மந்திரிகளும் வணங்கப் பெரிதான வேதங்களைச் சொல்லிக்கொண்டு வசிஷ்டமுனிவரும் கூடவே பிரயாணமாய் வந்தார். எ-று. (ருஎ)

தரைசேர் கடலொத் தனதா னைகடற்
றிரைபோ லநடந் தனதிண் பரிமா
விரைசே ரருவித் திரள்வீழ் பலமால
வரைபோ லநடந் தனவா ரணமே.

இ-ள். சேனைகளெல்லாம் பூமியிலே வருகிற கடலை ஒப்பாயின; வலிய குதிரைகள் அந்தக்கடலிலே கிளறுகிற அலைகள்போற் சென்றன; யானைகள் வாசனைபொருந்திய அருவிக்கூட்டங்கள் விழுகிற அநேகமான உயர்ந்த மலைகள்போற் சென்றன. எ-று. (ருஅ)

கல்லார் நெறிசெல் வதுகால் கள்பொறா
வெல்லா மிகுவா தனமே வுமெனச்
சொல்லா முனமே துறவோர் விரைவிற
* செல்லா நெறியே றினர்சென் றனரால்.

இ-ள். கற்கள் நிறைந்த வழியிற் செல்வதற்கு நமது கால்கள் சகியா. குதிரை முதலிய வாகனங்களும் மிகவுந் துன்பத்தையே செய்வனவாமென்று அரசன் சொல்லுமுன்னமே சந்நியாசிகள் அதி சீக்கிரத்திலே ஒருவராலும் போகக்கூடாத ஆகாசமார்க்கமே வழியாகக்கொண்டு சென்றார்கள். எ-று. ()

பலவெண் குடையும் பவளக் குடையுங்
குலவும் பலசெம் மணியின் குடையு
முலவுங் கதிருஞ் சதகோ டியுமா
நிலவும் மெனவெங் குநிறைந் தனவால்.

இ-ள். அநேகம் வெண்முத்துக் குடைகளும். அநேகம் பவளக்குடைகளும், கொண்டாடத்தக்க அநேகம் ஜீவரத்னக்குடைகளும், ஆகாயத்திலே உலாவுகிற நூறுகோடி சூரியரும் நூறுகோடி பூரணசந்திரர்களும்போல் எவ்விடத்தும் நிரம்பின. எ-று. (சு0)

* செல்லாநெறி - ஆகாசமார்க்கம்.

ஆதித் தனருங் குலமன் னவர்தந்
நீதிப் புகழெங் குநிறைந் ததெனச்
சோதிக் கவரித் தொகையுங் கொடியும்
வீதித் தலைதோ றுமிடைந் தனவால்.

இ-ள். சூரியனுடைய அருமையான குலத்திலேபிறந்த அரசர்களுடைய நீதிமார்க்கமான புகழானது எவ்விடத்திலும் நிரம்பியதுபோலப், பிரகாச சத்தையுடைய சாமரக்கூட்டங்களும் கொடிகளும். இவர்கள் செல்லுகிற வீதியினிடங்களெல்லாம் நெருங்கின. எ-று. (௬௧)

காற்றோ டெதிர்த் தகடும் பரிவா
னேற்றோ டெதிர்த் தனயா னைவரைக்
கூற்றோ டெதிர்த் தனதேர் குலவு
மாற்றோ டெதிர்த் தவனீ கமரோ.

இ-ள். வேகத்தையுடைய குதிரைகள் வாயுவேகத்துடனே ஒப்பாகிச் சென்றன; யானைகள் மேகத்தையும் அதன் முழக்கத்தையும் ஒப்பாகிச் சென்றன; இரதங்கள் மலைகளின் வெவ்வேறான உயர்வை ஒப்பாகிச்சென்றன; சேனைகள் சூழ்ந்து செல்கிற ஆறுகளை ஒப்பாகிச் சென்றன. எ-று.

மழுவுங் கரவா ளமும்வார் சிலையு
மெழுவுங் குலிசங் களுமே திகளுங்
கொழுவும் வளையும் பலகுந் தமுநீண்
முழுவெஞ் சுடர்வேல் களுமொய்த் தனவால்.

இ-ள். [அப்படிச்செல்லுகிற சேனைக்கூட்டங்களிலே] மழுவாயுதங்களும், கைவாள்களும், நீண்ட விற்களும், எழுத்தண்டங்களும், வச்சிராயுதங்களும், தோமரங்களும், கொழுக்களும், சக்கரங்களும். அநேகங் கைவேல்களும், முழுதும் வெப்பத்தைக் கொண்ட ஒளி பொருந்திய நீண்ட சூலங்களும் நெருங்கின. எ-று. (௬௩)

மீயுற் றுடனொற் றியவெம் படையின்
வாயுற் றெழுவெம் பொறிமண் டுவநீள்
வேயுற் றபெருங் கிரிமீ தெரியுந்
தீயுற் றனவொத் தனசே ணளவும்.

இ-ள். ஆகாயத்தளவும் மேலே நீண்டு ஒன்றுடனே யொன்றுமோதுதலாகிய அந்த வெவ்விதான ஆயுதங்களின் வாய்களிலே உண்டாகி எழுகின்ற வெவ்விய நெருப்புப் பொறிகள், நெருங்குவனவாய் நீண்ட மூங்கில்கள் பொருந்திய பெரிய மலைகளின்மேலே எரிகிற நெருப்புப் பற்றினதை யொத்து ஆகாயத்தளவும் விளங்கின. எ-று. (௬௪)

நலிவுற் றுநுடங் கிடைநன் னுதலார்
பொலிவுற் றணிதேர் மிசைபோ யினரார்
கலியுற் றெழுநீள் கனகக் கிரிமேல்
மலிவுற் றெழுவஞ் சிகண்மா னுமெனை.

இ-ள். கடலிலே தோன்றி யுயர்ந்திருக்கிற நீண்ட பொன்மலைகளின் மேலே மிகுதிகொண்டு உயர்ந்துள்ள பொன்னிறக் கொடிகளை ஒப்பாயிருக்கின்றனவென்று சொல்ல, இடையானது வருத்தங் கொண்டு துவளுகிற நல்ல நெற்றியையுடைய பெண்கள். நிறைவுகொண்டு அழகிய தேர்கள்மேலேறிச் சென்றனர். எ-று. (சுரு)

கருமா முகிலன் னகவின் குழலார்
பெருமால் கரியின் பிடர்மேல் வருமா
திருமா முகிலுக் கிடையே யெழுமின்
வருமா றுநிகர்த் தனவை யமெலாம்.

இ-ள். கருமையான நீலநிறத்தையுடைய மேகத்தை யொத்த அழகிய கூந்தலையுடைய பெண்கள், உடல் பெரிதா யுயர்ந்திருக்கிற யானைகளின் முதுகுகளின்மேலே ஏறிவருதலானது, மிகப்பெரிதான மேகத்தின் நடுவே தோன்றுகின்ற மின்னலானது [மறையாமல் விளங்கிக்கொண்டு] வருவனவற்றை ஒப்பாயின. அவர்கள் செல்லுமிடங்களெல்லாம். எ-று. (சுசு)

விலையுன் னரிதா கியவெம் பரிமேற்
சிலைநன் னுதலார் பலர்சென் றனரா
லுலையும் புனல்வா ரியிலூ தையினா
லலையுந் திரைமேல் வருமன் னமென

இ-ள். தளும்புகின்றநீரையுடையகடலின்கண், காற்றினாலே கிளருகின்ற அலைகளின்மேலே வருகிற அன்னங்களைப்போல், வில்லையொத்த நன்மையான நெற்றியையுடைய பெணகள் பலரும், விலைமதிக்கக்கூடாத வேகத்தினையுடைய குதிரைகளின் மேலேறிச் சென்றார்கள். எ-று. (சுஎ)

பரிதுன் னநெடும் படைதுன் னமத
கரிதுன் னவிழிந் துகடந் தனனால்
விரிகின் றசெழுஞ் சுடர்வெண் டரளஞ்
சரிகின் றபுனற் சரயுத் தனையே.

இ-ள். விரிவான செழுமையுள்ள ஒளியையுடைய வெண்முத்துக்கள் ஒதுங்குகின்ற அந்தச்சரயுநதியை, குதிரைகளிறங்கிச்செல்லவும், நெடியசேனைகளிறங்கிச் செல்லவும், மதயானைக ளிறங்கிச்செல்லவும், அரிச்சந்திர மகாராசனும் இரங்கிக் கடந்துபோயினான். எ-று. (சுஅ)

விரையே றியதார் புனைவே லிறைவ
னிரையே றுமனீ கநெருக் குதலாற்
றரையே றியதண் புனறள் ளநெடுங்
கரையே றியவா ளைகணக் கிலவே.

இ-ள். பரிமள மிகுவதான மாலையணிந்த [கொலைத்தொழில் செய்கிற] வேலாயுதத்தைத் தாங்கிய அரிச்சந்திர மகாராசனுடைய வரிசை வரிசையாய்க் கரையேறுகிறசேனைகள் நெருக்குகிறதினாலே, நிலத்திற்குமேலே பொ

ருவதான குளிர்ந்த நீரானது மோதி வீசக்கரை மேலே செல்லுகின்ற வாளை மீன்களுக்கு ஓரளவில்லை: எ-று. (௬௯)

அரியன் னவர்மின் னனையார் கடன
நெரியும் படிதுன் னிநெருக் குதலாற்
பரியும் பணிமா லைகள்பார்க் கிலர்கீழ்ச்
சரியும் மணிமே கலைதா மறியார்.

இ-ள். சிங்கங்களையொத்த புருஷர்களோடுகூடி நடக்கிற மின்னலை யொத்த பெண்களுடைய கொங்கைகள் பிதுங்கும்படி சேனைகள் நெருங்கு கிறதினாலே அற்றுவிழுகிற ஆபரணங்களையும் மாலைகளையும் அப்பெண்கள் நோக்கிலர். பின்னுங் கீழே சரிந்துவிழுந்திருக்கிற மணிமேகலைகளையும் தாங் கள் தெரிந்துகொள்ளாமற் [சொல்லுகிறார்கள்.] எ-று. (௭௦)

அரனார் முனியா மதனன் னவர்தோட்
பரநா ரியர்கொங் கைபடப் படமு
னொருநா ளுளவா நிறைபொண் ணுதல்பால்
வருநாண் மனுநீ திவழங் கிலதால்.

இ-ள். சிவபெருமானாலே கோபித்தெரிக்காத மன்மதனையொத்த புரு ஷர்களுடைய தோள்களிலே அன்னியர் மனைவிகளுடைய கொங்கைகள் [சந்தடி நெருக்கத்தினால்] மோதமோதச்செல்லுகிறதினாலே, முன்னே ஒரு நாளாயினும் அழியாத கற்புள்ள அழகிய நெற்றியையுடைய பெண்கள், இப் போது கலியாணத்திற்கு வருகிறநாளிலே, பரபுருடருடைய தோள்களிலே அன்னியஸ்திரீகளுடைய கொங்கைகள் படலாகாவென்று மனுஸ்மிருதி கூற வில்லை [என்றார்கள்.] எ-று. (௭௧)

வெளி றுஞ் சுடர்வே லிளவே ளனையான்
பிளிறுங் கரிதுள் ளவிழுந் துபெயர்ந்
தொளிருந் தனவல் லியொருத் தியையக்
களிறென் றிருகை கொடுகட் டினனே.

இ-ள். வெண்மையான ஒளியையுடைய வேலைக்கொண்ட மன்மதனை யொத்த ஒருவன், முழங்குகின்ற யானை வெருண்டசையக் கீழேவிழுந்து புரண்டு விளங்குவதான கொங்கைகளையுடைய கொடிபோல்பவளான ஒருத் தியை அந்த யானை யாதென்று தனதிரு கைகளாலுந் தழுவினான். எ-று.

ஆடுங் கழன்மன் னனனே கருட
னோடுந் தருவும் பலநண் ணிநெடுங்
காடுங் கிரியும் பலகண் டுநடந்
தோடுங் குளிர்கோ மதியுற் றனனால்.

இ-ள். அலம்புகின்ற வீரக்கழலையுடைய அரிச்சந்திர மன்னன் இவ் வாறு அனேகம் அரசர்களுடனே நாடுகளும் மாச்சாலைகளும் பலவாறாகவுள்ள

வெல்லாம் கிட்டி. பின்னர் நெடிதான காடுகளும் மலைகளும் பலவாறாகக் கண்டுகொண்டேபோய். ஓடுவதான குளிர்ந்த புனலையுடைய கோமதியாற்றி னருகேசென்றான். எ-று. (எ௩)

மேற்படி வேறு.

கானயா றனைத்தையுங் கடந்து கௌசிக
மானயா றுயகோ மதியை நண்ணியே
யானையு மிரதமு மிவுளி யீட்டமுஞ்
சேனையு மன்னனுஞ் சென்றி றுத்தவே.

இ-ள். அப்படிக் காட்டாறுகள் முழுதுங் கடந்துபோய், கௌசிகை யென்னும் பெயர்கொண்ட கோமதியாற்றையடுத்து, யானைகளும், இரதங் களும், குதிரைக்கூட்டங்களும். காலாள்ககளும் அரிச்சந்திரமகாராசனும்போய் இறங்கின. எ-று. (எ௪

தோய்கதிர் வேற்படை சூழ்ந்து துன்னிட
வாய்கதிர் முடியினு னாற்றை நண்ணினான்
பாய்கதிர்ப் படலையுட் சுருக்கிப் பையவே
காய்கதிர்ச் செல்வனுங் கடலை நண்ணினான்.

இ-ள். ஒளிதோய்ந்த வேலாயுதங்களை யுடைய சேனைகள் எங்குஞ் சூழ்தலாய் நெருங்க, எங்கும் பரவுவதான ஒளியையுடைய கிரீடமணிந்த அரிச்சந்திரமன்னனும் அந்தக்கோமதியாற்றினருகே போயிறங்கினான். அப்போது எங்கும் பரவுவனவான கிரணக்கூட்டங்களைத் தன்னுள்ளே ஒடுக்கிக் கொண்டு வெப்பமின்றிச் சுடுகிற ஒளியால் மிக்க சூரியனும் மேலைக்கடலி லேபோ யிறங்கினான். எ-று. (எரு)

ஆழமேவ் கருங்கட லதனின் வெய்யவன்
வீழலு மன்னனும் வேந்தர் மக்களு
மேழையர் யாவரு மிரத முங்கட
வேழமுஞ் சிவிகையும் விட்டி றங்கினார்

இ-ள். ஆழத்தையுடையதா யலைகளெழுகிற கறுத்த கடலிலே சூரியன் போய் முழுகினவுடனே, அரிச்சந்திர மகாராசனும், மற்றுமுள்ள ராஜகுமார ர்களும் பெண்களெல்லோரும், இரதங்களையும், மதயானைகளையும், பல்லக் குகளையும் விட்டுக் கீழே யிறங்கினார்கள். எ-று.

எழு வென்பது நீட்டல் விகாரம்பெற்று ஏழெனவந்தது. (எசு)

மண்டல வேந்தரு மாத ரீட்டமுந
திண்டிற லமைச்சருஞ் சேனை வெள்ளமுந்
தண்டர ளம்வளை தவழு மாநதி
வண்டலி லிடமற வநதி றுத்தவே.

இ-ள். உலகத்தரசர்களும், அவர்களுடைய பெண்டுகளின் கூட்டமும், மிகுந்த [புத்தி] வல்லமையுடையமந்திரிகளும். மற்றச் சேனையின்கூட்டமும்

தண்ணிதான முத்துக்களைத் தருகின்ற சங்குகள் தவழுவனவான அந்தக்கோமதியென்னும் பெரிய ஆற்றின் கரையிலே வெற்றிட மில்லாதிருக்கும்படி வந்திறங்கின. எ-று. வண்டல் - சேறு. (எஎ)

பட்டினு மணியினும் படங்க மைத்துவிண்
முட்டிய செம்பொனின் முடிகள் வைத்துமேற்
கட்டியும் பதாகையுங் கட்டி நீடிரை
விட்டனர் மன்னரு மின்ன ரூருமே.

இ-ள். அரசர்களும், அவர்கள் பெண்களும் பட்டினாலும், மணிகளாலுஞ் செய்திருக்கிற கூடாரங்கள் நிறுத்தி, ஆகாயத்தை யளாவுவதாகச்செம்பொன்னாற் செய்த சிகரங்கள் வைத்து, மேற்கட்டிகளும், கொடிகளுங் கட்டி நீண்டதிரைகளுஞ் சூழவிட்டார்கள். எ-று. (எஅ)

சண்பகத் தருவினுஞ் சந்த னத்தினுந்
திண்பனை யகிலினுந் தேவ தாரத்துந்
தண்பரும் பலவினுந் தாறு பாய்பசும்
புண்படு கரிகளும் பரியும் பூட்டினார்.

இ-ள். சண்பக மரங்களிலும் சந்தன மரங்களிலும் வலிய கிளைகளையுடைய அகில் மரங்களிலும் தேவதார மரங்களிலும் தண்ணிதாய்ப் பருத்துள்ள பலாமரங்களிலும், அங்குசம் பாய்தலினாற் பசிய ரணம்பொருந்திய யானைகளையும், குதிரைகளையும் கட்டினார்கள். எ-று. (எகூ)

நிலைமரம் பிளந்திட நிவந்து குத்திய
கொலைமத யானையின் கோடு போலவே
சிலைமத னனையவர் மார்பிற் றேனனார்
முலைமத யானையின் கோடு மூழ்கின.

இ-ள். அங்கே நிற்கிற மரங்கள்பிளக்க, உயர்ந்து குத்தின கொலை செய்கிற மதயானையின் கொம்புபோல்வனவாய் வில்லையுடைய மன்மதனை யொப்பான புருஷர்களுடைய மார்பிலே, தேன்போலும் வசனத்தையுடையபெண்கள் முலையாகிய மதயானையின் கொம்புகள் அழுந்தலாயின. எ-று. (அ0)

மோதுகொண் டலைப்பொரு மூரி யானைதம்
மீதுகொண் டலைத்தமெய்ம் மெலிவு மாறவே
தாதுகொண் டலைகுழற் றைய லார்முலை
வேதுகொண் டொற்றினார் வீரர் மீதெலாம்.

இ-ள். கடலிலே மோதுவதான மேகத்தை யொப்பாகப் பகைவர்மேலே மோதுகின்ற பெரியயானைகளின்மே லேறிவந்த உயர்வான வுடம்பின்மெலிவுதீர, மெல்லிய பராகங்களைக் கொண்ட மலர்களளைகிற கூந்தலை யுடைய பெண்கள் தங்கள் தனங்களாகிய வெம்மையைக்கொண்டு அந்த வீரர்கள் உடம்பெல்லாம் ஒற்றுதல் செய்தார்கள். எ-று. (அக)

அகிலொடு சந்தனத் துணியி னாக்கிடு
துகில்பொதி மணிபுரை யெரியுந் தூமமுந
திகிலெனப் பலபல செக்கர் வானம்வெண்
முகில்பொதிந் தனவென மூண்டெ ழுந்தவே.

இ-ள். அகிற் கட்டைகளுடனே சந்தனக்கட்டைகளையும் மூட்டி யுண்டாக்கிய சீலையிலே முடிந்துள்ள செம்மணியையொத்த நெருப்பும், புகையும் கண்டவர் நெஞ்சு திடுக்கிட, அநேகமான செவ்வானமானது வெள்ளிய மேகத்தினாலே மூடப்பட்டதுபோல் மேன்மேலாய்க் கிளர்ந்தன. எ-று. (அஉ)

ஆறிலா தணிபடங் கத்து ளேற்றிய
மாறிலாத் துளங்கெழின் மணிவி ளக்கொளி
தேறலாந் தகைமைய சிலம்பி நூல்பொதி
தூறெலா மின்மினித் தோற்ற மென்னவே.

இ-ள். [புகுதற்கு விட்டவழியல்லதுவேறு] வழிகளில்லாமல் எங்கும் நிரப்புதலான கூடாரத்துள்ளே ஏற்றிவைத்திருக்கிற காற்றாகிய பகையில்லாமல் விளங்குகின்ற அழகையுடைய இரத்தினவிளக்குகளின்ஒளியானது, சிலம்பிப்பூச்சியாலே கட்டப்பட்ட நூற்படலைகள் முழுதும் மின்மினிப்பூச்சிகளினுடைய தோற்றமென்று சொல்லும்படி துணிந்து சொல்லலாகிய தகுதியையுடையன. எ-று. (அங)

குசைநெடுங் கடும்பரிக் கொற்ற மன்னவன்
வசையிலா நங்குல மடந்தை மாமுலைக்
கிசைவனோ வென்றுவந் தெட்டிப் பார்த்தெனத்
திசையெலாங் கதிர்விரித் தெழுந்த திங்களே.

இ-ள். கடிவாளத்தையுடைய நீண்ட வேகமான குதிரைமே லேறுகிற ஜயத்தைக்கொண்ட அரிச்சந்திரமகாராசனானவன், யாதொரு பழிப்பு மில்லாத நமது குலத்திலவதரித்த சந்திரவதியினுடைய பெரிய தனங்களுக்குத் தகுந்தவனோவென்று அவனை யெட்டிப்பார்ப்பதுபோல் சந்திரனானவன் சந்தோஷித்து எட்டுத்திக்கிலுந் தனது கிரணங்களை விரித்துக்கொண்டு உதயமாயினான். எ-று. (அச)

செங்கய லனையகட் டெரிவை தன்றிரு
மங்கல முணர்ந்துமண் மடந்தை யட்டதோர்
பங்கமி லிரசிதப் பானை மேல்வழி
பொங்கலிற் புதுநிலாப் பொலிந்த தெங்குமே.

இ-ள். சிவந்த கயற்கெண்டைமீனையொத்த கண்களையுடைய சந்திரவதியின்திருக்கலியாணத்தைத் தெரிந்து, பூமிதேவி சமையல்செய்ததாகியஒருதோஷமுமில்லாத வெள்ளிப்பானைமேல் விரிந்து பொங்குகிற பாற்பொங்கல்போலவ்விடத்தும் புதிதான சந்திரிகை நிறைந்து விளங்கின. எ-று. (அரு)

பெருத்தவா னிலவிடைப பேதை மாதரைக்
கருத்துறக் காதலர் கலந்து றங்கினா
வருத்தமுங் காதலும் வளர மன்னவ
னொருத்தனே தனிக்கிடந் துறக்க நீங்கினன்.

இ-ள். அப்படிப் பாவிலை வெண்மையான சந்திரிகையாலே. அறியாமையையுடைய பெண்கள் மனதொருமிக்க, அவர்களுடைய நாயகர்கள் கூடி நித்திரை செய்தார்கள். அரிசசந்திரன் ஒருவனே மனவருத்தமும் ஆசையும் மேன்மேலாகி வளரத் தனியனாய்ப் படுத்து நித்திரையில்லாதிருந்தான். எ-று.

உருவெளி தோக்குவ னுவப்ப னுன்னவன்
கரவினு லேங்குவன் கலங்கு வன்மதி
மரபினு டன்கணென் மனது போம்வழி
யிரவுபோ தற்கிட மில்லை யோவென்பான்

இ-ள். அப்படி நித்திரைகொள்ளாமல் சந்திரவதியினுடைய உருவெளித்தோற்றத்தைப் பார்ப்பான்; சந்தோஷிப்பான்; அதையே கருதுவான்; அதை மறந்தபோது துக்கிப்பான்; கலங்குவான், சந்திர குலத்தினளாகிய சந்திரவதியினிடத்திலே என்மனது போவதாகிய வழியில் இராத்திரியிலே மாத்திரம் போவதற்கு இடமில்லையோவென்று புலம்புவான். எ-று. (அஎ)

கொடியமா மதனையுங் கொழுநி லாவையு
நொடியினு மொருகுறை சொல்லி நோகிலான்
படிகிலா விழியையும் பாரில் வோதிறீஇ
விடிகிலா விரவையும் வெறுக்கும் வேளையில்.

இ-ள். கொடுமையையுடைய பெரிய மன்மதனையும், செழுமையான சந்திரனையும் ஒருநொடிப்பொழுதாயினும் ஏதேனுமொரு குறையைச்சொல்லி நொந்துகொள்ளாதவனாய், தூங்காத கண்களையும், உலகத்திலே வேறுன்றி விடியாதிருக்கிற இராத்திரியையும் வெறுத்துக்கொண்டிருக்கிற சமயத்தில்.

மையலுங் கங்குலு மதியும் வாட்டவிவ்
வையனே வெளியனென் றணிவ யிற்றினிற்
கையினு லறைநதுகூய்க் காமர் வாரணம்
வெய்யவா விரையவா வெனவி ளித்தவே.

இ-ள். அரிச்சந்திரனைக் காமமயக்கமும் அந்த இராத்திரிகாலமும், சந்திரனும் வாடச்செய்வனவாயிருக்க, அப்போது அழகான கோழிகள் இந்தஜனனை அரிச்சந்திரனே எளியனாயிருக்கிறானென்று அழகழகிய வயிற்றில் [இறகாகிய] கையினலே மோதி யடித்துக்கொண்டு சூரியனே! சீக்கிரமாகி விரைவில் வாவென்று கூப்பிட்டன. எ-று. (அகூ

ஊழிவெங் கதிரவ னுதய முன்னறிந்
தாழியுந் திங்களு பார்ப்ப டங்கின

கோழியு மார்த்தன குக்கி லார்த்தன
சூழியிற் புள்ளெலாந் துள்ளி யார்த்தவே.

இ-ள். வெயிலையுடையவனென வெவ்விய கிரணத்தைக் கொண்டசூரிய னுதிப்பதை முன்னே தெரிந்து கடலுஞ் சந்திரனும் தங்கள் ஆரவாரமடங்கின. அப்போது கோழிகளெங்குங் கூவின. செம்போத்துகள் கத்தின. குளங்களிலே தூங்குகிற பட்சிசாதிகளெல்லாந் துள்ளித்துள்ளிச் சத்தித்தன. எ-று.

குக்கில்-செம்போத்து. சூழி-குளம். (கு0)

நங்குலத் தரசனை நலிந்த பாதகக்
கங்குலைத் திங்களைக் கனன்று தேர்கடா
யங்கண்மா ஞாலம்விட் டகற்று வேனெனாச்
செங்கதிர்க் கடவுளுஞ் சிவந்து தோன்றினான்.

இ-ள். நமது குலத்திலே பிறந்த அரிச்சந்திரனை வருத்தப்படுத்தின பாவிகளான இரவையும், சந்திரனையும் கோபித்துத் தனது தேரைச் செலுத்திக்கொண்டு அழகிதான இடத்தையுடைய பெரிய வுலகத்தை விட்டுப் போம்படி செய்கிறேனென்று சிவந்த சூரியபகவானுந் தனது கண்கள் சிவப்பா யுதயமாயினான். எ-று. (கக)

படர்கெடுத் தறநிலை பரித்த மன்னனுக்
கிடர்வினைத் தெய்திய விராம டந்தையிப்
புடவிவிட் டேகினும் போன திக்கெலாந்
தொடர்மினென் றெண்ணிலாச் சுடரை யேவினான்.

இ-ள். உலகத்திலுள்ள துன்பத்தைப் போக்கித் தருமத்தினது நிலையைக்காத்த அரிச்சந்திர மகாராசனுக்குத் துன்பத்தையுண்டாக்கிக் கொண்டிருந்த இரவாகிய பெண்ணை, அவள் இந்த வுலகத்தைவிட்டுப் போனாலும் அவளோடிப்போன திசைகளெல்லாம் தொடர்ந்து பற்றுங்களென்று சூரியனானவன் கணக்கில்லாத தனது கிரணங்களை யனுப்பினான். எ-று. (கஉ)

அலரிவந் தெழுமுர சதிர வாழிபோற்
புலரியி லரனடி பூசித் தண்ணலுஞ்
சிலர்சில சுடர்மணித் தேரி லேறினார்
பலர்பல கரிகளும் பரியு மேறினார்

இ-ள். அப்படிச் சூரியன்வந் துதயமாகவே, கடலைப்போற் பேரிகைகள் முழங்க, விடியற்காலத்திலே சிவனடியைப் பூசைபண்ணி அரிச்சந்திர மகாராஜனும் அவனைக் கூடிவருகிற சிற்சிலரும் ஒளியையுடைய இரத்தினகசிதமான தேர்மேற் கொண்டவர்களாக. மற்றைப்பலரும் பலபலவான யானைகளின் மேலுங் குதிரைகளின் மேலு மேறினார்கள். எ-று. (கங)

அந்தமா லாற்றைவிட் டகன்று மன்னவ
முந்தமால் கரிபரி நடப்ப மொய்த்துடன்

கநதமா லைகருழற கடலு டனவரச
சந்தமால் வரைத்தடஞ் சார லெண்ணினன்.

இ-ள் உடனே அரிச்சந்திரமகாராஜன் அந்தப் பெரிதான கோமதி யாற்றைக் கடந்துநீங்கி, உயர்ந்த யானைகளும், குதிரைகளும், நெருங்குதலாய் முன்னேநடக்க, பரிமளத்தையுடைய மாலைகளணிந்த கூந்தலையுடைய பெண்கள் கூட்டமான கடலுந் தொடர்ந்துவரச சந்தனமரங்களோடுகூடி உயர்ந்துள்ள மலைகளினுடைய பெரிய சாரலைப்போய்ச் சேர்ந்தான். எ-று. (கச)

அரிதகி பலாசமா திலக மாசினி
விரிமலர்ச் சண்பகம் வேங்கை கோங்கமை
சொரிமலர்ச் சுரபுனை யசோகு துன்னிய
வரிமணற் காவிடை வநது வைகினன்.

இ-ள். கடுக்காய்மரம் - பலாசமரம் - மாமரம் - மஞ்சாடிமரம் - பலாமரம் - விரிகிற மலர்களையுடைய சண்பகமரம் - வேஙகைமரம் - கோங்குமரம் - மூங்கில்மரம்- சொரிகின்ற மலர்களையுடைய சுரபுன்னைமரம் - அசோகம் ஆகிய இவ்வகை மரங்களில் நெருங்கிய [கிளைகள்] இசையினை மிழற்றுகின்ற மணத்தைக்கொண்ட சோலையிலேவந்து தங்கினன். எ-று. (கரு)

அலைசுனை யாடவு மருவி யாடவு
மலைமிசைப் பிடியும்வன் களிறு மானவே
சிலைநுத லாருஞ்செல் வருஞ்சென் றேறினர்
முலையொடும் புயத்தோடு நிகர்த்த மொய்ம்பின

இ-ள். அலைகளையுடைய சுனைநீராடவும், அருவிநீராடவும். மலைமேலே பெண்யானையும் வலிதான ஆண்யானையும்போல. வில்லைப்போலு நெற்றியையுடைய பெண்களும், புருஷர்களும்போய் ஏறினார்கள். அம்மலையானது ஸ்திரீகளினுடைய கொங்கைகளையும், புருஷர் தோள்களையும் ஒப்பானசிகரங்களுடையதா யிருக்கின்றது. எ-று.

மொய்ம்பு தோள் - மலைத்தோள், சிறுகுன்றுகள். (கசு)

அருவிக ளாடுவார் சுனைக ளாடுவார்
வெருவிவந் தகன்கரை மீதி லேறுவார்
சருவிநின் றோடியப் புனலிற் றாவுவார்
மருமலர் கொய்குவார் மலைந்து மீள்குவார்.

இ-ள். அருவிகளிலே நீராடுகிறவர்களும், சுனைகளிலே நீராடுகிறவர்களும், அப்படி நீராடுவதற் கஞ்சிவந்து அகன்ற கரைமே லேறுகிறவர்களும், சைகைசெய்து விளையாடிக்கொண்டு நின்று அந்நீரிலே குதிக்கிறவர்களும், பரிமளத்தையுடைய பூக்கொய்கிறவர்களும், அப்பூவைச் சூடிக்கொண்டு திரும்புபவர்களு மாயினார்கள். எ-று.

சருவல் - சைகைசெய்தல். (கஎ)

அருவியுஞ் சுனைகளு மாடி நுண்மணல்
மருவிய வண்டலு புணர்ந்த சோலையும்
பருவரைக் குடுமியும் பளிக்குப் பாறையும்
பொருவிலாப் புனங்களும் புகுந்து நோக்குவார்.

இ-ள் அப்படி அருவிகளிலுஞ் சுனைகளிலும் நீராடி, நுண்ணிய மணல்களையுடைய வண்டலிலும், அவ்வண்டல் கூடின சோலைகளிலும், பருத்தமலைச்சிகரங்களிலும், பளிங்குப் பாறைகளிலும், ஒப்பில்லாத தினைப்புனங்களிலும் போய் வேடிக்கை பார்ப்பார்கள். எ-று. (௯௮)

அன்றிருந் தணிவரைச் சாரல் வைகியே
துன்றிருள் விடிந்தபின் சோதி வேலினன்
சென்றிருஞ் சுடர்மணித் தேரி லேறியே
வென்றிவெம் படையொடும் விரைந்து போயினன்.

இ-ள். அழகிதான மலைச்சாரலிலே அன்றைய தினந் தங்கியிருந்து, நெருங்கின இருளையுடைய இராத்திரி விடிந்தபின்பு ஒளியைக்கொண்ட வேலாயுதத்தையுடைய அரிச்சந்திரன் எழுந்துபோய் மிக்க பிரகாசத்தை யுடைய இரத்தினமயமான தேரின்மே லேறிக்கொண்டு, ஜயத்தையுடைய குரூரமான சேனைகளுடனே அதிசீக்கிரத்திலே போயினன். எ-று. (௯௯)

வேயிருங் கானமும் வெற்பி னுச்சியு
மாயிரும் பொழில்களு மடிந்து நுண்பொடி
யாயின விசும்பினை யடைந்த தூளியுஞ்
சேயிருஞ் சுடர்மணித் தேர்கள் செல்லவே.

இ-ள். மிகவு முயர்ந்து பெரிதான காந்திகளையுடைய இரத்தினகசிதமான இரத்தினங்கள் செல்லுதலாலே. மூங்கில்களுடைய பெரிய காடுகளும், மலைச்சிகரங்களும் மிகப்பெரிதான சோலைகளும் அழிந்து சிறியபொடிகளாயினவாய், அதினின்று மெழுந்த தூளிக ளெல்லாம் ஆகாயத்தில் போய்ச் சேர்ந்தன. எ-று. (௧00)

செந்நிறப் பொலன்கதிர்த் தேரி னூழியுந்
தந்நிற மவ்வழி யணைத்து மாதலாற்
பன்னிறக் கிரிகளும் பரந்த பாறையும்
பொன்னிற மேருவே போற்பொ லிந்தவே.

இ-ள். அரிச்சந்திரனுடைய சிவந்த நிறத்தையுடைய பொன்னிறமான ஒளியைக்கொண்ட தேரி னுருளைகள் படிந்து, அந்தத் தேரி னிறமே அவ்வழிமுழுது மாகிறதினாலே, பலநிறங்களையுடைய மலைகளும், பரவுதலான கற்பாறைகளும் பொன்னிறமான மகம் மேருவைப்போல விளங்கின. எ-று.

வானமுற் றெழுந்தமா மலையு மால்கரித்
தானமுற் றொழுகிய தடமுஞ் சாரலு

நானமுற் றெழுநறும் பொழிலு நண்ணிவெங்
கானமுற் றருநெறி கடந்து போயினான்.

இ-ள். ஆகாயத்தைத் தொட்டுக்கொண் டுயர்ந்திருக்கிற பெரிய மலைகளும், உயர்ந்த யானைகளுடைய மதங்கள்பட் டுயர்ந்துகிடக்கிற மேகெளும், அந்த மலைப்பக்கங்களும், கஸ்தூரி வாசங்கொண் டெழுந்துள்ள நல்லமலர்ச் சோலைகளும், வெப்பமாகிய காடுகளும் கடந்துபோய், இப்படியே பல அரிதான வழிகளெல்லாம் அரிச்சந்திரன் கடந்துபோயினான். எ-று. (கoஉ)

விரிந்த வெங் கமர்களும் வெயிலின் வெந்துகீழ்
சரிந்தமா மலைகளுஞ் சருகு வெந்துமேற்
பொரிந்தமா மரங்களும் புகைந்து பார்மிசை
யெரிந்தெழு கடுஞ்சுரத் தெல்லை யெய்தினான்.

இ-ள். இப்படி விரிந்திருக்கிற செவ்விதான விடர்நிலங்களும், வெயிலினாலே வெந்து கீழே சரிந்துகிடக்கிற பெரிய மலைகளும், சருகுகள் வெந்து மேலே பொரிந்திருக்கிற பெரிய மரங்களும், புகைதலாய் நிலத்தின்மேலெல்லாம் எரிந்தெழுகிற கடுமையைக் கொண்ட பாலைவனத்தினெல்லையை யரசனணுகினான். எ-று. (கoங)

அறுசீர்க்கழிநெடிலடி யாசியவிருத்தம்

என்றுமம ரர்க்குவினை யின்றியரன் முப்புர மெரித்த கனலும்
வென்றிமத னைப்பொடி படத்திரு நுதற்கணை விழித்த கனலும்
வன்றிறையெறிந்தெழுகடற்குணடுவைத்தவடவைக்கனலுமுற்
றொன்றுபடவந்துகுடிகொண்டவனுறைந்தனவுருப்பமெழவே.

இ-ள். இனி எக்காலத்தும் தேவர்களுக்குத் துன்பவினையில்லாமல் சிவபெருமான் திரிபுரத்தை எரித்த நெருப்பும், வெற்றியையுடைய மன்மதனைச் சாம்பலாக அழகிய நெற்றிக்கண்ணைத் திறந்தெரித்த நெருப்பும், வலிதான அலைகளைவீசி எழுகிற கடலுக்குள் நடுவே வைத்திருக்கிற வடவாக்கினியும் கூடி ஒன்றாகவந்து குடிகொண்டு எவ்விடத்தும் வெப்பம்வீசி அங்குத்தங்குதலாயின. எ-று. (கoச)

கானமுழுதுந்தெறுகனற்றிரளில்வெந்தெழுகதிர்ச்சுடரின்வெந்
தூனமுற வற்றியுர கத்தலை வெடிப்பவத னுச்சி வழிபோய்
வானள வெழுந்துபுவி மீதுவிழு கின்றமணி வந்து பகல்வான்
மீனம்விழு கின்றபடி யாமென விளங்கின வெளிப்புற மெலாம்.

இ-ள். அந்தக்காடு முழுதும் சுடுகிற நெருப்புச் சுவாலையினாலும், ஆகாயத்தி லெழுந்துவருகிற சூரிய கிரணத்தினாலும் வெந்து பழுதாக வுலர்ந்து வற்றுதலாய்ப், பாம்புத்தலைகளும் பிளப்ப அதனுடைய தலையினின் றும்போய் ஆகாயத்தளவுமெழுந்து மண்மேலே வந்து விழுகின்ற நாகரத்தினங்கள். பகற்காலத்திலே உதிருகிற நட்சத்திரக் கூட்டங்கள் ஒப்பாமென்ன, அந்தவெறுநில வெளியினிடங்களெல்லாம் விளங்கின. எ-று. (கoரு)

கரும்புய லருந்துளி கரந்துடல் கரிந்தயல் கலைந்து நெடிதாய்
வரும்பருவ முந்தலை மயங்கிமழை யென்பது மறந்த வதனாற்
பெரும்புவி பிளந்ததி லனந்தன்முடி யிற்சுடர் பிறங்கி யெழுமா
லிரும்புவி சினந்தழ லுமிழ்ந்தவத னைச்சுட வெழுந்த தெனவே.

இ-ள். கரியமேகங்கள் பெய்கிற அரிதான மழைத்துளிக ளில்லாமல் அந்நில வெப்பத்தினாலே உடலெல்லாந் தீய்ந்து அந் நிலத்துக்கப்பாலே தங்கள் கூட்டங்கலைந்துபோய் [நாலுமாதவளவாக] வருவதான பருவகாலமுந் தடுமாறி மழைபெய்கிறதென்பதை மறந்துபோனதனாலே. அப்பெரிதான நிலமெல்லாம் வெடித்து. அவ்வழியே ஆதிசேடனுடைய தலையிலுள்ள இரத்தின சோதிகள் விளங்கிக்கிளருந் தன்மையானது. அப்பெரிதான பாலை நிலம் கோபித்துத் தன்மேல் நெருப்பைக் கக்குகிற சூரியனைச் சுடுதற்காக மேலே கிளம்பினதுபோ லிருந்தது. எ-று. (௧௦௬)

சுரப்புறு சிறைப்புன லெனக்கருதி வற்றிய துவட்சி யதனு
னிரப்புறு தவிப்பினை யொழித்திட மனத்தினி னினைத்துழையெலா
மிரப்பவரை நித்தலு நடத்தியுமொ ரற்பமு மிரக்க மிலர்பாற்
பரப்பவரை யொத்தன கரப்பவரை யொத்தன பசாச ரதமே.

இ-ள். மான்களெல்லாம் உடம்பிளைத்துவற்றிய தளர்ச்சியினாலே தமக்கு நிரம்புதலான தாகத்தை நீக்கிக்கொள்ள, பேய்த்தேரான கானலைப் பெருகுகின்ற குளத்து நீரென்று நினைத்து, யாசிப்பதாக ஒருவரிடத்திலே தினந்தோறுஞ் சென்றும் ஒருசிறிதேனுங்கொடுக்க இரக்கமில்லாதவர்களிடத்திலே பரவி யலைகிறவர்களை யொப்பாயின. பேய்த்தேரான கானல் அவர்களுக்குக்கொடாமல் மறைந்துகொண்டு திரிகிறவர்களை யொத்தன. எ-று. (௧௦௭)

அடுந்திறனு மவ்வவர் படுந்திறனு நாமமு மனைத்து மெழுதி
நடுங்கலு நறும்புன றவிர்ந்துடல் பதைத்துயிர் நடுங்கி யுழலுங்
கொடுங்கரி மருப்பும்வெருள் கற்றிடரு மற்றுள குவட்டினிடையு
நெடுங்கடற டந்திரை கிளர்ந்தென முழங்குறு நெடித்திரளெலாம்.

இ-ள். பகைவரைக் கொல்லுகிற சாமர்த்தியமும். அவரவர் படுவதாகிய சாமர்த்தியமும், பெயருமுதலான எல்லாமெழுதி நடப்பட்ட கல்லும், நல்ல நீர்கிடையாமல் உடல்பதைபதைத்து உயிருமஞ்சியலைவதான கொடிய யானைக்கொம்புகளும், பயப்படத்தக்க கல்லுமேடுகளும், இன்னமு முண்டான குன்றுகளினிடத்திலும் நெடிதான கடலிலே பெரிய அலைகள் ஒலிப்பது போல், சிள்வண்டுகளின் கூட்டந்தோசை முழங்குவதாயிருக்கும். எ-று.

நடுங்கல் - நடப்பட்டகல், நெடி - சிள்வண்டு. (௧௦௮)

அந்தவெயி லத்தகல் விசும்பிட வெடித்துவிழு மானை யினெடுந்
தந்தமணி யைத்துளி யெனக்கருதி யுண்டுமல்லு சாதக மெலாம்

MAHAMAHOPADHYAYA
Dr. U V SWAMINATHA IYER LIBRARY

வெந்தெரி கொளுஞ்சரு கெழுந்துவிழு கங்குலில் விரிந்த நிழலில்
வந்தடரு மெண்குமரை யுங்கடமை யங்கலையு மானி னமுமே.

இ-ள். சாதகப் பட்சிகளெல்லாம், அந்த நிலத்திலே எரிகிற வெயிலி ஞலே அகன்ற ஆகாயவரையிலும் வெடித்துச்சென்று விழுகிற யானையி னுடைய நீண்டகொம்பிலுள்ள முத்துகளை மழைத்துளியென் றெண்ணி யுண்டு அலைகின்றன. வெந்து எரிகிற நெருப்புக்கொள்ளுகிற சருகுகள் எழுந்துவிழாநின்ற இருட்டிலே விரிந்திருககிற நிழலில் கரடிகளுங் கானக் குதிரை, கடம்பைகளும், மான்கூட்டங்களும் வருவதுபோல் வந்துவிழு ந்து நெருங்குதலாகும். எ-று. (௧௦௯)

மண்மக ளுடுத்ததிரை வாரிவட வைக்கனலை மாற்றி யிதிலோர்
வெண்மணலை வைக்கிலர மங்கைய ரிரும்பதியும் வெந்து விடுமாற்
கண்முழுதை யும்புடை பெயர்ந்துகவ ருங்கடை யுகத்தி லிதிலோர்
நுண்மணறெ றித்துவிழி னும்பிரள யப்புனலை நுங்கி விடுமால்.

இ-ள். பூமிதேவி ஆடையாக உடுத்தியிருக்கிற அலைகடலிலுள்ள வடவா முகாக்கினியை [வேறிடத்தில்] மாற்றி, அஃதிருக்கிறவிடத்தில் இந்தநிலத்தி லுள்ள ஒரு வெண்மணலைக் கொண்டுபோய் வைத்தால், அரம்பையர்க ளிருக் கிற பெரிய தெய்வலோகமும் அதன்சுவாலையிலே வெந்துபோம், இந்தப்பூமியி னிடங்களெல்லாம் தானிருக்குமிடத்தை விட்டுவந்துகவளீகரிக்கிற யுகமுடி விலே இந்த நிலத்திலுள்ள ஒரு நுண்ணிய மணல்தெறித்து விழுந்தாலும் பிரளயகாலத்து வெள்ளத்தையும் குடித்துச் சுவறப்பண்ணும். எ-று. (௧௧௦)

வெங்கதிர்தெ றுங்கொடிய விண்டுவனம் வெந்தெரியும் வெந் தழலி
யங்கதமி றந்துமத குஞ்சர மிறந்துட லழிந்தி டமெலாஞ் [ன்வா
செங்குருதி யங்கடம்பின் மண்டமுது வாரியலை சிந்து நுரைபோ
லெங்கணும் விளங்குவன வெண்குவ டெனும்பரி செலும்பு மலையே.

இ-ள். சூரியனாலே சுடப்படுகிற நீண்ட மூங்கிற்காடுவெந்து எரிகிற வெப்பமான நெருப்பினிடத்திலே, பாம்புகளும் மதயானைகளும் விழுந்து செத்து, அவைகளினுடம்புகளழிந்து எவ்விடங்களிலும் பெருகின சிவந்த இரத்தமானது அழகிதான கடலிலே போய்க் கலக்க, அந்தப் பழைய கடலி னலைகள் சிந்துகின்ற நுரைபோல் வெள்ளை மலைக ளென்னும்படி எலும்பு மலைகள் எவ்விடத்திலும் மிதப்பன வாயின. எ-று. (௧௧௧)

வெங்கரி யுரித்திடை புனைந்தவள் சலஞ்சலை விளங்கு சடிலச்
சங்கரித்ரி சூலதரி தாருக விநாசனி சவுந்த ரிசெழும்
பொங்கரி மணிப்பரி புரத்திரு பதத்தினள் பொருப்ப னதனத்
தெங்கடனி நாயகி யிருந்தசம யத்தியல்பெ டுத்து ரைசெய்வாம்.

இ-ள். வெவ்விய யானையை யுரித்து அதன்றோலைப் புனைந்தவள்; கங்காசலமும் சந்திரனும் விளங்குகிற சடையையுடைய சங்கரி. திரிசூல

தரி; தாருகவிநாசனி; சவுந்தரி; செழுமையாக ஒலிக்கின்ற கற்களாக முத்து முதலிய இரத்தினங்களையிட்ட சிலம்புகளணிந்த இரண்டு திருவடிகளையுடையவள்; மலைகளையொப்பான தனங்களைக்கொண்ட எங்களுடைய ஒப்பற்ற குலதெய்வமான காளிகாதேவியாயிருக்கிற சபையினிலக்கணத்தை இனி ஒருவகையாக விதந்துசொல்லுகிறோம். எ-று. (கக௨)

எறித்தசெழு முச்சுடரு மொத்தொரு தலத்திடை யெழுந்ததெனவே, தெறித்திரு புறக்கடை சிவத்திடை கறுத்தகண் மிகச்சுழலவே, சிறுத்தவிடை யிற்கரத லத்தின்முடி யிற்றிகழ் செறித்தவரவப், பொறிக்கண பணத்தலை மணிச்சுடிகை யிற்கதிர்கள் பொங்கி யெழவே.

இ-ள். விளங்குகின்ற செழுமையான சோமசூரியாக்கினிகளென்கிற மூன்றுசுடர்களு மொருங்குசேரக்கூடி ஓரிடத்திலே உதயமானாற்போல, செறிந்துவிளங்கி இருபுறத்திலுங் கடைசியிலே சிவந்துநடுவே கறுத்திருக்கிற கண்கள்மிகவுஞ் சுழல்வனவாக, சிறிதான இடையிலும் கைகளிலும் தலையிலும் விளங்குவனவாக அணிந்த சர்ப்பங்களினது புள்ளிகளையுடைய கூட்டமான படங்களைக்கொண்ட தலைகளிலுள்ள இரத்தினங்களையுடைய உச்சிக்கொண்டைகளி னொளிகள் மிகுந்து கிளரவும். எ-று.

இதுமுதல் பதின்மூன்று பாடல்கள் குளகம். (கக௩)

மிடித்தவர் களைப்பொருண் மிகுத்தவர் வினைத்தொழில் விளைப்பதெனவே, கொடிப்படர் பொருப்பென விடைக்கிடர் விளைத்தன கும்பவழகுந், தடித்தினடுநிற்குமிர தத்தைநிகர் பொற்கடி தடத்தி னழகும், பொடித்தெழு வெயர்த்திரு முகத்தழகு நின்றொளி பொழிந் தொழுகவே

இ-ள். வறுமையுற்றவர்களைக் கண்டு திரவியத்தின் மிகுந்தவர்கள் சண்டைத்தொழில் செய்வதொப்ப, ஒருகொடிமேலே தங்குகின்ற [இரண்டு] மலைகளைப்போல. இடைக்குத் துன்பத்தைச் செய்கிற குடங்கள்போன்ற தனங்களினழகும், ஒருமின்னலி னடியிலே நிற்கின்ற தேரை ஒப்பான அழகிய கடிதடத்தினுடைய அழகும், பொடிப்பொடியா யெழுகின்ற வெயர்வையை யுடைய திருமுகத்தினழகும் நிலைகொண்டு ஒளிவழிந் தொழுகவும். எ-று. (கக௪)

வேலைக ளெழுந்துலக மேழிரு னுடனேழையும் விழுங்கிவிடுமக் காலமுடி விற்கொடிய வூழிநெடு வெங்கனல் கனன்றெ ரிதல்போற் சாலவினை கொண்டுபொரு தாருகனை வென்றவுணர் தங்கள் குடமாலையிடுகின்றதிரி சூலமிசைவெங்கனல் வளைந்தெரியவே. [றை

இ-ள். கடல்கள் கிளர்ந்து உலகங்கள் ஏழோடேழான பதினான்கையுங் கவளீகரித்துக்கொள்ளுகிற கலிகாலமுடிவிலே, கொடுமையையுடைய ஊழிக்காலத்து நெடிய வெவ்விதான நெருப்புக் கொதித் தெரிகிறதுபோல மிகவும்

சண்டைகொண்டு பொருதுகின்ற தாருகாசுரனைவென்று, அசுரர்களுடைய குடலை மாலையாக அணிந்துகொள்ளுகின்ற திரிசூலத்தின் மேலே வெவ்விய நெருப்பானது சூழ்ந்து எரியவும். எ-று. (௧௧௫)

பொடிப்பொடி திசைத்திசை தெறித்திடு சுடர்த்திரி புரத்த
ழலெனத், தடித்தெழு வலத்தது தடக்கைவடி வாளொளி தயங்கி
யெழவே, வடிக்கடி யெதிர்த்தலை யடித்தெழு முகக்கடலதிர்ச்சி
யெனவே,விடிக்குரன் முழக்கென விடக்கையின் மணிக்கட கிரைத்
தசையவே.

இ-ள். எந்தத் திக்குகளிலும் பொடிப்பொடியாக தெரிக்கின்ற சுடரானது, திரிபுரத்து நெருப்புப்போல் மின்னலெழுகின்ற பலத்தையுடையதாய் வலது தடக்கையிலேயுள்ள கூர்மைகொண்ட வாளினது ஒளியானது விளங்கியோங்கவும், திரும்பத் திரும்பக் கரையோ டெதிர்கொண்டு அலைமோதியெழுகின்ற யுகமுடிவில் முழங்குகிற கடலின் முழக்கம்போலவும், மேகமண்டலத்தில் முழங்குகின்ற இடிபோலவும் இடது கையிலே இருக்கிற மணிக்கடகானது ஒலித்து அசையவும். எ-று. (௧௧௬)

பட்டய மெடுத்தொருகை பத்திர மெடுத்தொருகை பற்றுமழு
வுஞ், சொட்டையு மெடுத்திருகை சக்கர மெடுத்தொருகை சுற்று
மயிலும், வட்டமு மெடுத்தொருகை வச்சிர மெடுத்தொருகை மற்க
ரதல, மெட்டிலும் விதிர்ப்பன சுழற்றுவன வெந்தழ லெழுந்தெ
ரியவே.

இ-ள். பட்டயத்தைக்கொண்டு ஒருகையும். வாளைக்கொண்டு ஒருகையும் பற்றுகின்ற மழுவையும் வளைதடியையுங்கொணடு இருகைகளும், சக்கரத்தைக்கொண்டு ஒருகையும், சுற்றுவதானவேலும் கேடகமுங்கொண்டு இருகைகளும், வச்சிராயுதத்தைக்கொணடு ஒருகையும் இப்படிப் பலங்கொண்ட எட்டுக்கைகளினாலும் வெம்மைகொண்ட நெருப்பெழுந் தெரியும்படி வீசுகிறதாகவும் சுழற்றுகிறது முதலாகவும் செய்கின்றனவாகவும். எ-று.

சொட்டை - வளைதடி. (௧௧௭)

ஆடக மணிக்குழைகள் பாரிய சரப்பணிக ளத்த கடகஞ்
சூடக மிரட்டையடு தாரமொடு பட்டமணி தோள்வளைசெழும்
பாடக மெழிற்பரிபு ரங்கழல் சதங்கைகள் பதக்க முடனே
நீடெழின் மதாணிக ளலைந்துதிசை யெங்குமொளி நின்றுடனே.

இ-ள். பொன்னூற்செய்து இரத்தினங்கள் பதித்த குண்டலங்களும், கனமான சரப்பணிகளும், அஸ்தகடகங்களும். கங்கணங்களும், இரட்டையாகச் சூழுகின்ற அரைநூன்மாலைகளுடனே நெற்றிப்படமும் அணியத்தக்கதோள் வளைகளும். செழுமையான பாடகங்களும், அழகிதான சிலம்புகளும் காலிலணிகின்ற சதங்கைகளும், பதக்கத்துடனே நீண்டுள்ளதான அழகைக்கொண்ட மற்றுமுள்ள ஆபரணங்களும் எட்டுத்திக்கிலும் அசைதலாய் அவைகளின் சோதிநிலைகொண்டு நெருங்கவும். எ-று. (௧௧௮)

நித்தில நிரைத்துவயி ரத்தின மழுத்திமுழு நீல நிறுவிப்
பத்திபட வொப்பரிய பச்சைவிர விப்பதும ராக மளவிச்
சித்திர மியற்றிய மணிக்கலையு மப்பரிசு செய்த கிரணத்
துத்தரிய முந்தொடையு முற்றுநில வும்வெயிலு மொக்கவிழவே.

இ-ள். முத்துகளை வரிசைப்படுத்தி, வயிர ரத்தினங்களின் கூட்டங்களைப் பதித்துள்ளதாய், முழுநீலத்தையும் நிலைக்கச்செய்து, வரிசையாக ஒப்பரிதான பச்சையுங்கலந்து, பதுமராகத்தையுங்கூட்டிப் பலவித சித்திரங்களுஞ் செய்துள்ள மணிமயமான இடையிலுள்ள வஸ்திரமும், அப்படியே செய்திருக்கிற காந்தியையுடைய மார்யாப்பும் மாலைகளுங்கூடி முழுதும் சந்திரிகையையும் வெயிலையும் ஒத்து [ஒளிகள்] சிந்தவும். எ-று. (கககூ)

காவன்முறை நிற்பவொரு கோடியுள கற்பனைகள் கற்றுவழுவா
தேவவிடை நிற்பவொரு கோடியுள கூடிய விடாகி னிகண்மே
லாவலொடு நிற்பவொரு கோடியுள நன்னெறி யமைச்சரெனவே
போவனவு மீள்வனவு மாவவொரு கோடியுள பூதகணமே.

இ-ள். காவலாக வரிசைகொண்டு நிற்பவைகளாயுள்ள ஒருகோடி பூதங்களும், பலவிதமான கற்பனைகளுங் கற்றுந் தப்பாமற்சொன்ன பணிவிடைகளின்படியே நடப்பவைகளாயுள்ள ஒருகோடி பூதங்களும், அவைகளோடு சேர்ந்து மேன்மேலான அன்புகொண்டு நிற்பவைகளாயுள்ள ஒருகோடி இடாகினிகளும், நன்மார்க்கங்களைச் செய்கிற மந்திரிகள் போலப் போகுமவைகளும் திரும்பிவருமவைகளும் செய்வனவாகவுள்ள ஒருகோடி பூதகணங்களும். எ-று. (கஉ0)

அச்சம தறத்தம துயிர்க்கொடை யளித்தவ ரறுத்த தலையை
வச்சிர மணிக்கடக நற்கர தலத்திணிடை வைப்பசிலவே
யிச்சையி னரப்பலிக ளிட்டதலை யைக்கடி தெடுத்தி றைவிமுன்
பச்சுதிர முற்றொழுக வைப்பசத கோடிகள் பசாச கணமே.

இ-ள். சில பிசாசுகள், பயமில்லாமல் உலகத்திலே தங்களுயிரைப் பிறருக்குக் கொடையாகக் கொடுத்தவர்களுடைய அறுத்த தலைகளை, வயிர இரத்தினங்கள் பதித்த கடகங்களணிந்த காளியினுடைய நலமான கையின்கண் கொண்டுவந்துவைக்கவும், நூறுகோடி கணக்குள்ள பசாசுக்கூட்டங்கள் தங்களிச்சைப்படியே நரபலிகளாகக் கொடுத்த தலைகளை விரைவிலே யெடுத்துக் கொண்டுவந்து காளிகாதேவிமுன்னே பசுமையான உதிரமானது முழுதும் ஒழுகவொழுக வைக்கவும். எ-று. (கஉக

ஈடுபடு நுண்ணிடை நுடங்கமிகு சாமர மிரண்டு புறமும்
போடுமவ ரும்பரி புரத்திரு மலர்த்துணை பொருந்தி முடிமேற்
சூடுமவ ருங்கவி தொடுக்குமவ ரும்பவுரி சுற்றிமுறைநின்
றாடுமவ ரும்மிசைகள் பாடுமவ ரும்பல வரம்பை யர்களே.

இ-ள். நிமிர்வதும் துவள்வதுமான நுண்ணிய இடைகள் தடுமாற, மிகுதியான வெண்சாமரங்களை இருபுறத்திலும் வீசுகிறவர்களும், தேவியுடைய

சிலம்புகளணிந்த இரண்டுபொதங்களையுங் கூட்டிச் சிரசின்மேலே சூடிக்கொள்ளுகிறவர்களும். பாட்டுகள் பாடுகிறவர்களும். அவ் வாட்டத்திற் கேற்க அசைக ளாகிய பாடல்கள் பாடுகிறவர்களு மாகிய அநேக வரம்பைப் பெண்களும். எ-று. (கஉஉ)

மஞ்சன மெடுப்பவரு மாமலர் கொடுப்பவரும் வாள்விழிகளுக்
கஞ்சன மளிப்பவரு மாரமு தளிப்பவரு மன்னைதிருமுன்
கஞ்சனை பிடிப்பவரும் வஞ்சனை யறப்பரி கலத்துடனெடுத்
தின்சொல்வழி நிற்பவரு மென்னரிய கோடிக ளிடாகி னிகளே.

இ-ள். திருமஞ்சன மெடுக்கிறவர்களும். பெரிதான புஷ்ப மாலைகள் தொடுக்கிறவர்களும், வாள்போல்வனவான தேவி கண்களுக்கு மையிடக் கொடுக்கிறவர்களும். அரிதான திருவமுது நிவேதிக்கிறவர்களும். அந்தத் தாயான தேவி சந்நிதிமுன்னே கண்ணாடி காட்டுகிறவர்களும், கபடமில்லாமல் பரிகலத்துடனே மற்றும் வேண்டியவைகளைக் கொண்டு தேவியினுடைய இனிதான சொல்வழியே நிற்கிறவர்களு மாகவுள்ள எண்ணுதற்கரிதான கோடி இடாகினிகளும். எ-று. (கஉங)

பண்ணவர் திரண்டுபகா மூன்றிறனில் வந்தடி பணிந்துதொழவே
மண்ணவர் விழுந்துதம தெண்ணமுடி யும்படி வரங்கள்பெறவே
கண்ணருள் சுரந்துதறு கண்ணரி சுமந்தகன கனத்தவிசின்மேற்
பெண்ணர சிருந்தனள் பிறங்குசடி லம்புடை பெயர்ந்தலையவே.

இ-ள். தேவர்கள் திரட்சியாய்க் கூடித் துதிப்பதான திருமுற்றத்திலே, மண்ணுலகத் துள்ளவர்கள் வந்துகீழேவிழுந்து தேவி பாதங்களை வணங்கிக் கும்பிடவும். கும்பிட்டுத் தங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும்படி வேண்டியவைகளைப் பெற்றுக்கொள்ளவும். விளங்குகின்ற சடைகள் பக்கங்களிலெல்லாம் அசைந்தாட. கிருபாதிருஷ்டிகொண்டு அஞ்சாத சிங்கந்தாங்குகின்ற பொன்னாசனத்தின்மேலே [இவ்வளவு சம்பிரமங்களுடன்] பெண்களுக் கரசியான காளிகாதேவி வீற்றிருந்தாள். எ-று. (கஉச)

அம்பொனின் மணித்தவிசி னம்பிகை யிருப்பவர சர்க்கரசனுங்
கம்பகர டக்களிறு வெம்பரி பதாதிகள் கடைத்தலை நிறீஇக்
கும்பமுனி தம்பியொ டருந்தவர் குலத்தரசர் கூடி வரவே [தான்.
வம்புகுடி கொண்டமுலை மங்கை திருமுன்றி லிடைவந்து தொழு

இ-ள். அழகிய பொன்னாலும், இரத்தினங்களாலுஞ் செய்த சிங்காசனத்தில் காளிகாதேவி வீற்றிருக்க. அப்போது ராசாதிராசனான அரிச்சந்திரன் தூணில் கட்டுவதான மதசுவட்டையுடைய யானைகளும், வெவ்விதான குதிரைகளும், காலாள்களும் கடைவாயிலே நிற்பனவாகச்செய்து, வசிஷ்டருடனே அருமையான தம்முனிவர்களும். தனதுகுலத்திலே தோன்றின அர

சர்களும் கூடிவருபவர்களாக, பரிமளமே நிலைகொண்டுள்ள கொங்கைக ளுடைய தேவி திருமுற்றத்திலேவந்து வணங்கினான். எ-று. (கஉ௫)

மேற்படி வேறு.

நற்றேரை விட்டிறங்கி நாயகியைத் தொழுதிறைஞ்சி நண்ணி ராசன், முற்றேரை நோக்குதலு முடிவேந்தன் கருணைவிழி முனைக டாக்கக், கற்றேருங் கற்பரியுங் கற்சிலையுங் கற்கணையுங் கன்னி முன்னே, பொற்றேரும் பொற்பரியும் பொற்சிலையும் பொற்கணையும் பொ லிந்த வன்றே.

இ-ள். அரிச்சந்திரன் தனது அழகிய தேரை விட்டிறங்கித் தேவியை வணங்கித் துதித்துக் கொண்டுபோய், தன்முன்னேநின்ற தேரைப் பார்க்குமள வில், அந்தக்கிரீடாதிபதியான அரிச்சந்திரனுடைய கிருபாதிருஷ்டியின் கூர் மைகள் சென்றுதைக்க, அவ்வளவில் முன்னே கல்லாயிருந்ததேரும், கல்லா யிருந்த குதிரைகளும், கல்லாயிருந்த வில்லும் கல்லா யிருந்த அம்பும், அந்தக் காளிக் கெதிரே தானே, பொன்னுலாகிய தேரும், பொன்னிற மான குதிரைகளும், பொன்மயமான வில்லும், பொன்மயமான அம்புகளு மாக விளங்கின. எ-று. (கஉ௬)

முன்னுளிற் கல்லான முடித்தேரும் வாம்பரியு முரி வில்லும்
பொன்னுகக் கண்டிறைவன் புந்திமகிழ்ந் ததிசயித்துப் புளகமெய்தி
பென்னுக வந்ததிது வெனக்கருது மவ்வளவி லிருண்ட மேனிப்[ள்
பொன்னுருங்களபமுலைப்புரிசடையாண் மணிவாயிற்புறத்து வந்தா

இ-ள். முன்னுளிலே கல்லாயிருந்த சிகரத்தையுடையதேரும், தாவுகிற குதிரைகளும், பெரியவில்லும், அம்பும் பொன்னுயிருக்கக்கண்டு அரிச்சந்திர மகாராசன் மனமகிழ்ந்து ஆச்சரியமுற்று புளகாங்கிதங்கொண்டு இவைகள் என்ன காரணத்தினுலே இவ்வாறுயிற்றென் றெண்ணுகிறபோது, இருண் டிருக்கிற நிறத்தையுடைய பொன்மயமான சந்தனச்சேறு பூசின கொங்கை களைக்கொண்ட சுருண்ட சடையையுடைய காளிதேவியானவள் தனது அழ கியவாயிலுக்கு வெளியே வந்தாள். எ-று. (கஉ௭)

மாதங்கி வந்திடலு மலர்க்கரங்கண் முடிமீது வைத்துச் செம் பொற், பாதங்கண் மிசைவீழ்ந்து பணிந்தெனது தவப்பயன்றான் பலித்த தென்னுப், பூதங்கள் விளையாடுந் திருவாயிற் கற்றேர்போ யப் பொற் றேரான, திதென்று நீயருள்வா யெனக்கேட்கக் குமரி யெடுத் தியம்ப லுற்றுள்.

இ-ள். காளியானவள் அப்படி வெளியேவந்தபோது, தாமரைமலர் போலுங் கைகளைத் தலைமேலே குவித்து, அவளுடைய செம்பொன்மயமான பாதங்களிலே விழுந்து வணங்கி என்னுடைய தவப்பலனுனது இப்போது தான் பலிதமாயிற் றென்று. பூதங்கள் விளையாடுவதான திருவாயிலிலே நின்றகல்லாயிருந்த தேர்வடிவுபோய் இப்போது பொற்றேரானது இன்ன

காரணத்தினாலென்று நீ அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்க, அதற்குக் காளியானவள் அதன் வரலாற்றையெடுத்துக்கூறலாயினள். (கஉஅ)

உவராழி மண்ணனைத்தையொழித்தகனுமடல்வருண னுலகில்யாருங், கவராது பொற்றேரைக் கற்றேரா கச்சமைத்துக் கண்முன் காட்டி, யெவரேனு மிதுநோக்கி னிவ்வுருப்போய்ப் பண்டையுருவெய்துமாகி, லவராகு மிதற்குரியோ ரவர்தமக்கே கொடுப்பதென வளித்துப் போனான்.

இ-ள். இந்த உப்புக்கடல் சூழ்ந்த உலகத்தாசையை நீக்கிச் செல்லுகின்ற பலிஷ்டனான வருணபகவான், உலகத்தி லுள்ளவர்கள் எவர்களும் கொண்டுபோகாதபடி பொற்றேரைக் கற்றேராக நியமித்து என்கண்களுக்கு முன்னேகாட்டி, இனியாவரானாலும் இந்தத் தேரைப் பார்த்தபோதில் இக் கல்வடிவுபோய்ப் பழைய பொன்வடிவ மாகுமானால், அவ்வாறாகப் பார்த்தவர்களே இந்தத் தேருக்குரியவர்கள். அவர்களுக்கே நீ கொடுக்கக் கடவையென்று என்வசம் கொடுத்துச் சென்றான். எ-று. (கஉகூ)

மன்னாகே ளென்னுடைய மணிவாயி றனில்வருணன் வைத்துப்போன, அந்நாடொட் டிந்நெடுநா ளளவாகக் கல்லாய்நின் னருட்கண்ணோக்கப், பொன்னான செழுந்தேர்நீ கொடுபோவென் றினிதளிக்கப் புகழ்ந்த யோத்தி, நன்னாடன் றான்வாங்கி நவமணித்தே ரதிலேறி நடத்தினானே.

இ-ள். அரிச்சந்திர மகாராசனே! கேட்பாயாக: என்னுடைய திருவாயிலிலே வருணனானவன் வைத்துச் சென்ற அந்நாள் தொடங்கி இந்நெடுங்காலவளவும் கல்லாயிருந்து இப்போதுன்னுடைய கிருபைகக் கண்ணாலே பார்க்கவே பொன்னான இச் செழுமையான தேரை நீயே கொண்டுபோவென்று சந்தோஷித்துக் கொடுக்க, அயோத்தியைச் சூழ்ந்த நல்ல கோசல நாட்டையுடைய அரிச்சந்திரமகாராசன் அக்காளியைத் துதித்துப்பெற்றுக் கொண்டு அந்த நவரத்தின கசிதமான தேரின்மேலேறிச்செலுத்தினான். எ-று.

கலி விருத்தம்.

வாள்செலச் சிலைசெல மாத ரார்செல
வாள்செலத் தேர்செல வானை செல்லநீ
டோள்செலுஞ் சுடர்மணித் தொடியி னன்பல
நாள்செலக் கன்னோசிமா நாட்டை நண்ணினான்.

இ-ள். வாள்கள் செல்லவும் விற்கள் செல்லவும் இப்படிப் பெண்கள் செல்லவும் காலாள்கள் செல்லவும் தேர்கள் செல்லவும் யானைகள் செல்லவும் நீண்ட தோள்களிலேபுகுந்திருப்பதான ஒளியையுடைய இரத்தினங்கள்பதித்த கேயூரமணிந்த அரிச்சந்திரன் பலநாள் கழிவதாகப் பின்பு கன்னோசிமா நாட்டைப் போய்ச் சேர்ந்தான். எ-று. (கங௧)

தாழையின் முதிர்பழங் கமுகின் முறுதே
மாழையின் கனிவிழை வருக்கை யின்பலங்
கூழைவெண் குரங்கயல் குதிப்பக் கூன்குலை
வாழையின் கனியெலா மடிய விழுமால்.

இ-ள். [அந்நாட்டில்] தென்னமரங்களினுடைய முற்றின நெற்றுக்களும், கமுகினது குலைகளும், தேன்பொருந்திய மாமரத்தின் கனிகளும், விரும்பத்தக்க பலாவின் பழங்களும் [மிகுந்திருப்பதனால்] வாலையுடைய வெண்மையான குரங்கு ஒரு தென்னமரத்திலே யிருந்து மற்றொரு தென்னமரத்திலே குதிக்க, அந்த அதிர்ச்சியினாலே வளைந்த குலைகளையுடைய வாழைமரங்களின் பழங்களெல்லாம் அழிந்து சிந்திவிழும் எ-று. (கஙஉ)

கூன்கடு வன்றலை குறும்பை வீழ்தலின்
றீங்கனி வருக்கையிற் புதைந்த செம்முக
வான்கவி வால்பிடித் திழுத்து மந்திமுன்
றன்கொடு கதலியும் படப்பை சாருமால்.

இ-ள். கூன்வான ஒரு ஆண்குரங்கு பாய்கிற அதிர்ச்சியினாலே தென்னங்குரும்பை தன் றலைமேல் விழ, அந்தப் பயத்தினாலே இனிதான பழங்களையுடைய பலாமரத்திலே மறைந்திருந்த சிவந்த முகத்தையுடைய ஒரு பெரிய குரங்கானது வாலைப்பிடித் திழுத்துப் பெண்குரங்கை முன்னே தான் கூட்டிக்கொண்டு வாழைச் சோலைக்குள்ளே போய்ப்புகும்.எ-று. (கஙங)

பலவளை மணிகளும் பதும ராகமு
நிலவெழ வெயிலெழ நீலம் பங்கயம்
புலரியு மாலையும் புகுத லின்மையை
மலர்தலுங் குவிதலு மறந்த வாவியே.

இ-ள். பலவிதமான சங்கும்முத்துகளும் பதுமராக மணிகளும் எக்காலத்திலே நிலவுதோன்றவும், வெயிலெறிக்கவும். விளங்குகிறதினாலே, குளங்களில் நீலமலர்களும், தாமரைமலர்களும் விடியற்காலமும் மாலைக்காலமுந் தோன்றுகிறதில்லையென்று மலர்கிறதும் குவிகிறதும் மறந்திருக்கின்றன.

தாள்களுந் துடைகளுந் தையலார்மணித்
தோள்களு முலைகளுஞ் சோலை காட்டுவ
நீள்கனங் குழைகளு முகமு நீலக்கண்
வாள்களும் வாய்களும் வாவி காட்டுமே.

இ-ள். அசோகின் றளிர்களாலே கால்களையும், வாழைகளாலே துடைகளையும், மூங்கில்களாலே பெண்களுடைய அழகிய தோள்களையும், கோங்கரும்புகளாலே கொங்கைகளையும் சோலைகள் தோன்றச்செய்வன. சுருள்களாலே நீண்ட கனமான குழைகளையும், தாமரை மலர்களாலே முகங்களையும், நீலமலர்களாலே கருத்த கண்களாகிய வாள்களையும், செவ்வாம்பல்களாலே வாய்களையும் குளங்கள் தோன்றச் செய்வன. எ-று. (கஙு)

திருதிகென் றலைபுனன் மதகு சிந்தவு
பகுதியுட் பகுதியுட் பற்ற றுதென
வெகுதிரைப் பேரொலி வேலை யேழுமுட்
புகுதினு நிறைவுறா தளவில் பொய்கையே.

இ-ள். திருதிகென்று அலைகள் முழங்குகின்ற நீரை மதகுகள் பாய விடுகிறதினாலும், காலப்பகுதிகள்தோறும் காலப்பகுதிகள்தோறும் நீரைக் கொண்டிருத்தலின், குறைவுபடாதென்று சொல்லும்படி யநேகமான அலைகளில் பெரிய ஒலிகளையுடைய கடல்களேழும் உள்ளே புகுந்தாலும் அப்பொய்கை நிறைவுகொள்ளாது இதிலுள்ள நீரளவினாலே. எ-று.

கன்னோசி நாட்டில் ஒரு குளத்திலுள்ள நீரளவுக்கு எழுகடனீரளவும் பற்றாது. வருஷங்கள்தோரும் வயல்களுக்கு மதகின்வழியே நீர் பாய்ந்து கொண்டிருந்தாலும் நீர் வற்றுகிறதில்லை யென்க. (௧௩௬)

துகிரினுஞ் சிவந்ததாட்டுணைவெண் பேடையோ
டுகிரினு மலகினு மொடுக்கு மீனுடன்
றிகிரியம் புள்புடை பெயரத் திண்சிறை
பகிரினீர் கடையுகப் பௌவ மன்னதே.

இ-ள். பவளத்தைப் பார்க்கிலுஞ் சிவப்பான கால்களிரண்டையுடைய வெண்ணிறமான பெட்டையுடனே கால்நகத்தினாலும் வாய் மூக்கினாலும் ஒடுக்கங்கொண்ட மீனுடனே சக்கரவாளப் பட்சிகள் பக்கத்திலே செல்லுவதான அந்தத் திண்ணிய பொய்கைக் கரையினின்றும் வயல்களுக்கு நீரை மதகின்வழியே பகுத்துவிட்டால் அந்த நீரளவு கடைகாலத்திலே பொங்கி வருகிற கடலைப்போல்வது. எ-று.
அத்திண்சிறை- அத்திண்ணிய பொய்க்கரை. (௧௩௭)

கூடிய பிறனைக் கொள்கை கண்டழன்
றாடிய வோதிம மொளித்த தாமரை
வாடிய வாறுகண் டாவி மாய்ந்திடத்
தேடிய சேவறன் னுளந்தெ ளித்திடும்.

இ-ள். வேறொன்றைக் கூடின தன்னில் வேறான சுகங்கொண்டதைக் கண்டு கோபித்துப் பிணங்கின பெட்டை யன்னமானது வேறொரு தாமரைமலரிலேபோய் மறைந்துகொண்டது. அப்போது அதிலிருந்த மாமரை மலர் குவிந்த தன்மையைக் கண்டு தனது பெட்டை அம்மலரோடு மூடுதலா யிறந்துபோயிற்றென்று தானு முயிரைவிட்டு மடியத்தேடிய சேவலன்னத்துக்கு [மற்றொருபூவிலிருந்து பெட்டையன்னம்] மனந்தெளிவுபெறச் செய்யவும். எ-று. (௧௩௮)

காற்றினிற் கலைந்துயா சினையிற் கான்றதே
னூற்றினிற் பறந்தகல் வாளி யண்மியே
சேற்றினிற் பழுகிய வயலிற் செந்நெலி
னாற்றினிற் பறப்பன நாலு பாலுமே.

இ-ள். வீசுகிற காற்றினாலே கலைதலாய் உயர்ந்த மரக்கொம்பினின்று மொழுகின தேனானது, ஆற்றைப்போல் பரவி அகன்ற குளத்தைக்கூடிச் சேற்றினாலே இறுகுதலையுடைய வயல்களிலே நட்ட சிவந்த நெற்களினுடைய நாற்றுகளிலே நாலுபக்கத்திலும்போய்ப் பரவுவன. எ-று. (கஙௌ)

பிணையன விழியினார் நடைபெறக் கெழீஇத்
துணைபுணரோதிமந் தொடர்ந்து பின்வரத்
திணைபல படர்ந்துதிண் டேரி ழிந்தும
ணிணைமருப் பியானையி னெருத்தத் தேறினான்.

இ-ள். மான்போலுங் கண்களையுடைய பெண்கள் நடையைத் தானும் பெறுவதாகக்கூடிச் சேவலோடு கூடியிருந்த பெட்டையன்னமானது தொடர்ந்துவருவதானநிலங்கள் பலவுஞ்சென்று, திண்ணிதான தேரைவிட்டிறங்கி, அரிச்சந்திரமகாராசன் இரண்டு கொம்புகளையுடைய யானையின் பிடரியின்மே லேறினான். எ-று. (கசo)

இடியென முழங்கிட வியம்பி யங்களால்
வெடிபடு முலகமும் விசும்பு மென்னநீள்
கொடிகளுங் குடைகளுங் குழுமக் கொற்றவன்
கடிகமழ் கங்கையின் கரையை நண்ணினான்.

இ-ள். இடியைப்போல முழங்குவதாகக் கொட்டுகிற வாத்தியங்களாலே உலகமும் ஆகாயமும் வெடித்துப்போகு மென்னும்படி நீண்டகொடிகளுங் குடைகளுந் திரண்டுசெல்ல, அரிச்சந்திரமகாராசன் வாசனைபரிமளிக்கிற கங்கையாற்றின் கரையைப்போய்ச் சேர்ந்தான். எ-று. (கசக)

முன்னரோர் முனிவரன் மொழிந்த சாபத்தாற்
பன்னகத் தரிதுயிற் பாற்க டற்கணே
பொன்னகர் வளனெலாம் புக்க தாமென
மன்னவன் கங்கையில் வந்தி றங்கினான்.

இ-ள். முற்காலத்திலே ஒரு துருவாசமகாமுனிவர் இட்ட சாபத்தினால் பாம்பின்மேல் மகாவிஷ்ணு தூங்குவதான திருப்பாற்கடலிலே, தெய்வலோகத்திலுள்ள செல்வமுழுதும் போனாற்போல, இந்த அரிச்சந்திரமகாராசன் தன் செல்வத்துடனே கங்காநதிக்கரையினருகே வந்திறங்கினான். எ-று.

மின்னிற நுண்ணிடை மின்ன னார்முலைச்
செந்நிறச் சுண்ணமுந் திமிர்ந்த சாந்தமு
நன்னிறக் குங்குமச் சுவடு நண்ணிவான்
வின்னிற மொத்தது விமல நீத்தமே.

இ-ள். அப்பரிசுத்தமான கங்காசலம், மின்னலைப்போற் றுவளுவதான ஒளியைக்கொண்ட சிற்றிடைகளையுடைய பெண்கள் தம் கொங்கைகளிலணிந்த சிவந்த நிறத்தைக்கொண்ட கந்தபொடியும், நிறையப்பூசின சந்தனமும்,

நல்ல நிறத்தையுடைய குங்குமமும் படியக்கொண்டு ஆகாயவில்லினுடைய நிறத்தை யொப்பாயிற்று. எ-று. (கசங)

வரைசெறி வேழமு மாவின் கூட்டமும்
விரைசெறி தார்ப்புய வேந்தர் மக்களும்
பிரசமா மலர்க்குழற் பேதை மாதரு
மரசனுங் கங்கைநீ ராடி யேறினார்

இ-ள். மலைகளைப்போல நெருங்கின யானைகளும், குதிரைக்கூட்டங்களும், பரிமளமிக்க மாலைகளணிந்த தோள்களையுடைய இராசகுமாரர்களும், தேன்பெருகுதலைக்கொண்ட பூவையணிந்த கூந்தல்களையுடைய பெண்களும் அரிச்சந்திரமகாராசனும் கஙகாநதியில் மூழ்கிக் கரையேறினார்கள். எ-று. ()

அங்கைவேன் மன்னவ னருளி னாக்கினோ
மங்கைதன் கற்பினோ வமைச்சர் மாண்பினோ
வெங்கயற் கட்பெரு வெள்ளத் தோடும்போய்
கங்கையைப் பெரும்படைக் கடல்க டந்ததே.

இ-ள். அழகிய கையிலே வேலைக்கொண்ட அரிச்சந்திரமகாராசனுடைய கிருபாதிருஷ்டியினாலேயோ. சந்திரவதியினுடைய கற்பினாலேயோ, மந்திரிகளுடைய நற்குண நற்செய்கைகளாலேயோ கடுமையாகிய சேற்கெண்டை மீன்களையுடைய நீர்ப்பெருக்கைக்கொண்ட அந்தக் கங்காநதியை இப்பெரிதாகிய சேனைக்கடல்கள் கடந்துபோயிற்று. எ-று (கசரு)

அன்னமா டுந்துறை யகழும் வாவியும்
வன்னமா மதில்களு மாட கூடமும்
பொன்னின்மா மேடையும் பொலிந்து தோன்றவக்
கன்னமா புரிதனைக் கண்ணி னோக்கினான்.

இ-ள். அன்னங்கள் விளையாடுகிற நீர்த்துறையையுடைய அகழும், குளமும், பொன்னிறமான பெரிய மதில்களும். மாடகூடங்களும், பொன்மயமான பெரிய உப்பரிகைகளும் நிறைவுகொண்டு தெரிய, அந்தக் கன்னமாபுரத்தை அரிச்சந்திரமகாராசன் தன் கண்களாலே கண்டான். எ-று. (கசசு)

இந்நக ரெந்நக ரென்று கூறவே
முன்னவர்க் குணர்த்திய முனிவர் நோக்கியே
மன்னவ சொன்னவவ் வல்லி வாழ்திரு
நன்னக ரீதென நயந்து கூறினார்.

இ-ள். இந்தவூ ரெந்தவூரென்று அரிச்சந்திரன் கேட்க, முன்னே அவனுக்குத் தெரியப்படுத்தின தவமுனிவர்க ளவனைப்பார்த்து ஓ அரசனே! முன்னமே நாங்கள்சொன்ன சந்திரவதி யிருக்கின்ற அழகிதான நல்ல நகர் இது தானென்று சந்தோஷித்துக்கூறினார்கள். எ-று. (கசஎ)

வல்லிதன் னகரிது மன்ன வாவெனச்
சொல்லிய பொழுதினிற் றுணுக்க மெய்தியே
யல்லியந் தாரின னவளை யின்புறப்
புல்லிய கலவியிற் புளக மெய்தினன்.

இ-ள். அரசனே சந்திரவதியிருக்கிற பட்டணம் இதுதான் என்று சொன்னபோது, அகவிதழ்களுடைய மலர்மாலை யணிந்த அரிச்சந்திரமகாராசன் கூசுதல் கொண்டு, அச்சந்திரவதியைச் சந்தோஷமாகக் கூடிய புணர்ச்சியுள்ள சந்தோஷத்தைப்போல உடம்பெல்லாம் மயிர்ப்புளகித்தலைக் கொண்டான். எ-று. (கசஅ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சனந்தொடர்ந்து பின்வரந்த டங்கடந்து சென்றுவெஞ்
சினந்தொடர்ந்த வெம்பரித் திரிசங்குதந்த மைந்தனும்
மனந்தொடர்ந்து கொண்டவல்லி மன்னுகன்ன மாபுரிக்
கனந்தொடர்ந்த மாமதிற் கபாடவாயி லெய்தினன்.

இ-ள். பரிசனங்கள் தொடர்ந்து பின்னேவர வழிமுழுதுங் கடந்துபோய், வெவ்விதான கோபங்கொண்ட கடினவேகத்தையுடைய குதிரை [மேலேறுகின்ற] திரிசங்கு மகாராசன் பெற்ற அரிச்சந்திர மன்னனுடைய மனமானது முன்னர் [அவாவித்] தொடர்தலைக்கொண்ட சந்திரவதியிருக்கிற மேகங்கள் சஞ்சரிப்பதான பெரியமதில்சூழ்ந்த கன்னமாபுரத்தினது கதவையுடைய கோட்டைவாயிலுக் கருகே சென்றான். எ-று. (கசகூ)

மடங்கலுற்ற வாயிறோறு மகரதோர ணங்களு
மிடங்கணிப் பொறிப்பரப்பு மெண்ணிறந்த மாமதிற்
கிடங்கடங்க நீலமுங் கிளர்ந்தழுந்த கஞ்சமு
மிடங்கருஞ் சுணங்குமீ னினங்களும் பெருத்தவே.

இ-ள். இருபுறத்திலும் சிங்கங்களையுடைய வாயில்முழுதும் மகரதோரணங்களும், சங்கிலிகோத்து நீளக்கட்டியிருக்கிற வரிசைகளெல்லாம் சித்திரநிரைகளும், அள வில்லாத பெருமையை யுடைய மதில்களும், அகழ்கிடங்குமுழுதும் நீலமலர்களும், நீண்டுமலர்ந்து விளங்குகின்ற தாமரைமலர்களும், அதிலே முதலைகளும், நீர்நாய்களும், சலசரங்களும் மிகுத்துத் தோன்றின. எ-று.

இடங்கணி - சங்கிலி. (கரு0)

நிகரிலாத பொற்குவட்டை யுட்டிறந்து நீணிரை
நகரியெங்கும் வைத்தநேர்த்த நகருமாட கூடமுஞ்
சிகரநேமி வரைதிரித்த தன்புறஞ் செறித்தநீர்
மகரவாரி யொத்தசெம்பொன் மதிலுநீள்கி டங்குமே.

இ-ள். ஒப்பில்லாத பொன்மலையினடுவிலே துவாரஞ்செய்துநீண்ட வரிசையான பட்டணமுழுதையும் வைத்திருக்கிறதுபோலான வீடுகளும், மாட

கூடங்களும், அந்தமதிலும், நீண்டகிடங்கும் சிகரத்தையுடைய சக்கிரவாள கிரியைச் சூழ்வதாகக்கொண்டு, அச்சக்கிரவாளகிரிக்குப் புறமாகத் திரண்ட சலத்தையுடையதாய் மகரமீன்களைக்கொண்ட பெரும்புறக்கடலையு மொத் திருக்கின்றன. எ-று. (௧௫௧)

பங்கயச்ச காயவண்ண றன்குலப்ப கீரத
னங்கண்வா னகத்துநின்றோ ராறழைத்த னன்முன
மங்கையைப் பயந்தமன்னன் மாநகர்க்கு ளெண்ணிலாக்
கங்கைதந்து ளானெனக் கலித்தகே தனங்களே.

இ-ள். தாமரைக்குத் துணையான சூரியனுடைய குலத்திலே தோன் றின பகீரதவரசன் முன்னே அழகிதான இடத்தையுடைய ஆகாயத்தி லிருந்து ஒரு ஆற்றை உலகத்திலே வரும்படிச் செய்தான். இப்போது சந் திரவதியைப் பெற்ற சந்திரதயராசன் தனது பெரிய நகருக்குள்ளே கணக் கில்லாத கங்காநதிகளை வரவழைத்திருக்கிறா னென்னும்படி கொடிகள் ஒலித்தன. எ-று. (௧௫௨)

விண்டலத்து மாதரிந்த மேதினிக்கி றங்கவு
மண்டலத்து மாதர்வானின் வண்மைசென்று காணவுங்
கொண்டல்விண்டெ ழச்சமைத்த கூடமாட கோபுர
மண்டரண்ட மூடறுத்த தற்குமப்பு றத்தவே.

இ-ள். ஆகாயத்திலுள்ள பெண்கள் இந்தப் பூமியிலே வந்திறங்கவும்; பூமியிலிருக்கிற பெண்கள் ஆகாயத்திலுள்ள அழகுகளையெல்லா மங்கே போய்க்காணவும், மேகமண்டலத்துக்கு மேலிட்டு உயர்வதாகச் செய்திருக் கிற கூடங்களும், மாடங்களும், கோபுரங்களும், எல்லா அண்டங்களுக்கு மேலிட்டுச் சென்று அங்குள்ள லோகங்களுக்கும் அப்பா லுயர்ந் திருக் கின்றன. எ-று. (௧௫௩)

நெடியமாட நேத்திரத்தி னிரைவகுத்த சாளரத்
திடையின்மாத ரெழின்முகங்க ளெங்கணும்வி ளங்குதற்
கடிகொள்வெற்பின் மீதெழுந்த கதிர்தனைத்து ளைத்ததி
னடுவுதித்த நளிர்மதிக்கு நிகரெனப்பொ லிந்தவே.

இ-ள். அப்படி உயர்ந்திருக்கிற வீடுகளுக்குக் கண்கள்போல் வரிசை யாகச் செய்திருக்கிற சன்னல்களி னிடங்களிலே இடைதோன்றாத பெண்க ளினுடைய முகங்கள் எங்கும் விளங்குவனவானது, ஒளியைக்கொண்ட உதய கிரிமேலே தோன்றுகிற சூரியனைத் துவாரஞ்செய்து அதனடுவிலே உதய மான குளிர்ந்த சந்திரனுக்குச் சரியென்றுசொல்ல விளங்கின. எ-று. (௧௫௪)

அலங்கறங்கு வேலினா னனீகவெள்ள மந்நகர்ப்
பொலங்கலந்த மாமதிற் புறம்பெலா நிறைந்துபி
னிலங்கவார்ந்தி டச்செறிந்த நீலவேலை யேழுமோர்
பிலங்கலந்த தென்னவே பொருத்தவாயில் புக்கதே

இ-ள். வெற்றிமாலை தங்கின வேலையேந்திய அரிச்சந்திரமகா ராசனுடைய சேனைக்கடல், பொன்னிறமாக அழகுகலந்துள்ள அந்த நகரின் பெரிய மதிலுக்கு வெளியெல்லாம் நிரம்புதலாகிப் பின்பு உலகத்தைக்கவளீகரித்துக் கொள்ளப் பொங்கின நீலக்கடல்கள் ஏழும் ஒரு குகைக்குள் போய்ப் புகுந்தாற்போல் அந்தக் கன்னமாபுரத்துக்குப் பெரிதாயிருக்கிற கோட்டை வாயிலுக்குள்ளேபோய் நிறைந்தது. எ-று (கருரு)

தோரணத்து நீழன்மன்னு சோதிரத்ந வேதிகைப்
பூரணக்கு டங்களும்பொ லிந்திலங்கு தீபமுங்
காரணத்த மைச்சர்தந்தெ ருக்களுங்க டந்துபோய்
வாரணத்தி ழிந்துமன்னன் மண்டபத்தி லெய்தினான்.

இ-ள். அரிச்சந்திரன், தோரணங்களின் காந்திவீசுவதாயிருக்கிற சோதியைக்கொண்ட மாணிக்கத் திண்ணைகளின்மேலே நிறைகுடங்களும், நிறைந்து விளங்குகின்ற விளக்குகளும், பிரதானிகளாயமைந்த மந்திரிகளின்வீதிகளும் கடந்துசென்று, யானையைவிட்டிறங்கி; சந்திரதயனுடையசபாமண்டபத்துக்குள்ளே சென்றான். எ-று. (கருசு)

தருவிருந்த கரனிருந்த சபைகொண்மண் டபத்திலே
மருகன்வந்து புகுதலுந்தன் மனமகிழ்ந்து மதிதய
னருகிருந்த வரசரோடு மாதனத்தி ழிந்துபோ
யிருகரங்க ளிறுகநண்ணி யெதிர்நடந்து தழுவினான்

இ-ள். கற்பகத்தருவி னுடைய செய்கை குடிகொண் டிருப்பதான கையையுடைய சந்திரதயராசன், சபைகூடியிருக்கிற கொலுமண்டபத்துக்குள்மருகனை அரிச்சந்திரமகாராசன்வந்து கூடுகிறபோது, அச்சந்திரதயன் மனது சந்தோஷித்துத் தன்பககத்திலேயிருந்த அரசர்களுடனே சிங்காதனத்தைவிட்டு இறங்கிப்போய் எதிர்கொண்டுசென்று அன்புடனே இரண்டு கைகளாலும் இறுகத்தழுவி எதிர்சென்று ஆலிங்கனஞ்செய்தான். (கருஎ)

முனிவருக்கு மரசருக்கு முழுதுமாத னங்கொடுத்
தினிதுகூறி யவ்வவ்வணி யாவருமி ருந்தபி
னணிகவேலை மதிதயன்ற னாதனத்தி ருந்துளங்
கனியவாச முகமலர்ந்து கண்களிப்ப நோக்கினான்

இ-ள். [தன்னுடன்] வந்த முனிவர்களுக்கும், அரசர்களுக்கும் முழுதும் ஆசனங்கள் கொடுத்து உபசாரவார்த்தைகள் சொல்லி, அந்தந்த இடங்களிலே எல்லோரு மிருந்தபின்பு, சேனைக்கடலையுடைய சந்திரதயராசன் தன்னுடைய சிங்காதனத்திலே யிருந்துகொண்டு மனது சந்தோஷிக்கப் பரிமளிக்கின்ற தாமரைமலர்போல முகமலர்ச்சியாய்க் கண்களிகூர மருமகனைப் பார்த்தான். எ-று. (கருஅ)

வெற்றிமன்ன னும்மணம் விரும்பிவந்த மன்னருஞ்
சுற்றிநின்ற மாதருந் துலங்குதார மைச்சரும்

பற்றியுற் றெதிர்ந்தகண்கள் பசுமரத்தி லாணிபோற்
சற்றிமைக்க லாதுவள்ள றன்முகத்தை நோக்கினார்.

இ-ள். அப்படி அந்த ஜயத்தைக்கொண்ட சந்திரதயராசனும், கலியாணத்தை இச்சித்துச் சந்தோஷித்து வந்திருக்கிற அரசர்களும் சுற்றிநின்ற பெண்களும் விளங்குகின்ற மாலையணிந்த மந்திரிகளும் அன்பு கொண்டு பார்த்தகண்கள் பச்சைமரத்திலே ஆணியைத்தாற்போலச்சிறிதேனும் இமையாமல் அரிச்சந்திரமகாராசனைப் பார்த்தார்கள். எ-று. (கருக)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மாந்தரு மாத ராரு மன்னரு மமைச்சர் தாமு
மேந்தலைப் பார்த்த கண்க ளிமைத்திலர் பிறிது நோக்கார்
மாந்தளி ரனைய மேனி வாணுத லிரதி யென்பாள்
காந்தனு மிவனே வேறு காமனு முளனோ வென்பார்.

இ-ள். புருஷர்களும், பெண்களும், அரசர்களும், மந்திரிகளும்வேறொன்றையும் பாராதவர்களாய், அரிச்சந்திரமகாராசனைப் பார்த்த கண்களிமையாதிருந்தார்கள். மாந்தளிர்போலு மேனியையுடைய ஒளிபொருந்திய இரதிதேவி யென்பவளுக்கு நாயகனானவ னிவனேயல்லாமல். வேறே மன்மதனுமுண்டோவென்பார்கள். எ-று. (கசுO)

சித்திரம் போல மன்ன னிருந்தனன் றிகைத்தும் வேறொ
ருத்தர முரையா னாகி யுள்ளுளே மகிழ்ச்சி பொங்க
வத்திர விழியாண் மேனா ளருந்தவ முடையா ளாயி
னித்திருப் புயமு மார்பு மெய்துமென் றெண்ணி னைந்தான்.

இ-ள். சந்திரதயராசன் சித்திரத்தைப்போல் மறந்தும் வேறொருவார்த்தையுஞ் சொல்லாதவனாகி உள்ளுக்குள்ளே சந்தோஷமதிகமாக அம்புபோலுங் கண்களையுடைய சந்திரவதியான நமது பெண் முன்னாளிலே அரியதவமுடையவளானால் இந்த அழகிய [அரிச்சந்திரனுடைய] தோள்களையும் மார்பையுஞ் சேர்வாளென்று ஆலோசித்து வருந்தினான். எ-று. (கசுக)

சிவனமக் கருளிச் செய்த திருவுளப் படியே காண்ப
திவன்றனக் கெய்து மாயி னெமையு மியானுஞ் செய்த
தவமுமா தவமா மல்லாற் றவமுமென் றனையைப் பேறு
மவனென வெண்ணி யெண்ணி யளவிலா தழுங்க லுற்றான்.

இ-ள். சிவபெருமான் நமக்குச்சொன்ன அவர் திருவுளப்படியே [நமது புதல்வியின் கழுத்திலுள்ள மாங்கல்யத்தைக்] கண்டுகொள்வது இந்த அரிச்சந்திரனுக்குக் கூடுமானால், நம்முடைய பெண்ணும், நாமுஞ் செய்த தவமும் பெரிய தவமேயாம். இவன் அதைக் காணக் கூடாதானால் நான் செய்த தவமும் நான்புத்திரியைப் பெற்றதும் வீணென்றெண்ணி மிகவும் கிலேசிக்கலானான். எ-று. (கசுஉ)

காளைதன் முகத்தை நோக்கிக் கடவதொன் றில்லை யெம்மால்
வேளைவென் றிலங்கு கண்ணான் விதித்தவா றளித்தும் யாமே
வாளைவென் றிலங்கு கண்ணாண் மாமணக் காவ ணத்துள்
நாளைவந் தெய்து மின்று நடமினுஞ் சார்பி லென்றான்.

இ-ள். சந்திரதயவரசன், யௌவன புருஷனை அரிச்சந்திரன் முகத்தைப்பார்த்து, இனி எம்மால் செய்யத்தக்க தொன்றுமில்லை. மன்மதனை எரித்து விளங்குகின்ற நெற்றிக்கண்களையுடைய கடவுள் அருளிச்செய்தபடியே நாங்கள் கொடுக்கக்கடவோம். இந்தப் பெரிதான கலியாணப் பந்தலுக்குள்ளே வாளாயுதத்தைச் சயித்து விளங்குகின்ற கண்களையுடையவள் நாளையத்தினம் வந்து சேர்வாள். இன்று உங்களிடத்துக்குப் போய்வாருங்களென்று கூறினான். எ-று. (௧௬௩)

கைத்தலஞ் சற்றுநீட்டி மதிதயன் கட்டு ரைக்கத்
தத்தமக் களித்த சார்பிற் சார்ந்தன ரரச ரெல்லா
முத்தம குணத்தி னானு மோங்குமண் டபத்தி னீங்கி
மத்தகக் களிற்றி லேறி மாளிகை யிடத்துச் சார்ந்தான்.

இ-ள். இவ்வாறு சந்திரதயவரசன் சிறிதுகையைநீட்டி, உறுதி வார்த்தை சொல்லவே, அரசர்களெல்லோரும் தங்கள் தங்களுக் கமைத்து விட்டிருக்கிற இடங்களுக்குப் போனார்கள். உத்தமகுணங்களுடைய அரிச்சந்திர மகாராசனும் உயர்ந்துள்ள சபாமண்டபத்தி னின்று நீங்கிக் கும்பகங்களையுடைய யானைமேலேறிக்கொண்டு தானிருக்கத்தக்க மாளிகைக்குள்ளே போனான். எ-று. (௧௬௪)

வாரணத் தண்ண லேக மதிதய னவையி னுற்ற
காரண மனைத்துங் கேட்டுக் காரிகை யொருத்தி யோடித்
தோரண வாயி னீங்கித் துடியிடை யமுத செஞ்சொற்
பூரணக் களபக் கொங்கைப் பூவைதன் கோயில் புக்காள்.

இ-ள். அரிச்சந்திர மகாராசன் யானைமேலேறிக்கொண்டு போகவே, சந்திரதயராசனுடைய சபையிலே நடந்தகாரணங்கள் முழுதும் ஒரு பெண்ணானவள் கேட்டு, தோரணங் கட்டியிருக்கிற வாயிலைக் கடந்து உடுக்கை போலும் இடையும் அமுதம்போலும் செவ்விதான சொல்லும் நிறைய, சந்தனச்சேறுபூசின கொங்கைகளுங் கொண்ட சந்திரவதியிருக்கிற மாளிகைக்குள்ளே விரைந்து சென்றாள். எ-று. (௧௬௫)

புக்கவ டன்னை நோக்கிப் பொற்கொடி யதிச யித்திங்
கிக்கணத் தோடி வந்த வருத்தியென் னியம்பு கென்ன
வக்கணத் தரிவை செம்பொ னடியைத்தன் முடியிற் சூட்டிப்
பக்கமு மிடமும் பார்த்துப் பவளவாய் பதைத்து ரைப்பாள்.

இ-ள். அங்கேபோய் [அவசரப்பட்டு] நின்ற அப்பெண்ணை, பொன்கொடிபோன்ற சந்திரவதியானவள் பார்த்து ஆச்சரியப்பட்டு, இவ்விடத்தே விரைந்துவந்த [காரணமான] உன்னாசை என்ன சொல்லென்று கேட்க,

அப்படிச் சொன்னவளவிலே சந்திரவதியினுடைய செம்பொன் மயமான பாதங்களை [அப்பெண்] தனது முடிமேலே சூடிவணங்கி, நாலுபக்கமும் செல்லுமிடமும் பார்த்துத் தனது பவளம் போலும் வாய் பதைப்பதாய்ச் சொல்லுகிறுன். எ-று. (கசுசு)

செந்திரு வனையா யுன்னைத் திருமண முடிக்க வேண்டி
வந்தன ரனேக ரந்த மன்னவன் சபையிற் புக்கா
ரந்தமன் னவர்க டம்மி லடலரிச் சந்தி ரன்றன்
சுந்தர முகங்கண் டிங்கே வரமனந் துணிந்தி லேனே.

இ-ள். செவ்விய இலக்குமி போல்பவளே! உன்னைத் திருக்கலியாணஞ் செய்துகொள்ள விரும்பிவந்தவர்களாகிய அநேக அரசர்கள் நம்முடைய ராசனது சபைக்குள்ளே இருந்தார்கள். அவ்வரசர்களிலே வெற்றி கொண்ட அரிச்சந்திர மகாராசனுடைய அழகிதான முகத்தை நான் பார்த்த பின்பு உன்னிடத்திற்குவர மனந்துணிவுகொள்ளாமல் இவ்வளவு காலமும் அவனழகையே பார்த்துக்கொண்டு நின்றேன். எ-று. (கசுஎ)

உடுக்குநீ ருலகை மேழு மொன்றின்மே லொன்றை வைத்தே
யடுக்குநீள் புயமுஞ் செய்யா ளாவியு மனமுந் தாவிப்
படுக்கும்வாள் விழியு மார்பும் பரிசிலர் மகிழ நாளுங்
கொடுக்கும்வார் கரமு மாத ருளமெலாங் கொள்ளை கொள்ளும்.

இ-ள். கடல் நீரால் சூழப்பட்ட இந்த எழுலகங்களையும், ஒன்றின்மேலொன்றாகவைத்து, அடுக்கத்தக்க நீண்டதோள்களையும், இலக்குமிதேவியினுயிரும் மனமும் தாவுதலாய்த் தங்கத்தக்க ஒளிகொண்ட கண்களும், மார்பும், யாசகர் சந்தோஷிக்கத்தக்க தினநதோறுங் கொடுப்பதான நீண்டகைகளும் பெண்கள் மனமெல்லாம் கொள்ளையிடுவதாகும். எ-று. (கசுஅ)

திருக்கிளர் முகமும் வேர்வுஞ் சிறந்தசெம் பவள வாயு
மருக்கிளர் மாலை மார்பு மகரகுண் டலமுங் காதுஞ்
சுருக்கிய மருங்குங் கண்டாற் றுடியிடை மடவா ராவி
யிருக்கினு மிருக்கு நில்லா திறக்கினு மிறக்கு மன்றே.

இ-ள். அழகு விளங்குவதான முகமும், அதிலே துளிக்கின்ற வேர்வையும், சிறப்பான செம்பவளம்போன்ற வாயும், பரிமளிக்கிற மாலையணிந்த மார்பும், மகரகுண்டலங்களும், அவையணிந்தகாதுகளும், சுருங்குதலையுடைய இடையும் பார்த்தால், உடுக்கைபோலும் இடையைக்கொண்ட பெண்களுடைய உயிர்கள் அப்பெண்களுடம்பில் நின்றாலு நிற்கும். நில்லாமற் போனாலும் போகும். எ-று. (கசுகூ)

நிரந்தர வுரோம ரேகை நீலமும் வயிறு மார்பும்
புரந்தர சாப மொத்த புருவமு நுதலும் பட்ட
மரந்தழைத் திடநகைக்கு முறுவலு மாயன் றன்பாற்
கரந்தவா ரமுதச் சொல்லுங் கந்தற்கு மில்லை மன்னோ.

இ-ள். எப்போது முள்ளதான உரோமரேகையினது கருப்பும் வயிறும் மார்பும் இந்திரவில்லைப் போல்வதான புருவங்களும், நெற்றியும், பட்டமரங்களும் தழைக்கச் சிரிக்குஞ் சிரிப்பும், மகாவிஷ்ணுவினுடைய சயனத்தானமான திருப்பாற்கடலிலே மறைந்திருப்பதான அருமையாகிய அமிர்தம்போலும் வசனமும் முருகக்கடவுளுக்கு மில்லையாம். எ-று. (கஎ0)

இதையமூ ழுருக்கு மின்பத் திறைவனை யுற்று நோக்கித்
ததையுமா மலர்த்தார் வேந்தர் தங்களைச் சூழ நோக்கிற்
புதையிருள் கடிந்து வேலைப் புவியினை விளக்குஞ் சோதி
யுதயனைக் கண்ட கண்கட் குடுக்களைக் கண்டதாமே.

இ-ள். பெண்கள் மனத்தை உள்ளுருக்கச் செய்வதான இன்பத்தைச் செய்கிற அரிச்சந்திர மன்னனைப்போய்க் கண்டு, நெருங்கின மலர்களாலமைத்த மாலையணிந்த [மற்றுமுள்ள] அரசர்களையும் கண்டால், மூடுகின்ற இருளைப்போக்கிக் கடல் சூழ்ந்த வுலகத்தை விளங்கச்செய்கிற ஒளியையுடைய சூரியனைக்கண்ட கண்களுக்கு, நட்சத்திரங்களைக் கண்டதுபோலாகும். எ-று.

அரிச்சந்திர மன்னனைச் சூரியனுக் கொப்பாகவும், ஏனைய அரசர்களை நட்சத்திரக் கூட்டங்களுக் கொப்பாகவும் உவமித்தபடி. (கஎக)

மின்னனே ரிடையாள் கூறக் கேட்டலும் வேந்தன் பாவை
தன்னையு மறந்தா ளிட்ட சங்கமுங் கலையு நீத்தா
ளன்னையை மறந்தாள் பேசும் வாசக மயர்ந்தாள் வேறு
பின்னையு மிழந்தாள் காதல் பெற்றதொன் றன்றியின்றே.

இ-ள். [இவ்வாறு] மின்னலையொத்த இடையையுடைய அப்பெண்ணின் சொல்லைக் கேட்டவுடனே, சந்திரதயராசனுடைய குமாரியான சந்திரவதி தன்னையுமறந்தாள்; கைகளிலிட்டிருந்த சங்கவளையலும், இடையிற்கலையும் நெகிழலானாள்; தாயையுமறந்தாள்; பேசுகிற பேச்சுமறந்தாள்; வேறாகத் தனக்குள்ள எல்லாமிழந்தாள்; ஆசையென்ப தொன்றைக் கொண்டிருந்தாளே யல்லது வேறொன்று மில்லையாயினாள். எ-று. (கஎஉ)

வாசமென் கலவைச் சேறு நானமும் புழுகும் வாரிப்
பூசவு மேனி யெங்கும் பொறுக்கெழு வியன்சாந் தாற்றி
வீசவ மேன்மேற் காம வெந்தழன் மண்டப் பின்னும்
ஆசையங் கடலுட் டாழ்ந்தா னருக்கனுங் கடலுட் டாழ்ந்தான்.

இ-ள். பரிமளமுள்ள மிருதுவான கலவைச்சந்தனச்சேறும், கஸ்தூரியும், புனுகும் அள்ளியள்ளிப் பூசப்பூச உடம்பெல்லாம் பொருக்குப் பொருக்காயுதிரவும், பெருமைமிக்க மயிற்றோகையால் வனைந்த விசிறிகொண்டு வீசவீச மேலுமேலுங் காமமாகிய வெப்பங்கொண்ட நெருப்பு மூளவும், மறுபடியும் ஆசையாகிய நீர்க்கடலிலே மூழ்கினான். எ-று. (கஎங)

அறநெடுஞ் செங்கோல் வேந்த ராண்டபார் பிறர்க்கி ரங்கா
மறநெடுங் கொடுங்கோல் வேந்தர்க் களித்தவர்வனம்புக்காற்போல்
புறநெடுங் கிரிசூழ் வேலைப் புவியெலாங் கொடிய நீல
நிறநெடுங் கங்குற் காக்கி நெடும்பக னீங்கிற் றன்றே.

இ-ள். தருமமார்க்கமாக நீண்ட செங்கோல் செலுத்திவந்த அரசர்கள் தாம் ஆண்டவுலகத்தை, பிறருக்கிரக்கஞ் செய்யாத பாவச்செய்கையாலே நீண்ட கொடுங்கோல்கொண்ட அரசர் வசமாகக் கொடுத்துவிட்டு அவ்வரசர்கள் காட்டில் தவஞ்செய்யப் போனாற்போல, புறமாகச் சக்கரவாளகிரி சூழ்ந்த கடல்புடைசூலாவும் உலகமெல்லாம், கொடிதான நீலநிறத்தையுடையதாய் நீண்ட இருளுக்குக் கொடுத்து விட்டு நெடிய பகற்காலம் போய்விட்டது. எ-று.

செங்கோல் - நீதி ; கொடுங்கோல் - அநீதி. (களச)

மஞ்சடை வானமீறாய் மண்முத லாய பூதம்
அஞ்சடை யப்பே ரூழி யகண்டபூ ரணமாய் நின்ற
நஞ்சடை கண்டத் தண்ண லாடக வடித்த ஞான்று
செஞ்சடை விரிந்த தென்னச் செறிந்தது செக்கர் வானம்.

இ-ள். மேகங்கள் பரவுவதான ஆகாயங் கடையாக, மண்முதலாகி பூதங்களஞ்சு மடங்கும் பெரிதான ஊழிவந்தபோது. அகண்ட பூரணமாய் நிலைகொண்டு நிற்கின்ற நஞ்சுதங்கின கண்டத்தையுடைய கடவுள் கூத்தாடுகிற போது அவருடைய சிவந்தசடைகள் விரிந்தாற்போற் செவ்வானம் எங்கும் பரவிற்று. எ-று. (களரு)

நாட்படத் தருமச் செங்கோ னடத்திய வேந்தர் நாட்போய்த்
தோட்படுத் தவர்தம் மக்கள் சுடர்முடி சூடு முன்னர்
கோட்படை பிழைத்தி ருந்த குறுநில வேந்த ருய்க்கும்
வாட்படை புகுந்த தென்ன வந்தது மருள்கூர் மாலை.

இ-ள். வெகுகாலமாக தருமநீதியை நடத்திவந்த அரசர்களது காலங் கழிந்து, அந் நீதியரசர்களுடைய புத்திரர்கள் ஒளிபொருந்திய முடிசூடிக்கொண்டு, பூமிபாரத்தைத் தோள்மேற் சுமந்து கொள்ளுதற்கு முன்னே. அவ்விராச்சியத்தைக் கைக் கொள்ளுவதற்காகச் சேனைகளைக் கூட்டிக்கொண்டிருந்த சிற்றரசர்கள் அனுப்பின வாள்களையுடைய சேனைகள் வந்தாற்போல மயக்கஞ்செய்வதான மாலைக்காலம் வந்தது. எ-று. (களசு)

மறைந்தது பரிதி மேன்மேல் வளர்ந்தது கங்குற் காலம்
அறைந்தது வானை,வானத் தரும்பின வனந்த மீன்கள்
குறைந்தது கொடிய மாலை கூரிருட் பிழம்பு துன்றி
நிறைந்தது நீல வேலை நிலமெலாங் கவர்ந்த தென்ன.

இ-ள். சூரியன் மறைந்துபோயிற்று. இராக்காலம் மேலும் மேலும் வளர்கிறதாயிற்று ; அப்படிச் சொல்லலான இராக்காலம் சிறிது விளங்க, அநேகம் நட்சத்திரங்கள் ஆகாயத்திலே பூத்தன. கொடிதான மாலைக்காலம் குறைத

லாயிற்று. கருத்த கடல்சூழ்ந்த உலகமெல்லாந் தானே அரசாட்சி கொண் டாற்போல இருட்செறிவு மிகுந்து நெருங்கி நிறைதலாயிற்று. எ-று. (கஎஎ)

அருகிய மருங்குற் பேதை யழன்றெழு காமத் தீயால்
உருகிய வுள்ளந் தாவி யுலகெலா மேவிக் காய்ந்து
கருகிய தென்னத் தேவர் கடைந்தநா ளெழுந்த வாலம்
பெருகிய தின்று மென்னப் பிறங்கிருள் செறிந்த தன்றே.

இ-ள். சுருங்கின இடையை யுடைய சந்திரவதியானவள் கொதித்தெழு கின்ற காமாக்கினியினாலே உருகின மனமானது பாவி உலகமெல்லாம் வியா பித்து எரித்துக் கருகியதுபோலவும், தேவர்கள் பாற்கடலைக் கடைகிற கால த்திலே உண்டான நஞ்சு இப்போது பெருகலாயிற்றென்று சொல்லவும் விள ங்குகின்ற இருளானது நெருங்கியது. எ-று. (கஎஅ)

முன்னரோ பொருது வெல்லாத் தலைவரை முனிந்து செங்கோன்
மன்னவர் கோபங் கொண்டு வாள்விதிர்த் தெழுந்த தேபோல்
இன்னமு மிவட னுவி பிறந்தில தென்று சீறித்
துன்னிரு ளிரிய நூறி யெழுந்தது சுடர்வெண் டிங்கள்.

இ-ள். முன்னேதானே சண்டைசெய்து வெல்லாமல் விட்டிருந்தகொடு ங்கோலரசை வெறுத்துச் செங்கோலரசர்கள் கோபங்கொண்டு கத்தியை உருவிக்கொண் டெழுந்தாற்போல, இன்னமும் இந்தச் சந்திரவதியினுடைய உயிர்போகா திருக்கிறதென்று கோபித்து நெருங்கின இருளோட, ஒளியை யுடைய வெண்மையான சந்திரன் உதயமாயினன். எ-று. (கஎக)

இருளையொத் திலங்குமே மணி யிறைகடல் கடந்த காலம்
பொருளையுற் றிடாத வெல்லாம் புரந்தரா தியர்க்கு நல்கி
உருளவே திரட்டி வாரி யுள்வைத்த வமுத சாரத்
திரளைமேல் மிதந்த தென்னத் திங்கள்வந் தெழுந்த தன்றே.

இ-ள். இராத்திரியை யொப்பாய் விளங்குகின்ற திருமேனியை யுடைய திருமால், பாற்கடலைக் கடைந்தகாலத்திலே, இந்திராதி தேவர்களுக்குக்கொ டுத்து. திரவியத்தைப்போல் அவர்களுக்குக் கொடாத எல்லாவற்றையும் உரு ட்சியாகத் திரட்டி, அப்பாற்கடலுக்குள்ளே வைத்திருந்த அமுதசாரமான திரட்சி மேலே மிதந்தாற்போல, சந்திரன்வந்து உதயமானன். எ-று. (கஅ0)

திங்கள்வெண் குடைக்கீழ் தென்றற் றேர்மிசை யேறி வாரி
மங்கல முரசமார்ப்ப மகரகே தனநின் றோங்கக்
கங்குல்வெங் களிறு சூழக் கடுங்கிளிப் புரவி தூண்டி
அங்கண்மா ஞால மெல்லா மனங்கவேள் பவனி வந்தான்.

இ-ள். மன்மதனனவன், சந்திரனென வெள்ளைக்குடையின்கீழே, தென் றற் றேரின்மேலே ஏறிக்கொண்டு கடலான மங்கல முரசுமுழங்க, மகரக் கொடியானது நிலைகொண்டுவிளங்க, இருளாகிய வெவ்விய யானையுஞ்சேர, கடு மையான வேகத்தையுடைய கிளியாகிய குதிரையைச் செலுத்திக் கொண்டு அழகிய இடத்தையுடைய பெரிய வுலகமெல்லாஞ் சூழ்ந்துவந்தான். எ-று.

கருப்புவார் சிலையை யூன்றிக் கால்வளைத் திசைகள் பாடுங்
கருப்புநா ணேற்றிக் கஞ்சந் தளவுட னசோகஞ் சூதம்
அருப்புவார் கணைக ணேணி யகத்திடை யெடுத்தொன் றென்று
விருப்பினால் வருந்து மானை வெவ்வினைப் பூச லிட்டான்.

இ-ள். [மதனன்] கரும்பாகிய நீண்ட வில்லைநிறுத்தி, அதனிரண்டு கால்களையுங் கூடவளைத்து இராகங்களைப் பாடுவதான வண்டாகிய நாணை அந்த வில்லிலேபூட்டி, தாமரை - முல்லையுடனே அசோகம் - மா - இவற்றின்மலர்களாக நீண்ட அம்புகளை ஒவ்வொன்றாக அம்புக்கூட்டினின்று [அரிச்சந்திரன் மேலாசையாய்] வருந்துகிற சந்திரமதியுடனே கொடிய செய்கையான சண்டைசெய்தான். எ-று. (கஅஉ)

மாரவேள் பகழி மாரி வல்லியி னுடலை முற்றும்
ஈரவே திங்கட் செந்தீ யெரிக்கவே யெரிய தாகி
வீரவே ளனையான் றந்த வேட்கைமீ தூரக் கண்ணீர்
சோரவே யமளி மீது சுழன்றுவீழ்ந் தினைய சொல்வாள்.

இ-ள். இப்படி மன்மதனனவன் அம்புகளைக் கையிலேகொண்டு, சந்திரமதியினுடைய உடல்முழுதுந் தொளைக்கவும், சந்திரன் தனது கிரணமாகிய சிவந்த நெருப்பா லெரிக்கவும், வீரத்தையுடைய மன்மதனையொத்த அரிச்சந்திரனனவன் கொடுத்த ஆசை, நெருப்பாய் மேன்மேலாகவும், கண்களில் நீரொழுகவும் படுக்கைமெத்தைமேலிருந்து சுழன்று கீழேவிழுந்து இவ்வாறு சொல்லலானாள். எ-று. (கஅங)

கலிவிருத்தம்.

கண்ணிலாப் பாதகக் காம னெய்தவெம்
புண்ணிலா ருயிர்பொடித் தகலப் போனவா
றெண்ணிலா தெனைச்சினந் தெழுந்த வெவ்வினை
வெண்ணிலா வேயிது வீர மல்லவே.

இ-ள். இரக்கமில்லாத பாவியாகிய மன்மதனெய்த அம்பிலுண்டான வெவ்விய புண்ணின்வழியே என்னுயிர் பொடியாய் என்னுடலை நீங்கிப் போயினபடியே எண்ணாமல், என்மேற் கோபங்கொண்டுவந்த கொடிய செங்கையையுடைய வெள்ளைச்சந்திரனே! இது உனக்கு வீரத்தன்மை யன்று.

மேற்படி வேறு.

உன்னைக் கொன்றன் றுருவிலி யாக்கினோன்
றன்னைக் கொல்லுவ தாண்மைத் தனமலால்
பின்னைக் கொல்வதென் பெண்பிறப் பாகிய
என்னைக் கொல்லுவ தேழைமைப் பாலதே.

இ-ள். மன்மதனே! உன்னையெரித்து உருவமில்லாதவனாகச் செய்த சிவபிரானை நீ கொல்லச்செல்வது உனக்கு ஆண்மைத்தனமே யல்லாமல்,

வேறே நீயாரைக் கொல்லத்தக்கது? பெண்பிறப்பைக்கொண்ட என்னை நீ கொல்லத்தொடங்குகிறது அறிவின்மையேயாகும். எ-று. (கஅ௫)

உருவக் காமன் றுணித்த வுடறனைச்
செருவிற் கொல்ல வெழுந்தவெண் டிங்களே
ஒருவற் கீவதற் கோருயி ரன்றியெற்
கிருவர்க் கீய விரண்டுயி ரில்லையே.

இ-ள். எங்கும் துவாரமாக மன்மதன் துளைத்த வுடம்பைச சண்டைசெய்து கொல்ல, உதயமான வெள்ளைச்சந்திரனே! மன்மதனை ஒருவனுக்குக் கொடுக்க என்னிடத்து ஒருயிரேயல்லாமல், உனக்கும் அவனுக்குங் கொடுக்க எனக் கிரண்டுயிரில்லையே [என்செய்வேன்] எ-று. (கஅசு)

முன்னி னைந்தலர் தொட்டவன் மூண்டபோர்
தன்னி னைந்துத ளர்ந்தவென் மேனியைத்
தின்னி னின்சல தின்கலைத் திங்களே
என்னி னைந்தெனை யிப்படி காய்கின்றாய்.

இ-ள். என்முன்னே என்னைக்குறித்துப் பூங்கணைதொடுக்கிற மன்மதன் மூண்டு நிற்கின்ற சண்டையை எண்ணிச் சோர்ந்திருக்கிற என்னுடம்பைத் தின்கிறாய்; உன் கோபத்தினலே சோடசகலைகளைக் கொண்ட சந்திரனே! யாதுபயனைக்கருதி என்னையிப்படி யெரிக்கிறாய். எ-று.

முன்னின்-ஆலோசிக்குமிடத்தில், ஐந்தலர்-ஐந்துபூதங்கணைகளை யென்பதுங்கொள்க. (கஅஎ)

உன்னைக் காய்ந்த பணிக்குற வென்றுகொல்
என்னைக் காய்நதனை யேந்திளந திங்களே
முன்னைக் காய்ந்திலை யென்னுயிர் முற்றிய
பின்னைக் காய்ந்து பிழைபபிக்க வல்லையோ.

இ-ள். இளமையைக் கொண்ட சந்திரனே! உன்னைக் கடித்துவிழுங்குகின்ற பாம்புக்கு உறவான அல்குலையுடையவளென்றோ என்னை இப்படி எரிக்கிறாய்? நேற்றுமுந்துநாள்களில் இப்படி எரிக்கவில்லை. என்னுயிரை நாணிழந்தபின்பு இப்படியே குளிர்ந்த காந்திகொண்டு வீசி என்னைப்பிழைக்கச் செய்யவும் உனக்கு வல்லமையுண்டல்லவோ! எ-று. (கஅஅ)

அருத்தி யோடுதம் மென்முலை யன்பர்தோள்
பொருத்தி யோகைகொண் டாடுவர் பூவைமார்
வருத்தி யோய்வுற வாட்டினை யென்னை யான்
ஒருத்தி யோவுனக் குட்பகை கங்குலே.

இ-ள். உலகத்திலுள்ள பெண்கள், ஆசையுடனே தம்முடைய மெல்லிதான கொங்கைகளைத் தங்களுக்குப் பிரியரான நாயகர் தோளோடு பொருந்தச் செய்பவராய் சந்தோஷத்தைக் கொண்டு சுகித்திருக்கிறார்கள். அப்படிக்

கிருக்க, என்னைவருத்தப்படுத்தி நாஞேய்ந்துபோம்படியாகவாடச்செய்தாய் இந்த உலகத்திலே நாஞெருத்திதாஞே உனக்கு உட்பகையானவள். எ-று.

வெங்கை யாதபன் வீழ்தலும் யானுனைச்
செங்கை கூப்பிய தீவினை நோக்கியே
அங்கை யாலெடுத் தாரழற் கொள்ளியென்
கொங்கை மீது கொளுத்தினை திங்களே.

இ-ள். சந்திரனே! வெப்பமான கிரணத்தையுடைய சூரியன் மேலைக் கடலிலேபோய் விழுந்தவுடனே, நான் உன்னைநோக்கிச் சிவந்த கைகளைக் குவித்துக் கும்பிட்டது தீயசெய்கையென்றுகொண்டோ நிறைந்த நெருப்புக் கொள்ளியை உனதழகிய கையிலேகொண்டு, எனது கொங்கைகளின்மேலே கொளுத்தினுய். எ-று. (ககய)

குன்று லாவு கொடுந்திரற் றென்றலங்
கன்று லாவிய கண்ணகல் விண்ணெலாம்
சென்று லாவு திரைக்கட லன்னமால்
நின்று லாவுமென் னெஞ்சிடம் போதுமோ.

இ-ள். இடமகன்ற ஆகாயமெல்லாம்போய் வுலாவுவதான அலைகளையுடைய கடலுக்கொப்பான ஆசையானது நிலைகொண் டுலாவுகின்ற எனது மன இடம், பொதியமலையிலே உலாவுவதான கொடுமையாகிய வல்லமையுடைய இளந்தென்றலானது சஞ்சரிப்பதற்குப் போதுமோ? எ-று. (கககூ)

போத நோதக வாக்கியும் போகிலாய்
பாத நோதக மேவபனிக் கங்குலே
சூத ஞேதமுற் ருேன்றியு மிற்றைநாட்
காத நோதலுங் கற்றிலை போலுமால்.

இ-ள். பனியோடுகூடிய இரவே! என்னைமிகவும் நோவும்படிச்செய்தும் போகாதிருக்கிருய் உன்கால்களுக்கு நோவுண்டோ? அருணன் கடலின்மேல் உனக்கு முன்னே தோன்றுகிறதாகியும் நான் இன்றையத்தினம் ஆசையினுலே வருந்துகிறதும் நீ தெரிந்துகொண்டிலைபோலும். எ-று. (கககூ)

சூதன் - அருணன்.

நிரவுந் தென்றலு நீள்விசும் பெங்கணும்
பரவுந் திங்களும் பாய்திரை யோதையின்
வரவும் போர்வில் மதனனும் போகிலா
இரவொன் றேகினெற் கியாருமொப் பில்லையே.

இ-ள். எங்கும் நிரம்புவதான தென்றற்காற்றும், நீண்ட ஆகாயமுழுவதும் பரவுவதான சந்திரனும், கரைமேலே மோதுகிற அலைமுழக்கத்தின் வருதலும், போருக்குரிய வில்லைக்கொண்ட மன்மதனும் போகிறதில்லை. இந்த இராத்திரி யொன்றுமாத்திரம்போனல் எனக்கு யாருமிகரில்லை. எ-று.

பூழி சென்று புரண்டபொற் பாவையைத்
தோழி சென்று தெருட்டலுந் தோழியை
ஆழி சென்றென் றடைந்தபி னெத்தனை
ஊழி சென்றவென் றுண்ணுதல் கேட்டனள்.

இ-ள். [என்றிப்படிப்] புழுதியிலே போய்க்கிடந்து புரளுகிற பொன் பாவைபோன்ற சந்திரவதியை, அவளுடைய தோழியானவள் கிட்டே போய்த் தெளியச் செய்யுமளவில், ஒளிபொருந்திய நெற்றியையுடைய சந்திரவதி அத்தோழியைப் பார்த்து, சூரியன் ஒற்றையுருளைத் தேருடனே கடலிலே போய் விழுந்தபின்பு எத்தனை ஊழிகாலமாயினவென்று வினவினாள். எ-று.
என்று-சூரியன்.

கோழி கைத்தலங் கூப்பியித் துன்னிருள்
நாழி கைக்கிட மேநலங் கேளென
வாழி கைப்பிடி வந்துமன் றாவெனக்
கோழி கைத்தலத் தைக்கொட்டிக் கூவிற்றே.

இ-ள். அதற்குத் தோழியானவள் தன்கைகளைக் குவித்துக் கும்பிட்டு, இந்த நெருங்கிய இருளானதுபோக இன்ன மொருநாழிகை யளவுதான் [இருக்கிறது] இனி நல்லவார்த்தை கேட்பாயென்றுசொல்ல, அவ்வளவிலே சேவலானது தனது கைகளான இறகை அடித்துக்கொண்டு, அரிச்சந்திரமகாராசனே! சந்திரவதி வாழ்வாளாக. விரைவிலே வந்து அவள் கையைப் பிடிக்கக்கடவாயென்று கூப்பிட்டது. எ-று.
கைப்பிடித்தல்-பாணிக்கிரகணம். (கஉரு)

வேய டங்கின வேலை யடங்கின
தீய டங்கின திங்களுங் கங்குலும்
பேய டங்கின மன்மதன் போரெலாம்
வாய டங்கின வண்குமு தங்களே

இ-ள். மூங்கிற் குழலோசை யடங்கினதுபோற் கடலொலியு மடங்கின, நெருப்புப்போல் சந்திரனும் இராத்திரியும் அடங்கலாயின. மன்மதனுடைய சண்டைமுழுதும் அடங்குதலாயின. அழகிய குமுதமலர்கள் வாய்மூடுதலாயின. எ-று. (கஉசு)

காரி சங்கந் துயிலெழக் கன்னிமால்
பாரி சங்கம் பொறுத்தது பார்க்கவே
ஏரி சங்க மெழுந்து முழங்கிட
வாரி சங்கண் மலர்ந்தன வெங்குமே.

இ-ள். கரிக்குருவியும், விடியற்காலத்துச் சங்கும் நித்திரை தெளிந்து முழங்கலாயின. பெண்ணான பூமிதேவி அங்கு வந்திருக்கிற அரசர் கூட்டங்களைத் தாங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறதற்காகக் குளங்களிலுள்ள சங்கு

களெழுந்து எவ்விடத்து முழங்குவதாகத் தாமரை மலர்களாகிய முகங்கள் எவ்விடத்தும் மலர்ந்தன. எ-று.

காரிசங்கம்-காக்கைக்கூட்டமுமாம். மால்பாரி-பூமிதேவி. (கசுஎ)

கொல்வ னாயினுங் கோதையைச் சந்திரன்
வெல்வ னாயினு மேலவ னைச்செயல்
சொல்வ னெனென்று துண்ணெனச் செங்கதிர்ச்
செல்வ னாழியந் தோமிசைத் தோன்றினன்.

இ-ள். சந்திரவதியைச சந்திரன் கொல்லுகிறவனே யானாலும், அல்லதுகொன்று வெல்லுகிறவனே யானாலும், இனிமேல் அந்தச் சந்திரனை நோக்கி அப்படிச்செய்யாதையென்று சொல்ல வல்லவன் நானேயென்று சூரியபகவான் விரைவிலே ஒற்றையுருளைத் தேரின்மே லுதயமாயினன். எ-று.

சோலை யெங்கு நதொழுதிக ளார்த்தன
ஆலை யந்தொறுஞ் சங்கங்க ளார்த்தன
மாலை வெண்குடை மன்னவர் முன்றில்வாய்க்
காலை மாமுர சங்கள் கறங்கின.

இ-ள். சோலைகளெல்லாம் பட்சிகளினோசை முழங்கலாயின; கோயில்களெல்லாஞ் சங்குகள் முழங்கலாயின; மாலைகளையும் வெள்ளைக்குடைகளையுமுடைய அரசர்கள் திருமுற்றங் களிலே விடியற்காலத்தில் முழங்குகிற பெரிய முரசுகள் முழங்கின. எ-று.

ஆலயமென்பது எதுகைநோக்கி ஆலையமென்றாயது போலி. (கசுஅ)

முன்ன மன்னன் முகூர்த்தமோ ரேழெனச்
சொன்ன நற்றினம் வந்து தொடங்கலும்
மன்ன னும்மறை யோர்களு * மாதரும்
கன்ன லந்திருக் காவணத் தெய்தினர்.

இ-ள். முன்னே சந்திரதயாசன் முகூர்த்தம் ஓரேழுநா ளளவென்று சொன்ன நல்லநாள்வந்து கூடுமளவில், அந்தச்சந்திரதயராசனும் வேதப் பிராமணர்களும், பெரியோர்களும், கரும்புகள் முதலானவைகளாலே அலங்கிருதமான கலியாணப்பந்தலுக்குள்ளே வந்து கூடினர்கள். எ-று. (உ00)

வேந்த ரீண்டினர் வேதிய ரீண்டினர்
மாந்த ரீண்டினர் மங்கைய ரீண்டினர்
ஆய்ந்த நீதி யமைச்சரு மவ்வவர்
சேர்ந்த சேனையுஞ் சேரவந் தீண்டின.

இ-ள். அரசர்களெல்லோரும்வந்துகூடினர்கள்; பிராமணர்களும் வந்து கூடினர்கள்; மற்ற எல்லோரும் வந்துகூடினர்கள்; பெண்களெல்லோரும் வந்து கூடினர்கள்; ஆராய்ந்துணர்ந்த நீதிமன்னர்களாகிய மந்திரிகளும் வந்துகூடினர்கள்; அவர்களைச்சேர்ந்த சேனைகளும் வந்துகூடின. எ-று.

* நாதரும் - என்றும்பாடம்.

வாகை யுற்று மதனொரு பால்வர
ஓகை யுற்றுவண் டோலமிட் டேவரப்
பாகை யுற்ற பனிமொழிப் பைந்தொடி
தோகை யைக்கொடு தோழியர் தோன்றினார்.

இ-ள். ஜயத்தை யுட்கொண்ட மன்மதனொருபுரத்திலே வரவும், வண்டுகள் களிப்பையுட்கொண்டு பாடிக்கொண்டு கூடவே வரவும், தேன் பாகுபோன்ற குளிர்ந்த சொல்லையுடைய பசிய வளையல்களையணிந்த மயிற் சாயலைக்கொண்ட சந்திரவதியைக் கூட்டிக்கொண்டு தோழிமார்கள் வந்தார்கள். எ-று. (உ0உ)

அங்கை யிற்பொலி சங்கின மார்த்தெழச்
செங்க யற்கண் டிருக்குழை யைப்பொரக்
கொங்கை யென்றிரு குன்று சுமந்தெழுன்
மங்கை மாளிகை வாயிலின் மேவினாள்.

இ-ள். அழகியகைகளிலே விளங்குகின்ற சங்குவளையல்கள் கலகலென்று சப்திக்கவும், சிவந்த கயல்போலுங் கண்கள் அழகிய காதிலணிந்த குழைகளோடு பொருதவும், கொங்கைகளென்று பெயருடையனவாக இரண்டு மலைகளைத் தாங்கிக்கொண்டு, அழகிய சந்திரவதியானவள் தனது திருமாளிகை வாயிலுக்குமுன்னே வந்தாள். எ-று. (உ0௩)

வல்லெ னப்புடைக் குந்தன வன்பொறைக்
கில்லெ னக்கரு தும்மருங் கிற்றிடும்
மெல்லெ னப்பதம் வைத்து மிதித்துமுன்
செல்லெ னப்பொற் சிலம்பு புலம்புமால்.

இ-ள். சூதாடு கருவிபோல விம்முதலைக் கொண்டுள்ள கொங்கைகளாகிய வலிய கனத்தைத் தாங்குதற்கு உருவமில்லையென்று நினைக்கத், தகுந்த இடையான தொடிந்துபோகும் ஆகையால், கால்களை மெதுவாகத் தூக்கி வைத்துப் பூமேல் மிதித்துக்கொண்டு முன்னே போகக் கடவாயென்று பொன்னஞ் சிலம்புகள் ஒலிக்கின்றன. எ-று. (உ0௪)

நீடி வார்ந்து நெறித்த குழற்சிகை
ஓடி யுட்சுழி யும்புய லொத்ததால்
ஆடி நோக்கி யணிந்த வணிச்சுடர்
கோடி சூரியர் கூடிய தொத்ததே.

இ-ள். நீண்டு சிக்கவிழ்ந்து நடுவே வகிர்ந்தெடுத்துள்ள கூந்தலாகிய கொண்டையானது, நீண்டு உள்ளே சுழித்தலையுடைய ஒரு ஆற்றுநீரை யொப்பாயிருந்தது. அதிலே கண்ணாடி பார்க்கச்செய்து அலங்கரித்த ஆபரணங்களின் சோதியானது, கோடி சூரியர்க ளோரிடத்திலே கூடினதுபோ லிருந்தது. எ-று. (உ0௫)

நச்சுக் கட்டிய நல்லமுதும் மிக
வைச்சுக் கட்டிய மாமுலை யாலுல

கச்சுக் கட்டழி யும்மழி யும்மெனக்
கச்சுக் கட்டி மறைத்தனர் கண்ணையே.

இ-ள். நஞ்சுக்கட்டியையும் நல்ல அமுதத்தையும் மிகுவதாக வைத்துக் கட்டி யமைத்திருக்கிற பெரிய தனங்களாலே உலகமானது தனது நிலையான கட்டுக் குலைந்துபோகுமென்று இரவிக்கைகொண்டு கட்டி அவைகளின் கண்களை மறையச்செய்தார்கள். எ-று.

கஞ்சுக்கட்டி போல்வது முலைக்காம்பு. அமுதம் அவற்றி லுளதாகுகின்ற பால். கண்ணென்பதும் முலைக்காம்பே. (உ0௬)

ஆதி நூலும னைத்துல குங்கெடும்
நீதி யன்றிவ ணீசெல்வ தென்னவே
காதி யோடிய கண்களைக் காதுபோய்ச்
சோதி வார்குழை தொட்டு மறிக்கவே.

இ-ள். ஆதியாகிய வேத சாஸ்திரங்களும். எல்லாவுலகங்களும் கெடுவனவாகும். ஆகையால் இங்கேநீ செல்லுதல் நியாயமல்லவெனத் தம்மையென்று நீளுவனவான கண்களைக, காதுகளான ஒளியைக்கொண்டு தொங்குவனவாகிய குழைகளைக்கொண்டு தடுக்கவும். எ-று.

ஒருவரைத் தடுத்தல் கையாலேதொட்டல் செய்வதாகலாலே குழை தொட்டென்றார்.

இதுமுதல் நான்குபாடல்கள் குளகம். (உ0௭)

காவென் றெண்ணுங் கரித்தரிச சந்திர
வாவென் றெண்ணாறு மன்னரை யப்புறம்
போவென் றெண்ணிப் புகல்கின்ற போலவே
தாவு சோதிக் கலாபந் தழங்கவே.

இ-ள். கற்பகத்தருவே யென்றுமதிக்கலான கையையுடைய அரிச்சந்திர மகாராசனே! வரக்கடவீரென்றும், எண்ணுதற்கரிதான அரசர்களை யெல்லாம் அப்பாலே தூரப்போங்களென்றும் ஆலோசித்துச் சொல்லுகின்றமை போலத், தாவுகின்ற ஒளியைக்கொண்ட கலாபமென்கிற அரைநூன்மாலை ஒலிக்கவும். எ-று. (உ0அ)

கைத்த லத்துணை வீசிக் கதிர்மணிப்
பத்தி பின்னுமுன் னுஞ்சென்று பாயவே
எய்த்த நுண்ணிடை யிற்றிடு மென்றுமேன்
மொய்த்த வண்டு கலைந்து முழங்கவே.

இ-ள். கைகளிரண்டையும் வீசிக்கொண்டுவருகிறபோது, ஒளியையுடைய இரத்தின வரிசைகள் பின்னாலு முன்னாலுஞ் சென்று காந்திவீசவும், இளைத்த நுண்ணியதான இடையானது ஒடிந்துபோமென்று மேலே மொய்த்திருக்கிற வண்டுகள் கலைதலாய் முழங்கவும். எ-று. (உ0௯)

சென்னி நின்றிரு சீறடி மட்டும்வான்
மின்னி னாலமைத் தன்னசெம் மேனியைப்
பொன்னி னுன்மணி யாற்புதைத் தேயெழிற்
கன்னி நன்மணக் காவணத் தெய்தினாள்.

இ-ள். தலையிலிருந்து இரண்டு சிறிதான கால்களளவும் மேகத்திலுள்ள மின்னலாலே அமைத்தாற்போலிருக்கிற சிவந்த திருமேனியைப் பொன்னாலும், இரத்தினங்களாலும் மறையச் செய்துகொண்டு அழகுள்ள இளவயதுடைய சந்திரவதி தனது கலியாணப் பந்தலுக்குள்ளே வந்தாள். எ-று. (உ௰)

பெடந டத்திருப் பெண்ணர செய்திய
திடையி னின்றவ ரேத்தி யியம்பிடக்
கடையு கத்திற் கடல்கிளர்ந் தாலென
அடைய மன்னவ ராவித் தெழுந்தனர்.

இ-ள். பெட்டை யன்னம்போலு நடையையுடைய இலட்சுமிபோன்ற பெண்களுக் கரசியான சந்திரவதி வந்ததை, நடுவே நிற்கின்ற சிலர் போய்ப் புகழ்ந்துசொல்ல, முடிவான யுகாந்தத்திலே கடல்பொங்கி வந்தாற்போல் இங்கேவந்துகூடுவதாக அரசர்களெல்லோரும் சந்தோஷித் தெழுந்தார்கள்.

தேரி னேறித் திசையெங்க ணும்வரப்
போரின் வீரர்கள் பொம்மென் றதிர்ந்தெழு
மூரி வீரமு ரசமுங் காளமும்
பேரி யுஞ்சங்கும் பீலியு மார்த்தவே.

இ-ள். யுத்தத்துக்குத்தக்க வீரர்களெல்லாம் இரதங்களிலே யேறிக்கொண்டு நான்கு திசைகளிலும் பரவிவர, அப்போது பொம்மென்று அதிர்ந்து வருவனவான பெரிய வீரமுரசங்களும், எக்காளங்களும், பேரிகைகளும், சங்குகளும், மற்றுமுள்ள வாத்தியங்களும் ஒலிக்கலாயின. எ-று.

பொம்மென்பது - ஒலிக்குறிப்பு. (உ௧உ)

தாள மத்தளந் தண்டிசை யாழ்தெரு
நீள மட்டு நிறைந்தன சக்கர
வாள மட்டு மலிந்தன தூளண்ட
கோள மட்டுங் கொடித்திர ளுற்றவே

இ-ள். கைத்தாளங்கள், மத்தளங்கள், வீணாதண்டங்கள், இராகம் பாடுகின்ற தம்பூருகள் இவைகளெல்லாம் தெரு எவ்வளவு நீளமுள்ளதோ அவ்வளவும் நிறைதலாயின. [அதனாலெழுந்த] செம்மண்தூளிகள் சக்கரவாளகிரி வரையினும் போயின. அண்டகோள வரையிலும் கொடிக்கூட்டங்கள் சென்றன. எ-று. (உ௧௩)

பாரி னின்று பரிந்தெழுந் தண்டர்தம்
ஊரி னோடி யுயர்ந்த பெருந்துகள்
காரி னுண்டுளிக் கண்மறைந் தெண்டிசை
மூரி யானை மதத்துளை மூடிற்றே.

இ-ள். பூமியிலிருந்து பரவிச்சென்று தேவர்களுடைய ஊரளவிலும்போய் அதற்குமேலு முயர்ந்துபோன மண்தூளிகளாலே, மேகத்தின் சிறிதான மழைக்கண்க ளடைபட்டு எட்டுத்திக்கிலு நிற்கிற யானைகளினுடைய மதத் துவாரங்களு மடைபட்டன. எ-று.

எண்டிசை யானைகளாவன:— கிழக்காதிமுறையே - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்ரதீபம் இவையே யட்டதிக் கயங்களாம். இவற்றிற்கு முறையே பிடியானைகளாவன:— அப்பிரமை, கபிலை, பிங்களை, அனுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி என்ப. (உ௪௪)

யானை யும்பரி மாவு மிரதமும்
தேனை வென்ற திருமொழி மாதரும்
ஏனை நின்ற விருபிறப் பாளரும்
சேனை யுந்திசை தோறுஞ் செறிந்தவே.

இ-ள். யானைகளுங், குதிரைகளும், இரதங்களும் தேனின் இரதத்தை வெல்லுவதான அழகிய வசனங்களை யுடைய பெண்களும், மற்றுமுள்ள பிராமணர்களும் சேனைகளும் கூடித் திக்குகளெல்லாம் நெருங்கின. எ-று.

இமக்கு டங்க ளிரண்டு தனமெனச்
சுமக்கு மென்கொடி சூட்டுஞ் சுயம்வரம்
எமக்கெ மக்கென வெண்ணி வருமவர்
தமக்குப் பின்னரிச் சந்திரன் றோன்றினான்.

இ-ள். குளிர்ந்த நீர்க்குடங்களை இரண்டு கொங்கைக ளென்று சுமப்பதான மிருதுவாகிய கொடிபோன்ற சந்திரவதி சூட்டுவதான சுயம்வரமானது எனக்குண்டு எனக்குண்டென்று நினைத்து வருகிற அரசர்களுக்கெல்லாம் பின்னே அரிசசந்திரமகாராசன் வந்தான். எ-று. (உ௪௬)

அன்ன காலையி னங்கைக ணீட்டியே
கன்னன் மாமொழிக் காரிகைத் தோழிமார்
மன்னர் நாமமு நாடும் வழிகளும்
இன்ன தின்ன தெனவெடுத் தோதுவார்.

இ-ள். அந்தச் சமயத்திலே அழகிய கைகளைநீட்டிக் கரும்பின் இரசம் போலும் பெருமை பொருந்திய சந்திரவதியின் தோழிமார்கள், வந்திருக்கிற அரசர்கள் பெயரும், நாடுகளும், குலமுறைகளும் இன்ன இன்னபடியென்றெடுத்துச் சொல்லத் தொடங்கினார்கள். எ-று. (உ௪௭)

அறுசீர்க்கழிநெடிலடி யாசியவிருத்தம்.

அதிபார தனபார வதிரூப மலர்மானே யனையா யிவன்
நதிபாய வுயர்போதி னறைபாய நிறையாத சிறைவா வியில்
மதியாமல் வலைபீறி வெடிபோன பருவாளை வளைபூகமேல்
குதிபாய மடல்கீறி விழுதேறல கரைசாடு குடநாடனே.

இ-ள். அதிக கனங்கொண்ட தனபாரங்களையும் மிக்க அழகையுமுடைய லட்சுமிதேவியை ஒப்பான சந்திரவதியே! இங்கே யிருக்கின்ற அரசன். ஆறு பெருகிப்பாய அதனாலே மேலேயுயர்கிற மலரிலுள்ள தேனொழுகுவதனாலே முழுதும் நிரம்புதலாகுகின்ற கட்டுக்குளங்களிலே சட்டைபண்ணாமல் வலையைக் கிழித்துத் துள்ளிப்போன பருத்த வாளைமீனானது. வளைவான குலைகளையுடைய கமுகமரத்தின்மேலே குதிக்க, அதன் மடலானது கிழிந்துவிழுகிற தேன்பெருககானது குளக்கரையை யுடைப்பதான குடநாடனாகிய சேரன். எ-று. (௨௧௮)

இருணூறு நஞ்சொத்த விழியாய் துவண்டெய்த்த விடையாயிவன்
சுருணாக பநதத்தி னியல்பாம ருஞ்சித்ர தொடியே வியே
முரணூர மன்றிட்ட மகவானை டுங்கொற்ற முடிசா டினோன்
சரணார விந்தத்து மகராலயங் துற்ற தமிழ்மா றனே.

இ-ள். இருள் தோன்றுவதான விடத்துக்கொப்பாகிய கண்களையுடையவளே! துவண்டு இளைத்திருக்கிற இடையை யுடையவளே! இந்த அரசன் சுருண்டு பாம்பு மண்டலித் திருக்கின்றதுபோல்வதாய் மருவுகின்ற அதிசயத்தை யுடையதான [சிவன் கொடுத்திருந்த] வளையைவிட்டுத், தனது வலிமைதோன்ற முன்னொருகால் எதிர்த்த இந்திரனுடைய நெடிதாகிய வெற்றி கொண்டதிருமுடியை உடைத்தவன்; பின்னுந் தனது பாதாரவிந்தத்திலே வருணன்வந்து வணங்கலான தமிழ்ப்பாண்டியன். எ-று. (௨௧௯)

மலிவாச மலற்பூசி யளிபாடு நறையோதி மயிலே யவன்
ஒலியேறு திரைமோது முவராழி புலகேழு முடனு கவே
வலியோர்க ளெளியோரை நலியாம லசையாத மணிவா யிலோன்
புலியேறு வடமேரு கிரிமீதி லிடிமீளி புனனு டனே.

இ-ள். மிகுந்த பரிமளத்தையுடைய பூம்பராகங்களைப் பூசிக்கொண்டு, வண்டுகள் பாடுவதான மணங்கொண்ட கூந்தலுடன் மயிற்சாயலையுடையவளே! இந்த அரசன் ஒலிமிகுந்த அலைகள் மோதுவதான உப்புக்கடல் சூழ்ந்த உலகங்களேழும் ஒருபிரகாரமாய் நடக்கவும், வலியவர்கள் எளியவர்களை வருத்தப்படுத்தாமல் அசையாத ஆராய்ச்சிமணி கட்டியிருக்கிற வாயிலையுடையவன், தனது புலிக்கொடியான தேறியிருக்கிறதாக வடமேருகிரிமேலேஎழுதின இடியையொத்த சிங்கம்போலும் வீரத்தன்மையையுடைய புனனாடனாகியவேந்தன் எ-று. (௨௨௦)

விடமேவு கடல்போலு மடனீடு கணைபோலும் விழிமா தராய்
வடமேரு கிரிபோலு முயர்தேரி னிடையேறி வருகோ மகன்

தடமாடு மடமாதர் தனமார நிகரான தடவா யிலார்
குடமேறி வளையார மணியீனு மணிமேவு குருநா டனே.

இ-ள். நஞ்சுபொருந்திய கடலைப்போலவும், வெற்றிமிகுந்த அம்பைப் போலவும் கண்களையுடைய பெண்ணே! வடக்கேயிருக்கிற மேருமலையைப் போல்வதான உயர்ந்த தேரின்மேலேறிவருகின்ற இந்த அரசன், குளத்திலே நீராடுதலையுடைய யௌவன பருவத்தைக்கொண்ட பெண்களுடைய தன பாரங்களை யொப்பான பெருமையுடனே நீர் முகக்கிற வழியையுங்கொண்ட குடத்திலே, சங்கானதுசேர்ந்து முத்துமணிகளைப் பெறுவதான அழகுபொருந்திய குருநாட்டினன். எ-று. (உஉக)

முருகோடு புழுகோடு பணியோடு பிரியாத முலையா யிவன்
பொருகோடி கொடுவாச மலர்சாடி யிளமேதி புனல்பா யவே
ஒருகோடி கயலோடவொருகோடியளியோட வொருகோடிவெண்
குருகோட வொருகோடி சினைவாளை கரையேறு குருதே சனே.

இ-ள். பரிமளமும் புனுகும் ஆபரணங்களும் நீங்காதிருக்கின்ற தனங்களையுடையவளே! இந்த அரசன், சண்டைசெய்கின்ற கொம்பினாலே பரிமளத்தையுடைய தாமரைமலர் முதலானவற்றைச்சிதைத்து இளமையான எருமைகள் நீரிலேகுதிக்க, அதனாலே, ஒருகோடி மீன்களோடவும், ஒருகோடி வண்டுகளோடவும், ஒருகோடி வெள்ளைக்குருகுகளோடவும்,ஒருகோடி கோபத்தையுடைய வாளைமீன்கள் கரைமேலேபாய்வதான குருநாட்டினன்.எ-று.

முயலுவி யணுகாது வியர்தாவு மதிபோலு முகமா தராய்
புயலுவ முயர்தேரி விடையேறி வருமாலை புனைமார் பினான்
கயலுவ நறுநீல முகைமீறி மடையூடு கமழ்தே றல்போய்
வயலுழ வயலூடு வளர்சாலி கதிர்தாழு மகதே சனே.

இ-ள். முயலானது தாவுதலாய்ச் சேராமல் வெயர்வையைக்கொண்ட சந்திரன்போல்வதான முகத்தையுடையபெண்ணே! மேகந்தவழுதலாக உயர்ந்த தேரின்மேலேறிவருகின்ற மாலையணிந்த மார்பையுடைய இந்த அரசன் கெண்டைமீன் துள்ளிவிழ, அதனாலே, நல்ல நீலமலரி னரும்புடைந்து மடைவழியே பரிமளித்தலையுடைய தேனானது சென்று வயலிலேபாய, அதனால் அந்த வயலினிடத்துள்ளதாய் வளர்கிற நெற்கள் கதிர்விடுவதான மகதநாட்டினன். எ-று. (உஉங)

முளையேறு வணகிரண விருதோ ணறுங்குதலை மொழிமா தராய்
உளையேறு திண்புரவி கரிசூழ விங்குவரு முயர்தே ரினான்
தளையேறு கின்றவய றனிலேயெ ழுங்கமல தளமீ திலே
வளையீனு மொண்டரள மதிபோலெ ழுங்கவுட வளநா டனே.

இ-ள். மூங்கில்போல் நீண்டு அழகிதான ஒளியையுடைய இரண்டு தோள்களைக் கொண்ட நல்ல மழலைச்சொற்போலும் மொழிகளையுடைய

பெண்ணே! புறமயிர்கள் நீண்டு வலியைக்கொண்ட குதிரைகளும் யானைகளுஞ்சூழ இங்கே வருவதான உயர்ந்த தேரையுடைய இவ்வரசன், பாதச் சிலம்புக ளொலிக்கின்றபெண்களுடைய வயலிலே முளைப்பதான செழித்த தாமரையிதழிலே சங்குகள் பெறுவதான அழகிய முத்துகள்சந்திரனைப் போல் விளங்குகின்ற கவுடவளநாட்டினன். எ-று. (உ௨௪)

அரிசிந்து விழியாயி வணிதேரின் மிசையேறி யடைகோ மகன்
விரிசிந்து விளையுண்ட வொருசிந்து முனிதங்கு கிரிசிந் துகால்
பொறிசிந்த வலர்புன்கு பொருள்சிந்த வலர்கொன்றை பொறிவண்
வரிசிந்த மகரந்த மலர்சிந்த வருசிந்து வளநாடனே. [டினம்

இ-ள். செவ்வரிகள்சிதறிய கண்களையுடையவளே! இந்த அழகான தேரின்மேலேறி வந்த அரசன், விரிவான கடலையுண்ட ஒருகுறுமுனியான அகத்தியர் தங்குகின்ற பொதியமலை பெற்றுவிடுகிற தென்றற் காற்றினாலே அலர்ந்த புன்குமரங்கள் பொரிபோல் மலரைசசிந்தவும், அலர்ந்தகொன்றை மரங்கள் பொன்னைப்போல் மலரைச்சிந்தவும், புள்ளிகளையுடைய வண்டுக் கூட்டங்கள் பாட்டுகளைச் சிந்தவும், மகரந்தங்களான தேனை மற்றைமலர்கள் சிந்தவும் வருவதான சிந்துவென்னு நதியையுடைய சிந்துவள நாட்டினன்.

சுராங்க மிகநொந்து கடைகின்ற தினம்வந்த கதையென் சொலாய்
நராங்க மலைகொண்டு சதுரங்க விரிசிந்து நடுமிந்தமால்
பராங்க மிகவென்று வினைகொண்டு சிலைகொண்டு படைவநதநாள்
வராங்க தரர்கொன்ற மதனங்க முருமங்க வளநாடனே.

இ-ள். தேவர்கள் தஙகளுடைய உடம்பு மிகவுநொந்து கடைகின்ற நாளிலே உண்டான அமுதமே என்னும்படியான சொற்களை யுடையவளே! மனிதருடைய தேகமாகிய மலையைக்கொண்டு சதுரங்கமாக விரிகின்றகடலி லோடுவதான இந்தத்திருமால்போன்ற அரசன், அன்னியர்களுடைய உடல் களை மிகவுமழித்து, அந்தச் செய்கையைக்கொண்டு கரும்பு வில்லுடனே அம் புகளுங்கொண்டு தன்னிடத்து வந்தகாலத்தில் சிரேஷ்டமான பிரம்ம விஷ்ணுக்களுடைய எலும்புகளைத் தரித்த சிவனுடைய வொருவத்த மன்மதனுடைய உடல் பொடியாகச் சிந்தின அஙகவள நாட்டினன். எ-று (உ௨௬)

தேஞ்சாலு மிருகுன்று களையஞ்சு மிடையஞ்சு திருமவ யிவன்
ஈஞ்சாலு மிறவாலு மிறலான திடையேறி யிழிதேறலும்
காய்ஞ்சாலு கதிர்சாட மாஞ்சோலை யிடைசோர்பு ...ரியூ றலும
பாய்ஞ்சாலை வயலூறு பூஞ்சாலி விளைவேறு பாஞ்சா னே.

இ-ள். மாலையினின்றுந் தேனொழுகுவதாயமைந்த இரண்டு தனங்க ளாகிய மாலைகளைத் தாங்கமாட்டாமல் குறைவுபடுவதாய் இடை யஞ்சுவதான லட்சுமிக் கொப்பானவளே! இந்த அரசன், ஈந்திரன் முள்ளாலும் இறால்மீன்களாலும் தேன்கூடானது நடுவேகிழிந்து வழிகிறதேனும், பழுத் தசைகிற சோளக்கதிர்மோத அதனாலே மாந்தோப்பிலே யந்த மாங்கனி நைந்து அக்கினியினின்று மொழுகுகின்ற தேனும்பாய்ந்து ஆலைக்கரும்பு

சாறு பெருகுகின்ற வயலுள்ள அழகிய நெற்களின் விளைவு முதிர்தலான பாஞ்சாலநாட்டினன். எ-று.

ஈஞ்சு - ஈந்து. இறல் - இருலின் விகாரம். (உஉஎ)

தேம்போதி னீர்ந்தாது பூம்பாளை நீங்காத, தேங்கோ தையாய்
கூம்போடி வான்றேயு மான்றேரி வீண்டடாசை கூர்ந்தே றிஞேன்
தூம்போடு கூன்கோடு வார்ந்தோடி யீன்றேரி தோய்ந்தேறவே
காம்போடு சேம்போடு சேர்ந்தார மார்ந்தோடு காந்தாரனே.

இ-ள். தேனையுடைய மலர்களில் பராகங்களுள்ளதாய்க் கூந்தற்பனையினது பாளைபோல் நீண்டுள்ளதாய்ப் பரிமளம்விலகாத கூந்தலையுடையவளே! சிகரமானது நீண்டு ஆகாயத்தையளாவுவதான குதிரைகட்டின தேர்மேலே இங்கேஆசைமிகுந்தேறிவந்த இவ்வரசன், மதகின்வழியே ஓடுகின்ற கூனிய சங்கானது அந்தமதகி னீருடனே நீண்டோடிப்பெற்று மீண்டும் குளத்திலே போய்க் கூடுதலாக, காம்புடனே நீளுவதான நீர்ச்சேம்புடன் மோதி அச்சங்கு பெற்ற முத்துகள் நீரிலே நிறைதலாய் நீரோடு செல்வதான காந்தார நாட்டினன். எ-று. (உஉஅ)

அடர்ந்தோடி நெஞ்சங்க வர்ந்தேவ ருங்கண்ண ணங்கேயிவன்
தடந்தோறு மங்கங்கு மூன்றான ருந்துஞ்ச யங்கூர்காரத்
தொடர்ந்தோட வெங்குங்கவ லைந்தோடி யஞ்சுஞ்சு ணங்காழிநீர்
கடந்தோடி யென்றுங்க ரும்பூடு றங்குங்க லிங்கேசனே.

இ-ள். நெருங்கி நீண்டு புருஷர்களுடைய மனதைக் கிரகித்துக்கொண்டு வருவனவான கண்களையுடைய பெண்ணே! இந்த அரசன், குளங்களிலெல்லாம் அங்கங்கே அலைந்து மீன்புலாலை எண்ணுகின்ற வலிமையால், மிகுவதான முதலையானது பின்றொடர்ந்துசெல்ல, [அதனால்] எவ்விடத்தும் நில்லாமல் ஓடிப்பயப்படுவதான நீர் நாயானது அந்த ஆழமுள்ளதான குளத்து, நீரைவிட்டுப்போய் எப்போதும் கரும்புத்தூரிலே தூங்குவதான கலிங்க நாட்டினன். எ-று. (உஉகூ)

இகழ்ந்திடும தன்புவிபு ரந்திடவ ளர்ந்தெழுமி ளங்கொடி யிவன்
நிகழ்ந்தவர விந்தவணி தண்கழனி யெங்கணுநி றைந்துநி ரவப்
புகழ்ந்தகட விந்தகனவி ரும்பனகு ளம்பிடைபு தைந்துமு ளையின்
அகழ்ந்துழுத ங்கொழுநெ டுந்தலைம டிந்திடும வந்திய ரசே.

இ-ள். [துறவிகள்] இகழ்வதையுடைய மன்மதன் உலகத்தையாளும்படி வளர்ந்தெழுவதான இளமையான கொடிபோல்பவளே! இந்த அரசன், நீரிலே சஞ்சரித்துள்ள தாமரைமுத்துகள் குளிர்ந்த வயல்களெங்கு நிறைதலாய்ப் பரவ அந்த முத்துகள் புகழத்தகுந்திருக்கின்ற எருமைக்கடாவினுடைய கடினமான இரும்புபோன்ற குளம்பிலே, அழுத்துதலா யுதிர்ந்து பின்பு தனது கூர்மையினாலே, கிழித்து நிலத்திலே, செல்லுவதான பெரிதாகிய கொழுவினுடைய நீண்ட நுனியினாலே உடைந்து போவதான அவந்தி நாட்டினன். எ-று. (உஙo)

புத்தமுத மொத்தமொழி வெற்பை நிகரொத்ததன பொற்றொடியி
சுத்தநிபு ணக்குசலர் சொற்கரிவ ழுக்கரிய சுத்தநெ றியால் [வன்
முத்தணி நகைச்சியர்த னத்திடைநி மிர்த்தெறி முழுக்க லவையில்
மத்தகர டக்கரிவ ழுக்குறுதெ ருச்செறியு மத்திரர் பிரான்.

இ-ள். புதிதான அமிர்தத்தை ஒப்பான வசனமும், மலைகளை நிகர்வ தற்குச்சரியான கொங்கைகளையுமுடைய பொன்வளைய லணிந்தவளே! இந்த அரசன், பரிசுத்தமான கலைவல்லவர்களான பெரியோர்கள் சொல்லுக் குத் தன்னறிவு வழுவுத லில்லாத நல்ல நீதியை யுடையவன். முத்துப் போலும் அழகிதான பல்வரிசையையுடைய பெண்கள் கொங்கைகளினின் றும் வழிந்தொழுகுவதாவன மணமிகுந்த கலவைச் சந்தனச்சேற்றிலே மதச் சுவடுகொண்ட யானைகள் வழுக்கிவிழுவதான வீதிகள் நெருங்கின மத்திர தேசாதிபதி. எ-று. (௨௬௧)

கருமச்ச மனையொத்த கொலைவைத்த விழிபெற்ற களிமா தராய்
பெருமச்ச மருமிக்க விரதத்தி னிடையுற்ற பெருமா னிவன்
னிருமச்ச னயனத்தர் முலைமுத்தில் விழுமச்ச விடையிற் றெனு
வருமச்ச மலர்தற்ப மணமச்ச முறுமச்ச வளநா டனே.

இ-ள். புண்ணிய பாவங்களை விசாரிக்குந் தொழிலையுடைய யாவரு மகி ழத்தக்க அழகையுடையவளே! பெரிய மச்சுவீடுபோ லிருப்பதான உயர்ந்த தேரின்மேல் வந்த பெருமையுள்ளவனான இந்த அரசன், இரண்டு கெண்டை மீன்போலுங் கண்களையுடைய பெண்கள் கொங்கைகளி லணிந்த முத்து மாலைகளின் கனத்தாலே துவண்டு விழுவதாகிய இலேசான இடையானது இத்தன்மையதென்று வருகிற பயம்போலவே, விரிவான படுக்கையிலும் புரு ஷர்கள் மனதிலே பயங்கொள்ளுவதான மச்சவளநாட்டினன். எ-று.

பெருமச்சு - பெரியமசசு. (௨௬௨)

கடளுக மொருகோடி வயவாசி பலகோடி கடல்போ லவே
உடளுக வரமேக வளவாக வொருதேரி லுறுகோ மகன்
மிடளுக மடல்பூக விரிபாளை யெனநாணி வெளிமேய் கிலா
மடளுக மிசைதோகை மயிலேறி மலரூடு மறைகே கயன்.

இ-ள். மகத்தினையுடைய யானைக ளொருகோடியும், வெற்றிபொருந் திய குதிரைகள் பலகோடிகளும், கடலைப்போல் தன் கூடவேவர, மேகமண் டலத்தினளவு முயர்வாகிய ஒரு தேரின்மேலே வருகின்ற இவ்வரசன், மடலையுடைய கமுகமரத்திலே விரிகின்ற பாளையை, விஷத்தினையுடைய பாம்பென்றெண்ணி வெட்கங்கொண்டு வெளியே மேய்கிறதற்கு வாராதிருக் கிற அறிவற்ற சர்ப்பத்தை, உண்ணுகின்ற கலாபமயிலானது, அந்தக் கமுக மரத்தின்மேலேறி, அதன் பாளையிலுள்ள பூவிலே மறைவதான கேகயநாட் டினன். எ-று.

சர்ப்பத்தின் படம்போல விரிகின்ற கமுகின்பாளை. தன்னினுமிக்கிருத் தலைக் கண்ட சர்ப்பம் வெட்கங்கொண்டு வெளியே வராதிருக்கிற கேகய நாடென்பதுபொருள். (௨௬௩)

வாடிவிழு நூலுமிரு மால்வரையு நேரிடை மாமுலை யுமாச்
சூடிமிக வானிழிய ஞாலம்விளை யாடிவரு தோகை மயிலே
ஆடிநிழல் போலுமுள மேவியணி தேர்மிசையு மாகி வருவோன்
நாடியற நாளுமுயர் கோசலம தானகுல நாட னிவனே.

இ-ள். துவண்டு விழுகின்ற நூலையும், இரண்டு பெரிய மலைகளையு மொப்பான இடையும், பெரிய தனங்களுமாகக் கொண்டு, மிகவு மேகங்க ளிறங்க உலகிலே விளையாடிக்கொண்டு திரிகிற தோகைமயில் போன்ற வளே! கண்ணாடி நிழலைப்போல உன்மனத்திலே குடிகொண்டு அழகிய தேரின்மேலுந் தோன்றவருகிற இவ்வரசன், தேடித்தேடித் தருமமே தினந் தினமும் வளர்வதாயிருக்கிற கோசலமென்கிற சிரேஷ்டமான நாட்டை யுடையவன். எ-று. (உ௩௪)

கலிவிருத்தம்.

மந்தர மனையதோள் வள்ளல் பேர்சொலச்
சுந்தரத் தோகைமார் தோளைத் தாழ்த்தியச்
சந்திர மதியரிச் சந்திரன் றனைக்
கந்தர நீட்டியுட் கருத்து நோக்கினாள்.

இ-ள். மந்தரமலைக்கொப்பான தோள்களைக்கொண்ட பிரபுவான அரிச் சந்திரனுடைய பேரைச சொல்லும்போது அச் சந்திரவதியானவள், அவ் வாறுசொன்ன அழகான பெண்களுடைய தோள்களைத்தாழச்செய்து, அரிச் சந்திரமகாராசனைத் தன் கழுத்தைநீட்டிப் பார்த்து அவனுள்ளக் கருத் தையும் எண்ணினாள். எ-று. (உ௩௫)

அங்கைவேள் மன்னனு மாசை மீக்கொள
மங்கைதன் பங்கய வதன நோக்கினான்
செங்கயற் கண்ணினா டிருக்க ழுத்தினில்
மங்கல நாணுநீ இ வயங்கக் கண்டனன்.

இ-ள். அழகிய கையிலே வேலை யுடைய அரிச்சந்திர மகாராசனும் தனக்கு ஆசைமேன்மேலாக, சந்திரவதியினுடைய தாமரைமலர்போலு முகத் தைப்பார்த்தான். சிவந்த கயல்போலுங் கண்களையுடைய சந்திரவதியின் அழகிதான கழுத்திலே திருமங்கலிய சூத்திரம் பொருந்தி விளங்க அதையுங் கண்டான். எ-று. (உ௩௬)

கன்னியென் றெண்ணினங் கன்னி யோவலன்
முன்னமோ மங்கலம் பூண்ட மொய்குழல்
இன்னமு மொருவருக் கெய்து மோவெனா
மன்னவன் மாதுலற் குரைவ ழங்கினான்.

இ-ள். இவள் விவாகமாகாத பெண்ணென்று நினைத் திருந்தோம்; அப்படிக்கின்றி, முன்னேதானே மாங்கிலியம் சூட்டப்பட்ட பெண்ணா யிருக்கிறாள். இன்னமும் ஒரு புருஷனுக்குப் பாத்தியப்படத்தகுமோ? என்

றரிச்சந்திரமகாராசன் [தன்னுட்சிந்தித்து] மாமனுன சந்திரதயவராசனைப் பார்த்துச் சிலசொற்கள் சொன்னுன். [மொய்குழல் - நெருங்கின கூந்தலாள்.]

பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மணமு டிப்பரோ
சிறுத்தவர் செய்தொழி றிவை ரைப்பிதில்
நிறுத்தினீர் நீரொரு நெடிது கூறினுன்.

இ-ள். முன்னே ஒருவன் விவாகஞ்செய்து கொண்டபோது, தரித்தமங் கலியத்தை இன்னமும் கட்டிக்கொண்டிருக்கிறபெண்ணை, அதைநீக்கி இரண் டாவது கல்யாணம் ஒருவர் செய்துகொள்ளுவரோ? சிறியஜாதியார்இப்படிச் செய்து கொள்ளுகிறது உண்டு. கடல்சூழ்ந்த பூமண்டலத்திலே இச்செய் கையை நீங்களும் செய்வதாகச் சுயம்வரம் நாட்டினீர்களென்று அதிக விவ காரங்களைச் சொன்னுன். எ-று. (உ௩அ)

வள்ளலீ துரைத்தலு மதித யன்றன
துள்ளம்விட் டோங்கிய வுவகையும் பெரு
வெள்ளமுள் ளடக்கியே வேந்தர்கா ளிவர்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டு ரைத்ததே.

இ-ள். இவ்வாறு பிரபுவான அரிச்சந்திரன் சொன்னபோது, சந்திர தயராசன் தனதுமனத்தினின்றும் பொங்குகின்ற சந்தோஷமாகிய பெரிய வெள்ளத்தை உள்ளே யடக்கிக்கொண்டு. அரசர்களே! இம்மன்னன் சொன் னது திருட்டுத்தனமோ அல்லது உண்மைதானே. எ-று. (உ௩௯)

தையலாள் கழுத்தினிற் றுலி யுண்டெனில்
கையினுற் கண்ணுறக் காட்டு நீரெனச்
செய்யகை யறைந்தணி மூக்கிற் சேர்த்தியிவ்
வையனும் பொய்யனென் றரசர் கூறினுர்.

இ-ள். சந்திரதயவராசன் [அரசர்களைநோக்கி] இந்தப்பெண்ணினுடைய கழுத்திலே தாலியிருக்குமானுல், உங்கள் கையாலாவது கண்ணுலாவது நீங் களே காட்டுங்களென்று சொல்ல, அதைக்கேட்ட அரசர்கள் தங்கள் சிவந்த கைகளைத் தட்டி அதிசயித்து, அழகிய மூக்கிலேவிரல்வைதது இந்த மகாப்பிர புவான அரிச்சந்திரன் பொய்யனுயிருக்கிருன் என்றுர்கள். எ-று. (உ௪௰)

மண்டல வேந்தனெம் மடந்தை மங்கலம்
கண்டது நீங்கடாங் கண்டி லாததுா
திண்டிற லீரொரு தேவ ராசியம்
உண்டென மதிதய னுரைப்ப தாயினுன்.

இ-ள். மிகுந்த சாமர்த்தியத்தையுடைய அரசர்களே! இந்தப்பூமண்டல த்தை யாளுகின்ற அரிச்சந்திரமகாராசன் எங்கள் பெண்ணின் கழுத்திலே தாலியிருக்கக் கண்டதற்கும், நீங்களெல்லாருங் காணுதிருக்கிறதற்கும் ஒரு தேவரகசிய முண்டென்று சந்திரதயராசன் சொல்லுகிருன். எ-று. (உ௪௧)

அண்டர்நா யகன்வர மளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்த மங்கலம்
கண்டவர் பதியிவட் கென்ற கட்டுரை
உண்டஃ தன்றிவே றுண்டு கேட்டிரால்.

இ-ள். தெய்வ நாயகனை சிவபெருமான் எனக்கு வரங்கொடுத்த காலத்திலே, வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய இந்தச் சந்திரவதியுடனே பிறந்த திருமங்கிலியத்தைக் கண்டவனே இவளுக்கு நாயகனென்று சொன்ன உறுதிவார்த்தை யுண்டு, அதுவன்றி, வேறேயு மொன்றுண்டு கேளுங்கள். எ-று. (உசஉ)

மஞ்சனச் சடையினான் வரத்தில் வந்தநாள்
கஞ்சனை நீழலிற் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கு மங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரு மியானுங் கண்டிலேம்.

இ-ள். கங்காஜலாபிஷேகத்தைக் கொண்ட சடாபாரத்தையுடைய பரமசிவனவர் கொடுத்தவரத்தினாலே, இவள் பிறந்தநாள்முதல் கண்ணாடி நிழலிலே இவள் மங்கிலியத்தை நாங்கள் பார்த்திருக்கிறதே யல்லது, மையிட்ட கண்களையுடைய அச்சந்திரவதிக்கும், அவளுடைய அழகிதான கைக்குத் தொட அகப்படாது. குறைவில்லாமல் எங்கள் வீட்டிலுள்ள எல்லோரும் நானும் நாளதுவரையில் பார்த்ததில்லை. எ-று. (உசங)

மேற்படி வேறு.

என்றலும் வல்லிமு னெண்ணிய நாமம்
ஒன்றலை துள்ளுற வுன்னல ளாகிச்
சென்றவன் மார்பிது சேர்கென வுன்னு
மன்றலர் மாலையை வானி லெறிந்தாள்.

இ-ள். என்றுசொல்லும்போது, சந்திரவதியானவள் தான் முன்னே நினைத்த அரிச்சந்திரனுடைய பெயரொன்றையல்லது வேறேயொரு பெயரையும் தனமனத்தில் நினையாதவளாய், இந்த மாலைபோய் அரிச்சந்திர மகாராசனுடைய மார்பிலே விழக்கடவதென்று நினைத்து, மணம்விரிகின்ற பூமாலையை ஆகாயத்திலே எறிந்தாள். எ-ள். (உசச)

வார்பயில் பூண்முலை மாலையு நெஞ்சும்
பார்பயின் மன்னவர் பற்பலர் கண்ணும்
தார்பயில்வே லரிச் சந்திர னென்பான்
மார்பி லணைந்து மலர்ந்தன மன்னோ.

இ-ள். இரவிக்கை பொருந்தின ஆபரணங்களை யணிந்த தனங்களையுடைய சந்திரவதி எறிந்தமாலையும், அவள்மனமும், அந்தச்சபையிலே யிருக்கிற அரசர்கள் பலபலபேர்களுடைய கணகளும், மாலைபொருந்தின வேலைக்கொண்ட அரிச்சந்திர மகாராசனுடைய மார்பிலேகூடி விகசிக்கலாயின.எ-று

வஞ்சி வழங்கிய மாலைய ணிந்தோன்
செஞ்சுட ரின்முக நின்றொளி செய்ய
வெஞ்சுடர் முன்சசி யாமெனி மிக்கோர்
கஞ்சமு கங்கள் கரிந்தன வன்றே.

இ-ள் அப்படிச்சந்திரவதி எறிந்த மாலையை யணிந்துகொண்ட அரிச்சந்திரமகாராசனுடைய முகமானது சிவந்த சூரியனைப்போல நிலை கொண்டு விளங்க, அப்படிப்பட்ட வெப்பத்தையுடைய சூரியனுக்குமுன்னே சந்திரன் போல அங்குமிருந்துள்ள அரசர்களுடைய தாமரை மலர்போன்ற முகங்கள் வாடி ஒளிமழுங்கின. எ-று. (உசரு)

மாதர்க ளார்த்தனர் வானவ ரார்த்தார்
கீதர்க ளார்த்தனர் கேளிரு மார்த்தார்
சூதர்க ளார்த்தனர் துறவரு மார்த்தார்
வேதர்க ளார்த்தனர் வேலை யடங்க.

இ-ள். அப்போது கடலோசை யடங்கும்படி பெண்களெல்லாரும் ஆரவாரித்தார்கள், தேவர்களும் ஆரவாரித்தார்கள், கீதங்கள் பாடுகிறவர்களும் ஆரவாரித்தார்கள், சந்திரவதியினுடைய உறவினரெல்லாரும் ஆரவாரித்தார்கள், பாடுகிறவர்களும் ஆரவாரித்தார்கள், துறவினராகிய முனிவர்களும் ஆரவாரித்தார்கள், வேதப்பிராமணர்களும் ஆரவாரித்தார்கள். எ-று.

நல்லிய னூலறி நாவலர் பாடப்
பல்லிய மும்பல பாடலு மார்ப்ப
அல்லிம லர்த்தொடை மாலை யணிந்தே
வல்லியு மன்னனு மாளிகை புக்கார்.

இ-ள். நல்ல இலக்கியவிலக்கண நூல்களையுணர்ந்த வித்துவான்கள் பாடவும், பலவாத்தியங்களும் பலவகைப் பாடல்களு முழங்கவும், அகவிதழ்களையுடைய பூமாலையைச்சூட்டின சந்திரவதியும், சூடிக்கொண்ட அரிச்சந்திரமகாராசனும் படுக்கைவீட்டுக்குள்ளே போனார்கள். எ-று. (உசஅ)

மின்னிய தாம விளக்கொரு கோடி
கன்னியர் வந்து கலத்தொ டெடுப்ப
மன்னிய மாமணி மஞ்ச மணைந்தே
பொன்னின் முலைக்கொடி யோடு புணர்ந்தான்.

இ-ள். மின்னுகின்ற ஒளியைக்கொண்ட ஒருகோடி மாணிக்கவிளக்குகளை அதன்பாத்திரத்துடனே பெண்கள்வந்து தாங்கிக்கொண்டு நிற்க, நிலைகொண்ட பெரிதான இரத்தினகசிதமானகட்டில் மெத்தைமேலேபோய் பொன்போலுந் தேமல்படர்ந்த முலைகளையுடைய சந்திரவதியுடனே [அரிச்சந்திரன்] கூடினான். எ-று. (உசகூ)

ஆரம கிற்புகை காசறை நீர்கர்ப்
பூரந ரந்தம ணிந்து புலர்த்திப்

பாரத னத்தினி விட்ட பராகம்
சோரவ ணிந்தெறி சுண்ணமெ றிந்து.

இ-ள். சந்தனச்சேறு, அகிற்புகை, கஸ்தூரி, பனிநீர், பச்சைக்கர்ப்பூரம் சவ்வாது ஆகிய இவைகளெல்லாம் அணிந்து உலரச்செய்துகொண்டு, கனமான தனங்களிலே அணிந்த கந்தப்பொடிகளுதிரப்பூசி வீசிவிளையாடுகின்ற பொன்னிறப் பொடிகளை ஒருவர்மேலொருவர் வீசிவிளையாடி. எ-று.

காசறை - மயிர்ச்சாந்துமாம். (உ௫0)

மல்லிகை சண்பக மாதவி புன்னை
முல்லைகு ராமகிழ் முண்டக நீலம்
அல்லிநி றைந்தசெ வந்திசெ ருந்தி
புல்லிதழ் வாசம ளைந்துபு னைந்தார்.

இ-ள். மல்லிகைப்பூ - சண்பகப்பூ - குருக்கத்திப்பூ - புன்னைப்பூ - முல்லைப்பூ - குரவம்பூ - மகிழம்பூ - தாமரைப்பூ - நீலப்பூ - அகவிதழ் நிரம்பியுள்ள செவ்வந்திப்பூ - செருந்திப்பூ ஆகிய இவைகளிலேகூடின இதழ்களின் பரிமளங்களைச்சேர்த்து முடிததுக்கொண்டார்கள். எ-று. (உ௫௧)

அங்கையொ டங்கைய ணைத்துட லொன்றைக்
கொங்கைபு யத்திரள் குன்றில ழுந்தச்
செங்கயல் சென்றுதி ருக்குழை தாவ
மங்கையு மன்னும கிழ்ந்துபு ணர்ந்தார்.

இ-ள். அழகிய கைகளுடனே கைகளையணைத்து உடம்பெல்லாம் ஒருமிக்க, கொஙகைகள், தோள்களாகிய திரண்ட மலைகளிலே யழுந்த, சிவந்த கெண்டைமீன்போன்ற கண்கள்போய் அழகிய குண்டலமணிந்த காதுகளிலே பாய, இவ்வாறு சந்திரவதியும் அரிசசந்திரனும் சந்தோஷித்துக் கூடினார்கள். எ-று. (உ௫௨)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வாசமார் மாலை மன்னவன் முன்னாண் மருவிடா வெகுளியின் மலைந்து, பூசல்வேள் பலகா லெய்தபுண் ணுக்குப் புணர்முலை வேது கொண்டொற்றி, மாசிலா மணிசெய் சூடகக் காந்தண் மலர்க்கரமா கமேற் கட்டி, ஆசைநோய் தீர வமுதவா யுதக மளித்தன ளரிவையர் பெருமாள்.

இ-ள். பெண்களுக் கரசியான சந்திரவதி, மணநிரம்பின மாலையைச் சூடின அரிச்சந்திரமகாராசன் முன்னே தன்னைவந்து கூடாத கோபத்தினாலே சண்டைசெய்கிற மன்மதன் பலதரமுமெய்த அம்புகள்பட்ட புண்களுக்குத் தனதிரண்டாகிய கொங்கை வெப்பத்தைக் கொண்டு ஒற்றி, குற்றமில்லாத மாணிக்கஙகள் பதித்திருக்கிற கங்கணங்க ளணிந்த காந்தள்மலர் போலுங் கைகளாலே அவன்மார்புமேலழுந்தக் கட்டியணைத்து அவனுடைய காமவியாதி நீங்கத் தனது அமுதவாயிலுள்ள நீரைக் கொடுத்தாள் எ-று. (உ௫௩)

கண்டகண் வாங்கா திருவரு மதனுற் கலவியும் புலவியும் விளைத்து, முண்டக வதனம் வெயரரும் பிடினு முகிழ்முலை வடமசைந்திடினும், கொண்டலங் குழலில் வண்டலம் பிடினுங் குறைவிலா நிறையிட ரெய்தி, மண்டலத் தரசன் சிந்தையம் மங்கை மருங்குலி னொருவழித் தன்றே.

இ-ள். ஒருவரையொருவர் பார்த்தகண் பார்வை நீங்காமல், மன்மதனுடைய உபத்திரவத்தினுலே கூடலும் ஊடலுஞ்செய்து. தாமரைமலர்போன்ற முகத்திலே சந்திரவதிக்கு வெயர்வை உண்டானுலும், தாமரை யரும்புபோன்ற தனங்களிலே முத்துமாலைக ளசைந்தாலும், மேகம்போற் கருநிறத்தா லழகிதான கூந்தலிலே வண்டுகள் முழங்கினுலும் [இடைதாங்கமாட்டாமல் வருந்துமென்று] பூமண்டலத்துக் கெல்லாம் அரசனுன அரிச்சந்திரன் மனமானது குறையாமல் நிரம்புவதான துன்பத்தைக்கொண்டு, அந்தச் சந்திரவதியினுடைய இடையினுலே ஒருவழிப்படாதிருக்கின்றது. எ-று.

உடைப்பெரும் பண்ட மிகக்கலந் தேற்றி யொலிகட னீந்தி யோர் துறைசேர்ந், தடைப்பெரும் பரத்தாற் றழுமென் றேடி யறப்பயந் திறக்குவார் போலப், படைக்கல விழியா ளணியொடுகலையும் பனிமலர்த் தொடையனும் பரமாய், இடைக்கிடர் விளைக்க விறுமெனப் பதறி யிருகையாற் களைந்தரு குறுத்தான்.

இ-ள். தங்களுக்குச் சொந்தமான பெரிதான சரக்குகளதிகமாகக் கப்பலிலேயேற்றி ஒலிக்கின்ற கடலைக்கடந்து ஒரு இறங்குந் துறையை யடுத்து, தாங்களேற்றினபெரிய கனத்தினுலேஅமிழ்ந்துவிடுமென்று நினைத்து மிகவும் பயப்பட்டு விரைந்துவந்து அப்பண்டங்களை இறக்குகிறவர்களைப்போல, வாளாயுதம்போலுங் கண்களையுடைய சந்திரவதியினுடைய ஆபரணங்களுடனே கலையும், குளிர்ந்த மலர்மாலையும் கனமாகி இடைக்குத் துன்பத்தைச் செய்தவினுலே இடை ஒடியுமென்று அரிச்சந்திரமன்னன் பதறினவனுய்த் தனதிரண்டுகைகளாலும் அவைகளை நீக்கிப் பக்கத்திலே வைத்தான். எ-று.

தானைசென் றார்க்க மங்கல மிடற்றுச் சஞ்சலம் புலம்பிடத் தனக்கோட், டானைசென் றடர மாத்தலை மயங்க வல்குலைந் தேரினைச் செலுத்தி, மீனைவென் றடுகண் வேல்படப் புருவ வில்வளைத் தயோத்தியர் வேநதைத், தேனைவென் றினித்த செஞ்சொலா ளின்பச் செருத்தொழில் பற்பல விளைத்தாள்.

இ-ள். மேகலையாகிய சேனைகூடி ஒலிக்கவும், திருமங்கில்யத்தையுடைய கழுத்தாகிய சலஞ்சலச்சங்கு ஒலிக்கவும், கொங்கைகளாகிய கொம்பானைகள் சேர்ந்து நெருக்கவும், வண்டுகளாகிய குதிரைகள் அவ்விடத்தே ஒலிக்கவும், அல்குலாகிய அழகிய தேரைச்செலுத்தி, மீனைவென்று சொல்லுவனவாகிய கண்களென்கிற வேலாயுதம்தைக்கப் புருவமாகிய வில்லைவளைத்து, அயோத்திநகராருக்குவேந்தனுன அரிச்சந்திரனேடு, தேனினது இரசத்தை வென்று

அதிலும் இனிப்பான செவ்விய சொல்லையுடைய சந்திரவதியானவள் கலவி யாகிய சண்டைச்செய்கைகள் பலபல விதங்களாகச் செய்தாள் எ-று. (உ௬௬)

இந்நெறி தவறு திறைவனு மயிலு மின்பமுண் டிடைவிடா தி ணங்கிக், கன்னமா புரியிற் சிலபகல் கழீஇப்பின் கடிநக ரெய்து வான் கருதி, மன்னனு மன்ன மெனுநடை மயிலு மணிநெடுந் தேர் மிசை யேறிப், பொன்னணி குடுமி நன்னெடுங் கபாடப் புரிசைநீத் தப்புறம் போனார்.

இ-ள். இவ்வாறு தப்பாமல் நாள்தோறும் அரிச்சந்திரனுஞ் சந்திரவதி யும் காமரசத்தை யனுபவித்து இடைவிடாமற்கூடி அந்தக்கன்னமாபுரியிலே சிலகாலங்கழித்துப் பின்பு தனது காவலையுடைய அயோத்தியாபுரிக்குப் போக நினைத்து, அரிச்சந்திரனும் அன்னநடை என்கிற நடையையுடைய மயிற்சாயலைக்கொண்ட சந்திரவதியும் அழகிதான நீண்ட தேர்மேலேறிக் கொண்டு பொன்னாலலங்கிருதமான சிகரங்களும் நீண்ட கதவுங்கொண்ட கோட்டைமதிலைக் கடந்து அப்பாற் போனார்கள். எ-று. (உ௬௭)

பன்னிறத் தனந்தங் கதிரொழுந் தனபோற் பலமணிக் குடை கண்மே னிழற்ற, நன்னெறித் தவளக் கொடிமிசை நெருங்க நவம ணிக் காகள மார்ப்ப, மின்னிறக் கொடிமென் மருங்குவார் மருங்கு மிடைந்துவெண் சாமர மிரட்ட,அன்னிறப் பொழில்சூழ் கன்னமா புரியி லரணமு மகழும்விட் டகன்றார்.

இ-ள். பலநிறங்களைக்கொண்டு ஆதிசேடனுடைய சிரோரத்தினச்சோதி மேலேகிளர்ந்தாற்போல, அனேகஇரத்தினக்குடைகள் மேலே நிழலைச்செய் யவும், நன்மார்க்கம்போல பரிசுத்தமான வெள்ளைக்கொடிகள் மேலேநெருங் கவும், நவரத்தினமயமான எக்காளமூதவும், மின்னலைப்போல ஒளிபொருந்திக் கொடிபோற் றுவளுகின்ற மிருதுவான இடையையுடைய பெண்கள் பக்கங் களிலே நெருங்கி வெண்சாமரம் வீசவும் இருள்நிறமான சோலைகள் சூழ்ந்த கன்னமாபுரியினுடைய மதிலும் அகழும்விட்டு நீங்கினார்கள். எ-று. (உ௬அ)

காந்தளஞ் செங்கைக் கன்னியர் சில்லோர் கைதொழு திடை யிடை மீள, மாந்தர்கள் வணங்கி வரவவ ருடனே மந்திரத் தலைவர் மீண்டேக, வேந்தர்வீழ்ந் திறைஞ்சிப் பணிவிடை கேட்டு விடை கொடு மீண்டுமூ ரெய்தப், போந்தனன் களிறும் புரவியுந் தேரும் புடைதொறுங் கடலெனப் பொலிய.

இ-ள். காந்தட்பூப்போலுஞ் சிவந்தகைகளையுடைய [வழிவிடவந்த] சில பெண்கள் கைகளால் வணங்கிக்கொண்டு நடுவே திரும்பிப்போகவும், மற்ற மனிதர் வணங்கிக்கொண்டு கூடவேவர, அவ்வாசர்களுடன் மந்திரி பிர தானிகள் திரும்பிப்போகவும், அரசர்கள் காலில் விழுந்து வணங்கிக்கொண்டு சொன்னர உத்தவுகேட்டுச் செலவுபெற்றுக்கொண்டு திரும்பிக் கன்னமா

புரத்துக்குப் போகவும், யானைகளும், குதிரைகளும், தேர்களும், நாலுபக்கங்க ளிலும் நிறையவந்தான். எ-று. (உருக)

தோடு துன்றிய மரைமிசை துணைபுண ரன்னம்
மாடு நின்றதோர் மதிநிழ றனைக்கண்டு மற்றோர்
பேடு நின்றெனச் சேவலைப் பிரிந்தயன் மலர்சேர்ந்
தூடு கின்றவச் செழும்புனற் றண்பணை யுற்றார்.

இ-ள். இதழ்கள் நெருங்கின தாமரைமலர்கள் மேலே தனது ஆண்பட்சியுடனே கூடிக்கொண்டிருந்த பெட்டை யன்னமானது, அவ்விடத்தே மேலே நின்றதாகிய ஒப்பற்ற சந்திரனுடைய நிழல் தோன்றக் கண்டு வேறே ஒரு பெட்டை நமதானுடனே கூடியிருக்கிறதென்று தனது சேவலைவிட்டு நீங்கி, வேறொரு பூவிலே போயிருந்துகொண்டு, பிணங்குவதான அந்தச்செழிப்பையுடைய நீர்சூழ்ந்த குளிர்ந்த மருதநிலத்திற்கு வந்தார்கள். எ-று. (உசுய)

கோடு வார்மலர்ப் பொழிலையுங் குளிர்தடத் தினையும்
நீடு வார்சிறைப் பறவையின் குழாத்தையு நிறைநீர்
ஆடு வாரையு மவ்விடத் தணிமலர் கொய்து
சூடு வாரையுங் காட்டினான் றோகைக்குத் துணைவன்.

இ-ள். கொம்புகள் நீண்டுள்ள பூஞ்சோலைகளையும், குளிர்ந்த தடாகங்களையும், அதிகமாக நீண்ட சிறகுகளையுடைய பட்சிக்கூட்டங்களையும், நிறை நீர்க்குளங்களிலே நீராடுகிறவர்களையும், அந்த இடங்களிலே அணிந்து கொள்ளப் பூக்கொய்து சூடிக் கொள்ளுகிறவர்களையும், சந்திரவதிக்கு நாயகனான அரிச்சந்திரமகாராசன் காட்டலாயினான். எ-று. (உசுக)

செய்ய மாமல ரடுத்துமொண் பெடைகடே னருந்தாப்
பைய வேசுரும் படைவழி பார்த்தினி துறலால்
தைய லாருண வமைத்தன்பர் தாம்வர வேக்கஞ்
செய்யு நாளொத்த செழுமலர்க் காவெலாந் திருவே.

இ-ள். இலட்சுமிபோல்பவளே! இந்தப் பூஞ்சோலையெல்லாம், அழகிய பெட்டை வண்டுகள் வருகிற வழியைப் பார்த்துக்கொண்டு அதுவரச் சந்தோஷித் திருக்கிறதினாலே, உலகத்திலே பெண்கள் சோறுசமைத்துத் தங்களுடைய நாயகர்கள் வரவைப் பார்த்துக்கொண் டிருக்கிற காலத்தை யொத் திருக்கின்றது. எ-று. (உசுஉ)

கடிம னைக்கணே தம்ம்நிறீஇ யேதிலார்க் கடியுங்
கொடியர் போலத்தம் பிள்ளையைக் கூட்டினிற் கூட்டி
வடிநெ டுங்கணாய் மலர்நெடுஞ் சோலைக டோறும்
கொடியி னங்கருங் குயில்களைத் துரப்பன குறியாய்.

இ-ள். கூரிய நீண்ட கண்களை யுடையவளே! காவலையுடைய தங்கள் வீட்டிலே தம்மைச் சேர்ந்தவர்களை இருக்கச்செய்து, அந்நியரை நீக்குகின்ற

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

கொடுஞ்செய்கை யுடையவர்கள்போல், நீண்டபூஞ்சோலைகளிலெல்லாம் காக்கைக் கூட்டங்கள் தமது குஞ்சைக் கூட்டிலே யிருக்கச்செய்து, கருங்குயில்களை ஓடச்செய்வனவற்றை நீ பார்ப்பாயாக. எ-று. (உசுந

ஆர னீன்மடைப் படைப்பையிற் புகாதிடை யழுந்து
தூர வோடியே வெளியிடைப் பரவுறுந் தோயம்
தார மானவ ளருந்திடக் கணிகையைச் சாருஞ்
சோர ரொத்தன முத்தன திருநகைத் தோகாய்

இ-ள். முத்துப்போலும் அழகிய பல்வரிசையைக்கொண்ட மயிலே! வரம்புகள் நீண்டுள்ள வயலின் மடைகளையுடைய மருத நிலத்தூர்வழியே போகாமல், நடுவே பள்ளமா யழுந்திக்கிடக்கிற நீண்ட வெகுதூரம் வரையிலுஞ் சென்று வெறு வெளியான நிலங்களிலெல்லாம் நீர்பரவுவதானது, மனைவியானவள் வருத்தப்பட. வேசையை யடைகிற கள்ளரை யொப்பாயின. எ-று.

சோரரென்றார், அவர் மனைவிமக்களுக்குக் கள்ளராதலால். (உசுச)

மன்றல் வண்டிசை பாடமா மயினட மாடத்
தென்றல் வந்தலைத் தலைபல முழவொலி செய்ய
நின்ற பூகங்க ளிலைபழுக் காயெதிர் நீட்டக்
கொன்றைபொன்சொரி வளமைபா ராய்குலக் கொடியே.

இ-ள். எனது குலத்துக்கேற்ற பெண்ணே! [மலர்களிலே பெரிதுந் தங்குதலினாலே] மணங்கொண்ட வண்டுகள் பாட்டுகளைப் பாடவும், கறுத்த மயில்கள் நடனஞ் செய்யவும், தென்றற்காற்றுவந்து வீசுதலினாலே பல அலைகள் மத்தளம்போ லொலிக்கவும், அங்கே நிற்கின்ற கமுகமரங்கள் வெற்றிலைக்கேற்ற பாக்குகளை எதிரே நீட்டிக் கொடுக்கவும், கொன்றை மரங்கள் [ஆடுகிறபேருக்குப்] பொன் கொடுப்பனபோல் மலரைச் சொரிகின்ற அழகையும் நீ பார். எ-று. (உசுரு)

மதகு மங்கல முரசெழ வண்டுவாழ்த் திசைக்க
உதிர மொத்தசெந் தாமரை யோமத்தீ வளரப்
புதும லர்த்துணை புணரிள வன்னமும் பெடையும்
வதுவை செய்வன வொப்பன கண்டருண் மயிலே.

இ-ள். மயில்போலுஞ் சாயலையுடையவளே! மங்கல வாத்தியம்போல் மதகுநீ ரொலிகிளரவும், [பல்லாண்டுகள் சொல்வதுபோல] வண்டுகள் வாழ்த்திப்பாடவும், ஓமாக்கினிகள்போல இரத்தினமயமான செந்தாமரைமலர்கள்விளங்கவும்புதிதாக மலர்ந்தபூவிலே சோடாகக்கூடுகின்ற இளமையான ஆணன்னமும் பெட்டை யன்னமும் விவாகஞ் செய்துகொள்வனவற்றை ஒத்திருக்கின்றன நீ பார்த்தருளாய். எ-று.

தாமரைமலரினிதழ்கள் செம்மைநிற முண்மை பற்றி "உதிரமொத்த செந்தாமரை" என்றார். (உசுசு)

வெடித்த வாற்சிறு கன்றுகண் மேதியின் முலைப்பால்
குடித்த வேம்பலா லரும்பலர் கோகன கப்பூக்
கடித்து வாங்குத லூடலின் மகளிர்கை கணவர்
பிடித்து வாங்குத லொப்பது பெண்கொடி பாராய்.

இ-ள். பெண்கொடியே ! மேலேதாகக்கொண்ட வாலையுடைய இள ங்கன்றுக ளானவை, எருமைமாட்டினது முலைப்பாலைக் குடித்த சந்தோஷத்தினாலே, அரும்பாகி மலருகின்ற தாமரைப்பூவைக் கடித்து இழுத்துக் கொண்டு நிற்பதானது பிணங்கின சமயத்திலே பெண்கள் கையைப்பிடித்து நாயகரிழுப்பதுபோ லிருக்கின்றது நீபார். எ-று. (உகூள)

இத்த டத்துமீ னருந்திய வன்னங்க ளெல்லாம்
அத்த டத்தின்மொய்த் திழிவன வருநிதி யெல்லாம்
தத்த மக்களித் திழந்தவர் தங்களைத் துறந்து
கைத்து ளார்கட்செல் கணிகைய ரொப்பன காணாய்.

இ-ள். இந்தக் குளத்திலே மீனைப் புசித்த நீர்ப்பறவைகள் முழுதும் அந்தக்குளத்திலே நெருங்கிப்போ யிறங்குகின்ற தன்மையானது, அருமையான திரவியங்கள் முழுதும் தங்களுக்கேகொடுத்து இல்லாமையைக்கொண்டவர்களைவிட்டு வேறே பொருளுள்ளவர்க ளிடத்திலே போகின்ற வேசையரை யொப்பாயிருகின்றன [பெண்ணே !] பார். எ-று. (உகூஅ)

மேயு மோதிமஞ் சேலினைக் கவர்ந்திட வெருண்டு
பாயு நீள்கயல் செங்கம லத்தலர் படிவ
ஆயின் மிக்கநற் கணவனை யமரிடை யிழந்து
தீயில் வீழ்குவா ரொப்பன திருந்திழை காணாய்.

இ-ள். திருத்தமான ஆபரணங்களை யணிந்தவளே ! குளத்திலே மேய்கிற நீர்ப்பறவைகள் சேற்கெண்டையைப் பிடித்துத்தின்ன, அதற்குப்பயந்து பாய்கிற நீண்ட கயற்கெண்டைகள் செந்தாமரைப் பூவிலேபோய் விழுகின்றனவானது, தன்தாயைப் பார்க்கிலுமிருந்த அன்புள்ள கணவனைச் சண்டையிலே போய்ச்சாவக் கொடுத்துத் தீயிலே விழுகிற பெண்களை ஒப்பாயிருக்கின்றன நீ பார்ப்பாயாக. எ-று. (உகூகூ)

கூடு மன்னங்கள் பறந்திரை கவர்ந்திடக் குழாத்தில்
ஊடு மன்னமொன் றுயர்ந்ததா மரைமிசை யுகளல்
நீடு வார்கழை யேறியே நிறையவை நடுநின்
றாடு வேழம்ப மாதரை நிகர்த்தல்பா ரணங்கே.

இ-ள். ஓ பெண்ணே ! கூடியிருக்கின்ற அன்னங்கள் பறந்துபோய்இரைகொண்டு தின்ன, அக்கூட்டத்திலே பிணங்கின ஒரு அன்னமானது உயர்ந்து தோற்றுகின்ற தாமரைமலரின்மேலே வருந்திக்கொண்டு நிற்பதானது, மிகவும் நீண்ட மூங்கிலின்மேலே யேறி நிறைந்த சபைநடுவேநின்று ஆடுகிறகழைக்கூத்தாடிச்சியை ஒப்பாயிருக்கின்றது நீ பார். எ-று. (உஎO)

நன்பு னற்பது மந்துதைந் தளியதை யுணலால்
வன்பி னிற்பிடித் தூடிய மகளிரை மணுளர்
அன்பு றத்தெவிட் டாவித ழாரமு தருந்தும்
இன்ப மெல்லணை யொப்பன விளங்கொடி காணாய்.

இ-ள். இளங்கொடிபோலும் பெண்ணே! அந்த நல்ல நீரிலே மலர்ந்திருக்கிற தாமரைமலரிலே வண்டுகள்நெருங்கி மொய்த்துத் தேனைக்குடிக்கிறதினாலே, பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டு பிணங்கின பெண்களை நாயகர்கள் பிரீதியாகத் தெவிட்டாத இதழ்களிலுள்ள அரிய அமுதத்தைப் பருகுகின்ற சுகத்தை யுடையதாகிய மிருதுவான மெத்தையை ஒத்திருக்கின்றன நீ பாராய். எ-று. (உஎக)

துஞ்ச வந்தநா டோழனை விட்டய றுறக்கும்
வஞ்ச நெஞ்சர்போ லலாதுவண் டணிகுழன் மாதே
அஞ்ச லாதுநின் றவருட னிறந்தநல் லவர்போல்
கஞ்ச நெல்லுட னறுப்புண்டு கிடப்பன காணாய்.

இ-ள். வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பெண்ணே! சாவுவந்தபோது அந்த நண்பனை நீங்கி வேறே செல்லுகின்ற வஞ்சனையை யுடைய மனத்தினரை யொப்பாகாமல், பயப்படாமல் அந்த நண்பருடனே சாகிற நல்லோரைப்போற் றாமரைமலர்கள் நெல்லுடனேகூட அறுபட்டுக் கிடக்கின்றவற்றை நீ பார்ப்பாயாக. எ-று. (உஎஉ)

அடல னங்கனுக் கணியபி டேகமே யனையாய்
மடல்கொள் வாவிநீர் குடைந்திடைப் பாய்கின்ற மடவார்
மிடனெ டுஞ்சிலை புயல்பிறை சுமந்துபன் மின்போய்
கடலில் வீழ்ந்திடுங் காட்சியை நிகர்ப்பது காணாய்.

இ-ள். எல்லாவற்றையும் ஜயங்கொள்ளுகிற மன்மதனுக்குச் சூட்டுவதான கிரீடம்போன்றவளே! பூவிதழ்களைக் கொண்ட குளத்துநீரிலே விழுகிற பெண்களுடைய தோற்றம் பலமகொண்ட நீண்டவில்லும் மேகமும் பிறையுங்கொண்டு பலமின்னல்கள்போய்க் கடலிலே வீழ்கிற தோற்றத்தை ஒத்திருக்கிறதை நீ பாராய். எ-று. (உஎந)

ஏந்தி ளந்தனத் தொருத்தியின் புனல்குடைந் தெழுந்து
கூந்த லங்கையான் முறுக்குநாள் குளிர்முகத் தோற்றம்
காந்தண் மாமல ருடுபோய்த் திங்களைக் கரிய
பாந்த ளண்டுவ தொப்பது பசுங்கொடி பாராய்.

இ-ள். பசுங்கொடி போல்பவளே! தாங்குகின்ற இளமையான கொங்கைகளையுடைய ஒரு பெண்ணானவள் இனிதான நீரிலே முழுகி எழுந்திருந்து கூந்தலைத் தன தழகிய கையினாலே முறுக்கி நீரைப் பிழிகிறவளுடைய குளிர்ந்த முகத்தின் தோற்றமானது, காந்தளின் பெரிய மலருள்ள விடத்திலே போய்ச் சந்திரனை ஒரு கரும்பாம்பு பிடித்தலை ஒத்திருக் கின்றதை நீ பார்ப்பாயாக. எ-று. (உஎச)

சிறுநு தற்பெருங் கண்ணியோர் தெரிவைநீர் மூழ்க
நறுமலர்க்குழல் வண்டெழூந் தலமந்து நால்வ
அறநெறிப்படி புரந்தகோ னரசர்க ளிறக்க
மறுகு மக்குடி போல்வன காண்டிமா மயிலே.

இ-ள். கறுத்தமயில்போலும் சாயலையுடையவளே! சிறிதான நெற்றியையும், பெரிதானகண்களையுமுடைய ஒருபெண் நீரிலே முழுகுவதற்குச்செல்ல, அப்போதவளுடைய மணங்கொண்ட பூவையணிந்த கூந்தலி லிருந்த வண்டுகள் கிளம்பிச்சுழன்று அலைவனவானது, தருமநீதியாக உலகையாண்ட செங்கோலையுடைய அரசர்க ளிறந்துபோகவே துன்பப்படுகிற அந்தக் குடிகளை ஒத்திருக்கின்றன நீபார். எ-று. (உஎரு)

மஞ்ச னங்குடைந் தாடியோர் வாணுதன் மடந்தை
கஞ்ச நன்மலர்க் கடைந்ததன் மிசைக்கரம் வைத்தல்
சஞ்ச லந்தவி ரென்முகந் தனைக்கண்டு தளும்பா
தஞ்ச லென்றுகை யமைப்பது நிகர்த்தல்பா ரணங்கே.

இ-ள். ஓ பெண்ணே! ஒரு ஒளிபொதிந்திய நெற்றியை யுடைய மங்கையானவள் திருமஞ்சனமாக நீரிலே முழுகி விளையாடி ஒரு தாமரையினது நல்ல பூவைக் கிண்டி அதன்மேலே தன் கையை வைத்திருத்தலானது; என் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் துளும்பாமல் துனபத்தை விட்டிரு; பயப்படாதேயென்று தனது கையா லமைக்கின்றதை ஒத்திருக்கின்றது நீ பார். எ-று. (உஎசு)

கானி ரைப்பெரு நீழலின வருமொரு கன்னி
தேனி ரைத்தமென் சிகழிகை நறுமலர் தெரிவ
வானி ரைத்ததன் கருமுகி லிடையிடை வயங்கி
மீனி ரைத்தன வொப்பன காண்டியான் மின்னே.

இ-ள். பெண்ணே! சோலையினது மரவரிசையிலுள்ள பெரிய ஒரு நிழலிலே வருகின்ற ஒருமங்கையினுடைய வண்டுகளொளிக்கின்ற மிருதுவான கொண்டையிலே மணங்கொண்ட மலர்கள் விளங்குவனவானது, ஆகாயமெல்லாம் பரவிக்கொண் டிருக்கிற குளிர்ந்த கறுத்த மேகத்தின் நடுவே விளங்குகிறதாய் நட்சத்திரங்கள் பரவினவற்றை ஒத்திருக்கின்றன பார். எ-று. (உஎஎ)

பணைமலர்த்தடமூழ்குவா ளுசியிற் பலகால்
மணமறிந்திட வைத்தவிந் தீவர மலர்தான்
இணைவிழிக்குமுன் றோற்றிணைக் குதற்கிசைந் தயலோர்
துணைபிடித்திதஞ் சொல்வது போல்வது தோகாய்.

இ-ள். பெண்ணே! பூத்திருக்கின்ற மலர்களையுடைய குளத்திலே முழுகுகின்றவள் தன்மூக்கிலே எப்போதும் வாசம்வீசுவதாக வைத்திருக்கின்ற நீலோற்பல மலரானது அவளிரண்டு கண்களுக்குந்தான் முன்னேதோற்றுப்

பின்பு சமாதானஞ் செய்வதற்காக வேறொருவரைத் துணையாகக் கொண்டு நன்மை சொல்லுகிறவர்களை ஒத்திருக்கின்றது. எ-று. (உஎஅ)

அடலை யுற்றவேல் விழியினால் வாய்கண்ட வாம்பல்
உடலி னுட்பசந் துட்டுளை பட்டசைந் தொல்கி
மடவெ டுத்திரு மலரடி பூணலான் மயிலே
படர்த டங்குடைந் தேறுவாள் படும்படர் பாராய்.

இ-ள். பெண்ணே! வெற்றியைக்கொண்ட வேல்போலுங் கண்களை யுடைய ஒருத்தியின் வாயைக்கண்ட செவ்வல்லிமலரானது தனதுடம்புக் குள்ளே பசுநிறத்தைக்கொண்டு உள்ளே துவாரமுடையதாய்த் துவண்டு இன்னமிங்கே பூவிதழ்களைக் கொய்துகொண்டிரு வென்பதுபோல, தன திதழ்களாலே அவளுடைய இரண்டு கால்களையும் பூண்டுகொள்ளுதலாலே, அந்த விசாலமான குளத்திலே முழுகிக் கரையேறுகிறவள் படுகிற துன்ப த்தை நீ பார். எ-று. (உஎகூ)

நறும லர்க்குழ லாயொரு நன்னுத லோடும்
துறும லர்த்தட மாடுதன் றுன்றலை யொருத்தி
முறுவ லாலித ழதுக்கியே முனைவிழி சிவக்கக்
கறுவி நோக்கிய நோக்கமு நோக்குநீ காணாய்.

இ-ள். பரிமளங்கொண்ட பூவையணிந்த கூந்தலையுடைய பெண்ணே! ஒரு பெண்ணானவள் நீராடிக்கொண்டு நிற்க, நெருங்கின மலர்களை யுடைய அந்தக் குளத்திலேதானே நீராடுகின்ற தனது நாயகனைக்கொண்ட மற்றொ ருத்தி தனது பற்களாலே இதழைக் கடித்துக் கூர்மைகொண்ட கண்கள் சிவ க்கமனத்திலே கோபங்கொண்டு அவள் பார்க்கிற பார்வையும், அவன் கண் பார்வையும் நீ பார். எ-று. (உஅ0)

இன்ன தன்மைய யாவையும் கண்டுகண் டேகி
மின்னு மன்னனுங் கலவியும் புலவியும் விளைத்து
நன்னெ டும்பணை கடந்தருஞ் சரத்திடை நண்ணி
வன்ன மாமுலை வைரவி கோட்டத்தில் வந்தார்.

இ-ள். இப்படிப்பட்ட வேடிக்கைகளெல்லாம்பார்த்துக் தொண்டுபோய்ச் சந்திரவதியும் அரிச்சந்திரனும் கூடலும் ஊடலுஞ் செய்துகொண்டே அந்த நல்லதான நெடிய மருதநிலத்தைக் கடந்துசென்று அப்பால் அரிதான பாலை வனத்துக்குப்போய், சுவர்ணநிறத்தை யுடையதாய்ப் பெரிதான கொங்கை களையுடைய காளிகோவிலுக்குள்ளே இருவரும் வந்தார்கள். எ-று. (உஅக)

யோகி னிக்கணஞ் சூழ்ந்திடக் கொடுஞ்சுரத் துறையும்
மோகி னிப்பெரு மாடிரு முன்றிலிற் றொழுது
பாகி னிற்சிறந் திரதித்த மொழியொடு பனிமந்
தாகி னித்துறை யணைந்ததிற் படிந்தய லகன்றார்.

இ-ள். அநேகம் யோகினிக் கூட்டங்கள் சூழ, அந்தக்கொடுமையான பாலைவனத்திலே வாசஞ்செய்கின்ற காளிகாதேவியினுடைய திருமுற்றத்

திலே நின்று அவைகளை வணங்கிக்கொண்டு, சர்க்கரைப் பாகிலும் சிறப்புள்ளதாய்த் தித்திக்கின்ற வசனத்தையுடைய சந்திரவதியுடனே குளிர்ந்தகங்கா நதி தீரத்துக்குவந்து அதிலே நீராடிக்கொண்டு அப்பாற் போனார்கள். எ-று.

வேர லோங்கிய மலைகளும் வனங்களும் விடுத்துச்
சூர லோங்கிய வருவியுந் துருத்தியுங் கடந்து
சார லோங்கிய சக்கரப் பொருப்பையுந் தள்ளி
ஆர லோங்கிய வயோத்திமா நகரியை யணைந்தார்.

இ-ள். மூங்கில்கள் வளர்ந்துள்ள மலைகளையுங் காடுகளையுங் கடந்து, பிரம்புக்காடுகள் வளர்ந்துள்ள அருவியாற்றையும் அவ்வாற்றினது திட்டுகளையுங் கடந்துசென்று, பக்கங்களிலே உயர்ந்துள்ள சக்கரவாள கிரியையுங் கடந்துபோய், மதில்களுயர்ந்துள்ள அயோத்தியா புரியைப்போய்ச் சேர்ந்தார்கள். எ-று. (உஅங)

வார ணத்தொலி யெழுமணி வாயிலிற் புகுந்து
தோர ணத்தெருக் கடந்துசோ பனம்பலர் சொல்ல
ஆர ணத்தொலி யாதிகண் மழையென வார்க்கப்
பூர ணக்குடஞ் சுமந்தபொற் கோயினுட் புகுந்தார்.

இ-ள். யானைகளினுடைய தொனி கிளறுவதான அழகிய கோட்டை வாயிலுக்குள்ளே நுழைந்துபோய்த், தோரணங்கள் கட்டியிருக்கிறவீதி கடந்து, மங்கலவாழ்த்துகள் அநேகம் பெண்கள்பாட வேதவோசைகள் முதலாகிய ஓசைகள் மேகங்கள்போல முழங்க, நிறைநீர்க்குடம்போற் சிகரத்தைத் தாங்கியிருக்கிற சுவர்ணமயமான அரண்மனைக்குள்ளே போனார்கள். எ-று.

முளைத்த வெற்பன கோயிலின் முதிர்மல ரணைமேல்
இளைத்த நுண்ணிடை யிரதியுங் காமனு மெனத்தாம்
விளைத்த நல்லின்ப வெள்ளத்து வேந்தனு மயிலும்
திளைத்தி ளைத்தருள் பொழிந்திடக் கழிந்தன சிலநாள்.

இ-ள். தானே தோன்றின மலைபோ லிருக்கிற அந்த அரண்மனையிலே அதிகமாய் புஷ்பங்களா லலங்கரித்துள்ள மெத்தைமேலே சுருக்கமாய்ச் சிறிதாயிருக்கிற இடையையுடைய இரதிதேவியும் மன்மதனும்போல அரிச்சந்திரனும் சந்திரவதியும் தாங்கள் செய்துகொண்ட நல்ல சுகக்கடலிலே கூடிக்கூடி ஒருவருக்கொருவர் தயவு பெருகிவளர இப்படிச்சிலநாள் கழிந்தன. எ-று. (உஅ௫)

கலிவிருத்தம்.

தருவை யொத்த கரத்தரிச் சந்திரன்
அரிவை யைப்பிரி யாம லணைந்தநாள்
மருவை யுற்ற மலர்க்குழல் வல்லிதன்
திருவ யிற்றிற் கருப்பந் திகழ்ந்ததே.

இ-ள். கற்பகவிருட்சத்தை யொப்பான கையையுடைய அரிச்சந்திர மகாராசன அந்தச்சந்திரவதியை ஒருபொழுதுங் பிரியாமல்கூடிவருகிறகால

த்திலே மணங்கொண்டபூவையணிந்த கூந்தலையுடைய சந்திரவதியினுடைய திருவுதரத்திலே கர்ப்பமுண்டாயிற்று. எ-று. (உஅசு)

செயிர றப்பனன் றேக்கிடக் காமத்தண்
பயிர்மு ளைத்தெழும் பான்மையி தாமென
உயிர்ந லக்கொடி யொண்ணுதல் வண்ணமெய்ம்
மயிர்பொ டிப்புற் றரும்பி மலர்ந்தவே.

இ-ள். குற்றந்தீர நீரை நிரப்புதலினாலே காம மென்கிற குளிர்ந்த பயிரானது முளைத்தெழுவதான முறைமை இப்படித்தா னிருக்கு மென்னும்படி, அரிச்சந்திரனுக் குயிர்போலும் நலத்தையுடைய சந்திரவதியின் அழகான உடம்பெல்லாம் உரோமஞ்சிலிர்த்துப் புளகாங்கிதங்களும் அதிக மாயின. எ-று.

கொடியொண்ணுதல் - கொடிபோல்பவளாய் அழகிய நெற்றியை யுடையவள் என்க. (உஅஎ)

நிலைம யிர்க்கண் குருக்கொண்டு நீள்கருங்
கொலைம தர்க்கண் குழிந்து குளிர்முகம்
கலைநி லாவின் விளர்த்துக் கதிர்மணி
முலைமு கங்கள் கறுப்பு முதிர்ந்தவே.

இ-ள். நிமிர்ந்து நிற்கின்ற மயிரி னிட மெல்லாம் புளகித்தலாய், நீண்ட கொலைசெய்வதாய் மருட்சியையுடைய கரிய கண்களுங் குழிந்து பள்ளமாய், குளிர்ந்தமுகமும் சோடசகலைகளையுடைய சந்திரனைப்போல் வெள்ளையாய், ஒளிபொருந்திய நீலரத்தினம்போன்ற முலைக்காம்புகளுங்கறுப்புமிக்கன. எ-று. (உஅஅ)

தொடைம லர்க்குழல் சோர்ந்து செழுந்துகி
லுடைநெ கிழ்ந்து பையப்பைய வொல்கியே
நடைபெ யர்ந்து நரம்புப சுத்தவால்
இடையுண் டென்றறி யப்பட்ட தியார்க்குமே.

இ-ள். தொடுத்தமலரணிந்த கூந்தலுஞ்சோர்தலாய்ச் செழுமையான வஸ்திரமு முடுத்துதல் குலைந்து மெள்ளமெள்ளத் துவண்டு நடை நடந்து உடம்பிலுள்ள நரம்புகள் பச்சைநிறமாயின. அப்போது எல்லார்க்கும் இடையுமுளதா யிருக்கிறதென்று தெரிதலாயிற்று. எ-று. (உஅகூ)

பாங்கி மாரிரு பக்கமு நின்றுகை
தாங்கி முன்செலத் தானடந் தொல்கியே
ஆங்கு திங்க ணிறைந்தபின் பாயிழை
தீங்கி லாமற் சிறுவனைப் பெற்றனள்.

இ-ள். தோழிமார்க ளிரு புறத்திலும் நின்று கைகளைத் தாங்கிக் கொண்டு முன்னேபோகப். பின்பு தானுநடந்து துவண்டு அப்படிப் பத்து

மாதமு நிரம்பின பின்பு சந்திரவதியானவள் யாதொரு தோஷமுமில்லாமல் புத்திரனைப்பெற்றாள். எ-று. (உ௬0)

பிள்ளை வந்து பிறந்தன னென்றலும்
வள்ள லுள்ள மகிழ்ந்திர வோர்க்கெலாம்
அள்ளி நீரறை யைத்திறந் தேழுநாள்
கொள்ளை கொண்மினெ னக்கொடுத் தானரோ.

இ-ள். அப்படிப் பிள்ளையானவன் உண்டாகிப் பிறந்தா னென்றவுடனே, பிரபுவாகிய அரிச்சந்திரன் மனமகிழ்ந்து, யாசகருக்கெல்லாம் நீங்கள் பொக்கிஷத்தைத் திறந்து அள்ளிக்கொள்வதாய் ஏழுநாளளவும் கொள்ளையடித்துக்கொள்ளுங்களென்று உத்தரவு கொடுத்தான். எ-று. (உ௬க)

மதலை வந்துபி றந்தம கிழ்ச்சியால்
திதலை யலகுநல் லார்தெரு வெங்கணும்
பதலை தோறும் பனிநீர் புழுகுநெய்
குதலை மாதர் கொணர்ந்து சொரிந்தனர்.

இ-ள். அப்படிப் பிள்ளையுண்டாகிப் பிறந்த சந்தோஷத்தினாலே தேமற் படர்ந்த அல்குலையுடைய பெண்களிருக்கிற தெருவெல்லாம், பானைகளிலே பனிநீரும் புழுகும் அத்தரும் மழலைச்சொற்களையுடைய அப்பெண்டுகள் கொண்டுவந்து கொட்டினார்கள். எ-று. (உ௬உ)

தொட்டி தாழிக டோணிக டாரங்கள்
மட்டி லாத மறுகு தொறுமிரீஇ
விட்ட மஞ்சனம் வீதியெ லாங்கடை
கட்டி வைத்தபின் கன்னியர் கூடினார்.

இ-ள். மரத்தொட்டிகளிலும் பானைகளிலும் தோணிபோலிருக்கிற பாத்திரங்களிலும் கடாரங்களிலும் அளவில்லாத வீதிகளிலெல்லாம்வைத்து ஊற்றின திருமஞ்சனநீர் அந்த வீதிகளெல்லாம் நிரம்ப எந்த இடங்களும் அமைத்திக்கொண்டபின்பு மஞ்சள் நீராடப் பெண்கள் கூடினார்கள். எ-று.

இளகி லாதிடைச் சேலையி றுக்கிமென்
புளகக் கொங்கையிற் கசசுறப் பூட்டியே
அளகம் பின்னி யணிக ளணிந்துமாப்
பிளவு போன்றகட் பேதையர் தோன்றினார்.

இ-ள். இடையிலே சீலைகளை நழுவாமல் இறுகக் கட்டிக்கொண்டுமிருதுவான புளகமரும்பின கொங்கைகளிலே இரவிக்கைகளும் நெருங்கப் பூட்டிக்கொண்டு கூந்தலைப் பின்னிக்கொண்டு ஆபரணங்களு மணிந்துகொண்டு மாவினது பிளவுபோலுந் தோன்றுகிற கண்களையுடைய பெண்கள் எங்கும் நீராடப் புறப்பட்டார்கள். எ-று. (உ௬௪)

பொன்னின் வட்டிலும் பொன்னின் விசிறியும்
துன்னு தந்தக் குழலுந் துருத்தியும்

மின்னு நுண்ணிடை மெல்லிய லார்கொடு
நின்னி லென்றெதிர் நீர்விளை யாடினார்.

இ-ள். மின்னுகின்ற நுண்ணிதான இடையையுடைய பெண்கள், பொற்கிண்ணங்களும் பொற்றுருத்தியும் நெருங்கின தந்தக்குழலும் தோற்றுருத்தியுங் கைகளிலேகொண்டு, நில்லு நில்லுமென் றொருவர்க்கொருவ ரெதிர் நின்று மஞ்சள்நீர் விளையாடினார்கள். எ-று. (உகரு)

ஆழி சோர வணிவடஞ் சோர்ந்திடத்
தாழி நீர்மொண்டு தாமெறிந் தாடினார்
ஏழு மேகமு மொத்திடத் துப்பொழி
ஊழி காலத்து மாரியை யொக்கவே.

இ-ள். மோதிரங்கள் கழன்றுபோகவும், அணிந்த முத்துமாலைகள் அற்றுவிழவும், எழுமேகங்களும் ஒருசேரகூடிப் பூமியினிடங்களெல்லாம் பொழிகின்ற ஊழிகாலத்து மழையை ஒப்பாக, பானைகளிலிருக்கிற மஞ்சணீரை மொண்டு தாங்களே ஒருவர்மே லொருவர் ஊற்றிக்கொண்டு விளையாடினார்கள். எ-று. (உகசு)

துடியி டக்கை வளைபணை துந்துபி
திடிம ப்பேரிகை சின்னநற் காகளம்
இடியெ னக்கிளர்ந் தார்த்திட வேழையர்
படியின் மின்பரந் தென்னப் பரவினார்.

இ-ள். உடுக்கை-இடக்கை-சங்கு-நகாரா-துந்துமி-திடிமென்று [ஓசை] முழங்குகின்ற பேரிகை - சின்னம்-நல்ல எக்காள முதலியன இடிபோல் முழங்கி ஒலிக்க, அந்த வீதிகளெல்லாம் மின்னல் பரவினவைபோற் பெண்கள் பரவினார்கள். எ-று. (உகஎ)

முருக்கின் வாய்ச்சி யொருத்தி முகத்திலோர்
திருக்கு ழற்பெய் செழும்புனல் சிந்துதல்
அருக்கற் கென்று மளித்திடு மர்க்கியம்
சரற்ச சிக்குந் தருசெயல் போன்றதே.

இ-ள். முருக்கம் பூவைப்போலும் வாயையுடைய ஒருத்தி முகத்திலே, மற்றொருத்தி, அழகிதான பீச்சுக்குழலிலேகொண்ட செழுமையான நீரைச் சிந்துதலானது, சூரியனுக்கு எப்போதுங் கொடுக்கிற அர்க்கியசலம், சரற்கால சந்திரனுக்குங் கொடுக்கிற செய்கைபோ லிருந்தது. எ-று. (உகஅ)

ஒருத்தி கொங்கையி ரண்டினி லொன்றன்மேல்
துருத்தி நீரிரு தோகையர் வீசினார்
பொருத்த மந்தர வெற்பைப் பிணித்ததோர்
பருத்த வாசுகித் தாம்பிழுப் பானென.

இ-ள். பெரிதான மந்தரமலையைச் சூழ்ந்து ஒரு கனமான வாசுகியென்னுங் கயிற்றினாலே இழுப்பதுபோல, ஒரு பெண்ணினுடைய இரண்டு கொங்கைகளில் ஒரு கொங்கைமேலே துருத்தியிலுள்ள நீரை இரண்டு பெண்கள் பீச்சினார்கள். எ-று. (உகக

நவ்வி நோக்கி நளிர்முகத் தேயொரு
செவ்வி யாள்சிந் திடுஞ்சிவி றிப்புனல்
அவ்வி யத்துட னுழிவெண் டிங்களைக்
கவ்வி முன்னிமிர் கட்செவி யொத்ததே.

இ-ள். மான்போலுங் கண்ணியான ஒருத்தியினுடைய குளிர்ந்த முகத்தில், மற்றொரு பேரழகியானவள் வீசுகின்ற திருத்தி நீரானது, சுத்தோதகமான கடலிலே தோன்றுகின்ற வெண்மையான சந்திரனைப்பொருமையினால் கவ்விக்கொண்டு யாவர் முன்னுந் தோன்றுகிற கேதுவென்னும் பாம்பை ஒத்திருந்தது. எ-று. (௩௦௦)

காருருக் கொள்க ருங்குழல் கைக்குழ
னீரொருத் திநிதம் பத்திற் றுக்கலால்
போருக் கென்றுபு றப்படும் புட்பகத்
தேருக் கிட்டதி ரள்வட மொத்ததே.

இ-ள். மேகநிறத்தைக் கொண்ட கறுத்த கூந்தலையுடைய ஒருத்தி கையிலே பிடித்திருக்கிற பீச்சக்குழலின் நீரானது, மற்றொருத்தியின் நிதம்பத்தில் பீசப்படுகிறபோது, சண்டைக்கென்று வெளிப்படுகிற புட்பகத்தேருக்கணிந்த திரட்சியாகிய முத்துமாலையை ஒப்பாயிருந்தது. எ-று. (௩௦௧)

புழுகு சந்தனம் பொன்னிறக் குங்குமம்
ஒழுகு செச்சை புத்தகமி மசலந்
வழுவில் பொற்சுண்ண நல்லெண்ணெய் மஞ்சணீர்
முழுதும் வல்லியர் மொண்டெறிந் தாடினார்.

இ-ள். புனுகு-சந்தனம் - பொன்னிறமான குங்குமம் - ஒழுகுவதாகிய சாந்தநீர் - பனிநீர் - குற்றமில்லாத பொன்னிறக் கந்தபொடி-நல்லெண்ணெய் - மஞ்சணீர் ஆகிய இவைகளெல்லாம் அந்தப் பெண்கள் முகந்து வீசி விளையாடினார்கள். எ-று. (௩௦௨)

வம்பு லாமுலை மாதர்க்கு மைந்தர்க்கும்
கம்ப மால்களிற் றோனுக்குங் கன்னிக்கும்
அம்பு ராசியி லாரமு துற்றநாள்
உம்பர் கோனுற்ற வோகைவந் துற்றதே.

இ-ள். இவ்வாறு அவ்வயோத்தியா புரியிலுள்ள இரவிக்கையணிந்த தனங்களுடைய பெண்களுக்கும், புருஷர்களுக்கும், தூணிலே கட்டப்படுவதாகிய உயர்ந்த யானைமேலேறுகின்ற அரிச்சந்திரனுக்கும், சந்திரவதிக்கும், கடலிலே அரிதான அமுதமும் உண்டானபோது. தேவர்களுக்கும் அவர்களுக்கரசனான இந்திரனுக்கு முண்டான சந்தோஷம் [போல் இவர்களுக்கு] வந்து கூடியது. எ-று. (௩௦௩)

மேலி னோர்தம் விதரண முந்தனிக்
கோலி னோர்தங் குணமுங் குலமனு
நூலின் வந்த நுணங்கிய கேள்வியும்
பாலி னோடு கலந்து பருகினார்.

இ-ள். மேன்மக்களுக்குள்ள புத்தியும், நிகரில்லாத நீதியை யுடையவர்களுக்குள்ள குணமும், அக்குலத்திலுள்ள மனுவாலே சொல்லிய நீதிநூலின் படியே வருவதான அதிருஷ்டமான கேள்வியும் தங்கள் முறையுடனே கூட்டிக்குடித்தார்கள். எ-று.

புத்தி - குணம்; கேள்வியாகிய தேனைத் தங்கள் புத்தியாகிய பாலுடனே கூட்டி யனுபவித்தார்க ளென்க. (ரு௦௪)

ஆயயின் னரிச் சந்திரன் மன்னனை
மூவ ரன்னமு னிவர்கள் வாழ்த்தியே
யாவ ருந்நிக ரில்லவற் கேற்றிடத்
தேவ தாசனெ னப்பெயர் செப்பினான்.

இ-ள். மும்மூர்த்திகளை யொப்பான தவமுனிவர்கள், மிகுந்த பிரீதியுடனே வந்து, அரிச்சந்திரனுடைய புத்திரனை ஆசீர்வதித்து, எவரு நிகரில்லாத அவனுக்குத் தகுதியாகத் தேவதாசனென்று நாமகரணமிட்டார்கள்.

புலன்கொள் காப்புப் புலியுகிர்த் தண்டைமுத்
தலங்கல் கிண்கிணி யைம்புடை யாழிகள்
இலங்கு பொன்னரை ஞாணிவை சாத்தியே
துலங்கு மாமணித் தொட்டிலி லேற்றினார்.

இ-ள். பொன்னாலே செய்த காப்பும், புலிநகத்தாலே பதக்கமும், தண்டை-முத்துமாலை - கிண்கிணி - பஞ்சாயுதப்பூண்-மோதிரங்கள் - விளங்குகின்ற பொன்னரைஞாண் ஆகிய இவைகளெல்லாமணிந்து, துலங்குகின்ற பெருமையையுடைய இரத்தினத்தொட்டிலில் படுக்கவைத்தார்கள். எ-று.

ஐம்படையானது; சிறுவர்களைத் துர்த்தேவதைகளி னின்றுங் காத்தற்பொருட்டுக் காவற்கடவுளாகிய விஷ்ணுமூர்த்தியின் சங்கு-சக்ர - கதா - கட்க கோதண்டமென்னும் பஞ்சாயுதங்களின் வடிவமாகச்செய்து சிறுவர்களின் மார்பிற் கோத்தணியும் ஒருவகை ஆபரணம். (ரு௦௫)

சூழு மாமணித் தொட்டிலி லேற்றியே
தாழு நீன்குழற் றாதியர் போற்றயாண்
டேழு புக்கன னிவ்வகைக் காதலன்
வாழுநா ளினில் வந்தவை கூறுவாம்.

இ-ள். பெரிய இரத்தினங்கள் பதித்துச்சூழ்வதான தொட்டிலின்மேலே படுக்கவைத்து நீண்டு தொங்குவதான கூந்தலையுடைய தாதிமார்கள் வளர்க்க தேவதாசன் ஏழுவயது நிரம்பிய பிள்ளையானான். இவர்கள் இவ்வாறு பிள்ளையுடன் வாழுங்காலத்திலே அவர்களுக்கு வந்தசெய்கையை இனிச் சொல்லுகிறோம். எ-று. (உ௦௭)

விவாக காண்டம் - முற்றிற்று.

ஆ. விருத்தம் - ௪கக.

பரமபதிதுணை.

இரண்டாவது

இந்திரகாண்டம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இம்மை யம்மை மறுமை யென்ன விசைந்து மாமறை கூறிய
மும்மை யுந்தெளி வுற்று நெஞ்சினின் முக்கு றும்பு மறுத்திடுஞ்
செம்மை யன்பர் மனத்து வைகிய தெய்வ நாயகர் தேவிமற்
றெம்மை யாளுடை யம்மை தாள்க ளிரண்டுமேத்தியிறைஞ்சுவாம்.

இ-ள். இப்பிறப்பும் முன்பிறப்பும் வருபிறப்பும் என்பன வுண்டென்று சம்மதித்துப் பெரிதான வேதங்கள் சொன்ன மூவகையுந் தெளிந்து, மனத்திலுள்ள மூவகைத் தோஷங்களையும் போக்கிக்கொள்ளுகின்ற சிறந்த குணத்தையுடைய அடியார்கள் மனத்திலே தங்குகின்ற தெய்வநாயகருடைய தேவியாகிய எங்களை யடிமை கொள்ளுதலையுடைய அம்மைபாதங்க ளிரண்டையும் துதித்து வணங்கக்கடவோம். எ-று. (௧)

கொற்ற வாசவன் முன்வ சிட்டனு ரைத்த தற்கெதிர் கோசிகன்
சொற்ற வாறு முடிக்க வண்மை தொடங்கி நாடு விலங்கினால்
செற்ற வாறு முருத்து வண்டிரி சங்கு மைந்த னெழுந்துகான்
உற்ற வாறு நிகழ்ந்த வாறு முணர்ந்த வாறும் விளம்புவாம்.

இ-ள். வெற்றிபொருந்தின இந்திரனுக்கு முன்னே வசிஷ்டர் சொன்னதற்கு நேரே விசுவாமித்திரர் சொன்னதும், தாம் சொன்னபடியே முடிவு செய்யப் பலாத்காரமாகத்தொடுத்துக் கோசலநாட்டை மிருகங்களாலே அழித்ததும், அதற்குங் கோபங்கொண்டு உதாரகுணங் கொண்ட திரிசங்கு புத்திரனை அரிசசந்திரன் புறப்பட்டுக் காட்டுக்குப்போனதும், அங்கே நடந்ததும் எமக்குத் தெரிந்த அளவு சொல்லுகிறோம். எ-று. (௨)

முண்ட கத்தி லுதித்த நாலு முகத்த வன்றரு காசிபன்
கொண்ட காதலி பெற்றெ டுத்தகு லக்கு மாரன் வலத்தினால்
பண்ட மூன்று விலங்க லங்கைய ரிந்த வச்சிர பாணியோன்
அண்டர் கோனர சாளு நீடம ராவதித்திற மோதுவாம்.

இ-ள். திருவுந்திக்கமலத்திலே பிறந்த சதுர்முகப் பிரமதேவன் பெற்ற காசிபர் கொண்ட மனையாளான அதிதிஎன்பவள் பெற்றுவளர்த்த குலபுத்திரனாகித் தனது பலத்தினாலே முன்னாளில் கோபங்கொண்டு மலைகளினுடைய கைகளான இறகுகளை அறுத்த வச்சிராயுத பாணியாகிய தேவேந்திரனானவன் அரசாட்சிசெய்கிற நெடிதான அமராவதிப் பட்டணத்தின் பெருமையை இனிச்சொல்லுகிறோம். எ-று. (௩)

மாட மண்டப மேடை மாமதில் வாயின் ஞாயில்க படநீள்
கூட கோபுர நீடு மாளிகை கோல வேதிகை யாலயம்
நாட கம்பயில் சாலை சூளிகை நாவலங்கனி யூறல்பாய்
ஆட கங்கொ டமைத்து மாமணி யானி ழைத்தவை னந்தமே.

இ-ள். மாடங்கள்-மண்டபங்கள்- மேடைகள்-பெரியமதில்கள்-வருவது போவதாகியவழி-மதிலுறுப்பு-கதவு-நீண்டகூடம்-கோபுரம்-உயர்ந்தஉப்பரிகை அழகாணதிண்ணை- கோயில்-ஆட்டங் கற்றுக்கொள்ளுகிற நாடகசாலை சிகரம் ஆகிய இவைகளெல்லாம், வெண்ணாவற் கனியினது இரசம் பெருகிப் பாய்வ தான சாம்பூநதப் பொன்னுலேசெய்து பெரிதான இரத்தினங்கள்பதித்திருக் கிறவைக ளொவ்வொன்றும் அனேகம். எ-று. (௪)

வேத சாலையும் யாக சாலையும் யோக சாலையு மின்னனார்
கீத சாலையு நாத மேதரு கின்ன ரம்பயில் சாலையும்
காத லானவர் யாவ ருந்தொடர் காம சாலையு மாபலிப்
பூத சாலையு மாறி லாவனு போக சாலையு மூறொலாம்.

இ-ள். வேதசாலையும்-யாகசாலையும்-போகசாலையும்-மின்னலுக்கொப் பான பெண்கள் பாடுகள் கீதசாலையும் - சுதிகூட்டிப் பாடுவதான கின்னரி வாசிக்கிற சாலையும் - ஆசைகொண்டவர்க ளெல்லோரும் போகத்தக்க காம சாலையும் - பெரிதானபூசை பண்ணத்தக்க பூதசாலையும் - விரோதமில்லாத சுகங்களை யனுபவிக்கின்ற சாலையுமே அந்த அமராவதி பட்டணமெல்லாம்.

உயிரொ னத்தகு மன்பர் தம்முட னும்பர் மங்கைய ரின்பமென்
பயிர்வி ளைத்திடு மனைதொ றுமபல பதும ராக மிலங்குவ
செயிர்வி ளைத்திடு மவுண ருற்றுறை திரிபுரத்தழ லொக்குநீள்
வயிர முத்தொளி விரிவ தப்புர மண்டு வெண்புகை யொக்குமே.

இ-ள். தங்களுகசு உயிரேயென்று சொல்லத்தகுந்நாயகருடனே அந் தத்தேவகன்னிகள் சுகமென்கிற பயிரை விளையச்செய்கிற வீடுகளிலெல்லாம் அநேகபதுமராகரத்தினங்கள்பிரகாசிக்கின்றதானது, இவர்களுக்கும்பகையை உண்டாக்குகின்ற அசுரர்களிருந்து வாசஞ்செய்கின்ற திரிபுரத்திலே பிடித்த நெருப்புச்சோதியை ஒப்பாயிருக்கின்றது. அந்த நீண்ட வீடுகளிலே பதித்தி ருக்கின்ற வயிரங்களும் முத்துகளும் ஒளிவிரிக்கின்றதானது, அந்தத் திரிபுர த்திலேபற்றின நெருப்பிலுண்டாகிற புகைபோல்வனவாம். எ-று. (௬)

அரவு மிழ்ந்தசெம் மணியு மாரமு மணிகொ ளிந்திர நீலமும்
பரவு கின்றம திற்பு றத்தப ரப்ப னைத்து மழுத்தின
நிரவி டும்பல திசைய டங்கலு நிமிர்கொ ழுஞ்சுடர்வி ரிதலால்
இரவுமுண்டிளநிலவுமுண்டெறிவெயிலுமுண்டொருபொழுதினே.

இ-ள். பரவுதலாயிருக்கின்ற மதிலிலுள்ள இடமாகிய விரிவுமுழுதும் பாம்புகள் கக்குகின்ற சிவந்த ரத்தினங்களும், முத்துகளும், அழகுகொண்ட இந்திரநீலமும். பதித்திருக்கின்றன. ஆதலாலே நிரப்புதலையுடைய பல

திக்குகளிலும் உயர்வாகுகின்ற செழுமையான சோதிவிரிகிறதினல், ஒரு காலத்திலே இராக்காலமுமுண்டு. இளநிலாக்காலமு முண்டு. எரிக்கின்ற வெயிற்காலமுமுண்டு. எ-று. (எ)

உரக னுச்சியின் மணிப திக்தவு யர்ந்த பத்தியி டத்துமா
மரக தத்திரண் மணிகு யிற்றி வகுத்த பத்தி யடங்கலும்
கரத லத்தினில் விரிதி ரைக்கடல் கவரு மத்த கசங்களும்
குரக தத்திர ளுஞ்செ றிந்தன கோடி கோடி யிரட்டியே.

இ-ள். ஆதிசேடனுடைய உச்சியிலிருக்கிறஇரத்தினங்கள்பதித்த உயர்வாகிய பத்தியினிடங்களிலும், பெரிதான மரகதங்களான திரண்ட இரத்தினங்கள் பதித்திருக்கிறதாய்ச் செய்திருக்கிறபத்திகள்முழுதிலும், துதிக்கையினுலே விரிந்த அலைகளையுடைய கடலைக்கொள்வனவான மதயானைகளும், குதிரைக் கூட்டங்களும் நெருங்கி நிற்பவைகள் இரண்டு கோடானு கோடிகள். எ-று.

ஆட லும்புன லாட லும்பொழி லாட லும்வெறி யாடலும்
பாட லுந்துணர் சூட லும்பல பாவை பைங்கிளி பூவையாழ்
தேட லும்பொழில் சேர்த லுங்கலை தேர்த லுங்குறை தீர்தலும்
கூட லுந்தமி லூட லுந்தொழில் கோதை யர்க்குள நாளெலாம்.

இ-ள். பந்து முதலியன ஆடுதலும், நீராடுதலும், மலர்கொய்து சோலைகளிலே விளையாடுதலும், தேவர்க்காடுதலும், பாடுதலும், பூநகொத்துகள் சூடுதலும், பலவிதமாகப் பொம்மைகள் - பச்சைக்கிளிகள் - நாகணவாய்ப் புட்கள் வீணை ஆகிய இவைகளைத் தேடிக்கொள்ளுதலும், பூஞ்சோலைகளுக்குப்போகுதலும், அங்கே மதனநூலாராய்தலும், மனக்குறைவு தீர்தலும், கூடுதலும், தங்களிலே பிணங்குதலும் ஆகிய இவ்வகைச் செய்கைகளே காலமுழுதும் பெண்களுக்கு உளவாகும். எ-று. (க)

பூசன் மேவிய பாச நீள்விழி காதி னேடுறு போர்செயத்
தூசி னேடணி மேக லாபரம் வீசு சோதிகள் சூழவே
வாச லேறும ரம்பை மாதர் நிவந்த மாமணி வச்சிரத்
தூச லாடுவ தந்த ரத்திலு லாவு மின்கொடி யொக்குமே.

இ-ள். நாயகருடனே பொருதுதலையுடையதா யன்புமிகுகின்ற கண்கள், காதுகளுடனே மிகுந்த சண்டைசெய்யவும், இடையில் வஸ்திரத்துடனே அணிந்திருக்கிற மேகலாபரணங்கள் வீசுகின்ற ஒளிகள் சுற்றவும், வாசலிலெல்லாம் அரம்பாஸ்திரீகள் உயர்ந்த பெரிய வயிரமணிகள்பதித்த [பலகையிலிருந்து] ஊசலாடுவது, ஆகாயத்திலே உலாவுகின்ற மின்னற் கொடியையொத்திருக்கும். எ-று. (க0)

நனிசி வப்புறு தளிர்வி ளைப்பன நனைவிளைப்பன நனைதொறும்
இனிய வுத்தம நறைவி ளைப்பன விலையு குப்பன விளமதுப்
பனியு குப்பன மணியு குப்பன மணியு குப்பன படுசெழுங்
கனியு குப்பன மலரு குப்பன கற்ப கப்பொழி லைந்துமே.

இ-ள். கற்பகமுதலிய ஐந்து விருட்சஙகளைக்கொண்ட சோலைகளெல்லாம், மிகவும் சிவந்திருக்கின்ற தளிர்களைத் தளிர்க்கின்றவையும், அரும்புகள் விடுகின்றவையும், அவ் வரும்புகளெல்லாம் இனிப்பாலே சிறந்த தேனூறுகின்றவையும், இலைகள் உதிர்க்கின்றவையும், இளமையான தேன்றுளிகளைச் சிந்துகின்றவையும், இரத்தினங்களை உதிர்க்கின்றவையும், ஆபரணங்களைச் சிந்து கின்றவையும், உண்டாகு கின்ற செழுமையான பழஙகளைச் சிந்து கின்றவையும், பூவை உதிர்க்கின்றவையும் ஆகிய இச் செய்கை களையே யுடையன. எ-று. (கக)

வாரி றுக்கிவி சித்து மாமணி மாட மேறி மலர்க்குழற்
காரி றுக்கி மடந்தை மாதர் கழங்கு கந்துக மம்மனை
கூரு கிர்க்கை சிவப்ப வாடுவ கொத்து மாமுடி யுற்றபொன்
மேரு விற்பல கால்வி ழுந்தெழு மீனி னத்தைநி கர்க்குமே.

இ-ள். இரவிக்கை இறுக்கிக் கட்டிக்கொண்டு பெரிதான இரத்தினமகசித மான உப்பரிகை மேலேறிப் பூவையணிந்து கூந்தலை முடித்துக் கொண்டு பெண்கள் கழற்சிக்காய் - பந்து - அம்மானையாகிய இவைகளைக் கூர்மையான நகங்களையுடைய கைகள் சிவக்க விளையாடுகிறபோது, அவைகள் வரிசையாகப் பெரிய சிகரஙகளையுடைய பொன்னான மகமேருவின்மேலே பலகாலும் படிந்தெழுகின்ற நட்சத்திரக் கூட்டங்களை யொத்திருக்கின்றன. எ-று.

கடலின் மீன்கள் துள்ளித்துள்ளி மேருவின்மேலே விழுவனவெனக் கோடலுமாம். (கஉ)

துடிநு டங்கிட மாதர் கைபுனை தொடிமு ழங்கிடு மாடமேல்
அடிநு டங்கிட நடுநுடங்கிட நுனிநு டங்கிட வம்பொனின்
கொடிநு டங்குவ கடையு கத்தெழு குரைக டற்றொனி யன்றியவ்
விடிநு டங்குவ தென்னின் மற்றினி யாவ தேநிக ராவதே.

இ-ள். உடுக்கைபோலுவதாய்த் துவளுதலையுடைய இடையையுடைய பெணகள் கைகளிலே யணிந்த வளையல்கள் ஒலிக்கின்ற உப்பரிகைமேல், அடி துவளவும், நடுதுவளவும், நுனி துவளவும், அழகிய பொன்மயமான கொடிகள் துவண்டாடுகிற ஒலியானது, கலியுகமுடிவிலே எழும்பி ஒலிக்கின்ற கடலோசையேயல்லது, அக்காலத்தி லிடிக்கிற இடிமுழக்கமும் ஒப்பாமென்றால் இனி எதுதான் ஒப்பாகும். எ-று.

பெண்கள் "அடிநுடங்கிட நடுநுடஙகிட நுனிநுடங்கிட" என்பவற்றிற்கு முறையே, காற்சிலம்பு - அணிந்துள்ள இடைமேகலை - மார்பணிகளைச் சொல்லவுமாம். (கங)

தலைவி யப்புறு மரமி யச்சிறு சாள ரபபுழை யால்விழும்
புலவி யிற்பரி பங்கி யின்னிரு புடைவி ழுந்துநு டங்கிய
கலவி யிற்பரி தரள மாமணி கங்கு னங்கைகை பற்றியே
நிலவெ னக்கென வரியெ னக்கெனு நீதி யொப்பன வீதியே.

இ-ள். இடத்தால் அதிசயிக்கத்தக்க நிலாமணிமுற்றத்திலே,(முன்னர்) ஊடலினல் (வருந்திப்) பறித்தெறிந்த முத்துகளும் மாணிக்கங்களும் இருபுறத்திலும் வரிசையாக விழுந்து கிடந்தவைகள் (பின்னர்த் தங்கணவரோடு) துவண்ட கிரீடையாகிய கூடலினலே (அம்மணிகள்) மழைநீர்போகுதற்கு விட்டிருக்கிற சிறிய சாளரம்போல்வதான துவாரவழியேசிந்தி அப்பட்டணத்து வீதிகளில் வீழ்ந்துள்ள காக்ஷியானது, இரவென்னும் பெண்ணின் கையைப்பற்றிக்கொண்டு சந்திரன் நீ எனக்குரியவளாகென்றும், சூரியன் எனக்குரியவளாகென்றும் சொல்லும் தன்மையை யொத்திருந்தது. எ-று.

புழையால்விழுந் தரளமாமணி எனக்கூட்டுக. மாமணி-மாணிக்கம். அரி சூரியன் கலவிதொழில் விளைப்பாரது கைகால்முதலிய உறுப்புக்களால் தாக்குண்டு மணிகள் சாளரவழியே சிந்தினவென்க. (கச)

நீடு மாசையி னீவ தெண்ணுறு நெஞ்சி னர்பல ராயினும்
கூடு மாசையி ஞேடு முற்றது கொள்ளு வாரவ ணின்மையால்
பாடு மாதரி யாழி ஞேடுப யிற்று மாதர ரங்கினின்
றூடு மாதர்தி னம்பெ ருங்கொடை யாண்ட வாணர்க ணெஞ்சமே.

இ-ள். நெடிதான ஆசையுடனே கொடுத்தற்கே யெண்ணுகின்ற மனமுள்ள[ஆட]வர்கள் அங்கே யநேகர்களாயிருந்தாலும், தங்களுக்குக்கூடுவதான ஆசையுடனே கிடைத்ததை வாஙகிக்கொள்ளுகிறவர்கள் அஙகு இல்லாதிருத்தலினலே, பாடுகின்ற அழகான வீணையுடனே கற்றுக்கொள்ளும் பெண்களும், நாடகசாலையிலே ஆடுகின்ற பெண்களும், நாள்தோறும் பெறுவதாய கொடைப் பொருளானது. ஆகாயவாசிகளுடைய மனமேயாம். எ-று. (கரு)

பாதி மாமதி யொத்த வாணுத லுற்ற பட்ட மிலங்கிடச்
சோதி வார்குழை வீச வேய்புரை தோண்ம ணித்தொடை மின்ன
கோதி வாரிமு டித்த பாரிய கொண்டை நின்றுகு லுங்கிட [வே
வீதி வாய்வரு மாத ரோநில மின்னு மேகமு மென்பவே.

இ-ள். அர்த்த சநதிரனை யொப்பான பெருமை பொருந்திய ஒளியையுடைய நெற்றியிலொட்டின பட்டம்விளஙகவும், சோதி நீளுவதான கம்மல் அசையவும், மூங்கிலையொத்த தோள்களுக்குமேலே இரத்தினமாலைகள் மின்னவும், சிக்கறுத்து வாரிமுடித்துப் பருத்திருக்கிற கொண்டைகள்நிலைகொண்டுகுலுங்கவும், அந்தவீதியிலே வருகிற பெண்களைக்கணடே இந்தவுலகம்,மின்னலென்றும் மேகமென்றும் சொல்லுகின்றன. எ-று. (கசு)

நன்ன கர்ப்பெரு வண்மை யுந்திரு வுஞ்சி றப்புந வின்றிடின்
பொன்ன கர்க்குவ மிப்பர் பற்பல நூனெ றிப்புல வோரெலாம்
அந் நகர்க்குவ மிக்க வொப்பதி லண்ட ரண்டம னைத்திலும்
எந்ந கர்ப்பொலி வந்ந கர்க்குநி கர்க்கு மென்ன வியம்புவேன்.

இ-ள். அனேகமான சாஸ்திரமார்க்கங்களை யறிந்தோர்களெல்லாம், உலகத்திலே நல்ல நகருக்குள்ள பெரிதான அழகையும் செல்வத்தையும் சிற

ப்பையுஞ் சொல்வதனால், பொன்னகரத்தை ஒப்பாகச் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட அப்பொன்னர்க்கு ஒப்பாகச் சொல்வதற்கு ஒருநகருமில்லை. அண்டபகிரண்டங்களான எல்லாவற்றிலுமுள்ள எந்தநகரினுடைய அழகை அந்நகருக்கு ஒப்பாகுமென்று யான் சொல்லுவேன். எ-று. (௧எ)

ஆன சித்திர மாந கர்க்குள லர்ந்து யர்ந்தெழு கற்பகக்
கான கத்திடை வேலை புக்கதொர் காசு நீள்வரை யாமெனத்
தான வர்க்குட னுன வெற்பரி தாழ்சு டர்க்குலி சக்கர
வான வர்க்கிறை யோன மர்ந்துறை மண்ட பத்தை விளம்புவாம்.

இ-ள். அப்படிப்பட்ட வேடிக்கைகளைக்கொண்ட பெரிதான அந்தப் பொன்னகரிலே, பூமலர்ச்சியுடனே உயர்ந்தெழுந்து நிற்கின்ற கற்பகக் காட்டினிடத்தில், அசுரர்களுக் குதவியான மலைகளினிறகை வெட்டின ஒளிவீசுகின்ற வச்சிராயுதத்தைக் கையிலேந்திய தேவேந்திரன், கடலிலேபோய் முழுகின இரத்தினங்களதிகமான மைநாகமலையே நிகரொன்னும்படி, சபாமண்டபத்திலிருந்து அரசாளுகின்ற அழகை இனிச் சொல்லுகிறோம். எ-று. (௧அ)

அத்தி பார மிருத்தி வெண்படி கத்த மைத்தத ளத்ததாய்ச்
சித்தி ரககன கத்த கட்டளை செய்து யர்த்தகு றட்டினில்
பத்தி யாயிர வாயி ரத்தப ருத்த தூண்கணி றுத்திமேல்
வைத்த போதிகை யுத்தி ரம்பல வச்சி ரத்தின்வ குத்ததே.

இ-ள். அடிவாரமழுத்தி, வெள்ளைப் பளிங்கினலே செய்த தளவரிசையையுடையதாய், வேடிக்கையாகச் சுவர்னத்தகடுகளாலே சந்து பதிவு செய்து அதின்மேலுயரமாகக் கற்டியிருக்கிற திண்ணைக் குறட்டின்மேலே, ஒரு வரிசைக்கு ஆயிரம் ஆயிரம் பருதத தூண்களை நிறுத்தி, அவைகளின் மேலே வைத்திருக்கின்ற போதிகைகளும், உத்திரங்களும் அநேகமாக வயிரத்தினலே செய்திருக்கின்றன. எ-று. (௧௯)

இட்ட பததியி னிந்த்ர நீலமி சைத்தெ டுத்தசு வர்க்குமேல்
மட்ட றச்சுடர் மரக தத்தில்வ குத்தெ டுத்தநி லத்தது
விட்ட வாயிலி னிட்ட தூண்மணி மேத சுத்தத ராமணி
முட்ட வைத்தமு கட்ட தொண்கதிர் முத்த ணிந்தமு கப்பதே.

இ-ள். அப்படிச் செய்திருக்கிற வரிசைகளிலே இந்திர நீலங்களைச் சேர்த்து உயர்த்தியிருக்கிற சுவருக்குமேலே அளவில்லாமல் விளங்குகின்ற மரகதத்தினலே செய்துயர்த்தின நிலத்துக்குக் கீழே [அதற்குள்ளேபோக] வழி விட்டிருக்கிற வாயிலுக்கு ஊன்றின கால்களானவை, அழகிய கோமேதகச் சோதி வீசுவனவாயிருக்கும். மாணிக்கச்சோதியே மேலளாவுவதாக வைத்திருக்கிற முகட்டையுடைய அந்த மண்டபம் அழகிதான ஒளியை யுடைய முத்தாலலங்கிருதமான முன்முகப்பை யுடையது. எ-று. (௨௦)

ஆளி சிங்கமி பம்ப ரித்திர ளன்ன மஞ்சுக மெண்ணிலா
ஒளி தோறுநி றுத்தி நீள்வயி ரேரி யத்தினி ரைத்ததால்

கோளி ருந்தன வோம டங்கல்கொ ழுந்துவிட் டனவோ குழூஉம்
வாளி ருந்தன வோமு கட்டினில் வைத்த பூரண கும்பமே

இ-ள். யாளிக்கூட்டங்களும் சிங்கக்கூட்டங்களும் யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் அன்னங்களும் கிளிகளுமாகக் கணக்கில்லாத ஒழுங்குகள் முழுதும் நிறைக்கச்செய்து, வயிரேியங்களையும் பரப்பி யிருக்கின்றது. அத்தகைய சபாமண்டபத்தின் மேன்முகட்டிலே வைத்திருக்கிற பூரணகலசம் விளங்குகிற காக்ஷியானது, ஆதிசேஷனுடைய தலைகளிலுள்ள இரத்தினங்களைக் கொள்ளுதலாயினவோ! இடி கொழுந்துவிட் டெரிகின்றனவோ! ஒளிகளெல்லாங்கூடின சூரியாக ளிருக்கின்றனரோ! [என்று சந்தேகிக்குமாறு இருந்தது] எ-று

மடங்கல்கொழுந்து - அக்கினிக்கொழுந்தெனவும், கோள் - கிரகணங்களெனவுமாம். (உக)

காத மாயிர நான்ம ருங்குக ணித்த கன்றுநி லந்தொறும்
பூத மாயிர கோடி கோடிபு றத்துநின் றுசுமந்திட
மீத டாந்துநி வந்து மேனிலம் விண்டெ ழுந்துவ ளர்ந்துபோய்
ஆதி நான்முக னாப தத்தினு மப்புறத்துமு யர்ந்ததே

இ-ள். பூரணகலசத்தையுடைய அச்சபாமண்டபம், ஆயிரங்காத வளவு நாலுபக்கத்திலும் அளவுள்ளதாய் விசாலித்த விடங்களெல்லாம், ஆயிரங்கோடானுகோடி பூதங்கள் வெளியேநின்று தாங்க, மேலே நெருங்கி உயர்ந்து, அதற்கு மேலுலகங்களையுங் கடந்து எழுந்து வளர்ந்துசென்று, உலகத்துக்கு முதலான பிரமதேவனுடைய சத்தியலோகத்துக் கப்பாலு முயர்ந்திருக்கின்றது. எ-று (உஉ)

அயன்றி ருந்துவி தித்த வண்டம னைத்து மிந்நிக ரன்றென
மயன்றி ருந்துப டைத்த சித்திர மண்ட பத்தினி லங்கவன்
வியன்றி ருந்துகொ டுத்த வாதன மீது மாதொடும் வேதநூற்
பயன்றி ருந்துணர் குரவர் தம்மொடு பாக சாதனன் மேவினான்

இ-ள். பிரமதேவன் தெரிந்து சிருஷ்டித்த அண்டங்களெல்லா மிதற்குச் சமானமல்லவெனனும்படி, மயனென்பவன் எண்ணிச் சமைத்திருக்கிற [வேடிக்கைகளையுடைய] அச்சித்திரமண்டபத்திலே, மயனென்பவன் இவனது பெருமையைத் தெரிந்து செய்துகொடுத்திருக்கிற சிங்காசனத்தின்மேலே தேவேந்திரன் இந்திராணியுடனேகூடி வேதசாஸ்திரங்களின் பிரயோஜனந் தெரிந்த பெரியோர்களுடனே கொலுவிருந்தான். எ-று (உங)

நரகி னின்றிடு மிருளை யுந்திரு மணிமு டிச்சுடர் நக்கிட
விரகி னின்றொரு கோடி ஞாயிறு மிக்கெ ழுந்தன வாமெனப்
பெருகி நின்றொளிர் மகர தோரண மிசைசி றந்துபி றங்கிட
அருகு நின்றணி கவரி கோடிய ரம்பை மாதரி ரட்டவே

இ-ள். பாதாளலோகத்திலுள்ள இருளைக்கூட இவனது சிறந்த இரத்தின கிரீடத்தின்சோதி கவளீகரிக்கவும், ஒருகோடி சூரியர்கள் ஒருகாரணத்தி

னுலேகூடி மிகவிளங்கினாற்போல் அதிகமாய் நிலைகொண்டு விளங்குகின்ற மகரதோரணமானது மேலே சிறந்துவிளங்கவும், பக்கத்தில் நின்று அழகிய சாமரங்களைக் கோடியரம்பாஸ்திரீகள் வீசவும். எ-று. (உச)

வெண்ணி றூற்றிகழ் முத்த நீள்குடை மேனி ழூற்றுவ தாயிரங்
கண்ணி ழூற்பட வேயி ருண்டுக றுத்து மீளவெ ளுப்பதாய்த்
தண்ணி ழூற்செய விந்தி ராணித டம்பெ ருங்குழ லாயகார்
ஒண்ணி ழூற்றிரு மேனி தாவிட வும்பர் மன்னனி ருந்தனன்.

இ-ள். தேவேந்திரன் வெண்மையான காந்திவிளங்குகின்ற நீண்டமுத்துக்குடையானது மேலே நிழல்பரப்புவது, இவனுடைய ஆயிரங் கண்களினுடைய ஒளிபடுதலினாலே இருண்டுகறுப்பாய், மறுபடி வெளுப்பதாகிக் குளிர்ந்த நிழலைக்கொடுக்க, இந்திராணியி னுடைய மிகவும் நீண்ட கூந்தலாகிய மேகத்தினுடைய அழகிய நிழலானது இவனுடைய திருமேனியிலே வீசவும் கொலுவிருந்தான். எ-று. (உரு)

கலிநிலைத்துறை

சுரர்தா னவர்கே சரர்தும் புருசித்தர் விச்சா
தரர்சா ரணர்பூ தர்பைசா சர்கடந் திரக்கின்
னராநா ரதனு கரியக்க ரரக்கர் போற்ற
வரரா சனிருந் தனன்மா மணியாத னக்கே.

இ-ள். தேவர்களும் அசுரர்களும் கேசரர்களும் தும்புருக்களும் சித்தர்களும் விச்சாதரர்களும் சாரணர்களும் பூதர்களும் பைசாசர்களும் யாழினை மீட்டுகின்ற கின்னரர்களும் நாரதனும் நாகர்களும் இயக்கர்களும் அரக்கர்களும் துதிசெய்ய, அச்சிரேஷ்டனுன தேவராசன் பெரியசிங்காதனத்திலேயிருந்தான். எ-று. (உசு)

ஆதித்த னோடம புலியார ல புதன்வி யாழும்
சோதிப் பெருமா மதிச்சுக்கி ரனசௌரி தூம
கேதுப் பவனன் வருணன்ச மன்கே டிலாத
நீதிக் குபேரன் முதலோர்க ணிறைந்து மொய்த்தார்.

இ-ள். சூரியனுடனே-சந்திரன்-செவ்வாய்-புதன்- வியாழம்-சோதிவீசுகின்ற மிகப்பெரிதான புத்தியையுடைய சுக்கிரன்-சனி-அக்கினி-வாயு - வருணன்-யமன்-கெடுதலில்லாத நீதியைக்கொண்ட குபேரன் முதலானவர்கள் அச்சபையிலே நிறைந்து கூடினார்கள். எ-று. (உஎ)

சனகன் சமதக் கினிமிக்க சனற்கு மாரன்
அனகன் பிருகத் திரிசத்தி யகத்தி யன்சீர்க்
கனகன் சுகன்கா சிபன்கௌ தமனுபத் தம்பன்
பனகன் னுபமன்னி யன்சங்க னுரோம பாதன்.

இ-ள். சனகன்-சமதக்கினி- மிகுந்தபெருமையையுடைய சனற்குமாரன்-அநகன் பிருகு - அத்திரி - சத்தி - அகத்தியன் - சிறப்பைக்கொண்ட கனகன்

சுகன்-காசிபன்-கௌதமன்-ஆபத்தம்பன்- பனகன் - உபமன்னியன் - சங்கன் உரோமபாதன். எ-று. (உஅ)

பாரத்து வாசன் குமுதாக் கன்பரா சரன்கர்ப்
பூரத்து வாச வடமீ னசைபூண் வசிட்டன்
வீரத்து வாசந் திசைவீ சியகோ சிகன்னந
நேரத்து வாச வனைநண்ணி நிறைந்த ணைந்தார்.

இ-ள். பரத்துவாசன் - குமுதாக்கன் - பராசரன் - கர்ப்பூர வாசங் கொண்ட அருந்ததி விரும்புகின்ற வசிஷ்டன் - தனது வீரபரிமளமே எட்டுத் திக்கிலும் வீசுவதான விசுவாமித்திரன் ஆகிய இந்த முனிவர்களெல்லாம் அப்போது தேவேந்திரனைக்கண்டு நிறைந்து கூடினார்கள். எ-று. (உக)

அருமா மணியா தனமன்னவர் யார்க்கு நல்கி
இருமா தவத்தீ ரெனயாரு மிருந்த பின்னர்
திருமா முடிசாய்த் தெழிற்செங்கை யமைத்து விண்ணோர்
பெருமான் கனிவாய் மலர்ந்தின்னன பேச லுற்றான்.

இ-ள். அப்போது அருமையான பெருமையையுடைய ஆசனங்களை அவர்களெல்லோர்க்குங் கொடுத்து, பெரிய தவத்தை யுடையவர்களே! இருங்கள் என்றுசொல்ல, அவர்களெல்லாமிருந்தபின்பு, தேவராசனான இந்திரன் தனது சிறந்த பெரிதான தலையை வணங்கி, அழகான சிவந்த கையை நீட்டிக் கொவ்வைக்கனிபோன்ற வாயைத்திறந்து இப்படிப்பட்டவை களைச் சொல்லத்தொடங்கினான். எ-று. (௩௦)

பாய்மைக் கலோலக் கடல்சூழ் புவிபார்த்தி வர்க்குள்
தீமைக் கும்வேகச் சிலுகுக்கு மிடங்கொ டாது
வாய்மைக் குநன் னூல் வளனுக்கு மனத்தி லுற்ற
தூய்மைக்குமிக்கார் தமையாய்ந் தனிர்சொன்மி னென்றான்.

இ-ள். கரைமேலேமோதுவதான கறுத்த அலைகளைக்கொண்ட கடல் சூழ்ந்த உலகத்துள்ள அரசர்களில் தாம் ஆளுகிற நாடுநகரங்களிலே பாவங்களுண்டாகுதற்கும் விரைந்துபற்றுகின்ற துன்பத்திற்கும் இடங்கொடுக்காமல் மெய்ம்மைக்கும், நல்ல சாஸ்திரவிசாரணைக்கும், அந்த விசாரணை மனத்திலே பொருந்தின நன்மைக்கும் மிகுந்த யோக்கியர்களை நீங்கள் தெரிந்து இன்னாரென்று சொல்லுங்களென்று சொன்னான். எ-று. (௩க)

நறையோ தியினு ளயிராணி நலந்தி ளைக்கும்
இறையோ தியமாற் றமியாவருங் கேட்ட பின்னர்ச்
சிறையோ திமமேல் வருநான் முகன்செல் வன்றெய்வ
மறையோ தியநீதி வசிட்டனெ டுத்து ரைப்பான்.

இ-ள். பரிமளித்தலைக்கொண்ட கூந்தலையுடையவளான இந்திராணியின் சுகத்தை அனுபவிக்கின்ற தேவேந்திரன்சொன்ன வார்த்தையை எல்லோரும் கேட்டபின்பு, இறகையுடைய அன்னத்தின்மே லேறிவருகிற சதுர்முகக்

கடவுளுடைய புத்திரனாகித் தெய்வத்தன்மை கொண்ட வேதங்க ளெல்லாந் தெரிந்த வசிஷ்ட மகாமுனிவர் [அப்படிப்பட்ட அரசன் இன்னானென்று] சொல்லலானார். எ-று. (௩௨)

பாருக் கொருவன்பர தாரச கோத ரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கு மறைப்பொ ருட்கும்
நேருக்கும் வீடா மனுநூ னெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கு மிக்கா னரிச்சந்திர னாகு மென்றான்.

இ-ள். இந்த லோகத்திலே ஒருவரும் நிக ரில்லாதவன். பின்னும் அந்நியர் மனைவிமக்களுக்குச் சகோதரனானவன். வெவ்விதான சண்டைசெய் கிறதிலும் நிகரில்லாதவன். கீர்த்திக்கும், வேதார்த்த உணர்வுக்கும், அந்த அர்த்தப்படியே நடக்கிற ஒப்புக்கும், மோக்ஷமார்க்கத்தை யளிக்க வல்ல மனு சாஸ்திர மார்க்கத்துக்கும், பொறுமைக்கும் எப்படிப்பட்ட யோக்கியங்களுக் கும் சிறந்தவன். [ஆகவே] அரிச்சந்திர மன்னனே தக்கவனாவானென்று சொன்னார். எ-று. (௩௩)

அன்னா னதுகூறிட மைந்தனை யட்ட தாலும்
முன்னா ளமர்வென் றொருதண்டின் முடித்த தாலும்
தன்னா லுணராத சலத்தினன் றான மூன்று
கொன்னார் தவத்தோங்கிய கௌசிகன் கூற லுற்றான்.

இ-ள். அந்த வசிஷ்டர் அப்படிச்சொல்ல, அப்போது தன் புத்திரனைக் கொன்றதனாலும், முன்னாளிலே தான் பொருதபோனை ஒரு தண்டினாலே வென்று தன்னை முனிவனாகச் செய்ததனாலும், தன்னாலுந் தெரிந்து கொள் ளக்கூடாத கோபத்தை யுடையவனாய்க் கொதிப்புக்கொண்டு பெருமை பொருந்திய தவத்தினாலுயர்ந்த கௌசிகனான விசுவாமித்திரமுனிவர் சொல் லத்தொடங்கினார். எ-று.

"மைந்தனை யட்டதாலும் - முன்னாளமர் வென்றொரு தண்டின்முடித்த தாலும்" என்பது.

காசிராஜன் புத்திரனாகிய கோசிகன் வேட்டை யாடும்படி வனஞ் சென்று பிரமரிஷியாகிய வசிட்டமுனிவர் தவச்சாலையை யடைந்து, அவர் காமதேனுவைக்கொண்டு செய்வித்த விருந்துண்டு, அப் பசுவைக்கேட்க, அவர் கொடாதலால் கட்டிப்பிடித்தனன். அது உடலைச் சிலிர்க்க, பலமிலே ச்சர்தோன்றி அரசன் சேனையையழிக்க, கோசிகன் புத்திரர்களாகிய நூற்று வர் இது முனிவன் வஞ்சகமென்று போர்க்கெழ, வசிட்டமுனிவர் விழித்துப் பார்க்கச்சாம்பராயினர். அதுகண்ட கோசிகன், முனிவருடன் போர்செய்து செயிக்கச் சக்தியற்று "அரசர் வல்லமையினும் முனிவர் தவ வல்லமை சிறந் துளதாதலின் யானுந் தவஞ்செய்வேன்" என்று அருந் தவஞ் செய்யச சென்றார். என்பதாம். (௩௪)

வெய்யன் பதகன் பரதார விருப்பன் வீணன்
பொய்யன் னிறைபும்பொறை யுஞ்சிறி தும்மில் புல்லன்
கையன் கபடன் கயவன் றனைநல்ல னென்றிவ்
வையன் றிருமுன் னுரைத்தாயிதென் னாக வென்றான்.

இ-ள். பொல்லாதவனும் பாதகனும் பரதார இச்சையுள்ளவனும் பயன் படாதவனும் பொய்யனும் மனவொடுக்கமும் பொறுமையும் கொஞ்சமேனும் இல்லாத அற்பனும் வஞ்சகனும் கபடனும் ஆன ஒரு புததியீனனை மிக நல்லவனென்று இந்த அரசன் சமுகத்தில் நின்று சொன்னீரே! இதனால் யாது பயனைக் கருதியென்றார். எ-று. (௩௫)

தீவெந் தொழிலின்றி யொப்பற்றமெய்ச் செவ்வி யோனைக்
காய்வெந் திறலாலிவை கூறிய கௌசி காநின்
வாய்வெந் திலைநின் மனம்வெந்திலை வம்பு சொன்ன
நீவெந் திலைதெய்வ முநின்வயிற் பொய்த்த தென்றான்.

இ-ள். அதற்கு [வசிட்டமுனிவர்] தீயனவான வெவ்விய செய்கைகள் ஒன்றுமில்லாமல் நற்செய்கைகளாலே நிகரற்ற செவவைக் குணத்தையுடைய மெய்யனை அரிச்சந்திரனைக்குறித்து உம்முடைய கோபிக்கிற வெவ்விய பலத்தைக்கொண்டு இப்படிச்சொன்ன கௌசிகமுனிவரே! இவ்வாறு சொல்வதான உம்முடைய வாயும் வேவாதிருக்கிறீர்; உம்முடைய மனமும் வேவாதிருக்கிறீர் இப்படி வீணான வார்த்தைகளைச்சொன்ன நீரும் வேகாதிருக்கிறீர் [வேவச்செய்யாதிருக்கிறதினாலே] தெய்வமும் உம்முடனே கூடிக்கொண்டு பெய்யா யிருக்கின்றது. எ-று. (௩௬)

தெய்வந் தனைநொந்து வசிட்டனிச் செய்தி செப்பக்
கைவந்த கொடுந்தொழிற் கௌசிகன் கன்றி நோக்கிப்
பொய்வந்த நின்வாய் புழுவாகுத லன்றிப் பொய்யா
மெய்வந்த வென்வாய் மனம்வேவல வென்று சொன்னான்.

இ-ள். வசிஷ்டமுனிவர் தெய்வத்தை நொந்துகொண்டு இவ்விதங்களைச் சொல்லவே, கொடுஞ்செய்கையே கைகூடிவதான விசுவாமித்திரர் கோபித்துப்பார்த்து, பொய்ச்சொற்கள் சொன்ன உன்வாய்ப்புழுத்துச் சிந்துமே யல்லது, பொய்ச்சொல்லாமல் மெய்யேவருவதான என்வாயும் மனமும் வேவாதென்று சொன்னார். எ-று. (௩௭)

புனங்கொண் டசெந்தீப் புயலூவி யெழுந்த தேபோல்
மனங்கொண் டடங்காப் பெருவன்மை வசிட்டற் கெய்திக்
கனங்கொண் டகற்ப முடிவின்க ணுருத்திரன் போல்
சினங்கொண் டெழுந்தான் விழித்தீத்திசை தோறுஞ் சிந்த.

இ-ள். காட்டிலேபிடித்த நெருப்பானது மேகமண்டலத்தளவு நிமிர்ந்து கிளர்ந்தாற்போல், வசிட்டமுனிவருக்குப் பெரிதான சாமர்த்தியம் மனத்திலே தோன்றி அடங்காதுண்டாகி, தகனமான பிரமகற்பமுடிவில் தோன்றுகிற

காலருத்திரனைப்போல் கண்களிலேயுண்டான நெருப்புப்பொறி எந்தத் திக்கிலுஞ்சிதறக்கோபங்கொண்டு எழுந்திருந்தார். எ-று. (நஅ)

தாங்கிற் றிலன்கௌசிகன் றானுமவ் வாறு சீற்றம்
ஓங்கக் கதித்தது ற்றனை னுற்றவப் போதி ரண்டு
பாங்கிற் படுசெந் தழல்பம்பியுற் றங்கு மிங்கும்
நீங்கிற் றிலைநீள் கொழுந்தோடி நிமிர்ந்த தன்றே.

இ-ள். அதற்கு விசுவாமித்திரரும் பொறுதவராய் அப்படியே கோபமென்மேலாக அதட்டிக்கொண்டு நின்றார்; நிற்கிற அப்போது அவ்விருவரிடத்திலு முண்டாகுகின்ற சிவந்த கோபாக்கினியானது நெருங்கிக்கிளர்ந்து மேலுங்கீழும் விடாததாய் நீண்ட கொழுந்துசென் றுயர்ந்தது. எ-று. (நகூ)

கானந் திகழ்தா மரைக்கட் பிறந்துற்ற புத்தேள்
தானந் தனைநாடி யெழுந்தெரி தாக்க லோடும்
வானென் படும்வை யகமென்படு மென்று வானோர்
கோனன் றுநடுங் கியலைந்து குலைந்தெ ழுந்தான்.

இ-ள். நெருப்புச்சுவாலையானது, வணடுகெ ளிராகம் பாடுவதானதாமரைமலரிலே பிறந்திருக்கிற பிரமதேவனுடைய உலகமெல்லாம் பரவிக் கிளர்ந்து வீசும்போது, தேவர்களுக்கரசனை இந்திரன் ஆகாசந்தான் என்னபாடு படும்! பூலோகந்தான் என்னபாடுபடுமென்று பயந்து அலைந்து குலைந்து எழுந்திருந்தான். எ-று. (சஂ)

ஆற்றா நெடுவெஞ்சினை மாற்றி யமர்த்தி யுள்ளம்
தேற்றா மகவான்றிருச் செம்மலர்க் கைய மைத்துக்
கூற்றால் விளைவாவன கண்டிடிற் கூறு நீர்மை
தோற்றா ரிழிதக்கது செய்வதென் சொன்மி னென்றான்.

இ-ள். ஒருவராலும் தணிக்கக்கூடாத அவ்விருவருடைய நெடிதான வெப்பங்கொண்ட கோபத்தை இந்திரனவன் தணியப்பண்ணிஅமரும்படி செய்து, மனதையுந்தேற்றி, தனது சிவந்தமலர்போலுங் கையால் அடங்கச்செய்து, உங்கள்சொல்லின்படி அரிச்சந்திரனிடத்திலே உண்டானவற்றைப் பரிசோதித்தால், நீங்கள்சொல்லுகிற குணத்திலே ஒருவர்பட்சம் தோற்பாரானால் தோற்றவர் தாழ்ந்துசெய்யத்தக்கது யாதுசொல்லுங்களென்றுசொன்னான். எ-று. (சக)

அன்பாற் கடலாய வசிட்ட னழன்று மன்னன்
றன்பாற் றவறுண் டெனக்கௌசிகன் சாய்க்கி னன்றே
என்பாற் றவம்விட் டிழிகட்டலை யோட்டி னேந்தித்
தென்பாற் றனிச்செல்குவன் யானிது திண்ண மென்றான்.

இ-ள். அன்பினலே கடல் போல்பவ ராகிய வசிட்டர் கோபங்கொண்டு அரிச்சந்திரனிடத்தில் நான் சொல்லுவதற்குத் தவறுண்டாக இந்த விசுவாமித்திரன் காட்டினால், அப்போதே என்னிடத்துள்ள தவமெல்லாமிழந்து. தாழ்ந்த புலைச்சேரிக்குப்போய்த் தலையோட்டிலே பிச்சை

வாங்கி யுண்டலைந்து யமலோகத்துக்குத் தனித்துப்போகக்கடவேன்; இது
த்தியமென்று சொன்னார். எ-று. (௬உ)

மாறு நெறிகொண்ட வசிட்டனம் மன்ன னுள்ளம்
வேறு மெனினிச் சபதத்தை விளம்பி விட்டான்
தேறு வினிநின் சபதத்தையித் தேவர் கோன்முன்
கூறு யெனநாரதன் கோசிக னுக்கு ரைத்தான்.

இ-ள். நாரதமகாமுனிவர், விசுவாமித்திரரைப்பார்த்து, மாறுபடாதநீதி
யையுடைய வசிஷ்டர், அந்த அரிச்சந்திரனுடைய மனமானது தாம் சொல்
வதற்கு வேறாகுமானால் இப்படிப்பட்ட சபதத்தைச் சொல்லுவாரோ ?
சொல்லார். ஆகையால் இனிமேலும்முடைய சபதத்தை இந்தத் தேவேந்
திரனுக்கு முன்னே தெளிந்து சொல்லக்கடவீரென்று சொன்னார். எ-று.

நன்று குகவென்றவ னாரத னுக்கு ரைத்துப்
பின்று திவன்போற் பெரும்பாடை பிதற்ற மாட்டேன்
வென்று னெனின்யான் செய்த மெய்த்தவந் தன்னிற்பாதி
குன்றும லீவே னெனக்கௌசிகன் கூறி னானால்.

இ-ள். அந்த விசுவாமித்திரர் நல்லது, அப்படியே ஆகட்டுமென்று நார
தரைப் பார்த்துச் சொல்லிப், பின்பு அந்த வசிஷ்டரைப்போல் பெரிதான
சபதத்தைச் சொல்லமாட்டேன்; அவர் வெல்லுவாரேயானால் நான் செய்
திருக்கிற மெய்யான தவத்திலே பாதிக்குக்குறையாமல் கொடுக்கிறேனென்
றுசொன்னார். எ-று. (௬௪)

அமையும் மமையும்மிஃ தேயரிச் சந்தி ரன்பால்
சமையுஞ் சபையின்றிறம் யாவதுஞ் சாற்று றாமல்
எமையுஞ் சுரர்காவலி லென்று மிருத்தி நீயிச்
சமையந் துறந்தே கெனப்பின்னருஞ் சாற்ற லுற்றான்.

இ-ள். நாரதர் இதுவே போதும், போதும். அரிச்சந்திரனிடத்தில் உண்
டாகுவதான சபையினிடத்திலே நான்போய் இங்கே நடந்தகாரியங்களில்
எவ்வளவும் விளங்கச் சொல்லாதபடி என்னையுந் தேவர்கள் காவலுக்குள்ளே
நீர் தெரியச்செய்கிறவரைக்கும் இருக்கப் பண்ணி, இந்தட்சணமே நீர் இவ்
விடம் விட்டுப்போமென்று கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார். எ-று. (௬௫)

ஆதித்த னருங்குலத் தண்ணலை நண்ணி யான்ற
நீதித் தொழிலுந் நெறியுந்தரு மத்தி னேரும்
சாதித்த வுன்றன் சமைப்பாற் சமர்த்தாற்று மாற்றாற்
சோதித் திடுபோ வெனச் சொல்லியச் சூழ லுற்றான்.

இ-ள். சூரியகுலத்திற் பிறந்த அரிச்சந்திரனிடத்துககுப்போய் அங்க
மைந்த நீதிக்கிரமமும் தருமத்தினது நேர்மையும் இங்கேசொன்ன உம்மு
டைய முயற்சியினாலும், உம்முடைய சமர்த்தை முடிக்கும் வகையினாலும்பரி
சோதித்தறிந்துகொள்ளும் போமென்று [நாரதமுனிவர்] சொல்லி அந்தத்
தேவர் காவலுக்குள் ளிருந்தார். எ-று. (௬௬)

அக்கா லையிலத் தவருஞ்சபை யுங்கு லைந்து
தொக்கார் முனிவோர் பலருந்தழு சூழல் சார்ந்தார்
மைக்கார் முகவண்ணலை வாழ்த்தியக் கௌசி கன்போய்ப்
புக்கான் முதல்வைகிய பொன்மலைச் சாரற் பொங்கர்.

இ-ள். அப்போது அந்த அருமையான சபைக் கூட்டங் கலைந்து அங்கே கூடியிருந்தவர்களான முனிவர்களெல்லோரும் தங்களிடம்போனார்கள். அந்த விசுவாமித்திரர் கறுத்தமேகம்போலு நிறத்தையுடைய இந்திரனை ஆசீர்வதித்து முன்னே தாமிருக்கிற மகமேருவின் சாரலிலேயுள்ள சோலைக்குப்போனார். எ-று. (சஎ)

இந்திரகாண்டம் முற்றிற்று

விருத்தம்- ச(ரு)அ.

மூன்றாவது

வஞ்சனைக்காண்டம்.

கலி விருத்தம்.

திருந்து செஞ்சொற் செழுமறைக் கௌசிகன்
பொருந்து நீர்க்கடற் பூதலஞ் சார்ந்துபண்
டருந்த வம்புரி சாலைய ணைந்துபுக்
கிருந்த னன்பின் னிகழ்ந்த தியம்புவாம்.

இ-ள். திருத்தமான செவ்விய சொற்களைக் கொண்ட செழுமையான வேதமுணர்ந்த விசுவாமித்திரரானவர், ஜலமயமான கடல்சூழ்ந்த பூலோகத்துக்கு வந்து முன்னே தாம் அரிதான தவத்தைச் செய்திருந்த பன்னசாலைக்குள்ளே போயிருந்தார். பின்பு நடந்ததைச் சொல்லுவோம். எ-று.

செவ்வி யன்றனைத் தீயவ னென்றியாம்
வெவ்வி யற்பட விண்ணவர் முன்புகல்
அவ்வி யத்தைமெய் யாக்கு மருந்திறம்
எவ்வி யற்றென் றிதயத்தி லெண்ணினான்.

இ-ள். விசுவாமித்திரர். நல்லவனைக் கெட்டவனென்று நாம்கொடுஞ் செய்கை தோன்றத் தேவர்களுக்குமுன்னே சொன்ன பொறாமைச்சொல்லை மெய்யாகச் செய்கிற அரிதானவகை எவ்வகையாலாகுமென்று மனத்திலே ஆலோசிக்கலானார். எ-று. (உ)

விண்ணி ழிந்து விரிமலர்ச் சோலையின்
கண்ணி ருந்த கவுசிகற் காண்டுமென்
றெண்ணி கந்த முனிவர்வந் தீண்டிபு
மண்ணில் வீழ்ந்து வணங்கி யிருந்தனர்.

இ-ள். அப்போது, ஆகாயத்தைவிட்டிறங்கி மலர்ந்த பூஞ்சோலைக்குள்ளிருக்கிற விசுவாமித்திரரைப் பார்ப்போமென்று கணக்கில்லாத முனிவர்கள் வந்துகூடிப் பூமிமேலே படியவிழுந்து வணங்கியிருந்தார்கள். எ-று. (௩)

இருந்த பின்ன ரிருளறு நன்குணத்
தருந்த வத்தர னைவரு மையைநீ
பொருந்து பொன்னகர் புக்கபி னுற்றது
திருந்த வேயருள் செய்கென்று செப்பினர்.

இ-ள். இப்படியிருந்தபின்பு, மயக்கந்தீர்ந்த நல்லகுணத்தையுடைய அருமையான தவமுனிவர்களெல்லாரும் விசுவாமித்திரரே! நீர் தேவர்களிருக்கிற பொன்னுலகத்திற்குப் போனபோது அங்கே நடந்ததைச் செவ்வையாகத்தெரிய அருளிச்செய்யவேணுமென்று கூறினர்கள். எ-று. (௪)

கொற்ற வாசவன் கூறிய மாற்றமும்
மற்றொர் வாய்மை வசிட்ட னுரைத்ததும்
உற்ற வாறு முணர்த்துத லின்றியே
கற்றொர் வஞ்சனைக் கட்டுரை கூறுவான்.

இ-ள். வெற்றிபொருந்திய தேவேந்திரன் சொன்ன விசேஷமும், அதற்கு வேறொருவார்த்தை வசிட்டர் சொன்னதும், அதற்குத் தாம்பேசினவகையுஞ் சொல்லாமல், வேறொன்றைக் கற்பித்து வஞ்சகமான கட்டுவார்த்தை சொல்லுகிறார். எ-று. (௫)

தெரியு நீண்மறைத் தேவர வைக்கணே
பெரிய மாதவர் பேசிய வேள்வியில்
அரிய தொன்றுமு டிக்கும வாவினல்
கரிய வோலக் கடற்புவி யெய்தினேன்.

இ-ள். நெடிய வேதங்களைத் தெரிந்திருக்கின்ற தேவர்கள் சபையிலே சிறந்த பெருமையைக்கொண்ட முனிவர்களாலே சொல்லுகின்ற யாகங்களிலே அருமையாகிய ஒருயாகத்தைச் செய்து முடிக்கவேணு மென்கிற ஆசைகொண்டு கருநிறமாக ஒலித்தலையுடைய கடல்சூழ்ந்த உலகத்திற்கு வந்தேன். எ-று. (௬)

சொல்வ தொன்றுண்டு கேட்கத் துணிதிரேல்
நல்ல தென்று கவுசிக னட்டினன்
அல்ல தாயினு நின்சொன் மறுத்திடல்
வல்ல மோவென்று மாதவர் கூறினர்.

இ-ள். அதற்காக நான்சொல்லுவதொன்றிருக்கின்றது; அதை நீங்கள் கேட்கச் சம்மதிப்பீர்களானல் நல்லகாரிய மென்று கௌசிகரான விஸ்வாமித்திரர் சொன்னர். அதற்கு அந்தமகாமுனிவர்கள் தகாத காரியமாயிருந்தாலும் தேவரீருடைய சொல்லைத்தடுத்துச் சொல்லமாட்டோமோவென்று கூறினர்கள். எ-று. (௭)

அருள யோத்தி யரிச்சந் திரனையுற்
றிருள றும்பெரு வேள்விக்கி யூான்சொலும்
பொருட ரும்படி யின்றுபொ ருத்திநீர்
வருக வென்று மறைமுனி கூறினன்.

இ-ள். கொடுக்குஞ் செய்கையையுடைய அயோத்தியாபுரியை ஆளுகின்ற அரிச்சந்திரனை நீங்கள்போய்க்கண்டு குற்றமற்ற பெரிதான யாகத்துக்காக நான்கேட்கிற திரவியங்கொடுக்கும்படி இப்போதே அவனைச் சம்மதப்படுத்திக்கொண்டு நீங்கள் வரக்கடவீர்களென்று வேதமுனிவரான விசுவாமித்திரர் சொன்னார். எ-று. (அ)

கேட்ட போதி லெழுந்து கிரிப்பெருங்
காட்டை நீங்கிக் கடிபொழி னீங்கியே
கூட்ட மோடு குளிர்புனற் கோசல
நாட்டை நண்ணினர் நான்மறை யாளரே.

இ-ள். அந்தச்சொல்லைக் கேட்டவுடனே நான்குவேதங்களும் பாராயணஞ்செய்கிற முனிவர்கள் கூட்டத்துடனே எழுந்திருந்து மலைகளைச்சூழ்ந்த அந்தவனத்தைக் கடந்துசென்று வழியிலுள்ள பரிமளச் சோலைகளையுங் கடந்துபோய்க் குளிர்ந்த கங்காஜலம் பெருகுவதான கோசல நாட்டை அடைந்தார்கள். எ-று. (கூ)

கன்ன லோங்கு கழனியிற் பொன்னிறச்
செந்நெல் கால்பொரச் சேக்கையின் மேவிய
அன்ன மெங்கணு மோடும ணிநகர்
மன்னர் மன்னவன் மண்டபத் தெய்தினர்.

இ-ள். கரும்புகள் வளர்ந்திருக்கின்ற வயல்களெல்லாம், பொன்னிற நெற்கள் அசைந்து காற்றால் சாமரம்போலவீச, தாமரைமலராகிய படுக்கையிலே தூங்குகின்ற அன்னபட்சிகள் எவ்விடத்திலும் பறந்துசென்று சஞ்சரிப்பதான அழகுபொருந்திய அயோத்தியாபுரிக்குள்ளே சென்று, ராசாதிராசனான அரிச்சந்திரன் கொலுவிருக்கின்ற சபா மண்டபத்துக்குள்ளே போனார்கள். எ-று. (கல)

எய்தி னாரை யிறைஞ்சி யிருத்தியே
நெய்தின் மன்னவன் மாமுக நோக்குறீஇ
வைதி கத்திரு மாதவத் தீர்வந்த
செய்தி செப்புமென் றுனாரை செய்குவார்.

இ-ள். அப்படிவந்த முனிவர்களை வணங்கி [அரிச்சந்திரன்] இருக்கச்சொல்லி, விரைவிலே அந்த முனிவர்களுடைய திருமுகங்களைப் பார்த்து வேதக்கிரமமாய் நடக்கின்ற மிகப்பெரிய தவமுனிவர்களே! நீங்கள் வந்த காரியததைச் சொல்லுங்களென்று சொன்னான். அதற்கு அம்முனிவர்கள் சொல்லுகிறார்கள். எ-று. (கக)

மன்ன கேளொரு வாசகங் கௌசிகன்
சொன்ன துண்டது நல்கத் துணிந்திடின்
இன்ன தென்றிங் கியம்புது மென்றனர்
பின்னர் மன்னவன் பேசத் தொடங்கினான்.

இ-ள். அரசனே! கேட்பாயாக: விசுவாமித்திரர் ஒருவார்த்தைசொல்லி யனுப்பின துண்டு; அதைநீர் ஒப்புக்கொண்டு கொடுக்கச் சம்மதிப்பீரேயானால், அது இன்னதென்று சொல்லுகிறோமென்றார்கள். அப்படி அவர்கள் சொன்னபின்பு அரிச்சந்திரன் சொல்லத்தொடங்கினான். எ-று. (கஉ)

இறுதி யெய்த லெனினுமி னிதுமற்
றுறுதி யற்றுள தாயெற்க மைவதேல்
உறுதி நீருரை செய்ததற் கொத்திடப்
பெறுதும் யாமென மாதவர் பேசுவார்.

இ-ள். உங்களுக்குக் கிட்டாததாய், எங்களுக்குக் கிட்டுவதனால், கெடுதிவருகிறதானாலும் நல்லதே. அரசர்களான நாங்கள், நீவிர் உறுதியாகச் சொன்னதற்குச் சம்மதமாகுவோம் என்று (அரசன்) சொல்ல, அதற்கந்த தவமுனிவர்கள் சொல்லுகிறார்கள். எ-று. (கங)

சந்தி ராதித்தர் தானவர் வானவர்
இந்தி ராதிக ளியாவர்க்கு மெய்திட
வந்தி ராவொரு வேள்விவ ளர்ப்பதை
நொந் திராமுற்ற நுண்ணிதி னெண்ணினோம்.

இ-ள். சந்திரன்-சூரியன்-அசுரர்கள் - தேவர்கள் - இந்திரன் முதலானவர்கள் எல்லாருக்கும் செய்வதற்குக்கூடாத ஒரு யாகத்தைச் செய்வதற்கு வருத்தப்படாமல் முடிக்க அதிசூட்சமாக ஆலோசித்தோம். எ-று. (கச)

வேந்த வப்பெரு வேள்விக்கி ரும்பொருள்
ஈந்தி டற்குரி யாரொவ ரென்றியாம்
ஆய்ந்த னம்முனை யன்றிமற் றில்லெனப்
போந்த னம்மென மன்னன் புகலுவான்.

இ-ள். அரசனே! அந்தப்பெரிதான யாகத்துக்கு வேண்டின அதிக திரவியமெல்லாம் கொடுக்கத் தக்கவர்கள் யாரென்று நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம் கொடுக்கிறதற்கு உன்னை யல்லாமல் வேறொருவருமில்லை யெனத் (தெளிந்து) வந்தோமென்றுகூற, அதற்கு அரிச்சந்திரன் சொல்லுகிறான்.

பரவு மிப்பொருள் பற்றவு மக்கது
தர லெனக்கியல் பென்றரிச் சந்திரன்
திரவி யங்கொடு வம்மெனச் செப்பலும்
பிரம சாரிகண் மீளவும் பேசுவார்.

இ-ள். உங்களுக்கு அதிகமாக வேண்டிய இந்தத் திரவியத்தை நீங்கள் கொள்ளும்படி கேட்டபடியே அதைக்கொடுக்கிறது எனக்கு நீதிதானென்று

அரிச்சந்திரமகாராசன் திரவியங்கொண்டு வாருங்களென்று சொல்லும்போது, பிரமசரியத்தையுடைய முனிவர்கள் மறுபடியும் சொல்லுகிறார்கள். எ-று.

இன்று வேண்டல மியாகமி யற்றிடும்
அன்று நல்க வமையுமெ மக்கென
நன்று நன்றென மன்னன வின்றபின்
நின்று வாழ்த்தி நெடுநகர் நீங்கினார்.

இ-ள். இப்போது வேண்டாம்; நாங்கள் யாகஞ்செய்கிற அப்போது நீ எங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்ல, அதற்கு அப்படியே நல்லது நல்லதென்று அரிச்சந்திரன் சொன்னபின்பு முனிவர்களெழுந்திருந்து ஆசீர்வதித்து அந்த நெடிய நகரைவிட்டுப் போனார்கள். எ-று. (கஎ)

செந்நெல் வெண்ணெல் விளையுஞ் செறுக்களும்
கன்னன் மன்னுங் கழனியுஞ் சோலையும்
அன்ன மாடுந் தடமும கன்றுபோய்ப்
பன்ன சாலைப் பழுவத்து ளெய்தினார்.

இ-ள். சிவந்தநெல்லும், வெள்ளைநெல்லும் விளைவதான வயல்களும், கரும்புகள் விளைகிற இடங்களும், சோலைகளும், அன்னங்கள் சஞ்சரிக்கிற குளங்களும் கடந்துபோய், விசுவாமித்திரரிருக்கிறபன்ன சாலையை யுடைய சோலைக்குள்ளே சென்றார்கள். எ-று. (கஅ)

அன்ன காலை யருந்தவக் கௌசிகன்
றன்ன டித்துணைத் தாழ்ந்தரிச் சந்திரன்
பொன் னளிக்கப் பொருந்தின னென்றவர்
சொன்ன பின்னர்தஞ் சூழலிற் போயினார்.

இ-ள். போன அப்போதே அந்த அரிதான தவமுனிவர்கள் விசுவாமித்திரருடைய பாதங்களிரண்டினிலும் விழுந்து வணங்கி, அரிச்சந்திரமகாராசன் நமக்குவேண்டிய திரவியங்கொடுக்கச சம்மதித்தானென்று அந்த முனிவர்கள் சொன்னபின்பு தங்களிடங்களுக்குப் போனார்கள். எ-று. (கக)

அடிவ ணங்கி யருந்தவர் போனபின்
கடிது சிற்சில திங்கள் கழித்துநீள்
வடிசு டர்ப்படை மன்னனைக் காணிய
கொடிய பாதகக் கோசிகன் றோன்றினான்.

இ-ள். அந்த அரிதான தவமுனிவர்கள் தம்முடைய பாதங்களை வணங்கிக்கொண்டு போனபின்பு, விரைவிலே சில சில மாதங்கள்போய், நீண்ட கூர்மையான ஒளியைக்கொண்ட வேலாயுதத்தையுடைய அரிச்சந்திர மகாராஜனைக் காணுதற்குக் கொடுமையான பாவஞ்செய்ய எண்ணின விசுவாமித்திரர் வந்தார். எ-று. (உ௦)

கெடுக்க வந்தன னென்றுகி லேசியா
இடுக்க ணுற்றிளந் தென்றலி யம்பிட

மடுக்க ளும்மலர் வாவியுஞ் சோலையும்
நடுக்க மெய்திய லைத்தன நாடெலாம்.

இ-ள். இளந்தென்றற்காற்று கெடுதிசெய்ய வந்தானென்று கிலேசப்பட்டு மிகவுந்துக்கித்துச் சொல்வதுபோல வீச, அதனாலே அந்தக் கோசலநாடு முழுதும் மடுக்களும், தாமரைக்குளங்களும், சோலைகளும், நடுக்கங்கொண்டு அலைதலாயின. எ-று. (உக)

கள்ள நீதிக் கௌசிக னெண்ணிய
துள்ள மார யுணர்ந்திள மந்திகள்
துள்ளி நீங்கின சோலைக டோறுமென்
புள்ளி ரிந்தன பொய்கைக டோறுமே.

இ-ள். கள்ளமான ஒழுங்கைக்கொண்ட விசுவாமித்திரர் ஆலோசித்து வருகிறதைத் தங்கள் மனதாரத்தெறிந்து இளமையுள்ள குரங்குகள் சோலைகளெல்லாம் குதித்துப் போயினபோலாயின. குளங்களிலெல்லாம் மிருதுத்தன்மையவாய நீர்ப்பறவைகள் அஞ்சியிருந்தனபோலாயின. எ-று. (உஉ)

அலைகள் சாய்த்தகல் வாவியின் மீனெலாம்
நிலைகள் சாய்த்தய னீங்கின வாழைகள்
குலைகள் சாய்த்தயல் குப்புற்று நின்றன
தலைகள் சாய்த்தன சாலியி னிட்டமே.

இ-ள். அலைகளைமோதி அகன்றிருக்கிற குளங்களிலுள்ள மீன்களெல்லாம் தங்கள் நிலைகளை விட்டுத் தூரதேச போகலாயின வாழைமரங்களெல்லாம் குலைகளைசசாயும்படி விட்டுக்கொண்டு அருகே குனிந்துநின்றன நெற்பயிரின் கூட்டமெல்லாம் தலைகள் வளைந்துநின்றன. எ-று. (உங)

எள்ளை யேய றிவற்றெடுத் தார்கையில்
பிள்ளை யாதலிற் பெய்மலர்க் காவெலாம்
கிள்ளை பாடின கேகய மாடின
கள்ளை யுண்டலின் வண்டுக ளித்தவே.

இ-ள். கிளிகள், எடுத்தவர் கையிலுளதாகிற பிள்ளையானபடியினாலே எள்ளையொத்த அறிவும் இல்லாமல், மலர்களைச் சிந்துகிற சோலைகள் முழுதும் பாடுதலாயின. மயில்களுமாடின. தேனைக் குடிக்கிறதினாலே வண்டுகள் மயக்கங் கொண்டிருந்தன. எ-று.

தீமையுண்டான தாகச் சொல்கிறதுபோல் இந் நான்கு பாடல்களிலும் நாட்டுவளமான நன்மையையே சொல்லியதாகக் கொள்க. (உச)

மாட மாளிகை மண்டப மாமதில்
ஆட ரங்க மகழிற் றுளங்குவ
கேட னெய்தக் கிடுகிடுக் கின்றபோல்
நாட நின்ற நகரிடை நண்ணினான்.

இ-ள் மாடங்கள் - உப்பரிகைகள் - மண்டபங்கள் - பெரிய மதில்கள் (பொதுமாதர்) ஆடுகிற சாலைகள் - அகழ்க்கிடங்குகள் முதலான இந்த இடங்களெல்லாம் கெடுதிசெய்கிறவன்வருகிறதினாலே கிடுகிடென்றுபயப் படுகிறதுபோல, ஆலோசிப்பதாக இருக்கிற பட்டணத்துக்குள்ளே (விசுவாமித்திரர்) வந்தார். எ-று.

கிடுகிடென்று வாத்தியங்களொலித்தல். (௨௫)

தளரி ளைப்பிற் றமனிய வாயில்புக்
களவில் செல்வத் தயோத்தியை நண்ணியே
கிளரொ ளிக்கதிர் கீழ்ப்பட மேனுறீஇ
வளரொ ளிப்பெரு மண்டபத் தெய்தினன்.

இ-ள். பொன்மயமான கோட்டைவாயிலுக்குள்ளே புகுந்து அளவில்லாத செல்வத்தைக்கொண்ட அயோத்தியாபுரிக்குள்ளேவந்து, விளங்குகிற ஒளியையுடைய சூரியன் றேற்றுப்போக அவனுக்குமேற்பட்டு வளர்கின்ற ஒளியையுடைய பெரிதான சபாமண்டபத்துக்குத தளர்வதான இளைப்புடனேவந்தார். எ-று. (௨௬)

மந்த ராசல மண்டபத் தெய்தலும்
அந்த மாதவற் கண்டரிச் சந்திரன்
எந்த மாதவ மோவரு ளிங்குநீ
வந்த காரண மென்று வணங்கினன்.

இ-ள். பெருமைபொருந்திய அவ் விசுவாமித்திர முனிவர் மந்தரமலைபோ லுயர்ந்திருக்கின்ற அந்தமண்டபத்துக்குளே வந்தவுடனே, அரிச்சந்திரன்கண்டு தேவரீர் இங்கெழுந்தருளிய காரணம் நான்செய்த எந்தப்பெரிதான தவத்தினாலோ! சொல்லுவீராகவென்று வணங்கினன். எ-று. (௨௭)

காவன் மன்ன கடிமறை வேள்விக்கென்
னேவன் மாக்கட் கிசைந்த பெரும்பொருள்
தாவெ னச்சொலக் கேட்டரிச் சந்திரன்
ஈவ லெத்துணை வேண்டுமென் றேத்தினன்.

இ-ள். (அதற்கு உலகத்தை இரட்சிக்கின்ற அரசனே! தேவர்களாலே காக்கத்தக்க வேதமந்திரங்களைக் கொண்டுசெய்கின்ற யாகத்துக்காக என்னு ஏவலாலே வந்த முனிவர்கள்முன்னே கொடுக்கச் சம்மதித்த அதிகமான பொருள்முழுதும் இப்போது கொடுக்கவேணுமென்று விசுவாமித்திரர்சொல்லக்கேட்டு, அரிச்சந்திரமகாராசன் இப்போதே கொடுக்கிறேன் எவ்வளவு வேணுமென்று சொல்லித் தோத்திரஞ் செய்தான். எ-று. (௨௮)

மான வன்சொல மாமுனி நோக்கியே
யானை மேனின் றெறிந்தக வண்சிலை
போன தூரம் பொருள்குவிப் பாயெனின்
மோன வேள்வி முடித்திட லாமென்றான்.

இ-ள். அந்த மகானுபாவனுன அரிச்சந்திரன் அவ்வாறு சொல்லுகையில், பெருமைபொருந்திய விசுவாமித்திரமுனிவர் அரசனைப்பார்த்து யானைமேலேநின்று எறிந்த கவண்கல்போகிற தூரஅளவுள்ள பொருள் கொண்டுவந்து குவிப்பாயேயானுல் நான் மௌனமாயிருந்து செய்வதானயாகத்தை முடித்து நிறைவேற்றக் கூடுமென்று சொன்னுர். எ-று. (உக)

இறைவ னிவ்வகை யிசுமன் யானெனு
அறைதி றந்தவ னுனையைத தம்மெனக்
குறைவில் வாதுவ ரோடிக் கொணர்ந்திடப்
பிறைமெ யிற்றுப் பெருங்களி றுற்றதே.

இ-ள். அதற்கு அரிச்சந்திரமகாராசன் அந்தப்படியே நான் கொடுக்கிறேனென்று பொருளுள்ள பொக்கிஷவீட்டைத் திறந்துகொண்டு, இங்கே யானையைக்கொண்டுவாருங்களென்று உத்தரவுசெய்ய, அப்போதே குறைவு சொல்லாமல் யானைப்பாகர்கள் ஓடிப்போய்க் கொண்டுவர, சந்திரதுண்டம் போலும்கொம்புகளையுடைய பெரியயானையும்வந்தது. எ-று. குறைவு-தடை

ஒத்த தேயமை யம்மென தொண்பொருள்
வைத்த னன்னிமன்னி டத்தடை மன்னயான்
சுத்த வேள்வி தொடங்கிடு நாளெனக்
குய்த்தி நீயென் றுரைத்தவ னேகினுன்.

இ-ள். அந்த விசுவாமித்திரர், அரசனே! நீ சம்மதித்ததேபோதும்; இனி நீ கொடுப்பதாகிய அழகிய பொருளெல்லாம் உன்னிடத்திலே தானே அடைக்கலமாக வைத்தேன். இனிநான் பரிசுத்தமானயாகஞ்செய்யும்போது எனக்குக் கொடுப்பாயாகவென்று சொல்லிச் சென்றுர். எ-று. (௩௧)

அருவ னங்கடந் தாச்சிர மம்புகுந
தொருத ருத்தட நீழலு றைந்துபார்
மிருகம் புள்ளினம் யாவும் விரைந்திவண்
வருக வென்று மனநதனி லுன்னினுன்.

இ-ள். அரிதான காடுகளெல்லாங் கழித்துசசென்று தம்முடைய பர்ணகசாலைக்குள்ளேபோய் அங்கே ஒரு மரத்தினது பெரிதான நிழலின்கீழேயிருந்துகொண்டு, உலகத்திலுள்ள மிருகக் கூட்டங்கள் பட்சிக் கூட்டங்களெல்லாம் சீக்கிரத்திலே யிங்கேவந்து சேரவேணுமென்றுதம்முடையமனத்திலே நினைந்தார். எ-று. (௩௨)

அலங்க லஞ்சடை மாமுனி யன்பிலான்
நலங் குலைந்து நினைத்த வந நாடனில்
கலங்கி வாய்களிற் கௌவிய தீன்விட்டு
விலங்கெ லாமுன் விரைந்துவந் துற்றவே.

இ-ள். அசைதலையுடைய அழகிதான சடையைக்கொண்ட பெரிய விசுவாமித்திரர் இரக்கமில்லாதவராய் நீதிநலத்தைவிட்டு நினைத்த அக்காலத்

திலே, மிருகங்களெல்லாம் பயந்து தங்கள் வாய்களினுலே கௌவித்தின் கிற இரைகளையும் விட்டுவிட்டு அவருக்குமுன்னே அதிசீக்கிரத்திலே வந்து கூடின. எ-று. (௩௩)

வளையும் வாலெடுத் தோச்சி வருகனல்
விளையுங் கண்கள் விழுவன போலுற
உளைவி ருத்து வித்ர்த்துத றிப்பெருங்
கிளையி னோடுற்ற கேசரி கோடியே.

இ-ள். ஒருகோடி சிங்கங்க ள் வளைவான வால்களைத்தூக்கி நீட்டியுகமுடிவிலே வருகிற வடவாக்கினி யானது, கோபங்கொள்ளுவதான கண்களிலிருந்து சிந்துகிறதுபோற் சிறந்து உரோமங்களை விரித்துச் சிலிர்ந்து உதறிக்கொண்டு தமது பெரிதான கூட்டத்துடனே வந்தன. எ-று. (௩௪)

வானி மிர்ந்து வளைந்துடல் கூனிநீள்
கானி மிர்ந்துவெங் கண்கள் சிவந்துவிண்
மேனி மிர்ந்துவந் துற்றடர் வெங்கடல்
போனி மிர்ந்துவ ரும்புலி கோடியே.

இ-ள். ஒருகோடிபுலிகள் வால்கள் நிமிர்தலாய் வளைவுகொண்டு உடல் வளைந்து நீண்ட கால்கள் நிமிர்ந்து வெளிநேரடிய கண்க ளெல்லாஞ் சிவந்து ஆகாயத்தின்மேலே உயர்ந்து தாவிக்கொண்டுவந்து சேர்தலாய்க் கொலைத்தொழிலைக்கொண்ட வெப்பமான கடல்போல் உயர்ந்து வருவதாயின. எ-று

குளிரு மாமுகில் கூடிய வாமெனப
பிளிறு கன்றும் பிடிகளும் பின்வர
வெளிறு தந்தக் கருநிற வெண்புதர்க்
களிறு கோடிக டிதுவந் துற்றவே.

இ-ள். சத்திக்கின்ற கறுததமேகங்கள் கூடித் திரண்டனவென்னும்படி வீறிடுகின்ற கன்றானைகளும், பெண்யானைகளும் பின்னேவர, வெளுப்பானகொம்புகளும்; கறுத்தநிறமும் வெண்ணிறமுமான முகத்திற் புள்ளிகளுங்கொண்ட கோடியானைகள் விரைவிலேவந்து கூடின. எ-று. (௩௬

கண்ணெ லாங்கனல் மண்டக் கடுவிடம்
மண்ணெ லாங்குதி கொள்ளம ணிச்சுடர்
விண்ணெ லாம்வெயில் வீசிட வாய்பிளந்
தெண்ணி லாவர வெங்கும்வந் தீண்டின.

இ-ள். கண்கள்முழுதும் நெருப்பெரிய, கடுமையான விடமானது பூமியெல்லாஞ்சிந்த, தலையிலுள்ள இரத்தினச்சோதியானது ஆகாயமுழுதும் ஒளிவீச வாயைத்திறந்துகொண்டு கணக்கில்லாத பாம்புகள் எவ்விடத்திலும் வந்துகூடின, எ-று, (௩௭)

மான மூங்குபுல் வாய்மரை வாங்கலை
ஏன நான மெலிபொருச் சாளியெய்

கான மேதி கரடிசெந் நாய்நரி
வான ரங்கட மாவிவை வந்தவே.

இ-ள். மான்கள் - ஆமைகள்- கடமைகள் கானக்குதிரைகள் தாவுகின்ற கலைமான்கள் - பன்றிகள்-புழுகுபூனைகள் - எலிகள் - பெருச்சாளிகள்-முள்ளம் பன்றிகள்-காட்டெருமைகள்-கரடிகள் - செந்நாய்கள்- நரிகள்- குரங்குகள்-கடமாக்களாகிய இவைகளெல்லாம் வந்துகூடின. எ-று.

அழுங்கு-ஆமை. எய்-முள்ளம்பன்றி. கடமா-காட்டுமிருகம். (௩௮)

தோகை பூவைசு கங்குக்கில் சக்கர
வாக நாரை மடவனங் கோகிலம்
காக மன்றில்சி வல்கவு தாரிபூழ்
வேக மோடுப றந்துவிரைந்தவே

இ-ள். மயில்கள்-நாகணவாய்ப்புட்கள்-கிளிகள்- செம்போத்துகள்-சக்கரவாகப்புட்கள்-நாரைகள்- இளமையான அன்னங்கள்-குயில்கள்- காக்கைகள்- அன்றில்கள் - சிவற்காடைகள்- கவுதாரிகள் - காடைகள் ஆகிய இவைகளெல்லாம் அதிவேகத்துடனே பறந்து விரைவாய்வந்தன. எ-று. (௩௯)

முந்தி வந்த முதிர்சின மாக்களும்
வெந்தி றற்கொடு வேகத்த நாகமும்
பந்தி பந்தி பறவைத் திரள்களும்
வந்து வந்து முனியை வணங்கின.

இ-ள். முன்னேவந்த முதிர்ந்தகோபத்தைக் கொண்ட மிருகங்களும் வெம்மையான சாமர்த்தியத்தையும் கொடிதான வேகத்தையுங் கொண்ட யானைகளும் கூட்டங்கூட்டமாகவந்த பட்சிக்கூட்டங்களும் வந்து விசுவாமித்திரரை வணங்கின. எ-று. (௪௰)

தழைத்த புல்லுந் தழையுங் கனிகளும்
விழைத்த ருந்தி வெருண்டுவெ குண்டுகோள்
இழைத்து நீள்வனம் வாழ்கின்ற வெம்மைநீ
அழைத்த தீதென் றருள்செயல் வேண்டுமே.

இ-ள். தழைத்திருக்கிற புற்களையும் இலைகளையும் கனிகளையும் விரும்பித் தின்றும் பயந்து கோபித்தும் எங்கள் கொள்கைகளைச் செய்து கொண்டு நீண்ட காட்டிலேசஞ்சரிக்கின்ற எங்களை நீர் வரச்செய்தது இன்னதற்காக வென்று எங்களுக்குச் சொல்லவெண்டும். எ-று. (௪௧)

என்று கூற முனிவளி யம்புவான்
குன்று மேவு விலங்கின் குலத்துளீர்
ஒன்று கூறுவ துண்டினி யானுமக்
கின்று நீர்செய் பணியென் றியம்புவான்

இ-ள். என்று அவைகள்சொல்ல, அதற்கு விசுவாமித்திரர் சொல்லுகிறார். மலைகளிலே சஞ்சரிப்பதான மிருககூட்டமானவர்களே! நான் உங்க

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

ளுக்குச் சொல்வதொன்றுண்டு; அதையே நீங்களிப்போது செய்யத்தக்க வேலையென்று சொல்லுகிறார். எ-று. (௪௨)

தாரின் மன்னு புயத்தரிச் சந்திரன்
பாரின் மன்னுயி ரைம்பொழி றண்பயிர
வேரி னோடுங் களைந்துவி ரைந்துநீ
வாரு மென்று மறைமுனி யேவினான்

இ-ள். பூமாலைகளாலே நிரம்புதலான தோள்களையுடைய அரிசசந்திரனது நாட்டிலுள்ள பெரிதான ஜீவன்களையும், பசுமையான சோலைகளையும், குளிர்ந்திருக்கிற பயிர்களையும் வேரோடழியப்பண்ணிச் சீக்கிரத்திலே நீங்களிங்கேவாருங்களென்று வேதமுனிவராகிய விசுவாமித்திரர் சொன்னார். எ-று.

அக்க ணத்திலி றைஞ்சிய ருந்தவன்
பக்க னின்ற விலங்கும் பறவையும்
திக்க னைத்துஞ் செறிந்துவி ரைந்துபோய்ப்
புக்க வத்திரு நாட்டின் புறத்தெலாம்

இ-ள். சொன்ன அந்தட்சணகாலத்திலே வணங்கிக்கொண்டு அரிய தவத்தையுடைய விசுவாமித்திரர் பக்கத்திலே நின்ற மிருகங்களும், பட்சிகளும் எந்தத்திக்கிலும் நெருங்கி விரைவிலேபோய்அந்த அழகிதானகோசல நாட்டின் பக்கமெல்லாம் போய்க்கூடின எ-று (௪௩)

வெள்ளை யானிரை வெம்புலி கோளரி
கொள்ளை யாடின கொல்லையுஞ் சோலையும்
வள்ளை சூழும் வயலும் புனல்களும்
கிள்ளை தோகை கிளையொடு மொய்த்தவே

இ-ள். முன்னே வெண்மையான பசுக்கூட்டங்களை வெவ்விய புலிகளும் சிங்கங்களும் கொள்ளைகொண்டு கொன்றுதின்றன. கொல்லைகளிலும் சோலைகளிலும் வள்ளைக்கொடிகள் படர்ந்திருக்கின்ற வயல்களிலும் தினைப்புனங்களிலும் கிளிகளும்மயில்களுந் தங்கள் கூட்டத்தோடுபோய்மொய்த்தன.

அடர்ந்து மந்தியும் வண்டுங் கன்கடம்
தொடர்ந்து செல்வன சோலைகள் பாழ்படப்
படர்ந்து யர்ந்த பழுமரங் காய்மரம்
இடந்தி ரிந்தன யானைக ளெங்குமே

இ-ள். மந்திகளும் வண்டுகளும் நெருங்கி அகன்ற பாலைவன முதலான இடங்களெல்லாம் ஒன்றையொன்று பின்றொடர்ந்து செல்வதாயின. யானைகள் சோலைகளெல்லாம் பாழாகும்படி படர்ச்சியாய் உயர்ந்திருக்கிற ஆலமரங்கள், காய்த்தமரங்களிவைகளுள்ள இடமெல்லாம் திரிதலாயின. எ-று.

முழங்கு நீர்த்தட முற்றுமு டைத்துநீர்
வழங்கு வண்டன் மடைகளுந் தூர்த்துராய்த்த

தழங்கு சாலியுஞ் சாடித் தழைகொடிக்
கிழங்கு மாய்த்தன கேழற் றிரள்களே.

இ-ள். பன்றிக்கூட்டங்கள், அலைகள் முழங்குகின்ற நீர்க்குளங்கள் முழுதும் உடைத்து நீர்பாய்கிற சேற்றையுடைய மடைகளையும் தூர்த்து. உராவி ஒலிக்கின்ற நெற்களையெல்லாம் அழித்து, தழைகளையும் கொடிகளையும் கிழங்குகளையும் அழிவுசெய்தன. எ-று. (சஎ)

காட்டு வாழ்கலை மான்கட் மாமரை
நாட்டு வாழ்புனஞ் சேரந லிந்திட
ஓட்டு வாரை யொதுக்கினின் றேபருங்
கோட்டு வாரணங் குத்திப் பிளந்தவால்.

இ-ள். காட்டிலே சஞ்சரிக்கின்ற கலைமானும்-கடமாக்களும் - கானக்குதிரைகளும் கூடி, நாட்டிலேயுள்ள புனங்களையெல்லாம் அழிக்கும்போது ஓட்டவந்தவர்களை ஒதுக்கிடத்திலே நின்று பருத்த கொம்புகளையுடைய யானைகள் குத்திப் பிளந்தன. எ-று. (சஅ)

இரவு காவலி ருப்பவரி யாரையும்
அரவுந் தேளு மரணையுங் கொன்றவால்
கரவி னின்று புலியுங் கரடியும்
வரவ ரக்கொன்று மாக்களை மாய்த்தவே.

இ-ள். இராத்திரியிலே காவல் காத்துக்கொண்டிருக்கிறவர்களெல்லாரையும் பாம்பும்-தேளும்-அரணையும் கொன்றன. புலிகளும்-கரடிகளும் மறைவிடங்களிலே யிருந்து மனிதர்களைக் கிட்டிவரக்கொன்றழித்தன. எ-று. (சகூ)

மதந்த ருங்கரி மான்மரை வல்லுளி
ததைந்த தாமரைத் தண்வய லிற்புகப்
புதைந்து சேற்றினிற் புக்கவும் வேரறச்
சிதைந்த வுஞ்செழுஞ் செநநெல்லும் வெண்ணெலும்.

இ-ள். மதத்தைச் சிந்துகின்ற யானைகளும் - மான்களும்-மரைகளும்-பன்றிகளும் - நெருங்கின தாமரைமலர்களுடைய குளிர்ந்த வயல்களிலே போய்ப் புகும்போது, சேற்றிலே யழுந்திப்போன சிலசெழுமையான செந்நெற்பயிர்களும் வெண்ணெற்பயிர்களும் வேரோ டற்றழிந்தன. எ-று. (ருഥ)

நெற்ப சும்பயிர் பற்றினி மிர்தன்மா
பொற்பின் மன்னர் புயவலி யற்றநாள்
கற்பின் மாதர் கருங்குழல பற்றிநீள்
வெற்பின் மாக்கள் விசித்திடல் போன்றவே.

இ-ள். மிருகங்கள் நெல்லினது பசுமையான பயிர்களை வாயினாலே கௌவிக்கொண்டு போகிறதானது, பெரிதான அழகுடனே கூடின அரசர்கள் தங்களுக்குப் புஜபலங் குலைந்த காலத்திலே, கற்புள்ள பெண்களுடைய கரி

தான கூந்தலைப்பற்றி நீண்ட மலைகளிலுள்ள குறவர்கள் இழுத்துக்கொண்டு போகிறதுபோ லிருந்தன. எ-று. (ருச)

பண்டு போர்பழ னச்செழுஞ் சாலியை
உண்டு போதவு ழக்கிய மாக்களைக்
கண்டு போய்க்கடி வோர்தமைக் கவ்வியே
கொண்டு போவன கோளரி யீட்டமே.

இ-ள். முன்போலவே வயல்களிலுள்ள செழுமையான நெற்பயிர்களைத் தின்று மிதித்தழிக்கிற மிருகங்களைக் கண்டுபோய் விலக்குகின்றவர்களையெல்லாம் சிங்கக்கூட்டங்கள் வாயாலே கவ்விக்கொண்டு போவதாயின. எ-று.

இந்த வாறு நிகழ்ந்திட வேங்கியே
அந்த நாட்டி லனைவருங் கூடினோர்
வந்த யோத்தியின் மன்னனைப் போற்றித்தஞ்
சிந்த னைப்படர் செப்பத்தொ டங்கினர்.

இ-ள். அந்தநாட்டிலுள்ள எல்லாரும் இந்தப்படி முழுதும் நடப்பதற்குத் துக்கங்கொண்டு கும்பலாகக்கூடிவந்து அயோத்தியாபுரியிலுள்ள அரிச்சந்திர மகாராசனைக்கண்டு துதித்துத் தங்கள் மனத்திலுண்டான துன்பங்களைச் சொல்லத் தொடங்கினார்கள். எ-று. (ருரு)

என்ன பாவ மிதற்குமுன் கண்டிலேம்
மன்னர் மன்னவ னத்துவி லங்கினால்
செந்நெல் கன்னறி னைப்புனந் தேம்பொழில்
இன்ன வெண்ணில விற்றன வின்றென்றார்.

இ-ள். இது என்ன பாவத்தினாலே இப்படியாயிற்றோ தெரியவில்லை. இதற்கு முன்னானகாலத்திலே இவ்வாறு நடக்கநாங்கள் பார்த்தறியோம். ஓராசாதிராசனே! இப்போது காட்டிலுள்ள மிருகங்களாலே, செந்நெல்லும் - கரும்பும் - தினைப்புனமும் - தேன்பொருந்தின சோலைகளும் ஆகிய இவைகளெல்லாம் அளவற்றவைகளா யழிந்துபோயினவென்று சொன்னார்கள். எ-று.

கலையு மானுங் கடமையு மேனமும்
மலியுந் தண்பயிர் யாவையு மாய்த்தன
புலியும் பல்லமுஞ் சிங்கமும் புக்குயிர்
நலியு மோட்ட நடந்தவர் தம்மையே.

இ-ள். கலைமான்களும் புள்ளிமான்களும் பன்றிகளுங் கூடி மிகுதியான குளிர்ந்த பயிர்களெல்லாவற்றையு மழித்தன. புலியும் கரடிகளும் சிங்கங்களும் வந்து அந்த மான்முதலியவைகளை ஓட்டப்போனவர்களை யெல்லாம் கொல்லுவதாயின. எ-று. (ருசு)

நீரை மாய்த்தன வாரண நீள்பயிர்த்
தூரை மாய்த்தன மான்மரை சூகரம்
வேரை மாய்த்தன மென்மயில் பைங்கிளி
சேர மாய்த்தன செந்நெற் கதிரையே.

இ-ள். யானைகள் நீர்க்குளங்களை யெல்லாம் அழிக்கலாயின. மான்களும் மரைகளும் பன்றிகளும் நீண்ட பயிரின்வேரை யெல்லாம் அழித்தன. மிருதுவான மயில்களும் கிளிகளும்கூடிச் சிவந்த நெற்கதிர்கள் முழுமையும் வேரோடழித்தாற்போல் அழித்தன. எ-று. (ருசு)

தின்று தின்று திரண்டபைங் கூழெலாம்
ஒன்று மின்றி யுழக்கின வோட்டவே
சென்று சென்று செறிந்தவர் தங்களைக்
கொன்று கொன்று குவித்தன கோடியே.

இ-ள். இப்படித் திரண்டிருக்கிற பசிய பயிர்களையெல்லாம் தின்று தின்று ஒன்றுமில்லாமல் மிதித்தழித்த மிருகங்களை ஓட்டுதற்குப்போய்க் கூடினவர்களை யெல்லாங் கொன்று கொன்று குவித்திருப்பவைகள் கோடியுண்டு. எ-று. (ருஎ)

அறிய னந்த மரவும னந்தம்வெங்
கரிய னந்தங் கரடிய னந்தமா
நரிய னந்த நவியனந் தங்கொடு
வரிய னந்த மலிந்தன வந்தென்றார்.

இ-ள். சிங்கங்களும் அநேகம். பாம்புகளும் அநேகம். வெவ்வியயானைகளும் அநேகம். கரடிகளும் அநேகம். பெரிய நரிகளும் அநேகம். மான்களும் அநேகம். கொடிய புலிகளும் அநேகமாக வந்து எங்கு மிகுந்திருக்கின்றன.

மயிலுங் கிள்ளையும் பூவையும் வாவலும்
குயிலுங் காகமுங் கூகையு மன்றிலும்
மயிலுங் காடையு மன்னமு மென்றுபேர்
பயிலுங் கூடப் பறவைய னந்தமே.

இ-ள். மயில்களும் கிளிகளும் நாகணவாய்ப் புட்களும் வௌவால்களும் குயில்களும் காக்கைகளும் கூகைகளும் அன்றில்களும் பலன்களைத் தின்பனவான காடைகளும் அன்னங்களும் என்று பேர்வழங்குகின்றதான அந்த மிருகங்களுடனே கூடப் பட்சிகளும் அநேகமாயின. எ-று. (ருகூ)

நாற்று மேற்றுவந் தெம்மை நலிந்திடத்
தோற்று மாகுலச் சூழ்வினை தன்னைநீ
மாற்றி டாயெனின் மன்னவ வெங்களால்
ஆற்றொ ணாதென் றடிதொழு தேத்தினார்.

இ-ள். நாற்றம் பிடித்துக்கொண்டுவந்து எங்களை வருத்தஞ் செய்வதாகத்தோன்றின துன்பமான பாவங்களை நீ போக்காதிருந்தாயானால் அரசனே! எங்களாலே இந்தத் துன்பங்கள் தாங்கமுடியாது என்று பாதம் வணங்கித் துதித்தார்கள். எ-று. (சுo

அங்கண் மாநிலத் தன்னநன் னாட்டவர்
தங்கள் வாய்மொழி கேட்டரிச் சந்திரன்
திங்கள் சூடி திருவிளை யாட்டினுக்
கெங்க ளாற்செய்வ தென்னென வெண்ணினான்.

இ-ள். அழகிய இடத்தையுடைய அந்த பெரிய உலகத்திலே நல்லதான கோசலநாட்டிலுள்ளவர்கள் மாத்திரம் வந்து சொன்னவார்த்தைகளைக்கேட்டு அரிச்சந்திரமகாராசன் சந்திரனைச்சூடின பரமசிவனுடைய திருவிளையாடல் இப்படியானால் எங்களாலே செய்யத்தக்க தென்னவிருக்கின்ற தென்று ஆலோசிக்கலானான். எ-று. (சுக)

அறைபு னற்றிரு நாடழி வுற்றதற்
கிறையு மக்கிரண் டாண்டினுக் கில்லெனாக்
குறைவி லாநிதி கூறைய ளித்துநீர்
உறையு மூர்தொறுஞ் செல்லுமென் றோதினான்.

இ-ள். ஒலிக்கின்ற கங்காசலம் பாய்வதான இந்தத் திருநாடு இப்படி அழிந்ததற்காக அரசனுக்குக் கொடுக்கும் பகுதி உங்களுக்கு இரண்டுவருஷத்துக்கில்லையாகக் கடவதென்று சொல்லி, அவர்களுக்குக் குறைவு தோன்றாமல் பொருள்களும் வஸ்திரங்களும் கொடுத்து நீங்களிருக்கு மூர்களுக்குப் போங்களென்று சொன்னான். எ-று. (சுஉ)

வஞ்சனைக் காண்டம் - முற்றிற்று.

ஆ விருத்தம் - நிஉ0.

நான்காவது,

வேட்டஞ்செய்காண்டம்.

கலிவிருத்தம்.

நிலவு காலு நெடுங்குடை மன்னவன்
புலவு வாய புலிமுதல் யாவையும்
சுலவு தானை தொடர்தர வேட்டஞ்செய்
செலவு மேவிய செய்தி விளம்புவாம்.

இ-ள். சந்திரிகையை வீசுகின்ற நெடிதான வெள்ளைக்குடையையுடைய அரிச்சந்திர மகாராசனானவன், இறைச்சியை வாயிலேயுடைய புலிகள் முதலான எல்லாவற்றையும் வேட்டையாடுதற்குச் சூழத்தக்க சேனைகள் கூடத் தொடர்ந்துவரப் போகுதலான செய்கையை இனிச்சொல்லக்கடவோம். எ-று.

செல்லு மென்னப் பணிந்தவர் சேறலும்
வெல்லும் வெம்படை வேந்தன மைச்சர்காள்

கொல்லு மிந்தக் கொடுவினைக் கென்செய்கோ
சொல்லு மென்னத் தொழுதவர் சொல்லுவார்.

இ-ள். குடிகளைப்போங்க ளென்றுசொல்ல, அக்குடிகள் வணங்கிக் கொண்டு போனவுடனே, வெல்லத்தக்கவெவ்விய சேனைகளையுடைய அரிச்சந்திரமகாராசன், மந்திரிகளே! குடிகள் முதலானவைகளை யெல்லாம் கொல்லலான இந்தக்கொடியசெய்கைக்கு நான் என்னசெய்வேன்? நீங்கள்சொல்லுங்களென்று கேட்க, அம்மந்திரிகள் வணங்கிச் சொல்லுகிறார்கள். எ-று. (உ)

கூட்ட வேடருங் கோலுவை வேலுநா
மீட்ட முங்கொடு கானகத் தெய்தி
வேட்டை யாடிவி லங்கினை வாய்த்தனை
நாட்டை யோம்ப னலமெனக் கூறினார்.

இ-ள். நீர் கூட்டமான வேடர்களும், அம்புகளும், கூரியவேல்களும், நாய்க் கூட்டங்களுங் கொண்டு காட்டுக்குப் போய் வேட்டையாடி மிருகங்களை யெல்லாங் கொன்று, இந்நாட்டை இரட்சிக்கிறதே நன்மையென்று சொன்னார்கள். எ-று. (ங)

என்ற மைச்சரி யம்பலு மன்னவன்
நன்று நன்றென நண்ணிம னக்கொளாக்
குன்ற வாணரைக் கூட்டிக்கொ ணர்கென
நின்ற தூதர் தொழுதய னீங்கினார்.

இ-ள். என்று மந்திரிகள் சொல்லுமளவில், அரசனானவன் நல்லது நல்லதென்று ஒப்பிமனத்திலே வேட்டையாடச் சம்மதித்து, மலைகளிலேவாழ்கின்ற குறவர் - வேடர் முதலானவர்களைக் கூட்டி வாருங்க ளென்று சொல்ல, அது கேட்டு அங்கே நின்ற தூதர்கள் வணங்கிக் கொண்டு வெளியே போனார்கள். எ-று. (ச)

ஓடி னார்க ளுயர்வரைக் கானகம்
நாடி னார்களை நாமக ரங்களை
தேடி னாமென் றுசெப்பலுஞ் சிற்சிலர்
கூடி னார்துடி கொட்டின ரெங்குமே.

இ-ள். விரைந்து சென்றவர்களாய் உயர்ந்த மலைக்காடுகளெல்லாந்தேடிக்கண்டு நமதரசனானவன் உங்களை எங்கே யென்றுதேடு தலானனென்று சொல்லுமளவில், சிலசிலபேர்கள் எவ்விடத்துங் கூடிப் பம்பைகளை முழக்கினார்கள். எ-று. (ரு)

அந்த வேலை யருஞ்சுரம் யாவிலுங்
கந்தன் மேவு குறிஞ்சி கடத்திலுங்
குந்தம் வெல்சிலை கூன் றுணில கொண்டவண்
வந்த வேடர் வரவு விளம்புவாம்.

இ-ள். அப்படிக் கொட்டின பம்பைத் தொனிகேட்ட அப்போதே அருமையான பாலைநிலங்களெல்லா வற்றிலும், முருகனிருக்கின்ற குறிஞ்சி நிலக்காட்டிலும் நின்று கையீட்டி-வேல்-வில்-வளைதடியாகிய வைகளைக் கொண்டு அங்குவந்த வேட்டைக்காரர் வருகிறதைச் சொல்லுகிறோம். எ-று. (சு)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பீலி கட்டியதன் மீது மொய்த்தொளி பிறங்கு சொட்டைக ளணைத்துநீள், மாலை யிட்டுவளர் குஞ்சி துஞ்சநெல் வரிந்திறக்குமலர் சூடியே, காலி னிற்செருப்பு செருப்ப ணிந்துகழல் கட்டி நீடுக றங்கவை, வேல்பி டித்துடலம் வேர்வ ரும்பிடைவி ரைந்து வந்தனர னந்தனரே.

இ-ள். மயிலிறகுகளாலே செய்த சீராவை உடம்பிலே தரித்து, அதன் மேலே நெருங்கி ஒளிவிளங்குகின்ற இரருகளை இருபுறத்திலுங் கொண்டு (மயிலென்று தோற்ற) நீண்ட மாலைகளுமணிந்து, வளர்கிற தலையிலே தங்குவதாக நெற்கதிரும் மலர்ந்துவருவதான காக்கணம் பூவுஞ்சூடி, காலிலே போடத்தக்க செருப்பும் போட்டுக்கொண்டு, வீரக்கழல்களுங்கட்டி, நெடிதான துடிமுதலிய வாத்தியங்களு முழங்கக. கூர்மையான வேல்களுங் கொண்டு உடம்பெல்லாம் வேர்வையுண்டாக அநேகர்கள் அதிசீக்கிரத்திலே வந்தார்கள். எ-று. (எ)

கொலையெ டுத்தசம னுறைவ தற்குரிய கூடெ னத்தகைய தூணியிற், கலையெ டுத்தபிறை யனைய முத்தலைய கணிநி றைத்துவளர் மார்பினில், மலைய டுத்தனைய புயம ணைத்திறுக வார்விசித்துவரு காரெனச், சிலையெ டுத்துவிழி கனலெ ழக்கடிது சென்ற வேடுவர னந்தரே

இ-ள். கொலைத் தொழிலைக் கொண்ட யமனிருக்கிறதற்குத் தகுந்தகூடென்று சொல்லத்தக்க அம்புக்கூட்டிலே, எட்டுக் கலைகளைக் கொண்ட சந்திரனையொப்பான பாணங்களும். மூன்றுதலையையுடைய பாணங்களும் நிரப்பிக்கொண்டு. விசாலமான மார்பிலும். மலைகளைச சுமப்பது போலான தோள்களிலும் (பொருந்தச்) சேர்ந்துத் சோற்சட்டைகளை யிறுக்கிப் போட்டுக்கொண்டு, கையிலே வில்லுங்கொண்டு கண்களிலே நெருப்புத்தோன்ற நடந்துவருகிற மேகம்போல் விரைந்துவந்த வேடர்களநேகர்கள். எ-று. (அ)

பணில மொத்தபல கரைநி றைத்தபல கவச மிட்டுவெகுதுவசரா, யணிம யிர்க்கரடி மருக நிததிரள்கள் புலிமு தற்கிரியினளகவாய்க், கணிலெ திர்த்தவைகள் கரவி லுற்றவைக ணிபடக்கருவி யெரியுமக், குணிலெ டுத்துலக நிறைய வந்தனர்கள் கோடி கோடிகொலை வேடரே.

இ-ள். கோடானகோடி கொலைத்தொழிலைச் செய்கின்ற வேடர்கள், சங்குகளுக்கொப்பான பலகறைகளை நிரப்பியிருக்கிற பலவிதமான சட்டைக

ளுமணிந்து. அநேகங் கொடிகளை யுடையவராய் அழகிய மயிர்களையுடைய கரடிகள் - மதயானைக்கூட்டங்கள்-புலிகள்-பன்றிமுதலான அளவிலவாகிக்கண்ணிலே தோன்றினவைகளும், மறைவிலே யிருக்கின்றவைகளுந் துண்டங்களாகும்படிக் கோபித்துவீசுகின்ற குறுந்தடிகளுங்கொண்டு அந்நாடெல்லாம் நிரம்ப வந்தார்கள். எ-று. (கூ)

வென்றி மத்தகம தக்க விற்றினெடு வெண்மருப்பில்விளை முத்தமுங், குன்றி முத்துநிரை யொக்க வைத்தகன கோவை மார்பினிடை தாழவே, பன்றி யிற்பருமருப்பி னைத்தெழில்பயின்ற கண்டிகைய ணிந்துயிர், கொன்று தின்பதுவி ரும்பி வந்தனர்குடார வேடரொருகோடியே,

இ-ள். கோடாரி கையிலே கொண்ட ஒருகோடி வேடர்கள் வெற்றியைக்கொண்ட மத்தகத்தோடுகூடின மதயானைகளி னுடைய நீண்ட வெள்ளிய கொம்பிலுள்ள முத்துகளும் குன்றிமணிகளும் வரிசையாகச் சரிக்குச் சரியாகக் கோத்திருக்கிற கனமான கோவைகள் மார்பிலே தொங்க. பன்றியின் கொம்புகளை அத்துடனேசேர்த்து அழகுபொருந்திய கண்டிகையாக அணிந்து, உயிர்களைக்கொன்று தின்கிறதையே விரும்பிவந்தார். எ-று. (ய)

குடாரம் - கோடாரி.

பாச மிற்றிட விசித்த சங்கிலிகள் பற்ற றத்தமில மூன்றுவெம், பூச லிட்டனலெ னச்சி னந்துறு புணர்ச்சி யின்மிகுமு ணர்ச்சியாய்க், கேச ரிக்குருளை யென்ன வூளைபயில் கீத வோதைதிசை நாலினும், வீச முற்சலநெ ருக்க முற்றுவரு வெண்சு ணங்குசத கோடியே.

இ-ள். கட்டினகயிறு அற்றுப்போகவும், பூண்டசங்கிலிகள் பொறுத்து விட்டுப்போகவும். தங்களுக்குள்ளே கோபங்கொண்டு வெவ்வியதான கூச்சலிட்டுநெருப்புப் போற் கோபித்துக் கூடுகின்ற புணர்ச்சியிலே மிகுந்த நினைவுள்ளவைகளாய்ச் சிங்கக்குட்டிகள்போல் ஊளையிடுகிற பாட்டோசை யானது நான்கு திக்கிலுங்கேட்க நெருக்கங்கொண்டு முன்னேவருகிற வெள்ளைநாய்கள் நூறுகோடி. எ-று. (கக)

அந்த ரத்திடியெ னக்கு ரைத்துமுதி ராழி போலுறுமி வார்தடங், கந்த ரத்திறுக நின்று யப்பியிரு காலம டக்கியெதிர் தாவியே, தந்த மிற்கறுவு கொண்டு பல்பலத யங்க வெங்கனற டங்கணுற், சிந்தி டச்சுருவி முன்க திந்துவரு செஞ்சு ணங்குசத கோடியே.

இ-ள். ஆகாயத்தி லுண்டாகும் இடிபோற் குலைத்து முதிர்ந்த கடலைப் போலுறுமி தோல்வாரானது பெரியகழுத்திலே இறுகும்படி நின்று அதட்டி, இரண்டுகால்களையு மடக்கிக் கொண்டு முன்னே பாய்ந்து தங்களுக்குள்ளே வயிரங்கொண்டு அநேகங்கள் விளங்கவும், வெப்பாக நெருப்பு பெரிய கண்

ளிலே சிந்தும்படி சாடைகண்டு முன்னேவேகங் கொண்டுவருகிற சிவப்பு நாய்கள் நூறுகோடி. எ-று. (கஉ)

வெண்டை யங்கவடி தண்டை வாரெழில்வி ளங்கு வெங்கன களங்களுந், தண்டை கிண்கிணி சிலம்பு நின்றொலிதழங்கி டுங்கடிய தாள்களுந், துண்ட வெண்பிறை யிரண்டு நின்றெதிர்து ளங்க வெட்டெயிறு மாகவே, மண்ட லங்குழிய வந்த ஞாளிபல வண்ண முள்ள சத கோடியே.

இ-ள். வெண்டையங்களும். பலகறைகளும். மணிகளும், தோல் வாரிலே அழகுதோன்ற அணிந்தவெவ்விதான கனம் பொருந்திய கழுத்துகளும் தண்டை - கிண்கிணி-சிலம்பு ஆகிய இவைகள் நிலைகொண்டு ஓசைமுழங்கும்படியான கடினமாகிய கால்களும், துண்டமாகிய வெள்ளைச் சந்திர ரிரண்டு போலிருந்து முன்னே விளங்குகிற சிங்கப்பற்களுந்தோன்ற பூமிபள்ளமாக வந்த பலநிறங்களையுடைய நாய்கள் நூறுகோடி. எ-று. (கங)

வால்சு ருண்டுநுனி வால்வ ளர்ந்துதட மார்ப கன்றிடைசி றுத்துவெந், மேலு யர்ந்தணிசி ரம்ப ருத்துநெடு வீர வாளெயிறி லங்கிட, நாலு கின்றமணி யார மென்றநெடு நாசி மிர்ந்துமிளி தாழவே, காலு யர்ந்துகிர்வ ளாத்து மொய்த்துவரு கரிய நாய்கள் சத கோடியே.

இ-ள். வாலானது சுருண்டும், நுனியானது நீண்டும். பெரிய மார்பானது அகன்றும். இடுப்பு சிறுத்தும், முதுகுயர்ந்தும், அழகான தலைபருத்தும், நீண்ட வீரவாள்போற் சிங்கப்பற்கள் விளங்க, தொங்குகின்ற மணிமாலைகளைக் கடித்து மென்றுகொண்டு நெடியநாக்கு நீண்டும் இளைப்புத்தோன்ற கால்கள் உயர்ந்துநகங்கள் வெளுத்து நெருங்கிவருகின்ற கருநாய்கள் நூறுகோடி.எ-று.

நுனிவாய் என்பதற்கு முன்வந்த முகமெனக்கோடலுமாம். (கச)

நிலைபெ யர்ந்துலவு நீல மால்வரைக ணிகரெ னப்பிடரி னுகநிறீஇத், தலையி றக்கியகல் வாயில வெண்ணுரைத யங்க நாமுழுமிறங்கவே, யலையெ ழுஞ்சலதி யொலியெ ன ங்கதறி யணிகரும்பகடு மூக்கநீள், வலைக ளுந்திரையும் வாரும் வன்கயிறும் வந்த வன்சகடனந்தமே.

இ-ள். தங்கள் நிலைகளை விட்டுச சஞ்சரிப்பனவான நீலமால் வரைகளை ஒப் பென்னும்படி. பிடரியிலே நுகத்தடியை நிறுத்தித் தலையைத் தாங்கிக் கொடுத்து அகன்றவாயிலே வெள்ளைநுரைகள் விளங்க நாக்கு முழுநீளந்தொங்க அலைகள் கிளருகின்ற கடலோசை போல் முழங்கி அழகிய கறுத்த எருமைக் கடாக்க ளிழுத்துக்கொண்டுவர. நீண்ட வலைகளும், திரைகளும், தோல் வார்களும் வலிதான கயிறுகளும் கொண்டுவந்த வலிய பண்டிகள் அநேகங்கள். எ-று.

இமைமந்த ரமு தற்ற டங்கிரியு மிதினி டைப்படுசு ரங்களு, மமையும் வேடுவ ரனந்த கோடியோ ரணைந்து மேருவரை யன்ன தோர், சமைய மண்டபநி றைந்தி ருந்ததிரி சங்கு மைந்தனைவ ணங்கியே, யெமைய ழைத்தபணி விடையு ரைத்தருள்க வென்று மண்மிசையி றைஞ்சினார்.

இ-ள். இமையகிரி மந்தரகிரி முதலான பெரியமலைகளிலும், இந்த மலைகளுக்கு நடுவிலுள்ள பாலைவனங்களிலும் சஞ்சரிக்கின்ற அநேகங் கோடி வேடர்கள்வந்து, மேருமலைபோல்வதான ஒருவகைச் சபாமண்டப நிரம்பக் கொலுவிருந்த திரிச்சங்குபுத்திரனை அரிச்சந்திர மகாராசனைக் கண்டு வணங்கி, எங்களை வரவழைத்த பணிவிடைக்கு உத்தரவு கொடுத்தருள வேண்டுமென்று பூமியிலேபடிய வணங்கினார்கள். எ-று. (க௬)

சிங்க மானைபுலி பன்றி மான்மரைதி ரண்ட ணைந்துதிருநா டெலா, மெங்க ணும்பரவி வந்து தண்பயிரி யாவை யுங்கெடவ ழித்தலா, லங்க வற்றைவதை செய்வ தற்குமைய ழைத்த னன்கடிது சென்மெனா, வுங்க ளுக்குதவி யாக யாம்வருத லுண்டெனப்பல வுணர்த்தினான்.

இ-ள். நமது திருநாடு முழுதுஞ் சிங்கங்கள்-யானைகள்-புலிகள்-பன்றிகள் மான்கள் - கானக்குதிரைகளாகிய இவைகளெல்லாம் திரண்டுகூடிப், பரவிவந்து குளிர்ந்த பயிர்களெல்லாம் நாசமாகும்படி அழித்ததனாலே அவைகளையெல்லாம் கொல்லுதற்காக உங்களை வரவழைத்தேன்; நீங்கள் சீக்கிரம் போங்களென்றுசொல்லிப் பின்னும் உங்களுக்குதவியாக நானுஞ் சேனைகளுடனே வருகிறேனென்று பலவகைவார்த்தைகளுஞ் சொன்னான். எ-று. (க௭)

முன்ன டக்கவென வாடை யாபரண முற்றும் வேடுவர்த மக்களித், தன்ன வர்க்குவிடை நல்கி மண்டபம கன்று போனபின மைச்சரைச், சொன்னெ றிப்படவி ரைந்து நீர்நமது சேனை யோடினிது சென்மெனாத், தன்ன கத்திடைபு குந்து கற்புடைய தையல் வைகுமிட மெய்தினான்.

இ-ள். வஸ்திரா பரணங்கள் முழுதும் அந்த வேடர்களுக்குக் கொடுத்து முன்னே போங்களென்று உத்தரவுசெய்து. அவர்கள் அந்தச் சமையம் மண்டபத்தைவிட்டுப் போனபின்பு, மந்திரிகளைப் பார்த்து நீங்கள் நம்முடைய சேனைகளுடனே போகும் வழியே சுகமேவிரைந்து போங்களென்றுகூறி. தன் பதிவிரதா சிரோமணியான சந்திரவதி யிருக்குமிடமாகிய அரண்மனைக்குள்ளே போனான். எ-று. (க௮)

கரிய காழகம் விரித்து நித்துவரி கவச மிட்டுமணி முடிதரித், தரிய வெற்றியுடை வாள ணிற்சுரிகை யரைய ழுத்திவயி ரவிதரும், பெரிய பொற்சிலையெ டுத்து வாளிபல பெய்த தூணி*புறமெய்தவே, தெரிவை யர்க்கரசி யுடன்வ ரக்கடிது சென்று தேரின்மிசை யேறினான்.

---

* முதுகெய்தவே எனவும் பாடம்.

இ-ள். நீலச்சல்லடமும் நீலவஸ்திரமும் விரித்து உடுத்திக்கொண்டு இறுகலாகக்கட்டுகிற கவசமும்போட்டு, இரத்தினகிரீடமுஞ்சூட்டி, அருமையான ஜயத்தைக்கொண்டஉடைவாளும்-வேலும்-பாங்கும்-இடையிலே கட்டிக் காளி கொடுத்த பெரிதான பொன்மயமாயிருக்கிற வில்லுங்கொண்டு, அம்புகளநேகமடங்கக் கொண்டிருக்கிற கூடும் முதுகிலே பொருந்தக்கட்டி, பெண்களுக்கரசியான சந்திரவதிகூடவர ; விரைவிலேபோய்த் தேரின்மேலேறினான்.

கோளெ ழுந்தவென வெங்கெ ழுந்தனகு டைத்தி ரட்கடை யுகத்திலந், நாளெ ழுந்தகடல போல வெங்கணுந டந்த மன்னவர் பெரும்படை, வாளெழுந் தகட தெண்டி சாமுகம றைத்த மாமுகி னெருக்கியே, தாளெ ழுந்தன கயங்கள சென்றனதுரங்க முந்துற நடந்தவே.

இ-ள். கிரகங்களெல்லாம் ஒருசேரக்கூடினாற்போலக் குடைக்கூட்டங்களவந்து கூடின. யுகமுடிவிலே பொங்குகின்ற கடல்போல அரசர்களுடைய பெரிய சேனைகள் எங்கும் நெருங்கி நடந்தன. கறுத்த மேகங்கள் நெருங்கிக்கொண்டு சூரியன் எட்டுத்திக்கிலுந் தோன்றாமல் மறைந்தன. அந்தச்சேனை தூளிகள்கிளம்பின. யானைகளுஞ்சென்றன. குதிரைகளுமுன்னேநடந்தன.எ-று.

கோட கந்தருவி லாழி யுங்கரட குஞ்ச ரந்தருவி லாழியு, மாட கக்கவரி யுஞ்செ றிந்துபகி ரண்ட கோளமு மறைந்திட, மாட வீதிகள் கடந்து செம்பொன்மதில் வாயில் விட்டகல நண்ணியே,'வேடர் சேனையொடு கூடி னான்முக வேலை மைக்கடலில் வீழ்தல்போல்.

இ-ள். குதிரை வாயிலே வருகிற நுரையும். மதத்தைச் சிந்துகின்ற யானைவாயிலே வருகிற நுரையும், பொற்காம்புள்ள சாமரங்களும் நெருங்கி வெளியிலுண்டான அண்டகோளமு மறைந்துபோம்படி உயர்ந்திருக்கிற மாடவீதிகளைக்கடந்துபோய், செம்பொன் மயமான மதிலையுடைய கோட்டை வாயிலையும் விட்டுத் தூரப்போய் பாற்கடலானது கருங்கடலிலே போய்க் லப்பது போல் முன்சென்ற வேடர்கள் சேனைகளுடனே (அரசன்) போய்க் கூடினான். எ-று. (உக)

சிலையெ டுத்தபுய மன்னனைத்தொழுது சென்று வேடுவர் பரந்துநீ, ளலையெ டுத்தமலர் வாவி யும்வயலு மகழி யும்பொழில டங்கலும், வலையெ டுத்தருகு திரைவளைத்து மணி வாரொழுக்கியிடை கூவெனக், கலையு ழைத்திரள்கள் கடமை பன்றிபுலி கரடிகோளரி கலந்தவே.

இ-ள். வில்லைக்கொண்ட தோள்களையுடைய அரிச்சந்திரமகாராசனை வணங்கிக் கொண்டு போய் வேடர்கள் எங்கும் பரவுதலாய் நீண்ட அலைகளைக் கொண்ட தாமரைக்குளங்களிலும்-வயல்களிலும் - அகழ்களிலும்-அழகிய சோலைகள் முதலான எல்லா இடங்களிலும் வலைகட்டிப்பக்கத்திலே திரையும் வ

ளைத்து மணிவார்களையும் ஒழுங்காகச் சேர்த்து அவ்விடங்களிலே நின்று கூவென்று மிருகங்கள்போலோசைகாட்ட. உடனே கலைமான்-புள்ளிமான் - கூட்டங்களிலும், கடமைகளும்-பன்றிகளும்-புலிகளும்-கரடிகளும்-சிங்கங்களும் வந்துகூடின. எ-று. (உஉ)

ஏன மெண்குபுலி யாளி சிங்கமத யானை சம்புழைபுல் வாய்மரை
நான மோரிகட மாவ ழுங்கிரலை நாவி பூகமெலி யாகணில்
கான மேதிவரை யாடு டும்புமுயல் நால்வி சைத்திட கலந்தன
வான கத்திடை பறந்தெ ழுந்தபல வன்சிறைப்பறவை வர்க்கமே.

இ-ள். பன்றிகள்-கரடிகள்-புலிகள்- யாளிகள்-சிங்கங்கள்-மதயானைகள்-நரிகள்-மான்கள்-புல்வாய்கள்-மரைகள்-சவ்வாது பூனைகள்-ஓரிகள் - கடமைகள் ஆமைகள்-கலைமான்கள்-புழுகுபூனைகள்-கருங்குரங்குகள்-எலிகள் - காட்டுப்பசுக்கள்-அணில்கள்-காட்டெருமைகள்-வரையாடுகள் - உடும்புகள்-முயல்கள் - கால்வேகங்கொண்டு அவ்விடத்தே வந்துகூடின. எ-று. (உங)

வட்ட மாகவரி விற்கு னித்துவய மன்னர் விட்டபல வன்சரம், பட்ட மாவினம்வி ழுந்து நொன்றுடல் பதைத்தி றந்தன வனந்தமாற், றொட்ட வேல்குணி லெறிந்து வேடுவர் துணித்த மாவின மனந்தமால், விட்ட ஞாளிகள் கடித்தி ழுத்திடவிழுந்த மாவின மனந்தமால்.

இ-ள். வெற்றிகொண்ட அரசர்கள் வளைவாகக்கொண்ட வில்லைவளைத்து எய்த வலிதான அம்புகள்பட்ட மிருகக்கூட்டங்கள் விழுந்துழன்று உடம்புகள் பதைபதைத்துச் செத்தவைகளநேகம், வேடர்கள் கையிலேகொண்ட வேல்களையும்-வளைதடிகளையும்வீசி துண்டுசெய்த மிருகங்களநேகம், இவ்வேடர்கள் விடுகின்ற நாய்கள் கடித்திழுக்கவிழுந்த மிருகங்களநேகம். எ-று. (உச)

தண்ட லைப்படுவி லங்கி னிற்படுச ரங்க ளுந்துணிசி ரங்களுந், திண்டி றற்குமரர் மண்ட லத்தலைவர் செங்கை யிற்செறிவி லுண்டையும், விண்ட லத்திலுயர் வன்சி றைப்பறவை மீது பட்டுயிரி ழந்துபோய், மண்ட லத்திலிட மின்றி யெத்திசையும் வந்து வீழ்வன வனந்தமே.

இ-ள். காட்டிலேயுள்ள மிருகங்கள் மேலே பட்ட அம்புகளும், அறுபட்டதலைகளும் மிக்க வலிமையை யுடைய வீரர்களும், மண்டலிகர்களும், சிவந்த கையிலேகொண்ட வில்லினுண்டைகளும், ஆகாயத்திலுயர்ந்து பறக்கின்ற வலிய சிறகுகளையுடைய பட்சிகள்மேலேபட்டு உயிர்நீங்கினவாகிப் பூமியிலே எந்தத்திக்கிலு மிடமில்லாமல் வந்து விழுவன அநேகம். எ-று. (உரு)

வேல்கள் பட்டவொரு கோடி கோடிவிறல் வில்லுமிழ்ந்தசுடு பல்கொடுங், கோல்கள் பட்டவொரு கோடி கோடியெறி குணில்கள்,

பட்டவொரு கோடிதேர்க், கால்கள் பட்டவொரு கோடி கோடி
யெறி கவணு மிழ்ந்தபல கற்கள்பட், டோல மிட்டவொரு கோடி
கோடிசிலை யுண்டை பட்டவொரு கோடியே.

இ-ள். வேல்கள் பட்டுவிழுவன ஒருகோடானு கோடிகள். பலங்கொண்ட வில்லினின்றும் விடுகின்ற சுடுவதான வெவ்விய அம்புகள் பட்டு விழுவன, ஒரு கோடான கோடிகள், வீசுகின்ற வளைதடிகள் பட்டுவிழுவன, ஒருகோடிகள், தேருருளைகள் பட்டுநசுங்குவன ஒருகோடானகோடிகள். வீசுகின்றகவணினின்றுஞ் செல்லுகிற பலகறகள் பட்டுச் சத்தித்துக் கொண்டு விழுவன ஒரு கோடிகள். எ-று. (உசு)

துடைக ளற்றன சிரங்கள் பற்பல துணிந்து வீழ்ந்தகை துமிழ்
ந்தன, விடைக ளற்றகுட ரோடி யற்றனவெ ழுந்து தாவுமடி
யற்றன, நடைக ளற்றன நிணநெதெ றித்தன நரம்பு மூளைகள்
கழன்றன, கடை யுகததிலெழு கடலெ னக்குருதிக் கனமீ துறவெ
ழுந்ததே.

இ-ள். அநேக மிருகங்கள் துடைகளறுபடலாயின தலைகளநேகங்களாகத் துணிபட்டு விழலாயின, கைகளறுபடலாயின, குரங்குகள் இடுப்புகளறுபடலாயின, ஓடியோடிக் குடல்களறுபடலாயின. எழுந்து தாண்டுகிற கால்களறுபடலாயின, நடைகளோய்ந்தன, கொழுப்புகள்சிந்தின. நரம்பு மூளைகளும் சிந்தின, இப்படியாகும்போது யுகமுடிவிலே பொங்குகிற கடல்போலிரத்தசலம் ஆகாயத்தை யளாவும்படிப் பொங்கியது. எ-று. (உஎ)

அலி னுடற்களிறு மிமடிந்தபடி யகல்வ தற்கும்வழி யற்றன
புலியு டன்கரடி யுழைமடிந்துகலை போவ தற்கும்வகை யற்றன
யெலியெ ழுங்கணிலி றந்தி றந்துமுய லேகு தற்குமிட மற்றன
வலிய சிங்கமுட னாளி யிற்றுமரை வருவ தற்குநெறி யற்றவே.

இ-ள். இருள்போல்வதான சரீரத்தையுடைய யானைகள் மிகவுஞ்செத்துப்பெண்ணானைக ளோடுவதற்கும் வழிகளில்லையாயின. புலிகளுடனே கரடிகளும்-மான்களுமிறந்து கலைமானோடுதற்கு இடமில்லையாயின, எலிகளும்ஆமைகளும்-அணில்களும் செத்துச் செத்து முயல் போகுதற்கு இடமில்லையாயின, வலிமைகொண்ட சிங்கங்களுடனே ஆளிகளு மிறந்து மரைகள் செல்லுதற்கு வழியுமில்லையாயின. எ-று. (உஅ)

பட்ட பட்டவை யெடுத்து வேடுவர் பருத்த கட்டைக ளடுக்கியே
சுட்ட சுட்டதை தின்று தின்றுறு கணங்கி னம்பல பிணங்கவே
மட்ட றப்பருகி யிட்ட ளித்திலர்ம டுக்க ளிற்புனல ருந்தியே
யிட்ட மாலை புனை மன்னர் மன்னவனி ருந்த சூழலிடை யெய்தினார்

இ-ள். அப்படிச் செத்துக்கிடக்கிற மிருகங்களை வேடர்கள் எடுத்துக்கொண்டுபோய், பருத்த விறகுக் கட்டைகள் அடுக்கி அவற்றைச சுட்டு மாமிசங்களைத்தின்று (மீண்டும் மீண்டும் நாட்டுக்குப்போவதாகக்) கள்ளையு மிகக்குடித்து அந்தவெறியினாலே) தம்முடன்கூட நாமிக் கொண்டு நிற்கிற நாய்கூட்டங்களுக்கும் (மாமிசம்) கொடாமல், குளங்களிலேபோய் விடாய்கொண்டு, நீரைக்குடித்துக்கொண்டு,சந்தோஷமாக மாலை புனைந்த இராசாதிராசனான அரிச்சந்திரனிருக்கு மிடத்திற்கு வந்தார்கள். எ-று. (உகூ)

இவ்வி டத்துளவி லங்கி றந்தவெறி ன்லவி மைறுந்தும்வலை பிறியும், வெவ்வி டக்கணைக டாவி யுஞ்சிலைவி லங்கு போனவுள வாயினு,அவ்வி டத்தினிவ டப்ப தோவடவி புகுவ தோநகரி யணைவதோ, வெவ்வி டத்திஙிரு சேர்து மென்றவர்வி ளம்ப மன்னவனி யம்புவான்.

இ-ள். (ஐயனே!) இந்தக் காட்டிலுள்ள மிருகங்களெல்லா மிறந்துபோயின, இனிநாங்களெறிந்த வேலுக்குத்தப்பியும் வலைகளைக் கிழித்துக் கொண்டும் வெப்பமான விஷசலமூட்டின அம்புகளுக்குத் தப்பியும்சிலமிருகங்களோடிப்போனவைகளுள்ளன, ஆனாலும் நாங்கள் அவைகளோடிப்போன இடங்களுக்குப் போகிறதா, அல்லது நாங்களிருக்கிற காட்டுக்குப் போகிறதா? அயோத்தியாபுரிக்குக்கூட வருகிறதா, மற்றெந்த இடத்துக்குச் செவ்வனே போகிற தென்று அந்த வேடர்கள் கேட்க அதற்கு அரிச்சந்திர மகாராசன் சொல்லுகிறான். எ-று. (ஙO)

சென்ற சென்றதிசை தோறும் யாமினிது சென்று திண்டிறல் விலங்கெலாங்,கொன்று கொன்றவைமு டிந்த பின்வருக லாகுமுன்னியகு றிப்பெனக், கென்று தேரின்மிசை யேறி யேயிறைவ னேகனுங்கழலி றைஞ்சியே,நின்ற வேடுவர்பெ ரும்ப டைத்திரணெ ருங்கு கானிடை பரந்தவே.

இ-ள். மிக்க பலத்தையுடைய அந்த மிருகங்க ளெல்லாம் போகின்ற திசைதோறும் நாமும் ஐயங்கொண்டு சென்று, அவற்றைக்கொன்றுயாவும்இறந்தபின்பு வரத்தகும். இதுவே நான்கொண்ட கருத் தென்று அரசன் தேரின் மேலேறிச் செல்லும்போது. கூடநின்றவேடர்களுடைய பெரிதான சேனைக்கூட்டம் அந்தநெருக்கமான காட்டிலே எங்கும் பரவின.எ-று. (ஙக)

அரிபி ளந்தகரி பிளிறு மோசையிவை யறிது மென்றணுகியடர்குவார், கரிக வர்ந்ததிரள் விளவி னங்கனிக ழன்ற வென்றவணெருங்குவார், வரிநெ டும்புலிபி டித்தி டக்கதறு மானெ னச்சிலைவணக்குவார், பருமணற்கிழிய வுழுத வோதையிவை பன்றி யென்றவிடை துன்றுவார்.

இ-ள். சிங்கங்கள் கொல்லலான யானைகள் கத்துகிற ஓசையாகிய இவ்விதகுறிப்புகள் தெரிந்துகொண்டு போவோமென்று கிட்டிநெருங்குவார்கள்; யானைகளுண்ட திரட்சியான விளவினுடைய நல்லபழங்கள் பெய்து கிடக்கி

ன்றன வென்று அவ்விடங்களிலே நெருங்கிச் செல்வார்கள். வரிகளையுடைய நீண்டவேங்கைகள் பற்ற. அவற்றின்வாயி லகப்பட்டு மான்கள் கத்துகின்றன வென்று வில்லைவளைப்பார்கள். பருத்த மணற்றரைகள் பள்ளமாகக் கிண்டுகின்றபன்றிச்சத்தமாக விவையென்று அவ்விடங்களிலேநெருங்குவார்கள். எ-று.

குருக லம்புமொலி யிதுத டாகமிது குஞ்ச ரங்கள்கர மொண்
டுநீர், பருகு கின்றவொலி யிதுவெ னக்கடித்து பற்று வார்நெடிது
சுற்றுவார்,சருக லம்புமொலி செவியு ணர்ந்திரலை தானெ னக்கடிது
தாவுவார்,முருக லர்ந்தபொழி லவ்வ தாகமென முந்து வார்பகழி
சிந்துவார்.

இ-ள். வெள்ளைக்குருகுகள் சத்திக்கின்றசத்தமிது. குளமிது. யானைகள் துதிக்கையினாலே நீரைமொண்டு குடிக்கிற சத்தமிதுவென்று விரைவிலே போய்த்தொடருவார்கள், அதிகமாகச் சூழ்வார்கள். மரச்சருகுகள் காய்ந்தொலிக்கிற ஒலியைக் காதிலேகொண்டு இரலை மானோசை யிதுவென்று விரைவிலேதாண்டிச்செல்வார்கள். மணம்விரிகின்ற சோலையிலே ஆவிகம் சஞ்சரிக்கின்றதென்று முன்னே செல்லுபவராய் அம்புகளைவிடுவார்கள். எ-று.

மறை-ஆவிகம்-கானகக் குதிரை இவை ஒருபொருள், ஆவிகம், ஆகமென நின்றது இடைக்குறை. (ருரு)

மயின்மு ழக்கமிது கிளிமு ழக்கமிது வாரு மென்றுசில ரோடு
வார்,குயின்மு ழக்கமிது சிவல்மு ழக்கமிது கூட வாருமென நாடு
வார், வெயிலெ றிந்ததுவி ளங்கு மாமணியின் வேக நாகமென நீடு
வார், துயிலு ணர்ந்தநெடு மறைக ளித்ததிது தொடர்வ மென்றுப
லர் கூடுவார்.

இ-ள். இது மயிலோசை. இது கிளிசத்தம். வாருங்களென்று சிலபேரோடுவார்கள். இது குயிலோசை. இது சிவல் காடையோசை, பின்றொடர்ந்துவாருங்களென்று சிலரோடித் தேடுவார்கள். இதோ வெயிலொளி வீசுகின்றது, விளங்குவதான பெரிய இரத்தினத்தையுடைய வேகங்கொண்ட பாம்பு இதுவென்று நெடுந்தூரஞ் செல்லுவார்கள். இது தூங்கித் தெளிந்து வருகிற நீண்டமறை முழங்குகின்ற சிவ்யவோசை. அதன்பின்னே தொடர்ந்துசெல்லுவோமென்று பலரும் கும்புகூடுவார்கள். எ-று. (ருசு)

குன்று குன்றுதொரு நீல மேவியகு ளந்தொறுங்குளிர்வ னந்
தொறும்,சென்று சென்றடிதொ டர்ந்து டர்ந்துபல திக்கி னுஞ்செ
றிவி லங்கெலாம், கொன்று கொன்றுகுவை செய்தெ ரித்திடுகொ
டுங்க னற்படுகொ ழுந்தசை, தின்று தின்றுபுன லுண்டு வென்றி
புனை திண்பெ ரும்படை நடந்ததே.

இ-ள். மலைகளுள்ள இடங்கள் முழுதும் நீலமலர்கள் பூத்த குளங்கள் முழுதும் குளிர்ந்தகாடுகள்முழுதும் போய்ப்போய், மிருகங்களின் காலடிபிடி

த்துத் தொடர்ந்து பலதிசைகளிலு நெருங்கின மிருகங்களை யெல்லாம் கொன்றுகொன்று குப்பல்செய்து. ஏரிக்கத் தக்க கொடுமையான நெருப்பிலேசுட்டகொழுப்பு மாமிசங்களைத் தின்று தின்ற (தாகங்கொண்டு) நீரை குடித்துச் செயங்கொண்ட பலமானபெரிய சேனைகள் அக்காட்டுக்குள்ளே சென்றன.

இரவி னிற்பெரிதி ருண்டு சூன்மழையி ருண்டு துன்றிபுல கெங்கணும், பரவி யெய்தகணை யெதிர வரும்படிப டர்ந்த முண்டகவி றும்பினுற், றரவி னங்கரடி புலிகள் பன்றிகள் முங்கு டும்பெலிம டங்கல்மான், கரவி லுறுறிதனு ருறையு மென்றெயினா காடெ லாமெரி பரப்பினார்.

இ-ள். அந்தக் காட்டிடமெல்லாம் இராத்திரி காலத்திலும் அதிகமாக இருண்டு, கர்ப்பங் கொண்ட மேகங்களை போலவு மிருண்டு நெருங்குதலாய்ப் பரவி, எய்த அம்பு எதிரிலாத திறந்த நம்படியாகப் பரவின முள்ளுக் காட்டுப் பக்கத்திலே போய் அங்கேவைத்து. (கூட்டங்களா - கரடிகள்-புலிகள் - பன்றிகள்-ஆமைகள்-உடும்புகள் தலையுடைய சிங்கங்கள்-முதலான மிருகங்கள் ஒளித்து மறைவாய் இக்காட்டிலேக்குள்ளே இருக்குமென்று வேடர்கள் அந்தக் காடெல்லாம் நெருப்பை மூட்டினார்கள் என்று. (௩௬)

சண்ட வெந்தழல்ப சித்தழன் றுலகு தன்னை யுண்ணவெழு தன்மைபோல், கண்ட மொன்பதுமெ ரிந்திடத்தெறக டுங்கொழும் பொறிகள் சிந்தின, கொண்ட லிற்புகைப ரந்து சுற்றினகொ ழுஞ் சு டர்ப்படுகொ ழுந்துபோய், அண்ட முற்றனப ரந்ததந்தரம தற் குமப்புறமெ ழுந்ததே.

இ-ள். அப்போது வேகமுடையவெப்பமான நெருப்புத்தனக்குப் பசியுண்டாகிக் கொதித்து உலகமெல்லாம் புசிக்க எழுந்ததைப் போலநவகண்டங்களு மெரியச்சுடுகின்ற கடுமையான செழுமையுள்ள பொறிகள் சிதறலாயின, மேகங்களைப்போற் புகைகள் கம்மிப்பரவி எவ்விடத்துஞ் சூழ்தலாயின. நெருப்பிலுண்டாகிய கொழுந்து சென்று அகாயமெல்லாம் பரவின, (அதனுலுண்டான) புகையானது ஆகாயத்துக்கு அப்பாலுங்கிளர்ந்து சென்றன. எ-று. (௩௭)

சுட்ட செந்தழலில் வெந்து வெந்துடலை சுருண்ட பற்பலவி லங்கினம், கட்டுபாசமது விட்டஞாளிகள்க டித்திடச்சிலகழிந்தன, கெட்டழிந்துநிலை யற்று மீமிசைகி ளாந்தெ ழுந்துகுதி கொண்டுபோய், விட்ட மாமுனியி ருந்த சூழலிலவெ ருண்டு சிற்சிலவி ழுந்தவே

இ-ள். அநேககோடி மிருகக்கூட்டங்கள். அப்படிச் சுடுகின்ற சிவந்தநெருப்பினலே வெந்து வெந்து உடலெல்லாம் சுருண்டன, கட்டினகயிற்றை அவிழ்த்துவிடலான நாய்கள்போய்க்கடிக்க சிலமிருகங்கள் இறந்தன. சிலசிலமிருகங்கள், தமது நிலைகுலைந்து இருக்க இடமில்லாமல் மேலெழும்பி உயர்ந்து

தாவிக்கொண்டு போய்த் தங்களை அனுப்பின பெரியவிசுவாமித்திர முனிவரிருக்கிற இடத்திற்குப் போய்ப்பயந்து விழுந்தன. எ-று. (ரு௰)

மட்டி லாதனவி டுந்த னம்மவன்வ தைத்தனன்கொலிவ னத்திலே, பட்டி லாதனவெ ருண்டு வந்தனவெ னச்சி னம்பதை பதைத்திட, விட்டி லாவின்னவி ளைப்பல் யானெனவெ குண்டு விட்டவெகு வெவ்விலங், கெட்டி லொன்றுவரல் கண்டி லேமெனவி ருந்த மாமுனியி ரங்கினன்.

இ-ள். அங்கிருந்த பெரிய விசுவாமித்திர முனிவர் அம்மிருகங்களைக்கண்டு அளவில்லாத மிருகங்களை விட்டோமே அவைகளையெல்லாம் அரிச்சந்திரன் இந்தக் காட்டுக்குள்ளே கொன்றுவிட்டானே! சாவாதமிருகங்க ளல்லவோ பயந்து இங்கே வரலாயின வென்று கோபத்தினால் துடி துடித்து, அக்கோபத்தைஒருவகையே நீங்கியில்லாத செய்வார்கள். மாச ண்டாக்குகிறேனென்றுசொல்லிக் கோபித்து நானனுப்பின பல மானேனைக் கொடிய மிருகங்களில் எட்டிலொரு பங்குகூட இங்கேவருவதாக ... சாலையிடுயென்று மிகவும் கிலேசித்தார். எ-று. ...புகளை விடு (ரு௧)

கலிநிலைத்துறை.

கலங்க லென்றணி கரத்தினைற் கௌசிக னமைத்து
விலங்கி னங்களை நோக்கிநீர் வினைவிளைத் ததுவும்
அலங்கல் மன்னவன் வதைத்தது மாருயிர் வருந்த
நலங்கி வந்தது நவிலுமென் றுரைத்திட நவிலும்

இ-ள். விசுவாமித்திரர் மிருகங்களை யெல்லாம் பார்த்து நீங்கள் கலங்க வேண்டாமென்று கையாலமையச் செய்து. நீங்கள் போய் நாட்டை அழித்ததும் அதற்கு வெற்றிமாலை கொண்ட அரிச்சந்திரன் கொன்றதும் உங்களுடைய அருமையான உயிர் வருந்துதலாகி நொந்து இங்கே வந்தது முழுதும் சொல்லுங்களென்றுசொல்ல. மிருகங்கள் சொல்லத் தொடங்கின. எ-று.

கான டுங்கிடக் கண்புனல் சொரிந்திடக் கழுத்தின்
மேன டுங்கிட மெய்யெலா நடுங்கிட வீசும்
வான டுங்கிட மறலியைக் கண்டமன் னுயிரே
போன டுங்கிமா முனிவனைப் போற்றியே புகலும்.

இ-ள். கால்கள் நடுங்கவும. கண்களிலேநீர்சிந்தவும்.கழுத்துக்கு மேலான தலைநடுங்கவும்,உடம்பெல்லாம் நடுங்கவும் வீசுகின்ற வாள்கள் நடுங்கவும், யமனைக் கண்ட மிகுதியான உயிர்கள் நடுங்குவன போல் நடுங்கி, விசுவாமித்திர முனிவரைப்பார்த்துத் துதித்துச சொல்லலாயின. எ-று. (சக)

சென்ற னஞ்செழும் பயிர்களு முயிர்களுஞ் சிதைத்து
நின்ற னம்மெமை நெடுமுடி மன்னவ னேர்ந்து
கொன்ற னன்பிழைத் தெய்தினஞ் சிலசில குறையும்
என்ற வாலிரிந் தெய்திய விலங்குக ளெல்லாம்.

இ-ள். ஓடிவந்த மிருகங்க ளெல்லாம், நாங்கள் போனேம், போன வுடனே அங்குள்ள செழுமையான பயிர்களையும், அவைகளைக் காக்கின்ற உயிர்களையும் அழித்துக்கொன்று திரிந்தோம். பின்பு, எங்களை அந்த நீண்ட கிரீடாதிபதியான அரிச்சந்திரன் வந்துகொன்றான்; அதற்குப்பயந்த நாங் கள் தப்பித்துவந்தோம்; வாராமலங்குள்ள சிலதும் இந்நேரத்துக்குள்ளே குறைதலாய்ப் போகுமென்று சொல்லின. எ-று. (சஉ)

என்று கூறிடக் கௌசிக னெரியெழ விழித்து
நன்று நன்றென நகைத்துக்கை நாசியிற் சேர்த்தி
வென்றி வேந்தனை வெல்வது கருதியோர் வீரப்
பன்றி தன்றவப் பெருமையா லிமைப்பினிற் படைத்தான்.

இ-ள். என்று அம்மிருகங்கள் சொன்னவுடனே, விசுவாமித்திரர் நெரு ப்புத் தோன்றக் கண்களைத் திறந்துபார்த்து, நல்லது நல்லதென்று சிரித் துக் கையை மூக்கின்மேலேவைத்து, செயங்கொண்ட அரிச்சந்திரனை வெல் வதாக எண்ணி ஒருவீரத்தையுடைய பன்றியைத் தனது தவப்பெருமையி னாலே ஒரு க்ஷணநேரத்துக்குள்ளே சிருஷ்டித்தார். எ-று. (சங)

பொன்னி றத்துமெய் வெண்ணுறத் துகிர்புட்ப ராகம்
நன்னி றக்கண்ட நாலுகா லுஞ்செழும் பவளம்
சென்னி றத்தகண் செம்மணி செழுமுகம் பச்சை
அன்னி றக்குர நீலம்வச் சிரத்தெயி றதற்கே.

இ-ள். பொன்னிறமான உடம்பும், வெண்ணிறமான நகங்களும், புட்ப ராகம்போல் நல்ல நிறமான கழுத்தும், செம்பவளம்போல் நான்குகால்களும் மேகநிறமான கண்களோ சிவந்த இரத்தினம்போலவும், செழுமையான முக மோபச்சைநிறமாகவும், இருணிறமான உரோமமோ நீலமாகவும், வயிரம்போ ல்பற்களும் அதற்குண்டாயின. எ-று. (சச)

வயிற்றி னாற்பெரு மண்புவி மறைபட மறைக்கும்
எயிற்றி னாலுயர் விண்புவி யேழையு மெடுக்கும்
கயிற்றி னாலுயிர் கவர்ந்திடு காலனைக் கலக்கும்
பயிற்றி னார்பினை யென்செயா தப்பெரும் பன்றி.

இ-ள். அது தன்வயிற்றிலே பெரிதான மண்ணுலகமெல்லா மறையும் படி மறைக்கவல்லது; கொம்பினாலே உயர்ந்த ஆகாயத்தையும் உலகமேழையு மெடுக்கவல்லது; பாசத்தினாலே உயிரைப் பிடிக்கவருகின்ற யமனையும் கலங் கச்செய்யவல்லது; இப்படி யமனையும் கலங்கச்செய்ய வல்லதனால் இனி யென்னதான் செய்யமாட்டாது அந்தப் பெரிதான பன்றி. எ-று. (சரு)

அப்பெ ருங்கொடும் பன்றியை யருந்தவ னோக்கி
எப்பெ ரும்படைத் தலைவரு மெயினரு மிறக்கத்
தப்ப றக்கொலை செய்தரிச சந்திரன் றனனை
இப்பெ ரும்பொழில் கொணர்ந்துநீ போவென விசைத்தான்.

இ-ள். அப்படிப்பட்ட பெரிய கொடுமையுள்ள பன்றியை அரிதான தவத்தையுடைய விசுவாமித்திரர் பார்த்து, எங்குமுள்ள பெரிய சேனுதிபதிகளும், வேடர்களும், சாவும்படி தப்பாமற்கொன்று, அரிச்சந்திரனை இந்தப் பெரிதான காட்டுக்குள்ளே தொடர்ந்துவரும்படி கொண்டுவந்துவிட்டு நீஅப் பாற் போவென்று சொன்னுர். எ-று. (சசு)

என்று கூறிட விருடிமை வணங்கிநெட் டெயிற்றால்
குன்று நீறெழ வெற்றிநீள் குவடெலாங் குறைத்து
நின்று நின்றுசெங் கண்களா னெருப்புக விழித்துச்
சென்று சாடிற்று மன்னவன் சேனையைச் சிதற.

இ-ள். என்று சொன்னவுடனே அந்தமுனிவரை வணங்கிக் கொண்டு நீண்டகொம்பினாலே மலைகளெல்லாந் தூளாகக்குத்தி, உயர்ந்த மலைச்சிகரங்களையெல்லாம் பொடிப்பொடியாக்கி, அங்கங்கே நிலைகொண்டு சிவந்த கண்களிலே நெருப்புச்சிந்தத் திறந்துபார்த்துப்போய் அரசன்சேனைகளெல்லாஞ் சிந்தியோடும்படி அடித்தது. எ-று. (சஎ)

தலைக ளற்றிடத் தடங்கர மற்றிட வீரர்
குலைக ளற்றிடக் குஞ்சர மற்றிடக் கொலைஞர்
சிலைக ளற்றிடச் செஞ்சர மற்றிடத் திரைகள்
வலைக ளற்றிட வெற்றிற்று மாயவ ராகம்.

இ-ள். அந்தமாயாரூபமான பன்றி, தலைகளறுபடவும், நீண்ட கைகளறுபடவும், வீரர்களுடைய ஈரற்குலைகளறுபடவும், யானைகள் சாவவும், கொலை வேடர்களுடைய விற்கள் முறியவும், செவ்வையான அம்புகள் முறியவும், திரைச்சீலைகளும், வலைகளும், கிழிபடவும் சாடியது. எ-று. (சஅ)

பீறு மீரலும் பித்துநீள் குடர்களும் பிளக்கத்
தாளு நெஞ்சமு மற்றிட முடுவலைச் சாடி
ஆளு மற்றிரு தோளுமற் றங்கையிற் பிடித்த
வாளு மற்றிட வெற்றிற்று மாயவ ராகம்.

இ-ள். அந்த மாயப்பன்றி, வயிறும், ஈரலும், பித்தும், நீண்ட குடல்களும்சரிய, காலும் மார்பும் ஒடிந்து பிளக்க, நாய்களைக்கொன்று வாள்வீரரும் சாவ, அவ்வீரர்களுடைய இரண்டு தோள்களுமொடிய, அவர்களுடைய அழகிய கைகளிலேகொண்ட வாள்களுமொடிய மோதியது. எ-று. (சகூ)

கரிப டப்படச் சேனைகள் படப்படக் கவினப்
பரிப டப்படப் பரிக லம்படப் படப்ப சுங்கண்
ணெரிப டப்பட விரதங்கள் படப்பட விடைதாள்
அரிப டப்படச் சணங்குகள் பட்டன வனந்தம்.

இ-ள். யானைகளெல்லாமிறந்தன. அவைகளிறக்கவே சேனைகளெல்லாமிறந்தன. அச்சேனைகளிறந்தனபோலவே கடிவாளம்பூண்ட குதிரைகளெல்லாமிறந்தன. அவைகளிறந்தாற்போலவே அந்தக் குதிரை வீரர்கள்கொண்ட

ஆபரணங்கள் சிந்தவும், அப்படியாக இந்தப்பன்றியின் பசுமையான கண்களி லிருந்து நெருப்புப் பொறிகள் போய்ப் பகுந்தோறும் இரத்தங்க ளெரிந்தன. இப்படி இறந்தவைக ளனேகம். எ-று. (ருO)

கைத வம்மிது வென்றறக் கடற்படை கலங்கி
மைத வழ்ந்ததிண் குன்றின் மரத்தினு மறைந்து
பெய்த வேல்களுங் குணில்களுமதிமுறைமுக மழுவும்
எய்த வாளியும் பொடிபட விதிர்த்ததவ் வேனம்.

இ-ள். அதுகண்டு, இந்தப் பன்றி மாயாரூப மென்று மிகவும் கடல் போன்ற சேனைகள்கலங்கி, மேகங்கள் சஞ்சரிக்கின்ற மலைகளிலும், மரங்களி லும்போய் மறைந்துகொண்டு, எரிந்த வேல்களும், வளைதடிகளும் அர்த்த சந் திரன் போன்ற முகத்தையுடைய மழுக்களும், எய்த அம்புகளுந் தூள்தூளா கப் பண்ணிற்று அந்தப்பன்றி. எ-று. (ருக)

குடர்பி ளந்தன குறங்குகள் பிளந்தன கொடுங்கை
மடல்பி ளந்தன வாய்ப்பிளந் தனவிரு வகிராய்
உடல்பி ளந்தன வுரம்பிளந் தனதிர முருண்ட
கடல்கி டர்ந்தெனக் குருதிநீர் வனமெலாங் கலந்த.

இ-ள். இந்தச சேனைவீரருடைய குடல்களுஞ் சரிந்தன. துடைகளுமுறிந் தன. கொடியகைப்புறங்களும் பிளந்தன. வாய்களுங் கிழிந்தன, இரண்டு பிள வாக உடல்களும் பிளந்தன. மார்பும்பிளந்தன. தலைகளுமுருண்டன. கடல் பொங்கினாற்போல் இரத்தஜலம் அந்த வனமெல்லாம் பரவின. எ-று. (ருஉ)

சிரமி தந்தன திரள்பிண மிதந்தன நெறித்த
கரமி தந்தன கழன்றன கால்களுங் கண்ணும்
குரமி தந்தன குதிரைகண் மிதந்தன குணில்வேல்
சரமி தந்தன குருதியந் தடங்கட றனிலே.

இ-ள். இவ் வுதிரப்பிரவாகத்திலே, தலைகள் மிதந்தன, பிணக்கூட்டங்க ள் மிதந்தன, ஒடிந்த கைகள் மிதந்தன. கால்களும் கண்களும் வெவ்வேறாய்ப் போயின. குதிரைக்குளம்புகளும் மிதந்தன. குதிரைகளு மிதந்தன. வளைதடிக ளும், வேல்களும், அம்புகளு மிதந்தன. எ-று. (ருஙு)

தோளை வீழ்த்தது துடைகளை வீழ்த்தது தோள்சேர்
தாளை வீழ்த்தது தடக்கையை வீழ்த்தது தயிர்போல்
மூளை வீழ்த்தது தாழையுன் மாருத மோதப்
பாளை வீழ்ந்தென வீழ்ந்தன வேடர்தம் பற்கள்.

இ-ள். தோள்களையும் விழப்பண்ணிற்று. துடைகளையு மொடிந்து விழ ப்பண்ணிற்று. தோள்கள் தொங்குவதான கால்களையும் விழப்பண்ணிற்று. நீண்ட கைகளையும் விழப்பண்ணிற்று. தயிர்கட்டிகள்போல் மூளைகளும் சிந்தப்பண்ணிற்று. தென்னமரத்திலே காற்றுவீசப் பாளைகள் சிந்தினாற் போல் வேடருடைய பற்கள்சிந்தின. எ-று. (ருச)

கொலையெ டுத்தவே லெயினர்தங் குருதிநீர் பெருகி
மலையெ டுத்துநீண் மரங்களை முறித்தெடுத் தோடிச்
சிலையெ டுத்துவீழ் திரைகளும வலைகளும் வாரி
அலையெ டுத்தநீர் வாரியை யணைந்ததை யன்றே.

இ-ள். கொலை செய்யத்தக்க வேல்களைக்கொண்ட வேடர்களுடைய இரத்தஜலம் பெருகி, மலைகளை யுருட்டிக்கொண்டும், மரங்களை முறித்துக் கொண்டும்போய், விற்களையுங்கொண்டு, கட்டி விழுந்திருக்கிற திரைசசீலை களையும் வலைக்கயிறுகளையும் வாரிக்கொண்டு, அலைகளைக் கொண்ட நீர்க்கடலிற்பொய்க் கூடிற்று. எ-று. (ருரு)

சென்ற சென்றவத் திசையெலாம் பிணக்குவை செறியக்
கொன்று வீழ்த்திடக் குலைந்தக் கொடும்படைக் கூட்டம்
நின்ற திக்கினை நாடியே நிருபன்முன் னொருவன்
பன்றி யோடிய விசையினைப் பலமுறை பகர்ந்தான்.

இ-ள. தான்போன திக்குகளிலெல்லாம் பிணங்கலின்குப்பல்கள்நெருங்கும் படிகலென்று விழும்படி செய்யவே. அந்தக்கொடிதான சேனைக்கூட்டங்குலைதலாயிற்று. ஒருவீரன். அரசன்நிற்கிற இடத்தைத் தேடிக்கொண்டு போய் பன்றி யோடித்திரிகிற வேகத்தைப் பலவகையாகச் சொன்னான். எ-று. (ருசு)

அந்த வாசகங் கேட்டரிச் சந்திரன் முனிந்தே
எந்த வாறுவந் தெய்திய திவர்களை வதைத்த
தந்த வாறெது கூறென வரசனை வணங்கி
எந்தை கேளென வேடுவன் வகைவகை யிசைத்தான்.

இ-ள். அந்த வார்த்தையை அரிச்சந்திரன்கேட்டுக் கோபங்கொண்டு அப்பன்றி எந்தவழியாக வந்து கூடிற்று? இவர்களையெல்லாம் எந்த வகையாகக்கொன்றது? அதனைச சொல்லென்றுகேட்க, அவ்வேடுவன் அரசனை வணங்கிக்கொண்டு, என் சுவாமியே! கேட்டருளு மென்று வகைவகையாகத் தெரியச்சொன்னான். எ-று. (ருஎ)

வான மேழுமண் ணேழுமுன் மருப்பினு லெடுத்த
ஏன மோபுர மெரித்தவ னுலகெலா மெரிக்கும்
தான மோவுயிர் துரிசறச் சமனெடும் பன்றி
யான தோவது சிறிதும்யா முணர்ந்தில மையா.

இ-ள். ஐயனே! மேலேழுலகமும். இந்த உலகங்களேழும் முன்னே ஒரு கொம்பிலே தாங்கின (பெரிய) வராகந்தானோ! திரிபுரதகனஞ்செய்த பரம சிவனுடைய உலகங்களை யெரிக்கத்தக்க சக்தியுள்ளதுதானோ! உலகத்துள்ள உயிர்களின் வேரறுவதாக யமனனவன் நீண்ட வராகவடிவு கொண்டது தானோ! அந்தப் பன்றியை இத்தன்மையதென்று கொஞ்சமேனும் யாங்கள் தெரிந்துசொல்ல வல்லோமல்லோம். எ-று. (ருஅ)

தலைநி றம்பச்சை தன்னிறம் பொன்னிறந் தறுகண்
ணிலைநி றஞ்செழு மாமணி குரமிந்த்ர நீலம்

மலையி னும்பெரி தானதோர் வராகம்வந் தெய்திக்
கொலைபு ரிந்தது கூன்பெருங் கோட்டினு லென்முன்.

இ-ள். தலையினிறமோ பச்சை நிறம், அதனுடலின் நிறமோ பொன்னிறம்; அதன் கொடுங்கண்களின் நிலையானநிறமோ செழுமையான பெரிய இரத்தினநிறம், அதன்குளம்போ இந்திர நீலநிறம், இவ்வாறு மலையினும்பெரிதான ஒருவராகமானது வந்து நமது சேனையிலே கூடித் தனது வளைவான பெரிய கொம்பினுலே கொலைசெய்ததென்று சொன்னுன். எ-று. (ருக)

சேனை யும்பெருந் தேர்களுந திண்பரித் திரளும்
யானை யுங்கொடு முடுவலு மிறந்திட வெற்றிக்
கானெ லாம்பிணக் காடுசெய் தெய்திற்றுக் கண்டாய்
தேன லங்கலாய் தேரினைத் திரிதரு ளென்முன்.

இ-ள். நம்முடைய சேனைகளையும், பெரிய தேர்களையும், பலமான குதிரைக் கூட்டங்களையும், யானைகளையும்,கொடியநாய்களையும் சாவும்படிக்குதித்தொன்று காடெல்லாம் பிணக்காடாகப் பண்ணிக் கொண்டிருக்கின்றது, தேனெழுகின்ற மாலையணிந்த அரசனே! உமது தேரை அங்கே திருப்பியருளவேணுமென்று கூறினுன். எ-று.

கண்டாய முன்னிலையசை. (சுO)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்று பகர்ந்திட மன்னவர் மன்ன னெழுந்த கத்துடனே
நன்றிது நன்றென வங்கையொ டங்கைய றைந்துந கைத்துடனே
இன்றும டிந்தவ ரின்னுயிர் தம்மினு மெம்முயி ரோவலிதென்
றன்றுச வுந்தரி தந்தநெ டுஞ்சிலை யங்கையெ டுத்தனனே

இ-ள். என்று சொல்லவே, இராசாதிராசனுனவன் அப்போது தனக்குண்டான கோபத்துடனே நல்லது, இது நல்லதே! என்று ஒருகையுடனே ஒருகையை மோதிச்சிரித்து, இன்றையத்தின மிறந்தவர்களுயிரிலும் எங்களுயிர்தாநேு சிறந்ததென்று அப்பொழுதே, முன்னே சவுந்தரிதேவி கொடுத்த வில்லை அழகியகையிலே கொண்டான். எ-று. (சுக)

பாகரின் மிக்கவ னுன்மறை முற்றெதிர் பாகுகு றித்தவனும்
சாகர முற்றெழு பானுகு லத்திறை தாளிணை யைத்தொழுதே
நாகரி கஞ்சுட ராடர வப்பணி நாயகி பொற்சடிலர்
சேகரி பத்திர காளிகொ டுத்தரு டேரைந டத்தினனே.

இ-ள். தேர்ப்பாகரில் மிகுந்த சாமர்த்தியனுய், நான்கு வேதங்கள் முழுதுந்தெரிந்து செலுத்தத்தக்க சாரதித் தொழிலிலும் வல்லவனுனவன் கடலிலே தோன்றிவருகிற சூரியகுலத்தரசனுடைய பாதங்களிரண்டையும் வணங்கிக்கொண்டு, யோக்கியதையான காந்தியைக்கொண்ட ஆடுகின்ற சர்ப்பாபரணம்பூண்ட தேவியாகிய செம்பொன்னிறமான சடைத்தலையையுடைய பத்திரகாளி கொடுத்தருளின தேரைச்செலுத்தினுன். எ-று. (சுஉ)

படியு மிடிந்தது பொடியுமெ ழுந்தது பலபல பைம்பொழிலும்
மடிய விழுந்தன ககனம டர்ந்துயர் வரையுநெ ரிந்தனவான்
முடியு மதிர்ந்தது கதிருமறைந்தது முகிலுமு ழன்றதுநீ
ரிடியு முதிர்ந்தது கொடிமலை யுஞ்சுட ரிரதந டந்திடவே.

இ-ள். கொடிக்கட்டின ஒளியையுடைய தேர்செல்லும்போது, பூமியும் பள்ளமாயிற்று; (அதனால்) தூளிகளுங் கிளர்ந்தது; பற்பலவகையான காடுகளுஞ் சாய்ந்துவிழுந்தன. ஆகாயத்தையுமுட்டி உயர்ந்திருக்கிற மலைகளெல்லாம்நெரிந்தன; அண்டமுகடும் அதிர்தலாயிற்று; சூரியனுமறைதலாயிற்று; மேகங்களும் அலைவனவாயின; நீரும்-இடியும் சிந்துதலாயின. எ-று. (சுங)

மாறுப டச்சில தேரென வுற்றெழு மால்வரை யத்தனையும்
நீறுப டப்பட நாடிம ணிச்சுடர் நேமிநெ ரித்தனவால்
ஆறுப டப்பட வூறுபு னற்றிரை யாழியை யொத்திடவே
வீறுப டுத்துயர் கானம னைத்தையும் வேரொடெ டுத்தனவே.

இ-ள். இந்தத் தேருக்கு மாறாக, சிலவீரர்களுடைய தேரென்னும்படி பேர்கொண்டு வருவனவான உயர்ந்த மலைகளெல்லாம் தூளிகளாகி மேன்மேலுங்கிளர அந்தப்பன்றியைத் தேடிக்கொண்டு செல்லும்போது, இரத்தினகசிதமான தேருருளைகளின் கீழகப்பட்டவைகளெல்லாம் நெரியும்படிச்செல்ல, அதனால், ஆறுபோல் இந்தப்பிரவாக மேன்மையாக அந்த இரத்தப் பிரவாகம் அந்த இரத்தப்பிரவாகமானது ஊறுகின்றநீரையும் அலைகளையுமுடைய கடலை யொப்பாகப்பெருகும்படியாய் உதிர்ந்த காடுகளெல்லாம் வேரோடே பிடுங்கிக் கொண்டுசென்றன. எ-று. (சுச)

தங்கமு டித்தனி வெண்கவி கைத்திரி சங்குமக கற்கெதிரே
திங்களெ னத்தவ ளந்திகழ் முத்தொளி சிந்தும ருப்பதனால்
வெங்கண்ம தக்களி றும்பல விற்செரு வென்றப ரித்திரளும்
பங்கமு றப்பல பஞ்சுப டுத்திய பன்றியெ திர்த்ததுவே.

இ-ள். தங்கக்கிரீடத்தையும், ஒப்பில்லாதவெள்ளைக் குடையையுமுடைய திரிச்சங்கு புத்திரனான அரிச்சந்திரனுக்கு முன்னே, சந்திரனைப்போல வெண்மையாக விளங்குகின்ற ஒளிவீசுதலை யுடைய கொம்பினாலே, வெவ்வியகண்களையுடைய மதயானைகளையும். அநேகம் வில்லாளிகளைப் போர் செய்து வெல்லத்தக்க குதிரைக் கூட்டங்களையும், பங்கப்படப் பலவிதமான பஞ்சுபோற் பறக்கச்செய்கிற பன்றிவந்து முனைந்தது. எ-று. (சுரு)

வேயின்மி குத்தெழு மால்வரை பொட்டினு மீதுவி சைப்புறவே
பாயுமு கிற்குல மேழையு மப்பொடு பாரில்வி ழாசிதறும்
வாயினு ரைத்திசை நாலுமி றைத்துயர் வானுமி றைக்கும்விழித்
தீயின்ம ணித்திரை நீர்வட வைக்கனல் சேரவெ ரித்திடுமே.

இ-ள். மூங்கிற்காடுகள் மிகுதியாக வளர்வனவான உயர்ந்த எட்டு மலைகளின்மேலும் வேகங்கொண்டு பாயும், பின்னும் மேகக் கூட்டங்களேழையும் நடனே பூமியிலே விழும்படிச்சிதறுவிக்கும்; தன் வாயிலுள்ள நுரையை நா

லுதிக்கிலுஞ்சிந்தி உயர்ந்த ஆகாயத்திலும் சிந்தும்; கண்களிற் றோன்றுகிற நெருப்பினாலே, முத்துகளைவீசுகிற அலைகளுடனேகூடின கடலையும். வடவாக்கினியையும் ஒருசேர எரிக்கும். எ-று. (௬௬)

ஆடன்ம தத்திரு நாலுதி சைக்களி றனைவை யத்தனையும்
கோடத னிற்கர மீதுற வைத்துடல் கூசிவெ ருக்கொளவே
சேடன்மு தற்படு வாளர வத்தலை சேரந டுக்குறவே
ஓடும்வி சைத்தெழு நீள்புவி யைம்புன லூறநெ ரித்துழுமே.

இ-ள். வெற்றியினையுடைய மதங்கொண்ட எட்டுத்திக்கு யானைகளெல்லாவற்றையும், தன் கொம்பினாலே, அவைகளின் துதிக்கைகளிலே குத்தி (நோகச் செய்ய, அதனால் அவைகள்) உடம்பு கூசி நடுங்கிப் பயப்படவும், ஆதிசேடன் முதலாகவுண்டான ஒளியையுடைய பாம்பின்றலைகள் முழுதும்நடுங்கவும் ஓடும்; வேகங்கொண்டு கிளம்பும்; நீண்ட மண்ணுலகத்தை நீர்பெருகும்படிக்கிழித்து முகத்தினாலே கிண்டும், எ-று. (௬௭)

ஊறுப டுத்திடு பாகர்செ லுத்திய வோடைம தக்கரியை
நீறுப டுத்திடும் வீரர்ந டத்திய நீளிர தத்தினையே
கூறுப டுத்திடும் வாதுவ ரெற்றிய கோலவ யப்பரியைச்
சேறுப டுத்திடு மாமக ரத்திரள் சேருமளக்கரையே.

இ-ள். கொலை செய்யத்தக்க பாகர்கள் செலுத்தி வருகின்ற முகபடாத்தையணிந்த மதயானைகளை மண்தூளிலே புரளக் குத்தித் தள்ளும்; வீரர்கள் செலுத்திவருகிற உயர்ந்ததேர்களைச் சக்கைசக்கையாகப் பேர்க்கும் குதிரைவீரர்கள் அதட்டிச் செலுத்துகின்ற அழகான வெற்றிகொண்ட குதிரைகளைப்பெரியமீன்கள்கூடின கடலின்சேற்றிலே புதையசெய்யும். எ-று. (௬அ)

அனர்த்தம்வி ளைக்கவி டுத்தத வத்தனை ளித்தவு ரைப்படியே
சினத்துவெ றித்தும தக்கரி கற்கிதி டுக்கிட வுற்றனுகி
இனத்துர கத்தரு ணக்கன கத்திர தத்தினை யெற்றுகெனு
மனத்தினி னைத்துவ லத்தபு றத்தின்ம ருப்பையொ டுக்கியதே.

இ-ள். இப்படிக் கெடுதிசெய்ய அனுப்பின தவமுனிவர் கொடுத்த வுத்திரவின்படியே, (அப்பன்றி யானது) கோபங் கொண்டு, வெறி கொண்டதாய் மதயானைகளுங், குதிரைகளும் பயப்படும்படிப்போய். நெருங்கிக் கூட்டமான குதிரைபூண்ட சிவந்தபொன்மயமான அரசன் தேரை உடைக்க வேணுமென்று தன்மனத்திலே யெண்ணி, வலதுபுறத்திலுள்ள கொம்பைச்சாய்த்துக் கொண்டு சென்றது. எ-று. (௬௯)

உதித்தது ணைப்பிறை யொத்தம ருப்பையொ டுக்கவு ணர்ச்சிபெருக், கதித்தபெ ருத்தசி லைக்குள டுத்தொர்க ணற்கணை கொட்டுவிட, எதிர்த்தகி ருட்டியி னெற்றியின் முற்றியெ டுத்தகலக்கொடுபோய், விதிர்த்துட லுட்கிவெ ருக்கொள மற்றொரு வெற்பிடை யுய்த்ததுவே.

இ-ள். இரண்டு சந்திரப்பிறைபோன்ற கொம்பை ஒடுக்கிக்கொண்டு வந்த அப்பன்றி செல்லும்போது, அரசன், அச்சமயந்தெரிந்து நினைவு கொண்டு கெட்டியாகப் பருத்திருக்கிற தனது வில்லுக்குள்ளாக நெருங்கிச்சென்றுஒரு அக்கினி சாஜசுல்லியமான அம்பைத் தொடுத்துப் பூட்டிவிட்டபோது. அந்தக்கனற்களை உதிர்த்துவந்த பன்றியின் நெற்றியிலே பட்டு நெருங்கித் தூரக் கொண்டுபோய் அந்தப்பன்றியின் உடம்புநடுங்கிக்கூசிப் பயங்கொள்ளும்படி வேறேயொரு மலையிலேபோய் விழப்பண்ணியது. எ-று. (எ0)

உய்த்தது நீளிடை பதநுள யோசனை யுற்றெழு மால்வரைமேல்
வைத்தலும் வாய்வழி கக்கிய சோரியில் வட்டணை யாவுழலா[லாம்
மெய்த்தவன் வாழ்பொழி லூட்புக வோடலும் விட்டப தாதியெ
மொய்த்தன காவல னாபுடை சூழ்தர முற்கிளர் வாரிதிபோல்.

இ-ள். நீளமும் அகலமும் பதது யோசனை அளவுள்ள தாகக் கொண்டு மிகவுமுயர்ந்த மலைமேலே விழப்பண்ணிய தள்ளுமளவில, அப்பன்றியானது வாய்வழியேகக்கின இரத்தத்துடனே சக்கிராகிருதியாகச சுழன்றுஅந்தமெய்யானதவமுனிவர் வாசம்பண்ணுகிற சோலைக் குள்ளே செல்லுவதாக ஓடும் போது. முன்னதாகப் பொங்கி ஆரவாரித் தெழுகின்ற கடலலைபோல, முன்னே அஞ்சி அகன்ற சேனைகளெல்லாம் அரிச்சந்திர மன்னன் பக்க மெல்லாஞ்சூழ்வதாய் நெருங்கின. எ-று. (எக)

கடற்படை சுற்றியி ணைத்திறை பதமக முற்றணை யைத்தொழலுந்
தடக்கைய மைதது மனதநில லத்தற விர்த்திர தத்தினைமுன்
நடத்தியெ திர்த்திகி ருட்டிவ தைக்கந டுத்தனு வைத்துநிணக்
குடற்கெட றித்துவி றற்படை பட்டகொ லைக்கள முற்றனனே.

இ-ள். அந்தக்கடல்போன்ற சேனைகள் சூழ்ந்து முழங்கி அரசனுடைய தாமரைமலர்போன்ற பாதங்களிரண்டையும் வணங்கும்போது, தன் நீண்ட கையாலமையசெய்து, அவர்கள் மனத்திலுள்ள அலைவைநீக்கி எதிர்த்து வந்தபன்றியைக் கொல்ல எண்ணி, இரதத்தை முன்னே செலுத்தி, வில்லினடுவைக் கையிலே கொண்டு கொழுப்பும் குடல்களும் அறுதலாய் வெற்றி கொண்ட தனதுசேனைகள் வீழ்ந்துகிடக்கிற கொலைக்களத்துக்கு வந்தான். எ-று.

புரவல னப்படை கரிபரி பட்டதொர புதுமைக ளைத்தெரிசித்
தரகர விப்படி விளைவதெ னக்குன தருளினெ றிச்செயலென்
றிருகரம் வைத்திரு செவியைம றைதலெழின் முடியைய சைத்தெ
துரகந டத்திட விரைவினி மூத்தன சுடரிர தத்தினையே.

இ-ள். அரசனவன், அந்தச சேனைகளிலே யானைகளும்.குதிரைகளும் ஒப்பில்லாமல் செத்துகிடக்கிற ஆச்சரியத்தைக்கண்டு அரகரா! இப்படி ஆகிறதற்குச்சிவனே உன்னுடைய கிருபையின் வழியாகிய செய்கையே யென்று தனதிரண்டுகைகளாலும் இரண்டு காதுகளையுமூடி; அழகான தலையையும் அ

சைத்து, முன்னேசெல்வதாகக் குதிரைகளை முடுக்க, அக்குதிரைகள் மிகுந்த வேகத்துடனே விளங்குவதானதேரையிழுத்துக் கொண்டுசென்றன. எ-று.

ஏனம்வி ழுந்தயர் மால்வரை கண்டதி னேறியி ழிந்தகலப்
போனது ணர்ந்தடி மீதுதொ டர்ந்துபு காதவ னங்கள்புகுந்
தானன முந்திரு மேனியு நுண்பொடி யாடம டந்தையுடன்
மானவன் வந்தொரு வாசநெ டும்புனல் வாவிய ணைந்தனனே.

இ-ள். அந்தப்பன்றி விழுந்து, சோர்வதான உயர்ந்த மலையைக்கண்டு,அதன்மேலேறி யிறங்கி, பன்றி அதைவிட்டப்பாற்போனது தெரிந்துபோகாத காடுகளெல்லாம்போய் முகமுந் திருமேனியும் நுண்ணிதான தூளிகள் படியச்சந்திர மதியுடனே மகானுபாவனான அரிச்சந்திரன் வந்து நறுமணங்கொண்ட நீண்டநீர்க்குளத்தைக் கண்டான். எ-று. (எச)

கானின்மி சைந்தெழு தாமரை யிற்படர் காவிக ளிற்படரும்
தேனின்மு ழக்கொலி நாலுதி சாதிசை சேரவி யப்புறுமால்
மீனின்மு ழக்கொலி யூழியி னிற்கடை வேலையை யொப்பநுநீள்
வானின்மு ழக்கொலி போல்வன சக்கர வாகமி னைப்பதுவே.

இ-ள்- காடுபோல மேற்கொண்டுவருகின்ற தாமரை மலர்களிலும் பரவின நீலமலர்களிலும் மொய்ப்பனவான வண்டுகளின் பாட்டொலி யானவை நான்குதிக்குத் திசைகளிலுங்கேட்க, அதிசயத்தைத் தருவதா யிருக்கின்றது, அந்தக் குளத்திலுள்ள மீன்கள் அலம்புகிற சத்தமானது, ஊழிக்காலத்திலேகிளருகிற யுகாந்தக்கட லோசையை யொத்திருக்கின்றது, சக்கரவாகப் பட்சியினோசையானது ஆகாயத்து மேகத்தி னிடிமுழக்கம்போன் றிருக்கின்றது.

கானின் மிசைந்து-காட்டிலே தேனையுண் டெனுமாம். (எரு)

தமரநெ டுந்திரை யெறிகுரை யும்பல சகுனமு ழுங்கிரையும்
அமரம டந்தையர் குடையொலி யும்பல வருவிவி ழுங்கலியும்
திமிரம தக்கய நிறைவுற மொண்டறல் சிதறதிர் வுங்குரவம்
கமழ்தரு மவ்வன முனிவர்க மண்டலு களகளெ னுந்தொனியும்

இ-ள். முழக்கத்தையுடைய அலைகள் வீசுகிறசத்தமும், பல பட்சிசாதிகள்முழங்குகின்ற சத்தமும், தெய்வ கன்னிகள் வந்து நீராடுகிற சத்தமும், பல அருவிகளோடிவருகிற சத்தமும், இருள் நிறமான மதயானைகள் வந்துநிறைவாகத் துதிக்கையாலே நீரைமுகந்து சிந்துகிற நீரோசையும், குரவ மலர்கள் பரிமளிக்கின்ற அந்தவனத்திலுள்ள முனிவர்கள் நீர்முகக்கின்ற கமண்டலத்திலே நீர் களகளவென்கிற வோசையும். எ-று. (எசு)

இதுமுதல் இரண்டுபாடல்கள் குளகம்.

முறுகுகு டைந்தளி முரலமி குந்தொனி முதலைக டந்தமின்வ[ண்
தருகுசெ றுந்தொனி குடநிகர் வெள்வளை யகடுளை யுந்தொனிவெ
குருகிரி யுந்தொனி சிரல்கள்வி ழுந்தொனி கொடுவரி வந்துபுனல
பருகுமி குந்தொனி பறவைக ளின்றொனி பகலிர வுந்தணியா.

இ-ள். தேனைக்கிண்டியுண்டு வண்டுகள் பாட மிகுகின்ற சத்தமும், முதலைகள் தங்களுக்குள்ளே கூடிவந்து பக்கங்களிலே சீறிச்சண்டை பண்ணுகிற சத்தமும், குடத்துக்கொப்பான வெள்ளைச்சங்குகள் கருப்பவேதனைப்படுகிற சத்தமும், அந்த சத்தத்துக்கஞ்சி வெள்ளைத் குருகுக ளோடுகிற சத்தமும், மீன்குத்திக்குருவிகள் மீன்மேல்விழுகிற சத்தமும், புலிகள் வந்து நீர் குடிப்பதானமிருந்தசத்தமும், பட்சிகள் செய்கின்ற அதிக சத்தமும் பகலும் இராத்திரியும் நீங்காதிருக்கின்றன. எ-று. (எஎ)

அறத்தவர் வற்கலை யிற்றுவர் நித்த மலர்ப்பொழில் பொற்பிரசம்
மறத்தக ளிற்றின்ம தத்தினு மூக்கும டக்கவ ரிப்பொழிபால்
நிறத்திடு பச்சைம ணித்துகிர் வச்சிர நித்தில முட்களுல
கறுத்தவெ ளுத்தசி வத்தப சுத்தக ணிப்பதெ வர்க் கெளிதே.

இ-ள். துறவறத்தார்களுடைய (வற்கலையான) காவி வேஷ்டிகளுஞ் சிவப்பு, தினந்தோறும் அலர்தலையுடைய பூஞ்சோலைகளிலுள்ள பொன்னிற மானதேன் கோபத்தைக் கொண்ட யானைகளின் மதத்தினது பெருக்கு, இளமையான காட்டெருமை பொருகின்ற பால்,சோதியை யுடைய பச்சைஇரத்தினம்-பவளம்-வயிரம் - முத்து ஆகிய இவைகள் உள்ளேவிளங்குகிறதினாலே, அந்தக் குளத்துநீர் கறுத்ததென்றும் வெளுத்ததென்றும் சிவந்ததென்றும் நிச்சயித்து யாராலே எளிதாய்ச் சொல்லலாகும்; (முடியாதென்றபடி.) எ-று.

மேற்படி வேறு.

முளரிசெங் குமுத நீல முண்டகங் குவளை வெள்ளை
கிளர்நறு மலர்க ளெல்லாங் கிளையொடு மலியப் பூத்த
அளவிலா மதியு மீனு மருக்கரு மலிய வண்டம்
வளர்புவி தனிலும் வேதா வகுத்தன போன்ற வன்றே.

இ-ள். தாமரை-செவ்வல்லி-நீலம்-செந்தாமரை-கருங்குவளை இன்னமும் வெள்ளை நிறமாக விளங்குகின்ற பரிமள மயிர்க ளெல்லாந் தந்தமினத்தோடு கூடி, மிகுதியாக மலர்ந்திருக்கின்றன வானது, அளவில்லாத சந்திரரும்-நட்சத்திரங்களும் - சூரியர்களும் நிறைந்திருக்கின்ற ஆகாயத்தை, மனிதர் சஞ்சரிக்கின்ற வுலகத்திலே பிரமன் சிருஷ்டித்தன போலிருந்தன. எ-று. (எஅ)

மண்கொளா ததனு ணீரும் வளைகளு மலரு மீனும்
விண்கொளா ததனுள் வைகும் வெண்குரு கன்னநாரை
பண்கொள்வாய் வண்டு வைகும் பதுமத்தின் பரப்பு நோக்கின்
கண்கொளா மனமுங் கொள்ளா காவிபு மன்ன தேயால்.

இ-ள். குளத்தினிடமே போதாது, அதனுள்ளே நிறைந்திருக்கின்ற ஜலத்துக்கும்-சங்குகளுக்கும் - மலர்களுக்கும்-மீன்களுககும்-ஆகாயமே இடம்போதாது, அதிலே சஞ்சரிக்கின்ற வெள்ளைக் குருகுகளுக்கும்-அன்னங்களுக்கும் நாரைகளுக்கும், இராகத்தைக் கொண்ட வாயையுடைய வண்டுகள் மொய்ப்பதான தாமரை மலர்களின் விரிவைப் பார்த்தால், கண்களும்போதா; மனமும்போதா. நீலோற்பலங்களும் அத்தன்மையனவே யாகும். எ-று. (அ0

மீதெலாந் தரங்க மலைதின் மேலெலாங் கமலப் போது
போதெலாஞ் சங்கஞ் சங்கின் புடையெலாம் பொருந்து தாது
தாதெலாம் வண்டு வண்டின் றாளெலாஞ் செழுந்தேன் மற்றும்
ஈதலா வில்லை யந்த விரும்புனற் றடத்தி லம்மா.

இ-ள். அந்த நீர்மேலெல்லாம் அலைகள் புரள்தலா யிருக்கும், அவ்வலைக ள்மேலெல்லாம் தாமரை மலர்க ளசைதலா யிருக்கும்; அந்த மலர்களிலெல் லாம், சங்குகள் ஊர்வனவாயிருக்கும், அந்தச் சஙகுகளி னிடமெல்லாம் மகர ந்தங்கள் பொருந்தலாயிருக்கும்; அம்மகரந்தங்க ளெல்லாம்வண்டுகள் மொய் த்திருக்கும்; அந்த வண்டுகளின் கால்களெல்லாம் செழுமையான தேன்சிந்து வனவா யிருக்கும், இத்தன்மையனவே யல்லது. வேறுவகைகளில்லை; அந்தப் பெரிதான குளத்தில். எ-று. (அச)

பங்கய முகமுங் கண்ணும் பாதமும் பணைத்த பாரக்
கொங்கையுஞ் சைவ லப்பூங் கூந்தலுங் குமுத வாயும்
செங்கயற் கண்ணும் வள்ளைத் திருநெடுங் குழையுங் காட்டி
மங்கைபுட் கரணி யென்பாள் வள்ளலை யுள்ளங் கொண்டாள்.

இ-ள். பெண்ணாகிய புட்கரணியென்னும் பெயர்கொண்டவள் தாமரை மலர்க ளாகிய முகமும் கண்களும் கால்களும் பருத்த கனமான கொங்கைக ளும், பசியாகிய அழகிய கூந்தலும், குமுத மலராகிய வாவும், சிவந்தகயல்க ளாகிய கண்களும், வள்ளியிலையுங் கொடியமாகிய அழகிய நீண்ட காதுகளுங் காணச்செய்து பிரபுவான அரிச்சந்திரனைத் தன்மனத்திலே எண்ணி மோகி த்தாள்போலும். எ-று.

புட்கரணி நீர்க்குளம். (அஉ)

வரையடுத் தரிய சோதி மணிகொழித் தருவி பாய்ந்த
விரைமலர்ப் பொழிலி னீழல் வெண்டிரை மேன்மேன் மோதி
நிரைநிரைத் தரள முந்தி நெடுநிலா விரிந்த வண்டற்
கரையினை மன்னன் சார்ந்தான் கடலினை யருக்கன் சார்ந்தான்.

இ-ள். மலையிலிருந்து அருமையான ஒளியைக் கொண்ட மணிகளை ஒது க்கிக்கொண்டுவருகிற அருவியாறு பாய்வதான பரிமள மலர்களுள்ள சோலை யினிழலிலே, வெண்மையான அலைகளை மேலுமேலுமோதி, வரிசையாக மு த்துகளைவீசி, நெடிதான சந்திரிகை விரிவதான சேற்றைக் கொண்ட அந்தக் குளக்கரையை அரிச்சந்திரமகாராசன் சேர்ந்திருந்தான். அப்போது சூரியனு மேலைக் கடலைப்போய்ச்சேர்ந்தான். எ-று. (அங)

யானையுந் தேரு மாவு மிழிந்தொருங் கியாரு மீண்டித்
தேனையொத் தினிய வாவிச் செழும்புனல் குடைந்துண் டாறிக்
கானையுற் றிலங்கு தண்பூங் கடிபொழி லிடங்க டோறுஞ்
சேனையு மன்னர் தாமுஞ் செல்வனு மினிதி ருந்தார்.

இ-ள். யானைகளும் இரதங்களும் குதிரைகளும்விட்டிறங்கி எல்லாரும்ஒ ன்றுகூடித் தேனையொப்பாய் இனிக்கின்ற குளத்திலுள்ள செழுமையான நீ

ரிலே முழுகியும், குடித்தும் இளைப்பாறி, காட்டைச்சார்ந்து விலஙகு கின்றகு ளிர்ந்த பூமணத்தைக் கொண்ட சோலையினிடங்க ளெல்லாஞ்சேனைகளும் அரசர்களும் அரிச்சந்திரனும் சுகமே தங்கினார்கள். எ-று. (அச)

தாபமும் புனலுங் கொள்வார் தாபதர் வந்து மாதர்
தீபமு மயோத்தி வேந்துஞ் சேனையு மிருக்கக் கண்டு
கோபமுற் றழன்று மன்னு கோசிகன் கண்டா லுன்னைச்
சாபமிட் டெரிப்ப னீண்டு சார்ந்தது தகாதே யென்றார்.

இ-ள். தாபத்தையுங் கொண்டு, அதுதீர நீரையுட் கொள்ளவந்த சிலமுனிவர்கள் அங்குவந்து, பெண்களுக்கு விளக்கான சந்திரவதியும் அயோத்திக் கரசனான அரிச்சந்திரனும், அவன்சேனைகளும் இறங்கி யிருக்கிறதைப் பார்த்துக் கோபங் கொண்டு மனங்கொதித்து அரசனே ! விசுவாமித்திர முனிவர் கண்டால், உனக்குச் சாபங் கொடுத்து எரித்து விடுவார் ஆதலால், நீ இங்கே வந்திறங்கினது தகாதகாரியமென்று சொன்னார்கள். எ-று. (அரு)

யாமவற் கடிமை யன்றோ வெம்வயிற் சீற்ற மென்னோ
யாமவற் கிழைத்த தீங்குண் டென்னினுந் திருத்திப் பின்னைப்
போமதே கரும மென்னப் புரவலன் புகலக் கேட்டீண்
டாமதே காண்டி யென்ன வருந்தவ ரகன்று போனார்.

இ-ள். அதற்கு அரசன். நாஙக ளெல்லாம் அந்தமுனிவருக்கு அடிமையல்லவோ; எங்களிடத்திலே கோபங்கொள்கிறதற்கு நிமித்தம் என்ன; நாங்கள் அவருக்குக் குற்றங்கள்செய்த துண்டானாலும் அவரைச்சமாதானஞ் செய்துகொண்டு எஙகளுக்குப் போகிறதே காரியமென்று சொல்லக் கேட்டு அம்முனிவர்கள், ஆனால் இனியிஙகேநடக்கப்போகிறதைத் தெரிந்துகொள்ளக் கடவையென்றுசொல்லி தூரமாக விலகிப்போனார்கள். எ-று. (அசு)

மாதவ ரகன்ற பின்னர் மாலையம் படாத்து ணீங்கிப்
பூதல மென்னு மங்கைப் புதையிருட் படாத்துட் புக்காள்
மேதகு தவத்தின் மிக்கோன் வினைப்படாம் புகுது முன்னந்
தீதறு குணத்தின் மிக்கோன் சித்திரப் படாத்துட் புக்கான்.

இ-ள். அந்த மகாதவமுனிவர்கள் போனபின்பு. மாலைக்காலமாகிய அழகியபோர்வை நீக்கிப்பூமிதேவியானவள் மூடுகின்ற இருளாகிய போர்வைக்குள்ளானாள். அப்போது மேலான தவத்தினாலே, மிகுந்த விசுவாமித்திரருடைய தீவினைப்போர்வை வருமுன்னே, குற்றமற்ற குணங்களால் மிகுந்த அரிச்சந்திரன் சித்திரப்போர்வையான கூடாரத்துக்குள்ளே போயிருந்தான். எ-று.

கடாத்தடங் களிறு மாவுஞ் சேனையுங் கண்க டுஞ்ச
விடாப்படை வேந்தர் தாமு மமைச்சரும் விழிக டுஞ்சக்
கெடாப்பெருங் குணத்து வள்ளல் கிளிமொழி மயிலோ டம்பொற்
படாத்திடைப் பரியங் கதனுப் பஞ்சணைப் பள்ளி கொண்டான்.

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட்நகர், சென்னை-20.

இ-ள். மதத்தையுடைய உயர்ந்த யானைகளும் குதிரைகளும் சேனைகளும் நித்திரை செய்துகொண்டிருக்கவும், விடாமல் கூடவந்த அரசர்களும் மந்திரிகளும் நித்திரைகொள்ளவும், கெடுதலில்லாத பெரிதான குணத்தையுடைய பிரபுவான அரிச்சந்திரன் கிளிபோலும் வசனத்தை யுடைய மயிற்சாயலான சந்திரவதியுடனே அழகிய பொன் மயமான கூடாரத்திலே பஞ்சு மெத்தை யமைத்த கட்டிலின்மேல் நித்திரைசெய்யலானான். எ-று. (௮௮)

பூவல யத்தை மூடும் புதையிரு ளறாசெஞ் சூட்டுச்
சேவலார்ப் பெடுப்பக் கீழ்பால் செங்கதிர் வந்து தோன்ற
யாவரு முணர்ந்தெ ழுநதா ரிளங்கொடி யுடன் றுயின்ற
காவலன் றானு மற்றோர் கனவுகண் டுணர்ந்தெ ழுந்தான்.

இ-ள். பூமண்டலத்தை மறைப்பதாய்க் கவிந்த இருள்நீங்க, சிவந்த உச்சி கொண்டையையுடைய சேவல்கள்கூப்பிட, கிழக்குதிக்கிலே சூரியன்வந்து உதயமாகவே எல்லாருந்தெளிந்து விழித்தெழுந்தார்கள். அக்காலத்திலே இளங்கொடிபோன்ற சந்திரவதியுடனே நித்திரைசெய்த அரிச்சந்திர மகாராசன் தானும்வேறுபாடான ஒருசொப்பனங்கண்டு விழித்தெழுந்திருந்தான்.

மன்னவன் றுணுக்கங் கண்டு வல்லியும் பல்கா னோக்கி
என்னைநின் மனத்தி லெண்ண மியம்புகென் றிறைஞ்ச லோடும்
கன்னன்மென் மொழியா யானோர் கனவுகண் டுணர்ந்தேனென்னப்
பின்னரக் கனவி னீர்மை பேசெனப் பேசலுற்றான்.

இ-ள். கொடிபோல்பவளான சந்திரவதி அரசனுடைய (சொப்பனத்தினாலுண்டாகிய) திகிலைப் பலதரமும் பார்த்துத் தேவரீருடைய மனத்திலே ஆலோசனையென்ன சொல்லுமென்று வணங்குமளவில், கரும்புபோலு மிருதுவான சொல்லையுடையவளே! நான் ஒருசொப்பனங்கண்டு விழித்தேன் என்ன, பின்பு அந்தக் கனவினது குணத்தைச் சொல்லுமென்று (சந்திரவதி) கேட்கப்பின்பு சொல்லலானான். எ-று. (௯௦)

அமைச்சரைத் தூதரோடி யழைக்கவென் றரசன் கூற
இமைப்பினிற் சென்ற ழைத்தா ரியாவரும் விரைவின் வந்தார்
சமைத்ததீ வினையை வென்றான் றமரைய சரணம் போற்றி
எமைக்கடி தழைத்த வாறென் னிறைவனீ யருள்க வென்றார்.

இ-ள். அரசன், தூதுவர்களே? விரைந்து சென்று மந்திரிகளைக் கூட்டிவாருங்க ளென்று சொல்ல, அத்தூதர்கள் க்ஷணநேரத்திற் போய்க் கூப்பிட்டார்கள், அந்தமந்திரிகளுடனே வரத்தக்கவர்களெல்லாரும் வந்து, விசுவாமித்திரருண்டாக்கின மிருகவாதை முதலான பன்றி வேட்டையாகிய செய்கைகளைவென்றிருக்கின்ற அரசனுடைய தாமரைமலர்போலும் பாதங்களை வணங்கித்துதித்து, அரசே! நீர் எங்களை விரைவிலே அழைத்தகாரியம் யாது! அருளிச்செய்யவேண்டுமென்றார்கள். எ-று. (௯௧)

மற்றவர் கூறக் கேட்டு வையக மெல்லாங் காக்குங்
கொற்றவ னின்றி யானோர் கொடியதீக் கனவு கண்டேன்
உற்றது கேட்டு மேல்வந் துறுதிற மோமி னென்னாக்
கற்றடந் தோளி னோர்க்குக் கனவுநிலை கூற லுற்றான்.

இ-ள். அப்படி மந்திரி முதலாயினோர் சொல்லியதைக் கேட்டு உலகமெல்லாம் ஆளுகின்ற அரசனான அரிச்சந்திரன் இன்றையத்தினம் நானொரு கொடிதான கெடுதலுள்ள சொப்பனங்கண்டேன்; அப்படி நான் கண்டதை நீங்கள்கேட்டு இனிமேல்வந்து கூடுவதான காரியத்தைச் சொல்லுங்க ளென்றுமலைபோலுயர்ந்த தோள்களையுடைய மந்திரிமுதலானவர்களுக்குச் சொப்பனச்செய்கையைச் சொல்லலானான். எ-று. (௯௨)

என்னையீன் றெடுத்த தாதை யாக்கையோ டெய்தி யும்பர்
தன்னையுற் றிமையோர் நீக்கத் தாரகைத் தலத்த மர்ந்த
பின்னையான் பிரசக் கூந்தற் பேதைய ரைவர் தம்மை
முன்னையூழ் விதியி னாலே முயக்கமுற் றினிதி ருந்தேன்.

இ-ள். என்னைப் பெற்று வளர்த்த தகப்பனானவர் தேகத்துடனே சுவர்க்கலோகத்துக்குப் போய்த்தேவர்களால் தள்ளுண்டு நட்சத்திர மண்டலத்தில் நிலை கொண்டிருந்தபின்பு, நான் தேன்பொருந்திய மலர்களை முடித்த கூந்தலையுடைய பெண்க ளைந்துபேரைப் பூர்வபுண்ணியத் தொடர்ச்சியினாலே அவர்களுடனேகூடிச் சுகித்திருக்கக்கண்டேன். எ-று. (௯௩)

அருந்தியிற் புணர்ந்த மாத ரைவரி லருந்த வத்தோர்க்
கொருத்தியை யானே யீந்தே னொருத்திபோ யவனோ டுற்றாள்
ஒருத்தியூ னற்ற கன்றா ளொருத்திபோய்க் கண்ணி மூந்தாள்
ஒருத்திவிட் டென்னை நீங்கா திருமைக்கு முறுதி தந்தாள்.

இ-ள். அப்படி நான் ஆசைகொண்டு கூடியிருந்த பெண்களைந்து பேரில் ஒருரதியை அருமையான தவத்தை யுடைய ஒருமுனிவனுக்கு நானே சம்மதித்துக்கொடுத்தேன், இன்னொருத்தி தானேபோய் அம்முனிவனோடு கூடினாள், மற்றொருத்தி உணவு முதலியளவு மில்லாமற் போனாள், வேறொருத்தி தானே விலகிப்போய்க் கண்குருடானாள், போகாத ஒருத்தி மாத்திரம் அப்படிப் பிரிந்த என்னை விடாமல் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய நன்மையை எனக்குத் தருவதாயிருந்தாள். எ-று. (௯௪)

இப்படி யின்று கண்டே னிக்கொடுங் கனவி னாலே
எப்படி விளைவ தோவஃ துணர்ந்திலே னியம்பு மென்னா
அப்படி யரசன் கூற வடியிணை தொழுது நன்னூல்
தப்பற வுணர்ந்த கேள்விச் சத்திய கீர்த்தி சொல்வான்.

இ-ள். இப்படி (யென்னோடு ஒருத்திமாத்திரங்கூடியிருக்க) இன்றுகண்டேன், ஆதலால் இப்படிப்பட்ட கொடுமையான சொப்பனத்தினாலே இனி எவ்வாறுநடக்குமோ அதை நான்தெரியேன் சொல்லுங்க ளென்று அரசன்சொல்ல, நல்லசாஸ்திரங்களெல்லாம் வழுவாமலறிந்த கேள்வியையுடைய சத்தி

யகீர்த்தியென்கிற மந்திரி அப்படிச் சொன்ன அரசனுடைய பாதங்களிரண்டையும் வணங்கிச் சொல்லலானான். எ-று. (௩௫)

அருவினை விளைத்த தெல்லாங் கௌசிக னவனா லின்னம்
வருவினை மிகவு முண்டு வளநகர் நாடி ழந்து
திருவினை யிழந்து சேயுஞ் செல்வியும் வேறு வேறாப்
பெருவினை முடிப்பான் றன்னைப் பின்னையாம் வெல்வோ மென்றான்.

இ-ள். இங்ஙனம் அரிய கொடுஞ்செய்கைக ளுண்டாகச் செய்தது முழுதும் கௌசிகனென்கிற விசுவாமித்திரரே யாவர். அவராலே இன்னம் வருவனவான கொடுஞ்செய்கைகள் மிகவுமுண்டாகும், (நீர்கனவிலே கண்ட அருந்தவன்-விசுவாமித்திரர்; நீர் அருத்தியிற் புணர்ந்தமாதவர் ஐவர் - பஞ்ச சத்திகள்; அவருக்குக் கொடுத்த ஒருத்தி-பஞ்சபூதமாக நிற்கின்ற கிரியாசத்தியாகிய பொருள்; ஒருத்திபோய் அவனோடுற்றது வினைத்துணையாக நிற்கின்ற கிரியாசத்தியாகிய அரசாட்சியே; ஒருத்தியூணற்றகன்றது (பிராணன் முதலிய வாயுக்களாக நிற்கிற பராசத்தியே;) அதாவது. வளமையான நகர்நாடு முதலியவைகளைவிட்டுத் தேக மெலிவாகுதல்; ஒருத்தி போய்க் கண்ணிழந்தது - ஐம்பொறி நுகர்ச்சியாக நிற்கிற ஞான சத்தியே; அதாவது செல்வத்தையு மிழந்து பிள்ளையும் மனைவியும் வெவ்வே றாகுதல். இப்படி வெவ்வேறாகப் பெரிதான தீயசெய்கையை முடிக்கிற விசுவாமித்திரரைப் பின்பு நாமே வெல்லக் கடவோம், ஒருத்திநீங்காமலிருமைக்கு முறுதிதருகிறதாவது, விவேகம் இதை உயிர்க்கொளியாக நிற்கிற சிற்சத்தியென்று கொள்ள வேண்டும், "பனையாதி வினைப்பரிவு தொழிலாகி யுலகனைத்தும் படைத்துக் காத்துவனையாது தொடைத்துமறைத் தருளி" என்பதனா லுணர்க என்று சத்தியகீர்த்தி என்னும் முதன்மந்திரி கூறினான். எ-று. (௩௬)

அனையவை யமைச்சன் கூறவரசனை யரிவை போற்றி
எனையிழந் தாலு மன்னா வென்வயிற் றுதித்த மைந்தன்
றனையிழந் தாலு மிந்தத் தலமிழந் தாலும் வெம்போர்
முனையிழந் தாலுநீதி முறையொன்று மிழவே லென்றாள்.

இ-ள். அத்தகைய கனவின் பொருளை மந்திரி சொல்லவே, அப்போது அரசனைச் சந்திரவதியானவள் வணங்கித் துதித்து, அரசே! நீர் என்னை யிழந்துபோனாலும், என் வயிற்றிலே பிறந்த புத்திரனை யிழந்துபோனாலும், இந்தவுலகமெல்லா மிழந்துபோனாலும், வெவ்விதான சண்டை முனையை யிழந்துபோனாலும் தேவரீருடைய நீதிமுறை ஒன்றைமாத்திரம் இழவாதிருக்கக் கடவீரென்றாள். எ-று. (௩௭)

போர்முனையிழத்தல்-சண்டைபண்ண மாட்டாதுபோதல்.

என்றலு மமைச்ச ரெல்லா மிருகணீ ரருவிபாய
நின்றுநின் றழுது வாடி நெட்டுயிர்ப் புற்ற காலை
மன்றலந் தெரியன் மார்பன் வருந்தனீ ரொன்று தேற்றி
அனறவ னுறைந்தா னப்பா லடுத்தவா றெடுத்து ரைப்பாம்.

இ-ள். என்று சொல்லுமளவில், மந்திரிகளெல்லாம் இரண்டு கண்களிலும் நீரானது அருவி ஆறுபோலொழுகநின்று அழுதும் வாடியும் பெருமூச்சுவிட்டும் மயங்குகிறபோது வாசனை பரிமளிக்கின்ற அழகான மாலையணிந்த மார்பனான அரிச்சந்திரமன்னன் நீங்கள் வருந்தப்படாதிருங்க ளென்று அவர்களைத்தேற்றி அன்றையதினம் அங்கே தானே வாசமாயிருந்தான்; அப்பால் நடந்த விஷயத்தை யெடுத்துச் சொல்லுகிறோம். எ-று. (கக)

வேட்டஞ்செய் காண்ட முற்றிற்று.

விருத்தம்-கூகஅ

—•—

ஐந்தாவது

சூழ்வினைக் காண்டம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வென்றிவேன் மன்னவன் விட்ட வெங்கணை தைத்து வாயால்
துன்றிய குருதி சோரச் சுழன்றுட றுடிது டித்துக்
குன்றினைக் கடந்து சென்று கோசிகன் றன்பாற் போந்து
பன்றியாய் வந்த மாயம் பட்டபா டனைத்துஞ் சொல்லும்.

இ-ள். வெற்றிபொருந்தின வேலாயுதத்தையுடைய அரிச்சந்திர மகாராசன் எய்தவெவ்விதான அம்புபட்டு வாய்வழியேநெருங்கின இரத்த மொழுகச்சுழலுவதாகி உடலெல்லாம் பதறித் துடிதுடித்துத் தான்விழுந்த மலையைக் கடந்தப்பால் விசுவாமித்திரிருக்கு மிடத்திற்குப் பன்றி ரூபமாகவந்த மாயை போய் விழுந்து அங்கு தான்பட்ட பாடெல்லாம் சொல்லலாயிற்று. எ-று.

அந்தப்பன்றியாகிய ரூவம் என்பதுபொருள். (க)

என்னையா ளுடையா யுன்ற னேவலின் படியா னேகி
மன்னருங் கரியு மாவுஞ் சேனையு மாளக் கொன்றேன்
பின்னவன் விட்ட வம்பாற் சுழன்றியான் பிழைத்துப் போந்தேன்
உன்னரு ளுடையாற் கல்லா லுய்விண்டோ வென்ற தன்றே.

இ-ள். என்னை அடிமையாகக் கொண்டவரே! உம்முடைய உத்தரவின்படியே நான்போய் அரசர்களையும் யானைகளையும் குதிரைகளையும் சாவக்கொன்றேன். பின்பு அந்த அரிச்சந்திர னெய்த அம்பினாலே சுழலுவதாகத் தப்பியிங்குவந்தேன்; இனி உம்முடைய கிருபை பெற்றவனுக்கும் பிழைப்புண்டாகுமேயல்லாமல், மற்றோருக்குப் பிழைப்புண்டாகுமோ வென்றுசொல்லிற்று.

கோலத்தி னுரையைக் கேளாக் கோசிகன் வடவைச செந்தீச்
சீலத்திற் சிவந்த கண்ணன் சிந்தையு மனைய னாழிக்
காலத்திற் கடுங்கா வன்ன மூச்சினன் கடலிற் றோன்றும்
ஆலத்தின் கிளர்ச்சி யன்ன கோபத் தனலுன் றெழுந்தான்.

இ-ள். அவ்வாறுசொன்ன பன்றியின் சொல்லைக்கேட்டு விசுவாமித்திரர் வடவாக்கினி நிறத்தைப்போன்ற சிவந்தகண்களை யுடையவராகி மனமும் அத்தன்மையரேயாகி ஊழிக்காலத்திலே வீசுகின்றமேகமான காற்றுப்போல மூச்சுடையவராய்க் கடலிலேதோன்றின விஷம்பொங்கினாற் போன்ற கோப த்தை யுடையவருமாகிக் கொதித்தெழுந்திருந்தார். எ-று. (௩)

பேச்சினிற் கிளிபோற் செங்காற் பெயர்ச்சியிற் பெடைபோற் செ
வீச்சினின் மின்போற் சீற்ற மிகுதியான் முனிவன் விட்ட [ங்கை
மூச்சினிற் பிறந்தி ரண்டு மோகினி மாத ராரி
நீச்சினி னிலைத்து நிற்கு நீலமென் கொடிபோ னின்றார்.

இ-ள். பேச்சினாலே கிளிபோலவும், சிவந்த கால்நடையினாலே பெட் டையன்னம்போலவும், சிவந்தகைவீசுதலினாலே மின்னலைப்போலவும், கோப மிகுதியினாலே விசுவாமித்திரர் விடுகிற மூச்சிலே இரண்டு மோகினிப் பெண் கள்பிறந்து, நீந்துதலையுடைய கடலினிடத்தே நிலைசொண்டு நிற்பதான மிரு துவுபொருந்தின நீலக்கொடிபோல எதிரே நின்றார்கள். எ-று. (௪)

செந்திரு வமுதிற் றோன்றத் திரைகடற் பிறந்த நஞ்சில்
வந்திரு கருந்தி ருக்கள் வயங்குவ தென்ன நீலச்
சந்திரா தித்த ரென்னத் தலையின்மின் கறுத்த தென்ன
இந்திர நீலக் கொம்ப ரிரண்டுவந் தெழுந்த தென்ன.

இ-ள். செவ்வியலான லட்சுமி தேவி அமுதிலே பிறகக அலைகளை யுடைய கடலிலேபிறந்த நஞ்சைப்போல்பிறந்து இரண்டு கறுத்த லட்சுமிகள் விளங்குவது போலவும் கறுத்த சந்திரசூரியர்போலவும் ஆகாயத்திலுள்ள மின்னல் கறுத்தாற்போலவும் இந்திரநீலக் கொம்புகளிரண்டுவந்து தோன்றி னாற்போலவும். எ-று. (௫)

இதுமுதல் மூந்துபாடல்கள் குளகம்.

நீலவா ரிதியி னீலத் துகிர்க்கொடி நின்ற தென்னக்
கூலவா ரிதியி னீலக் கொம்பிரண் டெழுந்த தென்னப்
பாலவா ரிதிக டைந்த பஃறலை யரவங் கான்ற
ஆலவா ரிதியின் மூழ்கிக் கிளர்ந்தெழு மன்ன மென்ன.

இ-ள். கறுத்தகடலிலே நீலநிறமாய்ப் பவளக்கொடி நின்றாற் போலவும் கரைகளையுடைய கடலிலே முழுநீலக் கொம்புக ளிரண்டுவந்து தோன்றினாற் போலவும், பாற்கடலைக்கடந்த பலதலைகளையுடைய பாம்புகக்கின விஷக் கட லிலேமுழுகி அந்த விஷநிறமாக எழுகின்ற அன்னங்கள் போலவும். எ-று.

ஆலத்திற் பயின்ற கண்ட னழற்றிருக் கண்ணான் மாண்ட
காலத்திற் புறங்கொடாது காமனோ டொத்தலைந்து
நீலத்திற் கருகி வெம்பி நினைவில்வந் துதவி யன்பாய்ச்
சீலத்தி லுயர்ந்த காமன் சேனையிவிருவ ரென்ன.

இ-ள். விஷத்தினாலே விளங்குகின்ற கண்டத்தை யுடைய சிவபெருமானது திருநெற்றியிலுள்ள சிவந்த அக்கினிக்கண்ணினாலே (அநங்கன்) இறந்த காலத்தில் முதுகுகாட்டி ஓடாமல் அம்மன்மதனோடு கூட அலைவதாகி நீலத்தைப்போல் அந்தநெருப்பில் வெந்து கருகி வெதும்புதலாய் நினைவிலே தோன்றி அந்த மன்மதனிடத்தில் விசுவாசமாய் கலவியாசாரத்தினாலே உயர்ந்திருக்கிற மன்மதனுக்குதவியாகி அந்த மன்மதன் சேனையிலுள்ள இரண்டு பெண்கள் இவ்விருவருமென்று சொல்லவும். எ-று. (எ)

சுழிகொளும் பெருந்தண் கங்கை சூடினோன் றுளங்கு நெற்றி
விழிகொளுந் தழலான் மேனி வெந்தழிந் திறந்த காமன்
பழிகொளக் கருதிக் கால பாசமே விழியாக் கொண்டு
வழுவிலா வரங்கள் கொண்ட ரதியுமாற் றவளு மென்ன.

இ-ள். சுழிகளைக் கொண்டுள்ள பெரிதான குளிர்ந்த கங்கையை முடித்தசிவபெருமானுடைய விளங்குகின்ற நெற்றிக்கண் கொண்டே நெருப்பினாலேமேனிவெந்து சாம்பலாயிறந்த மன்மதன் பழியைவாங்க எண்ணிக் காலபாசத்தையே கண்களாகக்கொண்டு தவறுதலில்லாத வரங்களைக் கொண்டு தோன்றின ரதிதேவியும் அவளுக்கொரு சக்களத்தியும் போலவும். எ-று. (அ)

நாபி என்பது எதுகைநோக்கி நாவியெனவந்தது.

நாவியங் கமலத் துற்ற பிரமனை நகைப்பான் வேண்டி
வாவியங் கமலவாசக் கோசிகன் வாதிற் றீட்டும்
ஓவிய மென்ன நீல வோதிம மென்ன நீண்ட
காவியங் கண்ணார் காந்தட் கைதொழு திறைஞ்சி நின்றார்.

இ-ள். திருவுந்திக் கமலத்திலே தோன்றின பிரம தேவனைச் சிரித்துப் பழித்தற்காக அந்தத் தாமரைகுளத்தின் சார்பிலே வாசஞ்செய்கிற விசுவாமித்திரர் வாதுகொண் டெழுதின சித்திரங்கள் போலவும் கறுத்த அன்னங்கள் போலவும் நீண்ட நீலோற் பலம் போலும் அழகி தான கண்களையுடைய அந்த இரண்டு பெண்களும் காந்தள் மலர் போலுங் கைகளால் வணங்கி எதிரே நின்றார்கள். எ-று. (கூ)

தீதிலா மறைக ணான்குந் தெளிவுற வுணர்ந்த நீர்மைக் [ர்
கோதிலாக் குணத்தோர்க் கெல்லாங் கோபஞ்சண் டாள மென்பா
ஆதலான் முனிவன் மூக்கி னழற் சீற்றத் தாலே
போதலா லந்த மாதர் புலைச்சிய ராயி னாரே.

இ-ள். குற்றமில்லாத நான்கு வேதங்களையுந் தெளிவாகத் தெரிந்த தன்மையை யுடைய பரிசுத்தமான குணத்தை யுடைய பெரியோர்கள் யார்க்கும் கோப முண்டானால் அதுவே சண்டாள மென்று சொல்வார்கள்; ஆதலாலே அந்த விசுவாமித்திரருடைய மூக்கிலே பொருந்திய கோபத்தின் வழியாகப் பிறந்ததினாலே அந்த இரண்டுபெண்களும் சண்டாளிகளானார்கள். எ-று. (௰)

மாதரை முனிவன் பார்த்து வரவழைத் திருத்தி நானா
பேதமு மெழுத்துஞ் சொல்லும் பெருங்கலை யிருநா லெட்டும்

கீதமு நாத யாழுங் கின்னர முதல வாய
போதமும் வாரி நீரிற் கரைத்துடன் புகட்டினானே.

இ-ள். அப்பெண்களை விசுவாமித்திரர் பார்த்துஅருகில் வரும்படி அழைத்து இருக்கச்சொல்லி, நானுவகையான எழுத்துப்பேதமும், சொற்பேதமும் அறுபத்துநாலு கலஞானமும், கீதமும்; நாதமாகிற வீணையும். கின்னர முதலாகிய ஞானமும் அவ்விருவருக்கும் அள்ளியள்ளிக் கிரமப்படியே சொல்லித் தெரியப்படுத்தினார். எ-று. (கக)

ஈடிலா ரதரு மின்சொற் கின்னரா யாரு மேங்கப்
பாடினாற் றீய்ந்து லர்ந்த பயிரெலாம் விளைவு மல்கும்
வாடினா ளனேகம் பட்ட மரங்களுந் தழைக்கு முன்னாள்
வீடினா ருயிர்வந் துற்று வெள்ளெனபும் விதிர்வி திர்க்கும்.

இ-ள். ஒப்பில்லாத நாரதரும், இனிய சொல்லை யுடைய கின்னரர்களும் மற்றையாவர்களும் தோற்றுவிசனப்படப்பாடினார்கள், அப்படிப் பாடுதலினாலே தீய்ந்துகாய்ந்துபோன பயிர்களெல்லாம் விளைவுகொண்டு மிகுவதாயின, காய்ந்து வெகுகாலஞ் சென்றுள்ள மரங்களும் தழைகொண்டு தளிர்ப்பதாயின. முன்னாளிலே இறந்தவர்க ளுடம்பிலே யுயிர்வந்து மூடுதலாகிய வெண்மையான வெலும்பும் உரோமங்களும் புளகித்தலாயின. எ-று. (கஉ)

அந்தவே லையில யோத்தி யரசனைக் கண்டு மீண்டு
கந்தவார் சடில மௌலிக் கௌசிகன் றன்னைப் போற்றி
இந்தவா வியிலே மன்ன னெண்ணருஞ் சேனை யோடும்
வந்தன னென்ன வேதமா தவ ரெடுத்து ரைத்தார்.

இ-ள். அச்சமையத்தில் வைதிகரான மகாதவ முனிவர்கள் அயோத்தியாபுரிக்கு அரசனான அரிச்சந்திரனைக்கண்டுவந்து வாசனை பொருந்திய நீண்டசடாமுடியையுடைய விசுவாமித்திரரைத் துதித்து அந்தக் குளத்தினருகே அரிச்சந்திரமகாராசன் எண்ணுதற்கரிதான சேனைகளுடனே வந்திறங்கியிருக்கிறானென்று தெரியச்சொன்னார்கள். எ-று. (கரு)

புண்ணியந் திரண்ட யாக்கைப் புரவலன் வந்தா னென்ன
எண்ணிய வெண்ண மெல்லா முடியுமென் றேம்ப லெய்தாப்
பண்ணியன் மதுரைச் செஞ்சொற் பவளவாய்க் கரிய செவ்வேற்
கண்ணியர் தம்மை நோக்கிக் கௌசிகன் விளம்ப லுற்றான்.

இ-ள். புண்ணியந்தானே திரண்டுவடிவங் கொண்டாற் போலும் தேகத்தையுடைய அரசன் வந்திருக்கிறானென்று சொல்லவே, நாம்நினைத்த நினைவெல்லாம் இனிமுடிவு பெறுமென்று சந்தோஷங்கொண்டு இராகம் பொருந்தின மதுரமான செம்மையையுடைய சொல்லைக் கொண்ட பவளம்போலும் வாயும்கருமையுள்ள செவ்வையான வேல்போலுங் கண்களுமுடைய அவ்விரண்டு பெண்களையும் பார்த்து விசுவாமித்திரர் சொல்லலானார். எ-று. (கச)

பெடைநடை மடவீர் வாவிம் பெருங்கரை தன்னில் வந்த
படையுடை வேந்தன் பாற்போய்ப் பாடலா லுருக்கி வெற்றிக்
குடையினைக் கொண்மி னல்லாற் கலவியைக் கொண்மி னென்று
விடைகொடுத் திடலு மாதர் விரைவினிற் றொழுது போனார்.

இ-ள். பெட்டையன்னம்போலு நடையை யுடைய பெண்களே! நமது பெரியகுளக்கரையிலே வந்திருக்கிற சேனைகளை யுடைய அரசனிடத்திற்குப் போய் நீங்கள் பாடுகிற பாட்டுகளாலே அவனை உருகும்படிச்செய்து அவனுடைய வெற்றிக் குடையை வாங்கி வாருங்கள்; அது கூடாதாயின் அவனோடு கூடி இரமித்தலைக் கொள்ளுங்களென்று உத்தரவுகொடுத்தனுப்பு மளவில் அப்பெண்கள் விரைவிலே வணங்கிக் கொண்டு போனார்கள். எ-று. (கரு)

எடுத்தநன் மகர யாழு மேந்திய குழலுந தோன்ற
உடுத்தமே கலையுஞ் செம்பொற் சிலம்புநின் றோசை காட்டத்
தொடுத்தபூங் கோதை சோரத் துணைமுலைத் தும்பி விம்ம
அடுத்தபூஞ் சோலை நீங்கி யகன்புனற் பொய்கை புக்கார்.

இ-ள். அவ்விருவரும் கைகளிலே கொண்ட நல்ல மகர வீணையையும், புல்லாங்குழலுந் தெரியவும், உடுத்தின மேகலாபரணமும், செம்பொன்னாற் செய்த சிலம்புகளும் அவ்வவ் விடத்திலே நிலைகொண்டு தொனிகளைக்காட்டவும், தொடுத்தணிந்த பூமாலைகள் அவிழ்ந்துவிழவும், இரண்டு கொங்கைகளும் ஏளகியிறுகவும் தாமிருந்த பூஞ்சோலையைவிட்டு அந்த அகலமான நீர்க்குளத்தருகேபோய்ச சேர்ந்தார்கள். எ-று. (கசு)

கனைகழற் கடுங்காற் சேனைக் கடலினிற் சென்று புக்க
வினைநெடு வேக்க ணாரை யருள்பொழி விழியா னோக்கி
இனையரென் றவரைத் தேறு தையுற வெய்து மெல்லை
புனையிழை மாதர் வந்து புரவலற் போற்றி நின்றார்.

இ-ள். சத்தியாநின்ற வீரகண்டாமணிகள் கட்டின வேகங்கொண்ட கால்களையுடைய சேனைக் கடலுக் குள்ளே, போய்க் கூடின கொலைத்தொழில் செய்வதான வேல்போலுங் கண்களையுடைய பெண்களை, கிருபையொழுகுகின்ற கண்களாற்பார்த்து அவ்விருவரையும் இன்னாரென்றுதெரியாமல்சந்தேகங்கொள்ளுகிற சமயத்திலே, ஆபரணங்களை யணிந்த அந்தப் பெண்கள்வந்து அரிச்சந்திர மகாராசனைத் துதித்து நின்றார்கள். எ-று. (கஎ)

தோளுமத் தோளிற் சாத்துஞ் சுடர்மணி வலய முஞ்செந
தாளுமத் தாளில் வீரக் கழலுநேர் தாழ்ந்த கையும்
வாளுநீண் மாலை மார்பும் வதனமு நோக்கி மார
வேளுநே ரில்லான் றன்னைப் புகழ்ந்தனர் வியர்ந்து ளைப்பார்.

இ-ள். தோள்களும். அந்தத் தோள்களிலே யணிந்த காந்தி கொண்ட இரத்தின கேயூரங்களும், சிவந்த கால்களும், அந்தக் கால்களிலே பூண்ட வீரகண்டா மணிகளும், நேரே தொங்குவனவான கைகளும், (இடையிலே கட்டின) மந்திர வாளும். நீண்ட மாலையணிந்த மார்பும், முகமும் பார்த்து மன்

மதவேளு மொப்பாகாத அரிச்சந்திர மகாராசனைத் தோத்திரங்கள் செய்து அதிசயித்துச் சொல்லலானார்கள். எ-று. (கஅ)

யாணர்க்குள் யாண நின்னை யெய்துதற் கிழைத்த வேதா
வீணர்க்குள் வீண னெம்மை விதித்தவன் றிந்தி ரற்கும்
வாணர்க்கு மனநத ளுர்க்கும் வாய்த்தவா றேபோ னின்னைக்
காணற்குத் தொழற்கு வாழ்த்தக் கண்கைநாப் படைத்தி லானே.

இ-ள். உலகத்திலுள்ள அழகர்களிலே சிறந்த அழகனே! உன்னைச் சேர்வதற்குச் சிருஷ்டித்த பிரமனானவன் வீணர்களிலே அதிகமுகம் வீணனவன், யாதினாலென்றால், எங்களிருவரையும் சிருஷ்டித்த அப்போது தானே இந்திரனுக்கும் வாணசுரனுக்கும் ஆதிசேடனுக்கும் அமைத்தமைபோல உன்னைப் பார்க்கிறதற்கும், வணங்குதற்கும், துதிப்பதற்கும், கண்களும்-கைகளும் நாக்களும் ஆயிரம் ஆயிரமாகச் சிருஷ்டியாமற் போனான் ஆதலால். எ-று.

வையரின் னகரி செம்பொன் வடகிரி நினது பீடம்
வெய்யவ னினது தீபம் வேலையுஞ் சனநீரச சாலை
செய்யவ ளினது பாரி திங்களின் கவிகை செவ்வே
லையநின் பெருமை யெமமா லளவிடற் கரிதே யென்றார்.

இ-ள். உலகமுழுதும் உமக்குப்பட்டணம்; செம்பொன்னான வடமேருகிரி உமக்குச் சிங்காசனம்; சூரியன் உமக்கு விளக்கு; கடல் உமக்கு திருமஞ்சனமாடுகிற இடம்; இலட்சுமியே உமக்கு மனையாள்; சந்திரன் உமக்குக் குடை, ஆதலால், செவ்வையான வேலையுடைய ஐயனே! உம்முடைய பெருமையை எங்களால் அளவுசெய்துசொல்லுதற்கு முடியாது என்றுசொன்னார்கள். எ-று.

சொல்லிய மாற்றங் கேளாத் தோன்றலும் வியந்து நோக்கி
வல்லிநீர் யாரோ தூர் தான் வநதவா றெதீண் டென்றான்
அல்லியந் தொடையன் மார்ப விவ்வனந் தகத்து வாழ்வோம
புல்லிய சாதி யினப் புலைச்சியர் யாங்க ளையா

இ-ள். அப்படி அவ்விருவரும் புகழ்ந்து கொண்டாடினதைக்கேட்டு அரசனானவன் அதிசயித்துப்பார்த்து பெண்களே! நீங்கள்யார்! உங்களூர் எது என்னிடம் வந்தகாரியம் என்ன என்று கேட்டான். அதற்கு அப்பெண்கள்; அகவிதழ்களையுடைய அழகிய பூமாலையணிந்த மார்பனே! நாங்கள் இந்தவனத்தினிடத்திலே யிருக்கின்றவர்கள்; இழிவுள்ள சாதியான ஈனப் புலைச்சிகள் ஐயனே. எ-று. (உக)

வேதமா முனிவன் வைகு மேதகு சார னின்றும்
பாதமே பணிந்து நோக்கு மருத்தியிற் பதறி வந்தோம்
போதமு நெறியு மில்லாப் புலலியே நல்லி யாழுங்
கீதமுஞ் சிறிது வல்லேங் கேளெனக் கிளத்திப் பின்னர்.

இ-ள். வேதங் கைவந்த மகாரிஷியான விசுவாமித்திர ரிருக்கிற மேம்பாடான சார்பிலே கூடிநின்றும் உம்முடைய பாதங்களையே வணங்கி உம்மைப் பார்க்கவேண்டின ஆசையினாலே பதற்றத்துடன் வந்தோம்; ஞானமும் அதற்கேற்ற அனுஷ்டானமுமில்லாத இழிவானசாதியே யாங்கள் ஆனாலும், நல்ல வீணைபாடுதலும், சங்கீதமும் கொஞ்சந் தெரிந் திருக்கிறோம் கேளு மென்று சொல்லிப் பின்பு. எ-று. (உஉ)

மகரயாழ் வாங்கி நீங்கு மாடக முறுக்கிச் செம்பொற்
கிகரமா முலையிற் சேர்த்திச் செவியுற விசையெ ழீஇத்தந
நிகரிலா வமுதப் பாடற் பாணியி னிறுவிப் பின்னர்
பகர்தரு மிசைக ளேழும் வகைவகை பாடி னாரே.

இ-ள். மகரவீணையைக் கையிலே கொண்டு, தளர்ந்துள்ள முருக்காணிகளாலே தந்திகளை முறுக்கிப் பிரிவுசெய்து, செம்பொன் மலைச்சிகரம்போலுள்ளபெரிய ஸ்தனங்களிலே அவ்வீணையைச் சாத்திக்கொண்டு, காதுடனே கூடச்சுருதிகூட்டித் தமதுஒப்பில்லாத அமிர்த ரசங்கொண்ட பாடலைக் கைவழியிலே தோன்ற நிறுத்திப் பின்பு சொல்லலான ஏழிசைகளையுங் கிரமக் கிரமமாகப் பாடினார்கள். எ-று.

ஏழிசைகளாவன:—குரல் - துத்தம்-கைக்கிளை - உழை-இளி-விளரி-தாரம் என்பன. இவற்றை ஏழுசுரமெனவுங்கூறுவர். இவற்றினோசை யுவமை முறையே-மயில்-இடபம்-ஆடு-கொக்கு-குயில்-குதிரை-யானைஎனவும்; சுவையுவமை முறையே - பால்-தேன்-கிழான்-நெய்-எலம் - வாழை-மாதுளங்கனி-எனவும். வாசனை யுவமை முறையே-மௌவல்-முல்லை-கடம்பு - வஞ்சி-நெய்தல் பொன்னாவிரை, புன்னையெனவும்; அட்சரம்முறையே-ஆஅ-ஈஇ-ஊஉ-ஏஎ-ஐஇ-ஓஒ-ஔஉ-எனவும், மாத்திரை முறையே-நான்கு-நான்கு-இரண்டு-மூன்று-நான்கு மூன்று-இரண்டு எனவும். இவற்றக்கிறைவர் முறையே-விசுவாமித்திரன்-ஜமதக்கினி-சந்திரன்-சூரியன்-கௌதமன்- காசிபன் ஈசனெனவுங் கூறிவர். இன்னும் இதைப்பற்றிய எனையவகுப்பும் விரிவும்மிடற்றேசையாய்ப் பாடுகையில் இவற்றின் பிறப்பிட முதலியனவும் இசைநூலிற் பரக்கக்காண்க. (உங)

காவியங் கண்ணு மூடா கவிரிதழ் கானுங் கோடா
வாவியங் கமல மன்ன வதனமு நுதலு மேறு
தூவியந் தோகை நல்லார் சுவரின்மே லெழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப் பாடினா ருருக யாரும்.

இ-ள். நீலோற்பலம் போலழகான கண்கள் மூடுகிறதில்லை, இருபிளவாகத்தோன்றுகின்ற இதழ்களுந் தோணுகிறதில்லை, குளத்திலே அலருவதான அழகையுடைய தாமரைமலர் போலுமுகமும்நெற்றியும் ஏறுகிற தில்லையாக, இறகை யுடைய அழகைக் கொண்ட மயில் போலும் அப்பெண்கள் சுவரிலே யெழுதி யிருப்பதான சித்திரம் பாடுகிறது போலசையா திருந்து எல்லோருடைய மனமு முருகும்படிப் பாடினார்கள். (உச)

கரும்பினைக் கடிந்த தீஞ்சொற் காரினைக் கடிந்த கூந்தற்
பகும்பணைக் கொங்கை மாதர் பவளவாய்ப் பிறக்குங் கானம்
வரும்பனி மதியை நோக்கிக் கிண்கிணி வாய்கொண் டார்ப்பின்
அரும்பவி ழாம்பற் போதுள் வண்டிருந் தார்பப தென்ன.

இ-ள். கரும்பின் இரசத்தையும் வெல்லுவதான மதுரசசொற்களும், மேகத்தை வெல்லுவதான கூந்தலும். மிகவும் பருத்துள்ள கொங்கைகளுங். கொண்டபெண்களுடைய பவளம்போன்ற வாயிலேபிறக்கின்ற இசைப் பாட்டானது உதயமாகி வருகின்ற குளிர்ந்த சந்திரனைக் கண்டு கிண்கிணிபோல முக விலாசமாய்ப் பின்பு அவ்வரும்புதல் முழுதும்விரிகிற செவ்வல்லிப் பூவிலிருந்துவண்டுகள் பாடுவதுபோற் பாடினார்கள். எ-று.

ஆர்ப்பின் வண்டோசையினாலே அரும்பவிழெனக. (உரு)

இல்லையோ விமைத்த லென்பா ரெடாதுமை தொடாது வைத்த
வில்லையோ புருவ மாக விதித்தனன் வேதா வென்பார்
முல்லையோ முருந்தோ முத்தோ முறுவலை யறியோ மென்பார்
நல்லையே நல்லை யென்று நராதிபர் வியந்து ரைத்தார்

இ-ள். அப்போதுகண்ட அரசர்க ளெல்லாம் இப்பெண்களுக்குக் கண்களிமைக்கிறதில்லையோ வென்பார்கள், ஒருவ ரெடாமலும் தொடாமலும் இருப்பதான வில்லைத்தானோ பிரமதேவன் புருவமாகச் செய்திருக்கிறான் என்பார்கள், இவ்விரு வருடைய பல்வரிசைகள் முல்லை யரும்புகளோ! முருந்துகளோ! முத்துகளோ யாதொன்றும் சொல்லத்தெரிகிலோ மென்பார்கள். அடிபெண்களே! நீங்கள் நன்றாய்ப்பாடுகிறீர்கள்! நீங்கள் நன்றாய்ப் பாடுகிறீர்கள்!! என்று அரசர்களெல்லாம் அதிசயித்துச் சொன்னார்கள். எ-று. (உசு)

அட்டமா வனைத்தும் புள்ளு மாவிபெற் றேகு மென்பார்
சுட்டநீள் வனங்க ளெல்லாஞ் சோலையாத் தழைக்கு மென்பார்
பட்டவாள் வீர ரெல்லா முய்வகை பலிப்ப தென்பார்
வட்டமா மதிய மன்ன வதனத்தார் பாடல் கேட்டே

இ-ள். வட்டமான பெரியபூரணச் சந்திரன்போலு முகத்தையுடைய அப்பெண்கள் பாடுகிற பாட்டைக்கேட்டு, இனி நம்மாலே, கொல்லப்பட்ட எல்லாமிருகங்களும் எல்லாப்பட்சிகளும் உயிருண்டாய்ப் போகு மென்பார்கள், நம்மாலே சுடப்பட்ட நீண்ட காடுக ளெல்லாம் சோலையாகத் தழைக்கு மென்பார்கள், நமது கூட்டத்திலே இறந்துபோன வாள்வீரர்களெல்லாரும் பிழைக்கும்படி பலிதமாயிற்றென்பார்கள். எ-று. (உஎ)

நாடெலா மழிக்கக் கேட்டு நரபதி வெகுண்டு வேட்டை
யாடலால் வெருண்டு போய்த்தம் மாருயி ரோம்பித் துன்றுங்
காடெலாங் கரந்த மாக்கள் கன்னியர் மதுர கீதப்
பாடலால் வெளிப்பட் டுற்ற பறவையும் பறந்த வம்மா.

இ-ள். அப்போது நாடு முழுதும் அழிக்கிறது தெரிந்து அரிச்சந்திர மகாராசன் கோபித்து வேட்டை யாடுதலினாலே பயந்தோடிப்போய்த் தங்கள

ருமையான உயிர்களைக் காதத்துக்கொண்டு நெருங்கின காடுகள்முழுதும்போய் மறைந்த மிருகங்களெல்லாம் இந்தப்பெண்கள் பாடுகிற மதுர கீதங்களாலே வெளிப்படுதலாகிச சஞ்சரிக்கலாயின. மற்றப் பட்சிசாதிகளும் வெளிப்பட்டுப் பறந்து திரிதலாயின. எ-று. (உ௮)

மஞ்சலம் பிடியே றென்ன பாமுரசதிரு மோதைக்
கஞ்சலா லனந்தங் கோடி யசுணமா வனைத்து மாவி
துஞ்சலா தீண்டி மொய்க்கத் தும்புரு முதலோ ரெல்லாம்
இன்சொலி ரோசை யெய்த யாழிசை யாதென் றோர்வார்.

இ-ள். மேகங்கள் முழங்குவதான இடியேறுபோல் பெரியமுரசங்களொலிக்கின்ற ஓசைக்கு அஞ்சுத லாலே அனந்தங் கோடி அசுணப் பட்சிகளெல்லாம் உயிர் மாய்கிற தில்லாமல் கூடி நெருங்க, தும்புரு முதலானவர்களெல்லாம் இனிய சொல்லினையுடைய இவ்விருவர் பாட்டோசை கேட்டுஇந்தவீணைகானம் ஏதென்று ஆலோசிக்கலானார்கள். எ-று. (உ௯)

நல்லியன் மகர யாழி னாதமு மிடறு மொன்றப்
புல்லிய கீத வோசை செவிவழி புகுத லோடும்
வல்லியர் தம்மை நோக்கி மலர்த்திருங் கரம மமைத்து
மெல்லிய ளுனும் வெற்றி வேந்தனு மிகம கிழ்ந்தார்.

இ-ள். நல்ல இசை நூலிலக் கணத்திற் சிறந்த மகர வீணையின் நாதமும் கண்டத்தொனியும் ஒன்றாகக் கூடின பாட்டோசை காதுக்குள்ளே நுழைந்தவுடனே. சந்திரமதியும் வெற்றி கொண்டிருக்கிற அரிச்சந்திர மகாராசனும் அந்தப்பெண்களைப் பார்த்துத் தாமரைமலர்போலுந் திருக்கைகளாலே யமையச்செய்து அதிகமாகச சந்தோஷித்தார்கள். எ-று. (௩0)

மணியொடு கலிகஞ் செம்பொன் வளையெரி மணிபபொன னாரம்
அணிதுகில் பிறவு நீட்டிக் கொண்மென வளித்த லோடும்
பணிகளுந் துகிலும் பொன்னும் பெறற்கியாம் படர்ந்தே மல்லேம்
திணிசுடர் முடியா யாங்க டேடிய பரிசில் கேளாய்.

இ-ள். இரத்தினங்கள்பதித்தவுடனே கூடினகங்கணங்களும், செம்பொன்னாற் செய்தவளையல்களும, நெருப்புப்போன்றஇரத்தின மாலைகளும்.பொன்மாலைகளும் மற்றமுள்ள ஆபரணங்களும், உடுத்துகிற வஸ்திரங்களும் மற்றுங்கொடுக்கத் தக்கவைகளெல்லாங் கொடுத்துப் பெற்றுக் கொள்ளுங்களென்றுசொல்லுமளவில். ஆபரணங்களும் வஸ்திரங்களும் திரவியங்களும் பெறுதற்கு நாங்கள் வந்தோ மல்லோம், நெருங்கின ஒளியைக் கொண்ட கிரீடாதிபதியே! நாங்கள் வேண்டிவந்த வெகுமானத்தை நீர்கேட்கவேணும் அதாவது.

ஏத்திய பரிசி லாளர்க் கெண்ணிய வனைத்து நல்கும்
பார்த்திவ வியையெ லாநின் றிருவுளப் படியே யுள்ளேம்
மூர்த்திகண் மூவர்க் காகு முடிபுனை யநரா ளேநீ
சாத்திய தவளக் கொற்றக் கவிகையைத் தருதியென்றார்.

இ-ள். தேவரீரைத்துதித்த அரசர்களுக்கு அவர்கள்நினைத்தனவெல்லாந் தரத்தக்க அரசனே! இப்போது, கொடுக்கிற இவைகளெல்லாம் உம்முடைய திருவுளத்தின் சம்மதியாலே தருவதாதலால், அவைகள் வேண்டோம்; மும் மூர்த்திகளுக்குஞ் சந்தோஷ மாகும்படி நீர் வெற்றிமுடி சூடிக்கொள்ளுகின்ற அப்போதே பிடித்துக்கொள்வதான வெண் கொற்றக் குடையைக் கொடுக்க வேண்டு மென்றார்கள். எ-று. (ருஉ)

பழிவழி யொழுகா நீதிப் பானுவின் குலத்து வேந்தர்
வழிவழி வந்த கொற்றக் கவிகையை வழங்க மாட்டேன்
விழிவழி கண்ட வேறு கவிகையை விளம்பி லுங்கள்
மொழிவழி தருவே னென்று மொழிந்தனன் மன்னர் கோமான்.

இ-ள். பழிப்பான மார்க்கத்திலே செல்லாத நீதியை யுடைய சூரியகுல த்தரசர்கள் தலைமுறை தலைமுறையாகப் பிடித்துவருகிற வெற்றிக் குடையை நான்கொடுக்கமாட்டேன். உங்கள் கண்ணுக்கு நேராக இங்கே தோற்றுகின்ற ஏதேனு மொன்றைக் கேட்டால், உங்கள் சொல்லின் படியே தரமாட்டுவே னென்று அவ்வரசர்க்கரசன் கூறினான். எ-று. (ருங)

கனத்தவெங் காத லார்க்குக் கணித்தவ ராலே லாதவ்
வினத்தவ ரொருவ ராலே யின்பமுண் டாக வற்றோ
மனத்துளே குறித்து வந்த மணிக்குடை வழங்கா யேலந்
தனத்தினைத் தழுவி யின்பந் தருதியென் றவர்கள் சொன்னார்.

இ-ள். மிகுதியான வெப்பத்தைச் செய்கின்ற ஆசை கொண்டவர்களுக் கு அவர்கள் நினைத்த புருஷர்களாலல்லது அவர்களையொப்பான மற்றொருவ ராலே சுகமுண்டாக வல்லதோ! நாங்கள் மனத்திலே எண்ணிவந்த முத்துக் குடையை நீர் கொடாவிட்டால். எங்களுடைய கொங்கைகளையணைத்து எங்க ளுக்குச் சுகத்தைக்கொடுமென்று அவ்விருவருஞ்சொன்னார்கள். எ-று. (ருச)

வாட்பொரு கண்ணார் கூற மந்திரத் தலைவன் சொல்வான்
வேட்பன வில்லை யென்னு மெய்ந்நெறி வேந்தன் றன்பாற்
கேட்பன வறிந்து மக்குக் கிடைப்பன வுணர்ந்து நேளீர்
சேட்பட நில்லு மென்னத் தெரிவையர் செப்ப லுற்றார்.

இ-ள். அப்படி வாளையொத்த கண்களை யுடைய பெண்கள் சொல்ல ஆ லோசனையிற் சிறந்தவனை சத்தியகீர்த்தி சொல்லுகிறான்; ஆசைப் பட்ட பொருளை இல்லை யென்னுமற் கொடுக்கத்தக்க மெய்யான நீதிமார்க்கத்தை யுடைய அரசனிடத்திலே, கேட்கத் தக்கவைகளைத் தெரிந்து கேட்டால், உங் களுக்குக் கிடைக்கத்தக்கவைகளைத் தெரிந்து கேளுங்கள் (நீங்கள் சண்டாளி களாகையாலே) தூரமாக நில்லுங்களென்று சொல்ல, அதற்கு அப்பெண்கள் சொல்லுகிறார்கள். எ-று. (ருரு)

முன்பியாங் கருதி வந்த முழுமணிக் குடையு நல்காய்
பின்பியாங் குறித்த வின்பப் பெரும்பயன் றானுந் தாராய்

அன்பியா முன்மேல் வைத்த தவத்திலே போன தந்தோ
வன்பியா முன்பாற் கண்டோம் வள்ளன்மை கண்டி லேமால்.

இ-ள். முன்னே நாங்க ளெண்ணி வந்த முழுதும் முத்துகளாலாகிய குடையையும் நீர் கொடுக்கிற தில்லை; பின்பு நாங்கள் வேண்டின இன்பமாகிய பெரியபயனையும் நீர் கொடுக்கிறதில்லை; ஆதலால், நாங்களும்மிடத்திலேகொண்ட அன்பானது வீணாகிப்போயிற்று. ஐயோ! உம்மிடத்திலே கடின சித்தத்தைக் கண்டோமே யல்லது. கொடுக்குந்தன்மையை நாங்க ளெவ்வளவுங்காண்கிலோம். இதற்கென் செய்வோம் என்றார்கள். எ-று. (௫௬)

கொடுப்பன கொடுப்ப தல்லாற் கொடாதன கொடுக்க மாட்டார்
விடுப்பன விடுப்ப ரென்றும் விடாதன விடவு மாட்டார்
தொடுப்பன தொடுத்து நம்மாற் சொல்வன சொல்லி நுங்கட்
கடுப்பன கொண்மி னல்லா லகன்மினென் றமைச்சன் சொன்னான்.

இ-ள். சூரியகுலத் தரசர்கள் கொடுக்கத் தக்கவைகளைக் கொடுக்கிறதே யல்லது, கொடுக்கத் தகாதவைகளைக் கொடுக்க மாட்டார்கள். எக்காலத்தும் விடத்தக்கவைகளை விடுவர் விடத்தகாதவைகளை விடமாட்டார்கள் ஆதலால், நீங்கள் ஆலோசிக்க வேண்டியபடியே ஆலோசித்து உங்களாலே கேட்கத்தக்கவைகளைக் கேட்க உங்களுக்குத் தக்கபடியே பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாவிட்டால் போங்க ளென்று மந்திரி அதற்குத்தாஞ் சொன்னான். எ-று. (௫௭)

வள்ளலென் றடைந்தோ முன்பால் வந்திரந் தோர்க்கொன் றீயாக்
கள்ளனென் றறிந்தா லிங்கு வருகலங் கண்டா யென்றார்
உள்ளமுங் கண்ணுஞ் செந்தீ யுருத்தெழச் சினத்து வேந்தன்
தள்ளுமென் றருளிச் செய்தான் விளைவது தன்னை யோரான்.

இ-ள். நீர் கொடுக்கும் பிரபு வென்றெண்ணி வந்தோம்; உம்மிடத்திலே வந்துயாசகஞ்செய்வோர்களுக்கு எதுங் கொடாத வஞ்சக னென்று நாங்கள் முன்னேதானே தெரிந்திருப்போமானால் இங்கேவரமாட்டோம் என்றுசொன்னார்கள். அதற்கு மனமும் கண்களும் சிவந்த நெருப்புக்கொதித்துத் தோன்றகோபங்கொண்ட அரசனானவன், இவ்விருவரையுந் தள்ளி விடுங்களென் றுத்தரவுபண்ணினான். இனி நடக்கப்போகிறது தெரியாதவனாகி. எ-று. (௫௮)

பார்த்திவ னுரைப்பக் கேட்டுப் பப்பரர் நெருங்கிச் சீறித்
தீத்திரள் செங்கட் சிந்த நூக்குவான் செல்ல வேங்கிச்
சாத்திர நடுங்கக் கையுங் கால்களு நடுங்க மார்பிற்
சேர்த்திய யாழும் போகட் டிரிந்தனர் திசைம யங்கி.

இ-ள். அப்படி அரசன் உத்தரவுபண்ணவே, பப்பரரென்கிற ஓர்வன வீரர்கள்கேட்டு நெருங்கிவந்து கோபித்து, நெருப்புப்பொறிகள் சிவந்த கண்களினின்று சிந்த, அவ்விருவரையும் தள்ளிவிடுவதற்கு வருகிறதைக் கண்டு, பயங்கொண்டழுது உடம்பெல்லாநடுங்கவும்கைகளுங் கால்களுநடுங்கவும்மார்பி

லே அணைத்திருந்த வீணையையும் அங்கேதானே கிடக்கவிட்டுத் திக்குத் தெரியாமலோடிப்போனார்கள். எ-று. (ந௯)

போகட்டு-போகவிட்டு.

ஆறுகொண் டோடார் செல்லா வடவியிற் சென்று மேனி
மாறுகொண் டுதிரஞ் சிந்த மஞ்சினைப் பழித்த கூந்தல்
தூறுகொண் டீர்க்கச் சோர்ந்த துகில்கிழிந் தகலச் சாப
வீறுகொண் டேவி விட்ட முனிவன்முன் வீழ்ந்தார் வந்து.

இ-ள். வழிநோக்கிச் செல்லாதவர்களாய், ஒருவரும் போகாத காட்டுவழியிலேபோய், உடம்பெல்லாம் முட்கள் கிழித்து இரத்தங்களொழுகவும், மேகத்தைப்பழிப்பதான கூந்தலை மரத்தூறுகள்-செடித்தூறுகள் பற்றியிழுக்கவும், உடுத்தின வஸ்திரமுங் கிழிந்துபோகவும், சாபானுக் கிரகப் பெருமையைக் கொண்டு தங்களையனுப்பிவிட்ட விசுவாமித்திர முனிவருக்கு முன்னே வந்து வீழ்ந்தார்கள். எ-று. (ச0)

மேற்படி வேறு.

மண்டலந் தனிலிழுப் புண்டசெந் துகில்களு மாற டித்த
புண்டனிற் பொழிபசுங் குருதியுந் துவரிதழ்ப் பொருமு லுந்தான்
கண்டனன் கௌசிகன் கடையுகக் கனலெனக் கடிய கோபம்
கொண்டனன் வந்தவா றேதெனக் கோதைமார் கூற லுற்றார்.

இ-ள். விசுவாமித்திரர் பூமியிலே இழுபடுகின்ற சிவந்த வஸ்திரங்களையும், மார்பிலேகாயமானபுண்ணினின்று சிந்துகின்றபசியஇரத்தங்களையும், சிவந்தஇதழ்கள் பொருமுதலையும் தாமேதம்முடைய கண்களாலே கண்டார்; அப்படிக்கண்டவுடனே, யுசமுடிவிலே தோன்றுகின்ற நெருப்பைப் போல் கடுமையான கோபங்கொண்டார்; நீங்களிப்படி வந்ததற்குக் காரணமென்னவென்று கேட்க, அப்பெண்கள் சொல்லத் தொடங்கினார். எ-று. (சக)

ஐயகே ணின்னருட் படியினு லரசன்மாட் டணுகி நின்றே
பையவே ழிசைகளும் பாடிநீ சொன்னவப் பரிசு ரைத்தேம்
கையனெங் களையடித் துமரெனச் செய்தவக் கண்ட னத்தால்
உய்யவும் போகுமோ வரையுமுண் டோவெமக் குயிரு முண்டோ.

இ-ள். ஐயனே! கேளும்; உம்முடைய உத்திரவின்படியே, அரசனிடத்திற்போய்க் கிட்டிநின்று மெள்ள எழுவித இசைகளையும்பாடி, நீர் கேட்கச்சொன்ன அப்படியே கேட்டோம்; அதற்கு அந்த வஞ்சகன் எங்களை உமதடியார்களென்று அடித்து, அவன் பண்ணின தண்டனைகளுத் தப்பிப் பிழைக்கவுங் கூடுமோ; சொல்லத்தான் சொல்லுண்டா; எங்களுக்கு உயிர்தானுண்டா.

எனவுரைத் திடவெயர்த் திடியிடித் தெனநகைத் திருக ணும்
கனலெறித் திருபுடைக் கடமனைத் தும்புகை கடிது மூடச்
சினமிகுத் திறைவனுக் கிடர்விளைத் திடுவதே செயலெ னத்தன்
மனநினைத் தருமறைத் தவமுனித் திரளுடன் வரநடந்தான்.

இ-ள். என்றுசொல்லவே, உடம்பெல்லாம் வேர்வைகொண்டு, இடிமுழங்கினாற்போற்சிரித்து இரண்டு கண்களிலும் நெருப்புச் சிதறுதலாய், இருபுறத்திலுமுள்ள காடெல்லாம் புகைநெருங்கி, மண்டக் கோபமதிகமாக இனி அரசனுக்குத் துன்பத்தைச் செய்கிறதே செய்யத்தக்க காரியமென்று தன்மனதிலே ஆலோசித்துக்கொண்டு, அருமையான வைதிகர்களான தவமுனிக் கூட்டங்கள் கூடவர நடந்தார். எ-று. (சங)

கரதலத் திடுமெழிற் குசைவிதிர்ப் புறவிணைக் கழல்வ ருந்தப்
பரவுபொற் றடமலர்ச் சடைவிரித் தகல்பெரும் படியி னலச்
சுரர்மிகப் பரதவித் தபயமிட் டலறிடச் சுவண வெற்பாற்
புரமெரித் திடவரும் புனிதனைத் தணிமலர்ப் பொய்கை புக்கான்.

இ-ள். கையிலேகொண்ட அழகிதான தருப்பைப்புல்லும் படபடவென்றுநடுங்கவும், இரண்டு கால்கள் வருந்தவும், பரவுதலாய்ப் பொன்னிறமான நீண்டமலரணிந்த சடைகளை விரித்துக் கொண்டு போகிற பெரிதான உருவத்தைக் கண்டதனாலே, அந்தத் தேவர்கள் மிகவும் பரிதபித்து அபயஞ் சொல்லிக்கூக்குரலிடவும். பொன்மலையினாலே திரிபுரத்தை எரிக்கவருகிற பரமசிவனை ஒப்பாகி அவ்வழகிதான பூம்பொய்கைக் கரைக்குவந்தார். எ-று. (சச)

பிணிமுகத் திரள்களுங் குருகினப் பகுதியும் பிரிவு றாத
அணிமலர்க் குளிர்தடத் ததிசினத் தொடுநடந் தணுக லோடும்
பணிமுடிச் சுமைதவிர்த் திருபுயத் தினின்மிசைப் படிதரித்த
மணிமுடிக் குரிசிலக் கொடுவினைக் கௌசிகன் வரவு கண்டான்.

இ-ள். மயிற்கூட்டங்களும், பட்சிசாதிகளின் கூட்டங்களும் நீங்காதிருக்கின்ற அழகியமலர்கள் பூத்திருக்கின்ற குளிர்ந்ததடாகத்தினருகே (முனிவர்) அதிக கோபத்தோடு நடந்துவந்தவுடனே, ஆதிசேடனுடைய தலைச்சுமையை நீக்கித் தன்னுடைய இரண்டு தோள்களின்மேலும் பூமிபாரத்தைக் கொண்டுள்ள ரத்தினகிரீடத்தை யுடைய அரிச்சந்திர மன்னனானவன். அந்தக்கொடிய செய்கையையுடைய விசுவாமித்திரர் வருவதைக்கண்டான். எ-று. (சரு)

கடல்களென் படுநெடுந் திசைகளென் படுமகன் ககன மென்னும்
உடல்களென் படுமவற் றுயிர்களென் படுமிடந் துலக மென்னும்
விடலருந் தவமுடைப் பெருவலிக் கௌசிகன் வெகுளி யாலென்
றடனெடுஞ் சிலையவன் கடிதெழுந் தெதிர்நடந் தடிப ணிந்தான்.

இ-ள். விடுதலில்லாத தவத்தை யுடைய பெரிதான சாமர்த்தியத்தைக் கொண்ட விசுவாமித்திரர் கோபத்தினால் கடல்கள் என்ன பாடுபடும், நீண்ட திக்குக ளென்ன பாடுபடும்! அகன்ற ஆகாயம் என்ன பாடுபடும்! இவைகளுக்குள்ளான சரீரங்க ளெல்லா மென்ன பாடுபடும்! அந்தச் சரீரங்களுக் குள்ளான உயிர்களென்ன பாடுபடும்! இடிவதாகி உலகந்தா னென்ன பாடுபடும்! என்று, வெற்றி கொண்ட நீண்ட வில்லையுடைய அரிச்சந்திர மகாராசன் விரைவிலே எழுந்து போய், எதிர் கொண்டு நடந்து அவர் பாதங்களை வணங்கினான். எ-று. (சசு)

உருமிடித் தனவெனச் சினமிகுத் திகல்செயற் குறுவ தற்குக்
கருமிடற் றவனலேன் கடனிறத் தவனலேன் கமல னல்லேன்
கிருமியிற் கடையதா மெளியனே வலனெனக் கெழுமை யன்புற்
றிருமலர்க் கழல்களைக் காமுறத் தழீஇநிலத் திடைகிடந்தான்.

இ-ள். தேவரீர் இடியிடித்தாற்போற் கோப மிகுதியாய் (என்னுடன்) ண்டைசெய்வதற்காக வருவதற்கு நீலகண்டனான சிவனு நானல்லேன்; கருங் கடல் மேகவண்ணனான விஷ்ணுவுநானல்லேன்; பிரமதேவனு நானல்லேன். ஒருபுழுவிலுங் கடைப்பட்டவனான எளியனாகிய நானே உம்மோடெதிர்க்கச்சமர்த்தனென்று சொல்லிக் கொண்டு சமீபத்திலே போய் அவருடைய இரண்டு மலர்போலும் பாதங்களைத் தனதிரண்டு கைகளிலும் பொருந்தப்பற்றி பூமியிலே வணங்கிக்கொண்டு கிடந்தான். எ-று. (௪௭)

கரமுறத் தழுவலுங் கௌசிகப் பெயரினன் கால்ப றித்தே
சிரமிசைத் திருமுடிச் சுடர்மணித் தொகைகள்பஃ றிசைதெ றிக்க
உரமிசைப் பணிதெறித் திடவுதைத் தனனுதைத் திடலு முன்றன்
மருமலர்க் கழல்சிவப் புறுமெனக் கைகளால் வருட லுற்றான்.

இ-ள். தனது கைகளிரண்டும் பொருந்தப் பற்றிக் கொண்டு கிடக்குமளவில், விசுவாமித்திரரானவர் தம்முடைய கால்களை உதறிப் பிடுங்கிக் கொண்டு, அவன் தலைமேலணிந்த திருமுடியான கிரீடத்தில் விளங்குகின்ற இரத்னக் கூட்டங்கள், பலதிக்குகளிலுந் தெரித்துவிழவும். மார்பின்மேலணிந்திருக்கிற ஆபரணங்கள் தெரித்துவிழவும் உதைத்தார். அவரப்படியுதைத்தபோதும், அரிச்சந்திரமகாராசன் நீரிப்படி உதைக்கிறதினாலே உம்முடைய மணங்கொண்டமலர்போலும் பாதங்கள் சிவந்து போமேயென்று கூறித் தன் கைகளாலேதடவிப் பிடித்தான். எ-று. (௪௮)

குடியினிற் பிழையினித் திலமுனக் கடிமையிற் குறையு மில்லேம்
இடியிடித் தனவெனச் சினமிகுத் திடைவிடா தெனையு தைத்த
அடிவடுப் படுமெனக் கவலுகிற் பதையெ றிந் தைய வென்றன்
முடிவடுப்படுமெனக்கவல்கிலேன் வெகுளியென் மொழிதியென்றான்.

இ-ள். உமக்குக்குடியாய் நிற்றலிலே யாங்கள் யாதொரு தவறுஞ்செய்திலோம்; உமக்கடிமையா யிருத்தலிலும்யாதொரு குறைவுமில்லாதிருக்கிறோம். இடியிடித்தாற்போற் கோபமிகுதியாய் இவ்விடத்தி லங்கோபத்தை விடாமல், என்னை யுதைத்தருளிய உம்முடைய திருவடிகளுக்குக காயமுண்டாகுமென்று துன்பப்படுகிறதே யல்லாமல், சுவாமி! என்னுடைய தலையிலே காயமுண்டாகுமென்று துன்பப் படுகின்றிலேன். ஆதலால். தேவரீர் இப்படிக் கோபங்கொள்கிறதினாலே யாதுபயனுண்டாம்; சொல்லுமென்று சொன்னான்.

மாவினைத் துணிசெய்தாய் கேழலுக் கிடர்செய்தாய் வான ளாவுங்
காவினைப் பொடிசெய்தாய் நீதியா லீன்றவென் காதன் மக்கள்

பாவினைப் பழிசெய்தாய் தீவினைக் குரியதோர் பாவி நீதான்
ஆவினற் றோல்பொதிந்தடுபுலித் தொழில்செய்தா யழகிதென்றான்.

இ-ள். அதற்கு விசுவாமித்திரர் நான் அனுப்பின மிருகங்களை யெல்லாங் கொன்றாய்; பன்றிக்குந் துன்பமுண்டாக்கினாய்; ஆகாயத்தை அளாவுவதான இந்தச்சோலையையும் தூளிசெய்தாய்; முறையுடனே நான்பெற்ற பிரியமான எனது பெண்கள் பாடியபாட்டுகளையு மிழந்தாய்; ஆகையால் பாவச்செய்கைக்கேதகுதியான நீ பசுவினது நல்ல தோலை மேலே மூடிக்கொண்டு கொல்லுகின்ற புலியினது செய்கையைச் செய்தாய். உன் செய்கைகள் நன்றாயிருந்ததென்றுகூறினார். எ-று. (௫0)

நாடழித் திடினுநன் னகரழித் திடினுமென் னறும லர்ப்பூங்
காடழித் திடினுநீர் காலறக் கிளையினைக் களையி னுங்கொன்
றீடழித் திடினுநீ தான்விடுத் தவையெனு யான றிந்தால்
பாடிழைத் திடுவனோ வென்றரிச் சந்திரன் பலமெரி ழிந்தான்.

இ-ள். அதற்கு அரிசசந்திர மகாராசன், சுவாமி! என்னுடைய நாட்டையெல்லாம் அழித்தாலும். நல்ல நகரை அழித்தாலும், என்னுடைய நல்ல பரிமளமுள்ள பூஞ்சோலைகளை யெல்லா மழித்தாலும், என்னுடைய நெடிதானவமிசமற்றுப்போக உறவினரை யெல்லாங் களைதல்செய்தாலும், இன்னமுங்கொன்று என் பெருமைகளை யெல்லாங் கெடுத்தாலும் நீர் அனுப்பினீரென்று நான் தெரிந்திருப்பேனே யானால் இப்படியாகச் செய்வேனோ வென்று பலவகையுஞ் சொன்னான். எ-று. (௫௧)

சிறியரா னவர்தமக் குரியவே யல்லவோ தீமை நன்னூ
லறிஞரா னவர்தமக் கல்லவோ பொறைபிறர்க் காகு மோதான்
நெறியிலா வினையினே னொருவனைப் பொருளதா நீமு னிந்தால்
பொறையுநின் னருளுமொன னளவிலா வொழிபோ னதென்றான்.

இ-ள். பின்னும் தீமையான காரியங்களைச்செய்வது சிறியராவோர்க்குத் தகுதியானவை யல்லவோ; நல்ல சாஸ்திரங்க ளறிந்தவர்களுக் கல்லவோ அவ்வகைத் தீமைகளைப் பொறுத்துக் கொள்வ தியல்பாகும், இவ்விருவகையும். அவ்விருவகையாரைத் தவிர வேறே யாரிடத்தி லுமுண்டாகும் இப்படிக்கிருக்க, நீதிநெறியறியாத பாவியான ஒருபுல்லியனாகிய என்னை ஒருபொருளாகக் கொண்டு நீர் கோபிப்பீரானால். பொறுமையும் உம்மிடத்துள்ள இரக்கமும் என்விஷயத்திலேயோ இல்லனவாகப் போகலாயின வென்று அரிச்சந்திரன் சொன்னான். எ-று. (௫௨)

மடித்தவா யினன்மிகக்கொதித்தநெஞ் சினனெதிர் மறுத்துநீதான்
படித்தவா சகமெலா மெனக்குநீ திதற்றிடற் பால வோதான்
வடித்தவே யிசைநினக் கிசைகவே வந்தவென் மக்க டம்மை
அடித்தகா ரணமெலா மெனக்குநீ தக்கவா றறைதி யென்றான்.

இ-ள். அதற்கு. மடித்த வாயையும். மிகவுங் கொதிக்கின்ற நெஞ்சையுமுடையவராகிய விசுவாமித்திரர், எனக்கு முன்னே என் சொல்லைத் தடுத்து

முன்னே கற்றவார்த்தைச் சமர்த்துகளெல்லாம் எனக்குத் தெரிவதாகப் பல வகையாய்ச் சொல்லத்தக்கனவல்லோ; அவைகளிருக்க தெளிந்துணர்ந்த வழிசைகளும் உனக்கு முன்னே பாடுவதற்காகவந்த என்பெண் மக்களிருவரையும் அடித்துத் துரத்துதற்குண்டான காரணங்களையெல்லாம் எனக்குத்தெரிவதாக நீ தகுந்தபடி உள்ளதைச்சொல்லென்று கேட்டார். எ-று. (ருங)

கலி விருத்தம்.

மீண்டு மன்னவன் மேவதியன் றாள்கரம்
பூண்டு வாயிற் புனலையும் வற்றிட
ஆண்ட நாயக விம்மே வாற்றிடல்
வேண்டும் யானது விண்ணப்பஞ் செய்வனால

இ-ள். மறுபடியும், அரிச்சந்திர மகாராசன் அந்த விசுவாமித்திரருடைய பாதங்களைக் கைகளாற்பிடித்துக்கொண்டு வாயிலே நீரைவற்றிக் காய்ந்துபோக என்னை யடிமையாகக் கொண்ட சுவாமி! இந்தக் கோபத்தைத் தணிவு செய்ய வேண்டும்; நான் அந்தச் செய்கைகளை உள்ளபடி தேவரீர் சந்நிதியிலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். எ-று. (ருச)

இக்க ருங்குழ லேழையர் தம்மைநின்
மக்க ளென்பது ணர்ந்திலம் மாதவ
தக்க வாறுரை யாமையிற் றள்ளினேம்
புக்க தீது பொறுத்தரு ளீயென்றான்

இ-ள். இந்தக் கறுத்த கூந்தலையுடைய பெண்களை உம்முடைய பெண்களென்று நாங்களெவ்வளவுந் தெரிந்திலோம் ஓ மகாமுனிவரே! அந்தப் பெண்களுந் தகுந்த வார்த்தைகள் சொல்லாமையினாலே தள்ளிவிட்டோம். இது வேகடந்தசெய்கை. இந்தக்குற்றத்தைத் தேவரீர் பொறுத்தருள வேணுமென்றுசொன்னானரசன். எ-று. (ருரு)

கழுத்த ரிந்திது கைப்பிழை வந்ததென்
றழுத்த மாக வுரைத்தனை யாதலால்
பழுத்த நல்லறி வுற்றனை பற்றிய
ஒழுக்க மென்றுவ முட்கிடக் கூறினாய்

இ-ள். கழுத்தை அறுத்துவிட்டு (ஏனென்று கேட்டால்) நான் கைதவ முதலாகச் செய்தேனென்பதுபோல, திடமாகவே அஞ்சாமற் சொல்லுகிறாய். ஆகையால், முதிர்ந்த நல்ல ஞானத்தை யுடையாராய் உன்னை ஆதரவாக அவ்விருவருங் கொண்ட சீலத்தை யிகழ்ந்து அவ்விருவர் மனமும் அஞ்சும்படிப் பேசினாய். எ-று. (ருசு)

இரப்ப வர்க்கொன் றிலையெனில் யாரையும்
கரப்ப வர்க்குறு கட்டுரை கூறுவர்
புரப்ப வர்க்குப் பொருத்தலல் லாலடித்
துரப்ப லுந்தகு மோவென் றுருத்தனன்

இ-ள். இதஞ்சொல்லி யாசகஞ் செய்பவர்களுக்கு ஒன்றுங்கொடுப்பதில்லையென்று சொன்னால், யாவருக்கும் இயல்வது கரத்தாலாகிற செய்கை யுள்ளபேருக்குத் தகுந்தசொற்களை யாருஞ்சொல்வார்களே யல்லாமல் சொல்லாதுவிடார்கள். அப்படி யுண்டாகுமானால், உலகத்தை ஆண்டு இரட்சிக்கவல்லவரான அரசர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமே யல்லாமல் அடித்து அதட்டித் துரத்துகிறது தகுவதாகுமோ; என்று பின்னும் கோபங் கொண்டார்.

கட்ட கில்லென நின்றவக் கள்வர்பார்
கெட்ட வான்பொருள் காட்டக்கி லேசியா
விட்ட மூச்சுடன் விம்மலி னாலலை
பட்டு ளாரிற் பையப்பை யக்கூறினான்.

இ-ள். நாங்களங்குப் பொருளை மண்ணைத் தோண்டி யெடுத்துக்கொண்டு போனதில்லையென்று சாதிக்கிற அந்தத் திருடரிடத்திலே தானே அவர்கள் மடியிலே யுள்ளதாக முன்னே அவர்கள் திருடிப் போன தினாலே குறைந்து செலவழிந்து மிஞ்சினபொருளை அரசன் முன்னே தலையாரி காட்ட, அதற்கு மிகவுங் கிலேசித்து விடுகிறபெரு மூசசுடனே விம்முதலோடு கூடி அலைச்சற் பட்டும் பேசுகிறவர்களைப்போல, அரிச்சந்திரன் மிகவும் மெள்ள அவர்கோபந் தணிவாகச் சொல்லுகிறான். எ று.

இச்செய்யுள் கவிகூற்று. (ருஅ)

மைகு லாவுகண் மாதரை மோதிய
கைகு றக்கினுங் கண்ணினைச் சூலினும
மெய்கு றக்கினும் வேண்டிய வாறுநீ
செய்க வென்ன மறைமுனி செப்புவான்.

இ-ள். அஞ்சனம் விளங்குகின்ற கண்களையுடைய அந்தப் பெண்களை இடித்தகைகளை அறுத்தாலுஞ் சம்மதமே, கண்ணைத் தோண்டினாலுஞ் சம்மதமே, உடம்பெல்லாஞ் சேதித்தாலுஞ் சம்மதமே, உம்முடைய மனத்துக்கு வேண்டியபடி செய்துகொண் டருள்கவென்று சொல்ல. அதற்கு வைதிகமுனிவரான விசுவாமித்திரர் சொல்லுகிறார். எ-று. (ருகூ)

கொய்து மாக்களைக் கொன்றதும் பன்றியை
எய்த தும்மிசை கேட்டடித் தீனமாய்
வைததும் மென்றன் மக்களை நீமணம்
செய்தி டிற்பொறுப் பேனென்று செப்பினான்.

இ-ள். மிருகங்களை யெல்லாம் அறுத்துக் கொன்றதும், பன்றியை அம்பாலெய்து துரத்தினதும். இசைப் பாட்டுகளைக் கேட்டு (அவர்களுக்குப் பரிசுகொடாமல் அடித்து) இழிவாக அவர்களை உதாசினஞ் செய்ததும் பொறுத்துக்கொள்ளுகிறேன். என்பெண்களான அவ்விருவரையும் நீவிவாகஞ்செய்து கொண்டா லென்று கூறினார். எ-று. (சுO)

நிலத்தில் யாரு நெறியல செய்திடின்
விலக்கு நீயிவை யெண்கண் விளம்பலென்
புலைக்கு லத்தொடு மன்னர் பொருந்துதல்
நலத்த தோவென்று நாயகன் கூறினான்.

இ-ள். உலகத்திலே யாரானாலும் நீதிக்கு விரோதமானவைகளைச் செய்தால், அவைகளை விலக்கத்தக்க தேவரீர் இந்த அநீத வார்த்தைகளை என்னிடத்திலே சொல்லுகிறதற்கு யாதுகாரணம்! நீசசாதியாருடனே அரசர்கள் கூடுகிறது நல்ல நீதியோடு கூடுவதாமோவென்று அரிச்சந்திர மகாராசன் சொன்னான். எ-று. (௬௧)

மலையின் வைகும் வசிட்டன் சபித்தலாற்
புலைய னானவன் மைந்தவிப் பூவையர்
முலையில் வைகன் முறைமையன் றேவெனுக்
கலையு ணர்ந்த கௌசிகன் கூறினான்.

இ-ள். மலைகளிலே சஞ்சரித்தலுக் குரிய வசிஷ்ட முனி சபித்ததினாலே நீசனான திரிச்சங்குமகனே! இந்தப் பெண்கள் தனங்களிலே நீ கூடுகிறது உனக்கு நீதியல்லவோ! என்று கலைஞானங்க ளெல்லாந் தெரிந்த விசுவாமித்திரர் சொன்னார். எ-று. (௬௨)

அற்றை ஞான்றெம தையன் வசிட்டனால்
பெற்ற சாபப் பெரும்புலை தீர்த்தனை
இற்றை ஞான்றிங் கெனைப்புலை யாக்கநீ
கற்ற தேதெனக் கால்கரம் பூண்டனன்.

இ-ள். முன்னாளிலே, எங்க ளாசாரிய ராகிய வசிஷ்டராலே யுண்டாகிய சாபத்தாலான பெரிய நீச்சத்துவத்தை நீரே தீர்த்தருளினீர். இந்த நாளிலே தேவரீரே என்னை நீச்சனாக்க யாது காரணத்தினாலே கற்கலானீர். சுவாமி! என்று அவர்பாதங்களைத் தன்கைகளாலே பிடித்துக்கொண்டு அரிச்சந்திரன் சொன்னான். எ-று.

அற்றை ஞான்றெம தையன் வசிட்டனாற் பெற்ற சாபப் பெரும்புலை தீர்த்தனை" என்பது,

முன்னொருகால் காதிராஜன் புத்திரனாகிய விசுவாமித்திரர் அருந்தவஞ் செய்திருக்கையில், பிரமன். அரசனது தவத்துக்கிரங்கி "நீ அரச முனிவன்" என்றோதினன். மீண்டுந் தவஞ் செய் திருக்கையில், அயோத்தி மன்னனாகிய திரிசங்கு தனதாசாரியராகிய வசிட்டரையடுத்து "யான் உடலோடு சுவர்க்கம் புகவேண்டும்" என, வசிட்டர் "நீ என்னை விட்டு வேறே ஆசாரியனை விரும்பியதால் நீசனாகுக" என, திரிசங்கு அவ்வாறே நீசனாகிப் பலராலும் வெறுக்கப்பட்டு, தவஞ்செய்யும் அரச முனிவன் பாலணுகித் தன் கருத்தை யியம்ப, காதிசேய் "அவ்வாறே யாகுக" என்று தன் தபோ பலத்தால் "மேலேறுக" எனலும், திரிசங்கு உயர்ந்துசெல்லத் தேவர்கள் கண்டு "சீசீ புலையா! இங்கு வாராதே; இறங்கு" என, வீழ்வது போல வரும் திரிசங்கு அபயங்கூற, கோசி

கன், "இந்திரன் முதலிய தேவர்களும் உலகமும் யான் வேறே சிருட்டிப்பேன்" என்று சிலபொருள்களைப் படைக்க, தேவர்கள் பயந்து கோசிகன்பால்நண்ணி "நீபடைத்த பொருள்களும் அவ்வரசனும் நட்சத்திர மண்டத்திலிருக்க" என்றோதிப் போயினர்.

இதனைக் கூர்மபுராணம்.

"சென்னிகீ ழாக வீழுந் திரிசங்கு வென்னும் வேந்தை
நின்னிலென் றுரைத்து வானி னிறுவிவா சவன்ற னோடும்
இன்னுமோ ருலகஞ் செய்வே னெனவுடக் கணங்கள் விண்ணோர்
பன்னருஞ் சராச ரங்கள் சிற்சில படைத்தா னன்றே.
படைத்தலும் விண்ணோ ரஞ்சிக் கோசிகன் பால்வந் தெய்தி
அடைக்கரும் புலத்தோய் நீமுன் னமைத்தவை யமையு முன்னந்
திடப்படப் படைத்த யாவுந் தாரிதிரி சங்கு வோடும்
உடுத்தெரி யுலகின் பாலகன் வதிகவென் றுரைத்துப் போனார்."—

என்பதனால் விசுவாமித்திர முனிவர் தமது தவவல்லமையால் திரிசங்கு புலைமைத்தன்மை நீக்கி அவர்க்கென்றொரு உலகமும் பிறபொருள்களும் சிருட்டித்து இரட்சித்தவர், இன்று அத்திரிசங்கு புதல்வனாகிய தன்னைப் புலைச்சியர்களைக் கூடும்படி வற்புறுத்தல் ஞாயமன்றென்பார் "அற்றை ஞான்று * * * பூண்டனன்" என்றார். [விசுவாமித்திரர் தவஞ்செய்தற் கேற்பட்ட காரணத்தை (கஉக)ம்பக்கம் எழுதியுள்ளோம் ஆங்குக் கண்டுணர்க. (சுரு)

முன்ன முந்தை முழுப்புலை நீக்கினம்
இன்ன நீக்க வெமக்கரி தன்றியாம்
சொன்ன வாசகங் கேட்டுச் சுடர்முடி
மன்னர் மன்னவென் மக்களைச் சேர்கென்றான்.

இ-ள். முன்னே உன் தகப்பன் முழுதும் புலையனானதைப் போக்கின எமக்கு இன்னமும் அப்படி வருகிற புலைமையைப் போக்குதல் அரிதல்ல. ஆகையால், நாம்சொன்ன வார்த்தைப்படி கேட்டுவிளங்காநின்ற கிரீடாதிபதிகளான அரசர்களுக் கரசனே! என்பெண்களை நீ கூடக்கடவையென்று விசுவாமித்திரர் சொன்னார். எ-று. (சுசு)

அடினு நின்விழி யாரழ லாமெனைச்
சுடினு மென்னுட றன்னைத் துறந்துயிர்
விடினு மேனியை வெட்டி யறிந்துகூ
றிடினு மிச்சொற் கிசைகிலன் யானென்றான்.

இ-ள். அதற்கு அரிச்சந்திரன் நீர் என்னைத்தாழ்ச்சி செய்தாலும், உம்முடைய கோபக்கண்களிலுண்டான நெருப்பால் என்னைச்சுட்டாலும், என்னுடைய உடம்பைவிட்டு உயிர்போகிறதாகச் செய்தாலும், என்னுடம்பை வெட்டிவெட்டிப் பலபல கூறுகள் செய்தாலும் இப்போது நீர் சொல்லுகிற சொல்லுக்கு எவ்வளவும் நான் சம்மதியேனென்று சொன்னான். எ-று. (சுஎ)

யூப வேள்விக் கௌசிக னெய்திலாக்
கோப மெய்திக் கொடியிடை மங்கையர்
தீப மன்னவர்ச் சேர்கிலை யாயினென்
சாப நீபெறு கென்றுரை சாற்றினான்.

இ-ள். தூண்கள் நிறுத்தி யாகங்கள் செய்வதிலே வல்லவரான விசுவாமித்திரர் அந்தச் சொல்லுக்கு மாறாத கோபங்கொண்டு என்னுடைய கொடி போலும் இடையையுடைய பெண்களாகிய விளக்குப்போன்ற அவ்விருவரையும் நீ சேராது போவையானால், என்னுடைய சாபத்தை நீ பெறக் கடைவ யென்று மறுமொழி சொன்னார். எ-று. (சுசு)

கூற்ற முண்ணக் கொடுத்தெம தாருயிர்
தோற்ற னன்றநன் றென்று துணிந்துநின்
சீற்ற மாறிடச் செப்பிடுஞ் சாபம்யான்
ஏற்ற னன்னிடு கென்ன வியம்பினான்.

இ-ள். எமனுண்பதாக எங்களுடைய அரிய உயிரைக்கொடுத்துத் தோல்வியையடைகிறது மிகவு நல்லதுதானென்று துணிவுகொண்டு, ஐயா ! உமது கோபந்தீர்வதாக நீர் கொடுக்கிற சாபத்தை நானே ஏற்றுக் கொள்ளுகிறேன்; நீர் சாபமிடுமென்று அரசன் சொன்னான். எ-று. (சுஎ

அப்பெ ருந்தகை யன்ன துரைத்திட
இப்பெ ருந்தகைக் கும்பொறைக் கும்பியாம்
ஒப்பெ டுத்துரைக் கத்தகு மோவெனச்
செப்ப ருந்தவன் சிந்தையி லெண்ணுவான்

இ-ள். அந்த அரசன் அப்படிச் சொல்லுமளவில், இந்தப் பெரிதான குணங்களுக்கும் பொறுமைக்கும் நான் சமானங்கூட்டிச் சொல்லத்தக்கது முண்டோவென்று சொல்லுதற்கரிதான தவத்தையுடைய விசுவாமித்திரர் மனதிலே ஆலோசிக்கலானார். எ-று. (சுஅ)

இரைத்தெ ழுந்தக தத்தையி ருத்திடின்
வரைத்த டம்புய வாசவன் முன்னர்யாம்
உரைத்த வாசகந் தோற்குமென் றன்னுபு
நிரைத்த வேணி நெடுந்தவன் கூறுவான்

இ-ள். சத்தித்து நமக்குண்டான கோபத்தை அந்தச் சமயத்திலேநாம் முடித்தோமானால், மலைபோலும் பெரியதோள்களையுடைய இந்திரனுக்கு முன்னே நாம் சொன்னவார்த்தை தோல்வி யடையு மென்று நினைத்து, வரிசை வரிசையாய் நீண்ட சடைகளையுடைய நெடிதான தவமுனிவர் சொல்லுகிறார். எ-று. (சுகூ)

துடிம ருங்குலத் தோகையா தங்களைக்
கடிம ணஞ்செய நீதென்ற கள்வனே
குடிமை செய்யுங் கொடும்புலை யற்குநீ
அடிமை யாவை யறிதியென் றோதினான்.

இ-ள். உடுக்கை போன்ற இடையை யுடைய அந்தப் பெண்களை விவாகஞ்செய்து கொள்ளுதல் குற்றமென்று சொல்லுகிற திருடனே! இனிகுடித்தனமான இழிதொழிலைச் செய்கின்ற கொடியனான புலையனுக்கு நீ யடிமையாகக் கடவை, இதனைப்பின்னே தெரிந்துகொள்ளக் கடவாயென்றார். எ-று.

கொஞ்சிப் பேசுங் குழவிசொற் குற்றத்தால்
வஞ்சித் தன்னை வனமுலைப் பாலினில்
நஞ்சிட் டாலதை நாடிவி லக்குநன்
னெஞ்சத் தாருள ரோவிந்நி லத்திலே.

இ-ள். கொஞ்சிக்கொஞ்சிப் பேசுகின்ற மழலைப் பிள்ளையினுடைய சொற்குற்றத்தினாலே தாயானவள் வஞ்சனைசெய்து தனதழகானமுலைப்பாலிலே நஞ்சுகலந்து கொடுத்தால் அதைத்தெரிந்து விலக்குகின்ற நல்ல நெஞ்சுள்ளவர்கள் அந்தத் தாயை யல்லது வேறே சிலரும் உளராவரோ இந்த வுலகத்திலேயென்று பின்னும். எ-று. (எக)

வாரி காய்ந்து கொதித்திடின் மாற்றத்தண்
ணீரி யாவர் தருவரந் நீதியிற்
சீரி யாயெனை நீமிகச் சீறிடின்
யாரி யாரஞ்ச லென்பவ ரொன்றனன்.

இ-ள். கடல் வெப்பங்கொண்டு கொதிப்புடையதானால், அந்த வெப்பத்தையடக்கக் குளிர்ந்தநீ ரெங்கிருந்து யார்கொண்டு வருவார்கள்? அந்தநீதித்தன்மைபோல் சிறந்த மகாமுனீந்திரரே! என்னை நீர்மிகவுங்கோபித்துச் சாபங்கொடுக்கத்துணிந்தால், பயப்படாதேயென்று எனக்கு வேறுயாவர் சொல்லவருவார் என்று பின்னும். எ-று. (எஉ)

தாயுந் தந்தையுந் தஞ்சமுந் தெய்வமும்
நீயுண் டென்று நினைந்திருந் தோமெனச்
சேயும் வேந்துந் திருவும மைச்சனும்
போயுன் பாதம் புகலென்று பூண்டனர்.

இ-ள். தாயும், தகப்பனும், ஆதாரமும், தெய்வமும் ஆக (எல்லாம்) நீரே எங்களுக் குண்டா யிருக்கிறீ ரென்று நாங்களெண்ணி யிருந்தோ மென்று பிள்ளையாகிய தேவதாசனும், அரசனும் சந்தி வதியும் மந்திரியும் அவருக்கே போய் உம்முடைய பாதமே எங்களுக்குக் கதியென்று முனிவர்பாதங்களைக் கைகளாலே பிடித்துக்கொண்டார்கள். எ-று. (எ௩)

அன்னை யென்பை யருந்துணை யென்பையுன்
முன்னை வாழ்வு முதல்வனு மென்பைமற்
றென்னை யிப்படி யெல்பவ னிச்சமத்
துன்னை யல்லது கண்டில முண்மையே.

இ-ள். அதற்கு விசுவாமித்திரர், என்னைத் தாய் மென்பாய்; அருமையான சகோதரனு மென்பாய்; முன்னுள்ள ஐசுவரியமும், அந்த ஐசுவரியத்

னைக்கொடுத்த தெய்வமும் என்பாய். இனி என்னை இப்படி உயர்த்திச்சொல்லிவெல்லத்தக்கவன் நீயே. இப்படி வல்லனாகிய சாமர்த்தியம் உன்னிடத்திலே கண்டேனே யல்லாமல் வேறே யாரிடத்திலும் நான் மெய்யாகப் பார்த்திலேன். எ-று. (எச)

கண்ணை வேண்டினு மீகுவன் காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுட னீகுவன்
பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யாமென்று பேசினான்.

இ-ள். (என்று முனிவர் சொன்னதற்கு) அரிச்சந்திரன் (ஐயா!) என் கண்ணைக் கேட்டாலுங் கொடுக்கிறேன்; நானாளுகின்ற உலகத்தை வேண்டினாலும் என் செல்வத் துடனே கூட்டிக் கொடுக்கிறேன், (இவைக ளிருக்க.) இராகங்களை வேண்டத்தக்க செவ்விதான சொற்களை யுடைய பறைச்சாதிப் பெண்களை நான் வேண்டேன் என்று சொன்னான். எ-று. (எரு)

மன்னர் மன்னனு ரைத்திட மாதவன்
அன்ன தேநமக் காமென் றுவாவறீ இச்
சொன்ன தேயமை யுங்கடல் சூழ்புவி
என்ன தேயென் றெழுந்தெழுந் தாடினான்.

இ-ள். அரசர்களுக் கரசனான அரிச்சந்திரன் அப்படிச் சொல்லக்கேட்டு மகாதவமுனிவரான விசுவாமித்திரர் நீ அப்படிச் சொல்வா யானால் நமக்குச் சம்மதமே யாமென்று கொண்டு (அரசனே) நீ ஆசை யில்லாமல் உலக முழுதும் வேண்டினாலுங் கொடுக்கிறே னென்று சொன்னதே போதும்; இனிக் கடல் சூழ்ந்த வுலக மெல்லாம் என்னுடையதே யாயிற் றென்று எழுந்தெழுந்து கூத்தாடினார். எ-று. (எசு)

மருவு நாடும் வளநக ரும்பெருந்
திருவு மீகுவ னென்றனை செவ்வியோய்
தருவ னென்ற மொழிதவ றுமனுன்
அரச ளிக்கினை மையுமெ னச்சொனான்

இ-ள். நல்ல செவ்வைக் குணத்தையுடைய வரசனே? உன்வசமாகவிருக்கின்ற கோசலநாட்டையும், வளமைகொண்ட நகரையும், பெரிதான செல்வத்தையும் தருகிறேனென்று சொன்னாய்; இப்படித் தருகிறேனென்று சொன்னசொற் பொய்யாமல் உன்னுடைய அரசாட்சியை எனக்குக் கொடுத்தாற் போதும் என்று சொன்னார். எ-று. (எஎ)

அந்த ணாளனை நோக்கியவ் வண்ணலும்
உந்த மக்க ளுறுநலன் வேண்டிலேன்
எந்த நாடு மிருநிதிக் குப்பையும்
தந்த னன்மொழி தப்புவ தில்லலென் றான்.

இ-ள். அப்படிச் சொன்னவிசுவாமித்திரரைப் பார்த்து அந்த அரிச்சந்திரமகாராசன் (ஐயா) உம்முடைய பெண்களைக் கூடுவதான சுகத்தை நான்

வேண்டேன். எங்களுடைய நாட்டையும் பெரிதான எங்கள் செல்வத்திரட்சியையும் இப்போதே கொடுத்தேன் நான்சொன்னசொல் தப்புகிற தில்லையென்றுசொன்னான். எ-று. (எஅ)

பாரை வார்த்தையி னூற்றராற் பாலதோ
தாரை வாரெனக் கௌசிகன் சாற்றிட
நாரை வாய்கயல் பாயுந றுந்தடநீரை
வார்த்தன னீபுவி யாள்கென.

இ-ள். அதற்கு விசுவாமித்திரர் உலகத்தை வாய்ச்சொல்லாலே கொடுக்கத்தக்கதோ! நீ தாரை வார்த்துக் கொடுக்கவேணுமென்று கூற நாரைகள் மேலே கயற்கெண்டைகள் துள்ளிவிழுவனவான நன்மையையுடைய அந்தக்குளத்து நீரைக் கொண்டுவந்து இனி நீரே உலகத்தை யெல்லாம் ஆளுதல் செய்யக்கடவீரென்று தாரைவார்த்துக் கொடுத்தான். எ-று. (எகூ)

வைய நின்னது மாநகர் நின்னது
வெய்ய வாசியும் வேழமு நின்னபொற்
செய்ய தேர்களுஞ் செல்வமுஞ் சேவிக்கு
மைய லாகளுந் தாதியர் நின்னவே.

இ-ள். இனி இந்த வுலகமு மும்மதே, பெரிதான அயோத்தியாபுரியுமும்மதே, கடின வேகத்தை யுடைய குதிரைகளு மும்மதே; யானைகளு மும்மதே, பொன்னாற் செய்துள்ள செவ்வையான தேர்களும் செல்வமும் உம்மதே, என்னிடத்திலே பணிவிடை செய்கிற பெண்களும் சேனைகளும் உமக்குச சொந்தமானவைகளே. எ-று. (அ0)

என்று மன்னவ னியம்பியி றைத்தநீர்
அன்று கௌசிக னங்கையி னேற்றபின்
நின்ற மாதவர் தங்களை நேர்குறித்
தின்று நீரெழுந் தார்த்திடு மெனறனன்.

இ-ள். என்று அரசன்சொல்லி தாரைவார்த்த நீரை அப்போது விசுவாமித்திரர் உள்ளங்கையிலேயே வாங்கிக்கொண்ட பின்பு தம்முடனே கூடநிற்கிற மகாதவமுனிவர்களை நேரே வாசசொல்லி இப்போது நீங்களெல்லாரும் எழுந்தெழுந்து கர்ச்சனைபண்ணுங்களென்று சொன்னார். எ-று. (அக)

சந்தக்கலி நிலைத்துறை.

கோசிக னின்னனை கூறிய பின்கூ கூவென்மேற
ஆசிகள் சொன்னா ராடின ரார்த்தா ரணியாடை
வீசினர் நீயே மேன்மக னென்றா மேன்மேலும்
பேசினர் பேசி மாசனர் நேசம் பெரிதுற்றார்.

இ-ள். அப்படி விசுவாமித்திரரிவ்வகை சொன்ன பின்பு கூகூவென்று அரிச்சந்திரனுக்கு ஆசீர்வாதங்கள், சொன்னார்கள். ஆடினார்கள் கர்ச்சனை பண்ணினார்கள் தாங்க ளுடுத்தி யிருக்கிற வஸ்திரங்களைக் கொண்டுவீசினார்

கள். நீயே மேன்மகனானவனென்று மேன்மேலுங் கொண்டாடினார்கள் அப்படிக் கொண்டாடிஅந்த மகாசனங்களெல்லாம் அரிச்சந்திரனிடத்திலே மிகவும் பிரியங்கொண்டார்கள் எ-று. (அஉ)

வாரண முந்திண் டேர்பரி தேசம் வளனெல்லாம்
ஆரண மோதுங் கௌசிக னுக்கா யினவென்றே
பூரண கும்பம் வீதிக டோறும் பொலிவித்துத்
தோரண மிட்டார் தாரணி யெங்குந் துறவோரே.

அ-ள். யானைகளும் பலமான தேர்களும் குதிரைகளும் தேசமும் அதிலுள்ள சம்பத்துகளும் வேதபாராயணஞ் செய்கிற விசுவாமித்திரர் வசமாயினவென்று நிறைந்த நீர்க்குடங்களை வீதிகளெல்லாம் நிறைய வைக்கச்சொல்லி அந்தத் துறவற முனிவர்கள் உலக முழுதும் தோரணங்களும் கட்டினார்கள். எ-று. (அங)

மென்னடை யன்ன நன்னடை யாளை விறலானை
முன்னடை யாநின் றின்னவை பின்னு முனிகூறும்
என்னகர் நின்றே யிவ்வுல கெல்லாம் யானாள
நின்னடை யாளந் தந்திடு மாறு நெறியென்றான்.

இ-ள். மிருதுவான நடையினாலே அன்னம்போன்று நல்ல இல்லறத்துக்கேற்ற செய்கையையுடைய சந்திரமதிக்கும். வெற்றிகொண்ட அரிச்சந்திரனுக்கு முன்னேவந்து நின்றுகொண்டு இவ்வித வார்த்தைகளைப் பின்னும் விசுவாமித்திரர்சொல்லுகிறார். அதாவது, எனக்குச் சொந்தமான அயோத்தியிலிருந்து இந்தவுலகத்தை யெல்லாம் நான் ஆள்வதாகத் தப்பாதமார்க்கத்துடனே உன்னுடைய அடையாளத்தைக் கொடுவென்று சொன்னார். எ-று. (அச)

வாழிய நாடூர் செல்வ மமைச்சர் மாசேனை
சூழிநெ டுங்கைப் போர்மத வேழந் துரகந்தேர்
ஊழியின் மட்டு மாளுதி தந்தே னுனதென்றே
ஆழி யளித்தான் பாருள மட்டு மழியாதான்.

இ-ள். வாழ்வையுடையதான கோசலநாடும் ஊரும் செல்வமும் மந்திரியும் பெரிதான சேனைகளும் முகபடாமணிந்து நீண்ட துதிக்கையைக் கொண்ட பலமுள்ள மதயானைகளும் குதிரைகளும் இரதங்களும் ஊழிகாலத்தளவும் நீரே ஆளக்கடவீர். இதோ கொடுத்து விட்டேன் உம்மதாக வென்று சொல்லித் தன்கையிலுள்ள மோதிரத்தையுங் கொடுத்தான்: உலகமுள்ளளவும் அழியாதிருக்கிற மெய்யனென்னுங் கீர்த்தியைக் கொண்ட அரிச்சந்திர மகாராசன். எ-று. (அரு)

குடைதந் தேனீள் கொடிதந் தேனென குழூவாய
படைதந் தேனற் கனகத் திண்டேர் பரிதந்தேன்
தடைதந் தேநின் றடியே னேகத் தவனேநீ
விடைதந் தேகென் றடிமேற் பரவி வீழ்வானே.

இ-ள். என் குடையுங் கொடுத்தேன், நீண்ட கொடியையுங் கொடுத்தேன், என் கூட்டமாகிய சேனைகளையுங் கொடுத்தேன், நல்லசுவர்ண மயமான பலங்கொண்ட தேர்-குதிரைகளையுங் கொடுத்தேன். இதற்கியாதொரு தடையுஞ்சொல்வதில்லை. இனி அடியேன்போக விடை கொடுத்து விட்டு நீர் போமென்று அவர் பாதங்களின் மேலே துதி செய்து விழுகின்ற அரிச்சந்திரன். எ-று. (அசு)

துணியுந் துணிவொடு சுடையா னினது தோண்மாலை
மணியும் வளையும் வலயங் களுநின் வடிவாளும்
அணியும் முடியுஞ் சேயுந் தாயு மணியும்பொற்
பணியுங் கழலுந் தந்தே கென்று பலசொன்னான்.

இ-ள். கண்டு துணிவு கொண்ட ஒப்பில்லாத கடின சித்தரான விசுவாமித்திரர், அரசனே! உன்னுடைய தோளிலுள்ள மணிமாலைகளும் கங்கணங்களும் கேயூரங்களும் உன்னுடைய கூரிய வாளாயுதமும் ஆபரணங்களும் கிரீடமும், உன் பிள்ளையும் அந்தப் பிள்ளையைப் பெற்ற தாயும் அணி வனவான பொன்னாபரணங் களும் வீரக்கழலுங் கொடுத்து விட்டுப் போவென்று பலவாகச்சொன்னார். எ-று. (அஎ)

மத்தாக் கிவையென் றணிமா முடியும் வடிவாளும்
புத்திப புதல்வன் பூணும் பணியும் புனைமாதின்
பத்திக் கிரணப் பணியுங் கனகப் பணியும்வெண்
முத்திற் பணியுங் கழியா முனிவன் முனமுய்த்தான்.

இ-ள். என்னதற்கு இவைகளெல்லா மென்று வெறுத்துத் தானணிந்திருக்கிற பெரியகிரீடமும், கூரிய வாளாயுதமும், புத்திசாலியான தனதுபுத்திர னணிந் திருக்கிற ஆபரணங்களும், அலங்கரித்தலை யுடைய மனைவியினுடைய வரிசையாக ஒளிவீசுகின்ற ஆபரணங்களும், பொன்னாபரணங்களும், வெண்மை யான முத்தாபரணங்களும் கழற்றி விசுவாமித்திரர் முன்னே வைத்தான். எ-று. (அஅ)

உனையும் மடமா தினையும் மரசே யுன்மைந்தன்
றனையும் விடுதற் கணியும் பணிநீ தந்தாய்காண்
வனையுங் கழலாய் மகனும் நீயும் மடவாளும்
புனையுங் கிரணக் கலைதந் தகலப் போவென்றான்.

இ-ள். அதற்கு விசுவாமித்திரர் உன்னையும் உனக் கிளமையான மனைவியையும் அரசனே? உன் புத்திரனையும் நான் விடும்படியாக அணிந்திருக்கிற ஆபரணங்களை யெல்லாங் கொடுத்தாய் சரியே! கட்டின வீரக்கழலை யுடையவனே! இனி உன்மகனும் நீயும் உன்மனைவியும் கட்டியிருக்கிற ஒளியையுடைய வஸ்திரங்களைக் கொடுத்துவிட்டுத் தூரப்போவென்று சொன்னார். எ-று.

ஆனா யிரப்போ மாடை யளித்தா லரனேயென்
றானா யளித்த காவல னின்றே யுயிர்சோருந்

தாரைநி னைந்தே கௌசிக னங்குதான் மூடும்
சீரை கிழித்தே மூவகை யிட்டுச் செலவுய்த்தான்.

இ-ள். அதற்கு நாங்கள் கட்டி யிருக்கிற வஸ்திரங்களையுங் கொடுத்து விட்டால் இனி யாரிடத்திலேபோய் உடுத்திக்கொள்ள வஸ்திரங்கொடு வென்றுகேட்போம்! சிவனே! சிவனே! என்று பாரையெல்லாம் ஆண்ட அரசன் அங்கே நின்று கொண்டு உயிருஞ் சோர்ந்து போவதுபோலாய்க் கண்ணீர்த் தாரைதாரையாக ஒழுகவிட்டழுகிறதை விசுவாமித்திரர் கண்டாலோசித்து அப்போது தாம் தம்முடைய அரையை மூடிக்கொண்டிருக்கிற காவிவஸ்திரத்தைக கிழித்து மூன்றுபங்கு செய்து கொடுத்து அவர்களுடுத்திக் கொண்டு போம்படி அனுப்பினர். எ-று. (கூ0)

நாறற் பாழ்ந்து ணிசீலைப் பேனொரு நாண்மாறுப்
பீறற் சீலையி தாருக் கென்றுரை பேசாமே
மாறற் காலமி தாகிற் செய்வதென் மற்றென்னுக்
கூறற் காமிசை பூணக் கோனது கொண்டானே.

இ-ள். நாற்றம்பிடித்த பழந்துணியாய்ச் சீலைப்பேன் ஒருநாளும் போகாமல் மொத்துக்கொண் டிருக்கிற கிழிந்த வஸ்திரம் இது யாருக்குத் தகுமேன்று ஒரு பேச்சும் பேசாமல் நமக்கெல்லா மாறிப் போகிற காலம் இப்போது வந்ததனுல் நம்மாலே செய்யத்தக்கது யாதிருக்கிறதென்று எல்லாருஞ் சொல்லுதற்குத் தகுந்த கீர்த்தியைப் பூணுகின்ற அரசன் அந்த வஸ்திரத்தை உடுத்திக்கொண்டான். எ-று. (கூக)

காவிச் சீரை யுடுத்துக் கூறை கழித்துச்சென்
றுவிக் காகுல மாகச் சேனை யழுங்கப்போய்ப்
பாவிக் கோசிக னார்முன் றுவொரு பால்வைத்துத்
தாவித் தாளிணை பூசித் தேவிடை தாவென்றுன்.

இ-ள். அப்படி அவர் கொடுத்த காவி வஸ்திரத்தை யுடுத்திக் கொண்டு தாமுடுத்தி யிருந்த வஸ்திரத்தை அவிழ்த்துக் கொண்டு தம்முயிர்க்கு வியாகுலந் தோன்றச் சேனைகள் வருந்துகிறதைப் பார்த்துக் கொண்டு, பாவியான விசுவாமித்திரருகிலே போய், ஒரு பக்கத்திலே வஸ்திரங்களை யெல்லாம் வைத்து விரைவிலே அவரிரண்டு பாதங்களையும் பூசை பண்ணிக் கும்பிட்டு உத்தரவுகொடுமென்று அரிச்சந்திர மகாராசன் கேட்டான். எ-று. (கூஉ)

தாவென் றுன்விடை தந்தே னீயொரு சார்பூடு
போவென் றுனிது வேநல னென்னுப் போவானை
வாவென் றுனது கேளா மீளவும் வந்தெய்தி
யாவென் றுனினி யீகுவ வெந்தா யானென்றுன்.

இ-ள். அப்படி உத்தரவு கொடென்று கேட்டபோது, விசுவாமித்திரர் இதோ வுத்தரவு கொடுத்தேன்: நீ ஒருபுறத்திலே போவென்றுர். அப்போது, இதுதான் நல்லகாலமென்று போகிற அரசனை, அரிச்சந்திரா! இங்கேவாவெ

ன்றார், அந்தச்சொல்லைக் கேட்டுத் திரும்பவும் அருகிலே வந்து சுவாமி! இனி நான்கொடுப்பன என்னவென்று கேட்டான் அரிச்சந்திரன். எ-று.

எந்தாயானினி யீகுவயாவென்று கூட்டுக. (கரு)

செந்தேனொடுந் தண்பணை சூழ்ந்த திருநாடா
வந்தேனானும் மாமுனி வோரும் வளர்வேள்விக்
குந்தே நண்ணியி ரந்தபசும்பொ னுளவெல்லாம்
தந்தே போவா யென்றிறை யோனைத் தடைசெய்தான்.

இ-ள். சிவந்த தேன் பாய்வதாகிய குளிர்ந்த வயல்கள் சூழ்வதான திருநாட்டையுடைய அரசனே! நான் உன்னிடத்திற்குவந்து அந்தப் பெரியமுனிவர்களும் செய்வதற்கொத்த யாகத்துக்காக உம்முடைய ஊருக்குவந்து யாசகங் கேட்ட பசும் பொன்னுகளவைக ளெல்லாம் இப்போது கொடுத்துவிட்டுப் போவென்று அரசனைப் போகவொட்டாமற் றடைபண்ணினார்.

முன்ன முனக்குச் சொன்னதி றத்தின் மொழிமாறி
அன்னது கைக்கொண் டிந்நிதி தந்தே னல்லேன்யான்
நன்னக ரோடு பொன்னுள முற்று நனிதந்தேன்
இன்ன முனக்குப் பொன்றர வென்பா லிடமுண்டோ.

இ-ள். முன்னே உமக்குச் சொன்ன வகையிலே சொல்மாறி அந்தப்பொருள்களை என் வசமாக்கிக்கொண்டு இப்போது வேறே பொருள்கள் நான்தரவில்லை. (அந்தப் பொருளுடனே) எனது நல்லஊரையும் வுள்ள பொருள்கள் முழுதும் உமக்கே அதிகமாகக் கொடுத்தேன், இன்னமும் உமக்குப் பொருள் கொடுக்க என்னிடத்திலே வேறே உள்ளதோ. எ-று. (கசு)

தாருடனேசெந் தாமரை யாள்சேர் தடமார்பா
யாருடனேயிம் மோசமு ரைப்பா யறிவில்லாய்
ஊருடனேமுன் கூறிய பொன்னு முடனென்றே
நீருடனேநீ பேசிய வித்த நெறியுண்டோ.

இ-ள். மாலை யுடனே கூடச் செந்தாமரைத் திருவுஞ் சேர்வதான விசாலமான மார்பையுடைய அரிச்சந்திரா! யாருடனே இந்த மோசவார்த்தைபேசுகிறாய், ஓ புத்தியில்லாதவனே! உன்னுடைய ஊருடனே முன்னே நீ சொன்னபொருளும் கூடச்சேர்த்தல்லவோ தாரை நீருடனே சொல்லி எனக்குக் கொடுத்தது, அதுவுண்டோ இல்லையோ! எ-று.

அந்தப் பொருளையு முன் சொந்தமாகக் கொண்டேரோடே சேர்த்துத் தாரைவார்த்துவிட்டால் அதுவேறே கொடுக்கவேணு மென்று வழக்கு.

சொன்னது மாமுனி பானுகு லத்திற் றொல்வேந்தர்
அன்னது காணே நின்னிடை யென்றா னதுகேளா
மன்னவ னுள்ள நொந்தற நாணி மதிவல்லோம்
இன்னமு மொன்றுண் டென்னவி ரந்தே யிவைகூறும்.

இ-ள். சொன்னசொல் தப்பமாட்டார்கள் சூரியகுலத்துப் பழைய அரசர்கள்; அந்தநிலைமை உன்னிடத்திலே நான்கண்டதில்லையென்று விசுவாமித்திரர் சொன்னார், அதைக் கேட்டு அரசன் மனமானது மிகவு நொந்து வெட்கமுண்டாகி, ஒ புத்திவல்லவரே! இன்னமுமொரு வார்த்தை யுண்டென்று அவருக்கு நல்ல உப சாரங்கள் சொல்லி இவ்வார்த்தைகள் சொல்லுகிறானரசன். எ-று. (கஎ)

மேற்படி வேறு.

நித்த னைப்பிர மனையனை யாய்நினை வழிந்த
பித்த னைப்பொருள் வினவினை யெங்கியான் பெறுகோ
இத்த னைத்தினத் தீவதென் றியம்புவை யெனின்யான்
அத்த னைக்குநின் பொருடர வவதியீ தென்றான்.

இ-ள். நித்தியனான சிவனையும் பிர்ம்மாவையும் ஒப்பான மகாமுனிவரே உம்முடைய கோபத்தால் நினைவு தடுமாறின பயித்தியக் காரனான என்னைப் பொருள்கேட்கிறீர், நான் எங்கே போய்ச் சம்பாதித்துக் கொடுப்பேன்! ஆனாலும் இவ்வளவு நாளுக்குள்ளே பொருள் கொடுவென்று ஒருகெடுக் கொடுப்பீரானால் நான் அவ்வளவு நாளுக்குள்ளே உம்முடைய பொருள் கொடுக்க தகுந்தஅளவு இதுவென்று கொடுமென்று சொன்னேன். எ-று.

அவதி - கெடுவு. (கஅ)

ஊரு நாடுநீண் மலைகளுங் கானமு முழன்றே
யாரு னோடிழுப் புண்பவ ரவதியா ரிடுவார்
சோர முள்ளநீ கூறுமப் பொருடனைச் சொரிந்து
பேர டாவுனைத் தடுத்தனன் போகலை யென்றான்.

இ-ள். ஊரும் - நாடும் - நெடிய மலைகளும் - காடுகளும் உன்னோடு கூட அலைந்து யார் வழக்குப் பேசுகிறவர்கள்! அளவு கொடுக்கிறவர்கள் யார் ஒருவருங்கிடையாது. திருட்டுத் தனமுள்ள நீ முன்னே கொடுப்பதாகச் சம்மதித்துச்சொன்ன பொருள்கள்முழுதும் இங்கே கொண்டுவந்து குவித்துவிட்டு அப்பாற் போகக் கடவையடா! இதோ உன்னைப் பொருள் கொடாமலப் புறம் போகக் கூடாதென்று தடுத் திருக் கிறேன்; போகாதே யென்று சொன்னார். எ-று. (கக)

பக்க நோக்கிலன் பார்மிசை விழுந்தடி பூண்டு
கக்கல் வந்திட மிடற்றினை யொடுக்குமக் கதைபோல்
விக்கலும் பொருமலு மிசைமிசை யெழ விரிநீர்
உக்க கண்ணன்வா யூறுநீர் வற்றிட வுரைப்பான்.

இ-ள். (அதற்குச் சம்மதியாய்த் தடைக் குள்ளேநின்று புறத்தே) பாராமல் பூமியிலே விழுந்து வணங்கி அவர் பாதங்களைத் தன் சிரசின்மேற் கொண்டு, ஒருவனுக்குக் கக்குதல் வந்தபோது மற்றொருவன் வந்து அவன் கழுத்தை நெருக்கிப்பிடித்த கதைபோல, விக்குதலும் பொருமலு மேலுந்தோன்

விரிவான நீர்சிந்துகிற கண்களை யுடையவனாய் வாயிலே ஊறுகிற நீரும்வற்றிப்போக அரிச்சந்திரன் சொல்லுகிறான். எ-று. (௱)

இழைத்த தீவினை பொறுத்தன னரசுதா வென்னத்
தழைத்த வன்பொடு தந்தியா னகன்றிடுங் காலை
அழைத்த நீயெனக் கவதியிட் டாள்விடி னைய
பிழைத்தனன்னிதோர்பெரும்புகழ்பெறுதியென்றிரந்தான்

இ-ள். நீ செய்த குற்றத்தைப் பொறுத்தருளுகிறேன். உன்னுடையஅரசாட்சியைக் கொடுத்து விடென்று சொல்ல, நான் சந்தோஷமான பிரீதி யுடனே கொடுத்து விட்டுப் போகும் போது கூப்பிட்ட நீர் எனக் கொரு கெடு கொடுத்து ஒரு ஆளைக் கூட அனுப்பினால், சுவாமி, நான் தவறாமற், பொருள் செலுத்துவேன், ஆதலால், இது ஒரு பெரிய புகழாகப் பெறுவீரென்று மிகவும் உபசாரங்கள் சொன்னான். எ-று. (௱க)

சுற்றுண் டாகிய மலைகளில வனங்களிற் றொட்டுன்
பற்றுண் டாகிய பதிகளிற் படுபொரு ளல்லால்
உற்றுண் டாகிய நிதியமுன் றிருவுள முணர
மற்றுண் டாமெனின் விளம்பிடு வழங்கிட வென்றான்.

இ-ள். (பின்னும் அரிசசந்திரன் சொல்லுகிறான்; சுவாமி!) சுற்றிலு முண்டாகிய மலைகளிலும் வனங்களிலும் தொடர்நலா யுமது சம்பந்த முண்டாகியவூர்களிலுண்டான பொருள்களே யல்லாமல் எனக்கு வேறொன்று மில்லை ஆகையா லுமக்குச் சேரவேண்டியதாயுள்ள திரவியங்கள் உம்முடைய திருவுளந் தெரிவதாய் வேறேயெனக்கேனு முண்டாயிருந்தாற் சொல்லும், நான்கொடுக்கிறதற் கென்று சொன்னான். எ-று. (௱உ)

ஆமதேயெனி னரசகேளவதியா னுரைப்பன்
ஏமகூடமுங் காசியு மன்றியி னிப்பால்
தாமமார்பநீ தந்தநன் னாடிதற் கப்பாற்
போமதுண்டெனிற் பொருளுமப் பொருளலா தனியேல்.

இ-ள். இப்படிச சம்மதி யாகு மென்று சொன்னால், அரசனே! கேள் அளவு சொல்லுகிறேன், ஏமகூட பருவதமும் காசியுமல்லாமல் இதற்கு இப்பாலுள்ள நாடுகளே மாலையணிந்த மார்பை யுடையவனே! நீ யெனக்குத் தருந்த நல்லநாடுகள், இவற்றுக்கப்பால் நீ போவதுண்டானால் நீ கொடுக்கவேண்டிய பொருளும் அங்குள்ள பொருள்களை யல்லாது இங்குள்ள பொருள்களை நீகொடாதே. எ-று. (௱௩)

இந்த வெல்லையி னிப்பொரு ளிதலில் லாமல்
அந்த வெல்லையிற் பொருடர வல்லையே யானால்
முந்து சொன்ன முறைமையா லவதியா னீவேன்
தந்தி டாயெனிற் சத்திய மேதெனச் சாற்றும்.

இ-ள். இந்த வெல்லைக்குள்ளான இப் பாக்கியான பொருள்களைக்கொடுக்கிற தில்லாமல்; அந்த எல்லைக் குள்ளான பொருளை நீ கொடுக்க வல்

லவனானால். முன்னே நீசொன்ன நியாயப்படி யுனக்குக்கெடுகொடுக்கிறேன், அந்தக் கெடுவுக்குள்ளே நீ கொடாமற்போனால் அதற்குப் பிரமாணமென்ன சொல்லுகிறாயென்று விசுவாமித்திரர் கேட்க (அரிச்சந்திரன் சொல்லுகிறான்.) எ-று. (௧0௪)

நிற்பி ழைத்திடி னிலக்கியா னருநிதி யளிக்குஞ்
சொற் பிழைத்திடிற் சூளுற வெதெனிற் சொல்வல்
கற்பி ழைத்தநற் சொற்பர தாரத்தைக் கருதி
இற்பி ழைத்தவ னாவனின் னிருநிதிகொ டேனேல்.

இ-ள். உம்முடைய விஷயத்தில் அபராதமுடையவனானாலும், உமக்கு யான் அருமையான பொருளை கொடுப்பேனென்ற சொற்றவறினாலும் உறுதியான சபதவார்த்தை யாதென்றால் சொல்லுகிறேன், பதிவிரதாதர்மத்தையே நடத்திக்கொண்டு வந்து கணவனுக்குநல்ல புகழ்வரசெய்கிற அந்நியருடைய மனைவியை எண்ணி இல்லறம்வழுவ நடந்தவனாவேன். உம்முடைய பெரிதானபொருளைக் கொடாமற் போவேனே யானால். எ-று. (௧0௫)

காசி நாட்டினிற் சென்றவந் நாளினுங் கனகம்
ஆசின் மாதவ வளிப்பனவ் வவதியி லதுநீ
பேசி டாயென விருபது நாளையிற் பின்பு
மூசி வண்டுறை தாரினோய் தருகென மொழிந்தான்.

இ-ள். குற்றமில்லாத பெரிய தவத்தை யுடையவரே! காசி தேசத்துக்குப்போகிற அப்போ துமது பொருள்களைக் கொடுப்பேன், சொன்ன அந்தக் கெடுவிலே ஆதலால், அந்தக் கெடுவை நீர் சொல்லவேணுமென்று சொல்ல, அதற்கு நெருங்கி வண்டுகள் மொய்க்கின்ற மாலையையணிந்தவனே! இருபது நாளைக்குப் பின்பு கொடுக்கக்கடவை யென்று சொன்னார் விசுவாமித்திரர்.

அங்குற் றெய்தநா ளம்முறைக் கிருமடங் கடங்கா
எங்குற் றீட்டுவ திப்பொரு ளையவென் றியம்ப
நங்குற் றம்மிலை நாற்பதிற் றெட்டென நவின்றான்
உங்குற் றம்மிதற் குட்கொடா தொழிந்திடி னென்றான்.

இ-ள். அந்தக் காசிக்குப் போய்ச் சேருதற்கே அந்த இருபது நாளைக்கு இரண்டுபங்கான நாற்பதுநாளானாலும் போதாது, அப்படிக் கிருக்க நானெப்படி எங்கே போய்ச் சம்பாதிக்கிற திந்தப் பொருள்களை யெல்லாம் சுவாமியென்றுசொல்ல, அதற்கு நம்மாலே ஒருகுற்றமு மில்லாமல் நாற்பத்தெட்டு நாள் கெடுக்கொடுத்தேனென்று விசுவாமித்திரர்சொன்னார், அப்படிச்சொல்லிப் பின்னும் இந்தக் கெடுவுக்குள் நீ கொடாது போனால் உன் குற்றமாகவே முடியும் என்று சொன்னார். எ-று. (௧0௭)

இப்புத் திக்கினி தொத்தன னௌவிடு கென்று
குப்புற் றேகனுங் கௌசிகன் மீளவுங் கூவித்
தப்புத் தீரத் தந்தவப் பொருளெலாம் பதிவந்
தொப்புத் தந்துபின் போவென மன்னனுக் குரைத்தான்.

இ-ள். இப்படிச்சொன்ன இந்த அளவுக்கு நன்றாய்ச் சம்மதியானவனாகி இனி ஆள்விடுமென்று அவனைவிட்டுப் போகுமளவில். மறுபடியும் விசுவாமித்திரர் கூப்பிட்டு ஒருகாசளவாவது குறைவில்லாமல் நீ கொடுத்த அந்தப்பொருள் முழுதும் நானிருக்கு மிடத்துக்கு வந்து எனக்குச் சம்மதிப் படுத்திப் பின்பு அப்புறம் போகக் கடவையென்று அரிச்சந்திரனுக்குச் சொன்னார்.

பாரளித்தனை புரக்கநின் பதியிடைச் சென்றால்
ஆரளித்தன ரென்பாநின் னடியவ ரெல்லாம்
ஊரளித்திட வுடம்படத் துணிதியீ தொழியின்
நீரளித்தந்த வயோத்திமண் ணினக்கெனு மொழிந்தான்.

இ-ள். நான் ஆளும்படி உன்னுடைய உலகத்தை எனக்குக் கொடுத்தாய் என்று உன் பட்டணத்துக்குள்ளே நான்போனால் உனக்குயார் இந்தப் பட்டணமுழுதும் ஆளக்கொடுத்தவ னென்று உன்னுடைய ஊழியக் காரர்களெல்லாரும் கேட்பார்கள் ஆதலால் நீ உன் ஊரை யெனக்குக் கொடுக்க என்கூட வருவதற்குச் சம்மதிப்படு, இதற்கு நீ சம்மதியாமற்போனால் நீ தாரை வார்த்தது மாத்திரமே எனக்கிலாபம் உனக்குத்தான் ஊர் முழுது மென்று முடிவு பெறுமென்று சொன்னார். எ-று. (௱௯)

நன்று நன்றுநீ நகரியி லெழுந்தரு ளடியேன்
இன்று நின்பிற கெய்துவ லென்றினி தியம்பச்
சென்று கௌசிகன் றேர்மிசை யேறினன் றிரண்டு
நின்ற மாதவர் கரியினும் பரியினு நிறைந்தார்.

இ-ள். நல்லது நல்லது நீர் பட்டணத்துக் கெழுந்தருளும் நாயடியேன் இப்போதே உமதுபின் பற்றி வருகிறேனென்று சந்தோஷமாகச் சொல்ல; அங்கு நின்றும்போது விசுவாமித்திரர் தேர்மேலேறினார்! அவர் கூடவே கூடி நின்ற மகா முனிவர்களும் யானைகள்மேலுங் குதிரைகள் மேலும் ஏறிச் செல்லுவாரானார்கள். எ-று. (௱௰)

தேரின் மேலிமா முனிசெலச் சேனைபின் செல்லப்
போரில் வீரனுந் தேவியும் புதல்வனு நடுவே
பாரின் மேனடந் தடிபொரு துடல்பதை பதைக்க
வேரி வாவிவிட் டயோத்தியை நோக்கியே விரைந்தார்.

இ-ள். அப்படித்தேர்மே லேறிக்கொண்டு மகாமுனிவரான விசுவாமித்திரர்போகச் சேனைகளும் பின்னே செல்ல. யுத்த சாமர்த்தியத்தை யுடையவீரனை அரிச்சந்திரனும் அவன் தேவியும் மகனும் அந்தச்சேனைகளுக்கு நடுவே மண்மேல் நடந்து கால்கள் பொறுக்க மாட்டாமல் உடம்புதுடிதுடிக்க மணம்பொருந்திய அந்தக் குளக்கரையைவிட்டு அயோத்தியா புரியைக் குறித்துப் போனார்கள். எ-று. (௧௧௧)

கன்னலம் பெருங் கழனியுஞ் சோலையுங் கடந்து
வன்ன மாமணிப் புரிசையின் புறத்துவந் தணைந்தார்

நன்னகர்ப் பெருஞ் சனமெல்லா மெதிர்கொண்டு நண்ணி
மன்னனைச் செழுந் தேர்மிசைக் கண்டிலா மருண்டார்

இ-ள். கரும்புகள் விளைகின்ற அழகிதான பெரியவயல்களும் சோலைகளும் கடந்து சென்று ஒளிபொருந்திய பெரிதான அழகையுடைய அயோத்திமா நகர் மதிலுக்குப் பக்கமாகவந்து கூடினார்கள். அப்போது அந்த நல்லநகரத்தி லுள்ள மகாசனங்களெல்லாம் எதிர்கொண்டுவந்து பார்த்துத் தங்களரசனைத் தேர்மேற்காணாதவராய் மயங்கினார்கள் எ-று (ககஉ)

இரத மேன்முனி யேறிய தகிதமோ விதமோ
சரத மோவெனு மையந்தார் அந்தவண் சார்ந்தார்
விரத மிவ்வகை விளைந்தவா றென்றென மெலிந்து
கரத லங்களான் முரத்தறைந் தழுதனர் கதறி

இ-ள். இரதத்தின்மேலே இந்த முனிவரேறிவருகிறது தகுமோ? அல்லது தக்கதுதானோ? அல்லது மெய்யோ பொய்யோ வென்பதான சந்தேகத்தை யுடையவர்களாய் அங்கேவந்து கூடினார்கள். தம்முடைய அரசனுக்கு இவ்வகை விரதவேஷம் எப்படி உண்டாயிற்றென்று மெலிவுகொண்டு கைகளாலே மோதிக்கொண்டு கதறி அழுதார்கள் எ-று (கக௩)

ஏங்குவா ரிளங் கொடியையுஞ் சேயையு நோக்கித்
தாங்கு வார்செழுந் தாளின்மேல் வீழ்ந்துவீழ்ந் தயர்வார்
ஓங்கி யோங்கி யெய்யறைந் தொளிமுகங் கன்றி
வீங்கு வாரழு வார்விழு வாருளம் மெலிவார்

இ-ள். அப்படி அழுகிறவர்கள் சந்திரவதியையும் அவள் பிள்ளையையுந் தாங்கி யெடுத்துக் கொள்வார்கள். பின்னும் அவர்களுடைய செழுமையான பாதங்களிலே விழுந்து விழுந்து சோர்வார்கள். கைகளாலோங்கி யோங்கி அடித்தடித்து ஒளியையுடைய முகங்கள் கன்றுதலாய வீங்கப் படுவார்கள். அழுவார்கள், விழுவார்கள் மனந் தளர்வார்கள் எ-று (ககச

மன்ன வற்குநம் மன்னைக்கு மைந்தற்கு மந்தோ
என்ன பாவம்வந் தெய்திய தென்றுநின் றேங்கப்
பொன்னகர்ப் பெரும் புரிசையின் புறத்துவந் தணுகி
இன்னல் செய்தவன் கௌசிக னிரதம்விட் டிழிந்தான்

இ-ள். அரசனுக்கும் நமது நாயகியான சந்திரமதிக்கும் பிள்ளைக்கும் ஐயோ! என்ன பாபானுபவம்வந்து கூடிற்றென்று இருந்தழ அந்த அழகான நகரி னுடைய பெரிதான மதில்வாயிலுக்குப் பக்கமேவந்து சேர்ந்து இப்படித்துன் பத்தை யுண்டாக்கின அந்த விசுவாமித்திரர் தேரைவிட்டிறங்கினார் எ-று

கோசி கன்றனை யுடன்கொடு சோர்ந்தார் புகுந்து
வாசி யுள்ளவு மதகரி யுள்ளவும் வழங்கிக்
காசி னல்லறை பூசனை யறைமெலாங் காட்டித்
தூசி நல்லறை துயிலறை பாரெனச் சொன்னான்.

இ-ள். அந்த விசுவாமித்திரனைக் கூடக்கூட்டிக் கொண்டு பெரியபட்டணத்துக்குள்ளேசென்று தனக்குள்ள குதிரைகளையும் பின்னுமுள்ள மதயானைகளையும் கொடுத்து, நல்ல பொக்கிஷவீட்டையும் பூசைவீட்டையு முதலான எல்லாங் காட்டிக்கொடுத்து வஸ்திரங்களுள்ள வீட்டையும் நித்திரை செய்கிற வீட்டையும் பாருமென்று அரிச்சந்திரன் சொன்னான். எ-று.

மன்னனின் முன்னவ ரிருபத் தொருவ ருண்டந்த
மன்னரா வைத்தசெம் பொன்னறை யீதென வழங்கி
அன்ன சத்திர மிவையிவை யடியனேன் வைத்த [ழோன்
பொன்னறைத் தொகைதொகக் கொடுத்தனன் புக

இ-ள். எனக்கு முன்புள்ள அரசர்கள் இருபத்தொரு பேர்களுண்டு அந்த அரசர்கள்வைத்த செம்பொன்னுள்ள வீடு இதென்று சொல்லிக்கொடுத்து இவைகள் அன்னசத்திரங்கள்; இவைகள் அடியேன் வைத்திருந்த பொன்னிருக்கிற வீடுகள் எல்லாம் ஒப்புக்கொள்ளுமென்று கீர்த்திமானான அரிச்சந்திரன் கொடுத்தான். எ-று. (கக௭)

ஆட ரங்குக ளம்பல மடமன்ன சாலை
மாட மாளிகை மண்டப மஞ்சனச் சாலை
கூட கோபுர மடைப்பள்ளி கோயில்செய் குன்றம்
பீட மாதன மிவையெனக் கொடுத்தனன் பின்னை.

இ-ள். ஆடுகிற நாடகசாலையில் பொதுச்சாவடிமடம் - அன்னசத்திரம் - மாடமாளிகை-மண்டபம்-திருமஞ்சனசசாலை- கூடகோபுரம் - திருமடப்பள்ளி கோயில் - செய்குன்றம் - பீடம் - ஆசனம் இவைகளென்று பின்னுங்காட்டிக் கொடுத்தான். எ-று. (கக௮)

இந்த வாதனத் திருந்தரு ளெனமுனி யிருந்தான்
அந்த வெல்லையி லரசனு மவனடி பணிந்தான்
வந்த மன்னரு மமைச்சரு மங்கையர் குழாமும்
சுந்த ரக்கழற் சேனையு மவனடி தொழுதார்.

இ-ள். இந்த ஆசனத்தின்மேலே எழுந்தருளு மென்றுசொல்ல, அப்படியே விசுவாமித்திரர் அதிலிருந்தார். அப்போது அரிச்சந்திரனும் அந்த முனிவருடைய பாதங்களை வணங்கினான். கூடவந்த அரசர்களும் மந்திரிகளும் பெண்கள் கூட்டங்களும் அழகிதான வீரக்கழல்கள் கட்டின சேனைகளும் அரிச்சந்திரனுடைய பாதங்களை வணங்கினார்கள். எ-று. (கக௯)

தொழுதெ ழுந்துதஞ் சுடர்முடி மன்னனை நோக்கி
அழுதுநின் றவர்தமை வளையவன் கையா லமைத்துப்
பழுதி லாதுநீ ரெமக்குமுன் செய்தவப் பரிசே
முழுது மிந்தமா முனிவற்கு முறைசெயு மென்றான்.

இ-ள். அப்படிவணங்கி யெழுந்திருந்து தமது ஒளிபொருந்தின கிரீடாதிபதியான அரசனைப்பார்த்து அழுதுகொண்டு நிற்கின்ற அந்த அரசர்கள்

பிரதானிக ளெல்லாரையும் அரிச்சந்திரன் தன் கையா லடங்கச்செய்து, குற்றமில்லாமல் நீங்கள் எங்களுக்கு முன்னே நடந்துவந்த அந்தப் பிரகார மாகவே உள்ள காலமுழுதும் இந்தமகாமுனிவருக்கு நீதிசெய்யுங்க ளென்று சொன்னான். (கஉ0)

எவற்கு நல்லவர் திரிபுர மெரியெழச் சிறித்த
சிவற்கு நல்லவர் செங்கண்வா ளிக்குநான் முகத்த
னவற்கு நல்லவ ரமரர்க்கு நல்லவ ராவர்
இவற்கு நல்லவ ரெனக்குநல் லவரென விசைத்தான்.

இ-ள். இந்த முனிவரோ எல்லாருக்கும் நல்லவராய்ச் சிறந்தவர்; இன்னமும் திரிபுரதகனமாக நெருப்புத்தோன்ற சிரித்த பரமசிவனிலுஞ் சிறந்தவர்; செங்கண்மாலான விஷ்ணுவினும், சதுர்முகனான பிரமாவினுஞ் சிறந்தவர்; தேவர்களினுஞ் சிறந்தவர் ஆன இந்த முனிவருக்கு நல்லவரானவர்களே எனக்கு நல்லவராவரென்று சொன்னான். எ-று. (கஉக)

வைய மேழுடை மன்ன னவ்வுரை வழங்கச்
செய்ய வாய்மலர் செங்கையாற் புதைத்தடி வணங்கி
ஐய நின்மொழி மறுப்பவ ராகெனு முகத்திற்
கைய றைந்தழக் கண்டவக் கௌசிகன் கருதும்.

இ-ள். ஏழுலகத்தை யுடைய அரிச்சந்திரமகாராசன் அந்த வார்த்தை சொல்லவே, எல்லாரும் தங்கள் சிவந்த மலர்போலும் வாயைக் கையால் மூடிக்கொண்டு பாதம்வணங்கி ஐயனே! உமது வார்த்தையைத் தடுப்பவர்களிங்கே யாரிருக்கிறார்களென்று தாங்கள் முகத்திலே கையாலே மோதியடித்துக்கொண்டு அழ அதைக்கண்டு விசுவாமித்திரர் ஆலோசிக்கிறார். எ-று.

அறந்தி ரண்டுரு வாகிய வரசனை யவமே
புறம்ப றைந்தனம் புன்மையேம் புந்தியில் லாமல்
திறந்தெ ரிந்தவர் செயலிதோ வெனுக் கௌசிகன் மெய்
மறந்தி ருந்துபின் மற்றுமோர் வாசக முரைப்பான்.

இ-ள். தருமமே திரண்டுவடிவா யிருக்கிற அரசனை அற்பகுணத்தை யுடைய நாம் புத்தியில்லாமல் வீணாக இந்திரன் முன்னே நிந்தித்துளறினோம். இதுநிற்க, நீதிதெரிந்தவர்கள் செய்கை இப்படியோவென்று விசுவாமித்திரர் தம்முடம்பு மறந்திருந்து பின்னுமொரு சொற்சொல்லுகிறார்.

இந்த வையமு மிருநிதிக் குழுவுமிப் பொருளும்
முந்து நீதர மொழிந்தவப் பொருளும்யா னிழப்பேன்
எந்தன் மக்களை மணம்புணர்ந் திந்நக ரிருவென்
றந்த ணன்மகிழ்ந் தரசனைக் கைபிடித் தமைத்தான்.

இ-ள். இந்த வுலகமும் பெரிதான பொருட்குவியலும் இந்த வஸ்துக்களும் முன்னே நீதருவதாகச்சொன்ன அந்தப் பொருளும் நான் விட்டுவிடுகிறேன்; என்னுடைய குமரிகளைக்கலியாணம் பண்ணிக்கொண்டு இந்தப்பட்ட

ணத்திலேதானே இருவென்று விசுவாமித்திரர் சந்தோஷங்கொண்டு அரிச்சந்திரன் கையைப்பிடித்து அவனைப்பச் சமாதானஞ் செய்தார். எ-று.

கைபிடித்தலு முனிவனைக் கால்பிடித் திறைவன்
மெய் பிடித்தலு மிக்கவை செய்தலு மலலால்
மைபிடித்தகட் பரத்தையர்ப் புணர்தலும் வழங்காப்
பொய்பிடித்தலு மறனல செய்தலும் புகழோ.

இ-ள். அப்படி அவர் கையைப்பிடிக்கவே. அரசனானவன் அந்த விசுவாமித்திருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு சத்தியத்தையே உறுதியாகப் பற்றி அதற்கு மேலான காரியங்களை நடத்துகிறதே யல்லாமல் மையிட்ட கண்களையுடைய பரத்தையர்களைக் கூடுகிறதும், கொடுப்பதற்காகப் பொய் சொல்லுதலும், தருமமல்லாத வைகளைச் செய்தலும் கீர்த்திக்குக் காரணமாகுமோ. எ-று. (கஉ௫)

உமக்கி யான்சொலல் வேண்டுமோ மனுவின்பி னுதித்தே
எமக்கு முன்னர சாண்டபார் வேந்தர்மூ வெழுவர்
தமக்கு முன்னொருத் தருக்குந் தாங்கரும் பெரும்பாரம்
சுமக்க வல்லனோ தனிதவிச சொல்லெனாத் தொழுதான்.

இ-ள். சுவாமி! இன்னமும் உமக்கு நான் சொல்லத்தக்கது முண்டோ! மனுவுக்குப் பின்னேபிறந்து எங்களுக்கு முன்னே பூமியை அரசாண்ட அரசர்கள் இருபத்தொருபேர்கள் அவர்களுக்கு முன்னே ஒருவராலுந் தாங்குதற்கரிதான நீதியான பெரியபாரத்தை நான் தாங்கவல்லவனுவேனோ? நீரிந்த பாவசெய்கையான சொற்சொல்லுதலை இனி விட்டுவிட வேணுமென்று அவர் பாதத்திலே விழுந்து வணங்கினான். எ-று. (கஉ௬)

ஆளைக் கூட்டமயான் பொருந்திலேன் சொன்னவிப்பொருளுக்
காளைக் கூட்டென வாசனை நோக்கியே முனிவன்
நாளைக் கூட்டுவ னின்றுநீ நட்புறத் தென்னத்
தாளைக் கூட்டர வாகிய தலையினன் சாற்றும்.

இ-ள். வேசைக் கூட்டத்துக்கு நான் சம்மதிக்கமாட்டேன்; நான் கொடுப்பதாகச்சொன்ன இந்தப்பொருளுக்காக ஒரு ஆளைக்கூட்டி என் பின்னே வரவிடுமென்று சொல்ல, அதற்கு அரசனைப்பார்த்து விசுவாமித்திரர் நாளைக்குக் கூட்டியனுப்புகிறேன்; இன்றையத்தினமே வெளியே நீ போவென்று சொல்லவே அரசன் அவர் பாதங்களைச் சேர்வனவாகத் தன்றலைமேற்கொண்டவனுகிச் சொல்லுகிறான். எ-று. (கஉ௭)

சிறுத்த நாயினேன் செய்தவிப் புன்மைக ளெல்லாம்
பொறுத்தல் வேண்டுமென் றடியிணை யிருகரம் பூண்டான்
கறுத்த சிந்தையன் கௌசிகன் பொறுத்தன னென்றான்
மறுத்து முன்னுமொன் றுரைத்திடக் கேளென வள்ளல்.

இ-ள். சிறிதான நாய்போன்ற அடியேன்செய்த இந்தப் புல்லியவைகளையெல்லாம் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டுமென்று அவரிரண்டு கால்

களையும் தன்கைகளாலே பறறினான். அதற்குச சினமுள்ளமனத்தை யுடைய யவரான விசுவாமித்திரர் பொறுத்தோமென்றுசென்னார். மறுபடியும் சுவாமி ! இன்னமொன்று சொல்லிக் கொள்ளுவதுண்டு; அதைக் கேளுமென்று பிரபுவான அரிச்சந்திரன். எ-று. (கஉஅ)

கையி னாற்பிடித் தமைச்சரைக் காட்டிமற் றிவர்கள்
வையி னுந்தினை மறுக்கினு மற்றுமோர் குற்றம்
செய்யி னும்பொறுத் தருள்செய்வாய் செலகதி யளித்த
ஐய னேயுன தடைக்கல மிவரென வளித்தான்.

இ-ள். தன்கையினாலே மந்திரிகளைப் பிடித்துக்காட்டி. ஐயா! இவர்கள் உம்மை வைதாலும் உம்மை வேண்டாமென்று சொன்னாலும் உமதுசொல்லைமறுத்தாலும் வேறேயொரு குற்றஞ்செய்தாலும் நீர்பொறுத்து அருள்செய்யவேண்டும். எனக்குப் போகும்படி விடைகொடுத்த சுவாமி ! இவர்களெல்லாம் உமக்கே அடைக்கலப்பொருள்களென்று அவரிடத்திலே சேரக்கொடுத்தான். எ-று. (கஉகூ)

குடைநி ழற்பொலி கௌசிக னடியின்மேற் கொடிநே
ரிடையி னாளையு மகனையு மிறைஞ்சவித் தேத்திப்
படையை நோக்கிநீர் நின்மினென் றங்கையாற் பணிந்து
விடையி தேயென்னப் பணிந்தனன் வேதர்க்கு வேந்தன்.

இ-ள். குடைநிழலின்கீழே விளங்குகின்ற விசுவாமித்திரருடைய பாதங்களிலே கொடிபோலு மிடையையுடைய சந்திரவதியையும் மகனையும்வணங்கச்செய்துகொண்டு, தானுந்துதித்துச சேனைகளையெல்லாம் பார்த்து நீங்கள் நில்லுங்களென்று தனதழகானகையாலே அமையமிட்டு, விடை இதுதானென்று விசுவாமித்திரரை வணங்கினான் அரசர்க்கரசனானவன். எ-று.

பரமு னக்கென் றிறை யகன் றனன் பரிந்து
புரமெ ரித்தவ னனையமா முனிபுவி புரந்தான்
சிரம நீங்குவீ ராகள்செறி மன்றருந் தெருவும்
பிரம சாரிகண் மலிந்தனர் பெருகுமுட் களிப்பால்

இ-ள். இனிப் பூமிபாரம் உமக்கேயென்று சொல்லிவிட்டு அரிச்சந்திரன் அப்பாற்போனான். பரிவுகொண்டு திரிபுர தகனம்பண்ணின சிவனையொப்பான விசுவாமித்திரர் உலகையாண்டார். ஆயாசந் தீர்ந்திருக்கின்ற வீரர்கள் கூடின சபைகளிலும் தெருக்களிலும் எங்கும் பிரமசாரியப் பிராமணர்கள் கூடினார்கள். பெருகுவதான உள்ளக்களிப்புடனே. எ-று. (கங்க

காமத் தோகையர் கருங்குழல் விரிததனர் பரப்பிச்
சேமத் தூமங்கள் காட்டுமா சிறப்பெலாந் தேய்ந்து
தாமத் தூமலர்த் தருப்பைகள் சமிதைகள் விரித்த
ஓமத் தூபமே யோங்கின வுயர்மனை யெல்லாம்.

இ-ள். அரசனுக்குள்ள காமப்பெண்களெல்லாம் தங்கள்கூரிய கூந்தலை விரித்துப் பரவவிட்டு அவைகளுலர்வதற்காக அகிற்புகைகளூட்டுகின்ற அவ்வகைச்சிறப்புகளெல்லாம் இப்போது குறைவாய், ஒளிபொருந்தின நல்லமலர்களும் தர்ப்பைகளும் விரித்திருப்பதான ஓமங்கள்செய்கிற புகையே உயர்ந்த வீடுகளின்மேலெல்லாம் கிளர்வதாயின. எ-று. (க௩௨)

தோலி னோர்களுந் துரகதத் தோர்களுஞ் சோதி
வேலி னோர்களு மாதரு மிடைந்தமை மாறி
நூலி னோர்களு நுண்ணிடைக் கவுந்தியர் களுமுக்
கோலி னோர்களு மலிந்தனர் கொடித்தெரு வெல்லாம்.

இ-ள். யானைவீரர்களும் குதிரைவீரர்களும் ஒளிகொண்ட வேல்வீரர்களும் இவர்கள் பெண்களும் நெருங்கியிருப்பவைபோய், சாஸ்திரம் படிக்கிற பிரமசாரியர்களும் இடையிலே அரைநாணும், கௌபீனமுமுள்ள முனிவர்களும், திரிதண்ட சந்யாசிகளும், மிகுதியாய்க் கூடினார்கள். அந்தக் கொடிகளாடுகிற தெருக்கள் ளெல்லாம். எ-று. (க௩௩)

புனித மாதவர் சூழ்ந்திடப் புரவலர் போற்றக்
கனிதி ருந்திய செய்யவாய்க் கன்னியர் காண
நனிதி ருந்திய நவமணி யாதனத் தேறி
இனிதி ருந்துல காண்டனன் கௌசிக னிப்பால்.

இ-ள். இப்படிப் பரிசுத்தரான மகாமுனிவர்கள் சூழவும், அரசர்கள் சேவிக்கவும், கொவ்வைக் கனிபோற் றிருந்தியதான சிவந்த வாயை யுடைய பெண்கள் பார்க்கவும், விசுவாமித்திரமுனிவர், திருத்தமான நவரத்தின சிங்காசனத்தின்மேலேறிச் சந்தோஷமாயிருந்து உலகமெல்லாம் ஆண்டார் இனிமேல். எ-று. (க௩௪)

சூழ்வினைக்காண்டம் - முற்றிற்று.

ஆக விருத்தம்-௭௱௨

பரமபதிதுணை.

ஆறாவது,

நகர் நீங்கிய காண்டம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தலமுழுதுந தவமுனிவன் றனக்களித்தே மினியுறைதந் றகுதியென்றன், றிலகுமணி மண்டபமு மெழின்மணிச்சிங் காதனமு மிழிந்து போந்து, பலவரச ருடனமைச்ச ரழுதுடன்போய்ப் பரதவிக்கப் பதாதி மொய்க்கக், குலமகனு மடமயிலு முன்னடக்கப் பின்னடந்தான் கொற்ற வேந்தன்.

இ-ள். உலக மெல்லாம் தவமுனிவரான விசுவாமித்திரருக்குக் கொடுத்து விட்டோம், இனி இங்கே யிருக்கிறது தகா தென்று சொண்டு, விளங்குகின்ற ரத்தின மண்டபங்களையும் அழகான ரத்தின சிங்காசனங்களையும் விட்டிறங்கிவந்து அநேகம் அரசர்களுடனே மந்திரிகள் அழுதுகொண்டு உடன் வந்து துக்கிக்க சேனைகளுஞ் சூழ, தனது குல புத்திரனும், சந்திரவதியும், முன்னேசெல்ல, வெற்றிபொருந்திய அரிச்சந்திரமகாராசன் பின்னேசென்றான்

தொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து துடிமுரசந் துறந்து தாமக், குடைதுறந்து வெண்கவரிக் குழாந்துறந்து கரிபரிதேர்க் குலந் துறந்து, கடைதுறந்து மறுகணைந்த காவலன்றன் றிருமுகத்தைக் கண்டோ ரெல்லாம், அடையமன மழிந்துருகி யவரவரோ முகத்திலறைந் தழுவாரானார்.

இ-ள். மாலையுமில்லாமல் கிரீடமு மில்லாமல் ஆபரணங்களு மில்லாமல் உடுக்கை-பம்பை-பேரிகை முதலான வாத்தியங்களு மில்லாமல் வெண்மையான சாமரக்கூட்டங்களு மில்லாமல் யானை - குதிரை தேர்க் கூட்டங்களுமில்லாமல் அரண்மனை வாயிலைவிட்டு வீதியிலே வந்த அரசனுடைய திருமுகத்தைப்பார்த்தவர்க ளெல்லாரும் அவர்களை நெருங்கி மனத்தே துன்ப முற்றுருகுதலாய் அவரவர்களும் முகத்திலே அடித்துக் கொண்டே அழத் தொடங்கினார்கள். எ-று. (உ)

மயிரோடுஞ் சிறையிழந்த மோகில்போல் வேலியோடு வரம்பிழந்த, பயிரோபோற் கரமிழந்த கரியேபோற் பொறியிழந்த பாவையேபோல், உயிரோபோய்ப் பரதவிக்கு முடலேபோன் மத்தாவுள்ளுடைந்தலம்புந், தயிரோபோற் றளர்ந்தலைந்து தத்தமக்கு நிகழ்ந்த வெலாஞ் சாற்றலுற்றார்.

இ-ள். உரோமங்களுடனே யிறகு போன பட்சியைப் போலவும், வேலியுடனே சிறவரம்புகளுமில்லா தழிந்து கிடக்கிற பயிர்கள் போலவும், துதிக்கை யறுப்பட்ட யானையைப்போலவும், சூஸ்திரமற்ற பிரதிமையைப்போலவும். உயிர் போய்த் துடிக்கிற உடம்பைப் போலவும். மத்திஞலே உள்ளெல்லாம் உடைபட்டுச் சிதருகிறதயிரைப்போலவும், தளர்ந்து அலைச்சல் கொண்டு தங்கள் தங்களுக்குத் தோற்றியவைகளை யெல்லாஞ் சொல்லத்தொடங்கினார்கள். எ-று. (௩)

கொடிமீது செறிதேருங் குஞ்சரமும் பொற்சிவிகைக் குழாமுமின்றிப், படிமீது நடந்திடவும் படித்தனவோ பார்வேந்தன் பாதமென்பார், அடிமீது தொழுமரசர் முடிமீது மடிமீது மன்றிச் சுட்ட, பொடிமீது நடந்திடவும் பொறுத்தனவோ குலகுமரன் பொற்றாளென்பார்.

இ-ள். மேலே கொடிகட்டியிருக்கிற தேரும், யானையும், பொன்பல்லக்கு முதலான வாகனக் கூட்டங்களிலே யேறிவருவ தில்லாமல் மண்மேலே நடந்துசெல்லவும் கற்றிருக் கின்றனவோ, இந்த வுலகத்தை யாளுகின்ற அரசனுடைய பாதங்களென்று சிலர் சொல்லுவார்கள், கால்களிலே வந்து வணங்குகின்ற அரசர்களுடைய தலைமேலும் மடிமேலுஞ் செல்லுகிற தில்லாமல் வெயிலாற்கொதிப்புள்ள தூளிகளின்மேலே நடக்கவும் பொறுப்பன வாயினவோ குலபுத்திரனுடைய பொன்மயமான கால்களென்று சிலர் சொல்லுவார்கள்.

அஞ்சாயன் மடவன்னத் தணிதூவி யதனாலு வனிச்சத்தாலும், பஞ்சாலும் பதைபதைக்கும் பதத்தாட்குக் கானடையோபலித்ததென்பார், செஞ்சாலிக் கோசலமும் பிராசகுல வளநாடுந் தேவர் நாடும, அஞ்சாமற் காத்தருளெம் பெருமானுக் கிதுவோவந் தடுத்த தென்பார்.

இ-ள். அழகிய சாயலையுடைய இளமையான அன்னத்தினது அழகான இறகுகளினாலும் அனிச்சமலர்களினாலும், பஞ்சினாலும், பட்டபோது துடிதுடிப்பதான கால்களையுடைய சந்திரவதிக்குக் காலால் கடந்து செல்லவோபலிதமாயிற்றென்று சிலர் சொல்லுவார்கள் சிவந்த நெல் விளைவதான கோசல நாட்டையும், மற்ற அரசர்களுடைய சிரேஷ்டமான நாடுகளையும், தேவருடையநாடுகளையும், பயப்படாமற் காத்தருளுகின்ற எங்க ளரசனுக்கு இப்படியோ வந்து கூடுதலாயிற்றென்று சிலர் சொல்லுவார்கள். எ-று. (௫)

கச்சைக்குத் திளமுலைச்சந் திரமதிதன் கணவனொடு கழுமியேகக்
கொச்சைக் குவலயமயில் கொற்றவனை விட்டுமுனிக் கூட்டம்வேட்[டாள்
இச்சைக் கிதம்பேசி யீந்தாளைப் பாராட்டி யீவார் தம்பாற்
பிச்சைக்கு வந்தவரோ பெண்ணுக்கு மணவாளப்பிள்ளையென்பார்

இ-ள். இரவிக்கையைப் பீறுவனவான இளமையைக் கொண்ட தனங்களையுடைய சந்திரவதி தனது நாயகனுடனே சேர்ந்து இந்தவீதி வழியே செ

ல்லுவதாக, அறிவில்லாத இந்தப் பட்டணமாகிய பெண், அரசனைவிட்டு முனிவர்கூட்டத்தை விரும்பிச் சென்றாள், ஒருவருடைய மனது சந்தோஷமாக அவருக்கு வேண்டிய நன்மைகளைச சொல்லிக் கொண்டாடி இன்னமும் கொடுப்பவர்களிடத்திலே பிச்சைக்கு வருகிறவர்களோ அந்தக் கொடுப்போருடைய பெண்ணுக்கு மணவாளனாகிறதென்று சிலர் சொல்லுவார்கள். எ-று. (௬)

முல்லைமுகை நகையாளு முடிவேந்த னும்மகனு முழுதும் போன, எல்லையிலா மணவறைபு மலரணையு முண்டோவென் றிரங்கி வீழ்வார், தொல்லைவிதிப் பயனாலே வந்திரந்த மாமுனிவன் சொன்ன தெல்லாம், இல்லையெனா நீரமைதாருக் கித்தனையோ பெறும்பேறென் றேங்கி வீழ்வார்.

இ-ள். முல்லையரும்புபோன்ற பல்வரிசைகளுடைய சந்திரவதியும், கிரீடாதிபதியான அரசனும், புத்திரனும், முழுதுஞ் செல்வனவான இடங்களெல்லாம் மணவறைவீடும் புஷ்பமெத்தையும் உண்டாயிருக்குமோவென்று துக்கித்துச சிலர் கீழேவிழ்வார்கள், முன்னை விதிப்பயனாலே வந்து யாசகஞ் செய்த பெரிய ஒரு முனிவன் கேட்டனவெல்லாம் முழுதும் இல்லை யென்னாமற்கொடுத்தவர்களுக்கு இப்படித்தானோ அவர்களடைவதான பலனென்று சிலர் அழுது கொண்டே கீழே விழுவார்கள். எ-று. (௭)

வல்லார்க்கு மாட்டார்க்கு மறமேநன் றென்றுரைப்பார் மறநன்றாமோ, அல்லார்க்குங் குழன்மடவீ ரறமேநன் றென்றுரைப்பா ரதுநன்றாகில், நல்லார்க்குந தீயார்க்கு மெல்லார்க்கு மொருமையினா னடவா தென்னே, எல்லார்க்கு முளதாகி லெங்கோனுக் கிலையான தென்னோ வென்பார்.

இ-ள். சிலர் செய்யவல்லவர்க்கும் செய்ய மாட்டாதவர்க்கும் வீரமேநல்லது, அவ்வீரமே வேண்டுமென் பார்கள், இருள்போல்வதாய் வண்டுகளொலித்து மொய்ப்பதான கூந்தலையுடைய பெண்களே, வீரம் வேண்டுவதில்லை, தருமமே நல்லது, அதுவேண்டுமென்பார்கள் சிலர். அந்தத் தருமம் நல்லதானால் நல்லவர்களுக்குங் கெட்டவர்களுக்கும் எல்லாருக்கும் (சமமாய்) ஒருவிதமாகவே அந்தத்தருமம் நடவாதிருப்பதற்கு என்னகாரணம், தருமம் செய்வோரெல்லார்க்கும் (அது நன்மை பயக்கிக் கொண்டு) இருக்குமென்று சொன்னால், எங்களரசனுக்கு மாத்திரம் அந்தத் தருமம் துணை செய்யாமல் இப்படி போகவிட்டது யாதுகாரணமென்பார்கள் சிலர். எ-று. (௮)

என்றால் அரசருக்கு அறமும் மறமும் வேண்டுமென்பதுங், பொதுவில் எல்லார்க்கும் அறமொன்றுமே போதுமென்பதும் கருதது.

கொண்டிருந்த வளநாடுங் குறையாத பெருநதிருவுங் கொடித்திண் டேரும், பண்டிருந்த மாளிகையும் பரிசனமுந் தமக்களித்துப் பாலனோடும், வண்டிருந்த தாரானும் வாணுதலும் வறிஞோர் போல்வனத்தே போகக், கண்டிருந்தும் விலக்காத கௌசிகனார் தம்மனமுங் கல்லோ வென்பார்.

இ-ள். தாங்கள் நிலைகொண்டிருந்த வளமையுள்ள நாடும், குறையாதபெரிதான செல்வமும் கொடிகட்டின பலமானதேரும், முன்னே தாங்களிருந்த வீடும். ஊழியக் காரரும், தமக்கே யென்று கொடுத்து விட்டு, மகனுடனே வண்டுகள் மொய்க்கின்ற மாலை யணிந்த அரசனும், தேவியும், தரித்திரரைப் போலக் காட்டுக்குச் செல்ல இதைப் பார்த்துக் கொண்டிருந்து எவ்வளவும் விலகாதிருக்கின்ற விசுவாமித்திரருடைய மனதும் கல்லோடேசேர்ந்ததோ வென்று சிலர்சொல்லுவார்கள். எ-று. (௯)

செம்மையினு லுலகமெலாந் தனக்களித்துச் செறிவனத்தே தேம்பிச் செல்வோர், தம்மையவ ரகமுந்திருத்தி யொருமனைக் குத்தலமீயாத் தறுகட் பாவி, நம்மையெலாங் காத்தளிக்க வல்லவனோ வெனக்கரங்கண்டுக்கி மாழ்கி, வெம்மையினுல் வெய்துயிர்ப்பார் மின்னுமை யிடிவந்து வீழ்ந்த தென்பார்.

இ-ள். செவ்வைக் குணத்தினுலே உலக முழுதும் தமக்குக் கொடுத்து விட்டு நெருங்கின காட்டுக் குள்ளே தளர்ந்து போகிறவர்களைக் கூப்பிட்டு அவர்களிருக்கும்படி ஒரு வீட்டுக்குள்ளே இடமும் கொடா திருக்கிற அஞ்சுதலில்லாத பாவியான விசுவாமித்திரன் நம்மை முழுதுங் காத்து ரட்சிக்க வல்லவனுவனோவென்று கைகள் நடுங்கு தலாய்த் தீராத்துக்க வெப்பத்தினுலே வெப்பமாகப் பெருமூச்சுவிடுவார்கள், சிலர், மின்ன லில்லாமல் இந்த வூரிலே இடிவிழுந்தது யென்பார்கள் சிலர். எ-று. (௧௦)

என்றலமந் தனைவோரும் வயிறலைந்து விழுந்தேங்கி யிரங்குங் காலை, கன்றினொடும் பிடியினொடுங் கிளையினொடும் வனம்புகுதுங் களிறே போல, இன்றளித்த தருண்முனிவர்க் கேற்றனவோ வேற்றிலவோ வென்னு மேங்கிக், குன்றனைய மதில்கடந்தே தனிநடந்து சரையுவினைக் குறுகி னுனே.

இ-ள். என்று சொல்லித் துக்கித்து எல்லாரும் வயிற்றிலே யடித்துக் கொண்டு கீழே விழுந்து அழுது துக்கிக்கிற போது. கன்றுடனும் பெண்யானைகூடிவரத் தம்மினத்துடனே காட்டில்செல்கிற ஆண் யானையைப் போல நான் இப்போது கொடுத்ததைக் குறித்துக் கிருபையுடைய விசுவாமித்திரருக்குச் சம்மதியாயிற்றோ சம்மதியாக வில்லையோவென்று துக்கித்துக்கொண்டு மலையை யொத்த மதிலைக் கடந்து தனியே நடந்துபோய்ச் சரயுநதியைக்கிட்டினுன். எ-று. (௧௧)

உரைபெறுசீ ரிரவிகுலத் தரசர்க்கு வழிவழியே யுரிமை யாய, சரையுவெனுந் தாதியரிச் சந்திரற்கு வந்தவினை தானே தென்ன, விரைமலர்த்தாள் பூண்டுகிடந் தரற்றிடவு மிழிந்தேகி விரைந்து போய்மேல், கரையணுகி வரிமணலில் விரிமலர்கள் சொரியுநறுங் காவிற் புக்கான்.

இ-ள். கீர்த்திபெற்ற சிறப்பையுடைய சூரியகுலத் தரசர்களுக்கு, வமிசபாரம் பரியமாகச் சொந்தமாயிருக்கின்ற சரயுநதி யென்கிற தாதியானவள்

இந்த அரிச்சந்திர மகாராசனுக்கு இவ்விதி எவ்விதத்தினாலே வந்ததென்று அவளுடைய மணங்கொண்ட தாமரைபோலும் பாதங்களைப் பிடித்துக் கொண்டுகிடந்து அழும்படி அந்தநதியிலே இறங்கிப் போய் விரைவிலே சென்று பின்புகரையேறி விரிவாய்க்கிடக்கிற மணலெல்லாம் மலர்ந்த மலர்களை யுதிர்த்துக்கொண்டு பரிமளிக்கின்ற ஒருசோலைக்குள்ளே போனான். எ-று. (கஉ)

வரைக்கனக புயத்தினனம் மலர்க்காவில் விரிமணன்மேல் வந்திருந்தான், விரைக்கரும் பூங்குழலாளுந் திருமகனு மிருபாலும் வீற்றிருந்தார், திரைக்கடலுட் பொருளெனப் போய்ச் செங்கதிரோன் சென்றனனச் சென்றகாலை, உரைபபவையும் விளைப்பனவு மறிதுமெனு முனிவனும்வந தொளித்திருந்தான்.

இ-ள். பொன் மலைபோலுந் தோள்களையுடைய அரிச்சந்திரமகாராசன் அந்தப் பூஞ்சோலைக்குள்ளே பரவி கிடக்கிற மணலின்மேற் போயிருந்தான். பரிமளிக்கின்ற பூவையணிந்த கூந்தலை யுடைய சந்திரவதியும் திருக்குமாரனும்வந்து அரசனுக்கு இரு புறத்திலு மிருந்தார்கள். அப்போது சூரியன் அலைகளையுடைய கடலுக்குள்ளே அவர்கள் துக்கத்தைப் பார்த்துப் பொறுதவனாகிப்போய் மறைந்தான் அப்படிச் சூரியன் மறைநதவுடனே இவர்கள் பேசிக்கொள்ளுகிறவைகளும், செய்கிறவைகளும் நாம் அறிவோமென்று விசுவாமித்திரரும் அங்குவந்து புறத்திலே ஒளித்திருந்தார். எ-று. (கரு)

அக்காலத் தமைச்சரொலா மடல்வேந்த னடிபோற்றி யரசேநீ மீண், டெக்கால மெழுந்தருள்வ தென்றுரைக்க வாங்கவரை யிருகணோக்கி, முக்காலங் களுமுணரு முனிவனுக்கின் றியான்கொடுத்த மூதூர்தன்னில், எக்காலமும் வருவ தில்லையென்று னமைச்சரொலா மேங்கி வீழ்ந்தார்.

இ-ள். அப்போது மந்திரிகளெல்லாரும் அந்த ஜயங்கொண்ட அரசனுடைய பாதங்களை வணங்கி அசனே! நீர் எப்போது திரும்பி வந்து எழுந்தருள்வதென்றுகேட்க, அதற்கு அரசன் அவர்களைத் தன்னிரண்டு கண்களாலும் பார்த்துத் திரிகாலமுந் தெரிந்த விசுவாமித்திரருக்கு இன்று நான் கொடுத்ததான இந்தப்பழமையான ஊர்க்குள்ளே இனி எந்தக் காலமும் நான் வருவதில்லையென்று சொன்னான் அதற்கு மந்திரிக ளெல்லாம் கீழேவிழுந்து துக்கித்தார்கள். எ-று. (கச)

முன்செய்த தீவினையோ முனிசெய்த வுபகார முன்னுண்டாகப், பின்செய்த கைம்மாறோ பேரரசு கொடுத்தகன்று பெருங்காடெய்தல், மின்செய்த நெடுவேலாய் மெய்த்தவனை யாந்துரந்து விட்டேமாகில், என்செய்வா னெனவுரைப்பார் யாம்போது மவன்போருக் கெதிர்க்க வென்பார்.

இ-ள். சிலர், (இது) முன்னே செய்த பாவந்தானோ! அல்லது விசுவாமித்திரமுனி நமதரசனுக்கு முன்னே செய்திருந்த வுபகாரத்துக்காக இப்போதுஅதற்குப் பிரதியுபகாரமாகக் கொடுக்கலாயிற்றோ இந்தப் பெரிதான அர

சாட்சியை முனிவனுக்குக் கொடுத்து விட்டுப் போய் பெரிய காட்டில் வாசம் பண்ணுகிறதற்கு யாதுகாரணம்! ஒளி வீசுகின்ற நீண்ட வேலை யுடைய அரசனே! அந்தமெய்யான தவமுனிகளை நாங்கள் வேண்டாமென்று தள்ளி விடுவோமேயானல் அவன் எங்களை என்ன செய்வானென்று சொல்லுவார்கள். அவரிற் சிலர் அவனுடனே வலிதான சண்டை செய்வதற்கு நாங்கள் போகிறோம் என்பார்கள். எ-று. (கரு)

தோலேந்து மார்பமலர்த் தொடையேந்தத் தருப்பைமுடிச் சுருக்கத்தோடே, கோலேநறுங் குறுங்கைகதிர் வேலேந்தக் கனகமுடிக் கோடீரத்தின், மேலேந்தி யிருடியிருந் துலகாள வவன்குடைக்கீழ் வீணேயன்னான், காலேந்தி வாழ்வதின்யாங் கனன்மூழ்கலமையுமெனக் கட்டுரைப்பார்

இ-ள். (இந்த விசுவாமித்திரன்) மான்றோல் பூணுவதான மார்பிலே பூமாலை பூணவும். தர்ப்பைகளை நுனியிலே முடிந்து சுருக்கமா யிருக்கிறதைப் பற்றுகிற கையிலே செங்கோல் பற்றவும். அந்தக் குறுதலான கையிலே ஒளிகொண்ட வேலாயுதங் கொள்ளவும், சுவர்ண கிரீடத்தை சடைமுடியின் மேற் கொள்ளவும், அந்த முனிவனிருந்து உலகத்தை ஆள அவன் குடை நிழலிலே வியர்த்தமாக அவனுடைய கால்களைச் சுமந்து நாங்கள் வாழ்கிறதைப் பார்க்கிலும் நெருப்பிலே முழுகுவதே தகுமென்று உறுதியாகச் சொல்வார்கள். எ-று. (கசு)

சடைபிடித்துங் கரம்பிடித்துந் தாள்பிடித்து மரவுரியாற் றகைந்துடுத்த, உடைபிடித்து மீர்த்தவனை யுயர்வனத்தி லிப்பொழுதே யோட்டுகின்றோம், மடைபிடித்த வயல்சூழும் வளநாடு நீபுரக்க வருவா யென்று, படைபிடித்த மலர்க்கரத்தாற் பதம்பிடித்து விறல்வேந்தர் பணிந்து வீழ்ந்தார்.

இ-ள். சடையைப் பிடித்திழுத்தும். அவன் கையைப் பற்றி யிழுத்தும் அவன் கால்களைப்பற்றியிழுத்தும், மரவுரியை மறைத்து உடுத்தி யிருக்கிற உடையைப்பற்றி யிழுத்தும், அந்த விசுவாமித்திரனை இந்தக்கணத்துக்குள்ளே காட்டுக்குள்போகத் துரத்தி விடுகிறோம். நீர் பாய்கிற வழிகளையுடைய வயல் சூழ்ந்த வளமை பொருந்தின நாட்டை நீர் ஆளவரக் கடவீரென்று ஆயுதங்களைப்பிடித்து ஜயங்கொண்ட அரசர்கள் மலர்போலுங் கைகளால் அரிச்சந்திர மன்னனுடைய கால்களைப்பிடித்து வணங்கி விழுந்தார்கள். எ-று. (கஎ)

படிபுரக்கு மன்னவர்கேட் டிருகரத்தாற் செவிபுதைத்துப் பாவமகதோ, குடிகெடினுு முயிர்கெடினுங் கொடுத்ததுவாங் கேனென்று கூறு மெல்லை, கடிபொழிலிற் காத்திருந்த கௌசிகனும் வந்தெதிர்த்தான் கண்ட போதே, அடியிணைதன் முடிசாத்தி யிருகரத்தா லுறப்பூண்டா னரசர் கோமான்.

இ-ள். அந்த வார்த்தைகளை உலகத்தை யாளுகின்ற அரசன் கேட்டு இரண்டு கைகளாலுங் காதுகளை மூடிக்கொண்டு, ஐயோ! இதென்ன பாவம்!

என்குடி கெட்டாலும், என்னுயிர் போனாலும், நான் கொடுத்த ஊரை யினிக் கொள்ளேனென்று சொல்லும்போது, அந்த மணங் கொண்ட சோலையிலே மறைந்திருந்த விசுவாமித்திரர்வந்து அரசன் முன்னே நின்றார். அவர் நிற்கக் கண்டவுடனே அவனிரண்டு பாதங்களையுஞ் சிரசின்மேற்சூடிக்கொண்டு, பின்னும் தன்னிரண்டு கைகளாலும் அந்தப் பாதங்களை யிறுகத் தழுவித் தன் தலைக்கு முடியாகப் பூண்டு கொண்டான். அரசர்களுக் கரசனான அரிச்சந்திர மகாராஜன். எ-று. (கஅ)

வெய்தாநீ வேடுவரால் விலங்கனைத்துங் கொல்வித்தாய் வெகுண்டேனத்தை, எய்தாயென் மக்களையு மிசைகெட்டுத் துரத்தடித்தா யின்று மென்னை, வைதாய்நீ யெனக்களித்த மண்டலத்தை யான்றரநீ வாங்காயாகில், செய்தாயின் றிவருரைத்த தீமையெல்லா மென்னமுனி செப்பினனே.

இ-ள். (அப்போது) கோபமாக நீ வேடர்களாலே இந்த மிருகங்களையெல்லாங் கொல்லும்படி செய்தாய், பின்னுங் கோபங் கொண்டு பன்றியையும் எய்துவிட்டாய், என் பெண் பிள்ளைகளையும் அவரிடத்திலே பாட்டுக் கேட்டு ஒன்றுங்கொடாமற்றுரத்தியடித்தாய், இப்போதும் என்னைத்திட்டுகிறாய், இனி நீ எனக்குக் கொடுத்த உலகத்தை யானே கொடுக்க நீ வாங்கிக் கொள்ளாமற்போனால் இப்போது இவர்கள்செய்த தீமைக ளெல்லாம் நீயே பண்ணினவனாவாயென்று விசுவாமித்திரர் சொன்னார். எ-று. (ககூ)

சிறுத்தவர்க ளறியாமற் செய்தபிழை யத்தனையுஞ் செவ்வியோய்நீ, பொறுத்தருளா யாமாயிற் பொறையென்னும் முறையென்னு புலமை யென்னும், ஒறுத்திடினும் வெறுத்திடினு முனக்களித்த வரசுரிமை யொருகாலத்தும், மறுத்தினியான் வாங்கே னென்றெடுத்துரைத்தான் மன்னன்முனி வாட்டமுற்றான்.

இ-ள். செவ்வைக்குணத்தை யுடைய முனிவரே! சிறியோர்கள் தெரியாமற்செய்த குற்றங்கள்முழுதும் நீர் பொறுத்தருளுதலே வேண்டும், அப்படிப் பொருத் தருள்செய்யா விட்டால் உம்முடைய பொறுமை தான் என்ன பயனைத் தரும்? உம்முடைய நீதி தான் என்ன பயனைத் தரும்? உம்முடைய அறிவுதா னென்ன பயனைத் தரும், இனி நீர் என்னைக் கொல்கிறதா யிருந்தாலும், என்னை முழுதும் வெறுத்து விடுகிறதா யிருந்தாலும், உமக்குக் கொடுத்த என்னரசாட்சியை நானொரு காலத்திலும் திரும்ப வாங்க மாட்டேனென்று அரிச்சந்திரன் உறுதிச் சொன்னான். அதற்கு விசுவாமித்திரர் மிகவும் வாடுதலானார். எ-று. (உ௦)

பொன்கேட்கப் பொன்னளித்தான் புவிகேட்கப் புவியளித்தான் போதா தென்று, என்கேட்கி னுந்தருவ தில்லையெனும் புன்மையிவ னிடத்தி லில்லை, முன்கேட்ட பொருளாலே மொழிவழுவந் தெய்துமது முடக்க மானால், பின்கேட்டா ரிகழ்வார்கள் யாம்பொறுத்து மெனநினைந்து பேசலுற்றான்.

இ-ள். பொருள் கேட்க நாம் கேட்ட படியே பொருளுங் கொடுத்தான், உலகைக்கேட்க கேட்டபடியே உலகத்தையுங் கொடுத்தான், இவைகள் போதாமல் இனிஎன்னுவாலே நான் எதைக் கேட்டாலும் கொடுப்ப தில்லையென்கிற அற்பகுணம் இந்த அரிச்சந்திரனிடத்திலே கிடையாது. முன்னே நாம் கேட்டுக் கொடுக்கிறே னென்று ஒப்புக் கொண்ட பொருளினாலே இனி யிவன் கொடுக்க மாட்டாமல் சொற்றவ றுண்டாகும், அப்படி அவன் கொடுக்க மாட்டாமல் கெடுத்தப்புமானால் பின்பு கேட்டவர்களெல்லாம் இவனையிகழ்ச்சி பண்ணுவார்கள், ஆகையால், இப்போது நாம் பொறுத்துக் கொள்வோமென்று ஆலோசித்துக் கொண்டு சொல்லலுற்றார். எ-று. (உக)

ஒன்றுரைக்க நீகேளா யுண்மைக்கும் வண்மைக்கு முரியோயென்னை, இன்றுரைத்த பிழைபொறுத்தே னழல்வேள்வி முடித்திடுதற் கீவே னென்றநீ, கன்றுரைத்த பொருளதனை யளிப்பாயோ வளியாயோ வரச வென்றான், மான்றுரைத்த கௌசிகனை யடிதொழுது வாய்புதைத்தாங் கிதுரைப்பான்.

இ-ள். மெய்ம்மைக்கும், கொடைக்கும், தக்கவ னானவனே! நான் சொல்லுகின்ற மொழியைக் கேட்பாயாக, என்னை நீ இப்போது சொன்ன குற்றத்தைப் பொறுத்துக் கொண்டேன். அக்கினி மூட்டிச் செய்கிற யாகத்துக்காகக் கொடுக்கிறேனென்று அப்போது அங்கே நீ சொன்ன பொருள்களைக்கொடுப்பாயோ, கொடுக்கமாட்டாயோ, அரசனேயென்று சொன்னவிசுவாமித்திரருடைய பாதங்களை அரசன்வணங்கி வாயைமூடிக்கொண்டு அவ்விடத்தேஇதைச சொல்லுகிறான். எ-று (உஉ)

உன்னுடனே யுரைத்தபொரு ளுனக்கடியே னுகந்தளித்தவுரிமைச செல்வந, தன்னுடனே போமதென வுணர்ந்தேனு யினுமுனிவாற் றருவ லென்றே, நின்னுடனே யானுரைத்த சபதமினிமாறுவனோ நீயாள் விட்டால, பொன்னுடனே தருவ னென்றான் புகரோனை யவனழைத்துப் பொருத்தி னனே

இ-ள். உம்முடனே நான் கொடுக்கிறே னென்று சொன்ன பொருள் உமக்கு அடியேன் சந்தோஷித்துக் கொடுத்த எனக்குச சொந்தமான செல்வத்துடனே போயினவென் றெண்ணினே னானாலும் உம்முடைய கோபத்துக் கஞ்சிக் கொடுக்கிறே னென்று உம்முடனே நான் சொன்ன சபதத்தை இனித் தப்புவனோ! தப்ப மாட்டேன், இனிநீர் என்னுடனே கூட வரும்படி ஒரு ஆளை அனுப்பினீ ரானால் பொருள்கள் முழுதும் உடனே கொடுக்கிறேனென்று அரசன் சொன்னான், அதற்கு விசுவாமித்திரர் சுக்கிரபகவானைக்கூப்பிட்டுப் பொருள்வாங்கி வரும்படி சம்மதப்படுத்தினர். எ-று. (உங)

உள்ளியதி வினையனைத்துந் தனிததிருத்தி வகைவகையேயுரைத்து நீபோய், அவ்வியிடும் பொருளகவரா தானையின்மேற் கவண்சிலைபோ மளவுந தநதால, கொள்ளுதிநீ பின்போன கூலியையும் பெறுதியெனக் கூறித் தீய, வெள்ளிதனை யுடன்கூட்டி மீண்டுமழைத்தொருவாய்மை விளம்பலுற்றான்.

இ-ள். தான் எண்ணின தீய செய்கைகளெல்லாம், அந்தச் சுக்கிரனைத் தனியே ஒருபுறத்தி லிருக்கச்செய்து வகைவகையாக இன்ன யின்னபடிசெய் யென்றுசொல்லி, நீ கூடப்போய் அவன் அள்ளிக் கொடுக்கிற பொருளைவாங் காமல் யானையின்மேலிருந்து கவண்கல் லெறிந்தால் அதுசெல்லு மளவுள்ள பொருள்கள் கொடுத்தால் வாங்கிக்கொள் பின்பு நீ அவனோடு சென்றதற்கு ள்ள கூலிப்பொருளும் வாங்கிக்கொள்ளென்றுசொல்லிப் பொல்லாத வெள் ளியென்கிற சுக்கிரனைக் கூடக் கூட்டுவிட்டு மறுபடியும் அவனையழைத்து ஒரு வார்த்தை சொல்லுகிறார் விசுவாமித்திரர். எ-று. (உச)

துன்றுபசிக் கடுகுங்கனி தேடும்போ தெனக்கினிய சோறுவே ண்டும், என்றுமொழி தந்திடினு மேலாது வேண்டாவென் னிவனூ ண்பெற்றால், அன்றுபொரு டருமுன்றூணாற் ககலேலில் லெனத்தநம் மவதி வந்தால், நின்றவரைக் கரிகுறித்து மறுதினத்தி னில்லாம னீ வாவென்றான்.

இ-ள். எனக்கு மிகுந்த பசிவந்தால் இலைகள் முதலானவை தேடுகிறபோ து எனக்கு நல்ல சோறு வேணுமென்று சொல், அப்படியே கொடுத்தாலும் (என்வயிற்றுக்கு இதுபோதாது ஆதலால்) வேண்டாமென்று சொல், இவன் சோறுகிடைத்து உண்கிற அப்போது, போகாதேயில்லு, எனக்குப் பொருள் கொடுக்குமுன்பு நீ சாப்பிடக்கூடாதென்று தடுத்துவிடு. நாம் கொடுத்த கெடு வந்தால் அங்கேயிருக்கிறவர்களை சாட்சிவைத்துவிட்டு (நீசிறிதும் தாமதியா மல்) மறுநாளே இங்கே வாவென்று சொன்னார். எ-று. (உரு)

அடுத்திருத்தி மனங்கலக்கி முனிக்களித்த மொழிமாறி யனி யேனென்று, எடுத்துரைக்கி லுன்னரசை யான்வாங்கித் தருவேனெ னிசைந்தா னாகில், தடுத்தழைத்து வருதிநமக் கதுபோது மெனப்ப லவுஞ் சாற்றிக் கூட்டி, விடுத்தனன்விட் டாசனுக்கு விடைகொடு த்து மாமுனிவன் மீண்டு போனான்.

இ-ள். பின்னும் நீ இவனோடு கூடியிருக்கச்சொல்லி மனத்தைக் கலங்கு ம்படிச்செய்து (அரிச்சந்திரா!) விசுவாமித்திரர்க்குக் கொடுக்கிறே மென்று நீ சொன்ன சொற்றவறி நான் கொடுக்க மாட்டே னென்று ஒப்பி நீ சொல் லுவாயானால் உன் அரசாட்சியை நாமே வாங்கித் தருகிறே னென்றுசொல். அதற்கு இவன் சம்மதித்தானே யானால் இவனைத் தடைசெய்து நம்மிடத் துக்குக் கூட்டிக் கொணடுவா. நமக்கு அவ்வளவே போதுமென்று பலவகை களுஞ் சொல்லும்படி சுக்கிரனை அரசனுடனே கூட்டிவிட்டு அரிச்சந்திரனுக் கும் விடைகொடுத்துப் பெரிய விசுவாமித்திரர் திரும்பிப்போனார். எ-று.

முனியேக மன்னவனு மூரிநெடுஞ் சேனைதனை முனிவன் றன் னோடு, டினியேகு மவற்கினியா ரெனக்கினியா ரெனவழுதங்கியாரு மீண்டார், பணியேகு முனமெழுந்து பைந்தொடியு மன்னவனும் பாலன் றானும், தனியேகக் கண்டமைச்சன் சத்தியகீர்த் தியுமவர்க டம்பிற் சென்றான்.

இ-ள். அப்படி விசுவாமித்திரர்போகவே. அரிச்சந்திரன் பெரிதான நெடியசேனைகளைப்பார்த்து இனி விசுவாமித்திரருடனே போங்கள், அவருக்கு நல்லவர்களே எனக்கு நல்லவர்களென்றுசொல்ல, அழுது கொண்டு அங்குநின்ற எல்லோருந் திரும்பினார்கள், உடனே பனி காய்ந்துபோகுதற்கு முன்னே சந்திரவதியும் அரசனும் புத்திரனும் ஒன்றியாகப் போகிறதைப்பார்த்து மந்திரியாகிய சத்தியகீர்த்தி யென்பவனும் அவர்களுடனே கூடிப்போனான்.

வருகின்ற மந்திரியை மன்னவனுங் கண்டுவிழி வழிநீர் வார, உருகினிய வன்பினுட னீபோந்தான் மறைமுனிவற் குறுநருண்டோ, அருகிருந்து புவிநடத்த நின்போலங் கறிவுடையா ராரு மில்லை, திருநகர்க்கே மீண்டேகென் றுரைத்திடலு மமைச்சர்பிரான் செப்பலுற்றான்.

இ-ள். அப்படிக் கூடவருகிற மந்திரியை அரசன் பார்த்துக் கண்களிலிருந்து நீரொழுக உருகுகின்ற இனிதான அன்பினுடனே கூடி நீயென்னுடனே வந்தாயானால் அங்கே வேதபாராயணரான விசுவாமித்திரருக்கு உற்றவர் யாரிருக்கிறார்கள்? ஆகையாலே அவரருகிலிருந்து உலகத் தரசாட்சியை நடத்துவிக்க உன்னைப்போல் அங்கே அறிவுள்ளவர்கள் ஒருவருமில்லை, இனி நீஅழகுமிகுந்த பட்டணத்துக்கே திரும்பிப்போ வென்று சொல்லும் போது அந்த மந்திரித்தலைவன் சொல்லத் தொடங்கினான். எ-று. (உஅ)

கோதிலாப் பெருங்குணத்தாய் குற்றேவ லிந்நெடுநாள் கொடியேன் செய்தேன், ஆதலா னீயெகு மருஞ்சுரத்திற் பணித்தபணி யார்தான்செய்வார், மாதரா ருடனேக மகனேக நின்னுடன்யான் வாரே னாகில், ஏதிலா னென்னை யென்றிடியே றுண்டமர மென்ன வீழ்ந்தான்.

இ-ள். குற்றமில்லாத பெரிய குணங்களையுடைய அரசனே! உம்முடையசிறிதான ஊழியங்களெல்லாம் இவ்வளவு நெடுங்காலமும் பாவியான நான் செய்து கொண்டுவந்தேன். ஆகையால் இனி நீர்போகின்ற அருமையான பாலைவனமுதலிய காடுகளெல்லாம் நீர்சொன்ன ஊழியங்களையார் அங்கேசெய்வார்கள்? எங்கள் தாயான சந்திரவதியும்வர, புத்திரனுங்கூடவர, நான்மாத்திரம் வராதிருப்பேனானால் உமக்கு அந்நியனானவனே ஆயினேன் என்று சொல்லி இடியேறு விழுந்த மரம்போல் விழுந்து அழுதான். எ-று. (உகூ)

இடிவீழ்ந்த மரம்போல வீழ்ந்தரற்று மந்திரியை யெடுத்து மேனிப், பொடிதுடைத்து முடிதடவிப் பொழிவிழிநீர் தனைமாற்றிப் பொருமலாற்றிக், கடிநகரி லிவனைவிடி லுயிர்விடுவ னெனக்கருதிக் கலங்கிக் காமர், வடிவழுங்க மனங்கருக வுயிர்நடுங்க வருந்தேனீ வருதி யென்றான்.

இ-ள். அப்படி இடிவிழலான மரம்போற் கீழேவிழுந்து பிரலாபிக்கின்ற மந்திரியை யெடுத்து. அணைத்து. அவனுடம்பிலுள்ள புழுதிகளை யெல்லாந்

துடைத்து, அவன் தலையைத்தடவிச், சிந்துகின்ற கண்ணீரைப் போக்கித் துக்கித்தழுகிறதையுந் தீர்த்து. இந்தக் காதலையுடைய பட்டணத்திலிருந்து அரசனைப் பிரிவேனேயானால் உயிரைவிடுவேனென்று கதறியழுது கலக்கங் கொண்டு உனதழகான உடம்புங்கெட, மனமுந்தீய, உயிரும் அஞ்ச. நீ வருத்தங்கொள்ளாதே, கூடவாவென்று சொன்னான் அரசன். எ-று. (௩௦)

கலிவிருத்தம்.

வாழ்வினைவ ளர்ந்தபொழு தென்னின்மிக வாழ்ந்தாய்
தாழ்வினைநி கழ்ந்தபொழு தென்றனொடு தாழ்ந்தாய்
சூழ்வினைந மைக்கடிது சுற்றினவை யெல்லாம்
ஊழ்வினையெ னச்சொலி யுடன்கொடு நடந்தான்.

இ-ள். நான் வாழுங்காலத்தைப் பெறுவதான நல்வினை வளர்ந்தபோது என்னிடத்திலிருந்து மிகவும் வாழ்வையே யடைந்தாய், எனக்குத்தாழ்வாகிற தீவினையுண்டானபோது நீயும் என்னுடனே கூடித்தாழ்வையே யடைந்தாய், ஆகையால், ஒருவர் எண்ணிச்செய்கிற செய்கைவந்து நம்மை விரைவிலேசூழுமானல் அப்படிச்சூழுமவைகளெல்லாம் முன்னேயுண்டான கருமமேயல்லது வேறில்லையென்று சொல்லிக் கூடக் கூட்டிக் கொண்டுபோனான். எ-று.

தொடர்ந்தமதி மந்திரி தொடர்ந்துபிற கேக
விடந்திகழ்க டுந்தொழிலின் வெள்ளிமுன டக்க
வடந்திகழ்செ ழுந்தன மடந்தையொடு மன்னன்
நடந்தனனை யோத்திவள நன்னகர்க டந்தே.

இ-ள். அப்படிப் பின்னே தொடர்ந்துபோன மதிமந்திரி அரசன் முதலினேரைப் பின்பற்றி வரவும், விஷத்தைப்போல் கடியசெய்கையையுடைய சுக்கிரன் முன்னே செல்லவும் முத்துமாலைகள் விளங்குவதான செழுமையானகொங்கைகளையுடைய சந்திரவதியுடனே அரிச்சந்திர மகாராசன் அயோத்தியாகிய வளப்பங்கொண்ட நல்லநகரைக் கடந்துபோயினான். எ-று. (௩௨)

நண்பினொடு மின்புரிசை நன்னகரை நோக்கி
விண்புலமெ ழுந்தமதில் வேலிதனை நோக்கித்
தண்புனல் வழங்கிடுத டங்களையு நோக்கிக்
கண்புனல்சொ ரிந்தழுது காரிகைந டந்தாள்.

இ-ள். பிரியத்துடன் மின்னுகின்ற மதிலையுடைய நல்ல பட்டணத்தை பார்த்துக்கொண்டும், ஆகாயவரையி லுயர்ந்துள்ள மதிலாகிய வேலியைப்பார்த்துக் கொண்டும், குளிர்ந்த நீர்பாய்கிற தடாகங்களைப் பார்த்துக் கொண்டும் கண்ணீரை ஒழுகவிட்டழுது கொண்டு சந்திரவதி நடந்தாள். எ-று. (௩௩)

பாதகம லங்கள்பத றப்பதற வைத்துக்
காதலிந டந்தநடை கண்டரசர் கோமான்
நாதனரு ளிப்படியி ருந்ததென நக்கான்
ஆதபன முன்றெழும ருஞ்சுரம டைந்தார்

இ-ள். பாததாமரைகள் துடிக்கத்துடிக்க எடுத்துவைத்துத் தனது நாயகி நடக்கிற நடையைக்கண்டு ராஜாதிராஜனான அரிச்சந்திரன் ஈசுவரனுடைய கிருபை இப்படிக் கிருந்ததென்று சிரித்தான். பின்பு சூரியனாலே கொதிப்புக் கொண்டு தோற்றுகிற ஒருபாலைவனத்துக்குள்ளே போனார்கள். எ-று. (௩௪)

படிசுடவ டிக்கணகல் பாரினெழு காய்நுண்
பொடிசுடவு டற்கனழல் பொங்குவெயின் மீது
முடிசுடமி கத்துடிது டித்துமுதிர் தீப்பூங்
கொடிசுடரெ ழுந்துபடு கொள்கையின ரானார்

இ-ள். கால்களிலே பூமிசுடவும், இவர்கள் செல்லுகிற பூமியிலிருந்தெழுகின்ற நுண்ணிதான தூளிகள் வுடம்பெல்லாஞ்சுடவும். கொதிக்கின்ற வெயிலானது தலைமேற்சுடவும். மிகவும் பதைபதைத்து முதிர்ந்த நெருப்பிலே பூங்கொடியானவை சுவாலை வீசிக் கசங்குகிற கொள்கையை யுடையவர்களானார்கள். எ-று. (௩௫)

அந்தநெடு வெஞ்சுரம ழன்றெழுதல் கண்டே
மைந்தனையெ டுத்துமதி மந்திரிந டந்தான்
பைந்தொடிப டும்பரிசு கண்டுயிர்ப தைத்தே
வந்தெனது தோளினிவர் வாயெனவு ரைத்தான்.

இ-ள். அப்படி அந்நெடிதான வெப்பங்கொண்ட பாலைவனம் கொதித்துக் கிளருதலைக்கண்டு புத்திரனைத் தூக்கிக் கொண்டு மதிமந்திரியான சத்தியகீர்த்தி நடக்கலானான், அப்போது சந்திரவதி படுகிற பாட்டைக் கண்டு அரிச்சந்திரன் உயிர் துடித்து (பெண்ணே !) கிட்டவந்து எனது தோளின்மேலேறிக் கொள்ளுவாயென்று அரசன் சொன்னான். எ-று. (௩௬)

பூமகளு மண்மகளு மேறுதல்பொ றுமல்
மாமுனிவ னுக்குறவ ளித்தநின்ம ணித்தோள்
நாமநெடு வேலிறைவ நாயினிகழ் பெண்பால்
ஆமெளிய ளேறினர காழ்ந்தழிவ னென்றாள்.

இ-ள். அச்சத்தைத் தருவதான வேலாயுதத்தை யுடைய அரசனே! இலக்ஷிமிதேவியும் பூமிதேவியும், ஏறிக்கொள்ளுகிறதைத் தாங்கமாட்டாமல் ஒரு பெரிய கிழவனான முனிவனுக்குண்டாகக் கொடுத்த தேவரீருடைய அழகியதோள்களிலே நாயைப்போற் பிறராலே யிகழத்தக்க ஒருபெண்பாலாகிய அபலையான நானேறினால் நரகிலே யழுந்தி அழிவுபடுவேனென்று சந்திரவதி சொன்னாள். எ-று. (௩௭)

என்றுமயில் கூறிடவி ரங்கியெறாழ் மன்னன்
நின்றுதளர் வெய்திவிழி நீருகவு யிர்த்து
மன்றல்சொரி கின்றகுழல் வல்லியனை யாய்நிற்
கென்றுமுள திந்தவறி வென்றழுது சென்றான்.

இ-ள். என்பதாகச் சந்திரவதி சொல்லவே, துக்கித்து மகாவல்லவனுன, அரசன் அங்கே நின்ற தளர்ச்சி யுண்டாகவும் கண்களிலே நீரொழுகவும் பெருமூச்சுவிட்டு, பரிமளஞ் சிந்துகின்ற கூந்தலையுடைய கொடிபோன்ற பெண்ணே! உனக்கு எப்போதும் இந்தப் புத்தியே யிருக்கின்றதென்று அழுது கொண்டுபோனன். எ-று. (௩அ)

சுட்டடிக றுத்துடறு ளக்கமுற நீளு
விட்டெரிகொ ழுந்தழலி னெய்சொரிவி தம்போல்
கட்டுறவி தேள்பணிக ருங்குளவி பூரம்
மட்டறவ ழைத்துமுனி விட்டனன்வ ழிக்கே.

இ-ள். கால்கள் சுடப்பட்டு உடம்புகளுங் கறுப்பாய் நடுக்க முண்டாக நீண்ட நாக்குகளை நீட்டி எரிகின்ற கனமான நெருப்பிலே நெற்றியை யூற்றின தன்மைபோல் கட்டெறும்பு-தேள் - பாம்பு கறுத்தகுளவி - பூரான் ஆகிய இவைகளை அளவில்லாதபடி வரவழைத்து அந்த வழியிலே தோன்ற விசுவாமித்திர ரனுப்பினர். எ-று. (௩௯)

பட்டமர மேடுசுழி பாறைவழி யெல்லாம்
அட்டையொடு முட்டைமிசை யாடரவு மொய்ப்ப
கட்டரவு தேளரணை கண்டவிட மெங்கும்
மட்டறநெ ருங்கியடி வைக்கவிட மில்லை.

இ-ள். பட்டுப்போன மரங்கள், மேடுகள்சூழ்ந்த பாறைகள் ஆகிய இந்த இடங்களெல்லாம் அட்டைகளுடனே - முட்டைகள் மேலே ஆடிக் கொண்டு அடைகிடக்கிற பாம்புகள் மொய்க்கவும், கட்டுவிரியன் - தேள்-அரணை ஆகிய இவைகள் பார்த்த விடங்களெல்லாம் அளவில்லாமல் நெருங்குதலாய் இவர்கள் கால்கள்வைக்க இடமில்லையாயின. எ-று. (௪0)

நடந்தவடி யுட்புறந விந்திடுமெ றும்பர்
அடர்ந்துபல பூரமுட னட்டைகள்க டிக்கும்
தொடர்ந்துபல வாளரவு சுற்றியடி நீண்டும்
கடந்தகலி னும்பலக ருங்குளவி கொட்டும்.

இ-ள். இவர்கள் நடக்கிற கால்களி னுட்புறத்தே எறும்புகள் கடிக்கும் நெருங்கின பலவகைப் பூரான்களுடனே அட்டைகளுங் கடிக்கும், கூடப் பற்றிவந்து பலவிதமான நீண்டபாம்புகள் கால்களிலே வந்து சூழ்ந்துகாலைக் கடிக்கும், அதைக்கடந்தப்பாற் போனாலும் பலவகைக் கருங்குளவிகள் வந்து கொட்டும் எ-று. (௪௧)

அறப்பழுது பட்டுள மழுந்துவதி லாவி
இறப்பதினி தென்றுமன மெண்ணினுயிர் போகா
வறப்பதினு லந்தொருந ருந்துமிலை யாகம்
கறுத்தழகு கெட்டுடற டித்தனக றுத்தே.

இ-ள். மிகவும் காயங்கள் உண்டாகி மனமானது சஞ்சலப்படுவதைக் காட்டிலும் உயிர்துறப்பது இனிதென்று மன மெண்ணினால் உயிர் போகிற

தில்லை, கொதிப்பான அவ்விடங்களிலே வேண்டினால் ஒரு மருந்து மகப்படவில்லை, அதனாலே உடம்புகறுத்து அழகுங்கெட்டு தேகமெல்லாந் துடிதுடித்தன பின்னுங்கறுப்பாகி. எ-று. (௪௩)

மைநடுவி ளங்குவிழி மங்கையெதிர் சீறிப்
பைநடுந டுங்கவரு பல்லரவு கண்டே
மெய்நடுந டுங்கிடவ ரம்பையர்வெரீ இத்தங்
கைநடுந டுங்கவிரு கண்மலர்பு தைத்தார்.

இ-ள். கருமை நடுவே விளங்குவதான கண்களையுடைய சந்திரவதி தனக்குமுன்னே சீறிக்கொண்டு படம்விரித்து துடிதுடிக்கக் கடிக்கவருகிற நஞ்சுப்பல்லையுடைய பாம்பைக்கண்டு உடம்புமிகவு நடுங்கும் போது, ஆகாயத்திலுள்ள தெய்வப்பெண்கள்பார்த்து (இந்த உத்தமிக்கிப்படி வரலாமோவென்று) தங்கள் கைகள் மிகவுநடுங்க இரண்டு கண்களாகிய மலர்களை மூடினார்கள்.

நீருமிலை நெட்டிலையி னீழலிலை நீள்பேய்த்
தேரதனை நீரெனந டந்தடிசி வந்தார்
வேரினொடு வெந்தமர நீழலைவி ரும்பிச்
சேரினும டர்ந்தரவு சீறியெழு மன்றே.

இ-ள். காட்டிலே ஜலமுங்கிடையாமல் நீண்ட இலைகளையுடைய மரத்து நிழலுமில்லையாய் நீண்ட பேய்த்தேராகிய கானலைத் தண்ணீரென்று நினைத்துநடந்தோடிக் கால்கள் சிவந்தார்கள். வேருடனே வெந்து கிடக்கிற மரத்து நிழலை வேண்டிப் போனாலும் அங்கேநெருங்கிப் பாம்புகள் சீறிக் கடிக்க வருகின்றன. எ-று. (௪௪)

காவலவ னப்பரிசு கண்டுகைய றைந்தே
யாவரெழு பாரினிது பட்டவர்க ளென்னா
மூவரையு நோகிலனம் முனிவனையு நோக்கான்
தேவரையு நோகிலன்முற் றீவினையை நொந்தான்.

இ-ள். எல்லாரையுங் காக்கவல்லவனான அரிச்சந்திரன் அவ்விதங்களைக் கண்டு கையைததட்டி இந்தச் சத்தலோகங்களிலும் யார் இப்படித் துன்பப்பட்டவர்களென்று மும்மூர்த்திகளையுங் குறித்து விசனப் படுகின்றிலன் அந்த விசுவாமித்திரரையு நொந்துகொள்கிலன் மற்றத் தேவர்களையு நொந்து கொள்கிலன். முன்னே தான்செய்துள்ள தீவினைப் பயனிப்படி விளைந்ததென்று வருந்தினான். எ-று. (௪௫)

சுடுந்தழலில் வெந்தொழிதொ லைந்தரசர் கோமான்
கொடுஞ்சுரம கன்று குளிர் கோமதிபு குந்தான்
நடுங்கிடவி லங்கினந லிந்திடுமெ னச்செங்
கடுங்கதிர்ப யந்தலைக ருங்கடல்பு குந்தான்.

இ-ள். அப்படிச்சுடுகின்ற நெருப்பிலே வெந்து தன்னழகெல்லாங்குலைந்த அரசர்க்கரசனானவன் அந்தக்கொடிதான பாலைவனத்தைக் கடந்துகுளிர்ந்த

கோமதியாற்றி னருகே போனான். அப்போது அந்தமுல்லைவனத்துள்ள மிருகக்கூட்டங்கள் நாமஞ்சுவதாக நம்மையும் அவ்வாறு வருத்தஞ் செய்யுமென்று நினைந்த கடுமையான சூரியன் பயந்து மறைகிறது போய் கருங்கடலிலேபோய் முழுகினான். எ-று. (சசு)

மைதிகழ்கு றும்பொறைவ னத்திலிழி மால்யா
றெய்திய தனவண்டு றையிழிந்துபுன லுண்டு
கைதவநி னைந்துமிளிர் கண்கலுழி சிந்தப்
பெய்தமணல் வண்டலிடை பேதையொ டிருந்தான்.

இ-ள். வேகங்கள் தவழுவனவான மலைச்சார்பிலுள்ள முல்லை நிலத்திலே மலையிலிருந்திறங்கி வருகிற அந்தப் பெரியஆற்றைக்கண்டு அதனருகேபோய் அரசனது அழகான துறையிலே யிறங்கி நீருண்டு. விசுவாமித்திரருடையவஞ்சகங்களை யெண்ணிக் கண்களிலே நீரொழுக எக்கரிட்டுக் கிடக்கிறமணல்மேட்டினருகிலுள்ளசேற்று நிலத்திலேசந்திரவதியுடனே இருந்திளைப்பாறினான்.

அந்தவமை யத்தடவி யும்பொழிலு நண்ணி
வந்தடிவ ருந்தியவ ருத்தமுண ராமல்
கந்தமொடு காய்கனிக வர்ந்தருகு வந்தே
மந்திரியு மன்னவன்முன் வைத்தடிப ணிந்தான்.

இ-ள். அந்த வேளையிலே காடுகளிலுஞ் சோலைகளிலும் போய் நடந்து வந்து கால்கள் வருந்தியிருக்கிற வருத்தத்தை நினையாமல் மந்திரியான சத்தியகீர்த்தி கிழங்குகளுடனே காய்கள்பழங்களைக் கொண்டுவந்து சமீபமாக அரசன்முன்னேவைத்துப் பாதங்களை வணங்கினான். எ-று. (சஅ)

அக்கணமெ டுத்திறைவ னக்கனியு ளெல்லாம்
மிக்கனதெ ரிந்துமறை விம்பிரன்முன் வைத்தே
தக்கனவு ரைத்தெனது சஞ்சலமுணர்ந்தே
இக்கனியெ டுத்தினித ருந்தெனவி சைத்தான்.

இ-ள். அரசனவன் அந்தட்சணப் பொழுதிலே அவைகளைக்கொண்டு அந்தப்பழங்களிலெல்லா மிகுந்தருசியுள்ள பழங்களைத் தெரிந்தெடுத்து வைதிக பிராமணனாய்க் கூட வந்திருக்கிறவனுக்கு முன்னே வைத்துத் தகுந்த வுபசாரங்களைச் சொல்லி என்னுடைய சஞ்சலங்களெல்லாந் தெரிந்துகொண்டு அந்தப் பழங்களை யெடுத்துச் சந்தோஷமாகச் சாப்பிடுமென்று சொன்னான். எ-று. (சகூ)

பரிந்துற விரந்திறைப கர்ந்தமொழி கேளா
விரிந்தநெடு வாயினிதழ் வெண்பலின துக்கி
எரிந்திடுசி னத்தழலி ரண்டுகணி னூடும்
சொரிந்துளம்வெ குண்டுசுடு சொற்கள்சில சொன்னான்.

இ-ள். மிகவும்பரிவுடனே அரசன் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டு அகன்ற வாயிலுள்ள நீண்ட பற்களாலே உதட்டை மடித்துக் கடித்து எரி

கின்ற கோபாக்கினி இரண்டு கண்களாலுஞ் சிந்துதலாகி மனத்திலே கோப ங்கொண்டு சுடுவனவான கடுஞ்சொற்கள் சில சொல்லலானான் அந்தசுக்கிரன். எ-று. (ருO)

கொச்சகக் கலிப்பா.

நீயு முனியு நிகழ்த்திநெறி முன்னுணர்ந்து
தோயுந் தயிர்நெய்யால் சோற்றோ டருந்தாமல்
காயுங் கிழங்குங் கனியுமிலை யுந்தின்று
வாயும் வயிறும் வளர்க்கிலேன் மன்னவனே.

இ-ள். அரசனே! நீயும் அந்த விசுவாமித்திர முனியும் பேசிக் கொண்ட கிரமங்களை முன்னமேதெரிந்து தோய்ந்துள்ள தயிர்-நெய்-பால்-ஆகிய இவைகளை நல்ல சோற்றுடனே கூட்டிச் சாப்பிடாமல், காய்களும் கிழங்குகளும் கனிகளும் இலைகளுந்தின்று வாயையும் வயிற்றையும் வளர்த்துக்கொண்டிராதுபோனேன். எ-று.

அப்படிக் காய்முதலியவற்றை முன்னேதானேதின்று பசியாறிப் பழகியிருந்தேனேயானால் இப்போதுண்பேன், பழகாத நானெப்படிச் சோறுமுதலானவையில்லாமற் பசியாறுவே னென்பது கருத்து. (ருக)

என்று புகரியம்ப வேங்கிக் குலைகுலைந்து
நின்று மொழிகுழறி நெஞ்சடைத்து வாய்புலர்ந்து
சென்று பணிந்து திருக்கரத்தாற் றாள்பூண்டு
குன்றுஞ் சிலையுங் கரைந்துருகக் கூறலுற்றான்.

இ-ள். என்று சுக்கிரன் சொல்லவே, அரசன் ஏக்கங் கொண்டு நடுநடுங்குதலாகிநின்று வார்த்தைகள்குழறி மார்படைப்புண்டாகி வாயுங்காய்ந்து அந்தச்சுக்கிரனருகேபோய் வணங்கித் தனதழகிய கைகளாலே அவன் பாதங்களைப் பிடித்துக்கொண்டு மலையுங் கல்லுங் கரைந்துருகும்படி சொல்லத் தொடங்கினான். எ-று. (ருஉ)

நாடுநகரு முனிக்களித்து நானறியாக்
காடு திசைநோக்கி வந்தமைநீ கண்டிலையோ
வாடுந் தமியேன் வருந்திப்போய்ப் பாலடிசில்
தேடும் பரிசுளதோ செப்பாய் தரவென்றான்.

இ-ள். எனது நாட்டையும் நகரையும் அந்த விசுவா மித்திரருக்குக கொடுத்துவிட்டு நான் தெரியாத வனாந்தரங்களைக் குறித்துவந்து வருந்துகிறதை நீர்பார்த்திலீரோ! இப்படி வாடியிருக்கிற தனியனான நான்வருத்தங்கொண்டு போய்ப்பாலுஞ்சோறுந் தேடிக்கொடுப்பதாகிய வகை என்னிடத்துள்ளதோ சொல்லும் நான் தருகிறதற் கென்று சொன்னான் அரசன். எ-று. (ருங)

கன்னெஞ் சராய கௌசிகனார் நெஞ்சம்போல்
வன்னெஞ்சோ வுன்னெஞ்ச மென்னமயி லுரைத்தாள்
தன்னெஞ் சுருகியொருசற்றே தயையாகித்
தின்னுங் கனியருந்தித் தெண்ணீருந் தான்குடித்தான்.

இ-ள். அப்போது கன்னெஞ்சினரான விசுவாமித்திரருடைய நெஞ்சைப்போல உம்முடைய நெஞ்சும் வன்னெஞ்சு தானோ வென்று சந்திரவதியுஞ் சொன்னாள். அம்மொழிக்கு சுக்கிரன் புன்னெஞ்சிளகி ஒருவகை கொஞ்சந்தயவுண்டாகித்தான் தின்னத்தக்க கனிமுதலியவைகளைத்தின்று தெளிவான ஜலமுங் குடித்தான். எ-று. (௫௪)

தாமந் திகழ்புயனுந் தையலா ளும்மகனும்
மாமந் திரியு மலர்க்கரத்தா லேவாங்கித்
தேமென் கனியருந்திச் செவ்வாய் வெளுப்பேறத்
தாமும் புனலருந்தித் தாரணிமேல் கண்வளர்ந்தார்.

இ-ள். மாலைவிளங்குகின்ற தோள்களையுடைய அரசனும் சந்திரவதியும் மகனும் பெரிய மந்திரியும் அந்தச சுக்கிரன் கொடுத்ததைத் தங்கள் மலர் போலும் கைகளாலேந்தி வாங்கிக்கொண்டு தேன்பொருந்திய மிருதுவான பழங்களைப் புசித்துச் சிவந்த வாய் வெளுப்பேறத் தாங்களும் தண்ணீர் குடித்து மண்ணின் மேலேபடுத்து நித்திரை செய்தார்கள். எ-று. (௫௫)

வேந்தன் மகனை விழிமஞ் சனமாட்டக்
காந்தண் மலர்க் கைவழியே காரிகைகண்ணீரோடச்
சாய்ந்தவிடம் பார்த்துத் தடித்துமிடித் தும்மழைகாள்
சேர்ந்தவழிப் பெய்யநீர் சென்மினென்றான் மாமுனிவன்.

இ-ள். அப்போது அரசன் மகனைப் பார்த்துத் தன் கண்ணீராலே திருமஞ்சனமாட்டவும், காந்தள் மலர்போன்ற கைவழியே சந்திரவதிக்குக் கண்ணீரொழுகவும், அவர்கள் படுத்துத் தூங்குகிற சமயம் பார்த்து மேகங்களே! மின்னியும் இடித்தும் அவ்விடத்திலே பெய்வதற்கு நீங்கள் செல்லுங்க ளென்றனுப்பினார் தவத்திற்பெரிய விசுவாமித்திரர். எ-று. (௫௬)

மண்டலமு மந்தரமு மைபோ லிருண்மூடி
அண்டபகி ரண்ட மதிர வெடித்திடித்துக்
கொண்டலெ டார்ந்து கொடுங்கா லடித்துநவ
கண்ட மதிரமழைக் காலூன்றி வீழ்ந்தனவால்.

இ-ள். அப்போது பூமியும் ஆகாசமும் மையைப்போல் இருள் மூடுதலாய் அண்ட பகிரண்டங்க ளெல்லா நடுங்கி வெடிபடமுழங்கி மேகங்கள் நெருங்கிக்கொடிதான பெருங்காற்றுவீசி நவகண்டமு மதிரும்படி மழைக்காலூன்றுதலாய் மழைசொரிதலாயின. எ-று. (௫௭)

மங்கை நனைந்து மகனனைந்து மன்னனனைந்
தங்கை நடுங்கி யடிநடுங்கி மெய்நடுங்கிப்
பங்க மதுபட்டுப் பற்கிடுகி டென்றடிப்பத்
துங்க மணிமுடியான் சுக்கிரனைப் பார்த்துரைப்பான்.

இ-ள். அப்போது சந்திரவதியுநனைந்து, மகனுநனைந்து, அரசனுநனைந்து, அழகியகைகளுநடுங்கிக், கால்களு நடுங்கிச், சரீரமுநடுங்கிச் சேற்றிலே யழுந்தி

யழுக்காய்ப் பற்கள் கிடுகிடென்று ஆடிமோத அப்போது உயர்ந்த இரத்தின கிரீடாதிபதியான அரசன் சுக்கிரனைப் பார்த்துச்சொல்லுகிறான். எ-று. (ருஅ)

மாறுவது மில்லை மழைதான் மறையோனே
ஆறு பெருகிடுமு னப்பாற் படுத்துமெனச்
சீறு மரவேபோற் சினத்துநீர் செல்லுமூந்
தோறும் வரவெனக்குக் காரணமென் சொல்லுமென்றான்.

இ-ள். ஓ பிராமணரே இந்தமழை ஓய்கிறதில்லை. ஆகையாலேஒருவேளை ஆறுபெருகி வந்துவிடும். அதற்கு முன்னே நாம் போய் தூரத்திலே படுத்துக் கொள்ளுவோமென்று சொல்ல, அதற்குச் சுக்கிரன் சீறுகிற பாம்பைப்போற் சீறி நீங்கள்போகிற ஊருக்கெல்லாம் நான் கூடவருகிறதற்குக் காரணமென்ன சொல்லுங்களென்றான். எ-று. (ருக)

எந்நகரிற் புக்கே மிடர்வனத்தை விட்டினியோர்
நன்னகரஞ் சேர்ந்தாலந் நாளே யுனக்கடியேன்
சொன்ன பொருடருவேன் றாயோய் வருதியெனு
மன்னவனு மந்திரியு மாதுமவன் றாள் பூண்டார்.

இ-ள். (ஐயா) நாங்க ளெந்த ஊருக்குப்போனோம்? இப்படித் துன்பமுண்டாகுகிற காட்டை விட்டு இனி நல்ல ஒருருக்குப் போனல், போன அன்றையத்தினமே உமக்கு அடியேன் முன்னே சொன்ன பொருள்களைக்கொடுக்கிறேன். பரிசுத்த குணத்தையுடையவரே! கூடவாருமென்று அரசனும் மந்திரியும் சந்திரமதியும் அந்தச சுக்கிரனுடைய காலைப்பிடித்துக்கொண்டார்கள்.

வந்தடியிற் பூண்டவதற் கன்று மறைமுனிவன்
முந்தமொழிந் ததற்கா வெள்ளி முயன்றெழுந்தான்
சிந்தை மகிழ்ந்திறைவன் றேவிகரங் கைப்பிடித்தான்
மைந்தன் றனையெடுத்து மந்திரிமுன் னேநடந்தான்.

இ-ள். அப்படிவந்து தன்கால்களைப் பிடித்துக் கொண்ட அதற்காகவும், அன்றையத்தினம் வேதமுனிவரான விசுவாமித்திரர் முன்னே சொன்னதற்காகவும் சுக்கிரன் முயலுதலைக்கொண் டெழுந்திருந்தான். அதுகண்டு மனமகிழ்ந்து அரசனவன் நாயகியைப் பற்றிக்கொண்டு சென்றான். மந்திரி பிள்ளையைத் தூக்கிக்கொண்டு முன்னே நடந்தான். எ-று. (சுO)

காலால் வழிதடவிக் கட்டைமுளை வேரிடறி
ஆலாலங் காலு மரவின் றலைமிதித்து
மேலாறுங் கீழாறு மின்விளக்கத் தாலறிந்து
கோலான் முனனூன்றிக் கொடுங்கானி யாற்றிழிந்தார்.

இ-ள். தங்கள் கால்களாலே வழிதேடிக் கட்டைகள் - முளைகள்-வேர்கள் ஆகிய இவைகள் தடுக்க நஞ்சைக்கக்குகின்ற பாம்புத்தலைகளை மிதித்துக் கொண்டு மேன்முகமும் கீழ்முகமும் மின்னல் வெளிச்சத்தாலே தெரிந்து ஒருத

டியைக்கொண் டேன்றியூன்றி (ஆழங்கண்டு) அந்தக் கொடிதான கான் ஆற்றிலே இறங்கினார்கள். எ-று. (சுஉ)

சங்கந் தவழுந் தடவண்ட லுங்கயமும்
அங்கங்கே சோதித் தடிவைத் தடிவைத்துப்
பங்க மிகப்பட்டுப் பல்கா லுநீர்குடித்துச்
சிங்கம் புலிதிரியுந் திண்கரையி லேறினார்.

இ-ள். அந்த ஆற்றிலுள்ள சங்குகள் கால்களிலே தடுக்கப் பெரியமேடும் பள்ளமுள்ள சேற்று நீரும் அஙகஙகே கோலாலே பரிசோதித்தறிந்து கால்களைமெள்ளமெள்ள ஊன்றியூன்றிநடந்து உடம்பெல்லாம் சேறு பூசுதலாகிப் பலதரமும் ஜலத்தைக் குடிததுச சிஙகஙகள் புலிகள் திரிகிற கெட்டியான கரைமேலேறிப் போனார்கள். எ-று. (சுங)

நீந்திப் பயமகன்று நெஞ்சிற் பயமகன்றவ்
வேந்த னினிநாம் விடிந்தேகத் தக்கதெனத்
தோய்ந்த கலையாற் குழலாற் சொரிபடுநீர்
பாய்ந்தொழுக வாண்டோர் பழுவத் துறுகின்றார்.

இ-ள். அப்படி அந்த ஆற்றை நீந்திக்கொண்டுபோய்,நீரையும்விட்டுத்தங்கள் நெஞ்சிலுள்ள பயத்தையும்விட்டு அரசனானவன் இனி நாம் விடிந்த பின்புபோகத்தக்க தென்று நீரில்நனைந்த வஸ்திரத் துடனும் தலைகளுடனும் மேலேபொழிகிற நீர் உடம்பெல்லாம் வழிந்தோடவும் அங்கே ஒரு காட்டிலே வந்து தங்குதலானார்கள். எ-று. (சுச)

கலிவிருத்தம்

பாதவமுற் றெழுபைம் பொழிற ன்னில்
ஏத மிகுத்தவ ரெய்திய நாளில்
மாதவ னேவிய வன்கண பேயும்
பூதமும் வநது புகுநதன வன்றே.

இ-ள். மரங்கள் மிகுந்து வளருகின்ற அந்தப்பசிய சோலையிலே துன்பம் அதிகமாக அவர்களிருக்கிறபோது அந்தமகாமுனிவரான விசுவாமித்திர ரனுப்பின வலிதான கூட்டங்கொண்ட பசாசுகளும் பூதங்களும் வந்துகூடின.

மண்ணி லெழுந்து வளர்ந்த கருங்கார்
விண்ணி லெழுந்தன மேனி யவிண்ட
புண்ணி லிரண்டு பதங்கர் புரைந்த
கண்ணின வெண்ணில் கணங்கண் மலிநத.

இ-ள். அவைகள் அந்தச் சோலையி னிடங்க ளெல்லாம் எழுந்துயர்ந்து நிற்கின்றன. பின்னும் கறுத்தமேகஙகள் ஆகாயத்திலே கிளந்தாற்போலு நிறத்தை யுடையனவா யிருக்கின்றன, வெடிதத புண்கள் போலவும் இரண்டுசூரியர்க ளெழுந்தாற்போலவும் கண்களையுடையனவாகக் கணக்கில்லாத பூதகணங்கள் எங்குமிருந்தன. எ-று. (சுரு)

பின்றி யெழும்பிறை யொத்த வெயிற்றால்
தின்றி தழ்வந்து தெறிக்க வதுக்கிக்
கொன்று திரங்கள் குடிக்குது மென்றே
சென்று பிடுங்கின திண்கிரி யெல்லாம்.

இ-ள். பின்வளைந்து தோன்றுகின்ற பாதிச் சந்திரனை யொத்த பற்களாலே இதழைக் கடித்துப் பின்னும் பல்லுமிதழும் தோன்றவந்து கசக்கி உங்களைக்கொன்று உதிரங்குடிக்கிறோ மென்றுபோய் மலைகளையெல்லாம் பிடுங்கலாயின. எ-று. (சுஎ)

திண்டிறல் கொண்டுயர் செந்தலை மீதே
மண்டியெ ழுந்து வளர்ந்த செழிந்தீக்
கொண்ட லெழுந்து கொழுந்து சுருண்டே
அண்ட முகட்டை யடைந்தன வன்றே.

இ-ள். மிகுந்த பலத்தைக் கொண்டு உயர்ந்த சிவந்த தலைகள்மேலே நெருங்கி யெழுந்து வளர்ந்துள்ள செம்மயிர்களாகிய செழுமையாகிய நெருப்பு மேகமண்டலத்தளவு முயர்ந்து கொழுந்துகள் சுருளுதலாகி ஆகாய முகட்டையுந் தாவின. எ-று. (சுஅ)

ஐயன ருந்தசை யானையில் வேனிச்
செய்ய னருந்தசை தின்குவன் யானித்
தைய லருந்தசை தம்மி னெனக்கிப்
பைய விளந்தசை பற்கெளி தென்னும்.

இ-ள். சுக்கிராசாரியினுடைய அருமையான மாமிசத்தை நான் தின்பேன், இந்தச் சிவந்த நிறத்தை யுடையவனுடைய அருமையான மாமிசத்தை நான் தின்பேன், இந்தப் பெண்ணினுடைய அருமையான மாமிசத்தை எனக்குக் கொடுங்கள். இந்தச் சிறுபையனுடைய இளஞ்சதையானது பல்லுக்கு மெதுவாயிருக்குமென்னும் அப்பசாசுகள். எ-று.

ஐயனருந்தசை அரசனது தசையென்றும், செய்யனருந்தசை மந்திரியினுடைய தசையென்றுங் கூறினுமாம். (சுகூ)

சென்மி னடந்து செறுத்திவர் தம்மைக்
கொன்மி னெடுந்தசை கூறுற மென்று
தின்மினி னைத்தவை செய்மி னெனப்போய்ப்
பின்மு னெருங்கின பேயொடு பூதம்.

இ-ள். நடந்து கிட்டப் போங்கள், நெருங்கி இவர்களைக் கொல்லுங்கள், இவர்களுடைய நெடிதான மாமிசத்தைப் பங்குபண்ணி மென்றுதின்னுங்கள், நினைத்தபடியெல்லாம் செய்யுங்கள் என்று சொல்லிக் கொண்டு போய்ப்பசாசுகளுடனே பூதங்கள் பின்னுமுன்னு நெருங்கின. எ-று. (எ0)

சிறப்பமை சேயொடு தேவியு மன்னும்
உறத்தழு வித்த முணர்ச்சி விடாமல்.

அறத்தினை நற்றுணை யாக நினைத்தே
இறத்தலெ மக்கினி தென்ன விருந்தார்.

இ-ள். செல்வச் சிறப்பையுடைய பிள்ளையுடனே தேவியும் அரசனும் நெருங்கத் தழுவிக்கொண்டு தங்கள் நினைவுதப்பாமல் தருமத்தையே நல்ல துணையாக எண்ணி இனிச்சாகிறதே நமக்கு நல்லதென்று கூடிக்கொண்டிருந்தார்கள். எ-று. (எக)

சொல்லு விறன்முனி சொல்லிய வண்ணம்
கொல்கலி ரெம்முயிர் கொல்லுதி ரேலெம்
அல்லலு முங்கள ரும்பசி யும்போம்
வில்லிலை வாளிலை வம்மென விண்டார்.

இ-ள். முனிவர் சொல்லியனுப்பினபடி சொல்லுகிற ஓ பேய்களே! பூதங்களே! அந்த முனிவர் சொன்னபடியே (என்) எங்களைக் கொல்லாதிருக்கிறீர்கள்? எங்களுயிரைக் கொல்லுவீர்களே யானால், எங்கள் துன்பமும் உங்களுடைய தீர்தற்கரிதான பசியுந்தீரும். எங்களிடத்திலே வில்லுமில்லை வாளுமில்லை வாருங்களென்று சொன்னார். எ-று. (எஉ)

கொன்றிட மாமுனி கூறின னல்லன்
சென்றிட ரித்தனை செய்தமை போதும்
என்று கணங்களு மெண்ணிகு பேயும்
நின்றன கட்புல நீங்கிய வன்றே.

இ-ள். அந்தமகாமுனிவன் கொல்லும்படி சொன்னானல்லன், பயங்காட்டப்போகும்படி சொன்னதற்கு இவ்வளவு துன்பம் பண்ணின போதுமென்று பூதகணங்களும் கணக்கில் மிகுந்த பேய்க்கூட்டங்களுமாக நின்றவைகள் இவர்கள் கண்களுக்குத் தோற்றாமல் விலகிப்போயின. எ-று.. (எங)

தங்குல வள்ள றளர்ச்சி யுணர்ந்தே
செங்கதி ரோனுயர் தேரினில் வந்தான்
மங்கு னெடுந்துளி மாரி யொழிந்த
கங்குல் விடிந்து கழிந்ததை யன்றே.

இ-ள். தனது குலத்துப் பிரபுவானவனுடைய சோர்வைத் தெரிந்து சிவந்த சூரியன் உயர்ந்த தேரின்மேலேறி உதயமாயினான், மேகங்கள் பெய்த நீண்ட துளிகளாகிய மழைத்தாரையும் ஓய்ந்தன, இரவும் விடிந்து பொழுது புலர்ந்தது. எ-று. (எச)

அன்று விடிந்தபி னத்தலம் விட்டுச்
சென்று செழுங்கனி தின்றய னண்ணிக்
குன்று கடந்து குளிர்ந்த மலர்த்தாள்
கன்ற நடந்தனி கங்கை யணைந்தார்.

இ-ள். அன்றைநாள் விடிந்த பின்பு அந்த இடத்தை விட்டுப்போய்ச் செழுமையான கனிமுதலியவைகளைத் தின்றுகொண்டு அப்பாற்போய் மலைகளை

யெல்லாங் கடந்து சென்று குளிர்ந்த மலர்போலும் பாதங்கள் கன்றுதலாகச் சென்று அழகிதான கங்கையாற்றைப்போய்ச் சேர்ந்தார்கள். எ-று. (எ௬)

திரைதொறு முருள்வன செம்மணி யாரம்
கரைதொறு முருள்வன கார கிலாரம்
நுரைதொரு முருள்வன நுண்ணிய வண்பூ
விரைதொறு முருள்வன வெறிமது கரமே.

இ-ள். அந்தக் கங்கையாற்றி னலைகளெல்லாம் சிவந்த மணிகளும் முத்து களும் புரளுகின்றன, அந்த ஆற்றின்கரையெல்லாம் கறுத்த அகில் விருட்சங் களும் சந்தன விருட்சஙகளும் அசைந்து கொண் டிருக்கின்றன. அந்த ஆற்றி னுரைக ளெல்லாம் மெல்லிதான மலர்கள் போற்கிளருகின்றன. அந்த மலர் வாசங்களெல்லாம் தேனைக்குடிக்கிற வண்டுகள்மேல் வீசுகின்றன. எ-று.

துளைமணி வெண்பல ராமணி துத்தி
விளைமணி வெயில்விட வெண்புன லூடே
களைமணை யொடுமத கரிமணி யோடும்
வளைமணி நிலவெழும் வாலுக மெல்லாம்.

இ-ள். துவாரமிடத்தக்க வயிர இரத்தினமும், வெண்மையான பற்களை யுடைய நாகரத்தினமும், தேமல்நிறமாகத் தோற்றுகின்ற புஷ்பராகவிரத்தின மும் ஒளிவீச, அந்த வெண்மையான கங்காசலத்திலே அழகுள்ள பலவகை இரத்தினங்களும், மதயானைகளினுடைய கொம்பிலுள்ளமணியும், சங்குமணி யும் ஒளி வீசுவனவா யிருக்கின்றன அந்த மணற்குப்பல்களெல்லாம். எ-று. ()

நளின மரத்த நறுங்கனி நாகத்
தளிநரல் வப்புன லரவ மடக்கத்
தெளிநதி புக்கணி சிறைகள் புலர்த்தும்
புளின முயர்நதெழு புளின மறைப்ப.

இ-ள். செநதாமரை மலர்களினும்.நல்ல இளமையான புன்னை விருட்ச ஙகளிலுமுள்ள வண்டுகள் ஒலிப்பது. அந்தக் கஙகையி னலையொலிகளை யடங் கச்செய்ய அந்தத் தெளிவான ஆற்றிலே முழுகிப்போய் அழகிதான· சிறகைக் காயச்செய்கிற பட்சிக்கூட்டங்கள் உயர்ந்து வளர்ந்துள்ள மணற்குவியல்கள் தெரியாமல் மறைத்துக்கொண் டிருக்கின்றன. எ-று.

அரத்த-நளினமெனவும், கன்னி-நாகமெனவுங கூட்டுக. (எஅ)

வெங்கய மாமத மேமிக நாறும்
கங்கை வளம்பல கண்டு மகிழ்ந்தே
செங்கோ டண்ணல் சிறப்புள வெல்லாம்
மங்கை தனக்கு வகுத்துரை செய்வான்.

இ-ள். வெவ்விதான யானை மதங்களே மிகவும் வீசுவதான அந்த கங்கை யாற்றினுடைய அழகுகள் பலவுங்கண்டு சந்தோஷித்துத் தன்னுடைய சிவந்த

கைகளாலே அரசனானவன் அங்குள்ள அலங்காரங்களையெல்லாம் சந்திரவதிக்கு வகைவகையாகச் சொல்லுகிறான். எ-று. (எக)

இந்திர சாப மிரண்டு படைத்த
செந்திரு வானுத லாய்தெளி நன்னீர்ச்
சுந்தர மேவு சுழித்திர ளோர்நின்
உந்தியை யொப்பன வுற்றிடல் காணாய்.

இ-ள். இந்திரவிற்க ளிரண்டைக்கொண்ட இலட்சுமிபோலும் ஒளிபொருந்தின நெற்றியையுடையவளே! இந்தத் தெளிவாகிய நல்லஜலத்திலே அழகுபொருந்தின சுழிகள் ஒப்பற்ற உனது உந்தியை யொப்பாகச் சுழிக்கின்றன பார். எ-று. (அ0)

புள்ளி யெழுங்கரி போய்ப்புன லூடே
அள்ளி யெறிந்தவ ராமணி யெல்லாம்
துள்ளி யெழுந்தவிர் சோதி விசும்பின்
வெள்ளி விழுந்தென வீழ்வன பாராய்.

இ-ள். முகத்திலே புள்ளிகள் தோன்றுவனவான யானைகள் போய்விழுந்து அந்தநீரிலேநின்று வாரிவீசின நாக ரத்தினங்களெல்லாம் சிதறியெழுந்து விளங்குகின்ற ஒளியையுடைய ஆகாயத்திலிருந்து வெள்ளி உதிர்ந்தது போல் உதிர்க்கின்றனவற்றை நீ பார். எ-று. (அக)

விரிதிரை யுந்திய வெண்மலர் காலால்
வரிமண லுந்திய வண்டலி னூடே
பிரிவுறு சேவல்கள் பெடையென வோடித்
தெரிவுற நின்று திகைப்பன காணாய்.

இ-ள். விரிவான அலைகளசைக்கின்ற வெண்டாமரை மலரைத் தமது கால்களாலே வரிவரியாகக் கீறுதலைக் கொண்ட மணற்சேற்றி னிடத்திலே பிரிந்த ஆண்பட்சிகளானவை தமது பெட்டை என்று நினைத்தோடி அது பூவாயிருக்கத் தெரிந்துநின்று பெட்டையைக் காணமல் மயங்குகின்றனவற்றைப்பார். எ-று. (அஉ)

புண்ணிய நீருறை புள்ளி நம்மைக்
கண்ணிடை கண்டு கலைந்து பறப்ப
மண்ணிட மின்றகல் வானிட முண்டென்
றெண்ணி விசும்பி லெழுந்தன பாராய்.

இ-ள். அந்தப்பரிசுத்தமான ஜலத்திலே சஞ்சரிக்கின்ற பட்சிக்கூட்டங்கள் நம்மைக் கண்ணாலேகண்டு கலைந்து பறப்பனவானது, இந்தப் பூமியினிடத்தில் நமக்கிடமில்லை. அகன்ற ஆகாசமே நமக்கிடமாக விருக்கின்றன வென்று நினைத்து ஆகாயத்திலே யெழுந்து செல்கின்றனபார். எ-று. (அ௩)

கங்கை யொருத்தி சிலம்பணி காலும்
சங்கணி கந்தர முந்துவர் வாயும்

செங்கய லுண்கணும் வெண்புளி னத்தல்
கொங்கை களுஞ்சத கோடிகள் பாராய்.

இ-ள். கங்கையாகிய ஒரு பெண்ணுக்குச் சிலம்பை யணிந்த கால்களுஞ் சங்குபோலழகுள்ள கழுத்தும் பவளங்களாகிய சிவந்தவாயும் சிவந்த கயல்களான கண்களும் வெண்மையான மணற்குவியல்களான குளிர்ந்துள்ள கொங்கைகளும் நூறுகோடிகளா யிருக்கின்றன பார். எ-று. (அச)

முத்தணி கொங்கை யிரண்டு முளைக்க
நித்தனை யம்பிகை நேயம் விளைத்தாள்
இத்தனை கொங்கை படைத்தரு ளென்றாய்
அத்தனை யெத்தனை யாசை விளைக்காள்.

இ-ள். முத்து மாலைக ளணிகிற ஸ்தனங்க ளிரண்டு தோன்றுதலாகி நித்தியனான பரமசிவனைப் பார்வதிதேவி மிகவும் தன்மேலன்புக் கொள்ளச் செய்தாள், (மணற்குவியல்களான) இவ்வளவு கொங்கைகளைக் கொண்ட எனது தாயான இந்தக்கங்காதேவி அப்பரமசிவனுக்கு எவ்வளவு ஆசையை யுண்டாகச்செய்யாள், (அதிகஞ்செய்வாள் என்றபடி) எ-று. (அரு)

மண்ணி லருந்தவ மன்னனு ரைக்க
ஒண்ணில வொத்தொளி ரொண்ணுதன் மேனாள்
பெண்ணில் விதித்த பெருந்தன மல்லால்
எண்ணில கொங்கைக ளென்செய வென்றாள்.

இ-ள். இந்த வுலகத்திலே அருமையான தவத்தையுடைய அரசன் அப்படிச்சொல்லவே, அழகான பாதிசசந்திரனை யொப்பாக விளங்குகின்ற அழகிய நெற்றியையுடைய சந்திரவதியானவள் முற்காலத்திலே பெண்களுக்கு வேண்டுவனவாக இரண்டென்றமைத்த பெரிய தனங்களையல்லாமல் கணக்கில்லாத தனங்களைக் கொண்டதனுலே யாதுபயனென்று கேட்டாள். எ-று.

ஒருமக முய்ய வளர்க்கு மொருத்திக்
கிருமுலை யுள்ளன வின்னமு தேகேள்
வருமுயிர் யாவும் வளர்த்திடு மன்னைக்
கிருமுலை போதுவ தோவிசை யென்றான்.

இ-ள். ஓ இனிதான அமுதம்போன்றவளே! கேட்பாயாக: ஒரு பிள்ளை பிழைக்கும்படி வளர்க்கின்ற ஒருத்திக்கு இரண்டு தனங்களே உளவாகவேண்டும், உலகத்திலே தோன்றுகின்ற உயிர்களெல்லாவற்றையும் வளர்க்கப்பட்ட (தாயான) ஒருத்திக் கிரண்டு தனங்கள் போதுமோ! நீ சொல்வா யென்றானரசன். எ-று. (அசா)

மங்கையு மன்னனு மற்று முளோரும்
கங்கை வளம்பல கண்டு நடந்தே
எங்கட வப்பய னெய்திய தென்று
அங்கனெ டும்புன லாடின ரன்றே.

இ-ள். இவ்வாறு சந்திரவதியும் அரிச்சந்திரனும் இன்னு முள்ள மூவரும் கங்காநதியினுடைய வளமைகள் பலவுங்கண்டு கொண்டு போய் நாங்கள் செய்த தவப்பயன் எங்களுக்கே லபித்ததென்று அவ்விடத்திலேயுள்ள நெடிதான நீரிலே ஸ்நானஞ்செய்தார்கள். எ-று. (அஅ)

அருமறை நூல்வழி யாடிய பின்னர்
மருவிய வண்டுறை மன்னவ னேக
விரிபுன றன்னி லிழிந்து விரைந்தே
கரைமிசை வந்தொரு காவி லணைந்தார்.

இ-ள். அரிதான வேதசாஸ்திரப்படியே ஸ்நானஞ்செய்த பின்பு தாங்கள் நீராடின அழகிதான துறையை விட்டு அரசன் செல்ல, (அவன் பின்னே) எல்லோரும் அந்தவிரிவான நீரிலேயிறங்கி விரைவிலேநடந்து கரைமேலேறி ஒரு சோலைக்குள்ளே போய்ச்சேர்ந்தார்கள். எ-று. (அக)

சோலையி லன்னவர் சோர்வொடு புக்கார்
வேலை புகுந்தனன் வெங்கதி ரோனும்
காலை யிலேகுது மென்றுக ணித்தம்
மாலையி லவ்விடை வைகின ரன்றே.

இ-ள். அந்தச் சோலைகுள்ளே அவர்கள் சோர்வுடனே போய்ச் சேர்ந்தார்கள், சூரியன் கடலிலே போய் மறைந்தான், விடிந்தபின்பு போவோமென்று ஆலோசித்துக் கொண்டு அன்றிராத்திரி அங்கேதானே தங்கினார்கள்.

அன்றிர வப்பொழு லவ்விடம் வைக
வன்றிறன் மாமுனி வஞ்சனை யாலே
வென்றி மடங்கல் வியன்புலி வேழம்
பன்றியொ டெண்கு படர்ந்தன வன்றே.

இ-ள். அன்றிராத்திரி அந்தச் சோலையில் தங்கியிருக்க, மிகுந்த சாமர்த்தியத்தையுடைய பெரியமுனிவரான விசுவாமித்திரருடைய கபடத்தினாலே, ஜயம்பொருந்திய சிங்கம்-பெரியபுலி-யானை-பன்றியுடனே கரடி இவைகளெல்லாம்வந்து படர்தலாயின. எ-று. (கக)

பொருப்பதி ரப்பிளி றிக்கை யுடைத்தே
மருப்பை விதிர்த்து மலைந்தக யங்கள்
செருப்புலி கோளரி செங்கணும் வாயும்
நெருப்புக வந்து நெருங்கின வன்றே.

இ-ள். யானைகள் மலைகளதிரும்படி முழங்கித் துதிக்கையை வீசிக்கொம்புகளை நீட்டிப் பொருதலாயின, சண்டைசெய்கிற புலிகளும் சிங்கங்களும் சிவந்தகண்களிலும் வாய்களிலும் நெருப்புசிந்தவந்து நெருங்கின. எ-று.

அன்றெமி னத்தை யறுத்த பழிக்குக்
கொன்றுநினைக்குரு திப்புன லுண்டு

தின்று பெரும்பசி தீருது மென்றே
நின்று மொழிந்து நிறைந்த செறிந்து.

இ-ள். முன்னே எங்களுடைய கூட்டங்களை யெல்லாம் நீ கொன்ற பழிக்காக இப்போதுன்னைக்கொன்று உனது இரத்தத்தை நீராகக்குடித்து மாமிசத்தைத்தின்று பெரிதான பசிதீர்க்கிறோ மென்று நின்றுசொல்லி எங்குமெநருங்கி நிறைந்தன. எ-று. (௬௩)

அன்னது கண்ட வரஞ்சிலர் தம்மைத்
தின்னுவ தேயினி தென்று தெளிந்தார
உன்னிய வெண்ண முணர்ந்தவை யெல்லாம்
மன்னிய கானின் மறைந்தன வன்றே.

இ-ள். அப்படி மிருகங்கள்வந்து கூடினதைக்கண்டு இவர்கள் எவ்வளவும் அஞ்சாதவர்களாய்த் தங்களை மிருகங்கள் கொன்றுதின்கிறதே நல்லதென்று துணிவு கொண் டிருந்தார்கள். இவர்கள் எண்ணிய எண்ணத்தைத் தெரிந்து அந்த மிருகங்களெல்லாம் தாங்களிருக்கிற காட்டிலேயே போய் மறைந்தன.

நீதி வழாதவர் நீர்மை யுணர்ந்தே
காதி விலங்குகள் சார்விட நண்ண
ஓதிய வேத னுரைத்த குறிப்பால்
வேதியன் மற்றோர் விசார முரைப்பான்.

இ-ள். நீதிவழுவாத இவர்களுடைய குணங்களை யெல்லாந் தெரிந்து பல சாதி மிருகங்களும் தாங்கள் சஞ்சரிக்கு மிடத்துக்குப் போகக்கண்டு தனக்கு விசுவாமித்திரர்சொன்ன குறிப்பினாலே கூடவந்த சுக்கிரன் இவர்களைப் பார்த்து வேறேயொரு ஆலோசனை சொல்லுகிறான். எ-று. (௬௫)

மன்னவ கேள்வினை வந்தது சற்றே
இன்னம் வரும்வினை யெல்லையி லாத
முன்னமு ணர்ந்து முனிக்கினி யேனென்
றன்னர செய்துத லுத்தம மென்றான்.

இ-ள். அரசனே! கேள்: இப்போது கொஞ்சந் தீயசெய்கைகளுண்டாயின, இனி இன்னமும் வருவனவாகிய தீவினைகள் கணக்கில்லாதவைகள், ஆகையால், இப்படித் தீவினைகள் வருமுன்னே தெரிந்து கொண்டு விசுவாமித்திரனுக்கு உன் அரசாட்சியைக் கொடுக்க மாட்டே னென்று சொல்லி உன்னரசாட்சியை நீபோய் ஒப்புக் கொள்ளுகிறதே உத்தமமான காரியமென்று சொன்னான். எ-று. (௬௬)

நின்பர மீந்திலன் யானென நிற்றல்
என்பர நின்னர செய்தவ ளித்தல்
துன்பமு ணர்ந்திவை சொல்லறு ணிந்தேன்
மின்பயிம் வேலவ மீளுதி யென்றான்.

இ-ள். பின்னும் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடுக்க மாட்டேனென்று சொல்லுகிறதொன்றே உனக்குச்சுமை, அதுசொன்னு லுன்னரசாட்சி உனக்குக் கிடைக்கும்படி செய்கிறது எனக்குச்சுமை ஒளிவீசுகின்ற வேலையுடைய அரசனே! நீங்கள் படுகிற துன்பங்க ளெல்லாந் தெரிந்து நானிப்படிச் சொல்லுதற்குத் துணிவுகொண்டேன். நான் சொன்னபடியே கேட்டுத் திரும்பென்று சொன்னான் சுக்கிரன். எ-று.

பாரம் என்பது பரமெனக் குறுகியது (௬௭)

அந்தண னவ்வுரை கூறிட வண்ணல்
மைந்தனு மங்கையு மற்று முளோரும்
நைந்தெ னுடன்றலை வெய்தினு நான்முன்
தந்தது மாறில னென்று நணிந்தான்.

இ-ள். சுக்கிரன் அந்த வார்த்தை சொல்லவே, அரசனானவன் என் பிள்ளையும் என்மனைவியும் இன்னமுள்ளவர்களும் வருந்தி என்னுடனே கூடியழிகிறதானாலும் நான் முன்னே தந்ததை இல்லையென்று சொல்லேனென்று சுக்கிரனை யடக்கினான். எ-று. (௬௮)

சொன்னவை கொள்கிலை சூழ்வினை யெய்தின்
அன்னவை பட்டறி யாகுல மன்னா
என்னை விடிந்திரு ளேகலு மேகி
மன்ன னடந்தனன் மற்றவ ரோடும்.

இ-ள். இடம்ப குணத்தையுடைய அரசனே! நான்சொன்ன வார்த்தைகளை நீ ஒப்புக் கொள்ளுகிறதில்லை, (ஆனால் ஒருவர் உணவுபண்ணிவிடுகிற) தீவினைகள்வந்தால் அவைகளெல்லாம் பட்டபின்பு தெரிந்து கொள்ளென்று சொல்லுமளவில், இருள்கழிந்து பொழுதுவிடிந்தவுடனே அரிச்சந்திரமகாராசன் மற்றுமுள்ளவர்களுடனே அவ்விடம் விட்டுப்போனான். எ-று.

ஆகுலம் - இடம்பம். (௬௯)

வல்லையி லேகி மறித்திரள் பொங்கு
முல்லை நிலத்தினை முற்று மகன்று
புல்லை மிகக்கொள் குறிஞ்சி புகுந்தாங்
கெல்லை யிலாமலை யேறி யிழிந்தார்.

இ-ள். விரைவிலேபோய் ஆட்டுக் கூட்டங்கள் மிகுந்து மேய்கின்ற முல்லைநிலத்தை முழுதுங்கடந்து, புலிகளை மிகவுமுடையதான குறிஞ்சி நிலத்துக்குப்போய் அங்குள்ள கணக்கில்லாத மலைகளெல்லாமேறி யிறங்கினார்கள்.

மேற்படி வேறு.

அரிகளு மரிகளால் வீழ்ந்த ழிந்தவெங்
கரிகளுங் கரிகளான் மடிந்த காலெறி
வரிநெடும் புலிகளும் புலிக ளான்மறிந்
திரிதரு முழைகளுஞ் செறிவைப் பெய்தினர்.

இ-ள். சிங்கங்களும், அந்தச் சிங்கங்களால் விழுந்து செத்துக் கிடக்கிற; வெவ்வியயானைகளும், அந்த யானைகளாலே,இறந்துகிடக்கிற;காலாலேஅறை யத்தக்க வரிகளை யுடைய நீண்ட புலிகளும். அந்தப் புலிகளாலே அறையப்ப ட்டு ஓடுகின்ற;மான்களும் நெருங்கின காட்டுக்குள்ளே போனார்கள். எ-று.

நானமு நரந்தமு நாறு நாண்மலர்க்
கானமு மாரமுங் காக துண்டமும்
பாணமும் பாந்தளின் மடங்கும் பாய்கரி
தானமுந் தெரிகில தலைம யக்கமே.

இ-ள். சவ்வாதுமணமும் கஸ்தூரிமணமும் பரிமளிக்கின்ற அன்று பூத்தி ருக்கிற புட்பங்களையுடைய சோலையும் சந்தன விருட்சங்களும் அகில்விருட்ச ங்களும் ஆகிய மணங்களை யனுபவிக்கிறதும் பாம்புகளின் மண்டலமும் பாய் கின்ற யானைமத நாற்றமும் வேறுபாடு தெரிந்தில; எல்லாங்கலந்து நாறுதலி னாலே. எ-று. (௧0௨)

நல்லணி யரம்பையர் விஞ்சை நங்கையர்
மல்லணி நெடும்புய மஞ்ஞளர் தம்முடன்
புல்லலி னுதிர்ந்தசெந் தருவின் பூக்களும்
பல்லவ சயனமும் பார்த்துப் போயினார்.

இ-ள். நல்ல ஆபரணங்களை யணிந்த அரம்பைகளும் வித்தியாதரப் பெ ண்களும் வலிமையைக்கொண்ட நீண்டதோள்களையுடைய தங்கள் நாயகருட னே அணைகிறபோது உதிர்ந்த சிவந்த கற்பகத்தருவின் மலர்களும் அவர்கள் படுத்திருந்த தளிர்கள் பரப்பின படுக்கைகளுங் கிடக்க அவைகளைக் கண்டு போனார்கள். எ-று. (௧0௩)

அழிதரு மிறாலுகு நறவு மாய்மலர்ப்
பொழிதரு பிரசமும் பெருகிப் பொங்கியே
வழிதரு மருவிகள் சிவணி மாமணி
இழிதரு சோணமா நதியை யெய்தினார்.

இ-ள். தேன் கூட்டினின்றும் உடைந்து சிந்துகின்றதேனும், வண்டுகள் தேடுவனவான பூவினின்றுஞ் சிந்துகின்ற தேனும் பெருகிப் போகுதலாய் வழிகின்ற அருவிகளை யொப்பாகிய பெரியமுத்துகள் ஒதுங்குகின்ற சோண மாநதியைப் போய்ச் சேர்ந்தார்கள். எ-று. (௧0௪)

கடகரி யிழிதுறைக் கஞ்ச முத்தமும்
தடவரி யிழிதுறைச் சரிந்த செம்பொனும்
படவரி யிழிதுறைப் பதும ராகமும்
இடமற மிளிர்வன விரண்டு பாலுமே.

இ-ள். மதயானைக ளிறங்குந் துறையிலே மலர்கிற தாமரைமுத்துகளும், பெரிய சிங்கங்க ளிறங்குந்துறையிலே சரிந்துகிடக்கிற சிவந்தபொன்மணலும், படத்தை யுடைய பாம்புகளிறங்குந் துறையிலே கிடக்கிற பதுமராகமும் அந்த ஆற்றினிருபுறத்திலும் இடந்தோற்றாமல் விளங்குகின்றன. எ-று.(௧0௫)

பருமணல் வண்டலும் பரந்த சங்கமும்
கருமணற் புளினமுங் கறிகொள் சந்தனத்
திருமண மருவுநீர்ச் சுழியுந் தெண்புனல்
வருமணி வரன்றிய வாலு கங்களும்.

இ-ள். பருத்த மணலையுடையசேரும், அங்கேஊருகின்றசங்குகளும், கரியமணல்மேடுகளும், மணங்கொண்ட சந்தன விருட்சங்களினுடைய நல்லவாசனை பரிமளிக்கின்ற நீர்ச்சுழிகளும், தெளிந்த நீரலொதுங்குகின்ற மணிகளை வாரிக்கொண்டுவந்து எக்கலிட்ட வெள்ளைமணற் குன்றுகளும். எ-று.

இதுமுதல் இரண்டுபாடல்கள் குளகம். (௩௬)

குரண்டமு மன்னமுங் குருகு நாரையும்
திரண்டபோ தாக்களுந் திகிரிப் புட்களும்
முரண்டநீர் முடுவலு முதலை யீட்டமும்
கரண்டமுங் கம்புளுங் கண்ட கண்ணெலாம்.

இ-ள். கொக்குகளும் அன்னங்களுங் குருகுகளும் நாரையுந்திரண்டிருக்கின்ற புறாக்களும் சக்கரவாகப்பட்சிகளும் மாறுபட்டிருக்கின்ற நீர் நாய்களும் முதலைக்கூட்டங்களும் நீர்க்காக்கைகளும் சம்பங்கோழிகளும் ஆகிய இவைகளையே கண்டன இவர்களுடைய கண்களெல்வாம். எ-று. (௩௭)

கால்கரை மேய்கின்ற கான மேதியின்
பால்கரைந் திழிபுனற் பரப்பை நீந்திப்போய்
மேல்கரை வெண்மணற் பரப்பில் வேதநன்
னூல்கரை கண்டவ னெய்தி னெய்தினன்.

இ-ள். வாய்க்காற்கரைகளிலே மேய்கின்ற காட்டெருமைகளின்பால்மடியினின்று ஒழுகுகின்ற அந்த நீர்ப்பரப்பை நீந்திக் கடந்து சென்று அந்த ஆற்றங்கரையின்மேல் வெள்ளைமணல் பரவிக்கிடக்கிற இடத்திலே நல்ல வேதசாஸ்திரங்களின் கரைகண்டவனை அரசன் விரைவிற்போனான். எ-று. (௩௮)

அடர்ந்தபூஞ் சோலையி னன்று தங்கியே
விடிந்தபின் னவ்விடம் விட்ட கன்றுபோய்ப்
படர்ந்த வெங் கானமும் பருப்ப தங்களுங்
கடந்துபோ யமுனையின் கரையை மேவினார்.

இ-ள். அங்கே நெருங்கியிருக்கின்ற பூஞ்சோலையிலே அன்றிராத்திரிதங்கிவிடிந்தபின்பு அவ்விடத்தை விட்டுப் போய் பரவுதலான வெவ்விய காடும் மலைகளும் கடந்துசென்று யமுனாநதிக் கரையை யடைந்தார்கள். எ-று. (௩௯)

எடுத்தமன் னனைத்துறந் திருடி தன்னுடன்
அடுத்தகற் பழகிதென் றவனி மங்கையைக்
கடுத்திடித் திறைவனைக் கடிது மீள்கெனத்
தடுத்தவா றொத்துள துயமுனை தானுமே.

இ-ள். தன்னை நாளது வரையிலுந் தாங்கிக் கொண்டிருந்த அரிச்சந்திரனைவிட்டுவிட்டு ஒரு முனிவனுடனே நீ கூடுவதான உன்கற்பு நன்றாயிருந்ததென்று பூமிதேவியைக் கோபித்து இடித்துவிட்டு, அரசனைநோக்கி நீ சீக்கிரத்திலே திரும்பிப்போவென்று அணைபோட்டுத் தடுத்தன்மை போலிருந்தது அந்த யமுனையாறு. எ-று. (ாய)

கட்டறி னன்பொருள் கௌசி கன்கொளப்
பட்டன வதற்கிறு பகுதி கொள்கென
இட்டென யமுனையா றியாணர்ச் சந்தகில்
மட்டறக் குவித்தது மணியும் பொன்னுமே.

இ-ள். அடக்கஞ்செய்து வைத்திருந்த உனது நல்ல பொருள்கள் விஸ்வாமித்திரனாலே கொள்ளலாயின; அதற்காக இதுஉனக்குக்கொடுக்க வேண்டிய பகுதிப்பொருள் நீ ஏற்றுக்கொள்ளென்று குவித்திட்டாற்போல்,அந்தயமுனாநதி அழகான சந்தன விருட்சம் அகில் விருட்சங்களையும் அளவில்லாத மணிகளையும் பொன்னையும் குவியலசெய்தது. எ-று. (கககஅ)

கொழித்தசெம் மணிக்கும் பொன்னுங் கோசிகற்
கழித்திடற் கெண்மடங் கான தாயினு
மெழிற்றவ முனிவனுக் கீந்த வெல்லைபி
னுழிபபொருள் கொள்ளுதற் காதென் றுன்னினான்.

இ-ள். அந்தநதி அப்படி அலைகளா லொதுக்கின சிவந்த மணிகளும்பொன்னும் விஸ்வாமித்திரனுக்குக் கொடுக்கவேண்டிய கடன் தீர்ப்பதற்குஎட்டுப் பங்கு அதிகம் உள்ளதாயிருந்தாலும் அழகான தவத்தை யுடைய விஸ்வாமித்திரனுக்குக் கொடுத்த எல்லைக் குள்ளான பூமியிலுள்ள பொருள்களை அவருக்குக்கொடுக்கிறது தகாதென்று நினைத்தான் அரசன். எ-று. (ககஉ)

இன்னது நிகழ்வுழி யிறைவன் காளிந்தி
நன்னதிக் கரையினை நண்ணி வைகினான்
அந்நதித் துறைபடிந் தாடி வைகுமம்
மன்னெதிர் கௌசிகன் வந்து தோன்றினான்.

இ-ள். இப்படியான அலங்காரங்கள் தோன்றுவதுகண்டு, அரசனானவன் அந்த யமுனாநதியினது கரையை யடைந்த பின்பு அந்தநதியிலே முழுகி ஸ்நானம்பண்ணிக் கொண்டிருக்கின்ற அரசனுக்குமுன்னே விஸ்வாமித்திரர் வந்து காணலானார். எ-று. (ககங)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அரவுயிர்த் தமணிதுற் றுதரபந் தனமழுத் தியதன்மேல்
மரவுரித் தொகைவிசிப் புறநெருங் கியமருங் குறவிடஇக்
கரதலப் பிரணவத் தொழில்செவிப புடைகலக் கமுடிமேல்
குரவு நொச்சிவெ ளெருக்கலரி கொத்தி தழியுற் றலையவே.

இ-ள்.பாம்புகள் பெற்றஇரத்தினங்களைப்பதித்து உதரபந்தனமாகச்சூழ்ந்து அதன்மேலே மரவுரியினது தொகுப்பைககட்டின கட்டுமிகவு நெருங்கின

இடையிலே தோன்றத் தொங்கவிட்டு பிரணவத்தை யுச்சரித் தெண்ணுகிற கையானது காதிலே கூடவும் திருமுடி மேலே குரவம்பூவும் நொச்சிப்பூவும் வெள்ளெருக்கம் பூவும் அலரிபூவும் கொத்துகளாகிய கொன்றைப்பூவும் அசைவதாகவும். எ-று.

இதுமுதல் மூன்றுபாடல்கள் குளகம். (௧௧௪)

இடைநு டங்கியு மடங்கியு மெழுந்துற வலைந்திடு செழுஞ்
சடைகு லைந்துற வரிந்தணி தலந்தனில் விழுந்து புரள
வடநெ டுங்கன லும்விண்டலமு மண்டலமும் வெந்து கருகக்
கடைநெ டுங்கொடு விழித்தொறு மடுங்கனல் கனன்றெரியவே.

இ-ள். இடையானது துவண்டும் சுருண்டும் நீண்டும் மிகவும் அலைதலையுடைய செழுமையான சடைகள் குலைந்துபோகவும், மறுபடியும அச்சடைகளை வரிந்து கட்டுகிற போதில் அழகிய பூமியிலே விழுந்து புரளவும், நெடிதான வடவாக்கினியும் விண்ணுலகமும் மண்ணுலகமும் வெந்து தீயவும், கடைகண்களிலே நீண்ட கொடுமைகொண்ட கண்களைத் திறந்து பார்க்குந்தோறும் கொல்லுவதான நெருப்புக் கொதிப்புக் கொண்டெரியவும். எ-று. (௧௧௫)

படைபி டித்தணி நெறித்தகை பவித்திர தருப்பை நிறுவிக்
குடைபி டித்துவர மற்றொரு கைகுண்டி கைபிடித் துவரவே
மடைபி டித்தவயன மண்டல முமாநகரும் வண்பொரு ளுமுன்
கொடைகொ டுத்தகரு ணைத்திரு முகக்குரு சிலைக்குறு கினான்.

இ-ள். கௌசிகராஜனா யிருந்தபோது. ஆயுதங்களைக் கொண்டுமோதிரங்களான ஆபரணங்க ளணிந்திருந்த கையிலே. பவுத்திரமுந் தருப்பையுங் கொண்டு, குடையும் பிடித்துக்கொண்டுவர, மற்றொரு கையிலே கமண்டலங்கொண்டுவருகிறவராய் நீர் பாயும் வழிகளைக் கொண்ட வயல்சூழ்ந்த மண்ணுலகத்தையும் பெரியபட்டணத்தையும் அழகிய திரவியத்தையும், முன்னே தியாகமாகக் கொடுத்த கிருபைபொருந்தின திருமுகத்தையுடைய அரசனைக் கிட்டினான். எ-று. (௧௧௬)

கண்ட னன்கரு ணையங்கட ல்கடுங்கௌ சிகன்வர வினை
மண்ட லத்தலை வர்மந்திரி கடன்பணி மறுத்தனர் கொலோ
தண்டமென் றன்மிசை யுண்டென மெலிந்திரு சரண்ட ழுவியே
கொண்டனன் புனலிரண் டுகணுயின் றருகுதி கொண்டொ ழுகவே.

இ-ள். கிருபைக் கடலான அரசன். கடுமையான வேகத்துடனே விஸ்வாமித்திரர் வருகிறதைக்கண்டான்; கண்டவுடனே மண்டலீகரான அரசர்களும் மந்திரிகளும் தமதுஉத்தரவைத் தடுத்துப்பேசினார்களோ; அவர்களப்படிப் பேசினதுண்டானால் என்மேலே தண்டனை யுண்டாகுமே யென்று மெலிவுகொண்டு இரண்டு கண்களிலும் நீர் குதிகொண்டொழுக அவருடைய இரண்டு பாதங்களையும்போய்ப் பிடித்துக்கொண்டான். எ-று. (௧௧௭

எந்த நாயக வுனக்கெமர் நெடும்பிழை யிழைத்தனர் கொலோ
தந்தமா நிதியினிற்சிலகரந் துசிலதந் தவுளவோ
உந்தமே வறவுறிச் சிலர்பிழைத் தெதிருரைத் தனர்கொலோ
வந்தகா ரணமெடுத் தினிதுறைத் தருள்வருத் தமறவே.

இ-ள். எங்கள் தெய்வமே! உமக்கு என்னைச் சேர்ந்த மந்திரி முதலாயி னோர் நெடிதான குற்றங்கள் செய்தார்களோ? நான்கொடுத்த பெரிய திரவி யங்களிலே சிலவற்றை மறைத்துக் கொண்டு கொடுத்தவை யுண்டோ உம்மு டைய ஏவலுக்குத் தவறுதலாகச் சிலர் அபராதிகளாய் எதிர்த்துப்பேசினவர் களுண்டோ? தேவரீர் இங்கே எழுந்தருளிய காரணத்தை இன்னதென்று தெரிய உம்முடைய வருத்தந்தீர்வதாய் நன்றாகச்சொல்லி யருளவேண்டும்.

இந்தவெங் கடமணைந் துடறளர்ந் தயிரிடைந்தனை யெனு
நொந்தனன் மனது நொந்தபடர் சிந்தனை தணிந்திடமுனீ
தந்த நாடுநகர் தந்த திலைதந்ததிலையென் றுமொழிதந்
தந்த நாடுதனில் வந்தரசு கொண்டுறைக வென்றருள் செய்தான்.

இ-ள். (என்று சொன்ன அதற்கு) விசுவாமித்திரர் இவ்வெவ்விதானகா ட்டிலேவந்து உன்னுடைய உடம்புதளர்ந்து மனமும்வருந்தினையென்றுநான் மனம்வருந்தினேன்; இப்படி வருந்தின துன்பம் என்மனத்தை விட்டுப்போ காமுன்னே நீகொடுத்த நாடும் நான்கொடுத்ததில்லை; நகரும் கொடுத்ததில்லை யென்று ஒருவார்த்தையிற் சொல்லிவிட்டு அந்தநாட்டுக்குவந்து உன்பட்டண த்திலிருந்து அரசாட்சிகைக் கொண்டு வாழக் கடவை யென்று அருளிச் செய்தார். எ-று. (௪௪௯)

எந்த நல்லுயிருமென் கிளைஞரின் னுயிரு மன்னுயிர்களும்
நந்தி னும்முடல் புதைக்க நரகத்தினி லிருத்தி விடினும்
முந்த வந்தண ரறிந்திட மொழிப்படி யளித்த பொருளைத்
தந்த தில்லையென வுன்றனெதிர் நின்றுரை செயத் தகுவதோ.

இ-ள் (அதற்கு அரசன்) எங்களுடைய நல்ல வுயிரும் என் உறவினரு டைய இனியவுயிரும் (ஏனைய) நிலைபெற்ற வுயிர்களும் கெட்டாலும், எங்களு டம்பு புதைக்க எங்களைநரகத்திலேகொண்டுபோயமிழ்த்தத்தினாலும் முன்னே பிராமணர்களெல்லாரு மறிய உம்முடைய சொற்படி கொடுத்தபொருள்களை உமக்கு முன்னே கொடுத்ததில்லையென்று நான் சொல்லத்தக்கதோ? (௪௫0)

கடிஞை யிட்டபலி யைக்கையி லெடுத்தடு பசிக்கு நுகரும்
மிடியரி ப்புவியிட த்திலையெனக்கிது விதி த்ததலவென்
றடிகளிற் கரவிறுக் கின்னிறுக்கிடமறுத் தரசன் முன்
கடியசொற் கொடுவினைக் கௌசிகப் பெயரினன் கழறுவான்.

இ-ள். பாத்திரத்திலே யிட்ட பிச்சையை (பிச்சை யிட்ட) தங்கள் கையா லெடுத்து, வருத்துகின்ற பசிக்குச் சாப்பிடுகின்ற தரித்திரரை இந்த வுலகத்திலே நான் கண்ட தில்லை, அப்படி நான் கொடுத்ததைத் திரும்பவு

நானே அனுபவிக்கும்படி எனக்கு இப்படி உத்தரவு செய்கிறது தகாதகாரிய மென்று அவர்பாதங்களிலே தன் கைகளிறகும்படிப் பிடித்துக்கொண்டான் அப்படிப் பிடித்துக்கொள்ளவே அவனைவிலக்கி அந்த அரசனுக்கு முன்னே கடுமையான சொல்லைக் கொண்டு கொடுமையுள்ள விசுவாமித்திரர் சொல்லு கிறார். எ-று. (கஉக)

தொக்க பற்பல விலங்குக டொடர்ந்துடல் பிளந்து நலியும்
புக்க விக்குடி ளையிற்குடிளை பற்பல பொருப்பு மஃதால்
இக்க டத்தினி லவத்திலெனி திற்புகுத றக்க தலைதென்
மக்க ளைத்திரு மணஞ்செய்து புணர்ந்து நின்வளம் பெறுதியால்.

இ-ள். ஒருசேர்க்கையாகப் பலபல வகைகளான மிருகங்கள் வந்து தொடர்ந்து உங்களுடம்பைக் கிழித்து வருத்தஞ் செய்யும்; நீங்கள் வந்திரங்கின இந்த ஆற்றிலே பல பட்சிசாதிகளைக் கொண்டதாயிருக்குள்ள மலைகளும், அவ்வகை மிருகங்களையுடையனவே யாகையால். இப்படிப்பட்ட காட்டிலேவீணு கவந்து அலட்சியமாக எண்ணிச் செல்லுதல் தகுந்த காரியமென்று இனி என் பெண்மக்களைத் திருக்கலியாணம் பணணிக்கொண்டு கூடி உன்னுடைய அரசாட்சியை நீயேபெற்றுக்கொள். எ-று. (சுஉஉ)

கண்ணி லாதமத னப்பிணி கருத்திடை பெருத்தி டின்மனத்
தெண்ணி லாதுயி ரிறுத்திடு மிடததினு மிருட்க ணுறுவார்
மண்ணி லாசையும் நிதிப்பெரு வளத்தினிடை வைத்தமனமும்
பெண்ணி லாசையு மொருத்தர்கை பிடித்து விடுதற் குறியவோ.

இ-ள். கண்தெரியாமையைச் செய்கிற காம நோயானது மனத்திலே அதிகமானல் மனத்திலே ஒன்றையும் எண்ண வொட்டாமல் உயிரை யழிக்கும், அல்லது அந்தக் காமத்தை மறைத்துக் கொண்டிருந்தால் துன்பப்படுவார்கள். ஆகையால், மண்ணிலுள்ள ஆசையும் திரவியமாகிய பெரிய நன்மையிலே கொண்ட மனத்தாசையும் பெண்ணினிடத்திலே கொண்ட ஆசையும் ஒருவர்கைக்கொண்டு திரும்பவிடக் கூடுமானவோ? எ-று. (கஉங

குக்கி புக்கது செருக்கொடு குடற்கரு வருப்பு வரவே
கக்கி விட்டது புசிப்பவர் கடற்புவி யிடத்தி லுளரோ
தக்க சொற்றிற முரைத்திலை சழக்கின னெனப்பெய ரிடும்
இக்க ருத்தையினி விட்டுவிடு விட்டுவி டெனக்க ழறினன்.

இ-ள். வயிற்றுக்குள்ளே போனது மதத்துடனே குடலுக்கு அருவருப்புத்தோன்ற வாந்திசெய்த அதை மறுபடியும் உண்கிறவர்கள் இக்கடல் சூழ்ந்தவுலகத்திலுளராவரோ, இல்லையாகையால், நீர் தகுதியான சொற்றிறங்களைச் சொல்லவில்லை என்னைக் கர்வமுடையவனென்று பெயரிடுகிற இந்தநினைவை விட்டுவிடும், இன்னமும்விட்டுவிடுமென்று அரசன்சொன்னன். எ-று. (கஉச)

இடுத லுந்தவிர்த லும்மிட மறிந்தியல் பறிந்தொ ருதரம்
விடுத லுந்தொடுத லும்வினை யறிந்து விளையும் விளைவறிந்

தடுத லும்படுத லும்மள வறிந்தடை வறிந்து செயலால்
கெடுத லுண்டாறுத லுண்டவை யறிந்துணர் தரிற்கெடுவரோ.

இ-ள். ஒருதரம் பிச்சையிடுகிறதும். பிச்சையிடாதிருக்கிறதும் கொடுக்குமிடமுந் தெரிந்து தன்சுபாவமுந் தெரிந்து செய்ய வேண்டும். இனிசெய்யுங் காரியமுந்தெரிந்து, அதுசெய்தா லுண்டாகுகின்ற முடிவுந்தெரிந்து அந்தக் காரியத்தை விடவேண்டும். அல்லது பற்ற வேண்டும். தன்னளவுந் தெரிந்து இனிவருமளவுந் தெரிந்து பகைவனைக் கொல்ல வேண்டும். அல்லது தான் சாவவேண்டும். இவ்வளவு ஆலோசித்துச் செய்தலிலும் கெடுதல் வருகிறதுமுண்டு. அந்தக்கெடுதி தீருகிறதுமுண்டு. ஆகையா லக்காரியங்களெல்லாந்தெரிந்துணருவார்களே யானால் அவர்கள் கெடுதலடைவார்களோ? அடையார்களென்றார் விஸ்வாமித்திரர். எ-று. (கஉரு)

இந்த வுத்தரமு னக்கினி யெனக்குரை செயத்தகுவதோ
வெந்த ழற்குளெனை விட்டிடினும் வெட்டிவகி ரிட்டு விடினும்
முந்து வன்பினுட னன்பயின் முனிந்தமுனி விற்கடியனேன்
தந்து விட்டபொருள் கொள்வதில் விருப்ப மொருசற்று மில்லையே.

இ-ள். இந்த மறுமொழி இனி எனக்குச் சொல்ல உமக்குத் தகுமோ! என்னை வெப்பமான நெருப்பிலே போட்டாலும், என்னைவெட்டி யிருபிளவு செய்தாலும் முன்னே பிரியத்துடனே நீர் என்னிடத்திலே கோபித்த கோபத்துக்கஞ்சி அடியேன் கொடுத்து விட்ட பொருள்களை மறுபடியும் வாங்கிக் கொள்ளுகிறதில் கொஞ்சமேனும் எனக்கு விருப்பமில்லை யென்றானரசன்.

புனித நின்சொலை மறுத்தலில் வெறுத்திடல் பொறுத்தருளெனப்
பனித வழ்ந்தபொழி லிற்படி விழுந்தடி பணிந்து தொழலும்
முனிவெ குண்டிருவி ழிக்கடை சிவப்புற நெருப்பெழமுனிந்
தினிவ ரும்பரிச கண்டிடுக வென்றவ ணகன்றனனரோ.

இ-ள். (பின்னும்) பரிசுத்தமான முனீந்திரரே! உம்முடைய சொல்லை நான் தடுத்துப் பேசுகிறதினாலே என்னை வெறுத்து விடாமல் பொறுத்தருள வேணுமென்று அந்தப் பனிமொய்த்திருக்கிற சோலையிலே பூமியிலே விழுந்து அவரடியை வணங்கிக் கும்பிடும்போது விசுவாமித்திரர் கோபித்து இரண்டு கடைக்கண்களிலுஞ் சிவப்புண்டாகி மிகவு நெருப்புத் தோன்றப் பின்னுங் கோபங்கொண்டு இனி நடக்கிற காரியங்களைத் தெரிந்துகொள்ளென்று கூறி அவ்விடம் விட்டுப் போயினார். எ-று. (கஉஎ)

மாத வன்கடித கன்றிட வருங்கொடு மையைக் கருதியே
சீத பங்கயமு கங்கருகி யெண்ணடி தெளிந்த துடனே
பூத லம்பெறுவ தும்புலைம டந்தையர் புணர்ச்சி யுமலால்
ஏது வந்திடினு நன்றென விருந்தன னிருந்த பொழுதே.

இ-ள். அப்படி அந்த மகாதவத்தையுடைய விஸ்வாமித்திரர் விரைவிலே அவ்விடம் விட்டுப் போகவே, இனி வருவதான கொடுமைகளை யெண்ணிக் குளிர்ந்த தாமரை மலர்போலு முகங்கறுத்துக் கருகுதலாய்ப் பின்னும் எட்டு

ப்பங்கு தெளிவு தோன்றுதலுடன் உலகத்தைப் பெறுகிறதும் அல்லது நீசப் பெண்களைக் கூடுகிறதும் ஆகிய இரண்டையு மல்லாமல் இனி எதுவந்தாலும் நல்லதேயென்று ஆலோசித்துக் கொண்டிருந்தான் அரசன். அப்படியிருக்கிற போது. எ-று. (கஉஅ)

கலி விருத்தம்.

இறையவ னின்னண மெய்து மெல்லையில்
நிறைமலர்ச் சோலையின் மறைந்து நின்றுழி
அறைகழற் கௌசிக னரசன்பா னின்ற
மறையவ னருகும்படி மனத்தி லெண்ணினன்.

இ-ள். அரசனானவன் இவ்வாறிருக்கையில், விசுவாமித்திரர் நிறைந்த மலர்களையுடைய அந்தச்சோலையிலே மறைந்துநின்றுகொண்டு சத்தியாநின்ற வீரக்கழலையுடைய அரிச்சந்திர னிடத்திலே நிற்கிற பிராமணனை சுக்கிரன் தன்னிடத்துக்கு வரும்படி மனத்திலே யெண்ணினார். எ-று. (கஉகூ)

மாதவ னினைத்திட மறைய வன்விரைந்
தாதரின் மயங்குறு மரசை நீங்கியே
ஏதமும் வஞ்சமு நிறைந்த வெண்ணியே
பாதக னின்றபூம் பழுவத் தெய்தினான்.

இ-ள். பெரிய தவத்தை யுடைய விசுவாமித்திரர் நினைக்கவே, அறிவில்லாதவர் போல மயங்குகின்ற அரசனை சுக்கிரன் விரைவிலே விட்டுப்போய் இன்னமும் பல துன்பங்களையும் வஞ்சனையையும் செய்ய வெண்ணிக் கொண்டொதகனான விஸ்வாமித்திரர் நிற்கிற பூஞ்சோலைக் குள்ளே போனான்.

வெஞ்சினக் கௌசிகன் வேதி யன்றனை
வஞ்சினத் தழைத்தடல் வல்ல நாவியை
நஞ்சினிற் றோய்த்ததே போல நன்கிலா
நெஞ்சினுக் குறுவினை நிகழ்த்தி யேகினான்.

இ-ள். வெவ்விதான கோபத்தையுடைய விஸ்வாமித்திரர் மிகுந்தகோபத்தோடு சுக்கிரனைக் கூப்பிட்டு (தாம் பண்ணியிருக்கிற சப்தரிமித்தமாகக்) கொல்லுகிறதிலே வல்லதான பசசைநாவியை நஞ்சிலே கலந்தாற்போல அவனுடைய நன்மையில்லாத நெஞ்சுக்கு மிகுந்த செய்வினைகளைச் செய்யும்படி சொல்லிவிட்டுப்போனார். எ-று. (கஙக)

இன்னது கௌசிக னியம்பிப் போனபின்
மன்னனை மறையவன் வந்து நண்ணினன்
நன்னதி பெருக்குநீ ரற்ற நாளிலே
அந்நதி தன்னைவிட் டகன்று போயினார்.

இ-ள். இப்படிப்பட்ட செய்கையை விஸ்வாமித்திரர் சொல்லி விட்டுப் போனபின்பு அரசனைச் சுக்கிரன்வந்து கூடினான்; பின்பு அந்த நல்லநதியிலே

பெருகுவதான நீர் வற்றி யிருக்கிற சமையத்தில் அந்த நதியைக் கடந்தப்பாற் போனார்கள். எ-று. (கரு௨)

கன்னிய மன்னனுங் காதன் மைந்தனும்
நன்னதி யமுனைவிட் டேகு நாளிலே
சென்னியைத் துளக்கிக்கண் சிவந்து கௌசிகன்
வன்னியை வருகென மனத்தி றுன்னினான்.

இ-ள். சந்திரவதியும் அரசனும் பிரியமுள்ள புத்திரனும் அந்த நல்ல நதியாகிய ஆற்றைக் கடந்துபோகும்போது, விசுவாமித்திரர் தலையையசைத்துக்கண்கள்சிவந்து அக்கினிபகவானை வரவேணுமென்று மனத்திலே நினைத்தார். எ-று. (கருரு)

வருகென நினைத்தலு மலர்த்தண் சூழலில்
இருபிறப் பாளனாய் விரைவி னெய்தியே
அருமறை மாதவ வெனை யழைத்தவக்
கருமமே துரையெனக் கனல்வி ளம்பினான்.

இ-ள். வரவேணுமென்று நினைத்தவுடனே அந்த மலர்களையுடைய குளிர்ந்தசோலையிலே அக்கினிபகவான் பிராமணரூபத்தை யுடையவனாகி அதிசீக்கிரத்திலேவந்து, அருமையான வேதங்களெல்லாந் தெரிந்த பெரிய தவத்தை யுடையவரே! என்னை வரவழைத்த அந்தக் காரியம் யாது சொல்லு மென்று கேட்டார். எ-று. (கரு௪)

கடுநெருப் பின்னணம் பகரக் கௌசிகன்
நெடுவனம் பொடிபட வெரித்து நீமறித்
தடுதிறன் மன்னனை யடர்ந்து கோளொடும்
சுடுகென வுரைத்தன னவனுஞ் சொல்லுவான்.

இ-ள். கடுமையான அக்கினிதேவன் இப்படிச் சொல்லவே, விசுவாமித்திரர் இந்த நெடிதாகிய காடுகளை யெல்லாம் எரித்து நீ தடுத்து, பகைவரைக் கொல்லவல்லவனான அரசனை நெருங்கிக் கொள்ளுதலுடனே கூடச்சுட வேணுமென்று சொல்ல, அக்கினிதேவன், சொல்லுகிறான். எ-று. (கருரு)

கற்பினின் மிக்கவள் கன்னி நன்னெறிப்
பொற்பினன் மன்னன்யான் சுடவும் போதிலேன்
வெற்பினின் றருந்தவ வெளிய டக்கினின்
சொற்படி மறுக்கிலேன் சுடுவன்யா னென்றான்.

இ-ள். சந்திரவதியோ பதிவிரதாதருமத்திற் சிறந்தவள், அரசனோ நன்மார்க்கமான அழகினாலேசிறந்தவன், ஆகையால் நான் அவர்களைச்சுடுகிறதற்காகப் போகமாட்டேன், மகா மேருவிலே நின்று அரியதவஞ் செய்கிறவரே! நான் இந்த வெளிகளெல்லா மடங்கக் கொண்டு உம்முடைய சொல்லின்படியேசுடுகிறேன் என்றுசொன்னான் அக்கினிதேவன். எ-று. (கருசு)

இவ்வகை கேட்டபின் முனிவ னேகினான்
அவ்வழி நீங்கியே யகல வெய்திட

வெவ்வழன் மறித்தினி திருக்க வேந்தனும்
நவ்வியன் ஞளுட னடந்து போயினுன்.

இ-ள். இந்தப்படி அக்கினிதேவன் சொல்லக் கேட்டபின்பு விஸ்வாமித்திரர்போஞர், அங்கே அந்த இடத்தை விட்டுத் தூரப்போய் கொடுமையான அக்கினிதேவன் வழியை மறித்துக் கொண்டு சந்தோஷித்திருக்க, அரசனும் மான்போற் கண்களை யுடைய சந்திரவதி யுடனே நடந்து அவ்விடத்திற்குப் போஞன். எ-று. (௧௩௭)

வெறிகமழ் சோலையும் வெற்பும் வெண்டிரை
எறிபுனற் பொய்கையு நீங்கி யேகியே
செறிகழை வனத்திடைச் செல்லச் சேணிடைப்
பொறிகளுங் கரும்பெரும் புகையுந் தோன்றின.

இ-ள். வாசனை பரிமளிக்கின்ற சோலைகளும் மலைகளும் வெண்மையான அலைகளை வீசுகின்ற நீர்க்குளங்களும் கடந்து சென்று, நெருங்கின ஒருமூங்கில்வனத்திலே செல்லும்போது, தூரத்திலே நெருப்புப் பொறிகளும் கருமையான பெரிதாகிய புகைபடர்ச்சியும் தோன்றுதலாயின. எ-று. (௧௩௮)

கண்டனர் புகையதே தென்னுங்காலையில்
மண்டலம் வளர்ந்துயர் வானைத் தாவியே
அண்டரண் டங்களும் வெடிக்க வார்த்தழன்
மண்டல மெங்கணும் வளைந்து கொண்டதே.

இ-ள். அதைக்கண்டார்கள், அங்கே புகைகிறது யாது காரணத்திஞலேயென்று நினைக்குமளவிலே அந்தப் பூமியிலேநின்று வளர்ந்து உயர்ந்த ஆகாயத்தையளாவி அண்ட ரண்டங்க ளெல்லாம் வெடிக்கும்படி முழங்கி அக்கினி கோட்டையாக எவ்விடத்தும் சூழ்ந்துகொண்டது. எ-று. (௧௩௯)

இடஞ்சிறி திலையென வெண்டி சாமுகம்
படர்ந்தன விலங்கெலா மிரிந்து பாறிடக்
கடந்தவத் தொகுதியைக் கடிது நாடியே
தொடர்ந்தன வெனவழற் சுடரெ ழுந்ததே.

இ-ள். கொஞ்சமேனும் இடமில்லை யென்னும்படி எட்டுத் திக்கினிடங்களும் பரவுதலாயிருந்த மிருகங்களெல்லாம் ஓடியொளிக்கும்போது, அப்படி ஓடுகிற அந்தக் கூட்டங்களை விரைந்தோடித் தொடர்ந்து வருகிறது போல் அக்கினிக்கொழுந்து வீசியது. எ-று. (௧௪௦)

அவ்வழல் வளைந்திட வரசர் கோமகன்
இவ்வழ லெவ்வழ லென்று கூறலும்
செவ்வழ லயிற்பனடச் செல்வ கேளெஞ
வெவ்வழ லணையநீர் வெள்ளி கூறுவான்.

இ-ள். அவ்வக்கினி அப்படிச் சூழ்ந்துக் கொள்ளும் போது ராசாதிராசனை அரிச்சந்திரன் இந்த நெருப்பு ஏந்தநெருப்பென்று கேட்குமளவில் சிவ

ந்த அக்கினிபோற்சொலிக்கிற வேலாயுதத்தையுடைய அரசனே கேளென்று உவப்பமாகிய நெருப்புக் கொப்பான குணத்தை யுடைய சுக்கிரன் சொல்லு கிறான். எ-று. (க௪௧)

சண்டவெம் பசியினா லழன்று தாவியே
அண்டகோ ளத்தினை யடர்ந்த செந்தழல்
மண்டலத் தரசர்தம் மரபி லோருயிர்
உண்டல தேகில தென்று ணர்த்தினான்.

இ-ள். வேகமான வெவ்விய பசியினாலே கொதித்துத்தாவி அண்ட கோளத்தையும் நெருங்கின சிவந்த நெருப்பானது இந்த உலகத்துள்ள அரசர்குல த்திலே ஒரு உயிரையாவது சுட்டுத்தின்றா லல்லது வீணே போகாதென்று சொன்னான். எ-று. (க௪௨)

ஒருவரை யாருயி ருண்டு போகில்யான்
ஒருவனே யிறப்பலீ ருய்ந்து போமெனத்
திருவையு மகனையு நோக்கிச் செங்கணீர்
வரவர வனலெதிர் மன்ன னேகினான்.

இ-ள். ஒருவருடைய அருமையான உயிரைப் புசித்து இந்த நெருப்புத்த ணியுமேயானால் நான் ஒருவனே சாகிறேன்; நீங்கள் தப்பிப்போங்க ளென்று சந்திரமதியையும் மகனையும் பார்த்துச்சிவந்த கண்களிலே நீரொழுகவொழுக அந்த நெருப்புக்கெதிரே அரசன்சென்றான் எ-று. (க௪௩)

புரவல னடிகளைப் பூண்ட மைச்சனோர்
வுரையிது கேட்டியா னொருவ னிற்கவே
அரசழி வதனல னன்று நிற்றிநீ
விரைகொடு கனலிடை வீழ்வல் யானென்றான்.

இ-ள். அப்போது மந்திரியானவன் அரசனுடைய பாதங்களைப் பிடித் துக்கொண்டு அரசனே! இதொரு வார்த்தையை மாத்திரம் கேளும்; நானொ ருவனிருக்கும்போது அரசனிறக்கிறது நீதியல்ல; நீர்நில்லும்; நானொருவனே விரைவுடனேபோய் அந்தநெருப்பிலே விழுகிறேனென்றான். எ-று. (க௪௪)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அன்னவை யுரைக்க வண்ண லவனைமார் பிறுகப் புல்லி
மன்னவர் தம்மை யன்றி மற்றவ ருயிரை யுண்ணா
தென்னவுங் கேட்டேன் யானீ யிறக்கினு மிறக்க வேண்டும்
உன்னுயிர் விடாம லென்ற னோருயிர் விடுத னன்றே.

இ-ள். அந்தவார்த்தைகளை மந்திரிசொல்லவே அரசன் அவனை மார்புட னே இறுக அணைத்துக்கொண்டு அரசரையல்லது மற்றோருயிரைப் புசியாது இந்த நெருப்பென்று சொல்லக்கேட்டேன், ஆகையாலே நீ இறந்தாலும் அர சனான நான் உடனே சாகவேண்டிவரும் அதற்காக உன்னுடைய உயிரை விட்டுவிடாமல் என்னுயிரை விடுகிறதே நல்லது. எ-று. (க௪௫)

இருவரு மிறந்தோ மாகி லிவரையோர் பதியிற் சேர்க்க
ஒருதுணை யுண்டோ சொல்லா யுறுபொரு ளுணர்ந்தோ யென்று
மருமலர் நறுந்தார் மன்னன் மறுதலைத் துரைக்கு மெல்லை
திருவெழில் வடமீன் கற்பிற் றிருநிறை செப்ப லுற்றாள்.

இ-ள். இனிவருங் காரியந் தெரிந்த மதிமந்திரியே! நாமிருவரும் இறந் தோமேயானால் இந்த இரண்டுபேரையும் ஓரூரிலே கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமே அதற்காக ஏதேனுமொரு துணையுண்டோ சொல்லென்று மணம் பொருந்திய திவ்வியமான மாலையணிந்த அரசன் கேட்டுச்சொல்லும்போது லட்சுமிபோலும் அழகும், அருந்ததி போலுங் கற்புமுள்ள நிருத்தமான ஆபர ணங்களை யணிந்த சந்திரவதி சொல்லலானாள். எ-று. (கசசு)

மாந்தரா லிறத்தல் வாழ்தல் மாதரார்க் கென்று மேனாள்
ஆய்ந்தநூ லறிந்தோர் கூறக் கேட்டனன் றாத லாலே
வேந்தனை விடாது காத்தி யன்னவீ யாளிற் வெந்தீப்
பாய்ந்துயிர் விடுவே னென்னாப் பைந்தொடி முந்திச் சென்றாள்.

இ-ள். புருஷராலே பெண்களுக்குச் சாவும்வாழ்வுமென்று முன்னாளிலே சாஸ்திரங்களை ஆராய்ந்துணர்ந்தவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன், ஆகை யால் பெருமைபொருந்திய சத்தியகீர்த்தியே! நமதரசனைவிட்டுவிடாமற் கா த்துக்கொள், நான் இந்த வெப்பமான நெருப்பிலேவிழுந்து உயிரை விடுகிறே னென்று கூறிச் சந்திரவதி முந்திநடந்தாள். எ-று. (கசஎ)

அன்னைதா னேக மைந்த னலறிச்சென் றடிவீழ்ந் தன்னாய்
என்னைநீர் பயந்தி ருங்க ளிடுக்கணுக் குதவ லன்றோ
முன்னையூழ் விதியி னாலே முந்தயான் றழலில் வீழ்வேன்
பின்னைநீர் பிழைமி னென்றான் பெருகுநீ ரருவிக் கண்ணான்.

இ-ள். அப்படித் தாயானவள் போகும்போது புத்திரன் அலறிக்கொண் டுபோய்க் காலிலே விழுந்து தாயே! உங்களுக்கு வந்த துன்பத்திற்குதவியாக வேண்டியல்லவோ என்னை நீங்கள் பெற்றீர்கள், பூர்வகர்மானுகுணமாக முன் னதாக நானே நெருப்பிலே போய் விழுகிறேன். பின்பு நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்களென்று பெருகுகின்ற நீருவிபோன்ற கண்ணீரை யுடையவனா னான். எ-று. (கசஅ)

தையலா ளச்சொற் கேட்டுத் தனயனைத் தழுவி மோந்து
செய்யவாய்ப் பல்வீழ்ந் தில்லாய் செழுமுலை மறந்தா யல்லை
ஐயவித் துணிவு மிந்த வறிவுமெங் கடுத்த தென்னாக்
கையினான் முகத்தின் மோதிக் கண்ணினா லருவி சோர்ந்தாள்.

இ-ள். சந்திரவதி யானவள் அந்த வார்த்தையைக் கேட்டுப் புத்திரனை அணைத்துக் கொண்டு உச்சிமுகந்து ஐயனே! இன்னமும் உன்னுடைய சிவந்த வாயினின்றும் பல்விழா திருக்கிறாய்! செழுமையான முலைப்பால் குடித்து மறக்காதிருக்கிறாய்! அப்பனே! உனக்கு இவ்வளவு துணிவும் இப்படிப்பட்ட

புத்தியும் எப்படி யுண்டாயிற்றென்று தன்கைகளாலே முகத்திலே அடித்துக் கொண்டு கண்களிலே நீரானது அருவிபோ லொழுக விட்டுக் கொண்டு நின்றாள். எ-று. (கஃசுக)

செய்தவப் பலத்தி னாலே தோன்றிய செல்வ செய்த
கைதவ முண்டே னம்மைக் கடுங்கனல் கொல்லு மல்லால்
உய்தக வுதவு முள்ளம் வருந்தலை யொழிநீ யென்று
மொய்தழ றன்னைச் சென்று முடுகிநின் றினைய சொல்வாள்.

இ-ள். நாங்கள் செய்த தவப்பயனாலே தோன்றின புத்திரனே? நாமே தேனு மொருவருக்கு வஞ்சனைசெய் திருந்தோமானால் இந்தநெருப்புநம்மைக் கொல்லுமே யல்லாமல் வேறொரு வகையாலு நம்மைக் கொல்லாது உனக்கு மேலான யோக்கியதை யுண்டாகத் தப்பிக் கொள்வை; மனம் வருந்தாதை; நீ தூரப்போ வென்று நெருங்கி வருகிற அந்த நெருப்பின் முன்னே போய் விரைவுகொண்டு நின்று இவ்வார்த்தை சொல்லுகிறாள் சந்திரவதி. எ-று.

மறைவழி கடந்தே மாகில் வரும்விருந் திகழ்ந்தே மாகில்
முறைவழி செய்யே மாகின் மூபபரை யிகழ்ந்தே மாகில்
பிறர்மனை நயந்தே மாகிற் பிறர்மனம வைத்தே மாகில்
குறைசில செய்தே மாகிற் கொல்லெனக் கனலிற் பாய்ந்தாள்.

இ-ள். வேதநெறியைக் கடந்து நாங்கள் நடந்தோமானாலும், வருவதான விருந்தினரை யிகழ்ந்தோ மானாலும், நீதிவழியே அரசு நடத்தாதிருந்தோமானாலும், பெரியோர்களை யிகழ்ந்தோ மானாலும் பிறர்மனையாளை யிச்சித்தோ னாலும், பிறபுருஷனிடத்திலே மனந் தன்பு கொண்டோ மானாலும், இன்னம் வெவ்வேறான சிலகுறைகள் செய்திருந்தோ மானாலும் நீ கொல்லக் கடவையென்று அந்த நெருப்பிலே போய்விழுந்தாள். எ-று. (கருக)

மதுரமென் மொழியாள் கற்பு வளர்நெடு வடவைத் தீயின்
முதிர்தழ லதுதா னென்னைச் சுடுமெனு முழங்கு செந்தீ
அதிர்குர லார்ப்பு மாறி யடங்கிநா வொடுங்கிக் காலைக்
கதிரவன் வரவு கண்ட விருளெனக் கழிந்த தன்றே.

இ-ள். மதுரமான மிருதுபாஷியாகிய சந்திரவதியினுடைய கற்பென்று வளருகிற வட வாக்கினியினு முதிர்ந்த நெருப்பானது என்னைச் சுடு மென்று முழங்கி யெரிகிற அந்த நெருப்பானது தான் அதிருகின்ற குரற் சத்தமாறி நாவுமொடுங்கி அடங்குதலாய் உதயகாலத்துச் சூரியனைக் கண்ட இருள்போ லாறிப்போயிற்று. எ-று. (கருஉ)

மண்டழ றணிந்து மூங்கில் வனமெலாம் வாவி யாகி
முண்டகங் குமுத நீல முளரிக ணிறையப் பூப்பக்
கண்டகங் குளிர்ந்து கற்பிற் கரசியைப் புகழ்ந்துபோற்றி
வண்டலின மணிகொ ழிக்கும் வாரண வாசிசேர்ந்தார்.

இ-ள். அப்படி நெருங்கின நெருப்பாறி, அந்த மூங்கிற் காடெல்லாம் குளமாகி வெண்டாமரை குமுதம்நீலம் செந்தாமரையாகிய இவைகள் நிறைய

மலர்ந்து தோன்றக்கண்டு மனங்குளிர்ந்து பதிவிரதா சிரோமணியைத் தோத்திரஞ்செய்து கொண்டாடி, சேற்றுநிலமெல்லா முத்துகளை ஒதுக்குவதான வாரணவாசியைப்போய்ச் சேர்ந்தார்கள். எ-று.

வாரணவாசியென்பது காசிக்ஷேத்திரத்திற் கோர்பெயர். (கருரு)

வாரண வாசி நண்ணி வயர்டுறை யதனின் மேவி
ஆரண நெறிநீ ராடி யந்நதி யகன்று போகி
பூரணக் கொங்கை மாது மபு தல்வனும் பின்னே போதக்
காரணத் தமைச்ச னோடுங் காசிநன் னாட்டைச் சேர்ந்தார்.

இ-ள். அரசன், அந்தவாரண வாசிக்குப்போய் அங்குள்ள அழகிதான தீர்த்தத்துறையை யடுத்து வேதமார்க்கப்படி தீர்த்தமாடி அந்த நதியையுங் கடந்து சென்று பூரணகும்பம்போன்ற கொஙகைகளையுடைய சந்திரவதியும் புத்திரனும் பின்னேவர தன்னிமித்தமாகத் தன்கூடவருகிற மந்திரியுடனே காசியென்கிற நல்லநாட்டைச் சேர்ந்தான். எ-று. (கருச)

நகர் நீங்கிய காண்டம் - முற்றிற்று.

ஆ விருத்தம்-கஅ௦௬

ஏழாவது,

காசிகாண்டம்.

மாவெலா மளிகள் பாட மகிழ்ந்துநல் வாச மன்னும்
பூவெலாஞ் செழுந்தே னல்கப் பூவையுங் கிளியு மோதும்
பாவெலா முருகக் கேட்டுப் பலகனி பரிசி னல்கிக்
காவெலாந் தலைய சைக்குங் காசிநாட் டியல்பு சொல்வாம்.

இ-ள். வயல்களெல்லாம் வண்டுகள் சந்தோஷித்துப் பாடிக்கொண்டிருக்கவும், நல்ல மணம்பொருந்தின மலர்களெல்லாம் செழுமையான தேன் பெருகவும், நாகணவாய்ப்புட்களும் கிளிகளும் பாடுகின்ற பாடல்களையெல்லாம் மனமுருவதாகக்கேட்டு அவைகளுக்குப் பலவித பழங்களையும் வெகுமானமாகக் கொடுத்துச் சோலைமுழுதும் தலைகளை யசைக்கத்தக்க காசிநாட்டினது வளமையைச் சொல்லுவோம். எ-று. (க)

தேவியுங் கோவு மெய்தத் திகழ்செழுங் கமலப் போதும்
காவியுங் குமுதப் போதுங் காமச்செங் கிடையுந் தண்ணீர்
வாவியுங் காட்ட மாதர் வதனமுங் காட்ட வண்டாம்
பாவியு மீதே தென்று பரதவித் துழலு மன்றே.

இ-ள். சந்திரவதியும் அரசனும் போகுமளவில் குளிர்ந்த நீர்க்குளங்களும், (தமக்குள்ளனவாக) விளங்குகின்ற செந்தாமரைமலரும், நீலமலரும்

செவ்வல்லிமலரும், அழகிய சிவந்தநெட்டியும் தோன்றச்செய்ய அப்படியே சந்திரவதியினுடைய முகமும் அவைகளைத் தோன்றச்செய்ய வண்டு என்கிற பாவியும் இது எது புதுமையாயிருக்கிறதென்று பரிதபித்தலாயலைதலாயிற்று

பாவி ஒக்க நினைப்பது. (உ

வயலெலாஞ் செந்நெல் செந்நெல் மருங்கெலாங் கயல்கள் வாவுங்
கயலெலாங் கலவை வாசங் காவெலாம் புயல்கள் காவிற்
புயலெலாம் புகையே யந்தப் புகையெலாம் பூழில் பூழில்
அயலெலா மாரமாரத் தருகெலாந் தேவதாரம்.

இ-ள். வயல்களெல்லாஞ் சிவந்தநெற்களும், அந்தச சிவந்த நெற்களினிடமெல்லாம் கயற்கெண்டைகளும், அப்படித் துள்ளுகிற கயற்கெண்டைகள்மேலெல்லாம் பலவாசக்கூட்டுமணமும், சோலைகளெல்லாம் மேகங்களும் அந்தச் சோலையிற்படிகிற மேகஙகளெல்லாம் ஓமப்புகைகளே; அந்த ஓமப் புகைகளெல்லாம் அகில்விருட்சஙகளினருகே, அந்த அகில்விருட்சங்களினருகெல்லாம் சந்தனவிருட்சஙகள்; அந்தச்சந்தன விருட்சஙகளினருகெல்லாம் தேவதாரவிருட்சஙகள். எ-று. (ஙூ)

நுரைமணநாறுஞ் சீத நுண்டுளித் திரள்கள் சிந்தும்
திரைமணநாறு மீனந் திரண்மணநாறுஞ் செந்தா
மரைமணநாறும் வெள்ளை வளைமணநாறும் வாவிக்
கரைகணாறு மாதர் கனத்தனக் கலவை யம்மா.

இ-ள். நீராடுகிற பெண்களுடைய கனமான கொஙகைகளிலே பூசினகலவைச்சந்தன வாசனையாகவே குளத்துநீர் நுரைகளும் வாசம்வீசும், குளிர்ந்த சிறிய துளிக்கூட்டஙகளைச சிதறுகின்ற அலைகளும் வாசம்வீசும், மீனினஙகளும் வாசம்வீசும், செந்தாமரை மலர்களும் வாசம்வீசும், வெள்ளைச்சங்குகளும் வாசம்வீசும், அந்தக்குளக்கரையும் வாசம்வீசும். எ-று. (ச)

கரும்பினை யொடித்து மள்ளர் கடாவினை யடிக்கச சிந்தி
நிரம்பின முத்த மெங்கு நிலாக் கதிரபரப்பித்
திரும்பின திசை கடோறுந் திகழ்தலாற் செறிந்த பன்மீன்
அரும்பிய வானு மந்நாட் டவனியு மொத்த வன்றே.

இ-ள். உழவர்கள் கரும்பை ஒடித்து எருமைக்கடாக்களை அடிக்க அக்கரும்பினின்றுஞ் சிதறி நிரம்புதலான முத்துக்கள் எவ்விடத்தும் நெடுநாளசந்திரப்பிரபையை விரித்து திரும்பிப்பார்க்கிற திசைகளெல்லாம் விளங்குகிறதினாலே நெருங்கிப் பல நட்சத்திரஙகள்பூத்த ஆகாயமும் அவ்வாகாய நாட்டிலுள்ள இடியையு மொப்பாயிருந்தது. எ-று. (ரு)

காய்ந்தவெஞ் சினத்த டாக்கள் கமலங்கள் சிதைந்த மூழ்திச்
சாய்ந்தவக் குழி கனெல்லாஞ் சங்கினஞ் சரிவிமேதி
தோய்ந்த பூந்தடங்களெல்லாந் துளைந்த வாளைகாளை
பாய்ந்தவக் குழிகளெல்லாம் பறிய வைப்பலவினறல்.

இ-ள். அப்படி உழவராலே அடிக்கப்பட்ட வெவ்விய கோபத்தை யுடைய எருமைக்கடாக்கள் தாமரை மலர்களைக் கெடுத்து அழுந்துதலாகி

சாய்ந்துகிடக்கிற கழிகளிலேயெல்லாம் சங்குக்கூட்டங்கள் சாய்ந்து கிடக்கின்றன எருமைகள் படிந்த பூங்குளங்களெல்லாம் இளவாளைமீன்கள் துள்ளுவனவாகிப் பாய்ந்த அந்தக்குழிக ளெல்லாம் பலாப்பழத் தேன்வந்து நிறைவனவாகும். எ-று. (சு)

கடைசியர்குரவை கேட்டுக் கலங்கியே மயங்கிக்காவி
னிடையிடைமறைவ தேபோலிரிவன கிளிகளெல்லாம்
மடையிடைசரியுமுத்தம் வரிவளைநகை கண்டஞ்சி
உடைபெரும்புனலிலோடி யொளிப்பன போன்றவன்றே.

இ-ள். அந்த நாட்டிலுள்ள உழத்திகளுடைய குரவைப் பாட்டைக் கேட்டுக் கலங்கி மயங்கிச் சோலையிலுள்ள மரங்களினூடு விடங்களிலே மறைந்து கொள்ளுகிறதைப்போற் கிளிகளெல்லாம் ஓடலாயின. நீர்மடைகளிலே ஒதுங்குகின்ற முத்துக்கள் அந்த உழத்திகளுடைய ஒளிவளருகின்ற இளமையான தந்தவரிசைகளைக்கண்டு பயந்து கரையை உடைக்கிற பிரவாக ஜலத்துக்குள்ளே ஓடியொளித்துக்கொள்ளுகின்றன போன்றன. எ-று. (எ)

இன்விளைமதுவுண்மள்ளர் இருந்துநாள்கொண்டுவித்தி
முன்விளைசெந்நெல்கொய்து வருமுறுநன் முதிர்ந்து காய்ந்த
பின்விளைகதிர்களாலைப் பெருக்கினின் முளைப்ப வெல்லாம்
பொன்விளைகுரலிற்றோன்றும் வெள்ளிவாற் போன்றவன்றே.

இ-ள். தித்திப்புண்டாகும் கள்ளைக் குடித்துக் கொண்டிருக்கிற உழவர்கள் ஆலோசித்திருந்து நல்லநாள் கேட்டு விதைத்து முன்னே விளைந்து சிவந்த நெற்களை அறுத்துக்கொண்டு போனபின்பு தோன்றுகிற அந்த நெல்லினடி முற்றி உலர்ந்தபின்பு விளைகிற கதிர்கள் ஆலைக் கரும்பின் சாற்றுப் பெருக்கினாலே விளைவன அவை யெல்லாம் பொன்னிறமாக விளைகின்ற கதிர்களுக்கு வெள்ளிவால் முளைத்தாற்போ லிருந்தன. எ-று. (அ)

இயலறிபுலவோர்தம்மாட் டுள்ளனவில்லோர்க்கீந்த
செயலறிந்துளநாள்கைம்மா றளித்திடச்செல்வோர் போல
வயல்வளஞ்சுரக்கமேனுண் மழைவளஞ்சுரந்தநீர்சால்
புயல்வளாவிசும்பிற்செந்நெல் போய்ப்புகவளர்ந்தவன்றே.

இ-ள். ஈகையினிலக்கணந் தெரிந்த தாதாக்கள் தங்களிடத்தி லுள்ள பொருள்களையெல்லாம் இரப்போர்க்குக் கொடுத்த செய்கைதெரிந்து தமக்குண்டான போதில் அப்படி முன்கொடுத்தவர்களுக்குப் பிரதியுபகாரஞ் செய்யப் போகிற நல்லோரைப் போல, வயலிலே விளைவுண்டாக முன்னாளில் மழைபெய்கிறதா லதிகமான சிறப்புமிக்க அந்தமேகங்க ளுலாவுகின்ற ஆகாயத்திலே சிறந்த நெற்கள்போய் முட்டுவதாக வளர்ந்திருக்கின்றன. (கூ)

இத்தகையாயநன்னாட் டெல்லைகண் டொல்லை யேகி
மைத்தழை கபாட வாயின் மணிநிழல் வந்து நண்ணிக்
கொற்றலர் குழலி யோடுங் கோமளோடுங் குமர னோடும்
மெய்த்திறலமைச்ச னோடும் வித்தகன் காசி புக்கான்.

இ-ள். இப்படிப்பட்ட பெருமையை யுடையதான அந்த நல்ல நாட்டின் வளமுழுதுங் கண்டு கொண்டு விரைவிலேசென்று மேகந்தவழுவதான கதவுபூண்ட கோட்டைவாயிலின் அழகிதான நிழலிலே வந்துகூடி கொத்துகள்விரிந்த கூந்தலையுடைய சந்திரவதியுடனே சுக்கிராசாரியும் புத்திரனு மெய்க்கீர்த்தியென்கிற பெயரையுடைய மந்திரியுமாக அரிச்சந்திரன் காசிப் பட்டணத்துக்குள்ளே போனான். எ-று. (௧0)

ஆரண சாலை கோடி யாவண வீதி கோடி
தோரண வாயில் கோடி சுடர்மணி மாடங் கோடி
பூரணகும்ப மின்னிப் பொலியுமண் டபங்கள் கோடி
வாரண பந்திகோடி வயப்பரிப் பந்தி கோடி.

இ-ள். வேதாத்தியயன சாலைகள் கோடி. கடைவீதிகள் கோடி. தோரணங்கட்டின வாயில்கள் கோடி. ஒளிபொருந்தின சூரியகாந்தக்கல்லாற் செய்திருக்கிற வீடுகள்கோடி. நிறைகுடங்கள் விளங்கிப் பொலிவுகொண்ட மண்டபங்கள் கோடி. யானைச் சாலைகள் கோடி. குதிரைலாயங்கள்கோடி. எ-று. (௧௧)

ஆடுமங் கைய ரனந்த ராடுவா ராடல் காண
ஓடுமங் கைய ரனந்த ருலாவுமங் கைய ரனந்தர்
பாடுமங் கைய ரனந்தர் பயிறரு வீதி யெல்லாம்
வாடுமங் கையும யோத்தி மன்னனுங் கண்டு போனார்.

இ-ள். ஆடுகின்ற பெண்கள் அநேகர்கள் ஆடுகிறார்கள். அவர்களாடலைக்காண ஓடுகிறபெண்கள் அநேகர்கள். அங்கே போக்குவரவா யிருக்கிற பெண்கள் அநேகர்கள். பாடுகிற பெண்கள் அநேகர்கள். இப்படியாக பழகுதலையுடைய தெருக்கள் முழுதும் சோர்வுள்ள சந்திரவதியும் அரிச்சந்திரனுங் கண்டு கொண்டே போனார்கள். எ-று. (௧௨)

தொலைவிலா முதல் வனார்க்குஞ் சுக்கிரன் றனக்கு மாய
அலைவின்மா நகரம் புக்கா ரரிவைய ரளகக் காடும்
கலைவிழிக்கடலு மின்பக் கடிதட வரவும் பார
முலையெனுமலையும் வந்து முடுகின மறுகு தோறும்.

இ-ள். மனச்சோர்வில்லாத தலைவனான அரிச்சந்திரனுக்கும் கூடவருகிற சுக்கிரனுக்கும் அந்த அலைச்சலில்லாத பெரிய காசிநகரத்துக்குள்ளே புகுந்து செல்லுவாரானபோது. அங்குள்ள பெண்களினுடைய கூந்தற்காடும் மான்போல்வனவாகிய கண்களென்கிறகடலும், சுகத்தைததருவதான நிதம்பமாகிய பாம்பும். கனத்த கொங்கைகளென்கிற மலைகளும் தோன்றுதலாய் முன்னே கண்டுகொண்டுவந் தப்படியே விரைவு கொள்ளலாயின வீதிகளெல்லாம். எ-று. (௧௩)

உத்திர பத்தி மீதிலுயர்ந்தமா ளிகையி னேற்றிச்
சித்திரச் சாள ரங்க டிறந்து செந்திருவை யன்னார்
வத்திரச் சிலைகள் கோட்டி மன்னனை யிலக்கா வெய்த
அத்திர மனந்த கோடி யணைந்தில வறிவுக் கஞ்சி.

இ-ள். உத்தரவாரிசைகளின் மேலே உயர்ந்துள்ள வீடுகளின் முகட்டிலே அழகான சன்னல்களைத் திறந்துநின்று லட்சுமியையொப்பான பெண்கள் முகத்திலுள்ள புருவமாகிய விற்களினாலே அரிசசந்திரமகாராசனை லட்சிய மாகவைத்துச செலுத்தின கண்களான அனந்தங்கோடி அம்புகளும் இவ்வாசனுடையதிடஞானத்துக்குப் பயந்து அருகில் நெருங்கவில்லை. எ-று.

அன்னவை பலகண்டேகி யணிமணிக் கோயி லண்ணி
நன்னதி புனைந்து சென்னி நாயகன் விசுவ நாதன்
சன்னிதி தன்னிற் சென்று தலையுற வணங்கிப் போந்து
மன்னவர் பெருமா னங்கோர் மணிமுடிப் பொதியில் சேர்ந்தான்.

இ-ள். அப்படிப்பட்ட அதிசயங்கள் பலவுங் கண்டு சென்று பதித்துள்ள இரத்தினமயமானகோயிலுக்குள்ளேபோய் நல்ல கங்காநதியைத் தரித்த தலையையுடைய சுவாமியான விஸ்வநாதர் சந்நிதிமுன்னேசென்று தலைபடிய வணங்கிக்கொண்டபின்பு வெளியேவந்து அரசர்க்கரசனானவன் அங்கே ஒரு அழகிய சிகரத்தைக் கொண்டிருக்கிற அம்பலச சாவடியைப் போய்ச்சேர்ந்தான். எ-று. (கரு)

அப்பெரும் பொதியில் புக்கா ரமைச்சனங் காடி நண்ணி
எப்பெரும் பண்டமுங் கொண் டெய்தின னிமைப்பி னட்டுச்
செப்பெருந் திருவினல்லா டிருக்கையாற் படைத்த வன்னம்
துய்ப்பன செய்திருந்தா ரிருந்தபி னிகழ்ந்த சொல்வாம்.

இ-ள். அந்தப் பெரிதான பொதுச்சாவடிக்குள்ளே போனவர்களில் மந்திரியானவன் கடைவீதிக்குப்போய் எவ்விதமான பெரிதான சமையலுக்கு வேண்டியவைக ளெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தான். வந்தபின்பு, ஒரு க்ஷணப் பொழுதுக்குள்ளே சமையல்செய்து சொல்லுதற்கரிதான இலட்சுமி போற் சிவந்த சந்திரவதியானவள் தனது திருக்கைகளாலே படைத்தசோற்றைப் புசித்துக்கொண் டிருந்தார்கள். அப்படி யிருந்தபின்பு நடந்தவைகளைச் சொல்லுகிறோம். எ-று. (கசா)

சந்தக்கலிவிருத்தம்.

ஒருநாள்செ லமறுநாளையி லுறுதீவினை நினைபா
பொருமால் களிறுடையாெனாடு புகரோன்மிக வெகுளா
முருகார்தொடை முடியாய்மறை முனிகூறிய பொருணீ
தருமாறுள தெனிலின்றது தருகென்று தடுத்தான்.

இ-ள். ஒருநாள்போக மறு தினத்திலே மிக்க கெடுமைசெய்ய நினைத்துப் பொருதுவதான உயர்ந்த பட்டத்து யானையையுடைய அரசனுடனே சுக்கிரன் மிகவுங் கோபங்கொண்டு வாசனைதங்கிய மாலைமுடியையுடைய அரசனே! வைதிகரான விசுவாமித்திரருக்குச் சொன்னபொருள்களை நீ கொடுப்பதுண்டானால் இப்போதே அதைக் கொடுத்து விடென்று தடுத்து நின்றான். எ-று.

அதிரப்பெரு கரவத்தொடு மழல்கட்புகர் பலகால்
முதிரச்சில சுடுகட்டுரை மொழியப்பொரு டருமச்

சதுரொப்படி யெனவெய்த்துட றளரத்துணை விழிமுத்
துதிரச்சிறி தெதிருத்தர முரையாம லிருந்தான்.

இ-ள். அதிர்ச்சியாக மிகுகின்ற முழக்கத்துடனே கொதிக்கின்ற கண்களையுடைய சுக்கிரன் பலதரமும் முதிர்ச்சியாகச் சிறிது சுடுஞ்சொற்களைச் சொல்லும்போது இனிப்பொருள் தருவதான புத்தியெப்படி யென்று இளைத்து உடம்புசோர்வாக இரண்டு கண்களிலும் முத்துப்போல் நீரொழுகக்கொஞ்சமேனு மறுமொழிசொல்லாம லிருந்தானரசன். எ-று. (கஅ)

மொழியும்பழி யுணராமுகிற் முலையாண்முதிர் கடனீர்
பொழியுங்கயல் விழியாண்முனி பொருணல்குத றுணியா
தழுகின்றதொர் பசிபாலெலி வெருகஞ்சிய வெலிபோல்
அழுகின்றதெ னரசேயென வவனுஞ்சில மொழிவான்.

இ-ள். அப்படிச் சுக்கிரன் சொல்லுகிற பழிப்பு வார்த்தைகளைக் கேட்டு அரும்புபோலுந் தனங்களை யுடையவளாய் முதிர்ந்த கடல் நீரைப்போற் சிந்துகின்ற கெண்டை மீன்போலுங் கண்களையுடைய சந்திரவதியானவள் அரசே, விஸ்வாமித்திரருக்குக்கொடுக்கவேண்டியபொருள் கொடுக்கிறதற்குத் துணிவுகொள்ளாமல், மூளுகின்றதான பசியினாலே வருந்துகின்ற ஒருபூனைக்குப் பயப்படுகின்ற எலியைப்போல கண்ணீர்விடக் காரிய மென்னவென்று சொல்ல, அரசனும் மனைவியைநோக்கிச் சிலவார்த்தை சொல்லுகிறான். எ-று.

மின்னஞ்சிய விடையாய்கதிர் வேலஞ்சிய விழியாய்
வன்னெஞ்சுடை முனிநம்முடை வளமுள்ளது கொண்டான்
என்னெஞ்சமு முன்னெஞ்சமு மொன்றன்றியி ரண்டோ
உன்னெஞ்சறி யாதென்வயி னுளதோபொரு ளென்றான்.

இ-ள். மின்னலஞ்சுவதான இடையும் ஒளிபொருந்தின வேலாயுதமும் அஞ்சுவதான கண்களையுடைய பெண்ணே! கடினநெஞ்சையுடைய விஸ்வாமித்திரர் நம்முடைய செல்வமாக வுள்ள வெல்லாம் கவர்ந்து கொண்டார். ஆகையால் என்மனமும் உன்மனமும் ஒன்றேயல்ல திரண்டாகுவதுண்டோ (இல்லையே இனி) உன் மனதிற்குத் தெரியாத பொருள்கள் என்னிடத்திலுண்டோவென்று சொன்னான் அரசன். அதற்கு. எ-று. (உ0)

கல்லென்றுயர் தோளாய் கௌசிகனெண்ணுத லல்லால்
இல்லென்பது முளதென்பது மியாமெண்ணுத றகுமோ
எல்லொன்றினி யவதித்தின மெனையும்மக னையுநீ
வில்லென்றனள் கற்புக்கொரு வித்தாகியு தித்தாள்.

இ-ள். மலையென்று சொல்லலான தோள்களையுடைய அரசே! நம்மிடத்திலே பொருள்களில்லை யென்பதும் உள்ளதென்பதும் விசுவாமித்திரர் ஆலோசிக்கவேண்டியதே யல்லது நாம் இந்தச் சுக்கிரனைக்குறித்து வருத்தஞ் செய்கிறானேயென்று ஆலோசிப்பது தக்கதல்ல இனிக்கெடுவானநாள் முடிவாகு

முன்னே என்னையும் புத்திரனையும் நீர் விலைசெய்து விடுமென்று பதிவிரதா தருமத்துக்கு ஒருவிதையாகித் தோன்றின சந்திரவதி சொன்னாள்.

எல்லொன்றும் - நாள் முடிவுபெறும். (உக)

அவ்வாறுரை செயமன்னவ னலையுங்குறை யுயிர்கொண்
டெவ்வாறுமை விலைகூறுவலெ னவெண்ணியி டைந்தான்
வெவ்வாய்வடி வேலோயெமை விலைகூறுத லறிதென்
றெவ்வாயெனின் விடுமோநம தூழின்வலி யென்றாள்.

இ-ள். அப்படிச் சந்திரவதி சொல்லவே, அரசனானவன் அலைவதான குறைவுயிரைக் கொண்டு உங்களை எப்படி விலைகூறுமேனென்று நினைத்து வருந்திப் பின்னிடும்போது, வெம்மைவாய்ந்த கூர்மை கொண்ட வேலையுடைய அரசனே ! எங்களை விலைக்கு விற்கிற தருமையென்று நீர் சம்மதியீரேயானால் நம்முடைய பூர்வகருமம் விட்டுவிடுமோ வென்று சந்திரவதி சொன்னாள். எ-று. (உஉ)

தேமென்கனி வாயாளிது செப்பச்செய லிதுவே
யாமென்றழ வேவெள்ளியு மதுவேநல னென்றான்
மாமன்னவன் மைந்தன்றலை மிசையுங்குல மடவாள்
பூமென்குழன் மிசையுஞ்சிறு புல்வைத்து நடந்தான்.

இ-ள். தித்திப்பமைந்த மிருதுவான கனிபோன்ற வாயையுடைய சந்திரவதி இப்படிச்சொல்லவே, இனிச் செய்யத்தக்கதிதுவே சரியென்று எழுந்தபோது, சுக்கிரனும் அப்படி விற்கிறதே நன்மையென்று சொன்னான். அப்போது பேரரசனானவன் புத்திரன்றலைமேலும் குலக்கொடியான சந்திரவதியினுடைய பூவையணிந்த மிருதுவான கூந்தல்மேலும் சிறுபுல்லைவைத்துக் கட்டிக்கொண்டு சென்றான். எ-று. (உ௩)

மெள்ளச்செல நாணுஞ்செல விரையசசெல வாய்மை
தள்ளப்புதல் வனையும்மயி றனையும்முன டத்தி
உள்ளத்துய ரறிவாகிய வுரனாலுக விழிநீர்
வெள்ளத்தினை யடையாவிறை விலைகூறி நடந்தான.

இ-ள். அப்படிமெதுவாகப் போகும்போது வெட்கங் கொண்டவனாகி விரைந்துசெல்லும்போது வாய்ப்பேச்சுகள் தடுமாறவும் புத்திரனையும் மனைவியையும் முன்னே நடத்திக்கொண்டு மனத்திலே உயர்ந்த அறிவாகிய பலத்தினாலே சிந்துகின்ற கண்ணீர் வெள்ளத்துக்குள்ளே முழுகாமல் அதை யடக்கிக்கொண்டு அரசன் விலைகூறிக்கொண்டு காசிநகர் வீதியிலே சென்றான்.

தாலத்தற முணராதுயிற் தளரும்படி பலசெய்
வேலைப்பழ வினைபற்றிட விற்கின்றனன் வினையேன்
வாலைச்சிறு பருவத்தெனன் மரபிற்புதல் வனையும்
நீலக்கயல் விழியாளையு நிதியுள்ளவர் கொண்மின்.

இ-ள். உலகத்தினது தகுதிதெரியாமல் உயிர் தளர்வதாகப் பலபடி செய்த முன்கருமத்தினாலே துன்பம்வந்துதொடர அதற்காக இளமையான சிறிய பருவத்தையுடைய எனது நல்ல குலபுத்திரனையும், நீல நிறத்துடனே கயற்கெண்டை போன்ற கண்களையுடைய மனைவியையும் பாவியான நான் விலைசெய்கிறேன்; பொருளுள்ளவர்கள் வாங்கிக்கொள்ளுங்கள். எ-று.

பூர்வகன்மந் தொடர்ந்துபிடிக்க என்க. (உரு)

சோதித் திருமுடியானிவை சொல்லச்சுடர் மாட
வீதித்தலை நின்றோர்சிலர் மிகவும்மன மழலாப்
போதிற்றிரு வனையாளிவ ளையும்பு தல்வனையும்
ஏதிப்படி விலைகூறிட வெய்துந்திற மென்பார்.

இ-ள். ஒளிபொருந்தின திருமுடியையுடைய அரசன் இப்படிச் சொல்லவே பிரகாசம்பொருந்தின மாடவீதியிலே நின்று கண்டோர்கள் சிலர்மிகவு மனங்கொதித்து பூமேலிருக்கிற இலட்சுமியை யொத்தவளாகிய இந்தப்பெண்ணையும் மகனையும் என்னகாரணத்தினாலே இப்படி விலைக்குவிற்க நேரிட்டதென்கிறார்கள். எ-று. (உசா)

செருவுற்றக ணயிலைப்பொரு திருவொபபவ ளிவளும்
மருவுற்றணி தெரியற்புய மதனைப்பவன் மகனும்
ஒருவர்க்குறு விலையிற்பொரு ளுடையார்களு முளரோ
இருவர்க்குறு விலையிப்பதி யெவர்நல்குவ ரென்பார்.

இ-ள். யுத்தத்துக்குத்தகுந்த வேலையொத்த கண்களையுடையஇலட்சுமிக் கொப்பானவளான இந்த மனைவியும், மணங்கொண்டழகிதான மாலையை யுடைய மன்மதனையொப்பானவனான இநதமகனும் ஒருவனுக்குப் பாத்திய மாகத்தக்க விலையுள்ள பொருள் கொடுக்கத்தக்கவர்களான செல்வர்களு மிங் குண்டோ? (இவ்விருவரிலே ஒருவருக்கே பொருள்கொடுத்து வாங்கத்தக்கவர்கள் இங்கில்லையானால்) இவ்விருவருக்கும் தகுந்தவிலை கொடுத்து வாங்கத்தக்கவர்கள் இந்தவூரிலே யாருண்டென்று தம்மிலே விசாரிக்கலானார்கள்.

தவருக்கல தயிராவத மெனுநீள்கர சைலத்
தவருக்கல தளகாபுரி யரசுக்கல தலைசேர்
உவரிக்கடல் புடைசூழ்விய னுலகத்திடை யுறுவார்
எவருக்கெளி திவருக்குறு விலைநல்குவ தென்பார்.

இ-ள். சிலர் இவரை விலைக்குவாங்குகிற சக்தி தவமுனிவருக் காணு லுண்டு, அல்லது ஐராவதமென்கிற நீண்ட கைம்மலையையுடைய இந்திர னுக்குண்டு, அல்லது அளகாபுரியையாளுகிற குபேரனுக்குண்டு. அல்லது அலைகள்கூடின அவ்வுப்புக்கடல்பக்கத்தே சூழ்ந்த பெரிய உலகத்திலே மதிப் புத்தெரிந்தவராகிய யாராலே எளிதாக இவ்விருவருக்குந் தக்கவிலை கொடுக்க ப்படும் என்பார்கள். எ-று. (உஅ)

மண்மின்னென வருமென்மனை வியையும்மகனையுநீர்
கொண்மின்னென விலைகூறிய கோமானுரைகேளா
விண்மின்னென வலையம்பரி வெண்ணூலணி மார்பன்
கண்முன்னொரு மறையோனதி கள்ளமொடெதிர் வந்தான்.

இ-ள். பூமிதேவிபோல் வருகிற என் மனைவியையும். என்மகனையும்பொருளுள்ள நீங்கள் வாங்கிக்கொள்ளுங்களென்று விலை கூறிக்கொண்டு வருகிற அரசன் சொல்லக்கேட்டு ஆகாயத்துள்ள மின்னற்போல் விளங்குகின்ற கேயூரந்தாங்கினவனாக வெள்ளை முப்புரிநூலணிந்த மார்பையுடைய அரிச்சந்திரன் கண்ணுக்குமுன்னே ஒருவேதப்பிராமணன் அதிக திருட்டுத் தனத்துடனே எதிரிலே வந்தான். எ-று. (உகூ)

என்சொல்லினை முன்சொன்னவை யின்னம்பகரெனவே
மென்சொல்லியை யிளமைந்தனை விலைகூறின னெனவும்
மன்சொல்லலு நின்சேயையு மடமானையும் விற்கும்
பொன்சொல்லென விறல்வேலினன் மறையோனொடு புகல்வான்.

இ-ள். (ஓ விலை கூறினவனே!) யாது சொன்னாய்? முன்னே சொன்னவைகளை இன்னமொருதரஞ் சொல்லென்று கேட்கவே, அரசன் இந்த மிருதுபாஷியான இவளையும் இளமையான புத்திரனையும் விலைகூறினனென்று அரசன் சொல்லுமளவில். உன் பிள்ளையையும் பெண்டாட்டியையும் விற்பதான பொருள் எவ்வளவு சொல்லென்றுகேட்க, அதற்கு வெற்றிவேலைக்கொண்ட அரசன் அந்தப் பிராமணனுடன் சொல்லுகிறான். எ-று. (௩௦)

களபப்பிடர் மிசைநின்றெறி கவணிற்படு சிலைபோம்
அளவுக்கிரு நிதிநல்கிடி னதுவேவிலை யென்றான்
உளதப்பொருண் முழுதும்முன துரையின்படி தருவேன்
தளவத்திரு நகையாளொடு மகனைத்தரி லென்றான்.

இ-ள். யானை முதுகிலேநின்றெறிகின்ற கவணிலுள்ள கல்லானதுபோகுமளவுக்குச் சரியாகப் பெரிதான திரவியங் கொடுத்தால், அதுவே இவ்விருவருக்கும் விலைப்பொருளென்று சொன்னான். அதற்கு அவ்வளவு பொருள் முழுதும் என்னிடத்துண்டு உன்சொற்படியே இந்த முல்லையரும்புபோன்ற அழகிய பல்வரிசையை யுடையவளுடனே மகனையும் நீ கொடுப்பாயானால் தருகிறேனென்று (அவ்வந்தணன்) சொன்னான். எ-று. (௩௧)

கலிவிருத்தம்.

இருவ ருக்குமிது விலையா மெனில்
பொருள ளிப்பனின் றென்று புகன்றிடத்
தருக வப்பொரு டாவெனச் சாற்றலும்
வெருவி லந்தணன் மீளவுங் கூறுவான்.

இ-ள். இந்த இரண்டுபேருக்கு மிதுவே விலைநிச்சயமானால், நானே அவ்வளவு பொருளுந் தருகிறேன், இப்போதே யென்றசொல்ல. அவ்வளவு பொ

ருளுங் கொடுமென்று அரசன் சொல்லுமளவில். அஞ்சுதலில்லாத அந்தப்பி ராமணன் மறுபடியும் சொல்லுகிறான். எ-று. (௩உ)

உண்மை கிழ்ந்தின் றளிக்கு முறுபொருள்
கொண்மர் தம்மை யழைமெனக் கூறினன்
வெண்மை னத்தனென் வெள்ளியைக் கூவியந்
நுண்மை றைகுலத் திநான்முக நோக்கியே.

இ-ள். நான் மனங்களித்துக் கொடுப்பதான விலைப்பொருளை வாங்கிக் கொள்ளுகிறவனை இங்கே கூப்பிடென்று சொன்னான். உடனே வெள்ளைப்பு த்தியனென்கிற அந்தச்சுக்கிரனைக் கூப்பிட்டு. அந்தச் சூட்சுமமான பொருளு டைய வேதகுலத்துப் பிராமணனைப் பார்த்து. எ-று. (௩௩)

இவர்த மக்களி யென்றனு மீவனென்
றவர்த மக்கவ னங்கை யறைநதனன்
உவரி சூழ்புவி மன்னவ னுற்றுநீர்
கவரு மாநிதி கைபுக்க தோவென்றான்

இ-ள். இந்தப்பிராமணனுக்கு நீர் கொடுமென்று சொல்லவே, கொடுக்கி றேனென்று அந்தப்பிராமணன் தனதழகிய கைபோட்டுக்கொடுத்தான். அப் போது, கடல்சூழ்ந்த வுலகத்தையாளுகின்ற அரசனான அரிச்சந்திரன் நீர் என் கூடவந்து வாங்கிக் கொள்ளத் தக்க பெருந்திரவியம் உம்முடைய கைவசம் ஆயிற்றோவென்று கேட்டான். எ-று. (௩௪)

வந்த தென்பொருள் வாதையுஞ் சேயையும்
அந்த ணற்களிக் தாவண நல்கென
முந்த வாவணந் தீட்டி முடிநதபின்
மைந்த னோடு மயிலையும் வணங்கினான்.

இ-ள். அதற்கு எனக்குவரவேண்டிய பொருள் வந்தது, உன்மனைவியை யும் மகனையும் இந்த பிராமணருக்குக் கொடுத்து விலைச்சீட்டு எழுதிக்கொடெ ன்றுசொல்ல. முன்னே விலைச்சீட் டெழுதிக் கொடுத்தான். பின்புபிள்ளையை யும் மனைவியையும் கொடுத்தான். எ-று. (௩௫)

வல்லி போற்றி வருந்த லெமக்கெனச்
சொல்லி வேற்கட் டுளிபல சிநதிட
அல்லி மாமலர்த் தாள்களை யன்புடன்
புல்லி வீழ்ந்து கிடந்து புலம்பினாள்.

இ-ள். அப்போது சந்திரவதி கணவனைத்துதித்து எங்களுக்காக நீர்வரு த்தங்கொள்ளா திருமென்றுசொல்லி. வேல்போன்ற கண்களிலே பல நீர்த்து ளிகள் சிந்ததத்தனது நாயகனுடைய அகவிதழ்களைக்கொண்ட பெரியமலர்போ ன்ற பாதங்களைப் பிடித்துக் கொண்டு அன்புடன் விழுந்து கிடந்துபுலம்பலா னாள். எ-று. (௩௬)

நின்று காணு நிருபரும் யானுமன்
றன்று காண வவாவுறு செம்முகம்

இன்று காண்டக வெய்திய கன்றிமற்
றென்று காண்ப னினியென வேங்கினாள்.

இ-ள். இன்று உம்மைக் காணவருகிற அரசர்களும் நானும் அந்த அந்த நாள்தோறும் பார்க்க வேண்டுகிற சிவந்த முகத்தைஇன்றையதினம் காணக்கிடைத்ததேயன்றி இனி என்றைக்கு நான் காணக்கிடைக்கு மென்று பலபல விதங்களுஞ் சொல்லிப் பிரலாபித்தாள். எ-று. (௩௭)

ஏங்கி மன்ன னிடைவனென் றேபடர்
தாங்கிய நாயக தாவிடை யென்றயல்
நீங்கி னாளிறை நீள்கழுந் தைத்தழீஇத்
தூங்கி வாய்விட்டுத் தோன்றல ரற்றினான்.

இ-ள். நம்மை நினைத்து அரசன் ஏங்கிவருந்துவானென்று உள்ளே துன்பங்கொண்டு நாயகா! உத்தாரவுகொடென்று நீங்கப்போனாள். அப்போது மகன் அரசன் கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தொங்கி வாய்விட்டுக்கதறி அழுதான். எ-று. (௩௮)

எமைய வென்னையு மியாவையுந் தாங்கிய
சுமையி றக்கினை போசுக முற்றதோ
உமைய ணைந்திங் குறவென் றிருந்தவா
றமையு மோவை யனேயென் றரற்றினான்.

இ-ள். எங்களையனே! என்னையும் என்தாயையும் இரட்சித்துக் கொண்டுவந்தசுமையை யிறக்கிக்கொண்டீரோ! இப்போதுமக்குச் சுகமாயிற்றோ! நாங்களும்மைச் சேர்ந்து இங்கே உறவென்றிருந்தபடி போதுமோ! என்ஐயனே! என்று மகனானவ னழுதான். எ-று. (௩௯)

கழுத்தைப் பூண்டழுங் காதலன் கைகளை
அழுத்த மாம்பற் றறவிடு வித்தவன்
விழித்த கட்பொறி சிந்திட வேதியன்
இழுத்துப் போய்த்தன தில்லிட மெய்தினான்.

இ-ள். கழுத்தைக் கட்டிக்கொண் டழுகின்ற புத்திரனுடைய கைகளை அழுத்தமாகிய பிடிப்புப்போக நீக்குவித்தவனாகி திறந்துபார்க்கிற கண்களிலே நெருப்புப்பொறிகள்சிந்த அந்தப்பிராமணன் அப்புத்திரன் கையைப்பிடித்துத்தன் வீட்டுக் கிழுத்துக் கொண்டு போய்ச்சேர்ந்தான். எ-று. (௪௦)

கடிய வேதியன் கைதொட்டி ழுத்தவக்
கொடுமை கண்டு குலைகுலைந் தேங்கியே
இடிவி ழுந்த மராமர மீதெனும்
படிவி ழுந்தனன் சற்றும் பதைத்திலன்

இ-ள். அப்படிக் கடினசித்தனான பிராமணன் புத்திரன் கையைப்பற்றி யிழுத்துக்கொண்டுபோன அந்தக் கொடுஞ் செய்கைப்பார்த்து, அரசன் நடுநடுக்கமாய் அழுது இடிவிழுதலான மராமரம் இதுதா னென்னும்படி கீழேவிழுந்தான். சற்றேனும் உடம்பசைதலில்லாது அப்படியே கிடந்தான். எ-று. (௪௧)

வந்து மந்திரி மன்னனைத் தாங்கிநீ
புந்தி யில்லவர் போலப் புலம்புவ
தெந்த காரண மென்றடி போற்றலும்
சிந்தை வாட்டமுங் கோட்டமுந் தேறினான்.

இ-ள். அப்போது சமீபத்திலே மந்திரியானவன் வந்து அரசனை யெடுத்து அரசே! நீர்புத்தியில்லாதவரைப்போற் பிரலாபிக்கிறது என்னகாரணம் என்றுசொல்லிப் பாதங்களை வணங்கும்போதில், அரசன் மனத்திலுள்ள வாட்டமும் மனக்கோணலுந் தீர்ந்து தெளிந்தான். எ-று. (சஉ)

அந்த ணன்முக நோக்கி யரும்பொருள்
வந்த தோவென்று மன்னன் விளம்பயான்
இந்த மாநிதி பெற்றன னின்னமும்
சிந்தை யோடுரை செய்வதொன் றுண்டென்றான்.

இ-ள். அப்போது அச்சுக்கிரனாகிய பிராமணன் முகத்தைப் பார்த்து உமக்கு என்னாலே கிடைக்கவேண்டிய அருமையான பொருள் வந்து சேர்ந்ததோவென்று அரசன்கேட்க, இந்தப் பெரிதான பொருள் பெற்றுக் கொண்டேன். இன்னமும் என்மனசாரச் சொல்லுவதொன் றுண்டென்றான். (சங)

முனிக்கு முன்ன மொழிந்தபொ னீந்தனை
எனக்கு கூலிநீ யீகுவ தென்னென
உனக்கு மீகுவன் வாவென வுத்தமன்
றனக்குப் பின்னடந் தான்வினைச் சல்லியன்.

இ-ள். நீ விஸ்வாமித்திரனுக்குக் கொடுக்கிறேனென்று சொன்ன பொருளைக் கொடுத்தாய் சரியே, கூடவந்த எனக்குக் கூலி கொடுக்கிற பொருள் எங்கே யென்று கேட்க, உமக்கும் கொடுக்கிறேன் வாருமென்று சொல்லவே கொடுஞ் செய்கையை யுடைய சுக்கிரன் உத்தமனான அரசனுக்குப் பின்னே சென்றான். எ-று. (சச)

அன்ன காலை யமைச்சனை நோக்கியே
என்னை நீவிற் றிவற்குப் பொனீகெனச்
சொன்ன போதிற் றுணுக்கென வேங்கியெம்
மன்ன கேளென மந்திரி கூறுவான்

இ-ள். அந்த வேளையிலே, மந்திரியைப் பார்த்து என்னை நீ விலைசெய்து இந்தச் சுக்கிரனுக்குக் கூலிப்பொருள் கொடென்று சொன்ன போதில், மந்திரி திடுக்கிட்டழுது எங்களரசனே! கேளுமென்று சொல்லுகிறான். எ-று.

அன்னை யாயெம தாண்டகை யாகிய
நின்னை யான்விலை கூறுத னீதியோ
என்னை நீவிற் றிவற்குச் செலுத்தரும்
பொன்னை நல்கென வீழ்ந்தடி பூண்டனன்.

இ-ள். எனக்குத் தாயாகி அரசனுமான வும்மை நான் விலை கூறுகிறது நியாயமன்று, நீர் என்னை விலை செய்து இந்தப் பிராமணருககுச் செலுத்தத்

தக்க பொருளைக் கொடுமென்று கீழே விழுந்து வணங்கிப் பாதங்களைப்பிடித்துக்கொண்டான். எ-று. (சுசு)

மண்ணில் வீழ்ந்த வமைச்சனை மார்பணைத்
தொண்ணி லாவத னத்தொளி மாழ்கவே
கண்ணி னீர்ப்புன லாட்டிக் கௌசிகன்
எண்ணு நீர்மைக்கி தேற்குமோ வென்றான்.

இ-ள். அப்படி மண்ணிலே விழுந்து கிடக்கிற மந்திரியை அரசன் தன் மார்போடணைத்துக் கொண்டு அழகிதான சந்திரன் போன்ற முகத்தில் ஒளி மழுங்க தனது கண்ணினீராலே அவனை முழுகச் செய்து விசுவாமித்திரர் ஆலோசித்திருக்கிற தருதிக்கு இது தக்கதாகுமோ வென்றான். எ-று. (சுஎ)

ஏற்கு மோபொருட் குன்னைவிற் றீகுவ
தார்க்கு மாதவ னெண்ணம றியலாம்
தார்க்கு லாவுவெள் வேலவ தாழ்க்கிலா
தூர்க்கு ளென்னைவிற் றெண்ணிதி நல்கென்றான்.

இ-ள். நான் கொடுக்கவேண்டிய பொருளுக்கு உன்னை விற்றுக் கொடுக்கிறது தக்கதாகுமோ! இனி எல்லோரும் அந்த விசுவாமித்திரருடைய நினைவெப்படியென் றறியப்படும் வெற்றிமாலை விளங்குவதான வெள்ளியவேலையுடைய அமைச்சனே! இனி நீ தாமதஞ் செய்யாமல் இந்த வூர்க்குள்ளே கொண்டுபோய் என்னைவிலைசெய்து அழகிதான திரவியஞ் சுக்கிரனுக்குக் கொடுத்துவிடென்று னரசன். எ-று. (சுஅ)

என்ன பாவமெ னக்குப் பலித்ததென்
றன்ன கர்ப்பல வாவண வீதிவாய்ப்
பொன்னின் மாமுடி மீதிற்புற் சூடியே
மன்ன னைவிலை மந்திரி கூறுவான்.

இ-ள். இதென்னபாவம் எனக்கு இலபிதமானதென்று அந்தவூரிலேபல கடைவீதிகளிலுஞ்சென்று அரசனது பொன் முடிசூடுகிற பெருமை பொருந்தின தலைமேலே ஒரு புல்லைச்சூட்டி அரசனை மந்திரி விலை கூறுவானானான்.

ஆதி நூலின ராயினு மல்லது
சாதி யீனர்க ளாயினுஞ் சால்புடைக்
கோதி லான்றனைக் கொண்மி னெனப்பல
வீதி தோறும் விலையது கூறினான்.

இ-ள். வேதசாஸ்திரங்களுக்குரிய பிராமணரா யிருந்தாலுஞ் சரிதான், ஜாதிசண்டாளராலுஞ் சரிதான், சான்றாண்மையையுடைய குற்றமில்லாத இந்த அரசனை வாங்கிக் கொள்ளுங்க ளென்று பலவாகிய வீதிகளெல்லாம் விலைசொல்லிக்கொண்டு திரிந்தான் மந்திரி. எ-று. (௬௦)

வார மேதகு மந்திரி மன்னனைத்
தூர வேவிலை கூறிய சொற்கொளா

வீர வாகுவெ னும்பெயர் மேவினோன்
சூர நீர்மைப் புலைமகன் றோன்றினான்.

இ-ள். உரிமைத்தனத்திலே சிறந்த மந்திரியானவன் அரசனைத் தூரத்திலிருந்து விலைகூறிவருகிற சொல்லைக் கேட்டுக்கொண்டு வீரவாகு வென்கிற பெயரைக்கொண்டவனாய்ச் சூரத்தன்மையையுடையஒரு பறையன்வந்தான்.

குடக்க ளுண்டு மயங்கிய கொள்கையால்
தடக்கை கால்விதிர்ப் புற்றத ளர்ச்சியான்
விடக்கின் றோரசை விண்டுவின் றண்டினில்
தொடக்கிக் காவிய திண்பெருந் தோளினான்.

இ-ள். அவன் ஒரு குடக்கள்ளுங் குடித்து மயங்கியிருக்கிற கொள்கையினாலே நீண்டகைகளும் கால்களு நடுங்குகின்ற சோர்வையுடையவனாய் மாமிசத்தைமூடியிருக்கிற மாட்டுத் தோல் சதையாகிய இவற்றை மூங்கிற்றடியிலே கூடைமேற்கொண்டு மாட்டிக் காவடிபோட்டுக்கொண்டுள்ள பலமான பெரியதோள்களை யுடையவனாய். எ-று. (௫உ)

சுமக்குங் காவைத்துத் தூசொடு வாய்புதைத்
தமக்கு வேண்டு முறுபொரு ணல்கிடின்
அமைக்கும் புன்றொழி லாளரெம் போல்பவர்
தமக்கும் விற்கத் தகுதியுண் டோவென்றான்.

இ-ள். தான் சுமந்துவருவதான காவடியைக் கீழேயிறக்கிவைத்து விட்டு இடையின் வஸ்திரத்தாலே வாயை மூடிக் கொண்டு ஐயா உங்களுக்கு வேண்டிய மிக்கபொருளைக் கொடுத்தால்,ஒருவர் சொல்லச் செய்வதான இழிதொழிலாளராகிய எம்மை யொத்தவர்களுக்கும் விலைசெய்யத் தக்கதுண்டோ வென்று கேட்டான் வீரவாகு. எ-று. (௫௩)

அன்ன தன்மைய ரசன்ம னங்கொளா
இந்ந கர்க்கு ளிவனல தெம்விலைப்
பொன்ன ளிப்பவ னில்லெனப் புந்திவைத்
தென்னை வில்லென்ற மைச்சற் கியம்பினான்.

இ-ள். அந்தவகையை அரசன் மனதுட் கொண்டு, இந்த வூருக்குள்ளே இவனையல்லாமல் நமக்கு விலைபொருள் கொடுக்கிறவ னில்லையென் றாலோசித்துக் கொண்டு மந்திரியைப் பார்த்து என்னை விலைசெய்து விடென்று சொன்னான். எ-று. (௫௪)

ஆயி னன்றென் றமைச்ச னுமவவயின்
மேனயி னினிவிற் பனுனக் கென்றான்
ஈயு நல்விலை யேதெனப் பொன்பதி
னாயி ரம்மென் றமைச்சனி யம்பினான்.

இ-ள். அப்படியானால் நல்லதென்று மந்திரியானவன் அவ்விடத்திலே வந்தவனாகிய வீரவாகுவைப் பார்த்து நான் உனக்கு விலைசெய்கிறேனென்று

சொன்னான், அதற்கு வீரவாகு நான் கொடுக்கத் தகுதியான விலை யென்ன வென்று கேட்க, மந்திரி பதினாயிரம் பொன் கொடுக்க வேணுமென்று சொன்னான். எ-று. (௫௫)

தருகுவே னெனத் தன்பெய ராற்பொறித்
தருளி னன்புலை யற்கமைச் சாவணம்
பொருளை வாங்கிப் புகர்க்களித் தையபோய்
வருகக வன்ன மகிழ்ந்தவ னேகினான்.

இ-ள். அப்படி ஆயிரம்பொன்னும் தருகிறேனென்று வீரவாகுசொல்ல, உடனே மந்திரியானவன் தன் பெயராலேவிலைச்சீட்டெழுதி அந்தப்புலையனுக்குக் கொடுத்தான். அப்படிக் கொடுத்து பொருளை வாங்கிச் சுக்கிரனுக்குக் கொடுத்து, ஐயா சுக்கிரசாரியரே: போய்வாருமென்று கூற, சுக்கிரன் சந்தோஷமாகச் சென்றான். எ-று. (௫௬)

மீளி வேந்தும் விடக்கின்ற சைச்சுமை
தோளி லேற்றிப் புலையற் றொடர்ந்தனன்
ஆளி மொய்ம்பின மைச்சனும ன்னவன்
றாளில் வீழ்ந்து தளர்ந்து வருந்தினான்.

இ-ள். (அப்போதுடனே) வீரனான அரசன், தோலு மாமிசமு மான காவடிச் சுமையைத் தனது தோண்மே லேறிக் கொண்டு, அந்தப் புலையனைத் தொடர்ந்து செல்லலானான். அப்போது சிங்கம்போலும் புஜபலத்தையுடைய மந்திரியானவன் அரசனுடைய காலிலே விழுந்து தளர்ச்சியுடனே வருந்தலானான். எ-று. (௫௭)

கொற் றவர்நின் குளிர்மலர்த் தாளிணை
உற்ற நாடொட்டு முன்பணி யேசெயப்
பெற்ற மாதவப் பேறெனக் கின்றொடும்
அற்ற தோவென் றயலழு தேகினான்.

இ-ள். அரசனே! உம்முடைய குளிர்ந்த மலர்போன்ற பாதங்களிரண்டையும் நான் வந்தடைந்த நாள்முதல் உன்னுடைய ஊழியமே செய்யப்பெற்ற எனது பெரிய தவப்பலன் இன்றோடே எனக்கு முடிவாகிப் போயிற்றோ (இல்லை) யென்று அரசன்கூடவே அழுது கொண்டு புறமே போனான். எ-று. (௫௮)

வலைய நீத்த புயத்திடை வைத்தகா
அலைய வேபின் றொடர்ந்தரிச் சந்திரன்
தொலைவி லாமுடை நாறிய தொன்னெறிப்
புலையன் மேவும் புலைக்குடி னண்ணினான்.

இ-ள். கேயூரங்களை நீக்கின தோளிலேவைத்த தோற்காவடி அசைய வசைய அவன்பின்னே அரிச்சந்திரமகாராசன் தொடர்ந்து, நீங்குதலில்லா

மல் புலால் நாறுகின்ற பழையவழியிலே செல்லுகிற அந்தப்புலையனிருக்கிற புலைக்குடிகளுக்குப் போனான். எ-று. (௫௯)

பார்த்த வவர்க்குப் பசுத்தசை யாய்மறை
கோத்த காவையி றக்கிக்கொ டுத்தபின்
ஊத்தைக் கொட்டிலி னுள்ளிருந தேபுவி
காத்த கோவுடன் காலனி யம்புவான்.

இ-ள். கண்ணாலே கண்டவர்களுக்குப் பசிய தசையாகி வேதத்தையே கோத்திருக்கிற காவடியை இறக்கிக்கொடுத்தபின்பு, அழுக்கடைந்த கொட்டிலுக்குள் ளிருந்து கொண்டு உலகத்தையாண்ட அரசனுடன் காலனென்கிற வீரவாகு சொல்லுகிறான். எ-று. (௬௦)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தூங்கிருள் கடியுஞ் செந்தீச் சுடலையிற் சுடும்பி ணத்துக்
கோங்கிய புலைப்பே றாடை யொன்றுண்டு பணங்கா லுண்டு
வாங்கியீ தெனக்கு வைத்து வாய்க்கரி சியைநீ யட்டுண்
டாங்கிரு வென்று பின்னு மண்ணலுக் கவனு ரைப்பான்.

இ-ள். தூங்குகின்ற இருளைப்போக்கு வதான சிவந்த நெருப்பு மூளுகிற சுடுகாட்டிலே தினஞ்சுடுவதாகியபிணம் ஒன்றுக்கு உயர்வதான புலையன் பெறுவது வஸ்திரமொன்றுண்டு; காப்பணமுண்டு. இவற்றைத் தவறாமல் வாங்கிக் கொண்டு அவற்றை யெனக்காக வைத்து விட்டு வாய்க்கரிசியை மாத்திரம் நீவாங்கிக் கொடுத்துண்டுகொண்டு அங்கேதானே இருவென்று சொல்லிப் பின்னும் அரசனுக் கவன்சொல்லுகிறான். எ-று. (௬௧)

எனக்குநீ பணமுங் கொள்ளி யாடையு மினிது நல்கி
உனக்குவாய்க் கரிசி தந்தே னுண்டிரு பசியை நீக்கி
மனத்துளே வஞ்ச மின்றி மயானத்தி லுறைவா யென்னத்
தனக்குநே ரிலலான் றானு நன்றெனச் சுடலை சார்ந்தான்.

இ-ள். எனக்கு நீ பிணஞ்சுடுகிற பணமும் கொள்ளி வஸ்திரமும் நன்றாகக் கொடுத்துவிட்டபின்பு உனக்கு நான் கொடுத்ததாகிய வாய்க்கரிசியை மாத்திரம் நீ புசித்துப் பசியைத்தவிர்த்துக்கொண்டு உன்மனத்திலே எவ்வளவும் வஞ்சனையில்லாமல் அந்தச் சுடுகாட்டிலேதானே காத்துக்கொண் டிருக்கக் கடவையென்று சொல்ல, தனக்குச் சமானமில்லாத அரசன் அதற்கு நல்லதென்று சுடுகாட்டுக்குப்போனான். எ-று. (௬௨)

சுட்டவெம் பிணத்தோ டொக்கத் தொலைந்துவெந் தெரிந்த கொள்ளி
கட்டையும் பாடை சேர்ந்த கழிகளு மெடுத்துக் கூட்டிக்
கொட்டிலொன் றெடுத்து மேனாள் கொடுஞ்சவங் கொணர்ந்து போட்ட
கட்டிலொன் றேறிச் செங்கோற் காவலன் வீற்றி ருந்தான்.

இ-ள். அங்கே சுடுகிறதான வெவ்விய பிணத்தோடேகூடச் சாம்பலாக வெந்து எரிந்துபோன கொள்ளிக்கட்டைகளாலும் பாடையோடு சேர்ந்து வந்த குறுக்குக்கழிகளாலுஞ் சோக்கையாகக்கூட்டி ஒருகொட்டில் கட்டிக்கொண்டு முன்னே கொடிதான பிணத்தைத்தூக்கிக் கொண்டுவந்து போட்டுக்கிடக்கிற ஒருகட்டிலின்மேலேறி நீதியுள்ள அரசனிருந்தான். எ-று. (௬௩)

பாடையிற் கொணர்ந்து வைத்த பிணஞ்சுடு பணமுங் கொள்ளி
ஆடையும் வாங்கி யீட்டி யாண்டனைக் களித்தங் குற்றுக்
கூடையி னிறைத்து நாளுங் கொடுத்தவாய்க் கரிசி வைத்தாங்
கோடைமார்க் களிற்றின் மன்ன னுறைந்தன னுறைந்த பின்னர்.

இ-ள். பாடைமேலே கொண்டுவந்துவைத்த பிணத்தைச்சுடுகிற பணமும் கொள்ளிவஸ்திரமும் வாங்கிச்சேர்த்துத் தன் எஜமானுக்குக் கொடுத்துவிட்டு, அங்கேயிருந்துகூடையிலே தினந்தோறுங்கொடுக்கிற வாய்க்கரிசியை நிரப்பிவைத்துக்கொண்டு அப்படியாக முகபடாமணிந்த பெரிய யானைமேல் வருகிற அரசன் இருந்தான்; அவனப்படியிருந்த பின்பு. எ-று. (௬௪)

அத்திரு நகரின் மற்றோ ரம்பலத் திரவு தங்கிச்
சத்திய கீர்த்தி யென்பான் றங்கணா யகனைத் தேடிப்
புத்தியில் வருத்த நண்ணிப் புலைக்குடி யொருங்கு தேடி
உத்தம னிமங் காக்கு மாறுகேட் டோடி வந்தான்.

இ-ள். இந்த அழகான பட்டணத்திலே, அங்கொரு மடத்திலே அன்றிராத்திரி சத்தியகீர்த்தி தங்கியிருந்து பின்பு தங்கள் எஜமானனைத் தேடிக்கொண்டு தன் மனத்திலே வருத்தமுண்டாகவந்து அந்தப் புலைக்குடில்களினிடமெல்லாந் தேடிப்பார்த்து உத்தமனான அரிச்சந்திரன் சுடுகாடுகாக்கிறது தெரிந்து ஓடிவந்தான். எ-று. (௬௫)

நெருப்பெழுந் தெரியுஞ் செந்தீச் சுடுகரை நீந்தி யேகி
மருப்பயி லலங்கன் மன்ன மந்திரத் தலைவ னண்மிச்
செருப்பயில் வீர வேலான் சிறுகுடி றனிலே பக்கங்
கிருப்பது கண்டான் கண்ணு வேங்கியே யலறி வீழ்ந்தான்.

இ-ள். அங்கே நெருப்பு மூண்டு எரிவதாகி, அந்தச் சிவந்த நெருப்பினாலே சுடுவதான சுடுகாட்டுக்கரையெல்லாங் கடந்துபோய் மணம்பொருந்தின மாலையணிகிற அரசனை முதல்மந்திரியான சத்தியகீர்த்தி வந்துகூடி, யுத்தஞ்செய்கிற வீரவேலையுடைய அரசன் அங்கொரு சிறியகுடிசைக்குள்ளே புகுந்துகொண்டு அங்கேயிருக்கிறதைக் கண்டான். கண்டவுடனே, அழுது பிரலாபித்துக் கீழேவிழுந்தான். எ-று. (௬௬)

மன்னவ ரிடம்பொ ருது வந்துசூழ்ந் திறைஞ்சிப் போற்ற
அன்னமென் னடையா ராட வரம்பையர் பாட வைகும்
பொன்னெடுங் கோயி னீங்கிப் பூதமும் பிசாசு மாடும்
இந்நெடுங் கோயி லோவந் தெய்தியதைய வென்றான்.

இ-ள். அரசர்கள் தங்களுக்கு இடம்போதாமல் வந்துமொய்த்து வணங்கித்துதிக்கவும், அன்னம்போலு மெல்லிய நடையையுடைய பெண்களாடவும், அரம்பைகள் பாடவுமிருக்கிற பொன்மயமான நெடிய அரண்மனையைவிட்டுப் பூதங்களும் பசாசுகளும் கூத்தாடுகின்ற இந்த நெடிய கோயிலோ சுவாமி! உமக்குவந்து லபிதமானது என்றான். எ-று. (௬எ)

கதிதரு மயனு மாலுங் கடக்கருங் கொடிய நீர்மை
விதியினை யெளிய நம்மால் வெல்லலாந் தகைமைத் துண்டோ
அதிகம்வந் தெய்தா மேனு மமைந்தவே யடுக்கு மல்லால்
மதிவலோ யிதற்கு வாடி வருந்தலெ யென்று சொன்னான்.

இ-ள். மோட்சத்தைத்தருகிற பிர்மாவும் விஷ்ணுவும் கடத்தற் கரிதான கொடுஞ்செய்கையை யுடைய விதியை எளிதான நம்மாலே வெல்லலாகிய தகுதியுள்ளதாமோ? முன்னாளிலே, அமைத்தபடியே அமைவதாகும் அல்லாமல் வேறாக அப்படிப்பட்டவிதிக் கதிகமாக ஒன்றும் வாராதுகூடாது. மதிவல்லவனான சத்தியகீர்த்தியே! இதற்காக நீ வாடிவருந்தாதேயென்று அரிச்சந்திரன் மந்திரிக்குச் சொன்னான். எ-று. (௬அ)

என்னவே யமைச்சன் றேறி யிருந்தன னிருக்க வேந்தன்
முன்னமே யுய்த்து வைத்த வரிசியை முறையி னீய்ந்தான்
இன்னமு தடுவ தற்கென் றெண்ணியே யமைச்சன் வீழ்ந்து
பொன்னடி வணங்கி வாங்கிப் புல்லினிற் பொதிந்து கொண்டான்.

இ-ள். என்று சொல்லுமளவில், மந்திரி தேறிக்கொண்டிருந்தான். அவனிருக்க, அரசன் முன்னே தான் சேர்த்துவைத்திருந்த வாய்க்கரிசிகளை அளவுப்படி கொடுத்தான். அதை இனியசோறு சமைத்தற்கென்று மந்திரி விழுந்துஅரசன் பொன்னடிகளை வணங்கிக்கொண்டு சிலபுல்லுக்கற்றைக்குள்ளே அந்த அரிசியை முடிந்துகொண்டான். எ-று. (௬௯)

மண்டலத் திறைவ னுய்த்து வைத்தவாய்க் கரிசி தன்னைக்
கொண்டுபோய்ச் சுரபிக் கீந்து கோமயத் துடனே வீழ்ந்த
தண்டுல மெடுத்துக் குத்திச் சமைத்தினி துதவ வச்சோ
றுண்டவ ருறைந்தா பின்னை யுற்றவா றெடுத்து ரைப்பாம்.

இ-ள். பூமண்டலாதிபதியான அரசன் சேர்த்துக்கொடுத்த வாய்க்கரிசிகளைக்கொண்டுபோய் பசுவுக்குக்கொடுத்து அதுவுண்டு அதன்சாணியிலேவிழுவதான அரிசியையெடுத்து குத்திசசமைத்துப் பரிசுத்தமாக்கிக் கொடுக்க அந்தசசோற்றை உண்டுகொண்டு அங்கிருந்தான்; பின்புநடந்த செய்கையை இனி யெடுத்துச்சொல்லுவோம். எ-று. (எ௦)

காசிகாண்டம் முற்றிற்று.

ஆ. விருத்தம் - ௬௧எ௬.

———(✻)———

பரமபதிதுணை.

பதினோராவது,

மயான காண்டம்.

——(*)——

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வல்லியு மகனு மந்த மறையவன் மனையிற் சேர்ந்து
சொல்லிய பணிக ளெல்லாஞ் சோர்வறச் செய்து பின்னும்
எல்லியோர் சாம மென்ன வெழுந்திருந் தேவல் முற்றி
அல்லிரு சாமஞ் சென்றா லளித்தகூ ழுண்டு றங்கி

இ-ள். சந்திரவதியும் மகனும் அந்த விலைக்குவாங்கின பிராமணன் வீட்டிலேபோய். அந்தப்பிராமணன் சொன்ன வேலைகளெல்லாம் குறைவில்லாமல் பொழுதளவுஞ்செய்து, மறுபடியும் அர்த்தராத்திரிவிடிய ஒரு சாமமிருக்கும்போதே விழித்தெழுந்திருந்து அவன் ஏவின வேலைகளெல்லா முடியச் செய்து பின்பு அந்தப்பகல் இரண்டுசாமமானால் அவனூற்றின கூழை யுண்டு தூங்கி. எ-று. (௧)

கையினி லுலக்கை பற்றிக் காந்தளி னுதிரம் பாய
மெய்யினில் வெயர்நீர் சிந்த விழியினி லருவி பாய
நெய்யினின் முடித்த கூந்த னெற்குத்துங் கொடுமை காணா
மையினிற் றிகழ்வேற் கண்ணா ரரம்பையர் மறுகிச் சோர்ந்தார்.

இ-ள். கையிலே உலக்கையைக்கொண்டு காந்தள்மலர்போன்ற அந்த கைகளிலேஇரத்தங்கட்டிச் சிவப்பாகவும் உடம்பெல்லாம் வேர்வைநீரொழுகவும், கண்களிலே அருவிபோல் நீரொழுகவும் முன்னே சம்பங்கி யெண்ணெயிட்டுச் சீவி முடித்தகூந்தலை யுடைய சந்திரவதியானவள் நெல்லுக்குத்துகிற கொடுமையைக்கண்டு மையிட்டவுடனே விளங்குகின்ற வேல்போலுங் கண்களையுடையவர்களாகிய தெய்வரம்பைகளெல்லாரும (இச்சந்திரவதிக்கு) இப்படிவரக் கூடுமோவென்று மயங்கிச்சோர்வதானார்கள். எ-று. (௨)

புன்கணுற் றரம்பை மாதர் வருந்தவும் புந்தி செய்யா
வன்கண னிரக்க மில்லான் மடித்தவாய் வெடித்த சொல்லான்
தன்கணன் பில்லான் பொல்லான் றறுகணன் விலைகொண் டாள்வோ
இன்கணில் லாதான் பாரி யிவனிலுங் கொடிய பாவி. [ன்

இ-ள். தெய்வரம்பையர்கள் அப்படித் துன்பப்பட்டு வருத்தமடையும், விலைக்குவாங்கி ஆளுகிற பிராமணன் அதை ஆலோசியாத கொடுஞ்செய்கையையுடையவனாய்க் கொஞ்சமேனு மிரக்கமில்லாதவனாய் மடித்தவாயுடனே அதிர்த்தசொல்லை யுடையவனாய்த் தன்னிடத்திலெவ்வளவு அன்பில்லாதவனாய் அஞ்சாதவனாயிருந்தான். அந்த இனிதான முகதாட்சண்ணிய மில்லாத

பிராமணனுடைய பெண்டாட்டியோ அவனைப்பார்க்கிலு மிகவுங்கொடுமை யான பாவியாயிருந்தாள். எ-று.

அடியினா லஞ்சி மைந்த னனந்தலை பயமு ணர்த்த
விடியுமுன் னெழுந்தி ருந்து விளைபுலங் களைப றித்துக்
கடிவனத் தடைந்து கொய்து காட்டமுஞ் சமிதை யும்பொன்
முடிபுனை தலையில் வைத்து முறைமுறை வருமந் நாளில்.

இ-ள். அந்தப் பிராமணனடிக்கிற அடியினாலே புத்திரனை தேவதாசன் பயந்து, அப்பயமான தூக்கத்தை விழித்தெழும்படிச்செய்ய விடிகிறதற்கு முன்னே எழுந்திருந்து அந்தப்பிராமணனுக்கு விளைகிற நிலத்திலுள்ள களைகள்பிடுங்கி அவனுடைய காவலுக்குள்ளான வனத்திலே அலைந்து திரிந்து, இலைக்கறிகள் பறித்துக்கொண்டு விறகும் சமித்துக்கட்டி பொற்கிரீடமணி யத்தக்க தலைமேலேவைத்துச் சுமந்து இப்படித்தினந்தோறும் வருவதாகிய அந்த நாளிலே. எ-று. (ச)

மைந்தனுஞ் சிறுவரோ டேகி வனந்தனில் விறகு கட்டித்
தந்திடு வழியி னோர்பாற் றருப்பைகண் டதுவிட் டேகில்
அந்தணன முனிவா னென்னு வஞ்சியோர் வடத்தி னீழல்
இந்தன மிறக்கி யப்பு விருந்திடு புதற்கட் சென்றான்.

இ-ள். ஒருநாள் அந்தப் புத்திரன் ஊரிலுள்ள பிள்ளைகளோடு கூடிச் சென்று காட்டிலே விறகுதேடிச் சுமைகட்டிச் சுமந்துகொண்டு வருகிறவழி யிலே ஓரிடத்தில் தர்ப்பைப்புல் அதிகமாயிருக்கக்கண்டு இந்தத் தர்ப்பை யைக்கண்டும் பறித்துக்கொண்டு போகாமற்போனால் பிராமணன் கோபஞ் செய்தடிப்பானென்று பயந்து ஒரு ஆலமத்தின்நிழலிலே அந்த விறகுசுமை யை யிறக்கிவைத்துவிட்டு அந்தத்தர்ப்பைப்புல் முளைத்திருக்கிற தூறினிட மாகப்போனான். எ-று. (ரு)

பறித்தனன் குசையைப் பற்றிப் பறித்தலு முனிவ னேதக்
குறித்துவந் ததனுட் டங்குங் கோளராச் சீறி யோங்கித்
தெறித்தழல் விழியாற் சிந்தத் தீண்டிற்றுத் தீண்ட லோடும்
வெறித்தெழுந் தலறி யோடி வெருவியே தரையில் வீழ்ந்தான்.

இ-ள். அங்கேபோய்த் தர்ப்பையைப் பிடுங்கினான்; அப்படித் தர்ப்பை யைப் பிடித்துப் பறிக்கும்போது விசுவாமித்திரமுனிவரேவுதலினாலே கடிக் கவெண்ணி அந்தத் தர்ப்பைக்குள்ளடங்கி யிருக்கிற பெரிய பாம்பானது சீறி யெழுந்து நெருப்புப்பொறி தெறித்துக் கண்களினின்று முதிரக் கடித்தது; அப்படிக் கடித்தவுடனே, மயங்கித் துள்ளி அலறிக்கொண்டோடிவந்து பயத் துடனே ஓரிடத்தில் வீழ்ந்தான். எ-று. (சூ)

வடத்தின்கீ ழிருந்த தோழா மறுகிப்போய் வள்ளல் வீழ்ந்த
இடத்தினை யணுகி யையோ வென்னுற்ற துரையா யென்னப்
படத்தினாற் பெரிய நாகங் கடித்தது பாரு மென்று
விடத்தினா லறிவு சோர்ந்தான் வீட்டியி ரடங்கிற் றன்றே.

இ-ள். அப்போது அந்த ஆலமரத்தினிழலிலே இளைப்பாறிக் கொண்டிருந்த தோழப்பிள்ளைகள் பயந்தோடிவந்து அந்தப்பிள்ளை விழுந்துகிடக்கிற இடத்தையெடுத்து ஐயோ! பிள்ளாய்! உனக்கு என்னதுன்னபம்வந்தது சொல்லென்றுகேட்க, படத்தையுடைய பெரிய பாம்பு என்னைக்கடித்து; நீங்கள் இதைப்பாருங்களென்று சொல்லிக்கொண்டே அந்தப்பாம்பு விடத்தினாலே புத்திமயங்கினான். உயிரும் அவனுடம்பைவிட்டு நீங்கிச்சுவாசமும் அடங்குதலாயிற்று. எ-று. (எ)

ஆவிபோ யகன்றபின்னை யனைவரும் புரட்டிப் பார்த்துப்
பாவியூ ழென்னே யிந்தப் பாலக னிறந்தா னென்று
மேவியவ் விடத்தின் கீழ்வந் தரரவர் விறகுகொண்டு
காவியங் கழனி சூழுங் காசியம் பதியிற்புக்கார்.

இ-ள். அப்படி உயிர்போய் இறந்தபின்பு எல்லாப் பிள்ளைகளும் அந்த உடம்பைப்புரட்டி அசைத்துப்பார்த்துப் பாவியான விதியினாலே என்னஆச்சரியம்! இந்தப்பிள்ளை இறந்துபோனானென்று திரும்பி அந்த ஆலமரத்தின் கீழேவந்து அவரவர்கள் கொண்டுவந்த விறகுசுமையை யெடுத்துக்கொண்டு நீலோற்பலங்கள் மலர்ந்துள்ள அழகிதான வயல்சூழ்ந்த காசிபட்டணத்துக்குள்ளேபோனார்கள். எ-று. (அ)

பாலர்வந் தூரிற் புக்கார் பானுவுங் கடலிற் புக்கான்
மாலைவந் திறுத்த பின்னர் வழியினை நோக்கி யன்னை
பாலன்வந் திலனென் றேங்கிப் பரதவித் திருகண் டாரை
காலநொந் துருகி வாயிற் கடைத்தலை வந்து பார்த்தாள்.

இ-ள். அப்படி அந்தப்பிள்ளைகளெல்லோரும் ஊருக்குள்ளே வந்துசேர்ந்தார்கள். சூரியனு மேலைக்கடலுக்குள்ளேபோய்ச் சேர்ந்தான். அப்படி இராத்திரிகாலமானபின்பு பிள்ளைவருகிற வழியைப் பார்த்துப் பார்த்துத் தாயான சந்திரவதி தன்பிள்ளை யின்னமும் வாராதிருக்கிறானேயென்று துக்கித்துப் பிரலாபித்துத் தனதிரண்டு கண்களிலு நீர்த்தாரைசிந்தும்படிநொந்து மனமுருகிக் கடைத்தலைவாயிலிலே வந்துபார்த்தாள். எ-று. (கூ)

வணங்கிய கரத்தாள் சால வாடிய வனத்தாள் மக்காள்
இணங்கியும் முடனே வந்த வென்மக னெங்கே யென்றாள்
மணங்கமழ் குழலா யுன்றன் மைந்தனை யரவு தீண்டி
உணங்கியே யிறந்தா னென்றா ருயிர்த்திலண் மறுகி வீழ்ந்தாள்.

இ-ள். சோர்ந்த கைகளையுடையவளாய் மிகவும்வாடின மனத்தையுடையவளாகி வருகிற பிள்ளைகளைப்பார்த்து பிள்ளைகளே! உங்களுடனே கூடிவந்த என்மகனெங்கே? வரக்காணேனென்றாள். அதற்கு அந்தப்பிள்ளைகள் வாசனை பரிமளிக்கின்ற கூந்தலையுடைய அம்மே! உன்னுடைய புத்திரனைப் பாம்புகடித்து அதனாலேசோர்ந்து மடிந்துபோனா னென்று சொன்னார்கள். அதுகேட்டு மூச்சமில்லாதவளாய் மயங்கிக் கீழேவிழுந்தாள் சந்திரவதி. எ-று.

மடத்தகை வல்லி பின்னு மைந்தனை நோக்கி யெந்த
இடத்திலே யிறந்தா னென்ன யாம்வரும் வழியி னிற்கும்
வடத்தினுக் கயலே சற்றே வடக்கினிற் குசைப டர்ந்த
தடத்தினிற் றெற்கே யென்று சாற்றியே யவர்கள் போனார்.

இ-ள். அப்படி மயங்கிவிழுந்து பின்னும் அந்தயௌவனத் தகுதியை யுடையசந்திரவதியானவள் அந்தப்பிள்ளைகளைப் பார்த்து பிள்ளைகளே! என் பிள்ளை எந்தவிடத்திலே இறந்துகிடக்கிறானென்றுகேட்கப் பிள்ளைகள் நாங்கள் வருகிறவழியிலே நிற்கின்ற ஆலமரத்திற்குப்பக்கத்தே கொஞ்சம் வடக்குதிசையிலே தர்ப்பைபடர்ந்து முளைத்திருக்கிற மேட்டுக்குத் தெண்புறத்திலே இறந்துகிடக்கிறானென்றுசொல்லி அந்தப்பிள்ளைகள் போய்விட்டார்கள். எ-று. (கக)

அறுதியீ தென்று சால வறிவழிந் துருகி வீழ்ந்து
மறுகினா ளுடையோற் கஞ்சி வாய்திறந் தாற்றுண் மாழ்கிச்
சிறுதொழின் முழுதுஞ் செய்து தீர்ந்தபின் றேடிச் சேறல்
உறுதியென் றுளத்தி னுள்ளே யொடுக்கிவந் தகத்திற் புக்காள்.

இ-ள். முடிவு இப்படியாயிற்றென்று மிகவும் புத்திமயங்கி மனமுருகிக் கீழேவிழுந்து மயங்கினவளாகித் தன்னை விலைக்குவாங்கின பிராமணனுக்கும் பிராமணத்திக்கும் பயந்து வாயைத்திறந்து கூவியழாதவளாய்ப் பின்னுஞ் சோர்வுடனே தான் செய்வதான சிறிய பணிவிடைகள் முழுதுஞ்செய்து முடிந்தபின்பு இறந்துகிடக்கிறபிள்ளையைத் தேடிக்கொண்டுபோகிறதே இனித்தகுந்த காரியமென்று தன்மனத்துக்குள்ளே அப்படிப்பட்ட துன்பத்தை ஒடுங்கக்கொண்டுவந்து வீட்டுக்குள்ளே போயினள். எ-று. (கஉ)

முறைமுறை பணிக ளெல்லாஞ் செய்தற முடித்துப் பின்னர்
மறையவன் தன்னை யேத்தி வாய்புதைத் தழுது விம்மி
இறைவகே ளரவந் தீண்டி யென்மக னிறந்தான் யானச்
சிறையிலே சேறற் குன்றன் றிருவுள மறியே னென்றாள்.

இ-ள். அப்படி வீட்டுக் குள்ளேவந்து கிரமங் கிரமமாகத் தான்செய்வதான ஊழியங்களெல்லாஞ் செய்து முடியமுடித்துப்பின்பு அந்தப்பிராமணனைத் தோத்திரஞ்செய்து, வாயை ஒருகையால்மூடிக்கொண்டு, அழுது துக்கித்து சுவாமி எஜமானே! கேட்பீராக என்பிள்ளை பாம்புகடித் திறந்துபோனன்; ஆகையா லினிநான் அந்த இடத்துப்போக உம்முடைய திருவுள்ளமெப்படியோ தெரிகிலேன் சொல்லுமென்றாள் சந்திரவதி. எ-று.

சினக்கடுஞ் சொல்லாற் சீறித் திடுக்கிட வுரப்பி வீணீ
எனக்குறு குறையே யன்றி யென்பொருட் கழிவு வந்தால்
உனக்குறு குறைதா னுண்டோ வுறுவிலைப் பட்ட பையல்
தனக்கொரு தாயு முண்டோ தவிர்க்கநீ போவ தென்றான்.

இ-ள். அதுகேட்டு கோபங்கொண்ட கடுஞ்சொற்களுடனே சீறி சந்திரவதி திடுக்கிடும்படி அதட்டி அடீ பயன்படாதவளே! என்பொருளுக்குக்

கெடுதிநேரிட்டால் எனக்கு மிகுந்த குறைவேயல்லது உனக்கு வருவதான குறைவு ஏதேனுமுண்டோ? எனக்காக விலையான அந்தப்பையனுக்கு ஒரு தாயானவளுண்டோ? (இல்லை) நீ போகவேண்டாமென்று சொன்னான். எ-று.

அடிமையே யெனினு மையா வந்தரத் திறந்தா னென்றால்
கொடியனேன் றனக்குப் பெற்ற வயிறுதான் கொதித்தி டாதோ
படியின்மே லிறந்தான் றன்னைப் பார்த்தெடுத் தடக்கிக் கங்குல்
விடியுமுன் வருவே னல்கு விடையெனத் தொழுது வீழ்ந்தாள்.

இ-ள். (அதற்கு) ஐயரே! உமக்கு அடிமைதான் ஆனாலும் என் கண் காணாத வனாந்தரத்திலே அந்தப் பைய னிறந்து போனானென்று சொல்லக் கேட்டால் பாவியான யெனக்குப் பெற்றவயிறுதான் கொதிப்புக் கொள்ளாதா? ஆகையால் எங்கோ தூரிடத்திலே இறந்துகிடக்கிறவனைத் தேடிக் கண்டுபிடித்து எடுத் தடக்கஞ்செய்து பின்பு இந்த இராத்திரி விடிவதற்கு முன்னே வந்துவிடுகிறேன் நீர் தயவுசெய்து உத்தரவு கொடுத்தருளுமென்று வணங்கிக் கீழேவிழுந் தழுதாள். எ-று. (௧௫)

மாலையங் குழலாள் கூற மறையவன் மனம்பொ ருந்தி
வேலைகண் மிகவு முண்டு விடியுமுன் வருவா யாகில்
நீலவேல் விழியா யேகு நீயென வொருகாற் சொன்ன
காலையே யெழுந்தி ருந்து கடிநகர் கடந்து போனாள்.

இ-ள். பூமாலையணிந் தழகுகொண்ட கூந்தலையுடைய சந்திரவதி இவ்வாறுசொல்ல, அந்தப்பிராமணன் மனஞ் சம்மதித்து நீலமலர் போலவும் வேல்போலவுங் கண்களையுடையவளே! நாளையத்தினம் என்வீட்டிலே அதிகமாக வேலைக ளிருக்கின்றன; அவைகளெல்லாஞ் செய்வதற்காக நீ விடிகிறதற்குமுன்னே வருவாயேயானால் போவென் றொருதரஞ் சொன்ன அப்பொழுதே யெழுந்திருந்து அந்தக்காவல்கொண்ட பட்டணத்தைக் கடந்து போனாள். எ-று. (௧௬)

பாவியேன் மகனே யென்பள் பதைப்பண்மென் முகத்தின் மோதித்
தாவியே விழுவ ணின்று தயங்கியே மயங்கி வீழ்வள்
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள் பதறி யேங்கி
ஆவியைத் தேடித் தேடி யலமரு முடலை யொத்தாள்.

இ-ள். பாவியான யெனது புதல்வனே யென்று கூவுவாள்; போகும்போதே பதையதைத்துக் கீழேவிழுவாள்; மிருதுவான தன்முகத்திலே அடித்துக்கொண்டு தாவிப்போய் அப்புறத்தே விழுவாள்; அங்கே கிடந்து தயங்கியு மயங்கியும்விழுவாள்; நீலமலர்போன்ற கண்களிலே நீர்சிந்தக் கதறுவாள். அப்படிக் கதறியும் பதறியும் ஏங்குதலாகி உயிரைத்தேடி யலைகிற உடம்பு போலானாள். எ-று. (௧௭)

ஆறெலா மடிகள் வைத்த வடியெலாம் விழிநீர் நின்ற
நூறெலா மரிவை சென்ற சுவடெலாங் குருதி தொட்ட

மாறெலாங் கூந்த றுன்று வனமெலாந் துணிகள் யார்க்குந்
தேறெலாந் தகைமைத் தன்றி செடியெலாந் தேடிச் சென்றாள்.

இ-ள். அவ்வாறு அவள்போகிறவழிகள் முழுதும் அவள்கால்கள் பதிந்திருக்கின்றன; அந்தகால்கள் பதிவாகிக் கிடக்கிற விடமுழுதும் கண்ணீரொழுகுவனவாயின. அங்குள்ளமுள்ளுச்செடிகள் உடம்பை கிழிப்பதனாலே அந்தச் சந்திரவதிபோகின்ற காற்சுவடுகள் முழுதும் இரத்தம் சிந்துதலாயின. பின்னு மச்செடிகளின் மாறுகள் கூந்தலைப்பற்றி யிழுக்கவும், அந்த நெருங்கின காடெல்லாம் இடையிலுள்ள கந்தசீலைத் துணிகள் கிழிந்துகிடக்கவும் இன்னபடியென்று எப்படிப்பட்டவர்களுந் தெளிந்து சொல்லொணுதபடி அந்தச்செடிகளுள்ள காடுகளிலே தேடிக்கொண்டு போனள். எ-று. (கஅ)

ஓடினு ளுள்ளமெல்லா முருகினுள் கருகி மேனி
வாடினுள் விறகு வைத்த வடத்தினுக் கருகே வந்தாள்
நாடினுள் கழுகும் பேயு நரிகளுங் குறளுந் துன்றிக்
கூடிய குழுவி னுப்பண் குமாரனைச் சென்று கண்டாள்.

இ-ள். அப்படி தேடிக்கொண்டோடினுள், மனமெல்லா முருகிக் கரைந்தாள், உடம்பெல்லாங் கருகி வாடினுள், விறகுச்சுமை வைத்துக்கிடக்கிற அந்த ஆலமரத்தி னருகேவாதாள், அங்கேவந்து தேடினுள், கழுகுகளும்பேய்களும் நரிகளும் பூதங்களும் நெருங்கிக் கூடியிருக்கிற கூட்டத்தினடுவே தன் பிள்ளையைப் போய்க் கண்டாள். எ-று. (கக)

கண்டனள் கதறி வீழ்ந்தாள் கழுகெலா மிரியல் போகக்
கொண்டதோர் மகவி னுசை யாவியைக் கொள்ளை கொள்ள
முண்டகக் கரத்தா லேந்தி முருகனை மடிமேல் வைத்தே
அண்டரு மறுகி யேங்க வாய்திறந் தரற்ற லுற்றாள்.

இ-ள். அப்படிக் கண்டவுடனே, அங்குள்ள கழுகு முதலியன வெல்லாம் பயந்தோடிப் போக ஓவென்று கதறிக்கொண்டு கீழேவிழுந்தாள். தான் கொண்டதான ஒருபுத்திர னென்கிற வாஞ்சை அவளுயிரைக் கொள்ளை கொண்டு போவதாகத் தனது தாமரை மலர்போன்ற கைகளிலே பிள்ளையையெடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு தேவர்களு மயங்கிப் பிரலாபிக்கும்படி வாயைத்திறந்து அழவாயினள். எ-று. (உ0)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பணியான னைந்து வெயிலாலு லர்ந்து பசியால லைந்து மூலவா
அனியாய வெங்க ணரவாவி றந்த வதிபாவ மென்கொ லறியேஞ
தனியோகி டந்து விடநோய்செ றிந்து தனைமீது ருண்ட மகனே
இனியாரை நம்பி யுயிர்வாழ்வ மென்ற னிறையோனும் யானு மவமே.

இ-ள். (மகனே!) பனியினலே உன்னுடம்பு நனைதலாகியும், பின்பு வெயிலினலே காய்தலாகியும், பசியினலே வருந்துதலாகியும் நீ சாவாமல்

(யாரையுங் கடிப்பதான) அநியாயச் செய்கையை யுடைய வெவ்விய கண்களோடுகூடின ஒரு பாம்பினாலே நீ யிறந்து போகலான அதிபாவம் யாது செய்தாயோ நான் தெரிகிலேன். இங்கே நீ ஒருவனாகக் கிடந்து விடமாகிய வியாதி பிடித்து மண்மேற் புரண்டு கிடக்கிற புத்திரனே! இனி யாரைவேண்டி உயிர்வாழக் கடவோம்! எனது தலைவனும் நானும் உயிர் வாழ்தல் வீணானகாரியமே. எ-று. (௨௧)

நிறையோசை பெற்ற பறையோசை யற்று நிரையாய் நிறைந்த கழு
சிறையோசை யுற்ற செடியூடி றக்க விதியாரி ழைத்த செயலோ[கின்
மறையோனி றக்க வளநாட னைத்தும் வழுவாத ளித்த வடிவேல்
இறையோன ளித்த மகனேயு னக்கு மிதுவோவி தித்த விதியே.

இ-ள். நிறைந்த ஒலியைக்கொண்ட வாத்தியங்களின் முழக்கங்களில்லாமல் வரிசையாய் நிறைந்திருக்கிற கழுகுகளினுடைய சிறகடித்துக் கொள்ளுகிற சத்தத்தினைக்கொண்ட செடிகளுக்குள்ளே நீ யிறந்துபோகப் பிரமதேவரானவர் செய்த செய்கைதானோ? ஒரு பிராமணன் யாசிக்க தனது வளப்பங் கொண்ட நாடு முழுதுங் கொடுத்த கூரிய வேலாயுதத்தை யுடைய அரசன் பெற்றபுத்திரனே! உனக்குக்கூட இப்படி தானோ விதமான விதிவாய்த்தது.

வானின்றி ழிந்து சொரிகின்ற தாரை மழைபோல வீழ விழிநீர்
ஊணின்றி மேனி யுதிரங்கள் சிந்த வுயிரின்றி வெம்பு தழலின்
மேனின்று வெந்த தளிர்போ லுயங்கி விதியாரை நொந்து தனியே
யானின்றி ரங்க வேனென்ப தில்லை யிதுவோவு னீதி மகனே.

இ-ள். எனது புத்திரனே! ஆகாயத்திலிருந் திறங்கிப் பொழிகின்ற மழைத் தாரையைப்போற் கண்ணீ ரொழுகவும், என்னுடம்பிலே மாமிசமென்பதில்லாமல் இரத்தங்களொழுகவும், பிராணபலமுமில்லாமல் வெப்பமாகிய நெருப்பின் மேலே விழுந்து வெந்த துளிரைப்போல வாடிப் பிரமதேவனை நொந்துகொள்ளுகிறதாய் நான் ஒருத்தியாக நின்று பிரலாபிக்க ஏன்பிரலாபிக்கிறா யென்பதில்லாமல் நீ கிடக்கிறதான இதுதானோ உனக்கு நியாயமாக முடிந்தது. எ-று. (௨௩)

செங்கோனெ றியின்மு றைபோசெ லுத்து திரலோனெ வர்க்
கு முரவோன், வெங்கோப யானை விறன்மன்ன னம்மை விடுவிக்க
வெண்ணி வருநாள், பங்கேரு கத்து மலர்போல்வி ளங்கு வதனம
கிழ்ந்த பரிவால், எங்கேயெ னாசை மகனென்று ரைக்கி லினியேது
சொல்வன் மகனே.

இ-ள். தாமரை மலர்போலு முகத்தை யுடைய மகனே! தருமமார்க்கப் படியே செங்கோல் செலுத்துகின்ற சாமர்த்தியனாகியும் எப்படிப் பட்டவர்களுக்கும் அறிவாற் சிறந்தவனாகியும் வெவ்விய கோபத்தைக் கொண்ட யானையை யுடைய வெற்றியான்மிக்க நமதரசன் நம்மிருவரையும் (தான் வாங்கின பொருளைக் கொடுத்து) மீட்டுக் கொள்ள வரும்போது தான் மீட்கவந்த சந்

தோஷத்தினாலே என்னுடைய பிரியமுள்ள புத்திரனையேயென் றென்னைக்கேட்டால் அப்போது யான் மறுமொழி யாதுசொல்லக்கடவேன்! எ-று.

நீராள வாவி செறிநாட னைத்து நிறைமாத வற்கு தவினும்
பாராளு நீர்மை தொடர்பற்ற நன்று படியாளு மெந்தை முடியில்
காராள ரேர்கள் கடவோரை போய்வில் கன்னோசி நாட தனைமேல்
ஆராள வல்ல ரவரோவ னந்தி லரவாலி றந்த மகனே.

இ-ள். ஐயோ வீணாக இந்தக்காட்டிலே ஒரு பாம்பினாலே யிறந்துபோன குமாரா: நீர் நிரம்பக் குளங்கள் நெருங்கின கோசலநாடு முழுதும் நிறைவான பெரிய தவமுனிவனுக்குக் கொடுத்துவிட்டாலும், உலகத்தை ஆளுவதான சம்பந்தத்தன்மை உனக்கில்லாமற் போனதல்ல, உன்பிதாவைப்போலவே ஒருநாட்டை யாளுகிற என்பிதா காலமுடிவு பெற்றால், வேளாளர்கள் ஏர்களை வோட்டுகிற திசைதோயாதிருந்துள்ள கன்னோசி நாட்டைப் பின்பு நீ யல்லது இனியார் ஆள்வார்கள். எ-று. (உரு)

நல்லோர்வ குத்த முறையாம றங்க ளொட்டி லொன்று குறையே
இல்லோரை யற்ப மிகழ்மோமி றங்கு மிறையன்றி யேற வுகவேம்[ம்
சொல்லோ மறுத்து முறையோமு றத்த துறவோர்கள் புத்தி கட
வல்லோர் தமக்கு மினிதேவி னோப்ப மேதாக வந்த திதுவே. [வேம்

இ-ள். நன்னூலுணர்ந்த பெரியோர்கள் சொன்ன தருமங்கள் முப்பத்திரண்டிலே, ஒருதருமமாயினுங் குறையாது செய்தோம். எளியவர்களைக்கொஞ்சமேனு மிகழ்ச்சிசெய்திலோம். (நாங்களரச பாகையால்) கொடுத்துத்தீர்ப்பதான பகுதிப் பொருளான ஆறிலொரு பங்கையல்லது அதிகமாக விரும்பினோமல்லோம், பொய்சொல்லியறியோம், கேட்டவர்களுக்கு இல்லையென்று மறுத்துச் சொல்லிலோம், துறவறத்தார்கள் சொன்னபுத்தியைக் கடந்துசென்றிலோம், யாவருக்கும் நன்மையையே செய்துவந்தோம். இப்படிக்கிருக்கச்செய்தே எந்தக்காரணத்திலே யெங்கள்பிள்ளை இப்படிப் பாம்புகடித்துச் சாகலாயின. எ-று. (உசா)

மறைநீதி யுற்ற புறநாட ழித்து வருசேனை யாள்வ தறியேம்
அறைநீதி முற்று முணராவ மைச்சை யணிவாயில் வைத்து மறியேம்
குறையே யிழைத்து வினைபோ வினைத்த குடிவைத் திருந்து மறியேம்
இறைபோத வத்தின் விளைவேயெ மக்கு மிதுவோவி தித்த விதியே.

இ-ள். வேத நீதிப்படியே நடக்கிற அந்நியர் நாட்டைக் கெடுத்து அங்கிருந்துவந்து கூடுவனவான சேனைகளை ஆளுஞ்செய்கையைத் தெரிந்தோமல்லோம், பெரியோர்கள் சொன்ன நீதி முழுதுந் தெரியாத மந்திரியை யெங்களழகிதான அரண்மனை வாயிலிலே வைத்தாளவுந் தெரிந்திலோம், குறைவானவைகளையே செய்து பாவச் செய்கைகளையே மேன்மேலும் வளர்க்கிற குடிகளை எங்கள் நாட்டிலே குடிவைக்கவுந் தெரிந்திலோம், (இப்படிக் கிருக்கச்செய்தே) எங்களுக்கும் ஓ தெய்வமே! எங்கள் தவப்பயனே! நீங்கள் அமைத்த அமைப்பு இப்படி பாம்புகடித்திறப்பதோ சொல்வீர்கள். எ-று. (உஎ)

கனமுந்த ருக்கள் குலமுந்த ரித்த கரமும்பெ ருத்த வுரமும்
தினமுஞ்சி றக்கு முகமுந்த ரிந்த சிகையுங்கி டக்கு முறைகண்
டினமுந்த ரித்த துயிரான பாவி யிறவாம லென்றன் மகனே
மனமுந்த ரிப்ப திலைநொந்து பெற்ற வயிறுந்த ரிப்ப திலையே.

இ-ள். (கைம்மாறு வேண்டாது கொடுக்கிற) மேகசெய்கையையும் கற்பகமுதலான தெய்வவிருட்சங்களினுடைய செய்கையையும் கொண்டகையும், பெரிதான சாமர்த்தியமும், எப்போதும் சிறந்துள்ள முகமும், தலையிலே கொண்ட குடுமியும், மண்மேலிடச்சிற வகைகளைக்கண்டும் இன்னமும் என் துன்பத்தை இனியென்மனமும் தாங்குகிறதாயில்லை. வருந்திப் பெற்ற என் வயிறுந் தாங்குகிறதாயில்லை. எ-று. (௨௮)

பரவாதி கட்கு மிகவேவி ளைந்த படிபோ லுளத்தி லறமே
விரவாத துட்ட முனிகௌசி கற்கு வினையேயி ழைத்த குறைபோ
கரவேபி டித்து வறியேனி ளைந்த கலைமானை செற்ற கடுவாய் [ல்
அரவேயு னக்கு முனமேது பாவ மெதுநா னிழைத்த வினையே.

இ-ள். ஒரு சமயவாதிகள் மற்றொரு சமயவாதிகளுக்கு மிகவும் இடர் செய்கிறதுபோல், எங்கள் விஷயமாக மனது சிந்தையிலே கருமகுணங்களையெவ்வளவுங்கொள்ளாதகொடுஞ் செய்கையையுடைய கௌசிக முனிவருக்கு நாங்கள் பண்ணின குறையைப்போல, எளியவளான நான்பெற்ற இளமானை போன்ற புத்திரனையிரை மறைந்திருந்துவந்து போக்கின விஷவாயையுடைய பாம்பே! இப்படி விரோதஞ்செய்வதான உனக்கும் பிறரால் நோயோவென் றிரங்கத்தக்க நான்செய்த குறையுண்டோ? எ-று. (௨௯)

என்னுய கன்றன் மணிமார்பி லேறி விளையாடு கின்ற வெழிலோய்
முன்னாய்வி ளைந்த கனன்மூழ்க வெமரின் முதலேந டந்த மதலாய்
செந்நாய்தி ரண்டு செறிகானி ருந்து தெளியாதி ரங்கு மெனைநீ
அன்னாய்வ ருந்த லையெனாது ஞன்று னறிவுக்க டாது மகனே.

இ-ள். எனது நாயகனுடனே அழகினான மார்பிலேறி விளையாடத்தக்க செல்வக்குமாரா! முன்னே மூண்ட நெருப்பிலே எங்களுக்கு முன்னேபோய் விழப்போன குழந்தாய்! செந்நாய்கள்கூடி நெருங்கின இந்தக்காட்டிலே யிருந்து மனந்தெளியாமலழுகின்ற எனைப்பார்த்து தாயே வருந்தி யழாதே யென்று சொல்லாமற் கிடக்கிறது உன்புத்திக்குத் தக்கதல்லவே ஓ புத்திரா.

மறவாளை யிற்று மணிமாசு ணத்தின் வலியாலி றந்து ளவெனே
டிறவாதி ருக்கு மதிபாவி தன்னொ டுறவேவெ தெனக்க ருதியோ
திறவாய் சிவத்த கனிவாயு ரைத்தல செய்திவாய் முகத்து விழியா [ய்
பிறவாத நித்த னடியேய ழுத்து பெருமான ளித்த மகனே.

இ-ள். பிறத்தலில்லாத கடவுள் திருவடிகளையே துதிக்கின்ற பெருமையையுடைய அரசன்பெற்ற குமரா! கோபத்தையுடைய வாள்போலும் பற்க

ளைக்கொண்டதாய் இரத்தினத்தையுந் தலையிலே கொள்வதான ஒரு பாம்பினது விஷபலத்தினாலே இறந்துகிடக்கிற என்னுடனே கூடச் சாவாதிருக்கிற அதிக பாவியானவளுடனே உறவு கொள்ளுகிறதினாலே என்ன பிரயோசனமென்று நினைத்தோ உமது சிவந்த கனிபோன்றவாயா லொரு சொற் சொல்லாதிருக்கிறாய். என்முகத்திலும் விழியாதிருக்கிறாய். எ-று. (௩௧)

வடியேறு வெற்றி நெடுவேன்ம லர்க்கை மகனோடி றந்து மடியாக்
கொடியேன்மு கத்தில் விழியார்மு னிக்கு வளநாட ளித்த கொடை
இடியேறடர்த்தமரமாகி மண்ணி னிடையேயு ழைத்த லழகோ[யார்
அடியேனையொக்க முடியா திருத்த லனியாய மிக்க யமனே.

இ-ள். கூர்மையேறின வெற்றிகொண்ட நீண்டவேலைப் பிடிக்கிற மலர்போலுங் கையையுடைய மகனுடனேகூடச் செத்துப்போகாதிருக்கிற பாவியான என்முகத்திலே இனி விழிக்கமாட்டார். (அவரியாரென்றால்,) ஒரு முனிவருக்குத் தனது வளநாடு முழுதுங்கொடுத்த பிரபுவானவர். இடியேற்றினாலே பட்டுப்போன மரம்போலாகி மண்ணிலேகிடந்து நான் வருந்துதலை இயமனே! உனக்கு அழகாயிருக்கின்றதோ? என்னையுங்கூட நீ கொல்லாதிருக்கிறது மிகவும் அநியாயம். எ-று. (௩௨)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எனமறுகி யிவனுடனா மிறந்தே மாகி
லிவனை யெடுத் தெரித்தடக்க வொருவ ரில்லை
மனமுருகா னம்மைவிலை கொண்டோன் சால
வன்கண்ணன் மனைவியவன் றனின்மா பாவி
சினமுடையார் விடியுமுதற் செல்லே னாகிற்
செறுவரிவன் றனைக்கருகிச் செல்வ னென்று
தனதுதிரு மகனையெடுத் தணிதோள் வைத்துத்
தவ்வாயு மதிதயனார் தனயை மீண்டாள்.

இ-ள். என்று பிரலாபித்து இந்த மகனுடனேகூட நானும் செத்தேனேயானால் இந்தப்பிள்ளையை யெடுத்துக்கொண்டுபோய் தகனஞ்செய்து அடக்கஞ்செய்யத்தக்கவர்க ளொருவருமில்லை. நம்மை விலைக்குவாங்கினவன் இது கண்டு மனமிரங்கான். மிகவும் பொல்லாதவன். அவன் பெண்டாட்டியோ அவனிலும்பெரும்பாவி. அவ்விருவரும் மிகவும்கோபமுள்ளவர்கள். விடிவதற்குமுன்னே நான் அங்குப் போகாதிருந்தால். அதிக தண்டனை செய்வார்கள். ஆகையால், இந்தப்பிள்ளையை விரைவிலேபோய்த் தகனஞ் செய்வித்துப் பின்பு போகக்கடவேனென்று தனது புத்திரனையெடுத்து அழகான தோளின்மேலே சாய்த்துக்கொண்டு (திருக்குமாரனைத் தூக்கமாட்டாமல் தடுமாறித்) தளர்ந்தவளாகச் சந்திரதயராஜனுடைய குமாரியான சந்திரவதியானவள் மயானநோக்கிச் சென்றாள். எ-று. (௩௩

காடுமே டுஞ்செறிந்த செந்நாய் முன்னே
கௌவியிழுத் திடப்பறந்து கழுகு மோதப்
போடுபோ டெனப்பலபேய் தொடரக் கொண்டு
போகேனீ யெனக்கொடிய பூதஞ் சூழ
மாடுதோ றும்பறிக்க நரிக டாவ
வார்குழலுஞ் சோர்துகிலும் வனந்தொட் டீர்க்க
ஈடுபா டித்தனையும் பட்டு நீண்முள்
ளிடுகாடு நீந்திநெடுஞ் சுடுகா டுற்றாள்.

இ-ள். காட்டிலும் மேட்டிலுந் திரண்டிருக்கின்ற செந்நாய்களுக்கு முன்னே வாயாற்குத்தி யிழுப்பதற்காகப் பறந்துவந்து கழுகுகள்மோதவும், கீழே போட்டுவிடு, போட்டுவிடென்று பலவிதமான பசாசுகள் தொடரவும், நீ கொண்டு போகாதேயென்று கொடுமையான பூதங்கள்சூழவும், பக்கங்களெல்லாம்வந்து பிள்ளையைப் பிடுங்கிக்கொண்டு போகுதற்கு நரிகள் தாண்டி விழவும், நீண்ட கூந்தலையும், அவிழ்ந்து தொங்குகிற வஸ்திரத்தையும் காட்டிலுள்ள முள்ளுகளு மாறுகளும் சிக்கியிழுக்கவும் இப்படித் தடைபடுகிற இவ்வளவும்பட்டு நீண்டமுட்கள் தைப்பதான காடுமுழுதுங்கடந்து நெடிதான சுடுகாட்டைப்போய்ச் சேர்ந்தாள். எ-று. (௩௪)

பிணங்கள்சுடுங் கடும்புலைய ரரவத்தாலும்
பிளந்துதலை வெடித்திடுபே ரமலை யாலும்
நிணங்கருகிச் சுறுநாறு முடையி னாலும்
நெடுங்கனலின் கொழுந்தெழுந்த நிவப்பி னாலும்
கணல்கள்மிகக் களித்தாடுந் துழனி யாலும்
கனற்பொறியின் மலிவாலும் புகையி னாலும்
சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பி னாலும்
தோகையறிந் துணர்ந்துகொடுஞ் சுடலை சார்ந்தாள்.

இ-ள். அங்கே பிணங்களைச் சுடுகிற கடுமையான பறையர்களுடைய சத்தத்தினாலும், அந்தப் பிணங்களின் தலைகள் பிளந்து வெடிக்கிற பெரியதான சத்தத்தினாலும், பிணங்களினுடைய கொழுப்புகள் கருகிச் சுறுசுறு வென்று நாறுகிற புலால்நாற்றத்தினாலும், நீண்டநெருப்பின் சொழுந்து கிளருகிற உயர்ச்சியினாலும், பூதமுதலான கூட்டங்கள் மிகவுஞ்சந்தோஷித்துக் கூத்தாடுகிற சத்தத்தினாலும், நெருப்புப்பொரிகளின் மிகுதியினாலும், புகையினாலும் பலநாய்கள் ஒன்றோடொன்று விரோதித்துக் கொள்ளுகிற பெரியசத்தத்தினாலும் சந்திரவதி சுடுகாடென்று தெரிந்து நிதானித்து அந்தக் கொடிதான சுடுகாட்டைப்போய் நெருங்கினாள். எ-று. (௩௫)

கண்டனளீ திமமெனக் கருத்தி லுன்னிக்
கடவுளர்தங் காவலிற்றன் மகனை வைத்துப்
பண்டுவெந்து கரிந்தகுறைக் கட்டை யெல்லாம்
பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெ டுத்துக்

கொண்டுவந்து பிணங்கள்சுடுஞ் சுடலை நண்ணிக்
கொள்ளியெடுத் தோடியனல் கூட்டி மூட்டி
மண்டுதமற் கட்டையின்மேன் மகனை வைத்தாள்
வளர்ந்தெரியுங் கனல்விளக்க மன்னன் கண்டான்.

இ-ள். அப்படி நெருங்கப் போய்க் கண்டாள். இதுதான் சுடுகாடென்று மனதிலேயெண்ணி அங்கே தெய்வங்களினுடைய காவலுக்குள்ளாகத் தன்பிள்ளையை வைத்துவிட்டு, முன்னமெவந்து தீய்ந்து கிடக்கிறகுறைக்கொள்ளிக் கட்டைகளையெல்லாம் பல திக்குகளிலும் அதி சீக்கிரத்தி லோடியோடிப் பார்த்தெடுத்துக்கொண்டுவந்து, பின்புபிணங்களைச்சுடுகிறசுடலையினிடத்திலே போய் அந்தச் சுடலையில் ஒரு கொள்ளிக் கட்டையை யெடுத்துக் கொண்டோடிவந்து நெருப்பைச் சேர்த்து மூளப்பண்ணி அப்படிப் பற்றியெரிவதான நெருப்புக் கட்டையின் மேலே மகனை வைத்தாள். அப்போது மூண்டெரிகிற நெருப்பு வெளிச்சத்தினாலே அதை அரிச்சந்திரனாகிய அரசன் பார்த்தான். எ-று. (௩௬)

அரவுகடித் தரசிளங்கோ விறந்தா னென்ப
தறியாமல் வெகுண்டிறைவ னாரே யிந்த
இரவுதனிற் பிணஞ்சுடுவா ரறிவோ மென்று
வெழுந்திருந்து விரைந்தோடி யேடி மூடி
தரவுரிய பொருளெனக்குத் தாரா தேநீ
தனியேயிப் பனியிருளிற் சுவங்கொ ணர்ந்து
கரவினமுற் சுடுவதுனக் கடைவோ வென்றுக்
கால்வீசிக் காம்முளையை யெடுத்தெ றிந்தான்.

இ-ள். பாம்பு கடித்துத் தனதரசுக்குரிய இளங்குமாரன் மடிந்துபோனானென்பதைத் தெரியாமல் அரசனானவன் கோபங்கொண்டு இந்த இராத்திரியிலேவந்து பிணஞ்சுடுகிறவர்கள்யார்? அவர்களை இன்னாரென்று தெரிவோமென்று எழுந்திருந்து அதிசீக்கிரமாக விரைந்து ஓடிவந்து என்னடி மூடத்தன்மையானவளே! நீ தருதற்குரிய பொருளை எனக்கு முன்னே கொடுக்காமல் நீ ஒருத்தியாகவந்து இந்தப் பனிக்கம்முதலையுடைய இராத்திரியிலே ஒரு பிணத்தைக் கொண்டுவைத்து எங்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக நெருப்பைமூட்டிச் சுடுகிறது உனக்குத்தக்கதோவென்று தன்பிள்ளையைக் காலாலேதூக்கித் தூரத்தே யெறிந்தான். எ-று. (௩௭)

எறிந்திடலு முயிரேங்க வேங்கி வேனி
லிடிவிழுந்தாற் போமிசையே யடிசாய்ந் தாடி
முறிந்துவிழு மரம்போற்சென் றடிமேல் வீழ்ந்து
மொழிகுழறி விழிபருவி சொரிய வல்லி
அறிந்துமில னின்னுரில் வழங்குநீதி
யருவினையே னுருமிலி யறவும் பாவி
மறிந்தமகன் றனைச்சுடநான் வந்தே னையா
வறியேற்குப் பொருளுளவோ வழங்க வென்றாள்.

இ-ள். அப்படி எரிந்தவுடனே சந்திரமதியானவள் உயிர் சோர்வதாக அழுது, கோடையிடிவிழுந்து, அதனாலே பூமியிலே அடிவேரற்று அசைதலாகி முறிந்துவிழுகிறமரத்தைப்போற்போய் அவன்காலமேல்விழுந்துவார்த்தைகள் குழறுதலாய் கண்களிலே அருவிபோல் நீரொழுக ஐயா! இந்தவூரிலே வழங்குவதான நியாயக்கிரமத்தை எவ்வளவும் நான் தெரிந்தே னல்லேன். தீராத பாவஞ்செய்துள்ள நானோ ஆருமற்றவள். மிகவும் பாவி இறந்துபோன என் பிள்ளையைச் சுடுதற்கு நானொருத்தியாகவே வந்தேன். ஆதலால், ஐயனே! எளியவளான உமக்குக் கொடுக்க என்னிடத்திலே எப்படிப் பொருளுண்டாயிருக்கும். என்றுசொன்னாள். எ-று. (௩௮)

பொருளுடையே னறமுடையே னானா லிந்தப்
புத்திரனைத் தோண்மீது வைத்துப் போந்தி
விருளிடையிற் சுடலையில்வந் தெய்து வேனோ
வெரிந்தகுறைக் கட்டையினி லேற்று வேனோ
தெருளுடையா யறமுடையாய் வினையே னீன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்வாய் தேயா
அருளுடையா யாதார மற்றோர்க் குன்ற
னடியிணையே தஞ்சமென வலறி வீழ்ந்தாள்

இ-ள். பொருளுள்ளவளாய் அறவினையையுமுடையவளானால், நான் இந்தப்பிள்ளையை என்தோளின் மேலே சார்த்தித் தூக்கிக் கொண்டுவந்து இந்த இருட்டிலே சுடுகாடு வந்துசேருவேனோ! இன்னமும் எரிந்து தவிந்து கிடக்கிற குறைக் கொள்ளிக்கட்டைகளை அடுக்கி அதன்மேல் பிள்ளையை வைப்பேனோ! இதெல்லாந் தெளிந்து கொண்டவரே! தருமந் தெரியாதவரே! பாவியான நான் பெற்ற பிள்ளையைத் தகனஞ்செய்வதாக நீர்கிருபை செய்ய வேணும், குறையாத இரக்க முள்ளவரே! யாதொரு ஆதாரமுமில்லாத எனக்கு உம்முடைய பாதங்களிரண்டுமே ஆதாரமென்று சொல்லி அரசன்கால்மேலே அலறிக்கொண்டு போய்விழுந்தாள். எ-று. (௩௯)

பொன்னனையாய் விடுவிடுயான் புலைய னென்னிற்
புலையனுமல் லேன்புலையற் கடிமை கண்டாய்
என்னடி நீ தீண்டுவது தகா நீதா
னிப்பொருட்கி யானுரிய னலேனென் னையாள்வோன்
சொன்னபணங் காலுண்டு கொள்ளி யாடைத்
துண்டமுமொன் றுண்டுதந்து சுடுதி யன்பால்
அன்னவன்றன் படியாக வெனக்குத் தந்த
வாய்க்கரிசி நானளிப்பே னறிதி யென்றான்

இ-ள். (அப்படி விழுந்து காலைப்பிடிக்கிறதைக் கண்டு) ஓ இலட்சுமிக் கொப்பானவளே! என் காலை விட்டு விடு; நான் சுடுகாட்டுக்குச் சொந்தமான பறையன் என்று கொள்வாயானால், அந்த எஜமானனான பறையன் நானல்லேன்; நானோ அந்தப் பறையனுக் கடிமையானவன்; நீ என் காலைத் தொடுகிற துனக்குத் தகாது, இந்தப் பொருளுக்கு நான் சொந்தக் காரனல்லேன்;

என்னை அடிமையாகக் கொண்டவன் சொல்லி யிருக்கிற காற்பண முண்டு கொள்ளித்துண்டு வஸ்திர மொன்றரைண்டு; ஆக இவ்விரண்டையு நீ கொடுத்து விட்டுப் பிரியத்துடனே சுட்டுக்கொள்; அந்த எஜமானுகிய பறையன் எனக் கிப்படிச் செலவாகக் கொடுத்த வாய்க்கரிசியை (வேணுமானு லுனக்குப் பிரி யத்துடனே) நான் கொடுக்கிறேன். (இந்தப்படிதான் இவ்வூர்ச்சுடுகாட்டிலே நடக்கிற வழக்கம்) தெரிந்துக்கொள்ளென் றரசன் சொன்னுன். எ-று. (௬0)

துஞ்சியமைந் தனையெடுத்துச் சுமந்து போந்து
சுடுவாரற் றிடுகாட்டிற் றேன்மே லேற்றிப்
பஞ்சிபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணமேது கொள்ளிமுறிப் பாதி யேது
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டு
நீயிரங்கா யெனவிரந்து நிற்குங் காலை
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மறித்துஞ் சொல்வான்.

இ-ள். இறந்து போன புத்திரனைத் தூக்கிச் சுமந்து கொண்டு வந்து சுடுகிறவர்களில்லாமல் சுடுகாடு வரையிலும் தோள்மேலே தாங்கிப் பஞ்சுபடு கிற பாடெல்லாம் பட்டு இன்னமும் அப்படியே படுவதான பாவியான என் னிடத்தில் எப்படிப் பணமுண்டாகும்! கொள்ளி வஸ்திரத்துண்டு எப்படிக் கிடைப்ப தாகும்; மனந்தளர்ந்து தீர்வதில்லாத பாவியான நான் வருத்தப் படுகிறதைக் கண்டு நீரே தயவுசெய்ய வேணுமென்று நல்ல வார்த்தை சொல் லிக்கொண்டு நிற்கிறபோது அந்தச் சந்திரவதியினுடைய அழகிதான திருக் கழுத்திலே விளங்குகின்ற திருமங்கிலிய சூஸ்திரத்தைக் கண்டு அரசன் பின் னுஞ் சொல்லுகிறுன். எ-று. (௬௧)

நல்லைநல்லை யறச்சமர்த்தி நீயே கண்டே
னன்னுதலா லனைவரினு மிந்த்ர ஜாலம்
வல்லைவல்லை விறகுகளுங் களவே செம்பொன்
மங்கலநா ணுன்கழுத்தி லிருக்க வேதும்
இல்லையெனச் சொல்லுவது சற்று மேலா
திதனையெனக் கீவாயென் றியம்ப வேடர்
பல்லமுயிர் நிலைவாயிற்பட்ட மான்போற்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்.

இ-ள். நீ நல்லவளே; நல்லவளே; மிகவுஞ் சமர்த்துள்ளவள் நீயே நான் பார்த்தேன்! நல்ல நெற்றியை யுடைய பெண்கள் எல்லாரிலும் இந்திரசால வித்தையில் வல்லவளா யிருக்கிறுயென்று (புகழ்வதுபோ லிகழ்ந்து) நீ அடுக் கின விறகுகள்கூட திருடியே கொண்டு வந்திருக்கிறுய். சிவந்த பொன்னுற் செய்த திருமங்கிலியம் கயிற்றுடனே உன்கழுத்தி லிருக்கச் செய்தே ஒன்று மில்லை யென்று சொல்லுகிறது சிறிதும் பொருந்தாது இந்தத் தாலியை எனக்குக் கொடுக்கவேண்டிய பொருளாகக் கொடுவென்று சொல்லவே. வே டர்களுடைய அம்புகள் மிக்க குறிச்சி வாசலிலே அகப்பட்ட மானைப்போல துடிதுடித்துச் சந்திரவதியானவள் பதறி விழுந்தாள். எ-று. (௬௨)

கலி விருத்தம்.

வாடி னாளுடர்ந் தாண்மலர் மாமுகம்
கோடி னாள்குலைந் தாளலந் தாள்கொடுங்
கோடி நாள்வந்த தென்றாகி லேசமெய்
மூடி னாணெடு மூச்செறிந் தாளரோ

இ-ள். உடம்பெல்லாம் வாடினாள்; தளர்ச்சி யாயினாள்; தாமரை மலர் போலும் பெருமை பொருந்திய தனது முகம் கோணுதலானாள்; பயந்தாள்; வருந்தினாள், கொடிதான கெடுதலிப்போது வந்து சேர்ந்த தென்று துன்பத்தையேஉடம்பு நிரம்பமூடுதலானாள்; பெருமூச்சம் விட்டாள். எ-று. (௬௩)

அலைவி லாவரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்குந் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோவென
உலையின் மீது மெழுகொத் துருகினாள்

இ-ள். எக்காலத்தும் வருந்துதல் கொள்ளாத அரிச்சந்திர மகாராசனுக் கேயல்லாமல் வருந்துதலையுடைய எல்லாருக்கும் காணப்படாத எனது திருமங்கிலியமானது ஒருபறையன் காணவு மாயிற்றேயென்று சொல்லனுலையின் மேலிட்ட மெழுகையொப்பா யுருகினாள். எ-று. (௬௪)

இருள றுங்குணத் தெந்தைக்கு நல்வரம்
அருளுங் காலத் தரவேணி யான்
திருவு ளஞ்செய்த திவ்விய மென்மொழிப்
பொருளு மித்தலம் புக்கபின் பொய்த்ததோ

இ-ள். அஞ்ஞான நீங்கின குணத்தையுடைய எனது தந்தைக்கு நல்லவரத்தைக்கொடுக்கிற காலத்திலே, பாம்பை யணிந்த சடையையுடைய கடவுள் திருவுளங் கொண்டருளின திவ்வியமான இரகசிய வார்த்தையிலுள்ள அர்த்தமும் இந்தவூருக்கு நான்வந்தபின்பு பொய்யாய்ப் போயிற்றோ? எ-று. (௬௫)

பனிம திச்சடைப் பாவைபங் காளனார்
இனிய வாசக மின்றொடு தீர்ந்ததால்
புனித னாரினும் பூவளந் தோனினும்
முனிவ னோமுதி யோனென வேங்கினாள்

இ-ள். குளிர்ந்த சந்திரனைச் சடையிலேகொண்ட பார்வதி சமேதரான கடவுள்சொன்ன நல்லவார்த்தையானது இன்றோடே முடிதலாயிற்று; ஆகையால் அந்த பரிசுத்தரான சிவனிலும் உலகமெல்லா மளந்த விஷ்ணுவினும் விசுவாமித்திர முனிவனோ சிறந்தவரானானென் றழுதாள். எ-று. (௬௬)

அற்புக் காழிய னாரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொற்புப் போம்பொறை போநிறை போமென்றன்
கற்புப் போவதென னென்று கலங்கினாள்.

இ-ள். இரக்கத்துக்குக கடல்போன்றவராகிய அரிச்சந்திர மகாராசன் விற்க, அதனாலே போன மேன்மையுள்ள குலத்துடனே என் அழகுதான் போகும்; எனது பொறுமையும் போகும்; எனதுயர்வும் போகும்; இவையெல்லாம் போனாலும் என்னுடைய பதிவிரதாசீலே போவதற்குக் காரணமென்னவென்று மனங் கலங்கினாள். எ-று. (சஎ)

அனைய காலை யரிச்சந் திரனுந்தன்
மனைவி யாமிவ ளென்று மனங்கொளாத
தனையன் மாண்டது தன்னையுட் கொண்டுள
நினைவை நீக்கி மறப்பையு நீங்கினான்

இ-ள். அந்த வேளையில் அரிச்சந்திர மகாராசனும் இவள் நமது மனைவியே யாமென்று மனத்திலேகொண்டு தன்புத்திர னிறந்துபோனதையு மனத்துள்ளேகொண்டு தனதுள்ளத்துள்ளே நினைவு போய்ப் பின்பு அந்த நினைவு தப்பினதையுந் தேற்றிக்கொண்டான். எ-று. (சஅ)

கள்ள வேகத் தரவு கடிக்கநம்
வள்ள லோவிறந் தானென்று மன்னவன்
உள்ளே நொந்து யிர்த் துயிர்த் துப்புறம்
விள்ள லானுரை விம்மி மயங்கினான்

இ-ள். திருட்டுத் தனத்தால்வந்த வேகத்தையுடைய பாம்புகடிக்க நமது புத்திரனை பிரபுவோ செத்தானென்று தெரிந்து அரசனானவன் மனம் வருந்திப் பெருமூச்சு விட்டுவிட்டு வெளியே ஒருவார்த்தையுஞ்சொல்லாதவனாகித் துக்கித்து மயக்கத்தைக் கொண்டான். எ-று. (சகூ)

அன்னை யின்றி யருங்கானி லெய்திய
உன்னை யோடி யுரங்க டித்தலின்
மின்னையும் முனையும் விற்ற வெவ்வினை
என்னை யெவ்வா றொந்தனை யேந்தலே.

இ-ள். ஓ புத்திரா! உனதுதாய் உன்கூடவராமல் அரிதான காட்டுக்குள்ளே போன உன்னை ஓடிவந்து பாம்புகடித்ததனாலே அப்போது உன் தாயையும்உன்னையும் ஒருவருக்கு விலையாகவிற்ற என்னை எவ்விதமாக எண்ணிநொந்துகாண்டாய். எ-று. (ருo)

நந்த நாடு நலமு மிழந்துநீ
எந்த மோடுவந் திவ்வணம் பட்டனை
மைந்தனே யென்றனாற் பெற்ற வாழ்வுனக்
கிந்த வாழ்வள வோவென் றிரங்கினான்.

இ-ள். ஓ மகனே! நம்முடைய நாட்டையும் நம்முடைய சுகத்தையும் விட்டு நீயும் எங்களுடனே கூடவந்து இவ்விதமானாய்; என்னாலே நீ பெற்ற சுகம் உனக்கு இந்த சுகத்தளவுதானோவென் றழுதான். எ-று. (ருக)

ஒன்றி லாத வுயிரினை யோம்பியே
பொன்றி லாது புலையனுக் காட்பட்டான்
வென்றி வேந்தினி மீட்கத் தருவனோ
என்றி றந்தனை யோவென் றியம்பினான்.

இ-ள். நிலைபேறில்லாத உயிரை வளர்த்துக் கொண்டு சாவமாட்டாமல் ஒரு பறையனுக் கடிமையானான்; அப்படி அடிமையான ஐயத்தையுடைய அரசன் இனி நம்மைமீட்டுக்கொள்ள மாட்டுவானோ மாட்டானென் றெண்ணித் தானோ நீ இறந்துபோனாயென்று சொன்னான். எ-று. (ருஉ)

விற்ற நாளிலென் மேனி தழீஇயப்
பற்றி யந்தண னீர்த்ததும் பார்த்திருந்
திற்றை நாண்மட் டிரங்காத வென்வயின்
உற்ற பாவ மொழித்தனை யோவென்றான்.

இ-ள். நான் விலைக்கு விற்றபோது என்னுடம்பை அணைத்துக் கொண்டிருந்த வுன்னைப்பற்றி அந்தப்பிராமண னிழுத்துக் கொண்டு போனதையும் பார்த்துக்கொண்டிருந்தும், இன்றையத்தினம் வரையிலும் உன்னிடத்திலிரக்கமில்லாதிருந்த என்னிடத்திலே நீ பிறந்தபாவத்தை இன்று தீர்த்துக் கொண்டாயோ வென்றான். எ-று. (ருந)

விலைப்பட் டாய்ப்பட்டும் வெவ்வர வாய்ப்பட்டு
தொலைப்பட் டாயன்னை தோளிற் கொணர்ந்திடத்
தலைப்பட் டாய்தமியே னெறியத் தகர்ந்
தலைபட் டாயிது வோவிதி யையனே.

இ-ள். நீயோ விலையானாய்; அப்படி விலையாகியும் ஒருவெவ்விதான பாம்பின்வாய்க்குள்ளா யிறந்தாய்; பின்பு உனது தாயானவள் சார்த்திக் கொண்டுவர அவள் தோளுக்குள்ளானாய்; இப்போது நான் தூக்கி யெறிய அதனாலே சிதைதலாய் அலைச்சற் பட்டாய், என் அப்பனே! உனக்கிப்படியா விதியிருந்தது? எ-று. (ருச)

காத லானுனைக் காணாத தாயையும்
ஈதெ லாம்விளைத் தெற்றிய வென்னையும்
மீதெ லாமர வின்விட மேயநாள்
ஏதெ லாமுரைத் தாயுரை யேந்தலே.

இ-ள். அன்பினாலே உன்னைக் கூடவேவந்து கண்டுகொள்ளாத உன்மாதாவையும், இதெல்லாஞ்செய்து இப்போதெடுத்தெறிந்த என்னையும் உன்னுடம்பெல்லாம் பாம்பின்விட மேறுகிறபோது புத்திரா! (நீ அப்போது) என்னென்ன சொற்களெல்லாஞ் சொன்னாய்! அவற்றை இப்போது சொல்வாயாக. எ-று. (ருரு)

பிறப்பு ணர்ந்தவன் றேபிறி தின்றியுன்
இறப்பு ணர்ந்தன மென்னிது மெம்முனோர்

சிறப்புஞ் செல்வமுஞ் சேர்தலிற் றீர்ந்தவா
றறப்பெ ரும்பிழை யென்றென் றழுங்கினான்.

இ-ள். உன்சன்ம மிப்படிப் பட்டதென்று தெரிந்த அப்போதே வேறு பாடில்லாமல் உனது சாவுந்தெரிந்தோ மாகிறோம். எங்களுக்கு முன்னோர்கள் பெற்றிருந்த சிறப்புஞ் செல்வமும் சேர்ந்திருப்பதி னின்றும் நீ நீங்கினபடி மிகவும் பெரிதான பாவம் பாவமென்று வருந்தினான். எ-று. (௫௬)

வாளின் மிக்கவய மன்னர் வந்துநின்
றாளில் வீழ்ந்தழ லின்றிநின் றாய்திருத்
தோளி லேற்றிச் சுடலையி லேவரா
வேளின் மிக்கவ வெவ்வினை யோவென்றான்

இ-ள். வாள் வலியாலுயர்ந்த வெற்றிகொண்ட அரசர்கள்வந்து உன்காலிலேவிழுந் தழுகிறதில்லாமல் உன்தாயானவள் தன் திருத்தோளின் மேலேற்றிக்கொண்டு சுடுகாட்டுக்குவா மன்மதனிலும் அழகாற் சிறந்த குமாரா! எந்த வெவ்விதான பாவஞ் செய்தாயோவென் றழுதான். எ-று. (௫௭)

இன்ன வாறுரைத் தேங்கிட வேந்திழை
தன்ன கத்தி னுணர்ச்சி தழைத்திட
மன்ன னேயிவ னென்று மதித்தவன்
பொன்ன டித்துணை பூண்டழு தோதுவாள்.

இ-ள். இந்தப்படிசொல்லி அரசனழும்போது சந்திரவதியானவள் தன் மனத்திலே தெளிவு தோன்ற நமதரசனே இவரென்று துணிந்து அவ்வரசனுடைய அழகிய பாதங்க ளிரண்டையும் பிடித்துக் கொண் டழுது சொல்லுகிறாள். எ-று. (௫௮)

கொதித்தெ ழுந்து படர்குடி கொண்டுளங்
கதித்த துன்பநிற் கண்டன னுத்தம
விதித்த தல்லது வேறொன்று காதென
மதித்தி ருநுதல் வல்லிவி ளம்பினாள்.

இ-ள். பொங்குதலாய்த் துன்பமே குடிகொண்டு உமது மனத்திலே அதிகமான படியை உம்மிடத்திலே நான் கண்டேன். ஓ புருஷோத்தமரே! யார்க்கானாலும் இலபித்தபடியேயல்லாமல் வேறே ஒன்றும் வாராதென்று பாதிச்சந்திரன்போலும் திருநெற்றியையுடைய சந்திரவதிசொன்னாள். எ-று.

தீமை செய்தது னக்குஞ் சிறுவற்கும்
வாய்மை தானது மண்ணு லுக்கும் விண்ணு லுக்கும்
தூய்மை யேயினி யென்று துணித்தனன்
நீம யங்கல றத்தை நினையென்றாள்.

இ-ள். பாவங்களைச் செய்திருந்தது உமக்கும் பிள்ளைக்கும் மெய்யானதே; அந்தப் பாவம் இந்த மண்ணுலகத்துக்கும் விண்ணுலகத்துக்கும் இனி நன்மையாகவே முடியுமென்று நான் துணிவுகொண்டேன், நீர் இனி

மயங்கவேண்டாம், உமது சுதர்மத்தை யெண்ணிக் கொள்ளு மென்று சொன்னாள். எ-று. (சுO)

தோகை கேள்புலை யற்குத் தொழும்பனான்
ஆகை யான்மற் றவன்பணி நீந்தவன்
ஈகை யானிழந் தாற்றவ றெய்திடும்
போகை நன்று பொருடரு தற்கென்றான்.

இ-ள். பெண்ணே! கேட்பாயாக; இந்தச்சுடுகாட்டுக்குரிய பறையனுக்கு நான் அடிமையாதலாலே அவன் உத்தரவைக்கடந்து அவன் பொருளை நான் வாங்காமல் விட்டால் நீதிக்கு வழுவுதலாகும். நீ பொருள் கொடுப்பதற்காக இவ்விடம் விட்டுப்போகிறதே நல்லகாரியமென்று சொன்னான். எ-று. (சுக)

உன்னை யாளு மறையவற் குற்றிது
சொன்ன காலந் தரினந்தத் தூசொடு
பொன்னை வாங்கிய விந்துமின் புத்திரன்
றன்னை நீசுடத் தக்கது னக்கென்றான்.

இ-ள். உன்னை அடிமையாகக் கொண்டாளுகிற பிராமண னிடத்திற்குப் போய் இந்தப்பொருள் கொடுக்கவேண்டியபடியை நீ சொன்னபோது, அந்தப்பிராமணன் கொடுத்தால் அந்தக் கொள்ளி வஸ்திரத்துடனே பணமும் வாங்கிவந்து கொடுத்து உன்புத்திரனை தகனஞ்செய்துக் கொள்ளத்தகுமுனக் கென்று பின்னுஞ் சொன்னான். எ-று. (சுஉ)

அரக்கெ னச்சிவப் புற்றவ ழற்கணான்
இரக்க மற்பமு மில்லவ னிப்பொருள்
தரக்க ருத்திலன் றந்திடிற் காண்பனென்
றுரைத்து வல்லி மகனை வைத்தோடினாள்.

இ-ள். அரக்கைப்போற் சிவப்புப் பொருந்திய நெருப்புக் கண்களையுடையவன்; கொஞ்சமேனு மிரக்கமில்லாதவன்; இந்தப்பணங் கொடுக்கச சம்மதியான்; ஒருவேளை தருவானோ எப்படியோ கண்டறிகிறேனென்று சந்திரவதியானவள் மகனை அங்குவைத்து விட்டோடினாள். எ-று. (சுங)

மேற்படி வேறு.

மங்கைகடி தேகிடலு மைந்தன் முகநோக்கி
அங்கைதொட நாணிமன மஞ்சியய னின்றோன்
கங்கைவள நாடனிரு கண்கலுழி சிந்த
வெங்கைய னுகர்ந்தவிள வின்கனியை யொத்தான்.

இ-ள். அப்படிச் சந்திரவதி விரைந்தோடும்போது மகன்முகத்தைப் பார்த்து தனதழகிய கையாலே தொடுதற்குக்கூசி மனத்திலே பயங்கொண்டு பக்கத்திலே நின்று கொண்டு கங்கைவள நாட்டையுடைய அரசன் தனதிரண்டு கண்களிலும் கான்யாறுபோல் நீரொழுக வெவ்விதான யானையுண்ட விளாங் கனியை யொப்பாயினான். எ-று. (சுச)

மன்னவன் வருந்தியுற மாமயிலே யன்னாள்
துன்னவரி தாயசுடு காடது கடந்தே
என்னவினை யின்னம்வரு மென்பது கருத்தாய்
மின்னுமணி நீள்புரிசை வீதியிடை புக்காள்.

இ-ள். அப்படி அரசன் வருந்திக் கொண்டிருக்க, பெரிய மயிலை யொப்பான சந்திரவதியானவள் நெருங்குதற் கரிதான சுடுகாட்டைக் கடந்துபோய் இன்னம் என்ன பாவச் செய்கைகள் வரக்கூடுமோ வென்று கருத்துள்ளவளாகி மின்னுகின்ற இரத்தினங்கள் பதித்துள்ள மதில்சூழ்ந்த வீதிக்குள்ளே போயினாள். எ-று. (கூரு)

கிள்ளைமொழி யம்மடிகு கிட்டுவதன் முன்னே
வள்ளையொலி மாடநிறை காசிநகர் மன்னன்
பிள்ளையை யெடுத்தயல் பெயர்ந்துயிர் செகுத்தே
கள்ளர்சிலர் நல்லணி கவர்ந்துகொடு போனார்.

இ-ள். கிளிபோலும் வசனத்தை யுடைய சந்திரவதி போகுதற்கு முன்னே மங்கலவள்ளை ஒலிப்பதான காசிப்பட்டணத்துக்கு அரசனானவனுடைய பிள்ளையை யெடுத்துக்கொண்டு தூரத்தே வந்து அந்தப்பிள்ளை யுயிரை வதை செய்து சில கள்ளர்களால் அப்பிள்ளை மேலுள்ள நல்ல ஆபரணங்களை யெல்லாந் திருடிக்கொண்டு போயினார்கள். எ-று. (கூகூ)

அம்மதலை யைத்தெரு வகத்தினிடை காணா
இம்மதலை யார்மதலை யென்னவல மந்தாள்
எம்மதலை யைக்கண மெறிந்ததுகொ லென்னாத்
தம்மதலை மெய்க்குறி தனைத்தெரித லுற்றாள்.

இ-ள். இவ்வாறுசெல்கிற சந்திரவதியானவள் அந்த அரசன் பிள்ளையை அவ்வீதியிலே கண்டு இந்தப் பிள்ளை யாருடைய பிள்ளை யென்று துக்கித்தவளாய் எங்கள் பிள்ளையை அங்குள்ள பூதகணங்கள் கொண்டு வந்து இங்கே போட்டு விட்டனவோவென்று தங்கள் பிள்ளையினுடம்பிலுள்ள அடையாளங்களைப் பார்க்கலாயினாள். எ-று. (கூஎ)

விடிந்திடு முனந்நகரி காவலர் விரைந்தே
இடிந்தமதி லேறியு மிழிந்துமறு குற்று
மடிந்தகுழ விக்கருகு கண்டுமட மாதைக்
கடிந்தனர் கொணர்ந்துயிர் கவர்ந்ததிவ ளென்றே.

இ-ள். அப்போது விடிகிறதற்கு முன்னே, அந்தப் பட்டணத்தைக் காக்கிறதலையாரிகள் அதிக விரைவிலே வந்து கள்ளராலே யிடிந்துபோன மதில்வழியேயேறிவந்தும் பின்பிறங்கியும் பின்பு வீதியிலே வந்து செத்துக்கிடக்கிற பிள்ளைக்குச் சமீபமாக வந்துகண்டு (அங்கு நின்று யாதுந் தெரியாமல் மயங்குகிற) சந்திரவதியை, இந்தப்பிள்ளையைக் கொண்டுவந்து இதனுயிரை வதைத்தவ ளிவள்தானென்று அடித்தார்கள். எ-று. (கூஅ)

பதைத்திடு சினத்தொடு பசுங்குழவி தன்னை
வதைத்தவ ளாமெனமலர்க்குழல் பிடித்தே
விதைத்தலின் விழுந்தன விழிக்கனன் றெறிக்க
உதைத்தன ரடித்தன ரொடித்தனர்க ளெவ்வை

இ-ள். அப்படித் துடிதுடிப்பாகிற கோபத்துடனே அந்தப் பச்சிளம் பிள்ளையைக்கொன்றது இவள்தானென்று அவளுடைய பூவையணிகிற கூந்தலைப் பிடித்துக் கொண்டு விதைக்கிறபோது சிந்துகிற விதைகளைப்போல் கண்களிலே நெருப்புப் பொறிகள் சிந்த வைதார்கள், அடித்தார்கள்; அவளெலும்பையு மொடித்தார்கள். எ-று (௬௯)

சென்றவர்கள் சென்றவர்கள் சேரவட ரக்கண்
டன்றவர்க ளிற்சிலர் விலக்கியர் பையப்போம்
என்றுதல மேதுகுல மேதுசிறு சேயைக்
கொன்றபரி சேதரிவை கூறென வுரைத்தார்

இ-ள். வீதியிலே பார்த்துக் கொண்டு பேசுகிறவர்களும், பார்க்கவருகிறவர்களும் கூடவருத்தப் படுகிறதைக்கண்டு அப்போது அவர்களிலே சிலர்சிலரை விலக்கி, நீங்கள் தூரப்போங்களென்று சொல்லிச் சந்திரவதியைப் பார்த்து உன்னூரேது? உன் குலமியாது! இந்தச் சிறுபிள்ளையைக் கொன்றதென்ன காரணம்? பெண்ணே! நீ உள்ளது சொல்லென்று கேட்டார்கள் எ-று (௭௦)

தேவருணர் மகக்கிலை செகுத்திலெனெ னிறருன
ஆவதிலை நம்மொழியை யாருறுதி சொல்வார்
நோவதிலு நம்மகவி னோதகவி னுலும்
சாவதினி தென்பது மனத்திடை தரித்தாள்

இ-ள். நான் கொன்றிலேனென்று சொன்னாலும், தெய்வ கடாக்ஷம் இப்போது நமக்கில்லாதிருக்கிறது ஆகையால், நாம் சொல்லுகிற மெய்வார்த்தையை யார்தான் நம்புகிறவர்கள்? இப்போதிவர்களாலே வருத்தப்படுகிறதிலும் நமது புத்திர னிறந்துபோன துன்பத்தை யனுபவிக்கிறதைக் காட்டிலும் இனி இறந்துபோகிறதே நல்லதென்று தன் மனத்திலே திடப்படுத்திக்கொண்டாள். எ-று (௭௧)

மெய்யுரைசெ யிற்பொயென மேவியது வீணாம்
ஐயமிதி னில்லையத னாற்புரையி லாத
பொய்யுரையு மெய்யொடு பொருந்துமென நாடித்
தையலவ ரோடிது தனைப்பகர லுற்றாள்

இ-ள். மெய்வார்த்தையை நாம்சொன்னோமானால், அது பொய்யென்று தோற்றி, அந்தமெய் பயனில்லாது போம் இதிலெவ்வளவுஞ் சந்தேகமில்லை. அதனாலேகுற்றமில்லாத பொய்வார்த்தை மெய்யுடனே சேர்வதாகுமென்றாலோசித்துச் சந்திரவதியானவள் தன்னைவினவின அவர்களுடனே இந்த வார்த்தையைச் சொல்லத்துணிந்தாள். எ-று. (௭௨)

ஒன்றினிது கேண்மினுல கத்தினி லிரக்கத்
தன்றியுயிர் கொன்றுழ லரக்கியறி யீரோ
இன்றுயிரி ழந்தமக வென்கையி லிருக்கக்
கொன்றதிலை யென்னவல னோகொடிய ளென்றாள்.

இ-ள். நான் ஒருவார்த்தை சொல்லுகிறேன், எல்லோரும் நன்றாய்க்கேளுங்கள். நான் பூவுலகில் இரக்கமென்பதில்லாதவளாய் உயிர்களைக் கொன்றுதிரிகிற இராட்சசியென்பதை நீங்கள் தெரிந்துக்கொண்டிருக்கிறீர்களோ! இப்போ துயிர்போனபிள்ளை என்கையின்மே லிருக்கச்செய்தே நான்கொன்றிலேனென்று சொல்லமாட்டுவேனோ? நானோ கொடுந்தொழிற் செய்கிறவளென்றுசொன்னாள். எ-று. (௭௩)

ஆயின்விடன் மின்னென வடித்தணி கயிற்றால்
சாயுமிரு கைத்துணை பிணித்தவி சவத்தை
வேயும்விழை தோளின்மிசை யேற்றிவிறன் மன்னன்
வாயிறனை நாடிமயி லைக்கொடு நடந்தார்.

இ-ள். அப்படியானால், இவளை விட்டு விடாதீகளென்று அடித்து அழகிதான கயிற்றினாலே நீண்டு தொங்குகின்ற இரண்டு கைகளையுங்கட்டிச்செத்தபிணத்தை மூங்கிலும் வேண்டுவதான தோளின் மேலேற்றி வெற்றி கொண்டகாசிராஜனுடைய அரண்மனை வாசலைத்தேடிச சந்திரவதியையிழுத்துக் கொண்டு போனார்கள். எ-று (௭௪)

கைகொடுசெ வத்தினிரு கால்களை யணைத்து
மெய்கொடுசு மந்தடி விதிர்ப்புற மிதித்துப்
பெய்கொடுநி ணங்குருதி பின்னுமுனு மொய்க்க
மொய்குழல்வ ணங்கிடை முறிந்திட நடந்தாள்.

இ-ள். தனது கையிலே கொண்டு பிணத்தினுடைய இரண்டு கால்களையும் அணைத்துத் தனதுடம்பினாலே சுமந்து கொண்டு கால்களு நசுங்கமிதித்தூன்றிஒழுகுகின்ற கொடுமையான நிணமும் இரத்தமும் பின்புறத்திலு முன்புறத்திலும் வழிந்தொழுகும் படியாய் நெருங்கின கூந்தலையுடைய சந்திரவதி தனதிடை ஒடிவதாக அந்தத் தலையாரிகள் பின்னே சென்றாள். எ-று. (௭௫)

குறித்ததிசி னத்தொடு கொதித்தவர டிக்கத்
தெறித்தகுரு தித்துளி திசைத்திசையின் மொய்க்கப்
பிறித்திருக யிற்றிடை பிடித்துவர நாய்மேல்
வெறித்தடர மானென வெருண்டுமு னடந்தாள்.

இ-ள். அவள் கொன்றதைக் கருதி அதிக கோபத்துடனே பொங்குதலாகி அந்தத் தலையாரிகள் அடிக்கிறதினாலே தெரிக்கிற இரத்த பிந்துக்கள் எந்த இடங்களிலு நிரம்புதலாகப், பிரிவு செய்து இருபக்கத்திலுங் கட்டின கயிற்றைப் பற்றிக்கொண்டு வரும்போது, நாய்கள் வெறிகொண்டு சீறிமேலே விழ, அஞ்சுகிற மானைப்போற் பயந்து நடந்தாள். எ-று. (௭௬)

வேலைநகர் காவலரும் வேதமுனி வர்க்கன்
ஆலைவயல் சூழ்பதி யளித்தமட மாதும்
காலைமுர சங்குளிறு வாயில்கள் கடந்தே
மாலைமுடி மன்னவ னுறை மண்டப மணைந்தார்.

இ-ள். கடல்போற் சிறந்த அந்தப் பட்டணத்தைக் காக்கிற தலையாரிகளும், ஒரு வேதப்பிராமணனுக்கு கரும்பாலைகளும் வயல்களுஞ் சூழ்வதான தமதூரைக்கொடுத்த யௌவனமுள்ள சந்திரமதியும் விடியற்காலத்து முரசு சத்திப்பதான கோட்டை வாயில்களெல்லாங் கடந்துபோய் மாலை யணிந்த கிரீடாதிபதியான அரசனிருக்கிற சபாமண்டபத்துக்குள்ளே போனார்கள்.

அத்தலை மணைந்தவ ருளங்கொடிய மன்னனைக்
கைத்தலை மெடுத்திரு கழற்றொழுது நின்றார்
மெய்த்தவ முயன்றவனி வேயனைய தோண்மேல்
வைத்தபிண முங்கொடு மடக்கொடியு நின்றாள்.

இ-ள். அந்தச் சபாமண்டபத்தினருகே போனவளவிலே அப்பொல்லாத தலையாரிகள் அரசனை நோக்கி, இரண்டு கைகளையுங் கொண்டு அவனிரண்டு கால்களையும் வணங்கி நின்றார்கள். மெய்யான தவங்களை வேண்டிச் செய்வதான அழகிய மூங்கிலையொத்த தோளின்மேலே வைத்து பிள்ளைப் பிணத்தையுந் தாங்கிக்கொண்டு சந்திரமதியு நின்றாள். எ-று. (எஅ)

நின்றளவின் மன்னவனு நிகழ்ந்ததுமை பொன்கோல்
என்றதிச யித்திதோ திறந்தென வுமைக்க
மன்றல்கமழ் கோதைபிணம் வைத்தவனி லத்தில்
கொன்றபரி செந்தநெறி கூறுமெனு மென்றான்.

இ-ள். அப்படி நின்றபோது, அரசனானவன் இவளாலே உண்டான குற்றம் யாதென்றதிசயித்து இந்தப்பிணத்தை யிறக்கிவையென்று சொல்லவே மணம் பரிமளிக்கின்ற கூந்தலை யுடைய சந்திரமதி பிணத்தைக் கீழே யிறக்கி வைத்தாள். வைத்த பின்பு, காசிராஜன் இவளிந்தப் பிள்ளையைக் கொன்றதெவ்விதம் சொல்லுங்களென்று கேட்டான். எ-று. (எகூ)

என்றிறையு ரைத்திட விறைஞ்சியவர் மன்னா
இன்றிரவு நின்மகனை வந்திவ ளெடுத்து
மன்றணி நெடுந்தெருவில் வைத்துடல் பிளந்து
கொன்றபடி கண்டுகொடு வந்தனமு மென்றார்.

இ-ள். என்று காசிராஜன் கேட்டபோது. அந்தத்தலையாரிகள் வணங்கி அரசனே! இன்றிராத்திரி உம்முடைய பிள்ளையை இந்த இராக்ஷசியெடுத்துக்கொண்டுபோய் நிரம்பின அலங்காரத்தை யுடைய இராஜவீதியில் வைத்து உடம்பைப் பிளந்து கொன்ற படியைக் கண்டு பிடித்துக் கொண்டு உமக்கு முன்னே வந்தோமென்று சொன்னார்கள். எ-று. (அ0)

அந்தமொழி சொன்னவரை யங்கையி னமைத்து
வந்தபடி யாவுமிவண் வல்லியுரை யென்னச்

சந்திரம தித்தெரிவை தன்னடியை நோக்கிச்
செந்துவர்ம லர்க்குமுத லாய்வலர் திறந்தாள்.

இ-ள். அந்த வார்த்தை சொன்ன தலையாரிகளைத் தன்கையாலே அடங்கச்சொல்லி ஓ அம்மே! நீ வந்தகாரிய மெல்லாம் இவ்விடத்திலே சொல்லென்றுகேட்க, சந்திரவதியானவள் தன்பாதத்தைப் பார்த்துக்கொண்டு சிவந்த பவளம் போலவுங் குமுதமலர்போலவும் உள்ள தன் வாயைத் திறந்து சொல்லானாள். எ-று. (அக)

செய்யமக வின்னுயிர் செகுத்தபடி கண்டாய்
கையினிலெ டுத்ததொர் சவத்தையெதிர் கண்டாய்
மெய்யிடைபு லால்வெறி விரிந்தமுடை கண்டாய்
ஐயமிலை யானுமொ ராக்கியறி யென்றாள்.

இ-ள். ஓ அரசனே! இந்தச் செவ்விதான பிள்ளையி னுயிரைக் கொன்றபடியையும் நீரேகண்டீர். என் கையி லெடுத்துக்கொண்டு வந்ததான ஒருபிணத்தையும் உமக்கு முன்னே கண்டீர். என்னுடம்பிலே புலால்நாற்றம் விரிந்திருக்கிறபடியையுங்கண்டீர். இனிச் சந்தேகிக்கத் தக்கதில்லை. நானும் இராக்ஷசிகளிலொருத்தியென்று தெரிந்துகொள்ளுமென்று சொன்னாள். எ-று. (அஉ)

என்றுநர வன்றசைக ளுண்டுட லெடுத்தேன்
வென்றிவடி வேலிறைவ நின்னகரின் மேவி
இன்றிரவி னின்மக விளந்தசை விரும்பித்
தின்றிடநி னைத்துயிர் செகுத்ததுள தென்றாள்.

இ-ள். எப்போதும் நான் மனிதருடைய வலிய மாமிசங்களையே சாப்பிட்டு என் சரீரத்தை வளர்த்தேன்; வெற்றி பொருந்தின கூரியவேலையுடைய அரசனே! இன்று உம்முடைய ஊர்க்குள்ளே வந்து இராத்திரியிலே உமது பிள்ளையி னிளமையான மாமிசத்தைத்தின்ன ஆசைகொண்டு இந்தப் பிள்ளையினுயிரைக் கொன்றேன். இதுவே மெய்யானதென்று பின்னுஞ் சொன்னாள். எ-று. (அங)

மடக்கொடி யுரைக்கவிது மன்னவ னுரைப்பான்
அடக்கமு மொடுக்கமு மரக்கியல ளென்னும்
இடர்ப்பல விவட்கிவ ரிழைத்தமை நமக்குச்
சுடச்சுட வுரைக்குமிவள் சொன்னமொழி யென்றான்.

இ-ள். இவ்வாறு சந்திரவதி சொல்லக் கேட்டு அரசன் சொல்லுகிறான், இந்த அம்மையினுடைய மன அடக்கமும் கைகால்களினொடுக்கமும் இராட்சசியல்லவென்று சொல்லுகின்றன. இந்தப் பெண்ணணங்குக்குப் பலரும்பல துன்பங்கள் செய்தவைகளுண்டு. அவைகளெல்லா நமக்குத் தெரிவதாகச்சுடச்சுடசொல்லுகின்றது, இந்த அம்மைசொன்ன வார்த்தை யென்றான். எ-று.

உயிர்க்கொலை புரிந்தவர் முகக்குறி யுரைக்கும்
கையிற்குறி யுரைக்குமிரு கட்குறி யுரைக்கும்
குயிற்குரன் மடந்தையிவள் கொன்றகுறி யுண்டென்
றயிர்ப்பிலை யெனக்கென வமைச்சரொடு ரைத்தான்.

இ-ள். சீவவதை செய்தவர்கள் முகக்குறியே (அதைசெய்ததைத்) தெரியச்சொல்லும், இன்னும் வதை செய்தவர்க ளுடைய கையிலுள்ள குறியுஞ் சொல்லும், இரண்டுகண்களிலுள்ள குறியுஞ்சொல்லும். குயில் போலுந்தொனியையுடைய பெண்ணாகிய இந்த அம்மைகொன்ற குறியுண்டென்று எனக்குச்சந்தேகித்தற் கிடமில்லையென்று மந்திரிகளுடனே பின்னுஞ் சொன்னான்.

வள்ளலிவை கூறிடலும் வந்தவர்கண் மன்னா
பிள்ளையை யெடுத்தவடி யின்பிறகு சென்று
கள்ளியிவள் கொறன்படி கண்டுகொடு வந்தோம்
உள்ளதல தில்லதை யுரைக்கவிதி யுண்டோ.

இ-ள். அப்படி அரசனானவன் சொல்லும் போது, அவளைக்கொண்டு வந்தவர்கள் அரசனே! பிள்ளையை யெடுத்துக் கொண்டு வந்த காற்சுவட்டின் பின்னே போய் திருடியான இவள் கொன்ற படியையுங் கண்டு இவளைப் பற்றிக் கொண்டுவந்தோம். இது உள்ளபடியே அல்லாமலில்லாததைச் சொல்ல நியாயமுண்டோ! எ-று. (௬௬)

உன்னுரை தனக்கொரெதி ருத்தரமு முண்டோ
என்னுரை செயத்தகுவ தெம்பெரும வென்றே
மன்னுரை கடற்புவி வளாகமிசை வாழும்
இன்னுயி ரிறக்குமிவ டன்னைவிடி லென்றார்.

இ-ள். உம்முடைய சொல்லுக்கு மறுமொழியுங்கூட நாங்கள் சொல்லத் தக்கதுண்டோ? எமதரசனே! இனிச்சொல்லத்தகாது யாதிருக்கின்றதென்றுபின்னும், நிலைபெற்ற இவளை விட்டு விடில், நுரைகள் பொருந்தின கடல் சூழ்ந்த பூமண்டலத்திலே வாழுகின்ற இனிய உயிர்களெல்லாம் அழிந்துபோகும் என்றுஞ் சொன்னார்கள். எ-று. (௬௭)

அன்னவை யுரைத்தவரை மன்னவ னமைத்தே
என்னைபல பேசுவதி லேழையடி தானோ
பின்னையடி சென்றதுள தோபிறிதெ னக்கண்
டிந்நொடியில் வந்திடு மெனச்சிலரை விட்டான்.

இ-ள். அவ்வார்த்தைகள் சொன்ன தலையாரிகளை அரசன் அமரச் சொல்லி இனிப்பலவுஞ் சொன்னதினாலே பயனொன்றுமில்லை. (பிள்ளையைக்கொண்டுபோன வழியில்) இந்தப் பெண்காலல்கள் சென்றிருக் கின்றனவோ; பின்னும் வேற்றோர்கால்கள் சென்றன வுண்டோ வென்று தெரிந்து, இந்தக்கணப் போதிலே வாருங்களென்று சிலரை அனுப்பினான். எ-று.

பிறிது பின்னையடி சென்றதுளதோ வெனக் கூட்டுக. (௬௮)

போற்றடி பணிந்தவர்கள் போய்மறுகி னூடே
காற்றடி சிதைக்குமுனர் கண்டிடுது மென்றே
மாற்றடியி லாற்றரிய வல்லியடி வைப்பின்
வேற்றடிகள் பார்த்தவர் விரைந்துநெறி சென்றார்.

இ-ள். எல்லாரும் வணங்கத்தக்க அரசனடியை வணங்கிக்கொண்டு அந்தச்சிலர்கள் வீதிவழியே சென்று காற்றினாலே காற்சுவடு கலையுமுன்னே தெரிவோமென்று, தலையாரிகளுடைய மாறுலடித்த அடிபட்டுத் தாங்கமாட்டாதிருக்கின்ற சந்திரவதியினுடைய கால்கள் சென்ற நிலத்திலே வேறான சிலகாற்சுவடுண்டோவென்று அவர்கள் பார்த்துக்கொண்டு, விரைவிலே சந்திரவதி வந்தவழியைக் குறித்துப்போனார்கள். எ-று. (அகூ)

அங்கவர்கள் வந்திடுமு னத்தெரு வகத்துக்
கங்கருகு கன்னல்விளை கன்னபுரி மன்னன்
மங்கையடி யேயெழுதி மற்றையடி யெல்லாம்
அங்கைகொடு நீவிமுனி கௌசிக னழித்தான்.

இ-ள். அங்கே அந்தச்சிலர்கள் வருவதற்கு முன்னே அந்தத் தெருவிலே தினைப் புனத்தருகே கரும்புகள் விளைவதான கன்னோசி நாட்டரசன் பெற்ற சந்திரவதி கால்களையே விசுவாமித்திர முனிவர் பதியச்செய்து, மற்றைக்காற் சுவடுகளை யெல்லாந் தமதழகிய கையாலே தடவிக் கலைத்து அழித்து விட்டார். எ-று. (கூ0)

எந்தவடி வந்ததென வெண்ணியவ ணண்ணி
அந்தவடி யின்சுவ டமைப்பனை வருங்கண்
டிந்தவடி யேமுழுது மியாவர்களு மிங்கே
வந்தவடி யில்லையென மன்னனுழை வந்தார்.

இ-ள். எந்தக்கால்கள் இங்கே நடந்து வந்தவை யென்ன ஆலோசித்துக் கொண் டங்கேவந்து அந்தச் சந்திரவதியினுடைய கால்கள் அழுந்தி யிருக்கிற வடிகளை எல்லாருங்கண்டு, எல்லாம் இந்தப் பெண்ணடிச் சுவடுகளேயல்லாமல் ஒருவரு மிவ்விடத்தே நடந்துவந்த சுவடுக ளில்லையென்று சொல்ல அரசனிடத்திற்கு வந்தார்கள். எ-று. (கூக)

உற்றடிவ ணங்கியவி ருற்கலை யொதுக்கிச்
சுற்றடிகள் பற்பல தொடர்ந்துநனி சென்றேம்
அற்றடியி னிக்கொடிய கள்ளியடி யல்லால்
மற்றடிக ளில்லையென மன்னனொடு ரைத்தார்

இ-ள். அப்படிவந்து அரசன் கால்களை வணங்கி அந்தச்சிலர் தாமுடுத்தி யிருக்கிற முன்வஸ்திரத்தை ஒதுங்க அமைவதாகச் சூழ்ந்து கொண்டு பலபல காலடிகளை மிகவுந்தொடர்ந்து பிடித்துப் போயினோம். அவ்வகைக் காற்சுவடுகளில் இந்தத்திருடி காற்சுவடுகளே யல்லாமல் வேறு காற்சுவடுகளில்லையென்று அரசனுடனே சொன்னார்கள். எ-று. (கூஉ

வள்ளலும் வருந்திமிக மங்கைமுக நோக்கி
உள்ளதுரை செய்கென வுரைத்திட மறித்தும்
கள்ளியெனை யல்லதிலை யென்றகமு ரைக்கேட்
டள்ளல்வய லுட்டரச னுந்தகம் வியந்தான்.

இ-ள். அப்போது அந்த அரசனானவன் மிகவு நொந்து கொண்டு சந்திரவதி முகத்தைப்பார்த்து உள்ளதை நீ சொல்லக் கடவையென்று கூறப் பின்னும் என்னையல்லாமல் வேறே திருடியொருவருமில்லையென்று சந்திரவதி சொல்லக்கேட்டு, சேருள்ள வயல் சூழ்ந்த நாட்டையுடைய காசிராஜன் மனநொந்து அதிசயங்கொண்டான். எ-று. (கூங)

கொல்லவிவள் வல்லவளு மல்லள்கொலை செய்தாள்
அல்லளினி லங்கொருவர் வந்தவடி யில்லை
தொல்லைவினை யெவ்வகை தொடர்ந்ததறி தக்க
தில்லையென மைந்தனி லிவட்குருகி நின்றான்.

இ-ள். இந்த அம்மை கொல்லவல்லவளல்லள்; கொலைசெய்தவளிவளல்லவென்று கொள்வோமானால், அங்கே வேறேயொருவர் நடந்துசென்ற காற்சுவடுகளில்லை, பழையபாபசம்பந்தம் எவ்விதமாகவோ வந்து நேரிட்டிருக்கிறது, நம்மா லறியத்தக்கதா யில்லையென்று தன்பிள்ளைக் கிரங்குகிறதினு மதிகமாகச் சந்திரவதிக்கே மிகவு மனமுருகினான். எ-று. (கூச)

முன்னைவிதி யாலும்வினை முற்றுமத னாலும்
என்னையிவ ளன்னைவிட லென்பது நினைந்தே
கன்னல்சொறி காசிபதி கன்னபுரி மன்னன்
மின்னைவதை செய்வது விரும்பியொரு மித்தான்.

இ-ள். பூர்வகருமம் தான் முடியும் வகையே முடியும்; அதனாலே இந்தப் பெண்ணை எப்படி விட்டு விடுகிறதென்று நினைத்து கரும்புகள் விளைவதான காசிராஜன், கன்னேசி நாட்டரசன் மகளைக் கொலை செய்வதற்கு வேண்டி மனது சம்மதமானான். எ-று. (கூரு)

அவ்வண நினைந்திட லுமவ்வள வு தன்னில்
செவ்வண வயிற்குறசி தீவினைக ளெல்லாம்
இவ்வணம கன்றிடு மெனுங்குறி விளங்க
மெவ்வணவ யங்கிருண் மறைந்தது விடிந்தே.

இ-ள். அப்படி அவன் ஆலோசிக்கும்போது அந்தச் சமையத்திலே சிவந்த நிறத்தையுடைய வேலாயுதத்தைக் கொண்ட அரிச்சந்திரமகாராஜனுடைய பாபகருமங்களெல்லாம் இப்படியே கழிந்து போகு மென்னுங் குறிதோன்றமைபோலுவதாயிருக்கிற இருள் கழிந்து விடிதலாயிற்று. எ-று. (கூசு)

தங்குலம டந்தைபடு சஞ்சல முணர்ந்தே
மங்குலெழு வெண்சசி மழுங்கியொளி மாயக்
கங்குன்மக ளிந்தவிலை கண்டகல வோட
வெங்குலநெ டுங்கதிர் வெகுண்டன வெழுந்தான்.

இ-ள். தனது குலத்துப்பெண் படுகிற சஞ்சலங்க ளெல்லாந் தெளிந்து மேகத்திலே தோன்றுகிற வெள்ளிய சந்திரனென்பவன் ஒளிமழுங்கி மறையவும், அந்தராத்திரியான பெண் இந்தப் பாபகருமத்தைக்கண்டு தூரவோடிப் போகவும் வெப்பமான அரிச்சந்திரன் குலத்துச் சூரியன் கோபங் கொண்டதுபோ லுதயமாயினன். எ-று. (கூஎ)

காதலிபி டித்தநெறி கண்டெமது கற்பின்
போதமிது வென்றுபுரு டர்க்கெதிர் குலாவும்
மாதர்முக மென்னவய லுந்தடமு மற்றும்
ஆதபன்மு கத்தெதி ரலர்ந்தவர விந்தம்.

இ-ள். எல்லாரும் விரும்பத் தக்க (நன் மார்க்கத்தை யுடைய சந்திரவதி கொண்ட) கொள்கையைப் பார்த்து எங்களுடைய கற்பினுக்குள்ள ஞானமித்தன்மையதென்று புருஷர்களுக்குமுன்னே கொண்டாடத்தக்க பெண்கள் முகங்கள்போல வயல்களிலும் குளங்களிலும் மற்ற இடங்களிலும் சூரியோதயத்துக்குமுன்னே தாமரைமலர்கள் விகசிதமாயின. எ-று. (கூஅ)

கலிநிலைத்துறை.

விடிந்த காலையில் வேறொரு திறம்புரங் காணான்
மடிந்த மைந்தனை யெடுமென மனையிடைப் போக்கி
முடிந்த தீவினைப் பயத்தினு முதிர்வினை யானும்
கடிந்தி டும்படி கருதினன் காசியர் கோமான்.

இ-ள். அப்படி விடிந்தபோது வேறொரு வகையும் பிரசித்தமாகக் காணுதவனுகி இறந்த பிள்ளையைக் கொண்டு போங்களென்று தனது அரண்மனைக்குள்ளே போக விட்டு, அப்போது முடிவான கொலைப்பாவ பலத்தினாலும், மேன்மேலாக விசுவாமித்திரர் செய்கிற செய்கைகளினாலும் சந்திரவதியை வதைசெய்யும்படி காசிநகரத்தாருக்கரசன் ஆலோசித்தான். எ-று. (கூகூ)

சோரர் மற்றய லுண்டெனிற் சோதித்து வந்திந்
நேர மியாவரு முரைத்திலாவரவர் நினைவை
யார றிந்தவ ரிவடனை வதைப்பதற் கழைத்து
வீர வாகுவைக் கொணர்கெனத் தூதரை விடுத்தான.

இ-ள். கள்ளர்கள் வேறே இன்ன முண் டென்றால் பரிசோதனை செய்துவந்து இந்தச்சமையத்தில் ஒருவரும் வந்து சொல்லுகின்றிலர், ஆனாலும் அவ்வவர் நினைவை யாராலே அறிந்து கொள்ளலாகும்? ஆகையால் இந்தப் பெண்ணைக் கொலைசெய்வதற்கு வீரவாகுவைக் கூவிக் கூட்டி வாருங்க ளென்று தூதரை அனுப்பினன். எ-று. (௪00)

விரைவி னோடிச்சென் றவன்புலைச் சேரியின் மேவி
அரசர் கோனுனை யருளிப்பா டெனவுரைத் தழைக்கச்
சுரைகொள் வெள்ளைவாய் சிவந்தகட் கருநிறச் சுடர்வாட்
காத லத்தொடுங் கடிதுவந் தரசனைக் கண்டான்.

இ-ள். உடனே தூதர்கள் அதிசீக்கிரத்திலே ஓடிப்போய் அந்தவீரவாகு இருக்கிற பறைச்சேரிக்குள்ளே நுழைந்து, நமதிராஜாதி ராஜன் உன்னைவரும்படி உத்தரவு செய்தருள லாயிற் றென்று சொல்லிக் கூப்பிடச் செய்தே, சுரைவிதைபோல் வெள்ளைப் பற்களைக் கொண்ட வாயும் சிவந்த கண்களும் கறுத்தவுடம்பும் ஒளிபொருந்தின வாளாயுதத்தைக் கொண்ட கையுமாகவிரைவிலேவந்து அரசனைக் கண்டுகொண்டான். எ-று. (௧௦௧)

தூர நின்றுவாய் புதைத்துள மலைந்துடூ சொடுக்கிப்
பார மேனியைச் சுருக்கிவீழ்ந் தரசனைப் பணிந்திந்
நேர நாயினேன் றன்னையென் னினைந்தவா றென்றான்
வீர வாகுவை நோக்கியவ் வேந்தர்கோ னுரைப்பான்.

இ-ள். தூரத்தே நின்று கொண்டு வாயைமூடி மனநடுங்கி வஸ்திரத்தை ஒடுக்கிப் பெரிய வுடம்பை சுருக்க மாகக் கொண்டு கீழேவிழுந்து அரசனை வணங்கினபின்பு சுவாமி! இந்தவேளையிலே நாயேனை நினைத்தழைத்ததுயாது காரணமென்று கேட்டான். அப்படிக் கேட்ட வீரவாகுவைப் பார்த்து அந்த ராஜாதிராஜன் சொல்லுகிறான். எ-று. (௧௦௨)

துட்டி யாமிவள் குழவியைத் துணித்தன ளென்றுத்
திட்டி யாற்கண்டே மெனச்சில ரிவளைப் பிடித்துக்
கட்டி வந்தனர் கட்டொடுங் கொண்டுபோய்க் களத்தில்
வெட்டு வித்திடென் றீந்தனன் காசியர் வேந்தன்.

இ-ள். கெட்டசெய்கையை யுடையவளாகிய இந்தப் பெண் என் பிள்ளையை வதைசெய்தா ளென்று கண்ணுற் கண்டதாகச் சிலர் இவளைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தார்கள். ஆகையால் அந்தக் கட்டுடனே நீ கொலைசெய்யுமிடத்துக் கொண்டு போய் வெட்டி விடும்படி செய்யென்று அவன் வசத்திலொப்புவித்தான், காசிப்பட்டணத்தாருக்கரசனானவன். எ-று. (௧௦௩)

மின்னைக் கைக்கொண்டு கட்டினை யிருகுற விசித்து
மன்னைக் கைதொழு தேத்தித்தன் சேரியில் வந்து
பின்னைத் தன்வயின் விலைப்பட்ட வயோத்தியர் பெருமான்
றன்னைக் கூவியே யவன்கையிற் றையலைக் கொடுத்தான்.

இ-ள். சந்திரவதியைப் பிடித்து முன்கட்டினதைப் பின்னு மிருக்காமகக்கட்டி அரசனைக் கையாற் கும்பிட்டுகொண்டு துதித்துத் தனது பறைச்சேரிக்குள்ளே வந்து பின்பு தன்னிடமாக விலையா யிருக்கிற அயோத்தியாபுரிக்கரசனான அரிச்சந்திரனைக் கூப்பிட்டு அவன் வசமாகச் சந்திரவதியை வதைசெய்யும்படி ஒப்புவித்தான். எ-று. (௧௦௪)

பிள்ளை யைக்கொடு போயுடல் பிளந்துயிர் தொலைத்த
கள்ளி யைக்கொலைக்கயத் திடைக் கொண்டுபோய்க் கவந்தம்
துள்ளி யோடநீ வெட்டெனத் தோகையைக் கொடுத்து
வள்ளி யோன்கையிற் றன்கையில் வாளையுங் கொடுத்தான்.

இ-ள். இந்தவூரரசன் பிள்ளையைக் கொண்டுபோய் உடலைப்பிளந் துயிரைப் போக்கின திருடியை நீ கொலை செய்யு மிடத்துக்குக் கொண்டுபோய் இவளுடைய தலையில்லாதமுண்டம் பதைத்து ஓடிப்போம்படி தலையை வெட்டென்று சந்திரவதியை யொப்புவித்து இந்த மகாப் பிரபுவான அரிச்சந்திரனிடத்தில் வீரவாகு தன்கையிலிருக்கிற கத்தியையுங் கொடுத்தான். எ-று.

வாளை வாங்கித்தன் மாதையும் வாங்கினன் வந்தான்
பாளை யோதியை யறிந்தனன் பாவையு மறிந்தாள்
வேளை வென்றவற் கேற்றதோ வெனவிறை மெலிந்தாள்
காளை வாட்டமுங் கோட்டமுங் கன்னிகண் டுரைப்பாள்.

இ-ள். அப்படியே கத்தியையும் வாங்கிக் கொண்டு தன்மனைவியையும் கூட்டிக்கொண்டுவந்த அரிச்சந்திரமகாராஜன் கூந்தற்பாளைபோன்ற குழலினையுடைய அப்பெண்ணைத் தன்மனைவியாகிய சந்திரவதிதானென்றுதெரிந்தான். சந்திரவதியும் அந்தச் சுடுகாட்டிலிருந்த நாயகனே இப்போது தன்னை வெட்டவந்தவனென்றுதெரிந்தாள். அப்போது மன்மதனையெரித்த கடவுளுக்கிது சம்மதிதானோவென்று அரசன் மெலிவடைந்தான். அப்போது தனக்கதிசுந்தரனான நாயகனுடைய மனவாட்டத்தையும் மனக்கோணுதலையும் சந்திரவதி தெரிந்து சொல்லுகிறாள். எ-று. (க௦சு)

முன்னை நாளர சாண்டணி முடிபுனைந் திருந்த
மன்னர் செய்கையு மறங்களுந்திறங்களும் வளர்ந்த
இன்ன முங்குறைந் துயிர் தரித் திருந்தவ ரில்லை
அன்ன தேதுணி படியனேற் கிரல்கலை யென்றாள்.

இ-ள். முற்காலத்திலே அரசாட்சிசெய்து அழகிதான கிரீடத்தைக்கொண்டிருந்த அரசர்கள் செய்கையும், அவர்கள்தருமங்களும், சாமர்த்தியங்களும் இன்னமும் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. அவைகளிற் குறைவாகித் தங்களுயிரை வைத்திருந்த அரசர்கள், உமது குலத்திலே ஒருவரு மில்லை; ஆகையால் உமக்கும் அவ்வரசர்கள் செய்கைப்படி நடக்கிறதே துணிவான காரியம் அடியேனைப்பற்றி நீரெவ்வளவும் இரக்கஞ் செய்யவேண்டாமென்று சொன்னாள். எ-று. (க௦எ)

அக்க ணத்தினி லமைச்சனும் விரையவந் தணுகிப்
புக்க வாறெலாம் புரவலன் புகன்றிடக் கேட்டுப்
பக்க நோக்கியே மன்னனைப் பணிந்துயிர் பதைக்க
ஒக்க வேகியே சுடர்மணித் தெருவில்வந் துற்றான்.

இ-ள். அந்தட்சணப்பொழுதுக்குள்ளே மந்திரியான சத்திய கீர்த்தியும் விரைவிலேவந்து கூடி நடந்தசெய்கைக ளெல்லாம் அரசன் சொல்லக் கேட்டுப் பக்கம் பார்த்து அரசனை வணங்கித் தனக்குயிர் பதைப்பதாகக் கூடவே சென்றுகாந்தியுள்ள ரத்தினங்கள் மின்னுகின்றதெருவிலேவந்து சேர்ந்தான்.

இடக்கை பாசமு மேதியும் பிடித்திட வலத்துத்
தடக்கை பற்றிய சவுஞ்சுடு கோலினுற் றள்ளிச்

சுடர்த்தெருத்தனிற் றோன்றிடத் துணுக்கமுற றேங்கி
மடக்கொடியநதிரு மாதரு மைந்தரு முறைபபார

இ-ள். இடது கையானது கட்டின கயிற்றையும் கத்தியையும் பிடிக்க, வலது தடக்கையிலே, கொண்ட பிணஞ்சுடுகிற தடியினலே சந்திரவதியைத் தள்ளிக்கொண்டு வந்து பிரகாசமான தெருவிலே வரச்செய்தே கண்டோர் திடுக்கிட்டிறங்கி இளங்கொடி போன்ற பெண்களும் புருஷர்களும் சொல்லுகிறார்கள். எ-று. (கoகூ

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கையோ செழுங்கமல முகமோ நிறைந்தமதி காலோ விளஞ்சினை வரால, மெய்யோ கலாபமயி லிடையோ நுடங்குகொடி விழியோ கடைந்த வடிவேல, மையோ கருண்டகுழன் மலையோ திரண்டமுலைவனிதைக கென்பு கலுவார, ஐயோ விவட்குவிதி கொலையோ வெனக்கதறி யழுவா ரறைந்துவிழுவார

இ-ள். இந்தப் பெண்ணுக்குக் கைகளோ செழுமையான தாமரை மலர்கள் போலிருக்கின்றன. முகமோ பூரணசந்திரன் போலிருக்கின்றது. கணைக்கால்களோ இளமையானசினைவரால் மீன்கள் போலிருக்கின்றன, உடம்போ வாலையுடைய மயிர் சாயலை யொத்திருக்கின்றது; இடையோ துவளுகிறகொடிபோ லிருக்கின்றது. கண்களோ கடைந்துகொண்ட கூரியவேல்கள் போலிருக்கின்றன, சுருண்ட கூந்தலோ மேகமோ வென்னலாயிருக்கின்றது. திரண்ட கொங்கைகளோ மலைகளோ வெனனுமபடியிருக்கின்றன வென்று சொல்லுவார்கள். ஐயோ! இப்படிப்பட்ட பெண்ணுக்குக் கொலையினலோ சாவிதி யென்று கதறி யழுவார்கள் சிலர், முகத்திலே அடித்துக் கொண்டு கீழேவிழுவார்கள் சிலர். எ-று (ககo)

தவளத் திருத்தகாள நகையுஞ் சிறந்தவிரு தறுவைப் பழித்ததுதலும், பவளந் தையொத்த கனியி தழுமப டைத்தவிதி பதறிப் படைத்த துளதோ, கவளங் கவிற்றரச ருலகத் துயிர்க்குதவு கபடற் றிரக்கமுடையோன், இவளைக் கொலைக்கருதி யிவர்கைக் கொடுத்த திறமேயெனா றிரங்கி யழுவார

இ-ள். வெண்மையான அழகிய முத்துகள் போன்ற பல் வரிசைகளும், சிறப்பான இரண்டு விறகளைப் பழிப்பன வான புருவங்களும், பவளத்தை யொப்பாய்க் கனிபோன்ற இதழும் உண்டாகச் செய்த பிரமதேவன் பதறுதலாக அமைத்ததுண்டோ! கவளமுண்கிற யானைமேலேறுகிற அரசன் உலகத்திலுள்ள உயிர்களுக் குதவுதல் செய்பவனுய்க் கபட மில்லாமல் இரக்கமுமுடையவன் இப்படிப்பட்ட பெண்ணைக் கொல்ல எண்ணி இந்தப் புலையர் வசமாகக் கொடுத்தவிதம் யாதுகாரணத்தினலே யென்று அழுது துக்கிப்பார்கள். எ-று. (ககக)

வேலைப் பழித்தவிழி யாளைச் சினத்தரசன் வெட்டென் றுரைத்தபொழுதே, சாலச்சவங்கள்சுடு கோலிற் கடிந்துநனி தள்ளிக் கொணர்ந்த புலையன், சீலத்தை யுங்கனக மார்பத் தையுங்குலவு திண்டோளையுங் கண்டிடின், மாலொப் பனன்றிமயி லோனொப் பனல்லதொரு மதனொப் பனென்று மருள்வார்.

இ-ள். வேலாயுதத்தைப் பழிப்பதான கணகளையுடைய இந்தப் பெண்ணை அரசன்கோபித்து வெட்டென்று சொன்ன அப்பொழுதே, மிகவும் பிணங்களைச் சுடுகின்ற தடியினாலே அடித்துத் தள்ளிக்கொணடுவந்த இந்தப் புலையனுடைய நல்ல குணத்தையும் பொன் மயமான மார்பையும் விளங்குகின்ற திண்ணியதோள்களையும் பார்க்குமிடத்தில் திருமாலை யொப்பாவான், அல்லது மயில்வாகனக் கடவுளையொப்பாவான். அல்லது ஒப்பற்ற மனமதனையொப்பாவானென்று மயங்குவார்கள். எ-று (கக௨)

மறையோ னிடத்திவளை விலைகூ றிமிக்கவொரு மகனோடும் விற்றவனிவன், குறையோ பொருட் செலவு தெரியாது மற்றுமொரு கொடியோ னலக்க ணுறவே, பறையோ னிடத்திவனை விலைகூறி விற்றுமுளன் பலநாள் கழித்த தறிவோம், இறையோன் மகற்கிறுதி செயலாலிவர்க்குவரு மிடையூறி தென்று ரைசெய்வார்.

இ-ள். பிராமண னிடத்திலே இந்தப் பெண்ணை விலைகூறி மேன்மையுள்ள ஒரு புத்திரனையும் விற்றவனே யிவன், இப்படிப்பட்ட இவனுக்குப் பொருட்செலவுவந்தது என்ன குறை யினாலோ தெரியாது மறுபடியும் ஒரு பொல்லாதவன் துன்பப்படுதற்காகப் பறையனிடத்திலே இவனை விலைகூறி விற்றவனும் கூட விருக்கிறான். இப்படியாகப் பலகாலமும் போக்கினதை நாமெல்லோருந் தெரிந்திருக்கிறோம், இப்போது இந்தக் காசிராஜன் மகனுடைய உயிருக்குமுடிவு செய்ததனாலே இவர்களுக்கு வந்த துன்ப மிப்படியென்று சொல்லிக்கொள்ளுவார்கள். எ-று. (ககரு)

எங்கோ மகன்கதற வுயிருண்ட கொலைகாரி யிவளோ வெனத் தொடருவார், வெங்கோ பவன்கரியின் முன்போ டுமென்று சிலர் வெகுள்வார் நெருக்கி யடர்வார், பங்கோ பறைக்கிவளை வதைசெய் தனம்படை படாதோ வெனப்ப தறுவார், செங்கோன்மு றைக்குவழு நீர்கொல்வ தென்றுசிலர் செயலால் விலக்கி வருவார்.

இ-ள். எம தரசனுடைப் பிள்ளையி னுயிரை யுண்ட கொலைகாரி யிவள்தானோவென்று சிலர் கூடத் தொடர்வார்கள், வெவ்விதான கோபத்தையுடைய வலிய யானை முன்னே கொண்டுபோ யிவளைப் போடுக வென்று சிலர் கோபங்கொள்ளுவார்கள், சிலர் நெருங்கி வந்து வருத்தஞ் செய்வார்கள், பறையனுக்கு இவளை வதை செய்யும்படி பங்குண்டோ, நம்முடைய ஆயுதங்களிவளைக்கொல்லாதோ வென்று பதறுவார்கள் சிலர், நீங்கள் கொல்லத் துணிவது

அரசனுடைய நீதிமுறைக்குத் தப்புக லுண்டாகும் என்று சிலர் தங்கள் செய்கைகளாலே அவர்களை விலக்கிக்கொண்டு வருவார்கள். எ-று. (௧௧௪)

அறியா தகாசிபதி மகனை விகொண்டவிவ ளனியாய காரியசடி,
பழிபூ ணியிங்ககலி னெளிதா ய்விடா துநமர் பலரா வியும்பரு குவா
ள், விழியா லெறிந்துமுயிர் கவர்வாள் முகத்திலெதிர் விழியா தநி
ல்லுமெனவே, மொழிவார் வதைத்திடுமை பொருளா கவற்பமன
முசியா ளெனப் பகருவார்.

இ-ள். அறிவில்லாத காசிராஜன் மகனுயிரை வதைத்து இவள் அநியாயமே செய்கிறவள்; கெட்டவள்; பழிசெய்யத் தக்கவள்; இவ்விடம் விட்டு நீங்கினால் இலேசாய் விடாமல் நாமெல்லாருடைய உயிரையு முண்ணத் தக்கவள்; இவள் கண்ணால் வெருட்டியும் நம்முயிரை வாங்குவாள்; இவள்முகத்துக்கு முன்னே தோன்றாமல் நில்லுங்க ளென்று சொல்லுவார்கள் இப்போ திவளைக் கொல்லுகிறதே முடிவுபொருளா யிருக்கச் செய்தே இவள் கொஞ்சமேனு மனம்வருந்தா திருக்கிறாளென்று சொல்லுகிறார்கள் சிலர்.

தப்பாது மன்மகனை யுயிர்கொண்டு திரமுண்ட தறுகண் ணர
க்கிநமர் தங், கைப்பாச முற்றுவர வலளோ விசும்பினிடை கரவா தி
ருத்தலிவளே, அப்பா லனைக்கறுவி யிவள்கொன்ற தோவலதி யார்
கொன் றதோ தெய்வமே, இப்பாவி தன்றலையில் வைத்தா யுனக்கு
நடு விலையோவெ னப்பு கலுவார்.

இ-ள். தப்பாமல்நமதரசன்மகனை உயிரைவதைத்து இரத்தங்குடித்தஅஞ்சாத ராக்ஷசியானால் நம்போல்வாருடைய கையிற் கயிற்றாற் கட்டுண்டு வருவாளோ! ஆகாசத்திலேபோய் மறையாதிருக்கிறாள்! ஆகையால்இப்படி இவளடங்கி யிருககக் காரண மென்ன?) அந்த அரசன் மகனைச் சினங் கொண்டு இவள் கொன்றதுமெய்யோ அல்லது வேறே யாவர் கொன்றதோ ஓ ஓ தெய்வமே! இந்தப் பாபாத்மா தலைமேற் சுமையாகப் பழி சுமத்தினாய், உனக்குப் பொதுவான நீதியில்லையோவென்று சிலர் சொல்லுவார்கள். எ-று. (௧௧௫)

கொலைகா ரியைத்தெருவில் விலைகூறி விற்றபடு கொலைகார து
ட்டனிவனும், புலையா வினைக்கொலைசெ யிவளா விகொல்வதொரு
பொருளோ வெனக் கதறுவார், விலைகூறி விற்றவனு மிவனாகில் விட்
டிடுவன் விடலீரெ னத்தொடருவார், கலையா லிறுக்கிமட லுறவே
பிணித்த கயிறுடனே பிடித்து வருவார்.

இ-ள். இப்படிப்பட்ட கொலைசெய்கிற இவளை இந்தத் தெருவிலே விலைகூறி விற்றவனான கொலை செய்கிற துஷ்டனாகிய இவன் பறையனாய் சொலைத்தொழில் செய்த இவனுயிரை வதைசெய்கிற திவனுக்கு ஒரு பெரிதோ வென்று கத்தியழுவார்கள் சிலர், இப்படி விலைகூறி விற்றவனே இவனால் இவ

லைக்கொல்லாமல் விட்டுவிடுவான், நீங்களெல்லாரும் இவர்களை விடாமற்றொ டருங்களென்று சிலர்பின்னே தொடர்வார்கள்; முன்னே சீலைத்துணியாலிறு கக்கட்டித் தோள்மடல்கள் சேரக்கட்டின கயிற்றைத் தாங்களும் கூடப்பற்றி க்கொண்டு வருவார்கள் சிலர். எ-று. (கக௭)

தனியா யபாவிகுறை யெவர்போ யுரைத்திடுவர் தருமா லயப் புரவலன், அனியாய மென்றறி துணரா தொர்பெண்பழியை யவ மே கொளக்க ருதினான், இனியா ரிரங்குபவ ரெனவே யலைந்துவயி றெரியா வலைந்து சுழல்வோர், கனிவாய் புலர்ந்துநிலை தளர்வார் கலங்கி யுடல் கரைவார் புலம்பி யழுவார்.

இ-ள். இவளோ வேறொரு ஆதரவில்லாத பாவி. இவள் குறையை யாவ ர்போய் மெய்விளங்கச் சொல்லு வார்கள்? தருமக் கோயிலான அரசன் இது அநியாயமென்று கொஞ்சமேனும் ஆலோசியாமல் ஒருபெண்பழியை வீணே கொல்ல வெண்ணினான். இனிமேல் யாவர் இந்த அநியாயத்துக்கு வியசனப் படுகிறவர்கள்! குருவையுங் காணோமென்று வருந்தி வயிறெரிந்து உலைவாகிச் சுழலுவார்கள் சிலர், கனி போன்ற வாய் காய்ந்து தமது சுபாவந் தப்புவார் கள் சிலர், மனங்கலங்கி உடல் கரை வார்கள் சிலர், பிரலாபித் தழுவார்கள் சிலர். எ-று. (கக௮)

வல்லோர் கள்வல்லபடி சொல்வார் கண்மன் னுயிரை மருமானை யிவள்கொன் றவா, றில்லா தம்பா லிவளை யறிந்தே வதைத்த பழியார் பாலதென் றுபகர்வார், கொல்லா துவஞ் சிறையில் வைத்தே விளங் கினிவள் கொலைதான்வ தைத்திடு தலாம், அல்லா து விட்டிடலு ம ரமாகு மென்னவவ ரவரோடு ரைத்துழ லுவார்.

இ-ள். இப்படி வல்லவர்கள் நமக்குத் தோற்றினபடி யெல்லாம் சொல் லலானார்கள், நிலை கொண்ட அரச குமாரனை இவள் கொன்றபடியில்லாத போது இவளைக் கொல்வதானபாவம் யார்வசமாகக் கூடுமென்று சொல்வார் கள் சிலர், இவளைக் கொல்லாமல் வலியதான காவற் கூட்டத்திலே வைத்தா ல் இவள் செய்த கொலைதானே இவளைக் கொல்லும்படியாம், அதையல்லாமல் இவளை விட்டுவிட்டாலும் அக்கொலைவிடாது, குழும் அல்லாமல் இவளை விட் டுவிடுகிறதினாலே புண்ணியமு முண்டாகுமென் றொருவர்க்கொருவர் சொல் லுகிறவர்களாகி வருந்துகிறார்கள். எ-று. (கக௯)

பதியேது பாவியிவள் வரவேது வந்தபெறு பலனேது பாவ நிக ழ்பெண், மதியே திதித்தனையும் விளைவித்த தேதென்று மறுகா மரு ண்டுவிழுவார், விதியேயறக்கொடியை யெளியா டனைக்கறுவி விலை கூறி விற்ற துமலால், சதியே விளைததனையி தறமோவெனச்சிலர்க டளர்வார்முகத்தி லறைவார்.

இ-ள். இவள் ஊரேது? பாவியான இவள் இவ்விடம் வருவதற்குக்கார ணமென்ன! இங்கே வந்து பெற்ற பலனென்ன! இந்தப்பாவ முண்டாகப்

பெண்பத்தியுண்டானதெப்படி! இவ்வளவும் உண்டாகச் செய்ததென்ன கருமமென்று மயங்கித் திகைத்து விழுவார்கள் சிலர், ஓ தெய்வமே! நீயோ மிகவுங்கொடுமையையுடையாய், இந்த எளியவளை விரோதித்து விலைகூறி விற்கச் செய்தது மல்லாமல் முழுதுங் கெடுதியையே உண்டாக்கினை, இது உனக்கு நியாயமோ வென்று சிலர் தளர்ச்சியை யடைவார்கள். சிலர் தமது முகத்திலடித்துக்கொள்ளுவார்கள். எ-று. (௧௨0)

அங்கே யடித்தவடி யிங்கே யலைக்கு மலைவல்லாமலெப் துகொலையும், பங்கே ருகத்தி னறுமலர் போல்வி ளங்குமுக மறியாத பாவை யெனையாள், எங்கே பிறந்தனள் கொலெங்கே வளர்ந்தனள் கொலெங்கே யிருந்தனள்கொலோ, இங்கே யிறந்தவிய வந்தா ளெனப்பலரு மிடைகின்ற வெல்லைதனிலே.

இ-ள். அங்கே அவளை யடித்த அடி இங்கே நம்மை வருந்தச் செய்கிறது; அந்த வருந்துதலையல்லாமல் நடந்த கொலையும் தாமரையினது நல்ல மலர் போன்ற முகத்தினாலே தெரிந்திலாத பிரதிமை போன்ற இந்தப் பெண் எவ்விடத்தே பிறந்தாளோ! எங்கே வளர்ந்தவளோ! எங்கே யிருந்தவளோ! இங்கேவந்து செத்துப் போக வரலானு ளென்று பலருமிப்படி வருந்துகிற போது. எ-று.

முகமானது தாமரைமலர்போல் விளங்குகிறதினாலே இவள் கொலைசெய்யத் தெரியாதவளென்று கொண்டவ்வாறு சொல்லுகிறார்களென்க. (௧௨௧)

கலி நிலைத்துறை.

என்ன பாதகஞ் செய்தன மெனவிறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னு மாமணித் தோரண வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திறுத்தான்.

இ-ள். நாமென்ன பாவத்தைச் செய்தோமோவென்று அரிச்சந்திரமகாராஜன் சிரித்துச் சந்திரவதியி னுடைய கைககளைக் கட்டியிருக்கிற கயிற்றைத் தன் கையிலே கொண்டுநெருங்கின பெரிதான இரத்தினகசிதமுள்ள தோரணங்கட்டியிருக்கிற வாயிலைக் கடந்து அந்தப் பொன் மயமான பட்டணத்து மதிலுக்கு வெளியேவந்து சேர்ந்தான். எ-று. (௧௨௨)

உற்ற நாளையில் வசிட்டனவ் வும்பர்கோன் றனக்குக்
கொற்ற வாநினக் கியான்புகல் கோதிலா னிடத்தே
அற்றை நாண்முதற் கௌசிக னமைக்குமூ றனைத்தும்
இற்றை நாள்விடுங் காண்பநீ யெழுகவென் றிசைத்தான்.

இ-ள். அப்படி மதிலுக்கு வெளியே வந்தபோதில் வசிஷ்டமகாமுனிவர் தேவேந்திரனைப்பார்த்து அரசனே! உனக்கு நான் சொன்ன யாதொரு குற்றமுமில்லாத அரிச்சந்திரனிடத்திலே அன்றைத்தினந் தொடக்கமாக விசுவாமித்திரன் குற்றமுள்ளவனாகச் செய்ய வேண்டி உண்டாக்கின இடையூறுகள்

முழுதும் இன்றைத்தினம் விட்டுப்போம், அதை நீயுநானுங்காணக் கடவோம் நீ யெழுந்திடுகவென்று சொன்னார். எ-று. (கஉ௩)

தாழும் வார்சடை மாமுனி யவ்வுரை சாற்றச்
சூழு மாதருந் தும்புரு நாரதர் தாமும்
வாழும் வச்சிர பாணியும் வசிட்டனு மியாரும்
ஏழு பாலருங் காணவந் தந்தரத் திருந்தார்.

இ-ள். தொங்குவதான நீண்ட சடையையுடைய பெருமைபொருந்தின வசிஷ்டமுனிவர் அந்தவார்த்தைசொல்லவே எப்போதும் சூழ்ந்திருக்கிற தெய்வப்பெண்களும், தும்புருநாரதர்களும், இவர்களோடு கூடி வாழ்கின்ற வச்சிராயுத பாணியான இந்திரனும், மற்ற எல்லாரும் திக்குப்பாலக ரேழுபேரும் அரிச்சந்திரன் செய்கையைப் பார்க்க ஆகாயத்திலே வந்து தோன்றி திருந்தார்கள். எ-று. (கஉ௪)

அந்த வேலையிற் கௌசிகன் விரைந்துவந் தரசே
இந்த நோதக வெய்தலென் னெனக்குநீ முன்னம்
தந்த நாடியான் றந்திலே னெனுமொழி சாற்றி
உய்ந்து நாடுமுன் னுயிர்களும் பெறுகென வுரைத்தான்.

இ-ள். அந்தச் சமையத்திலே விசுவாமித்திரர் அதிவிரைவாக வந்து அரிச்சந்திர மகாராசனே! இந்தத் துன்பத்தையடைய வேண்டியதென்ன! எனக்கு நீ முன்னே கொடுத்த நாட்டை நான் கொடுத்திலேனென்று ஒரு பொய் வார்த்தை சொல்லித் தப்பித்துக்கொண்டு உன்னாட்டையும் இந்த இறந்த உயிர்களும், பிழைக்கப் பெருதியென்று சொன்னார். எ-று. (கஉ௫)

சேர நின்றவன் செப்பிய தாங்கவ ரன்றி
யாருங் கேட்டிலர் வசிட்டனு மமரரு மறிந்தார்
வீர வேந்தனு மங்கையு மவனடி விழுந்திங்
கியாரைநீயிந்த வேழமைக் காட்செய் தியென்றார்.

இ-ள். அப்படிக் கிட்டி நின்று அந்த விசுவாமித்திரர் சொன்னதை மந்திரி முதலிய மூவரும் கேட்டதே யல்லாமல் மற்றை யெவர்களும் கேட்டிலர்கள், வசிஷ்ட மகாமுனிவருந் தேவர்களுமே தெரிந்தவர்கள், அப்போது மகா வீரனான அரிச்சந்திர மகாராஜனும், சந்திரவதியும் அந்த விசுவாமித்திரர் காலிலேவிழுந்து ஐயா! இவ்விடத்திலே யாரைப்பார்த்து இந்த மூடத்தனத்துக்கு இசைவதாகச் சொன்னீரென்று பின்னுஞ் சொல்லுகிறார்கள். எ-று.

சேய்மை யண்மையி னுயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வதுநீ ரலாற்சொல் லின்வே றுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெம தக்கறிதி.

இ-ள். தூரத்திலுஞ் சமீபத்திலும் உயிருக்கு ஒப்பற்ற துணை யென்னும்படி சிறந்துள்ள சத்தியத்தினால் மனது பரிசுத்தமாம்! வேறொன்று பரிசுத்த

ஞ்செய்வ தில்லை, தாமரை மலரைப் பரிசுத்தஞ்செய்து அதுபிறந்த நீரே யல்லது சொல்லுமிடத்தில் வேறொன்றண்டோ! அதுபோல்.துன்பஞ்செய்வ தானாலும் சத்தியமே விரதமென்று கொண்டு. எ-று. (கஉஎ)

புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டியிரினு நெடிதுச்சி றந்தே
தலைமை சேர்தரு மசத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ.

இ-ள். நீசனுங் கூட வேண்டாத இந்தப் புல்லிதான புலால் நாறுகின்ற தேகத்தை நிலையுள்ளதென்று மயங்கி உயிரைப் பார்க்கிலும் அதிகமாகச் சிறந்து முதன்மைகொண்ட சத்தியந்தவறி நடக்கப்போமோ, கலைஞானங்களெல்லாந் தெரிந்த நீர் எங்களுக்கு இந்தச சத்தியந் தவறி நடப்பதைச் சொல்லுவது உமக்கழகாமோ! எ-று. (கஉஅ)

இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வா ற் றடக்கிமீட் டுமிழ்கலா வெரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினு மெய்மையை விடேமால்.

இ-ள். இப்பிறப்பு வருபிறப்பு மோக்ஷம் என்று வேதங்கள் தெளிவாகச் சொல்லுகின்ற மூன்றையுஞ் சத்தியமேதருகின்ற முறையையுடையதென்கிற நிலைமைக்கு விரோதமாக எங்களைத் தனதாழமான வயிற்றிலே அடக்கி மறுபடியும் வெளிவிடாதிருக்கின்ற அக்கினிவாய்ந்த வெப்பத்தைக் கொண்டு மிகுந்த நரகத்திலே வீழ்த்தினாலும் சத்தியத்தை விடமாட்டோம். எ-று. (கஉகூ)

பதியி ழந்தனம் பாலனை யிழந்தன் படைத்த
நிதியி ழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியி ழந்துதன வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

இ-ள். எங்கள் ஊரையு மிழந்தோம், பிள்ளையையு மிழந்தோம், நாங்கள் பெற்றுள்ள செல்வத்தையு மிழந்தோம், இனி எங்களுக் குள்ளதென்று நினைப்பதான நல்லகதியையிழந்தாலும் சொன்ன சொல்லை யிழக்க மாட்டோமென்று சொன்னார்கள் அதுகேட்டுத் தன் யுத்தியுங் கெட்டுத் தன் வாயுமிழந்து அந்த அருமையான தவத்தை யுடைய விசுவாமித்திரர் மறைந்து போனார்.

மறைந்து போகலும் வாசவன் மாமுனி வனைக்கூய்
அறைந்த காரண மறிந்துபோ வெனவரு கழைத்தான்
நிறைந்த நாணமுங்குறைந்த பார்வையுமுற நினைவு
குறைந்தி ருந்தனன் முகிலிடத் தவருடன் கூடி.

இ-ள். அப்படி விசுவாமித்திரர் மறைந்து போகிற போது இந்திரனானவன் அந்த மகா முனிவரைக் கூப்பிட்டு நீர் முன்னே சொன்ன காரணத்தை

முழுதுந் தெரிந்துகொண்டு போமென்று தன் சமீபமாக அழைத்தான்.' அதற்கு நிறைந்த வெட்கமுங் குறுகின பார்வையு முண்டாகத் தமதுநினைவுகுறைவாகி மேகமண்டலத்திலே மறைந்திருக்கிற தேவர்களுடனே கூடியிருந்தார் விசுவாமித்திரர். எ-று. (கந௧)

வாசத் தார்புனை வாசவ னுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர் பாசங்கைப் பற்றிப்
பேசத் தான்பெறுன் பிணஞ்சுடு கோலினுற் றள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர் நெடுநில முற்றான்.

இ-ள். பரிமளங் கொண்ட மாலையணிந்த இந்திரனுடனே கூடி விசுவாமித்திர ரிருக்கச் செய்தே, தனக்கன்புள்ளவளான சந்திரவதி கையிலே கட்டின கயிற்றைத் தன் கையிலே கொண்டு யாதொரு வார்த்தையும் பேசமாட்டாதவனுகி அரிசசந்திர மகாராஜன் பிணங்களைச் சுடுகிற தடியினுலே சந்திரவதியைத் தள்ளிக்கொண்டு தனக்கன்பால் நிறைந்துள்ள புத்திரன் கிடப்பதான அந்த ஒப்பில்லாத நிலத்தையுடைய சுடுகாட்டி னிடத்தைச்சேர்ந்தான்.

வழக்கி னென்றுநீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கியீ ண்டிருவெனக் கிளிமொழி மடந்தை
பழக்க மானவக் கணவனைப் பரவியென் னுவி
இழக்கற் கஞ்சுநீ யறம்வழு வேலென வியம்பும்.

இ-ள். சந்திரவதியே! நீ வழக்கப்படியே வணங்கத்தக்க தெய்வத்தை வணங்கிக் கொண்டு கிழக்கு முகமாக நோக்கிக் கொண் டிங்கே இருவென்று சொல்லவே, அதற்குக் கிளி போலும் சொல்லை யுடைய சந்திரவதியானவள் தனக்கெப்போதும் பழக்கமாக வணங்குகின்ற அந்த நாயகனையே துதித்து வணங்கிக்கொண்டு இதோ என்னுயி ரிழந்துபோவதற்குப் பயந்து நீர் உம்முடைய தருமத்தை வழுவாமற் காத்துக் கொள்ளுமென்று சொல்லுகிறாள்.

பெண்களாவார் கடவுளை வணங்குதலைக் காட்டிலும் தங்கொழுநரைத் தெய்வமென வெண்ணிப் பூசித்தல் சிறப்புடையதென்று நீதிநூல்கள் கூறுநிற்கின்றன, சந்திரவதியும், அந்நூன் முறைப் படியே தனது கணவனைப் பழமையாகப் பூசித்து வந்தவ ளென்பார். பழக்கமானவக் கணவனைப்பரவி" என்றார். (கநரு)

பொருந்து நீத்தத்திற் புற்புதவா ழ்வைநீ மெய்யென்
றருந்த வத்தையு மறத்தையு மெய்யையும் விடுத்து
வருந்த னன்மன் னவ்வழி வழிசிறக் கெனவாழ்த்தி
இருந்த பின்சுடா வாட்படை வலக்கையி னெடுத்தான்.

இ-ள். அரசே! ஜலத்திலே பொருந்துகின்ற குமிழி போன்ற இந்தவாழ்வை நீர்நிலையென்று கொண்டு உம்முடைய அருமையான தவத்தையும்

தருமத்தையும் மெய்மையையும்விட்டு வருத்தமடையீராக, உம்முடைய வமிச பாரம்பரியமாகச் சத்தியத்திற் சிறந்த வராகவென்று வாழ்த்திக் கிடக்குமுக மாகவிருந்தாள். பின்பு அரசன் ஒளிகொண்ட வாளாயுதத்தை வலதுகையிலே கொண்டான். எ-று. (கரு௪)

உலகு யிர்க்கெலாம் பசுபதி யொருமுத லாயின்
அலகில் சீருடை யவன்மொழி மறையெனி னதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மையி டிலதேல்
விலகு றுமலவ் வாய்மையை விரதமாக் கொளின்யான்.

இ-ள். உலகத் துயிர்களுக் கெல்லாம் பசுபதியே ஒப்பற்ற முதற் கடவு ளானல், அளவில்லாத சிறப்பை யுடைய அந்தக்கடவுள் சொல்லே வேதமெ ன்றால், அந்த வேதத்திலே விளங்கச் சொல்லுகின்ற கருமங்கள் பலவகைக ளிலும் மெய்யே ஒப்பில்லாத தானல், அதனை விலக விடாமல் அந்தமெய் சொல்லுதலையே நான் விரதமாகக் கொண்டதுண்டானல். எ-று. (கரு௫)

நெறியி னன்னவென் றனைவிடா நிறைபிவட் குளதேல்
இறுதி யின்மையைப் பெறுகவில் லெனினிவ ளிறுதி
பெறுக வென்றுவாள் வீசினன் பேதைதன கழுத்தில்
மறும ணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள்.

இ-ள். அந்த மெய் சொல்லுகிற மார்க்கநதையே விரதமாகக் கொண்ட என்னை நீங்காத நிறை குணம் இவளுக் குண்டா யிருந்தால், இவள் சாவாமை யைப்பெறக்கடவது. இவையெல்லா மில்லை யென்றால் இவள்சாவைப் பெறக் கடவதென்றுசந்திரவதி கழுத்தில்வாளைக்கொண்டு வெட்டினன். அப்போது அந்த வெட்டின கூரிய வாளானது இரண்டாவது கலியாணத்துக்கிட்டமாலை யாகிச் சந்திரவதி கழுத்திலே விழுந்தது. எ-று. (கரு௬

மயான காண்டம் - முற்றிற்று.

ஆ விருத்தம்-ககக௨

ஒன்பதாவது,

மீட்சிக்காண்டம்.

படத்த காதபா டியாவையும் பட்டுளத் தழுத்தும்
திடத்தி னின்றுவாள் வெட்டினிற் பிழைத்தடு செழுந்தீப்
புடத்தி னின்றுமாற் றுயர்ந்தசெம் பொன்னெனப் பொலிந்தாள்
மடத்திற் றீர்ந்தொளிர் சந்திர மதியெனு மணங்கு.

இ-ள். அறியாமைக் குணத்தி னின்று நீங்கி விளங்குகின்ற சந்திரவதி யென்கிற பெண், ஒருவராலும் படக்கூடாத பாடுகளெல்லா முழுதும் பட் டுத் தன்மனத்திலே அழுத்தமாகக் கொண்ட சத்தியவிரதத்துடனே நின்று

கத்திவெட்டுக்குத் தப்பி உருகுகின்ற செழுமையான நெருப்புப் படத்தி லிருந்து மாற்றினா லுயர்ந்துள்ள சிவந்தபொன்போல் விளங்கினாள். எ-று. (௧)

சடைபட் டோங்கிய முடிமுனி தனதுசூழ் வினையால்
அடைபட் டுறுபா டனைத்தையுங் கடந்துசா ணையினால்
கடைபட் டானபின் செழுமணி யெனவொளி காட்டிக்
கொடைபட் டார்புகழ்க் கோமகன் விளங்கினன் குணத்தால்.

இ-ள். சடைகளுண்டாகிய நீண்ட நிலையையுடைய விசுவாமித்திர முனிவருடைய வஞ்சனையினாலே அகப்பட்டுவந்த இடையூறுக ளெல்லாவற்றையு நீங்கிச் சாணைக் கல்லினாலே கடையப்பட்டு அது தீர்ந்தபின்பு விளங்குகின்ற செழுமையான மாணிக்கம்போ லொளிதோற்றிக் கொடுத்தலுண்டாகி நிறைந்த புகழையுடைய அரிச்சந்திரமகாராஜன் தனது நல்ல குணத்துடனே விளங்குதலானான். எ-று. (௨)

புலத்தின் மாட்சிகொள் பொலங்கொடி படரவோங் கரசு
குலத்தின் மாட்சியுங் குணத்தின் மாட்சியுங் குறைவறுசீர்
நலத்தின் மாட்சியும் வாய்மை மாட்சியு நனிமலர
நிலத்தின் மாட்சிகொள் காட்சியி னோர்ந்தனர் பலரும்.

இ-ள். அறிவாற் பெருமை கொண்ட சந்திரவதியாகிய பொன் கொடி சூழ, வுயர்ந்த ராசனாகிய அரிச்சந்திரனுடைய குலத்தினது பெருமையும் குணத்தினது பெருமையும் குறைவற்ற சிறப்புப்பொருந்திய நன்மையினது பெருமையும் மெய்யே சொல்லுகிற பெருமையும் மிகவும் விளங்க அந்த இடத்திலே பெருமை கொண்டிருக்கிற இவர்கள் தோற்றத்தைக் காண்கிறதற்குப் பலரும் வந்து கூடினார்கள். எ-று. (௩)

வண்டி ருந்ததார் வல்லியைச் சூட்டலும் வானிற்
கண்டி ருந்தவர் மதித்தனர் குளித்தனர் களித்தார்
மண்ட லத்திழிந் தீண்டினர் வயிரவாட் படைகைக்
கொண்டி ருந்தவக் குரிசிலு மகிழ்ச்சியிற் குளித்தான்.

இ-ள். அந்த வண்டுகள் மொய்ப்பதான மாலையை அரசன் சந்திரவதிக்குச் சூட்டின வளவிலே, ஆகாயத்திலே அதைக் கண்டுகொண் டிருந்தவர்கள் மதித்து மெச்சினவர்களாகிச் சந்தோஷித் தாடினார்கள். பின்பு அந்தச் சுடுகாட்டு நிலத்திலே வந்திறங்கிக் கூடினார்கள். பலமான வாளாயுதத்தைக் கையிற்கொண்டிருந்த அந்த அரிச்சந்திரன் ஆனந்தக் கடலிலே முழுகினான்.

1*

என்ற னாலிவன் குணமெலாம் விளங்கிடி னென்னைப்போல்
நன்றி யார்செய் தாரிவற் கெனநகை முகமலர்ந்து
துன்று வார்சடை சுவன்மிசைச் சுழன்றுவீழ்ந் தாட
வென்று ளானெனக் கௌசிக னாடினன் விரைந்து.

இ-ள். என்னாலே இந்த அரிச்சந்திரனுடைய நல்லகுணங்க ளெல்லாம் விளங்குமேயானால், என்னைப்போல் இவ்வரசனுக்கு நன்மை செய்தவர்கள் யாரென்று ஒளிபொருந்தின முகமலர்ச்சியாய் நெருங்கி நீண்ட சடைகள் பிட

ரியிலே கழன்றவிழ்ந்து விழுந்தாட வெற்றி கொண்டவர் போல் விசுவாமித்திரமுனிவர் அதிக விரைவுடனே கூத்தாடினார். எ-று. (௫)

வாடி னாடொறும் வருந்திய வசிட்டன்மெய்ப் புளகம்
மூடி னன்மிகக் காலங்கண் மூன்றையு முணர்ந்தும்
ஆடி னனுயர்ந் தானயர்ந் தான்றனை யறியா
தோடி னன்மகிழ்ந் துவகையங் கடல்குளித் துறைந்தான்,

இ-ள். தினந்தோறும் மனம்வாடி வருந்திக்கொண்டிருந்த வசிஷ்ட மகாமுனிவர் அப்போது தமதுடம்பெல்லாம் அதிகமாகப் புளகாங்கிதங்கொண்டார். இறப்பெதிர்வு நிகழ் வென்கிற முக்காலங்களையுந் தெரிந்தும் கூத்தாடினார். எல்லாரிலுஞ் சிறந்தவரானார். சோர்வுங்கொண்டார். தம்மைத்தாம்தெரிந்து கொள்ளாமல் ஓடினார். அப்படிச சந்தோஷித்து ஆனந்தக் கடலிலே முழுகியிருந்தார். எ-று. (௬)

அடைய வானவர் திரண்டது திருவுளத் தடைத்துப்
புடையி லங்கிய மைந்தரோ ரிருவரும் பொருந்தத்
தொடையி லங்கிய சடைமுடி முறைமுறை துளக்கி
விடையி லேறிவந் துமையுடன் றோன்றினன் விமலன்.

இ-ள். சிவபெருமான் தேவர்கள் முழுதும் வந்து கூடியிருக்கிறதைத் தமது திருவுள்ளத்திலே கொண்டு பக்கத்திலே விளங்குகின்ற புத்திரரிருவரான விநாயகனும் முருகக் கடவுளுங் கூடவர, கொன்றை மாலை விளங்குகின்ற தமது சடை முடியை அடிக்கடி அசைத்துக் கொண்டு இடபவாகனத்திலாரோகணித்துப் பார்வதியுடனே விளங்கினார். எ-று. (௭)

சிந்தி டும்படி யவுணர்தம் முடல்களைத் தேய்த்த
ஐந்து வெம்படை யடைக்கிய கரமெடுத் தமைந்துச்
சுந்த ரத்திருத் தோளிணை புளகமுற் றோங்க
வந்து தோன்றினன் வயினன்மேற் றிருமறு மார்பன்.

இ-ள். சிதறியோடும்படி அசுரருடல்களைத் தேயப்பண்ணின வெவ்விய பஞ்சாயுதங்களைக்கொண்ட கைகளைத் தூக்கி எல்லாரையும் அமரச் சொல்லி அழகான திருத்தோள்களிரண்டும் புளகாங்கிதங் கொண்டு வளர கருடவாகனத்தின் மேலேறிவந்து தோன்றலானார்; திருவையும் மறுவையுங்கொண்ட மார்பையுடைய மகாவிஷ்ணு. எ-று. (௮)

தாதிற் றோன்றிய தண்டுழாய்த் தார்முகி லுந்திப்
போதிற் றோன்றிய நான்முகத் தொருதனிப் புத்தேள்
ஓதிற் றோன்றிய வாணியோ டோதிமப் புள்ளின்
மீதிற் றோன்றினன் விண்ணவர் யாவரும் வந்தார்.

இ-ள். மகரந்தங்களுடனே விளங்குகிற குளிர்ந்த துளசிமாலையை யணிந்த மேகவண்ணனுடைய திருவுந்தி மலரிலேபிறந்த சதுர்முகங்களை யுடைய ஒப்பில்லாத பிரமதேவரும், தம்முடைய வாக்கிலே தோன்றுகிற சரஸ்வதி

யுடனே அன்னவாகனத்தின் மேலேறிவந்தார். தேவர்க ளெல்லாரும் வந்து கூடினார்கள். எ-று. (௯)

சித்தர் கின்னரர் தும்புரு நாரதர் தேவர்
பத்தர் தானவர் கருடகந் தருவர்கள் பசாசர்
பித்தன் றன்னொடு மாலொடும் பிதாமக னோடும்
மெய்த்து வந்திவர் நீண்டினர் மேதினி மிசையே.

இ-ள். இப்படிச் சித்தர்களும் கின்னரர்களும் தும்புரு நாரதர்களும் தேவர்களிலே பத்தர்களும் அசுரர்களும் கருட காந்தருவர்களும் பைசாசர்களும் சிவனுடனே விஷ்ணுவும் பிரமாவும் மெச்சிக் கொண்டு முழக்கமாகி அந்த இடத்திலே வந்து சேர்ந்தார்கள். எ-று. (௧0)

சந்தி ராதித்தர் வைரவர் சத்த மாதர்களோ
டிந்தி ராதிய ரெண்மர்மா முனிவர ரியக்கர்
மந்த ரப்புயத் திரதிநேர் வேனில்வேண் மற்றோர்
அந்த ரத்தினை மறைத்துவந் தாவயி னடைந்தார்.

இ-ள். இன்னும் சந்திர சூரியர்களும் வைரவர்களும் சத்த மாதர்களுடனே இந்திரன் முதலானவராகிய அஷ்டதிக்குப் பாலகரும் மகா முனிவர்களும் இயக்கர்களும் மந்தரகிரி போலும் தோள்களிலே இரதிதேவி சேர்வதான கோடை காலத்துக்குரிய மன்மதனும் மற்று முள்ளவர்களும் ஆகாயத்தை மூடிக்கொண்டுவந்து அவ்விடத்திலே கூடினார்கள். எ-று. (௧௧)

கந்த ரத்தினில் வார்விசி முதுகுறக் கதுவ
மந்த ரப்புய மாயிர முடையவ்வோர் வாணன்
சுந்தரக் கையான் முழக்கிடுங் குடமுழாத் தொனியும்
அந்த ரச்செழுந் துந்துமித் துழனியு மார்க்க.

இ-ள். கழுத்திலே மாட்டின தோல் இறுக்கமானது முதுகிலே படிந்திருக்க மந்தரகிரிபோலும் தோள்களாயிரமுடைய ஒப்பில்லாத வாணசுரனானவன் அழகான தனதுகையால் முழக்குகின்ற குடமுழாவின் சத்தமும் செழுமையான ஆகாசதுந்துமி வாத்தியத் தோசையும் எங்கு முழக்கமாக. எ-று.

சின்னம் பேரிகை சல்லிகை செம்பொனின் காளம்
மின்னு மாமுகி லிடியெனக் கடலென விம்மத்
துன்ன ரம்பையர் சொரிந்திடு கற்பகத் துணரும்
பொன்னி னன்னெடும் பூக்களும் பொலிந்தன வன்றே.

இ-ள். சின்னம் - பேரிகை - சல்லிகை-செம் பொன்னலாகிய எக்காளம் ஆகிய இந்த வாத்தியங்கள் மின்னுகின்ற கறுத்தமேகத்திடி போலவும் கடல் போலவும் முழங்க, அங்கே நெருங்கின ரம்பா ஸ்திரீகள் பொழிகின்ற கற்பகப்பூங் கொத்துகளும் பொன்னலாகிய நல்ல நெடுமையான மலர்களும் எங்கும் நிறைதலாயின. எ-று. (௧௩)

வந்த தேவரைக் கண்டரிச் சந்திரன் மகிழ்ந்தே
எந்த மாதவ மென்னையோ வென்னையோவென்றுச்

சிந்தை யுட்பெரு கானந்தப் பெருவெள்ளந் தேக்கிப்
புந்தி யாங்கரை பொடிபடப் புடைத்ததை யன்றே.

இ-ள் அப்படிவந்து கூடின தேவர்களை யெல்லாங் கண்டு அரிச்சந்திர மகாராசன் சந்தோஷித்து எங்களுடைய பெரிதான தவ மெப்படிப்பட்ட தோவென்று மனதுக்குள்ளே பெருகுகின்ற பெரிதான ஆனந்த வெள்ளம் தேக்குதலாகி, அவனுடைய புத்தியாகிய கரை தூளாகும்படி மோதியது.

தொழுத னன்றெழு தெழுந்தன னடிமுடி தொடங்கி
முழுது முற்றிய வுவகையம் பெருங்கடன் மூழ்கிப்
புழுதி யாடினன் கருணையங் கண்ணினீர் பொழிய
அழுது வீழ்ந்தனன் செய்தவ மின்னதென் றறியான்.

இ-ள். தான்செய்த செவ்வையான தவம் இப்படிப்பட்டதென் றறியாத வனாகி, அந்தத்தேவர்களை யெல்லாம் வணங்கினான். வணங்கி யெழுந்திருந்தான்; அவர்கள் பாதங்களைத் தன்முடிமேலே சூடிக்கொண்டு முழுதுநிரம்புதலான சந்தோஷமாகிய அழகிய பெருங் கடலிலே முழுகி மண்புழுதி யெல்லாம் உனது கிருபைபொருந்தின கண்களில் நீர் சிந்துதலினாலே தன்மேலெல்லாம் கிளர்ந்து மடிவதானான். பின்னும் அழுவதாயினான். எ-று. (கரு)

நாரி பாகனை முகுந்தனை நான்முகத் தோனை
சூரி வேலனை விநாயக மூர்த்தியைப் பணிந்தான்
பூரை பூரையென் றிருகையா லமைத்தபுத் தேளிர்
யாரை யாரையென் றறிந்தியாம் விளம்புது மம்மா.

இ-ள். பார்வதிசமேதனையும் மகாவிஷ்ணுவையும் சதுர்முகப்பிர்மாவையும் நீண்ட வேலாயுதக் கடவுளையும் விநாயக மூர்த்தியையும் வணங்கினான். வணங்கவே போதும் போதுமென்று இரண்டுகைகளாலும் அரிசசந்திரனை, அடங்கச் செய்த தேவர்கள் யாராரை இன்னா ரின்னாரென்று நாம் தெரிந்து சொல்லமாட்டுவோம்! எ-று.

பூரை பூரை - போதும் போதும் என்பது பொருள். (கசு)

மீட்டு மன்னவன் விமலனைத் தொழுதிவண் மிடைந்த
கூட்ட மாயுளா ரியாவர்க்கு மாகெனக் குறித்தான்
நீட்டும் பல்சினைக் கமைவதென் றேநெடு முதலில்
ஊட்டு நீரவ ரனைவர்க்கு முளங்குளிர்ந் தன்றே.

இ-ள். அதன் பின்பும் அரிச்சந்திரன் பரமசிவனை வணங்கி இங்கே வந்துகூடின கூட்டமானவர்கள் யாவருக்கும் மிகுந்த வந்தனம் ஏற்கக்கடவதென்று குறிப்பித்தான். நீண்ட வேரிலே ஊற்றுகிற நீர் நீட்டமான பலகிளைகளுக்கு ஏற்பதானதல்லவோ? அப்படியே அங்கேவந்த எல்லாருக்கு மனது குளிர்ச்சியாயிற்று. எ-று. (கஎ)

ஐய னேயெமை வழிவழி யடிமைகொண் டருள்கூர்
செய்ய னேசிவ லோகனே சுருதியின் சிரத்தின்

மெய்ய னேயுனை விழிகளாற் கண்டுவீழ்ந் திறைஞ்சி
உய்ய நாயினேன் புரிதவ முணர்கிலே னென்றான்.

இ-ள். சுவாமி! எங்கள் வம்ச பாரம்பரியமாய் அடிமை கொண்டு கிருபையிலே விளங்குகின்ற சிவந்த வடிவனே! சிவலோகத்தை யுடையவனே! வேதத்தின் றலையிலே விளங்குகின்ற தலைமையான துணைவனே? தேவரீரை என்கண்களாலே கண்டு கீழேவிழுந்து வணங்கிப் பிழைக்க நாய்போன்றயான்செய்த தவமின்ன தென்று தெரிந்திலே னென்று சொன்னா னரிச்சந்திரன். எ-று. (௧௮)

தையல் லம்பிகை தனைத்தொழுஞ் சந்திர மதியைக்
கையி னாலெடுத் தாங்கவள் கற்பினைப் புகழ்ந்தாள்
துய்ய முப்பத் திரண்டறம் வளர்த்தகை தொடலும்
மெய்கு ழைந்தது தழைந்தது பேரின்ப வெள்ளம்.

இ-ள். அப்போது சுந்தரியான பார்வதியை வணங்கி நிற்கிற சந்திரவதியைத் தன் கையினாலே வாரியெடுத்து அவளுடைய பதிவிரதா தருமத்தை மிகவுங் கொண்டாடினாள். பார்வதி தேவி அப்படிப் பரிசுத்தமான முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தகையினாலே தொட்டவளவிலே சந்திரவதியினுடைய உடம்பெல்லாம் நெகிழ்ந்து விளங்க லாயிற்று. பேரின்ப வெள்ளமும் உள்ளே பெருகுதலாயிற்று. எ-று. (௧௯)

மயிலை முற்செல நடத்தியே வரைபக வெறிந்தோன்
அயிலெ டுத்தசெங் கையினால் வருகென வழைக்கக்
குயின்மொ ழிச்செழுங் குதலைவா யரசிளங் குமரன்
துயினு ணர்ந்தவர் போற்புகுந் திணையடி தொழுதான்.

இ-ள். அப்போது கிரவுஞ்சகிரி பிளக்கக் குத்தின முருகவேளானவர் மயில் வாகனத்தை முன்னே போகும்படி செலுத்திக்கொண்டு வந்து வேல் பிடித்த சிவந்தகையினாலே தேவ தாசா வாவென்று கூப்பிட, உடனே குயில் போலும் வசனத்தையுடைய சந்திரவதி பெற்ற செழுமையான மழலைச்சொல்வசனிக்கிற வாயையுடைய இளமையான அரசகுமாரன் நித்திரை தெளிந்து விழித்தவர்களைப்போ லெழுந்து வந்து முருகவேளினுடைய இரண்டு பாதங்களையும் வணங்கினான். எ-று. (௨௦)

வேலன் கூயசேய் துணையெனக் காசியர் வேந்தன்
பால னாவிபெற் றெழுந்துபோய் முருகனைப் பணிந்தான்
சீல மேவுமிச் சிறுவரோ ரிருவருஞ் சிறப்பிற்
கால காலனுந் தேவரு நிற்பது கண்டார்.

இ-ள். அப்படி முருகவேளானவர் கூப்பிட்ட பிள்ளைக்குத் தம்பிபோல் காசி தேசத்தாருக் கரசனுடைய பிள்ளையும் உயிருண்டாகி யெழுந்திருந்து அந்த முருகவேளை வணங்கினான். நற்குணங்க ளுண்டான அந்த இரண்டு பிள்ளைகளும் அங்கே தங்கள் தங்கள் சிறப்புடனே பரமசிவனும் மற்றைத்தேவர்களும் வந்துகூடி நிற்கிறதைப் பார்த்தார்கள். எ-று. (௨௧

ஆசி னன்குணத் தயோத்தியர் வேந்தனு மணங்கும்
காசி வேந்தனு மதலைய ரிருவருங் களித்துக்
கூசி மெய்ம்மயிர் பொடித்திடக் கொண்டனா புளகம்
வீசி யோங்கிட விறைஞ்சினு ரவசமே வினரால்.

இ-ள். குற்றமில்லாத நல்ல குணத்தை யுடைய அயோத்தியாபுரிக் கரசனை அரிச்சந்திரனும் காசிராஜனும், இரண்டுபிள்ளைகளும் சந்தோஷித்துக் கூசுதலாய் உடம் பெல்லாம் உரோமங்கள் சிலிர்க்கபுளகங் கொண்டார்கள். பின்னும் அந்தப் புளகாங்கிதமே மிமிர்ந்து மேன்மேலாக முருகவேளை வணங்கினுர்கள். பரவசமுமானுர்கள். எ-று. (௨௨)

மன்னர் மன்னனை நோக்கியே மலர்க்கர மமையா
என்னை யோவெனு வுருகித்தந் திருவுள மிரங்கி
முன்னை யுத்தம ரெவருளு முறைமைக்கு நெறிக்கும்
உன்னை யொப்பவ ரிவரென மூவரு முரைத்தார்.

இ-ள். அந்த ராஜாதிராஜனைப்பார்த்து மலர்போலுங் கையினால் அமரச்செய்து, இது என்ன சிறந்த குணம்? ஐயோ வென்று மனமுருகித் தங்கள் திருவுள்ளமிரங்கி அரிசசந்திர மகாராசனே! முன்புள்ள உத்தமர்களெல்லாரிலும் நீதிக்கும் நீதியிற் செல்லுகிற நன் மார்க்கத்துக்கும், உன்னை யொப்பானவர்க ளொருவரு மில்லையென்று மும்மூர்த்திகளுஞ் சொன்னுர்கள்.

தேவ தேவர்க ளருளிய திருமொழி கேளா
யாவ ரிப்பயன் பெற்றவ ரென்றுளைநந் துருகிப்
பூவ ருங்குழல் வல்லியும் புதல்வரும் புருடர்
மூவ ரும்விழுந் தெழுந்துபன் முறைமுறை துதித்தார்.

இ-ள். அப்படி தேவர்களுக்குத் தேவரான மும்மூர்த்திகளும் அருளிச் செய்வதான திருவார்த்தைகளைக்கேட்டு நம்மைப்போல் யார் இப்படிப்பட்ட பேறுபெற்றவர்களென்று நைந்து உருகுதலாகி பூமணம் வீசுவதானகூந்தலை யுடைய சந்திரவதியும், புத்திரர்களும், மந்திரி-காசிராஜன்-அரிச்சந்திர மகாராஜன் ஆகியமூவரும் அவர்கள் காலிலே விழுந்தெழுந்திருந்து பலவாறு ஒவ்வொருவருந் தனித்தனியே தோத்திரஞ் செய்தார்கள். எ-று. (௨௪)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அன்னவர் வணங்கி யங்கநெக் குருகி யவசமுற் றெழுந்திடு மமைதி, கன்னிபங் காளன் றிருக்கர மமைத்துக் கௌசிகன் றனை யெதிர் நோக்கி, மன்னவன் றனக்கு நீயிடர் விளைத்த வகைமையு மெய்திய வாறும், இன்னநற் றலத்து ளியாவரு மறியா வியம்பெனத் திருவுள மானுர்.

இ-ள். அவர்கள் அப்படி வணங்கித் துதித்து உடம் பெல்லாங் கட்டு விட்டுருகிப் பரவசமாக எழுந்திருக்கிற சமயத்தில், பார்வதி சமேதரானவர் தமது திருக்கைகளால் அவர்களை அமரச்செய்து விசுவாமித்திரரைப்பார்த்து

நீர் அரிச்சந்திர மகாராசனுக்குச்செய்த துன்ப வகைகளும் அந்தத் துன்பங்களை அவன் அனுபவித்ததும் இந்த நல்லோர்கள் கூடின இடத்திலே எல்லோருக்குந் தெரியச் சொல்லுமென்று திருவுளம்பற்றி யருளினர். எ-று.

இம்மொழி யிறைவன் விளுதலு முனிவ னிதயத்திற் றுணுக்கமுற் றெதிர்போய், மும்முறை நிலத்தின் மிசைவிழுந் திறைஞ்சி முதுமறை மொழிகளாற் பழிச்சிக், கைம்மலர் கொடுவாய் புதைத்து மெய்குனிந்துக் கண்கணீ ரரும்பமெய் பொடிப்ப, எம்மையாளுடைய விறைவகேட் டருள்கென் றியாவையு நிகழ்ந்தவா றிசைப்பான்.

இ-ள். இந்த வார்த்தையைப் பரமசிவன் சொல்லிக் கேட்கும் போது விசுவாமித்திரமுனிவர் தம்முள்ளத்திலே பயங்கொண்டு அவருக்குமுன்னே போய் மூன்றுதரம் பூமியிலேபடியவிழுந்து வணங்கி பழைய வேதவாக்கியங்களாலே தோத்திரம்பண்ணி தமது கையாகிய பூவினலே வாயை மூடிக்கொண்டு உடம்பு வணங்கிக் கண்களிலே நீருண்டாகவும் உடம்பும் புளகாங்கிக்கவும் எங்களை யெல்லாம் அடிமையாகக் கொண்ட கடவுளே! கேட்டருளுமென்று நடந்த விஷயங்களெல்லாஞ் சொன்னர். எ-று. (உசு)

வாசவன் முன்னுள் விளுயகா ரணமும் வசிட்டனுந் தானுமன் றிட்ட, பூசலும் விலங்காற் புனமழித் ததுவும் புரவலன் வேட்டைபோந் ததுவும், நீசமங் கையரை விடுத்ததுந் தனக்கு நிருபனன் ருடனித் தேகிக், காசிபுக் கேமங் காத்ததும் விளைத்த கருமமுங் கௌசிக னுரைத்தான்.

இ-ள். முன்னே இந்திரன கேட்ட நிமித்தமும், அதற்கு வசிட்டரும் தாமும் அப்போது செய்து கொண்ட சண்டையும், பின்பு மிருகங் களாலே தினைப்புனமுதலிய நாடெல்லாம் அழியப்பண்ணினதும், அதற்காக அரசன் வேட்டையாட வந்ததும், அப்போது நீச்ச கன்னிகைகளை அனுப்பினதும், அவர்கள் நிமித்தம் அரசன் தனது நல்ல நாடு முழுதும் தமக்குக் கொடுத்து விட்டுப்போய்க் காசிபட்டணத்துச் சுடுகாட்டைக் காத்ததுவும் பின்புநடந்த செய்கைகளும் விசுவாமித்திரர் சொன்னர். எ-று. (உஎ)

என்றவ னுரைக்க விந்திரன் வையத் திகலிநீ யருவினை விளைத்த, தொன்றல பலவுண் டவற்றினுன் மனத்தி லுற்றது பெற்றிலை யுலகம், அன்றவ னளித்து மின்றிதுமட்டு மறநிலை பிழைத்திலனதனுல், வென்றவர் தோற்றூர் யாரென விமலன் வினுவிடக் கௌசிகன் விளம்பும்.

இ-ள். அப்படியாக அந்த விசுவாமித்திர முனிவர் சொல்லவே நீர் இந்திரன் சபையிலே வசிஷ்டருடனே பகைதது அருமையான செய்கைகளைச்செய்தது ஒரு வகையல்ல; அநேக முண்டு. அப்படிச் செய்த வகைளாலே உம்முடைய மனத்திலே கொண்ட கொள்கையை அடைந்தீர் தனது நாட்டை அரிசசந்திரன் கொடுத்த அன்றுமுத லின்றளவும் தனது

தருமநிலையினின்றுந் தவறாத (வில்லாதிருக்கின்றான், அப்படி இருக்கிறதினாலே) வென்றவர் யார்? தோற்றவர் யார்? என்று பரமசிவன் கேட்க விசுவாமித்திரர் சொல்லுகிறார். எ-று. (உஅ)

கோதிலா குணத்தோ னீதியு நெறியுங் குறியுமியா னறிகிலா திகழ்ந்தேன், ஆதலால் வென்றோன் வசிட்டனே தோற்றோ னடியனே யடியனே மேனாட், காதலாற் செய்த தவத்தினிற் பாதி காவலன் றனக்கியா னளித்தேன், ஈதலா லெனக்கன் றீந்த பேரரசு மீந்தன னென்றுரை செய்தான்.

இ-ள். குற்றமில்லாத குணத்தினருகிய அரிச்சந்திரனுடைய நீதியும், (நல்ல) வழியே நிற்கிறதும், அவன் மனக் குறிப்பும் நான் தெரிந்து கொள்ளாமல் இப்படி இகழ்ச்சி செய்தேன். ஆகையால் வென்றவர் வசிஷ்டரே, தோற்றவன் அடியேனே. ஆனதினாலே முன்னாள் நான் அன்புடனே செய்த தவத்திலேபாதி அரிச்சந்திர மகாராஜனுக்குக் கொடுத்தேன். இதை யல்லாமல் அப்போ தெனக்கு அவன் கொடுத்த பெரிதான அரசாட்சியையும் அவனுக்கே கொடுத்து விட்டேனென்று சொன்னார். எ-று. (உகூ)

உரைத்தது செவியிற் காய்ந்த நாராச மொட்டிய தெனவிறை யுருகிக், கரப்பினர் தாமுங் கொடுத்தது வாங்கக் கண்டிலோங் கேட்டிலோங் கையேற், றிரப்பினர் களித்த பொருடனைக் கொண்டோ னிவனெனப் பெயர்படைந் துலகம், புரப்பவன் யானோ விப்பழி தனையான் பூண்கிலே னென்றனன் பின்னும்.

இ-ள். அப்படி அவர் சொன்னது தன் காதிலே காய்ந்த நாராசத்தைப் புகட்டினாற்போலிருக்க அரசன் மனமுருகி ஒருவர் கேட்ட பொருளை இல்லையென்று மறைத்துக் கொள்ளுகிறவர்களுங் கூடக் கொடுத்த பொருளை வாங்கிக்கொள்ள நாங்கள் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை, கையையேந்தி யாசிப்பவர்களுக்குக் கொடுத்த பொருளைத் திரும்பவும் வாங்கிக் கொண்டவனிவனென்னும் பெயர்கொண்டு உலகத்தை யாளுகிறவன் நானோ? அல்லன் இனி இந்தப்பழிப்பை நான் அடையமாட்டேனென்று பின்னுஞ் சொல்லுகிறான்.

இம்மையிற் பழியா மறுமையி னரகமிரந்தவர்க் களித்ததை வாங்கிற், செம்மையோர்க் கெல்லாம் பெருநகையாமித் தீமைசெய் வதற்குநீ யுலகத், தெம்மையோ கண்டா யிதற்குமுன் றீரா விடர்பல விளைத்தனை யெனினும், மும்மையும் பழியே சூட்டுத றகுமோ வென்றனன் முனியதற் குரைப்பான்.

இ-ள். யாசித்தவர்களுக்குக் கொடுத்த பொருளை மீளவும் வாங்கிக் கொண்டால் இப்பிறப்பிற்குப் பழிப்பாகும். வருங் காலத்துக்கு நாசமுண்டாகும். இன்னும் செவ்வைக் குண முள்ள எல்லாருக்கும் பெரிதான இகழ்ச்சி யுண்டாகும் இப்படியாகக் கெடுதலுண்டாகுதற்கு நீர் இந்த வுலகத்திலே எங்களைத்தானோ கண்டீர், இன்னமும் இக்காலத்துக்கு முன்னே தீராத துன்பங்

களையெல்லாம் அநேகமாகச் செய்தீராலும் மூன்று காலத்துக்கும் எனக்குப்பழிப்பையே உண்டாக்குகிறது உம்முடைய பெருமைக்குத் தக்கதோ வென்று சொன்னேன். அதற்கு விசுவாமித்திரர் சொல்லுகிறார். எ-று. (௩௧)

கன்னலங் கழனிநாடு நன்னகருங் கருதிச் செய்தவத்தை யான்விட்டு, மன்னவ னாக வல்லனோ மீண்டும் வள்ளல்கேள் வசிட்டனு மியானும், முன்னமே மொழிந்த முறையறி வதற்குன் முறைமைசோ தித்தறிந் துணர்ந்தேன், நின்னகர் நீயே யாளுதி யென்ன நெடுந்தகை மறுத்தனன் மறித்தும்.

இ-ள். கரும்புகள் விளைவதான அழகுகொண்ட வயல்சூழ்ந்த நாடும் நல்லநகரும்வேண்டி நான்செய்கிற தவத்தைவிட்டு மறுபடியும் அரசனாக மாட்டுவேனோ? ஓ பிரபுவே? கேள், வசிஷ்டமுனிவரும் நானும் இந்திரன் முன்னே வாதாடிக் கொண்ட முறைமையை அறிவதற்காக உனது முறைமையைச் சோதித்துப் பார்த்துத் தெரிந்தேன். ஆகையா லினி உன் பட்டணத்தை நீயே ஆளக்கடவையென்று சொல்ல. அதற்கு நெடிதான பெருமையையுடைய அரிச்சந்திரமகாராசன் மறுபடியுந் தடுத்துச் சொல்லுகிறான். எ-று. (௩௨)

வேதியர்க் காளாய் மின்னையு மைந்தன் றன்னையும் விற்றனன் யான்போய்ச், சாதியிற் கீழாம் புலையனுக் காளாய்ச் சவஞ்சுடு காடுகாத் திருந்தேன், சோதிமண் டபத்தின் மணித்தவி சேறிச் சுடர்முடி கவித்துமண் புரக்க, நீதியன் றென்றே யானர சளித்தே னினக்கதே யெனக்கிதே யென்றான்.

இ-ள். பிராமணருக்கு அடிமையாக என் மனைவியையும் என் பிள்ளையையும் விலைக்கு விற்றேன். நானும் சாதியி லிழிவான நீசனுக்கு அடிமையாய்ப் பிணஞ் சுடுகிற சுடுகாட்டுக் குள்ளே போய்க் காத்துக் கொண்டிருந்தேன். இனி ஒளி பொருந்தின சபாமண்டபத்திலே இரத்தின சிங்காதனத்தின்மேலேறி பிரகாசிக்கின்ற கிரீடத்தைச் சூடிக்கொண்டு உலகத்தை இரட்சிக்கிறது நீதியல்ல வென்று இப்போது நான் அந்த அரசாட்சியை உமக்கே கொடுத்தேன், உமக்கதுவே தக்கது, எனக்கு இதுவே தக்கதென்று சொன்னான். எ-று. (௩௩)

ஆமதே யெனக்குச் சுடலைகாத் திருப்ப தவனிகாத் திருப்பதற் கங்ஙன், போமதே நினக்குத் தொழிலென மறுத்துப் புரவல னுரைப்பது கேளா, வாமமே கலையா டனைவிலை கொண்டு மறையவ னாகி யாண் டுறைந்த, தாமமே தவுங்கங் காளனார் திருமுன் றோன்றிநின் றினையன சொல்வான்.

இ-ள். எனக்குச் சுடுகாட்டைக் காத்திருக்கிறதே தகுதியானது, உலகத்தைக் காத்துக் கொண் டிருக்கிறதே உமக்குத் தக்கதாகும், ஆகையாலினி நீர் அயோத்தியா புரிக்குப்போகிறதே காரியமென்று தடுத்து அரசன் சொல்லுகிறதைக்கேட்டு அழகுள்ள மேகலையணிந்த சந்திரமதியை விலைக்கு வாங்கிக் கொண்டங்கே பிராமணனாகி யிருந்த அக்கினி பகவான் பரமசிவனுடைய சந்நிதி முன்னே வந்து நின்று இந்த வார்த்தைகள் சொல்வதானான். எ-று.

என்னை நீ யுரைத்ததா யெனக்குவிற் றுவ மிகழ்ச்சியோ யாவிவள் விலைப் படுதல், முன்னமே யுணர்ந்து கொள்ளாக் கிளைக்கு முதுமறைக் குலத்துவந் துதித்தது. பின்னையும் மைந்தன் றன்னையும் விற்க விலைகொண் டவாவண மீதென, றன்னைப் பங் காளன் றிருமுன் வைத்தா னரசனு மதிசய முற்றான்

இ-ள். ஓ அரசனே நீ என்ன சொன்னாய்? எனக்கு விற்றதும் உன் தமக்கு இகழ்வாகுமோ! இந்தச் சந்திரவதி விலையாகிறது முன்னமே தானே தெரிந்து விலைக்கு வாங்குகிறதற்குச் சம்மதித்துப் பழமையான வேதப் பிராமணர் குலத்திலே வந்து நான் பிறந்தது பின்னலை யொப்பச் சந்திரவதியையும் மகனையும் நீ விற்க நான் விலைக்குவாங்கின கிரயவோலை இதுவென்று பாரவதிசமேதர் சந்நிதி முன்னே வைத்தான் அதுகண்டு அரசன் ஆச்சரிய மடைந்தான்.

காலனவ் வளவிற் சருங்கடா வேறிக் கருமுகிற் சப்புவிட் டனைய, கோலமுஞ் சிவந்த கண்களுஞ் சிவந்த குஞ்சியுங் குண்டலக் குழையும், சூலமுஞ் சால தண்டமும் பணைத்த தோள்களு மார்பு முந் துலங்க, மூலமா முதலை நேர்த்திக்கிற் நிறைஞ்சி முகமலர்ந் தரசன்முன் மொழிவான்

இ-ள். அந்தச் சமயத்திலே யமதர்மன் கறுத்த எருமைக் கடாவின் மேலேறிக்கொண்டு கறுத்த மேகமானது கிளைகள் விட்டிருக்கிறது போலான கைகால்களோடு கூடின வடிவமும், சிவப்பான கண்களும் சிவந்த தலைமயிர்களும், குண்டலமணிந்த காதுகளும் சூலாயுதமும் காலதண்டமும் பருத்த தோள்களும், மார்பும் விளங்க ஆதியான பெரிய முக்கட்கடவுளைத் தரிசித்துப் பாதத்திலே விழுந்து வணங்கிப் பின்பு முகமலர்ச்சி யுடனே அரசனுக்கு முன்னே சொல்லுகிறான் எ-று (௫௬)

அலைகடற் புவியிற் புலையருக் கடிமை யாவையென் பதுமுதலறிந்து, புலையனுப் பிறந்து கொண்டவன் யானே பெற்றதுந் தந்தவா வணமீ, திலகுலாந் தொடையா யிருந்துநீ காத்தவி மழு யாகசாலை களகாண், தொலைவிலா வடிவென் றுணரினீ யிகழ்ந்த சுடலையைப் பாரென வுரைத்தான்

இ-ள். அலைகளைக் கொண்ட கடலாலே சூழப்பட்ட உலகத்திலே நீசருக்கு நீ அடிமையாவாயென்பதை நான் முன்னமேதானே தெரிந்து நீசனாகப் பிறந்திருந்து உன்னை விலைக்கு வாங்கினவன் நானே, அடிமையாக ஒப்புக்கொண்டு நீ எழுதித்தந்த விலையோலை இதுதான் பசிலை கூடின மாலையணிந்த அரசனே! நீ இருந்து காத்ததான சுடுகாடுமே யாகசாலைகளென்று தெரிந்துக் கொள்வாயாக இது அழியாத பதம்பெனறு நீ எண்ணுவையானால் நீ இகழ்ச்சிசெய்கிற சுடுகாட்டை நீயே பார்த்தறிந்து கொள்ளென்று சொன்னான் யமன். எ-று (௫௭)

ஆவண மிரண்டுங் கண்டு தம்மெழுத்தே யாமென வறிந்து மெய்மகிழ்ந்து, கேவணக் கிரண மணிமுடி துளக்கி லேசமும் பீடையு

மகற்றிக், காவண நிழலிற் கழுகெழுந் தோங்குங் கனற்புகைச் சு
டலையைப் பார்த்தான், பூவணங் குறையும் பொய்கையும் வாசப்
பொழிலுமாய்ப் பொலிந்ததை யன்றே.

இ-ள். விலையோலை இரண்டையும் பார்த்துத் தங்க ளெழுத்தே யாமென்றுதெரிந்து உடம்பெல்லாம பூரித்து பெருமை பொருந்தின நிறமான ஒளியையுடைய இரத்தின கிரீடத்தையணிகிற தலையையசைத்துத் துன்பத்தையும் தன்னைப் பிடித்திருக்கிற பீடைகளையும் நீக்கி. பந்தல் போட்ட நிழலைப் போற் கழுகுகள் எழுந்து உயர்ந்து படர்வதாய் நெருப்புப்புகை கிளருவதான சுடுகாட்டைப் பார்த்தான்;பார்க்கவே;அவ்விடம்இலட்சுமிதேவி வாசஞ்செய்வதான பூம்பொய்கையும் மணங்கிளருவதான சோலையுமாக விளங்கியது. எ-று.

வாயெலாம யாக மரமெலாம் யூபம் வானெலா மாகுதித் தூம
ம், தீயெலா முத்தீ திசையெலாந் தருப்பை தீப்படு விறகெலாஞ்
சமிதை, பேயெலா முனிவர் பேசசெலாம் வேதம் பிணமெலா
மதற்கமை பசுக்கள், ஆயவா றெல்லா நோக்கினன் றொல்லை யமை
ந்ததே யீதென வமைந்தான்

இ-ள். அந்த இடங்க ளெல்லாம் வேள்விகள்; அங்குள்ள மரங்களெல்லாம் வேள்வித் தூண்கள்; ஆகாசமெல்லாம் அங்கே வேள்விசெய்கிற புகைகள்; நெருப்பெல்லாம் காருகபத்தியம்-ஆகவனீயம்-தெட்சிணாக்கினியம் - அந்தத் திக்குகளெல்லாம் தர்ப்பைகள், அந்த நெருப்பு மூட்டுகிற விறகுகளெல்லாம் சமித்துகள், அங்குள்ள பசாசுகளெல்லாம் முனிவர்கள் பேசுமொலியெல்லாம் வேதங்கள். பிணங்க ளெல்லாம் அந்த யாகத்துக்குத் தகுதியான பசுக்கள் இப்படியா யிருக்கிறவைக ளெல்லாம் பார்த்தான். இதெல்லாம் முன்னேதானே அமைந்திருக்கிற தென்று சம்மதமானான். எ-று. (௩௯)

ஆங்கவன் றன்னைப் பாங்குற நோக்கி யரசநீ யயோத்தியி ன
ணுகித், தீங்கற மகுடஞ் சூட்டி யிம்முனிவன் செய்தவம் பாதியுங்
கொண்டு, வாங்குநீ ருலகம பொதுவறப் புரந்து வருதியெம் பதத்
தினி லென்னாத், தேங்கமழ் சடையான் றிருவுள மகிழ்ந்து தேவர்
கோ மாற்குரை செய்வான்.

இள். அப்படி யமைந்த மன்னனைச் சந்தோஷத்துடனே பார்த்து அரசனே! நீ- அயோத்தியாபுரிக்குப் போய் குற்றந்தீரக் கிரீடஞ் சூடிக் கொண்டு இந்த விசுவாமித்திரர் செய்த தவத்திற்பாதியும் உன்வசமாக்கினவனாய். வளைந்த கடல் சூழ்ந்த உலக மெல்லாம் உனக்கே சொந்தமாகஇரட்சித்தும் பின்பு நம்முடைய பதத்துக்கு நீ வந்து சேர்க்கடவையென்று மணம் பரிமளிக்கின்ற சடையையுடைய பரமசிவமானவர் தமது திருவுள்ள மகிழ்வாய் தேவேந்திரனைப் பார்த்துச் சொல்லுகிறார். எ-று. (௪௦)

காரண மொன்று கேட்டியா னீயுங் காசிபன் முதன்முனிவர
ரும், வாரண வாசி மன்னனு மயோத்தி மன்னவன் றன்னு
டனேகித், தோரண வீதித் திருநகர் புகுந்து சுடர்முடி சூட்டிய
பின்னர், ஊரணைந் திடுகென் றுரைத்திட வணங்கி யுவகையா லன்
னவ ருரைப்பார்.

இ-ள். இனிச் செய்யவேண்டிய காரணமொன்றுண்டு கேள். நீயும்காசிபர்முதலான முனிவர்களும், வாரணவாசிக்கரசனும், இந்த அயோத்தியாபுரிக்கரசனை அரிச்சந்திரனுடனேபோய் தோரணங் கட்டியிருக்கிற வீதிகளையுடைய அயோத்தியாபுரியாகிய திருநகருக்குள்ளே புகுந்து அரசனுக்கு ஒளிபொருந்தின கிரீடஞ்சூட்டினபின்பு என் னூருக்கு நீ போகக்கடவையென்றுசொல்ல, அதற்கவரை வணங்கி அவர்கள் சொல்லுகிறார்கள். எ-று. (௪௧)

திங்கண்மேவியசெஞ் சடைமுடி யாய்நின் றிருவுளத் தின்படி யல்லால்,எங்கண்மாட் சிமைவே றில்லையென் றளித்த வேவலந் தலைமிசைக்கொண்டார், அங்கண்மா ஞாலமகன்றெழுந் தீச னணிதிகழ் கயிலையிற் புக்கான்,செங்கண்மா கிலேகிய பார்கடல் புகுந்தான் றிசைமுகன் றனதுல கடைந்தான்.

இ-ள். சந்திரன் பொருந்தின சடைமுடியையுடையவரே! தேவரீர்திருஉள்ளத்தின்படியே யல்லாமல் எங்கள்பெருமை வேறொன்று மில்லை யென்று அவர்கட்டளையிட்ட எவலைத் தங்கள்தலைமேலே கொண்டார்கள். அப்போது அந்த அழகான இடத்தையுடைய பெரிதான அவ்வூரைவிட்டுப் பரமசிவனவர் அழகு விளங்குகின்ற கயிலாசமலைக் கெழுந்தருளினார். சிவந்த கண்களையுடைய திருமாலானவர் திருப்பார்கடல் போய்ச் சேர்ந்தார். பிரமதேவன் தனது சத்தியலோகம் போயினன். எ-று. (௪௨)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கருத்தினின் மகிழ்ச்சி யோங்கக் கடவுளோ ரவன் மாறு
தருத்திகொண் டேகித் தத்தஞ் சார்பினி லடைந்த பின்னர்
வருத்தமும் வினையு மாற்றி மன்னனை மகுடஞ் சூட்டி
இருத்தினும் போமோ மென்று விந்திர னினிதி ருந்தான்.

இ-ள். மனத்திலே சந்தோஷ மதிகமாகத் தேவர்கள் யாவரும்கடவுளை வலை மறவாமல் அன்புகொண்டு தங்களிடம்போய்ச் சேர்த்தபின்பு உண்டான வருத்தத்தையும் மற்ற பாவச்செய்கைகளையும் போக்கி அரசனுக்குக்கிரீடஞ்சூட்டி அயோத்தியி லிருக்கச்செய்து பின்பு நாம் போவோமென்று இந்திரன் சன்தோஷமாகக் கூடவிருந்தான். எ-று. (௪௩)

காசிபன் பிருகு ரோமன் கௌதமன் பாத்து வாசன்
கோசிகன் வசிட்டன் சன்னு குறுமுனி மரீசி யாதி
ஆசிறு ரதன்ம தங்க னத்திரி முதலோர் சூழக்
காசியி லினிதி ருந்தார் கழிந்தது கங்குற் போது.

இ-ள். காசிபர்- பிருகு- ரோமசர்- கௌதயர்- பரத்துவாசர்- விசுவாமித்திரர் - வசிஷ்டர்- சன்னுமாமுனிவர் - அகஸ்தியர்- மரீசிமுதலான குற்றமில்லாத நாரதர்- மதங்கா- அத்திரி முதலானவர்களும் ஒன்றுகூடிக் காசிப்பட்டணத்திலே சந்தோஷமாகக் கூடியிருந்தார்கள். அந்த ராத்திரி காலமுங் கழிந்தது. எ-று. (௪௪)

கழிந்தது கங்குற் போது கழிதலுங் காசி வேந்தன்
மொழிந்தன னன் விரைவி னந்த முரட்படை யெழுக வென்று
செழுந்தட முரச மெங்கு மறைந்திடத் திசைக டோறும்[ச்
சழுந்தன தேரு மாவு மியானையுஞ் சேனை தானும்.

இ-ள். அன்றிராத்திரி அப்படிக் கழிதலாயிற்று. கழிந்தஉடனே காசி ராஜனனவன் சீக்கிரத்திலே தனதுபலங்கொண்ட சேனைகளெல்லாம் பிரயாணமாகக் கடவதென்று ஆக்ஞாபித்தான். உடனே செழுமையான பெரிய பேரிகைகளெவ்விடத்து முழக்க, திக்குகளெல்லாம் தேர்களும்குதிரைகளும் யானைகளும் காலாள்களும் எழுதலாயின. எ-று. (௪௫)

கரிபரி யீட்டத் தோடுங் கணமணித் தேருந் தாரும் [னும்
தெரிவையர் குழாமுஞ் செம்பொற் சிவிகையுங் கவிகை தா
விரிபொருந் தூளி யார்க்க வெண்கொடிப் படல மூடச்
சரிபெருங் கடல்கள் போல்வந் தரசனைச் சார்ந்த வன்றே.

இ-ள். யானை- குதிரைகளின் கூட்டத்துடனே கூட்டமான இரத்தினத்தேர்களும் சேனைகளும் பெண்கள் கூட்டமும் சிவந்த பொற் பல்லக்கும் குடைகளும் விரிந்து வருகிறதினு லுண்டான பெரிதான தூளிகள் திமிரவும்வெள்ளைக்கொடிகள் அந்தத் தூளிப்படலத்தை மறைக்கவும் அலைகள் சஞ்சரிக்கின்ற கடல்களைப்போல் வந்து அரிச்சந்திரமகாராஜனைக் கூடின. எ-று.

வானவர் கோனும் வேத மாமுனி வோரும் வைவேற்
றானையுங் காசி வேந்துஞ் சத்திய கீர்த்தி தானும்
ஆனையுந் தேரு மாவு மடர்ந்தெழ வயோத்தி வேந்தன்
மாநகர் விட்டெ ழுந்தான் மழையென முரச மார்த்த.

இ-ள். தேவர்களுக் கரசனுன இந்திரனும் பெரிய வேத முனிவர்களுங் கூரிய வேலையுடைய சேனைகளும் காசிராஜனும் சத்தியகீர்த்தியும் யானைகளும் தேவர்களும் குதிரைகளும் நெருங்கிவர, அயோத்தியாபுரிக் கரசனுன அரிச்சந்திரன் அந்தப் பெரிதான காசிப்பட்டணத்தைவிட் டெழுதலானுன். அப்போது மேகங்கள்போல் பேரிகைகள் முழங்கின. எ-று. (௪௭)

கானடை யேகு மன்னைக் காசியர் வேந்தன் கண்டு
தேனடை யலங்கன் மார்ப தேர்மிசை யேறு கென்னத்
தானது மறுத்த லோடுந் தபோதன ரெல்லாம்வேண்ட[தார்
வானவ ரெடுத்துச் செம்பொன் மணிநெடுந் தேரில் வைத்

இ-ள். கால்நடையாகச் செல்லுகின்ற அரசனைக் காசிப்பட்டணத் தரசன்பார்த்து தேனுக்காக வண்டுகள்வந்து கூடுவதான மாலையையணிந்த மார்பனே! நீர் தேர்மே லெழுந்தருளுமென்று சொல்ல, அரசன் அது வேண்டாமென்றுசொல்ல, தவமுனிவர்களெல்லாரும் வேண்டிக்கொள்ள, அப்போது தேவர்களெல்லாருங்கூடி அரிச்சந்திரனைச் சிவந்தபொன்னுலும் இரத்தினங்களாலுஞ் சமைந்த நீண்ட தேரின்மே லெடுத்தேற்றினுர்கள். எ-று. (௪௮)

சந்திர மதியைக் கற்பின் றழலினைத் தீண்ட வஞ்சி
அந்தரத் திமையோர் மாந்த ரனைவரு மகல நின்றார்
இந்திரன் றேவி யென்னு மிளமுலைக் குதலைச் செஞ்சொற்
சுந்தரி திருக்கை பற்றிச் சுடர்மணித் தேரில் வைத்தாள்.

இ-ள். சந்திரவதியாகிய பதிவிரதாக்கினியைத் தொடப்பயந்து ஆகாயத்திலுள்ள தேவர்கள் பூமியிலுள்ள மனிதர்கள்முதலான எல்லோரும் தூர நின்றார்கள். அப்போது இந்திரன் தேவியென்கிற இளமையான கொங்கைகளையும் மழலைபோலும் இனியசெவ்விதான வசனங்களையுமுடைய இந்திராணியானவள் தனதழகான கைகளாலெடுத்து அந்த ஒளிபொருந்தின தேரின்மே லேற்றினாள். எ-று. (௪௯)

கண்ணிபாற் பட்டு முன்று கழன்றவெங் களிறுங் கன்றும்
திண்ணிய பிடியும் பண்டைப் பயிலிடஞ் சேர்தல் போலப்
புண்ணிய வேந்துஞ் சேயும் பூவையுந் தேரி லேறி
மண்ணிலுள் ளோர்கள் வாழ்த்த மாநகர் விட்ட கன்றார்.

இ-ள். வேடர் வலைக்குளகப்பட்டு வருந்திப் பின்பு அவ்வலையை விட்டு நீங்கின வெவ்விதான ஆண்யானையும், அதன்கன்றும், பெண்யானையும் முன்னே தாங்கள் சஞ்சரிக்கின்ற இடத்துக்குப் போகிறதுபோல மகா புண்ணியவானான அரிச்சந்திரமகாராஜனும் மகனும் தேவியும் தேர்மேற்கொண்டு உலகத் துள்ளவர்களெல்லாம் மங்களம்பாட அந்தப் பெரிதான காசிப்பட்டணத்தை விட்டு நீங்கினார்கள். எ-று. (௫0)

தோரண வாயில் பின்னாத் துழனியங் கழனி நண்ணிப்
பூரண வாவி நீங்கிப பூம்பொழில் பலவுந் தீர்ந்து
காரணத் தமைச ரோடுங் கடற்பெருஞ் சேனை யோடும்
வாரண வாசி யாற்றின் வண்டயின் வந்தி றுத்தான்.

இ-ள். தோரணங்கள் கட்டியிருக்கிற கோட்டைவாயில் பின்னிட ஒலிகளையுடைய அழகிதான மருதநிலத்துக்குவந்து நீர்நிரம்பின குளங்களையுங் கடந்து பூஞ்சோலைகள் பலவற்றையும்நீங்கி பிரதானரான மந்திரிகளுடனே கடல்போன்ற பெரிதான சேனைகளுஞ்சூழ வாரணவாசியினது ஆற்றங்கரையோரத்திலே வந்திறங்கினார்கள். எ-று. (௫௧)

அந்தமா நதியிற் றீர்த்த மாடியன் றங்கு வைகி
மந்தரா சலப்பு யததான் மற்றைநா ளேகி வாசச்
சந்தன வனியும் வெற்புந் தடங்களுங் கடந்து மெல்ல
வந்தநாள் யமுனை யாற்றின் கரையினை வல்லை சார்ந்தான்.

இ-ள். அந்தமகாநதியிலே ஸ்நானஞ்செய்துகொண்டு அன்றையத்தினம் அங்கேதங்கி மந்தரமலைபோலுந் தோள்களையுடைய அரிச்சந்திர மகாராஜன் மற்றநாள் வாசமிக்க சந்தனவனங்களும் மலைகளும் மேடுகளுங் கடந்து மிருதுவாக வந்தபோது யமுனையாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். எ-று.

அநந்தி தீர்த்த மாடி யணிமணி தரளஞ் செம்பொன்
மின்னவிர் தரங்கக் கோதா விரித்துறைத் தீர்த்த மாடிப்
பன்னதி படர்ந்து வெற்றிப் பகீரதன் கொணர்ந்த கங்கை
நன்னதி தன்னை வந்து நண்ணினன் விண்ணோ ரோடும்

இ-ள் அநந்தநதியிலும்ஸ்நானஞ்செய்துகொண்டு அழகான இரத்தினங்களும் முத்துகளும் செம்பொன்னும் மின்னுகின்ற ஒளியைக்கொண்ட அலைகளையுடைய கோதாவிரித்துறையிலும் ஸ்நானஞ்செய்துகொண்டு இப்படியாகவே பலநதிகளுங் கடந்துவந்து ஜயத்தையுடைய பகீரதன் கொண்டு வந்தகங்கையாகிய நல்லநதியைத் தேவர்களுடனே வந்துகண்டான் எ-று (௫௩)

வேலிரு புறமு மண்ட வெண்குடை மேனி ழற்ற
நாலிரு திசையுந் தேரு நாகமு மாவுஞ் செல்ல
மேலிரு விசும்ப டைந்த தூளி மறைச்சவெண் கவரிக் கற்றை
காலிரு மருங்கு மாரச்ச சங்கைமா நதியைக் கண்டான்

இ-ள் வேலாயுதங்கள் இருபக்கத்திலுங் கூடிவரவும், வெள்ளைக்குடை மேலேநிழலைச்செய்யவும் எட்டு திக்கிலும் இரத்தினங்களும் யானைகளும் குதிரைகளும் நடக்கவும் மேலே பெரிதான ஆகாயத்தைத் தூளிப்படல மூடவும் வெண்சாமரங்களின் கற்றைகளால் காற்று இருபுறத்திலும் வீசவும் போய்க் கங்காநதியைக் கண்டான் அரிச்சந்திர மகாராசன் எ-று (௫௪)

அருகுவந் தணைந்து துள்ளிக் கனைத்தெழுந் தாறு வன்பு
தருகுமிளங் கன்றைக் கண்ட தாய்முலை சுரந்த தேபோல்
நிருபனு மாதுஞ் சேயு நெடுநகர் நோக்கி மீண்டு
வருவது கண்டு கங்கை மாநதி பெருகிற் றன்றே

இ-ள் தனது பக்கத்தில் வந்து கூடின்று துள்ளிக் கனைத்து நிமிர்ந்து நீங்காத அன்பைத் தருகின்ற இளங்கன்றைக் கண்ட தாய்ப்பசுவுக்கு மடிசுரந்தாற்போல அரசனும் மனைவியும் மகனும் தங்களுடைய நெடிதான பட்டணத்தைக்குறித்துத் திரும்பிவருகிறதைக்கண்டு அந்தப் பெரிதான கங்காநதி பெருகுதலாயிற்று (௫௫)

வரைபல வுருட்டி நீண்ட மரம்பல பிடுங்கி வெள்ளை
நுரைபல சிதறி யெங்கு நுறையும் வாராலும் பாய
நிரைநிரை பதும ராக நித்திலங் கொழித்தி ரண்டு
கரையையுங் கடந்து காந்தக் கடலென வந்த தன்றே

இ-ள் கங்காநதியானது பலமலைகளையு முருட்டிக்கொண்டு நீண்ட பல மரங்களையும் பிடுங்கி வெண்மையாகப் பலவகை நுரைகளையுஞ் சிதறி எவ்விடத்திலும் மலங்குமீனும் வாராலமீனும் துள்ள வரிசை வரிசையாகப் பதும ராக மணிகளையும் முத்துகளையும் ஒதுக்கிக்கொண்டு இருபுறத்திலுமுள்ள கரைகளையு முடைத்து யுக முடிவிலே பெருகுகிற கடலெனும்படி வருதலாயிற்று எ-று

நுறை - மலங்குமீன் (௫௬)

விரிகட லென்ன வந்த விமலையின் கரையி னேறிச்
சொரிமலர்ச் சூழ லேறுஞ் சுடர்மணிப் பாறை தோறும்
வரிமணல் வண்ட லேறு மால்வரைச் சார லேறுந்
தெரிவையர் குழாமுந் தேவர் சேனையு மடைந்த வன்றே.

இ-ள். விரிந்த கடல்போல் வருவதான கங்காநதிக் கரையிலேயிச் சிந்துகின்ற பூஞ்சோலைகளிலும் விளங்காநின்ற இரத்தினப்பாறைகளிலும் ஒதுங்கிக்கிடக்கிற மணற்குவியல்களிலும் பெரிய மலைச்சாரல்களிலும் பெண்கள் கூட்டமும் தேவர்கூட்டங்களும் வந்துசேர்ந்தன. எ-று. (௬௭)

சுரர்சில சூழல் சார்ந்தார் தோகைய ரோடு மண்வாழ்
நரர்சில சூழல சார்ந்தார் நான்மறைத் தவத்திற் பெற்ற
வரர்சில சூழல சார்ந்தார் மகரயாழ் வல்ல விச்சா
தரர்சில சூழல் சார்ந்தார் தபனனுங் குடபாற் சார்ந்தான்.

இ-ள். தேவர்கள் சிலவிடங்களிலே தங்கினார்கள். பெண்களுடனே மண்ணுலகிலே வாழுகின்ற மனிதர்கள் சில இடங்களிலே தங்கினார்கள். நான்கு வேதங்களையும் பாராயணஞ்செய்கிற தவத்தினைக்கொண்ட சிரேஷ்டர்கள் சில இடங்களிலே தங்கினார்கள். மகரவீணைகள் பாடவல்ல வித்தியாதரர்கள் சில இடங்களிலேதங்கினார்கள். அப்போது சூரியனுமேலைத் திக்கிலே போய்த் தங்கினான். எ-று. (௬௮)

கரடவெங் களிறு மாவுங் காரகி லாரஞ் சாதி
சுரதரு மத்தி னோடுஞ் சேர்த்தனர் துங்கத் தெய்வப்
புரவிகள் பூண்ட நேமிப் புட்பகத் தேருஞ் செம்பொன்
வரைபல நிரைத்த தென்ன வடகரை செறிந்த வன்றே.

இ-ள். மதமொழுகுகின்ற சுவடுகொண்ட வெவ்விய யானைகளையும் குதிரைகளையும். கறுத்த அகில்விருட்சங்களிலும் சந்தன விருட்சங்களிலும் சாதி விருட்சங்களிலும் தெய்வவிருட்சங்களிலும் சேரக்கட்டினார்கள். பின்பு உ வான தெய்வக்குதிரைகள் கட்டின உருளைகளையுடைய புட்பகரதங்களும் சி ந்த பொன்மலைக ளனேகங்களை வரிசையாக வைத்தாற்போல வடபுற கரையிலே நெருங்கின. எ-று.

ஆதப மகற்றி வெய்யோ னாழ்கடற்புகுந்த பின்னர்
பாதக முனியும் பாரிற் பாவமு மகன்ற காலை
பூதல வேந்தன் வந்து புண்ணியம் பரந்த தேபோ
சோதிமா மதியந் தோன்றித் தூநிலா விரித்த தன்

இ-ள். வெயிலை நீக்கிக்கொண்டு சூரியன் ஆழமானகடலிலே பே ந்தபின்பு, பாவச்செய்கைகளைச் செய்த விசுவாமித்திர முனிவரும் லுள்ள பாவங்களு நீங்கினபின்பு, உலகத்தை யாளுகின்ற அரிச்சந்தி னுடைய புண்ணியமே எவ்விடத்தும் பரவினாற்போல் ஒளியைப் கொண்ட சந்திரனுதயமாகிப் பரிசுத்தமான சந்திரிகையைப்பரப்பிய

மாற்கட மலையுந்தேரும வாசியு மன்னர் தாமும
வேற்கடற் படையுந் தோன்ற விரிந்தவெண் ணிலவி னீட்டம்
நீற்கட னிடைத் தோன்று நிலமும்மண் டிசையும் விண்ணும்
பாற்கட லுகாந்தந் தோற்ற படியெனப் பரந்த தன்றே.

இ-ள் மயக்கத்துடனே மதத்தைக்கொண்ட மலைபோன்ற யானைகளும் தேர்களும் குதிரைகளும் அரசர்களும் வேலையுடைய கடல்போன்ற சேனைகளும் விடக்கமாக விரிவான வெள்ளைச் சந்திரிகையினுடைய கூட்டமானது நீலநிறமான கடலினடுவே தோன்றுகிற பூமியும் எட்டுத்திக்கும் ஆகாயமும் பாற்கடலானது யுகமுடிவிலே பெருகினபடிபோற் பரவியது- எ-று. (௬௧)

நல்லவர் மனத்தொடர்பா நல்லவர்க் குற்றதேபோல்
பல்லவப் பொழிலு மாறும் பருமணற் பரப்பும் வெற்பும்
புல்லுமான் மரையு மேறு மேதியும் புள்ளுந் தூரத்
தெல்லவர் தமக்குந் தோன்ற வெண்ணிலா வெறிந்த திந்து.

இ-ள- நல்லோர்களுடைய மனசம்பந்தம் நல்லோர்களுக்கே விளங்குவதைப்போல், தளிர்களையுடைய சோலையும் ஆறும் பருத்தமணற்குன்றும் மலையும் கூடிசஞ்சரிக்கின்ற மான்களும் மரைகளும் யானைகளும் பக்ஷிஜாதிகளும் தூரத்திலே யிருக்கிற எல்லாருக்குந் தோன்றவதாக மென்மையான சந்திரிகையை சந்திரன வீசியது. எ-று. (௬௨)

நிரந்தரம வயிரந் துப்பு நித்திலம பசசை நீலம்
பரந்துசெய மணியு முந்தும பகிரதி யாற்றை நோக்கிச்
சிரந்தனை துளக்கி மேன்மே லணிமயிர் சிலிர்க்க வைவேற்
புரந்தரன் மகிழ்ச்சி கூர்ந்து புலோமசைக் குரைப்பா னானான்.

இ-ள். எப்போதும் வயிரம - பவளம-முத்து-பசசை-நீலம் - பரவுதலான சிவந்த மாணிக்கம் ஆகிய இவைகளை அலைகளாலொதுக்குவதான கங்கா நதியைப் பார்த்துத் தலையை அசைத்து மென்மேலும் அழகிதான உரோமங்கள் சிலிர்க்க கூரியவேல்போன்ற வச்சிராயுதத்தையுடைய இந்திரன் சந்தோஷத்தை யடைந்து இந்திராணிக்குச சொல்லலானான். எ-று. (௬௩)

கண்ணுதல் சடையின் வீழ்ந்த கங்கையின் கரையில் வந்து
நண்ணுத லுற்ற வேக நாகமும் பூகக் காவும
மண்ணுல கத்திற் றுன்று மணிகளும புள்ளு மாவும்
விண்ணுல கத்தி லுண்டோ மெல்லியல் விளம்பு கென்றான்.

இ-ள். பரமசிவனுடைய சடையிலிருந்து விழுந்துவருகிற இந்தக் கங்கா நதிக் கரையிலேவந்து சேருதலான வேகத்தையுடைய நாகங்களும் கமுகங் காடுகளும் மணணுலகத்திலே பொருந்துகின்ற இரத்தினங்களும் பட்சிகளும் மிருகங்களும் நமது ஆகாயவுலகத்திலே நீ கண்டதுணடோவெண்ணேசொல் லென்று கேட்டான். எ-று (௬௪)

மந்திர வானோர் கோமா னுரைத்திட மகிழ்ந்து நந்தம்
இந்திர புரத்து மந்தோ விச்சிறப் பில்லை யென்றாள்

சுந்தரி யுடனே கூடித் துயின்றனன் மகவான் பின்னைச்
சந்திர னுதய மாறக் கரணிவந் துதயஞ் செய்தான். ௬௪

இ-ள். ஆலோசித்தலையுடைய தேவர்களுக் கரசனானவனிப்படிச் சொல்லவே சந்தோஷங்கொண்டு நம்முடைய இந்திரலோகத்திலும் ஓ ஓ இப்படிப் பட்ட சிறப்புகள் கிடையாதே என்றாள். அப்படிச்சொன்ன இந்திராணியுடனே கூடி இந்திரன் நித்திரை செய்தான். பின்பு சந்திரன் அஸ்தமிக்கச் சூரியன் வந்து உதயமாயினான். எ-று. (௬௫)

மாமதி யொளிம ழுங்கி மயங்கிருள் விடிந்த காலை
போமதி னினைவே யாகிப் புலரியி னெழுந்தி ருந்த
தாமதி யாம லேகித் தடங்களும் வெற்பு நீங்கிக்
கோமதி யாற்றின் வண்டற் குன்றிடைச் சென்றி ருந்தார்.

இ-ள். அந்தப் பெரிதான சந்திரனொளிகுறைந்து அன்றண்டான் இருட்காலங் கழிந்தபின்பு பிரயாணமாகிறதிலே எண்ணங்கொண்டு விடியற்காலத்திலேதானே யெழுந்திருந்து தாமதஞ்செய்யாமற்போய் மேடுகளும் மலைகளுங் கடந்து கோமதியாற்றினது வண்டல்கூடின மலையினிடத்திலேபோ யிருந்தார்கள். எ-று. (௬௬)

வள்ளலை முனிவன் கூட்டி வருகின்ற வாறு கேட்டுப்
பள்ளமுற் றும்பர் வெள்ளம் பாய்கின்ற பரிசே போல
உள்ளமு மகிழ ரோமஞ் சிலிர்ப்புற வுரிற் சேனை
வெள்ளமு மரசர் தாமும் வியந்தெதிர் கொண்டா ரன்றே.

இ-ள். மகோதாரனை அரசனை விசுவாமித்திர முனிவர் கூட்டிக்கொண்டு வருகிற சமாசாரங் கேள்வியாய், பள்ளத்தின்மேலே வெள்ளம் பொங்கி வருகிறபடிபோல நயகள்மனமுஞ் சந்தோஷிக்க ரோமஞ் சிலிர்ப்பாக அயோத்தியாபுரியிலுள்ள சேனைகளும் அரசர்களும் அதிசயித்து எதிர்கொண்டார்கள். எ-று. (௬௭)

அயினெடும் படைது றந்த கரத்தின ரயோத்தி மூதூர்
எயில்கடந் தேகி மன்னைக் கண்டன ரிறைஞ்சி வீழ்ந்தார்
மயிர்பொடிப் புறம னங்கண் மகிழ்ந்திட மறலி கொண்ட
உயிர்வரப் படர்து றந்த வுடலமே யொத்தா ரன்றே.

இ-ள். நீண்ட வேலாயுதங்கள் முதலான ஆயுதங்களில்லாத கைகளையுடையவர்களாய் அயோத்தியாபுரியினுடைய மதிலைக்கடந்துவந்து அரசனைக்கண்டு வணங்கிக் காலிலே விழுந்தார்கள். உரோமங்கள் சிலிர்ப்பாக மனங்கள் ஆனந்தத்தையுடைய இயமன்கொண்டுபோன உயிர்வரதுன்பம் நீங்கின உடம்பை யொத்தார்கள். எ-று. (௬௮)

ஆரண முழங்க யோத்தி யணிபெருஞ் சேனை யோடும்
வாரண வாசி வேந்தன் படையொடும் வள்ள லேகித்
தோரண வாயி னண்ணிச் சுடர்மணித் தேரி ழிந்து
பூரண கும்ப மன்னு மண்டபம் பொலியப் புக்கான்.

இ-ள். வேதங்கள் முழங்குகின்ற அயோத்தியா புரியிலுள்ள பெரிதான சேனைகளுடனே வாரணவாசிக் கரசனுனவனுடைய சேனைகளுங்கூட அரிச்சந்திரன்போய் தோரணங்கட்டின கோட்டை வாயிலுக் கருகேபோய் ஒளி பொருந்தின இரத்தினத்தேரை விட்டுக் கீழேயிறங்கி பூரணகுடங்கள் பொருந்தின சபாமண்டபம் முழுதும் விளங்கப் புகுந்தான். எ-று. (௬௯)

பன்முடி வேந்தர் தாழ்ந்து பணியப்பொற் றவிசி னேற்றிச்
சொன்முடி வற்ற நீர்மைத் தாபதர் சூழ்ந்து வாழ்த்த
நென்முடி சாயப் பாயு நீர்வய னுடன் றன்னைப்
பொன்முடி சூட்டி வாழ்த்திப் புரந்தரன் விசும்பிற் போனன்.

இ-ள். அநேகங் கிரீடாதிபதிகள் குனிந்து வணங்கும்படி பொன்மயமான சிங்காதனத்திலே யேறச்செய்து, சொல்லால் முடிவுபெறாத நல்லகுணங்களையுடைய தபோதனர்களெல்லாந் திரண்டுகூடி ஆசீர்வதித் தருள, நெல்லினது தலைவணங்க நீர்பாய்கின்ற வயல்சூழ்ந்த நாட்டை யுடைய அரிச்சந்திரனுக்குச் சுவர்னக் கிரீடஞ்சூட்டி வாழ்த்தி இந்திரன் ஆகாய லோகத்துக்குப் போயினன். எ-று. (௭0)

காருள சோலை சூழுங் கௌசிகன் றீமை நன்கே
நீருள வளவு மீரேழ் நிலையுள வளவு முன்றன்
பேருள தொருகா லத்தும் பிழைப்பில தனக்கு நேர்வே
றுருள ரென்று வாழ்த்தி யருந்தவ முனிவர் போனர்.

இ-ள். மேகங்கள் சஞ்சரிப்பதான சோலைசூழ்கின்ற கௌசிகதேசத் தரசனுன விசுவாமித்திரர் செய்ததீமைகளெல்லாம் உனக்கு நல்லனவே யாயின எழுகடல்களுள்ளளவும் பதினலுலகங்களுள்ளளவும் உனக்கு பேருளதாயிற்று ஒருகாலத்தும் தவறாத லுண்டாகாது. உனக்குச் சரியாக வேறே யாரிருக்கிறார்கள் என்று கொண்டாடி அருமையான தவமுனிவர்கள் போயினர்கள்.

மைந்தனை நின்னை மாதை யித்தனை வருத்தங் கண்டேம்
நிந்தனை சிறிது நின்பாற் கண்டிலே நீதி வேந்தே
எந்தமா தவத்திற் பாதி யாவருங் காண வின்றே
தந்தன முனக்கே யென்று கௌசிகன் றுரை வார்த்தான்.

இ-ள். உன்புத்திரனையும் உன்னையும் சந்திரவதியையும் இவ்வளவு வருத்தங்களெல்லா முண்டாவதாகச் செய்தோம். அதற்காகக் கொஞ்சமேனும் உன்னிடத்திலே பழிப்புண்டாகக் காணேம். ஓ நீதியுள்ள அரசனே! இனி என்னுடைய மகாதவத்திலே பாதி எல்லாருங் காண உனக்கே கொடுத்தேனென்று விசுவாமித்திரர் தாரைவார்த்தார். எ-று. (௭௨)

உற்றறிந் தளவிட் டோரா தும்மையா னிகழ்ந்து பேசப்
பெற்றவை பொறுத்தி ரென்று வசிட்டனுக் கினிய பேசிக்
கொற்றவன் றன்னை யாற்றிக் குமரனை மயிலைத் தேற்றி
மற்றுமந் திரியை வாழ்த்திக் கௌசிகன் வனத்திற் போனன்

இ-ள். பின்னும் சோதித்துத் தெரிந்து அளவுசெய்து காணாமல் உம்மையும் அரிச்சந்திரனையும் நான் இகழ்ந்து பேசலானவைகளை யெல்லால் நீங்கள் பொறுத்துக் கொள்ளுங்களென்று வசிஷ்டமகாமுனிவருக்கு நல்ல இதங்கள் சொல்லி. அரசனையும் துன்பமாறச்செய்து. மகனையும் சந்திரமதியையும் தேறுதல் பண்ணிப் பின்னும் சத்தியகீர்த்தியான மந்திரியையும் வாழ்த்துதல்செய்த விசுவாமித்திரர் தாமிருக்கிற வனத்திற்குப் போயினார். எ-று.

தேவரு முனிவர் தாமுந் திண்புவித் தலைவர் தாமும்
யாவரு மகன்ற பின்ன ரிணைமணிக் கவரி வீச
மூவரு மனைய நீர்மை முனிவனுங் காசி வேந்தும்
ஏவரு நிகரி லானு மினிதுரைத் துடனி ருந்தார்.

இ-ள். தேவர்களு முனிவர்களும் பலங்கொண்ட உலகத் தரசர்களும் எல்லாரும்போனபின்பு இரண்டுமணிமயமான சாமரங்கள்போட மும்மூர்த்திகளையுமொப்பான குணத்தையுடைய வசிஷ்டமுனிவரும் காசிராஜனும் ஒருவரு நிகரில்லாத அரிச்சந்திரனும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு கூடியிருந்தார்கள். எ-று. (௭௪)

இருந்தபின் காசி வேந்தன் வசிட்டனை யிறைஞ்சி யேத்தி
அருந்தவர் தம்பா லைய வறமலான் மறமு முண்டோ
வருந்திட விவர்பா லிந்த வன்கண்மை செய்ய வுள்ளம்
பொருந்திய வாறே தென்ன வசிட்டனும் புகல லுற்றான்.

இ-ள். அப்படி யிருந்தபின்பு காசிராஜன் வசிஷ்டமகாமுனிவரைவணங்கித்துதித்து, ஐயா! அரிதான தவமுனிவர்களிடத்தில் தருமகுணமே யல்லாமலிப்படிப்பட்ட பாபகுணங்களு முளதாகுமோ? இவர்களிப்படி வருத்தமடைய இவர்களிடத்திலே கொடுமை செய்கிறதற்கு விசுவாமித்திரர்மனஞ்சம்மதித்தது யாதுகாரணமென்றுகேட்க, வசிஷ்டர் சொல்லத்தொடங்கினார்.

நிலத்தியல் பற்றே கொண்மூ நீரியல் பதனாற் றங்கள்
குலத்தியல் பெவர்க்கு மன்னா வாழினுங் கெடினுங் குன்றா
தலத்தர சகன்று நீங்கித் தவத்தினா னாலுந் தொல்லை
நலத்தது போமோ வென்று நரபதிக் கினிது ரைத்தான்.

இ-ள். நிலத்தினது தன்மையேயாம் மேகத்தினது நீரினது தன்மையும்அதுபோல் அவரவர்கள் குலசுபாவம் யாவரானாலும் அரசனே வாழ்ந்தாலும் கெட்டாலும் குறைவுபடா. விசுவாமித்திரன் உலகத் தரசாளுகையைவிட்டுத் தவஞ்செய்கிறவனானாலும் பழைய சாதிநன்மையானது விட்டுப் போகுமோவென்று காசிராஜனுக்கு நன்மையாகச் சொன்னார். எ-று. (௭௬)

அன்னது கேட்ட வண்ண லருந்தவத் தோனை நோக்கி
மன்னவ னான வாறு மாமுனி யான வாறும்
இன்னவா றின்ன வாறென் றெனக்கருள் செய்வா யென்னப்
பொன்னணி முடியாய் கேளென் றம்முனி புகல லுற்றான்.

இ-ள். அந்த வார்த்தைகேட்ட காசிராஜன் அருமையான தவத்தை யுடைய வசிஷ்டரைப்பார்த்து அவர் அரசனாயிருந்ததும் பின்பு பெரிய முனிவரானதும் இன்னபடி இன்னபடியென்று எனக்குத்தெரியச்சொல்லவேணுமென்ன, பொன்னாலலங்கிருதமான கிரீடாதிபதியே! கேளென்று அந்தவசிஷ்டர் சொல்லத்தொடங்கினார். எ-று. (எஎ)

மீட்சிக் காண்டம் - முற்றிற்று.

ஆ-விருத்தம்-௧௧அ௬

ஒன்பதாவது,

உத்தர காண்டம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திசைமுழுதுங் கவித்தகுடைச் செங்கோல் வேந்த திசைமுகத்தோன் வழிவந்த குசனென் போற்கு, வசையறுசீர்க் குசன் குசநா பன்வ தூர்த்தன் வசுவென்னும் பெயருடைய மக்க ணால்வர்,குசனுக்குக் கிரிவிரச மென்னு நாடுங் குசநாபற் கரிய கௌ சாம்பி நாடும், வசுவுக்கு வசுமதியும் வதூர்த்த னுக்கு வாரணமென் வள நாடும் வழங்கி னானே.

இ-ள் எட்டுத்திக்குகளுக்கும் நிழலைச்செய்கிற குடையுஞ் செங்கோலையுங்கொண்ட காசிராஜனே ! நான்முகப் பிரமதேவனுடைய வழியிற் பிறந்த குசனென்பவனுக்கு குற்றமற்ற சிறப்பையுடைய குசன், குசநாபன், வதூர்த்தன், வசுவென்கிற பெயர்களையுடைய பிள்ளைகள் நால்வர். அவர்களில் குசனுக்கு கிரவிரசமென்னுநாடும், குசநாபனுக்கு அருமையான கௌசாம்பி நாடும், வசுவுக்கு வசுமதியும், வதூர்த்தனுக்கு வாரணமென்கிற வளம்பொருந்தினநாடும் தகப்பன்கொடுத்தான். எ-று. (க)

அங்கவரிற் கௌசாம்பிக் குசநா பற்கே யைம்பதிற்றி ரட்டியெனு மடைவிற் றேன்று, மங்கையர்தா மொருகாவிற் புகுந்து நாளும் வண்டலிழைத் திடுவாங்கே வாயு வெய்தித், திங்கணுதற் றேமொழியீ ரென்ற னுசை தீரவெனைத் தழுவி நலஞ் செய்மி னென்ன, எங்கள்பிதா வறியவெமை வதுவை சூட்டி யிணங்குவோ மல்லதிதற் கிசையே மென்றார்.

இ-ள். அந்தநால்வரிலே கௌசாம்பிநாட்டை யாளுகிற குசபநாபனுக்குநூறென்கிற கணக்குடனேபிறந்த பெண்கள் ஒரு சோலைக்குள்ளே போய் நாள் தோறும் வண்டலாட்டுச்செய்துகொண் டிருப்பார்கள். அவ்விடத்தில் வாயுபகவான்வந்து சந்திரனிற்பாதிபோன்ற நெற்றியை யுடையீராய தேன்போலு மதுரவசனங்களை யுடையபெண்களே! என்னுசை தீரும்படி என்னைக் கூடிச் சுகத்தைக் கொடுங்களென்றுசொல்ல, அதற்கு அப்பெண்கள் எங்கள் தகப்பனறிய எங்களைக் கலியாணஞ்செய்து கூடினல் கூடுவோம் ; அல்லா

மல் உம்முடைய சொல்லுக்காக நாஙகள் சம்மதியோமென்று சொன்னார்கள். எ-று. (உ)

மறுத்துமறுத் துரைத்திடவும் பொருந்திலாத வல்லியரை முதுகொடிய வாயு மோதி, முறித்துநிலத் திடை வீழ்த்திப் போன பின்னர் மொய்குழலார் தளர்ந்துமனை முன்றி லுற்றார், தெறுத்த வரைக் கண்டிதுவே தென்ன லோடுந் திருவனையா ரழுதழுது செப்பத் தாதை, பிறித்துரையா துள்ளொடுக்கிச் சூளி மைந்தன் பிரமதத்தன் றனக்களித்தான் பேதை மாரை.

இ-ள். ஒவ்வொருவரும் தன் வார்த்தையைத் தடுத்துத் தடுத்துச் சொல்லும்போது தனக்குச் சம்மதியாகாத பெண்களையெல்லாம் வாயுவானவன் முதுகொடியும்படி அடித்து முறியப்பண்ணிப் பூமியிலே விழும்படி செய்துப்போனபின்பு, நெருங்கின கூந்தலையுடைய அப்பெண்கள் தளர்ச்சிகொண்டு தாங்கள் வீட்டுவாசலுக்குப் போனார்கள். தகப்பன் அவர்களைக் கண்டு கோபங்கொண்டு இந்தப்படிவரக் காரணமென்னவென்று கேட்க, அந்த இலட்சுமிக்கொப்பான பெண்கள் அழுதழுது கொண்டுசொல்ல, அது கேட்டுத் தகப்பனானவன் வேறொன்றுஞ் சொல்லாமல் துன்பத்தை உள்ளே ஒடுக்கிக்கொண்டு சூளிபுத்திரனான பிரமதத்தனுக்கு அந்தப்பெண்களை விவாகஞ்செய்து கொடுத்தான். எ-று. (௩)

சூளிமகன் பிரமதத்தன் றன்னைச் சேர்ந்து துயர்நீங்கிச் சுகமோங்கிப் பெருவாழ் வுற்றார், மீளியெழிற் குசனாபன் பின்பு செய்த வேள்விதனிற் காதியெனும் வீரன் றோன்றி, ஆளிதிகழ் தவிசேறி மகுடஞ் சூடி யரசாண்டு சிலகாலஞ் சென்ற பின்னர், காளியைப்போற் கவுசிகையை யீன்ற பின்பு கௌசிகனைப் பெற்றெடுத்தக் காலந் தன்னில்.

இ-ள். அந்தப் பெண்களெல்லாரும் சூளிபுத்திரனான பிரமதத்தனைக் கூட்டித்தங்கள் தேகவருத்தநீங்கிச் சுகத்தையடைந்து பெரியதானவாழ்வைக் கொண்டிருந்தார்கள். வீரத்தன்மைகொண் டெழுகின்ற குசநாபன் பின்னர் செய்த வேள்வியிலே காதியென்கிற ஒரு வீரனுண்டாகிச் சிங்கம் தாங்குவதாக விளங்குகின்ற ஆசனத்தின்மே லேறிக் கிரீடஞ் சூட்டிக்கொண்டு அரசாட்சிசெய்து சிலகாலஞ்சென்றபின்பு காளியைப்போலுள்ள கௌசிகையென்னுமொரு பெண்ணைப்பெற்றுப் பின்பு கௌசிகனைப் பெற்றுவளர்த்த அக்காலத்திலே தானே. எ-று.

இது முதல் மூன்று பாடல்கள் குளகம். (௪)

இருசிகனக் கௌசிகையைப் புணர்ந்து சின்னா ளின்பநுகர்ந் திருவர்தமை யீன்ற பின்பு, பிரமனுலக கணைந்துதவம் புரிந்து மீளப் பிரிவுநினைந் தவள்புலம்ப முனிவன் சீறி, வருபுனலா றுகவெனச் சபித்த லோடு மானகவா வியில் வீழ்ந்து சரையு வோடே, அருகணைந்து பிறிதிழி கோமதியே யானா ளவணிலையீ திவனுலகம் புரக்குநாளில்.

இ-ள். இருடி மகாமுனிவர் அந்தக் கௌசிகை யென்பவளைக் கூடிச் சிலகாலஞ் சுகபோகத்தை யநுபவித்து அவளிடத்தில் பிள்ளைகளைப் பெற்றபின்புத் தவத்தைச்செய்து பிரமதேவனுடைய வுலகத்தைச்சேர்ந்து போகநாயகன் பிரிவையெண்ணி அவள் பிரலாபிக்க அதற்கு அம்முனிவர் கோபங்கொண்டு ஓடிவருகிற நீராகக்கடவாயென்று சபித்தவுடனே மானத வாவியிலே விழுந்து அந்தச் சரயுவுடனேகூடிச் சேர்ந்து பிரிவதான கோமதிநதியானாள் அவள் வரலாற்றுப்படியாக, இந்தக் கௌசிகன் உலகத்தை யாளுகிற காலத்திலே.

மைந்தரொரு நூற்றுவரைப் பெற்று வெற்றி வடிவாளும் வரி
சிலையுங் களிறு மாவும், இந்தவுலகத் திவர்போல வல்லா ரிலை
யென்னவளர்த் தன்னவர்தா மிருக்குங் காலைத், தந்திரமார் பெரு
மயமையுந் தேருமாவுங் காதிசேருஞ் ஞானிகளு முந்தி யீண்ட, மந்தி
ரிகடங்களொடு மக்க ளோடு மானவேட்டை யாட விவன் வனத்
திற் புக்கான்

இ-ள். ஒருநூறு புத்திரரைப் பெற்று வெற்றிகொண்ட கூரியவாளாயுத வலியினாலும் வில்வலியினாலும் யானையேற்றத்தினாலும் குதிரையேற்றத்தினாலும் இந்த வுலகத்தில் இவர்களுக்குச் சமானமாக வொருவரும் வல்லவர்களில்லை யென்னும்படி வளர்த்து அந்தப்பிள்ளைகளுடனே இருக்கிற காலத்திலே, நால்வகை யுபாயங்களுந் தெரிந்து பெரிதான சேனைகளும் தேரும் குதிரைகளும் யானைகளும் வேட்டைநாய்களு முந்திச் செல்வதாக மந்திரிகளுடனே பிள்ளைகளுங்கூடிவர மானவேட்டை யாடவேண்டிற்காக இந்தக் கௌசிகராசன் காட்டுக்குள்ளே சென்றான் எ-று (௬)

கரியினமும் புலியினமும் வெருளா வோட்டக் கலைகடமை யு
ழைமடியக் கணைசொரிந்து, வரிபரப்பி வனமடங்க வழிய நூறி யிருடி
கட்குஞ் சூழலெல்லாம் பாழாச் செய்து, நரியினமுங் குறுமுயலு மகலா
வண்ண மயிலமொடுங் குணிலுமெறிந் தனைத்துங் கொன்று, தெரி
படுசெந் தசை வெதுப்பித் தின்று தங்கிச் சிலநாள்கா னகத் து
றைந்து திரிய நாளில்

இ-ள். யானைக்கூட்டங்களும் புலிக்கூட்டங்களும் பயந்தோடவும், கலைமான் கடமைமான் புள்ளிமான்கள் மடியவும் பாணங்களைவிட்டு நெருப்பை மூட்டி வனங்களெல்லாம் மரியும்படிக்கெடுத்து முனிவர்களுடைய ஆசிரமங்களெல்லாம் பாழாகும்படிச்செய்து சிங்கக்கூட்டங்களும் குறியதானமுயற் கூட்டங்களும் தூரப்போகாதபடி கூரிய வேலாயுதங்களையும் வளைதடிகளையுமெறிந்து எல்லாவற்றையுங் கொன்று நன்றாகத் தெரியப்படுகிற சிவந்தமாமிசங்களைச் சுட்டுத்தின்று காட்டிலேதானே தங்குதலாய சிலகாலம் வாசம்பண்ணிக்கொண்டு திரிகிறநாளிலே எ-று

இதுமுதலிரண்டு பாடல்கள் குளகம் (எ)

ஒருஞான்று புலரிதனி லெழுந்து போகி யுயர்வரைக டோறு
முழுணெருன்று மின்றி ருந்தாரி லைவிட்டதோர் மானின் பின்
போய வாயுலர்ந்து நாவுலர்ந்து தாளு மோய்ந்து, பெருநாணமும்

பசியுந் தவிப்பு மாகிப் பின்பிரிந்த விலங்கைவிட்டுத் துன்ப மெய்
தித், தருநீழ றன்னில்பா டிருந்து வைகித் தவம்புரியு மலைச் சார
றன்னிற் சார்ந்தான்.

இ-ள். ஒருநாள் விடியற்காலத்திலே யெழுந்துபோய் உயர்ந்த மலைக
ளெல்லாவற்றிலு மலைந்து ஒன்றுமகப்படாமல் வருகிறபோது, அவ்விடத்
திலே ஒருமானின் பின்னே தொடர்ந்துபோய் வாயும் காய்ந்து நாவும்
வறண்டு கால்களு மோய்ந்து பெரிய வெட்கமும் பசியுந் தாகமு முண
டாகிப் பின்றொடாந்துவந்த அந்த மானை விட்டு விட்டுத் துன்பமடைந்து
மரத்து நிழலிலே நான் சுகமாயிருந்து தவஞ்செய்கின்ற மலைப் பக்கத்திலே
வந்தான். எ-று. (அ)

யானவனைக் கண்டிரங்கி நீயா ரென்ன வழுதணிந்து கௌசிக
மன் னவன்யா னிந்தக், கானகத்தின் மான்வேட்டை போந்து மற்
றோர் கடுமானின் பின்னோடிக் கால்கள் சோர்ந்து, தானையும்யா
னும்பசியுந் தவிப்பு மாகித் தளர்ந்துனது சரணமடைந்தே னென்ன
க் காம, தேனுவைவா வென்றழைத்தி யானமுது நல்கித் தீராத
பசிதாகந் தீர்த்த பின்னர்

இ-ள். நான் அந்தக் கௌசிகனைக்கண்டு இரக்கங்கொண்டு நீயாரென்று
கேட்க, அவன் என் பாதத்தில் வணங்கி நான் கௌசிகராசன்; இந்தக் காட்
டிலே வேட்டையாடவந்து இங்கே ஒரு கொடிய வேகமுள்ள மானைத்தொட
ர்ந்தோடிக் கால்கள் தளர்ந்து சேனைகளும் நானும் பசியுந் தாகமு முண்டா
கித் தளர்ச்சியாய் உமது பாதத்தை யடைந்தேனென்று சொல்ல, நான்
அவனுக்காகக் காமதேனுவை வரவழைத்துப் போசன முதலான வெல்லாங்
கொடுத்து நீங்காத பசியையுந் தாகத்தையும் நீக்கிய பின்பு. எ-று. (௯)

அப்பசிதீர்ந் தமைச்சரொடு விரைவின் வந்தென் னருகணைந்
து மாமுனியே யடிய னேற்கின், றிப்பசுவைத் தரல்வேண்டு மென்
னக் கேட்க விதற்குரிய னியானல்லே னென்ன லோடும், அப்பசு
வைக் கரிபரித்தேர் சேனை யோடு மடங்கவளைந் தெறி பாசத் தா
லே வீசத், தப்பறவே பூண்டகயிற் றெதிர்போ யந்தத் தானையெ
லா மடிந்துவிழச் சாடிற் றவவான்.

இ-ள். அந்தப் பசிதாகமெல்லாந் தீர்ந்தபின்பு தன் மந்திரிகளுடனே
அதிக விரைவிலே என்னிடத்திலே வந்து, ஓ மகாமுனிவரே! அடியேனுக்கு
இப்போ திந்தப்பசுவைக் கொடுக்கவேண்டு மென்று கேட்க, அதற்குநான்: இந்
தப்பசுவைக் கொடுக்கத்தக்கவ னல்லேனென்று சொல்லுமளவில், அவன்
அந்தப்பசுவைத் தனது யானை - குதிரை - தேர் - முதலான சேனைகளுடனே
முழுதுஞ்சூழ்ந்து கட்டத்தக்க கயிறுகொண்டுபிடிக்க ஒன்றுவது தப்பாமல்
தன்னைக்கட்டின கயிற்றுடனே முன்னேபோய் அந்தச் சேனைகளை யெல்லா
மிறந்து கீழேவிழும்படி அந்தப்பசு கொன்றது. எ-று. (௰)

சந்தக்கலி நிலைத்துறை.

ஆலால மெழுந்த தெனச்சினமுற் றணியூடு புகுந்து துகைத்திடவே, வேலா ளரும்வெங் கரிவீ ரரும்வில்லா ளரும்வெம் பரிவீ ரர்களும், காலான் மிதிபட் டவர்கோ டியர்கட் கனலா லெரிபட் டவர்கோ டியர்நீள், வாலா லடிபட் டவர்கோ டியர்வெண் மருப்பால் வதையுண் டவர்கோ டியரே.

இ-ள். விஷங்கொதித் தெழுந்தாற்போல் கோபங்கொண்டு சேனை வகுப்புக்குள்ளே நுழைந்து காலால் மிதித்துக்கொல்ல, அப்போது வேலாளிகளும் வெவ்விதான யானைவீரர்களும் வில்லாளிகளும் வெவ்விய குதிரைவீரர்களும் அந்தப்பசுவின் கால்களினாலே மிதிபட்டிறந்தவர்கள் கோடி பேர்கள். கண்களி லுண்டாகிற நெருப்பினாலே யெறிந்திறந்தவர்கள் கோடி பேர்கள். நீண்ட வாலாலே அடிபட்டிறந்தவர்கள் கோடிபேர்கள். வெள்ளைக் கொம்புகளாலே குத்துப்பட் டிறந்தவர்கள் கோடிபேர்கள். எ-று. (கக)

கொழுவோ டிரத் தமசைபி ரணிணங் குடர்மூ ளைசரிந் துகுழைந் திடுவார், மழுவாள் சிலைதண் டுகடைத் தலைவேய் வலயங் கரவா ளமொடிந் திடுவார், விழுவார் கரைவா ருருள்வார் விதியே சதியாக விளைத் தனையென், றழுவார் தகவல் லதுசெய் தநமக் கழிவே யெனவோ டியகன் றனரே.

இ-ள். கொழுப்புடனே இரத்தம் மாமிசம் ஈரல் நிணம் குடல் மூளைகளெல்லாஞ் சரிந்து குழைந்துபோனார்கள் சிலர். மழு - வாளாயுதம்-வில்-தண்டாயுதம் - கடைந்தெடுத்த வேல் - வல்லயம் - கைவாள்களெல்லா மொடிந்து விழுகிறவர்கள். கரைகிறவர்கள் சிலர். உருளுகிறவர்கள் சிலர். புரளுகிறவர்கள் சிலர். ஓ தெய்வமே! இப்படிக் கெடுதியுண்டாகச் செய்தாயே யென்றழுகிறவர்கள் சிலர். நியாயமில்லாததைச் செய்த நமக்குக் கெடுதலே யல்லது வேறுவராதென் றோடினார்கள் சிலர். எ-று. (கஉ)

இவ்வா றுவெருட்டி வதைத்தெ னையுற் றினியே துசெயக் கடவே னடியேன், அவ்வா றுரையென் னவியா னினிநீ யகல்வான் மிசையென் னவுனைத் தனிவிட், டெவ்வா றகல்வே னிவணிற் பனென வினிநீ கடிதே கிவணிற் றலுனக், கொவ்வா தெனயா னுரைசெய் திடவே யுயர்வா னிடைதே னுவுமுற் றதுவே.

இ-ள். இந்தப்படி பயங்காட்டிக் கொன்று பின்பு என்னிடத்திற்கு வந்து இனி அடியேன் யாதுசெய்யக்கடவேன் அவ்வகையை யெனக்குச் சொல்லுமென்று காமதேனு கேட்க, நான் இனி நீ ஆகாயத்துப் போவென்று சொல்ல, அதற்கு உம்மைத் தனியாக விட்டுவிட்டு நான் எப்படிப் போவேன்? இங்கேதானே நிற்கிறேனென்று அந்தக் காமதேனுவானது சொல்ல, நான் நீ சீக்கிரத்திலேபோ இனி நீ இங்கே நிற்கிறது உனக்குக்

தகாதென்று சொல்ல, உடனே காமதேனுவானது உயர்ந்து ஆகாயத்துக்குப் போய்விட்டது. எ-று. (கங)

அமரா வதியிற் பசுவெய் திடவே யரசன் குலமைந் நூற்களுரா
ற் றுவரும், எமதா விகொளக் கருதிச் சினமுற் றிடியே பா லமுழக்க
மெழக்கு முறிச், சமரா டமுடங்கி நெடுமை பொழுதிற் சரமாரி
பொழிந் திடலும் முடலம், கமரா கவெடித் துவிழித் தவிழிக் கன
லா லவாவெந் துகழிந் தனரே

இ-ள். அப்படித் தேவருலகத்திற்கு அந்தப் பசுபோன பின்பு, கௌசிகராஜனுடைய புத்திரர்கள் நூறுபேரும் என்னுடைய உயிரை வாங்க நினைவுகொண்டு கோபமாய் இடிபோல் முழக்கமுண்டாகக் கெர்ச்சனை பண்ணி யுத்தஞ்செய்யத் தொடங்கி நெடுங்காலநேரம் பாணவிருக்ஷங்களைப் பொழியுமளவில், என்னுடம்பெல்லாம் தொளைகளுண்டாக அதிர்ந்து நான் திறந்து பார்த்த என் கண்களிலுண்டான நெருப்பினுலே அந்த நூறுபேரும் வெந்து சாம்பலானார்கள். எ-று. (கச)

சண்டத் தழலா லிவர்மைந் தரிபட்டுத் தனுவங் கையெடுத் தெ
திர்வந் துகடுங், கொண்டற் சரமா ரிபொழிந் திடவே கொடியோ
னிவனுக் கெதிரா வெனது, தண்டத் தினைநட் டனன்விட் டபெரு
ஞ் சரமா ரிமழுக் கதைசக் கரமேவல், விண்டற் பவரும் பொடியா
யுதிர விசையா னதையோ டுவிழுங் கினதால்.

இ-ள். அப்படி வேகமான நெருப்பினுலே உயர்ந்த புத்திரர்கள் சாவக்கண்டு, வில்லைத் தனதழகிய கையிலேகொண்டு என் முனனேவந்து கடுமையான மேகம்போல் பாணவிருக்ஷங்களைப் பொழிய அந்தப் பொல்லாதவனுக்குமுன்னே என்னுடைய தண்டத்தை ஊன்றிவைத்தேன். அப்போதவன் விட்ட பெரிதான பாணவிருக்ஷங்களையும் மழுவையுங் கதையையுஞ் சக்கரத்தையும் வேலையும் ஆகாயத்திலே சிறிதான நுண்ணிய தூளிகளாகவுதிரும்படி வேகத்துடனே தனக்கு மிகுந்த பசிதாகத்தாலுள்ள ஆசையுடனே தண்டு விழுங்கியது. எ-று. (கரு)

விடுகின் றகொடும் படையத் தனையும் விறல்கொண் டுயர்தண்
டம் விழுங்கிடவே, அடுகின் றதெமக் கெளிதல் லவெனவ் வமரா ம
கவா சையடைந் துறவே, சுடுகின் றமனத் துடனா ரணுகித் துற
வோர் வலிபோ ரிறையோ ரிலெனுக், கொடுவெந் தொழிலொடு துறந்
தகலக் குணபா லணுகித் தவமுற் றனனே.

இ-ள். அப்படி அந்தக் கௌசிகராசன் விடுகிற கொடுமையான ஆயுதங்களையெல்லாம் பலங்கொண் டுயர்ந்த எனது தண்டம் விழுங்கும்போது, இனி இந்த முனிவனை நம்மாற்கொல்லுகிற தெளிதல்லவென்றடங்கி, புத்திர வாஞ்சை மிகவுமுண்டாகிச் சுடுகிறதான மனத்துடனே தன தூருக்குப்

போய்ச் சந்நியாசிகளைப்போல் வல்லவர்க ளரசர்களில்லை யென்று கொடுமையான, வெவ்விய தொழில்களைச் செய்துள்ள தனது நாட்டை விட்டுத் தூரமாய்க் கிழக்குத்திக்கிலே வந்து தவஞ்செய்தான். எ-று. (௧௬)

இவனுற் றதவத்தை யழிக்க நினைந் திமையோர்க் கிறைவிட்
டதிலோத் தமைபோ, டவனைத் தவமவிட் டுநலத் திடைபுக் கழிப
ட்டுடனே யறிவுற் றவனோப, புவனத் தின்மனித் தர்பிறப் பினினீ
போவென்று சபித்தத னென்றுமை போய்ச், சிவனைக் கருதித் தவ
முற் றிடவே நீரா வரமீ தனளித் தனனே.

இ-ள். இப்படி இவன் கொண்ட தவத்தைக் கெடுக்க எண்ணித் தேவர்களுக் கரசனான இந்திரன் அனுப்பின திலோத்தமையுடனே அக்கௌசிகன் அந்தத் தவஞ்செய்கிறதை விட்டுவிட்டு அவள் சுகத்திலே புகுந்து தவமெல்லா மொழிந்தலாய் உடனே தெளிவுகொண்டு அந்தத் திலோத்தமையை உலகத்திலுள்ள மானிடப் பிறவியிலே போய்ப் பிறக்கக்கடவை யென்று சாபங்கொடுத்துப் பின்பு அகன்று தெற்குத்திசைக்குப்போய்ப் பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்யும்போது அந்தப் பரமசிவன் அழியாத வரங்கொடுத் தருளினார். எ-று. (௧௭)

அந்நாளி லென்னைத் திரிசங் குருகுற் றுடலத் தொடுவிண் புகல்
வேண்டுமெனா சொன்னான் முடியா தெனயான் மொழியத் துற
வோர் பிறரா லுறுவே னெனலும், இன்னா துரைசெய் தனைநீ புலை
யா கெனவே புலையா யெழில்கெட் டவமே, தன்னூ டணுகித் தமர்
ச்சீசியெனத் தள்ளத் தளர்மெள்ள நடந்தனனே.

இ-ள். அந்தக் காலத்திலே என்னைத் திரிசங்குவானவன் அடுத்து வந்து உடலோடே சுவர்க்கம்போகவேணுமென்று சொன்னான். அதற்கு நான் அப்படி உடலோடே சுவர்க்கம்போகக் கூடாதென்று சொல்ல, அந்தத் திரிசங்கு வேறே நம்மைப்போலிருக்கிற துறவற சந்நியாசிகளாலே நான் (சுவர்க்கம்) போகிறேனென்று சொல்ல, (நான்) நீ பொல்லாத துன்ப வார்த்தையைச்சொன்னா யாகையாலே புலையனாகக் கடவையென்று சொன்னவுடனே, அந்தத் திரிசங்கு புலையனாகித் தனதழகெல்லாங் குலைந்து தனது நாட்டுக்குள்ளே போய் அவனைச்சேர்ந்தவர்களெல்லாம் சீ சீ யென்று தள்ளத் தள்ள அவைகளைக் கேட்டு மெள்ளமெள்ள அவ்விடம் விட்டுப்போயினான்.

அன்றேயெனை விட்டவனைத் திரிசங் கங்கத்தொடு விண்புகல்
வேண்டுமெனக், கென்றேந் றுளத்தது சொல் லவவ னென்னோடு
தொடுத்தமறுந் தொழிலால், குன்றேயும விமானமமைத் ததன்
மேற் கோவே றெனவேற்றி நடந்திடவே, சென்றேயம ராவதி சேரு
தலுந் தேவாதிபர் கண்டுசினந் தனரே.

இ-ள். அப்போதே என்னை விட்டுவிட்டு இந்தக் கௌசிகனைப் போய்க் கண்டு நான் உடலுடனே சுவர்க்கம்போக வேண்டுமென்று வேண்ட அவ

னப்படித் தன்னுள்ளத்திலுள்ள கருத்தைச் சொல்லவே. அந்தக் கௌசிகன் முன்னே யென்னுடனே போராடிக் கொண்டிருக்கிற வீரச்செய்கையினாலே மலைக்கொப்பான ஒருவிமானத்தை வரும்படிச்செய்து, அந்த விமானத்திலே அரசனே! ஏறென்றுசொல்ல. அவனப்படியே யேறிநடத்தச் செய்தே அந்த விமானம்போ யமராவதிசேரும்போது தேவேந்திராதிகள் கண்டு கோபங் கொண்டார்கள். எ-று. (௧௧)

புலையா சுரர்நாடுபு கேலெனவே புறமுந்தினர் வானவர் புட்ப கமோ, டலையாவிழு வான்முனி கௌசிகனுக் கபயம்மென வீழ்வ தறிந் ததிர்போய், நிலையான விமானம் விழாதுநிறீஇ நெடுவெஞ் சின மாய்விழி நின்றகனல், பலகாது மெரிந்துபல் லுயிரும் படர்தீ யினில் வெந்துபதைத் தனவால்.

இ-ள். தேவர்கள் அடா நம்மை தேவருடைய நாட்டுக்குள்ளே நுழை யாதேயென்று சொல்லி வெளியேபோகத் தள்ளிவிட்டார்கள். அப்போது அந்த விமானத்துடனே அலைவுபட்டு விழுகிறவன் கௌசிகமுனிவனுக் கபய மென்று விழுகிறது தெரிந்து அவனுக்குமுன்னேபோய் நிலைமையான விமா னங் கீழேவிழாமல் நிறுத்தி, நெடிதான வெவ்விய சினங்கொண்டு கண்களி லுள்ள நெருப்பினாலே பல இடங்களும் எரிதலாயின. பலவிதமாயின உயிர்க ளும் அப்படிப்பரவுகின்ற நெருப்பினால் வெந்து பதைப்பதாயின. எ-று.

இவ்வண்ட மனைத்து மெரித்துலகை மீரேழுட னிந்திரனும் மய னும், தெய்வங்களும் வேறுபடைப்ப னெனாத் தேவாதிபன் மால்சி வனோ டயன்வந், தெவ்வண்ணம் விளைந்திடு மென்னவிரந் தெழுகி ன்ற சினந்தணி வித்துலகம், உய்வண்ண முறத்திரி சங்குதனக்குடு வின்பத நல்கவுரைத் தனரே.

இ-ள். இந்த அண்டங்களை யெல்லா மெரியச்செய்து பதினாலுலகங் களையும் இந்திரனையும் பிரமாவையும் மற்றதெய்வங்களையும் வேறே சிருஷ் டிக்கிறேனென்று சொல்ல, அப்போது தேவேந்திரன் விஷ்ணு சிவனுடனே பிரமாவும் வந்து எப்படி முடியுமோவென்று நல்லவார்த்தைகளைச் சொல்லி அவனுக்குண்டாகுகின்ற கோபத்தைத் தணியும்படிச் செய்து உலகமெல் லாம் பிழைக்கும்படியாகத் திரிசசங்குவிற்கு நட்சத்திர பதவியைக் கொடுக் கும்படி சொன்னார்கள். எ-று. (௨௧)

அத்தன்மைய னம்முனி யென்னுடனே யந்நாளி லெடுத்தம றத் தொழிலால், எத்தன்மை யிழைத்தன னன்னவெலா மென்னோ டு பலித்தில வாதலினால், இத்தன்மை யிழைத்தனன் மன்னனுட னிதனாலும் வெலற்கரி தாயினனிப், பித்தன்செய லித்தகவென் ற றவோர் பெருமானிறை யோடுரை பேசினனே.

இ-ள். அப்படிப்பட்ட கௌசிகனை விசுவாமித்திர முனிவன் என் னுடனே அக்காலத்திலே கொண்ட வீரச்செய்கையினாலே எப்படிப்பட்ட

வைகளெல்லாஞ் செய்தானே அவைகளெல்லாம் என்னுடம்பாடாக அவனுக்குப் பலிக்கவில்லை ஆகையினாலே இப்படிப்பட்ட காரியம் பண்ணினான். இந்த அரிச்சந்திரனுடனே இந்த விஷயத்திலும் என்னை வெல்லப்படாதவனே யானான் இப்படி இந்தப் பயித்தியக்காரனான கௌசிகன் செய்கைகளிப்படிப்பட்டவைக ளென்று துறவறத்தார்களிற் சிறந்தவரான வசிஷ்டர் அந்தக் காசிராஜனுடனே சொன்னார். எ-று. (௨௨)

இந்நீர்மை வசிட்ட னுரைத்திடலு மெழில்வாரண வாசியர் கோன்முனிவோர், தந்நீர்மையை நீயலதாரறிவார் தமைஞான மில ற்கறி யத்தகுமோ, நின்னீர்மை யுணர்ந்தவ ரேயறிவார் நீயேயவர் நீர்மை நினைந் துணர்வாய், எந்நீர்மை யுனக்கரி தென்ன வெழுந் திருபாத மிறைஞ்சியி ருந்தனனே.

இ-ள். இந்த விசேஷங்களை யெல்லாம் வசிஷ்டமுனிவர் சொல்லுமளவில் அழகுபொருந்தின வாரணவாசியருக் கரசனானவன், ஐயா! முனிவோர்களுடைய பெருமையை உம்மையல்லாது யார் அறியவல்லவர்கள். முதிர்ந்த ஞான மில்லாதவர்களுக் கறியக்கூடுமோ? உம்முடைய பெருமையைத் தெரிந்தவர்களே தெரிவார்கள். நீரே அவர்களுடைய பெருமைக் குணத்தையுந் தெரிந்துணருவீர். எந்தப் பெருமைகள் உமக்குக்கூடாதவைகளென்று எழுந்திருந்து அவருடைய இரண்டு பாதங்களையும் வணங்கிக்கொண் டிருந்தான்.

அவ்வாண கரத்தொரு திங்களிருந் தருண்மாமுனி யைத்தொழுதே விடைகொண், டெவ்வாறு மறந்துதரிப் பமெனுவிறையும் மகனும்பிற ரும்மெலியர், செவ்வாரண வாசியர் கோனவனைத் திருமார்புற வேதழிவிப் பரியுங். கைவாரண மும்படையும் மிடையக் காசித்திரு நாடுபுகுந் தனனே.

இ-ள். அப்படி அந்த ஒளியால் மிகுந்த அயோத்தியா புரியிலே ஒரு மாதவளவு மிருந்து, பின்பு கிருபா ரூபியாயின பெரிய வசிஷ்டரை வணங்கி விடைகொண்டு எப்படிக் காசிராஜனே உம்மை மறைந்து தங்கக்கடவோம் நாங்களென்று அரிச்சந்திரமகாராஜனும் மகனும் மெலிவுகொள்ள, செவ்வையான வாரணவாசியென்னுங் காசிராஜனானவன் அவ்விருவரையும் தனது திருமார்பழுந்த ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு குதிரைகளையும் துதிக்கையையுடைய யானைகளுஞ் சேனைகளும் நெருங்க காசியென்னுந் திருநாட்டிக்குப் போயினான். எ-று. (௨௪)

கடிமீதுறு கார்வள மல்குதிருக் காசித்திரு நாடனு மேகியபின், முடிமீதொளி பொங்கிட வெண்குடையு முத்தின்குடை யுங்கொடியும் மிடையப், படிமீதினின் மன்னவர் வந்துதொழப் பலபரவையர் பாணர்பரிந் திடவே, அடிமீது வணங்க வயோத்தியர்கோனரியாசன மீதிலிருந் தனனே.

இ-ள். காவல்மிகுதியாய் மேகங்களினுடைய வளமையே அதிகமாயிருந்துள்ள திருக்காசித் திருநாட்டரசன் போனபின்பு, தலைக்குமேலே வெள்ளைக் குடையினுடைய ஒளிபொங்குதலாக முத்துக்குடைகளுங் கொடிகளுநெருங்க, உலகத்திலுள்ள பல அரசர்களும் வந்துவணங்க, அநேகம் பெண்களும் பாணர்களுஞ் சந்தோஷித் தன்புகொள்ளும்படி பாதங்களிலே வணங்க அயோத்தியாபுரிக் கரசனான அரிச்சந்திரமகாராஜன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான். எ-று. (உரு)

வேறு.

மன்னர்வாழிய மாமறைவாழிய
செந்நெல்மன்னுக செந்தமிழோங்குக
அன்ன தான வரிச்சந்திரன்கதை
தன்னைக்கேட்டவர் வாழ்வுதழைக்கவே.

இ-ள். ஆகையால் இக்காலத்துள்ள அரசர்களும் வாழ்க. பெ..,
வேதங்களும் வாழ்க. சிவந்த நெற்கள் எங்கும் விளைக. செவ்விதான தமிழ்மொழியும் உயர்ந்து வாழ்க. அப்படிப்பட்ட தானங்கொடுத்த அரிச்சந்திர மகாராஜனுடைய சரித்திர மகிமையைக் கேட்டவருக்கு வாழ்வுந் தழைத்தோங்குக. எ-று. (உக)

உத்தரகாண்டம் முற்றிற்று.

ஆ விருத்தம் - ௧௨௨௫.

——(*)——

மட்டு விருத்தம்.

அகிலந்தனி லிலகும்படி நிலைதங்கிய குணரஞ்சித
வரசற்கொரு மணியாகிய வதிதூயன்
மிருகண்டுமா சுதனற்கரு ளியவாரண முடிவிற்பொரு
வியமாதவ ரொவரும்புக ழுதிநேயன்
றகைகொண் டொளிர் குருமாமுனி சதிரின்படி தனைமீதொ
சலமாமொரு யுரையாதசெங் கனிவாயன்
சுகரஞ்சித வரிச்சந்திர னெனுமிந்திரன் சரிதைக்கொரு
துணையுண்டென வுரைவாரொவர் சொலுங்காலே.

வாழிவிருத்தம்.

மனோதயனாகு[illegible]ர்க்கரிமுருகநதன்
மாணடிக்கிருபை பூண்டொழுகுஞ்
மனோதயமன்னத்தூ விரும்புவியாதனிற்
சந்ததமின்பொடும் வாழ்க
மனோதயமான வரிச்சந்திரபுராணம்
வழுக்கறப் பதித்தனன்
தனியாம்பாள்விலாச அச்சுக்கூடத்தலைவரும்
விளங்க நீடூழிவாழ்கவாழ்க.

அரிச்சந்திரபுராணம்

மூலமும் - உரையும்.

முற்றிற்று.

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. [illegible] நூல் நிலையம்
[illegible]